தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு எண் சஎ

திருவாய்மொழி வாசகமாலை

எனும்

விவரண சதகம்

ஆசிரியர் - திருக்கோனேரிதாஸ்யை

1952

Tanjore Saraswathi Mahal Series No. 47

TIRUVĀYMOZHI VĀCHAKAMĀLAI

OR

VIVARAṆA ŚATAKAM

By

TIRUKKŌNĒRI DĀSYAI

Edited with Introduction & Notes

By

Navalpakam Sri Devanathachariar

(Mimamsa Siromani with Proficiency in Oriental Learning,
Pandit, Saraswathi Mahal, Tanjore.)

Published
By
S. Gopalan, B. A., B. L.,
Hony. Secretary, for the Administrative Committee of the
Tanjore Saraswathi Mahal Library.

Printed at
Rajaji Press Limited, Devakottai.

1952 Price Rs. 6-0-0

தஞ்சை ஸரஸ்வதிமஹால் வெளியீடு எண் சஎ.

திருவாய்மொழி வாசகமாலை

எனும்

விவரண சதகம்

ஆசிரியர் - திருக்கோனேரிதாஸ்யை

ஸரஸ்வதி மஹால் வித்வான், மீமாம்ஸா சிரோமணி,
நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர் அவர்களால்
முகவுரை, அடிக்குறிப்பு, முதலியவைகளுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீ S. கோபாலன், B. A., B. L.,
கௌரவ காரியதரிசி அவர்களால்
தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் நூல் நிலய
நிர்வாகக் குழுவினருக்காக வெளியிடப்பெற்றது.

1952 **விலை ரூ 6-0-0**

PREFACE

The present publication called *Tiruvaimozhi Vachaka-malai* is a rare commentary on the One Thousand one hundred and two stanzas of *Tiruvaimozhi* of *Nammalvar*. Like the other commentaries on *Tiruvaimozhi*, it is written in Tamil profusely mixed with Sanskrit which is called the 'Maṇipravāla' (Gem and Coral intermixed) style. But this work is unique in plan and purpose. The author who, by the way, appears to be a lady, has taken up each set of 10 stanzas out of the 1000 and odd stanzas, to show that its import is only an expatiation on the very first stanza which runs as follows:—

Uyarvara Uyarnalam Udaiyavan Yavanavan
Mayarvara Mathinalam Arulinan Yavanavan
Ayarvarum Amarargal Athipathi Yavanavan
Thuyararu Sudaradi Thozhudezhenmanane!

Meaning :

"Who has in himself the Highest Bliss than
which there is nothing higher,

Who is the giver of discrimination which
slays delusion,

Who is the Lord of the Immortals who have
no forgetfulness,

His Feet effulgent that destroy all sorrow
Shalt thou worship and raise thyself, O My Heart!"

This recognition of the central theme in every stanza of the whole work is very valuable to those who are studying this sacred book for spiritual benefit.

The author chooses to be anonymous and calls herself, "*Koneri Dasyai*", the servant of Koneri. The commentary faithfully follows the traditional interpretation of the work, and in language also it follows the traditional style.

There is no other manuscript of the work available except the one in the Saraswati Mahal Library. The manuscript is very old and damaged in many places, and the editing has been very taxing as the scribe appears to have no knowledge of Tamil orthography, much less grammar. We are happy to have secured the services of a fully qualified Editor for this work in Sri Devanathachariar, Mimamsa Siromani, a member of our staff, who has also undergone the full course of study of *Tiruvaymozhi* under traditional teachers. The Editor has done his work with great care and thoroughness and his introduction and copious explanatory notes and appendices will help any reader not only in understanding the work on hand, but the whole range of traditional commentaries on the *Tiruvaymozhi* and the other 3000 stanzas of *Divyaprabandha*. Our thanks are due to the learned Editor for his valuable services.

We are grateful to the Government of Madras for their liberal grants which have enabled us to publish this and other valuable manuscripts of this Library.

SARASWATI MAHAL LIBRARY
TANJORE
25 — 9 — 1952.

S. GOPALAN,
Honorary Secretary.

முன்னுரை.

'திருவாய்மொழி வாசகமாலை' என்னும் இவ்வெளியீட்டில், நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழிப் பாடல்களுக்கு ஓர் அரிய வியாக்கியானம் அடங்கியுள்ளது. திருவாய்மொழிக்கு உள்ள பழைய ஸம்பிரதாயமான வியாக்கியானங்களைப் போலவே, இந்நூலும், தமிழும் ஸம்ஸ்க்ருதமும் கலந்த மணிப்ரவாள நடையிலேயே எழுதப்பட்டுள்ளது. ஆயினும், இந்நூலின் நோக்கமும், வழியும், ஓர் புதிய அம்சமுடையது. இந்நூலில், திருவாய்மொழியின் முதற் பாசுரத்தின் பொருளே, பிந்திய ஓராயிரத்து நூற்றொரு பாசுரங்களிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது, என்பது எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பத்துப் பாடல்கள்கொண்ட பதிகத்தினின்றும், உதாரணத்திற்காக ஒரு பாடலை எடுத்துக் கொண்டு, அதன் பொருள், திருவாய்மொழியின் முதற் பாடலாகிய "உயர்வற உயர் நலம்" என்ற பாடலில் அடங்கிய பொருளே என்று இதன் ஆசிரியர் தெளிவு படுத்தியுள்ளார்.

இவ்விதம், ஒவ்வொரு பாடலிலும் திருவாய்மொழியின் ஹ்ருதயமாகிய முதற்பாடலின் பொருளைக் கண்டறிதல், திருவாய்மொழியைப் பாரமார்த்திக நோக்கத்துடன் பயிலுவோருக்கு மிக்க உதவியாகும்.

இதன் ஆசிரியர் தன்னுடைய ஊர், பெயர், முதலியவற்றைச் சொல்லிக் கொள்ளாமல், நூலின் கடைசியில், "அடிமை செய்தாள் திருக்கோனேரி தாஸ்யை" என்று கூறுகிறார். இவர் பெண்பாலாக இருக்க வேண்டும் என்பது, 'செய்தாள்' என்ற பெண்பால் விகுதியுள்ள வினை முற்றைக் கொண்டும், 'தாஸ்யை' என்ற பதத்தைக் கொண்டும் ஊகிக்கப் படுகிறது.

இந்நூலின் பிரதி, ஸரஸ்வதி மஹாலில் உள்ள ஓலைச்சுவடி ஒன்றைத் தவிர வேறு எங்கும் கிடைக்கவில்லை. இதுவும் பல இடங்களில் ஏடுகள் சிதைந்திருப்பதோடு, தமிழ்ச் சொற்கள் எழுத்தியல் அறிவு இல்லாத ஒருவரால் எழுதப்பட்டிருப்பதால்,

இந்நூலைத் திருத்திப் பதிப்பிப்பதென்பது ஓர் அரிய சாதனை யாயிற்று. இந்த அரிய சேவையை, நமது ஸரஸ்வதி மஹால் பண்டிதர்களுள் ஒருவராகிய, ஸ்ரீ தேவநாதாச்சாரியர் அவர்கள் ஏற்றுக்கொண்டது, ஓர் நல்ல வாய்ப்பு என்றே கூற வேண்டும். அன்னார், மதநூல்களுக்கு ஆதாரமான வேதத்தைச் செவ்வனே கற்றுணர்ந்திருப்பதன்றி அதன் பொருளுக்கு இன்றியமையாத தான பூர்வமீமாம்ஸா சாஸ்த்ரத்திலும் நல்ல தேர்ச்சிபெற்றவர். திருவாய்மொழியின் பழைய வியாக்கியானங்களை, ஸம்ப்ரதாயப் படி ஆசார்யர்களிடம் காலக்ஷேபம் செய்தவர். அவர், இந்நூலை வெகு பாடுபட்டுத் திருத்திப் பதிப்பித்ததோடு, இந்நூலை வாசித்தறிவதற்கு உதவியாக, விரிவான ஓர் முகவுரையும், பல அனுபந்தங்களும் தொகுத்துச் சேர்த்துள்ளார். இவ்வனுபந்தங் கள், இந்நூலையே யன்றி, திருவாய்மொழியின் பழைய வியாக்கி யானங்கள் பலவற்றையும், திவ்யப்ரபந்தத்தின் மற்ற 3000 பாடல்களின் வியாக்கியானங்களையும் கற்றுணர்வதற்கும் உதவி யாகும். அன்னார் சேவைக்கு எங்கள் நன்றி உரித்தாகும்.

இந்நூலையும், ஸரஸ்வதி மஹாலில் உள்ள மற்றும் பல அரிய நூல்களையும் வெளியிடுவதற்கு உதவியாகச் சென்னை அரசாங்கத்தார் செய்துவரும் நிதியுதவிக்கு, நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

ஸரஸ்வதி மஹால்
நூல் நிலயம், தஞ்சை
25—9—1952

எஸ் கோபாலன்
கௌரவ காரியதரிசி.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலை விஷய அட்டவணை.

		பக்கங்கள்.
(1)	நான்முகம்.	1-75
(2)	பொருளடக்கம்.	I-XXXII
(3)	திவ்ய தேசங்களின் விவரம்.	XXXIII-XXXVII
(4)	ஸ்ரீ ஆராவமுதன் படமும்-விளக்கமும்.	1-6
(5)	திருவாய்மொழி வாசகமாலை.	1-334
(6)	செய்யுளகராதி.	1-3
(7)	திருப்பாவை ஸ்வாபதேசார்த்த விவரணம்.	4-5
(8)	மேற்கோள்களின் அகராதி (ஸம்ஸ்க்ருதம்)	1-12
(9)	ஷை ஷை (தமிழ்)	13-18
(10)	ஆழ்வாருடைய நாயிகாபாவம்.	1-2
(11)	பழமொழிகள் விளக்கம்.	1-16
(12)	அருந்தொடர்ப் பொருளகராதி (தமிழ்)	I-X
(13)	ஷை ஷை (ஸம்ஸ்க்ருதம்)	XI-XXIX
(14)	பிழை திருத்தம்.	1-4

ஸ்ரீ:

நான்முகம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

वेदान्तलक्ष्मणमुनेः प्राप्तवेदान्तसंपदे ।
श्रीमते चतुराम्नायनृसिंहगुरवे नमः ॥

வேறொன்றும் நானறியேன் வேதந் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென் றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வா ரவரே யரண்.

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்.

1 "திருவாய்மொழி வாசகமாலை" என்னும் இவ்வரிய நூல் ஸரஸ்வதி மஹாலில் உள்ள பல்லாயிரக்கணக்கான சிறந்த நூல்களிலொன்றாகும். திருவாய்மொழிக்கு, நாளிதுவரை மேலும் மேலும் பெருகி வந்துள்ள உரைகள் பலவற்றுள், அச்சிடப் பெறாததும், வேறு எந்த இடத்திலும் காணப் பெறாததுமான சுருக்கமான உரையாகும் இது. 'தமிழ்மறை' என்றும், 'தமிழ் வேதம்' என்றும் போற்றப்பட்டு வருவதும், தமிழ்மொழிக்கே தனிப்பெருமையளிக்க வல்லதான நாலாயிர திவ்யப்ரபந்தத்தின் சிறந்த பகுதியுமாகிய, 'தமிழ் உபநிஷத்' என்று வழங்கப்படும் திருவாய்மொழியின் பெருமையை நம் தமிழ்நாட்டினர் யாவரும் நன்கறிவர். அதில் 1102 செய்யுட்கள் உள்ளன. இவை 10 பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. 110 செய்யுட்களைக்கொண்டவையான இப்பகுதிகள் ஒவ்வொன்றும் 'பத்துக்கள்' என வழங்கப்படுகின்றன. இந்த ஒவ்வொரு 'பத்தும்' தன்னுடே 10 பதிகங்களையுடையனவாகும். ஒவ்வொரு பதிக

(1) தஞ்சை ஸரஸ்வதி மஹால் தமிழ் கேட்லாக் வால்யும் 2. பக்கம் 224. நெ. M. 570.

மும் 11 செய்யுட்களுள்ளதாகும். இப்பதிகங்கள், இப்பிரபந்தத்தின் பெயராகிய "திருவாய்மொழி" என்னும் சொல்லால் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பிரபந்தத்தின் முதல் பத்தில் முதல் திருவாய்மொழியின் (பதிகத்தின்) முதல் பாசுரம்:—

உயர்வற உயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!

என்பதாகும். தேனினுமினிய 'திருவாய்மொழி'யெனும் செஞ்சொற் கவிகளுக்கு இச்செய்யுள் எல்லாவிதத்திலும் முதன்மையாக அமையும் அற்புதத் தன்மை வாய்ந்ததாகும். தாயின் சாயலைச் சேய் ப்ரதிபலிப்பதுபோல, இந்த முதற்பாசுரத்தின் கருத்தே மற்ற 1101 பாசுரங்களிலும் பதிந்து கிடக்கிறதென்றும், இதுவே திருவாய்மொழி என்னும் தீங்கனிகள் நிறைந்த கற்பகவிருக்ஷத்தின் முதல் தனி வித்தாகும் என்றும், ஆன்றோர் பணிப்பர். இம்மட்டோ? இதில் ஸகல வேதங்கள்-உபநிஷத்துக்கள், புராணங்கள்-தர்மசாஸ்திரங்கள்-இதிஹாஸங்கள்-தந்த்ரக்ரந்தங்கள்-தத்துவநூல்கள்-முதலியவற்றின் ஸாரம் அடங்கிக்கிடக்கின்றதெனில் சாலப்பொருந்தும். இதன் தனிப்பெருமையைப் பூர்வாசார்யர்கள் பலவாறாகப் பரக்கப் பேசி அனுபவித்து உலகை உய்வித்து வந்துள்ளனர். 'இந்த முதற்பாசுரத்தின் கருத்தையே ஏனைய 1101 பாசுரங்கள் விவரிக்கின்றன' என்கிற கருத்தை ஆதாரமாகக்கொண்டு நிரூபித்துக்காட்டும் அற்புதமான நூலாகும் இத் "திருவாய்மொழி வாசகமாலை".

இறைவனால் மயர்வற மதிநலமருளப்பெற்றுத் 'தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள்' சொன்ன நம்மாழ்வாரின் திவ்ய சரிதையையும்; அவரைக் கருவியாகக்கொண்டு 'தானேயானென்பானாகி' என்கிறபடி எம்பெருமானால் தோற்றுவிக்கப்பெற்றதும், 'வன்பெரு வானகமுய்ய அமருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழத் தோன்றியதுமான திருவாய்மொழியின் பெருமையையும்; தேனும் பாலும் கன்னலுமமுது

மொத்த செஞ்சொற் கவிகளான இவ்வான்ற தமிழ் மறைக ளாயிரத்தையுமே அல்லும் பகலும் பாடிக்கொண்டு, 'வேறொன் றும் நானறியேன்' என்கிறபடி தங்கள் ஆயுள் கால முழுவதையும் நன்னாளாகக் கழித்து உலகை உய்வித்து வந்துள்ள ஸ்ரீமந்நாத முனிகள் தொடக்கமான பூர்வாசார்யர்களால், இம் முழுப்பிர பந்தத்திற்கும், 'பத்துக்களுக்கும், திருவாய்மொழி (பதிகங்) களுக்கும், ஒவ்வொரு செய்யுட்களுக்கும், பூர்வோத்தர ஸங்கதி களுடன் அறுதியிடப் பெற்றுள்ள பொருள்களையும் ஒருவாறு தெரிந்துகொள்வது, இந்நூலைப் பயிலுவதற்கு இன்றியமையாத தாயிருக்குமாகையால், முந்துறமுன்னம் இவைகளைச் சிறிது விளக்கிக் கூறி, அதன்பின் இந்நூலின் போக்கை விவரிப்போம்.

நம்மாழ்வார் வைபவம்.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன்; உயிர்வகைகள் அநாதி கர்ம பரம்பரைகளால் கட்டுண்டு, தன் உண்மையான ஜ்ஞாநாநந்த ஸ்வரூபம் மழுங்கி, அசேதனமான பிரகிருதியில்சிக்கி, ப்ராக்ருத மான சுகங்களையே பெரிதாகக் கருதி, மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து, ஆதியந்தமில்லாத பிறவித்துயரில் மூழ்கி எல்லையிலாத் துன்பமநுபவிப்பதைக் கண்டு அளவுகடந்த கருணைகொண்டு, இவர்கள் உண்மை நிலைமையை நன்கு உணருமாறு வேதமுதலிய பல்வேறு தத்துவ நூல்களை உலகில் பிரசாரம் செய்வித்தான். தானும் இராமன்-கிருஷ்ணன்-முதலிய பல்வேறு அவதாரங்களைப் பண்ணி நுட்பமான அரிய பெரிய தர்மங்களைக் கண்கூடாக நடத்திக்காட்டியும், ஸ்ரீபகவத்கீதை முதலிய உபதேச நூல் களைத் தோற்றுவித்தும், உலகைத் திருத்தி நல்வழிப்படுத்தி யருளினான்.

காலக்ரமத்தில் இவ்வுபதேசங்கள் யாவும் எதிர்பார்த்தபடி பயனுறாமற்போயின. இதைக்கண்ட எம்பெருமான் பெரிதும் மனங்கலங்கி, எவ்வகையிலும் முயன்று, இவ்வுயிர்களைக் கடைத் தேறப்பண்ண வெண்ணி, இம்மானிடவுலகில், தானும் ஒரு மானிடப்பிறவியில் தோன்றி, அவர்களுள் ஒருவனாகி, அவர் களைப்போலவே பேசிப்பழகி, அவர்கள் பேசும் மொழியிலேயே

மறைகளில் மறைந்து கிடக்கும் அரிய தத்துவங்களை விளக்கிக் கூறி, இவ்விருள் தருமாஞாலத்தினின்றும் இவர்களை வெளியேற்றித் தன் நற்பொற்சோதித்தாளிணைகளில் சேர்த்துப் பேரின்ப மெய்துவிக்க நினைந்தான். அதன் பயனாகவே ஸ்ரீ நம்மாழ்வார் தோன்றினார். 'பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து' என்று புகழப்படும் பாண்டிநாடு தொன்றுதொட்டு நம் தமிழ்மொழியைப் பேணிவளர்த்த புண்ணிய நாடாகும். அதனூடே சுழிக்குந் துறைநீர்த்துறைதோறு முத்தங் கொழிக்கும் பொருநையாறு; கங்கையையும், காவிரியையும் பழிக்குமாறு பெருகியோடும். அவ்வாற்றின் கரையில் பாண்டிநாட்டின் ஒருபகுதியாகிய 'வழுதிநாடு' என்னும் ஒரு புண்ணியநாடு உளது. அதன் தலைநகர் 'திருக்குருகூர்' என்று வழங்கப்படும். இதுவே பிற்காலத்தில் நம்மாழ்வார் திருவவதாரம் செய்ததனால் 'ஆழ்வார் திருநகரி' என்று வழங்கப்படுவதாயிற்று. இவ்வளமிக்க வழுதி நாட்டைக் கோவிந்தன் தனக்கே குடியடியாரான வேளாளகுலத்தைச்சார்ந்த மன்னர்கள் நீதி தவறாமல் செங்கோல்செலுத்தி ஆண்டுவந்தனர்.

அவர்களுள் 'திருவழுதிவளநாடர்' என்பாரொருவர். 'கேசவன்தமர் கீழ்மேலெம ரேழெழு பிறப்பும்' என்கிறபடி நம்மாழ்வாருடைய மூதாதையர்களில் ஏழாவதானவர். இவருடைய திருக்குமாரர் 'அறந்தாங்கியார்' என்று பொருத்தமான பெயருடைய செந்நெறிச்செல்வர். அன்னாருக்கு 'சக்ரபாணியார்' என்பார் மைந்தராகத்தோன்றினார். அன்னாருக்கு 'அச்சுதர்' என்னும் புதல்வர் தோன்றினார். அவருக்கு 'செந்தாமரைக் கண்ணர்' என்பாரும், அவருக்குப் 'பொற்காரியார்' என்பாரும் அருந்தவச் செல்வராய்த் தோன்றினர். பொற்காரியாருக்குக் காரியார் என்னும் திருநாமமுடைய அருமை மைந்தர் தோன்றினார். இவரே 'நம்மாழ்வாரைத் தோற்றுவித்து உலகை உய்வித்த புண்ணிய புருஷராவார்.

காரியாருக்குக் குழந்தைப் பருவத்தில் செய்ய வேண்டிய ஜாதகர்மம் முதலியவற்றைச் செவ்வனே செய்து முடித்து, ஐந்தாம் வயது முதல் அறிவிற்சிறந்த பெரியோர்களைக் கொண்டு

முறைப்படி கல்வி பயிலுவித்த பொற்காரியார், அன்னருக்கு இல்லறத்தில் ஈடுபடவேண்டிய பக்குவ வயது வந்ததும், இவருக்கேற்ற அருங்குணச் செல்வியை மணம்புரிவிக்கக்கருதி யோசிக்கலாயினர். 'திருவண்பரிசாரம்' என்னும் திருப்பதியில் வாழ்ந்து வருபவரும், திருமாலடியார்களுள் தலைசிறந்தவரும், நற்குண நல்லொழுக்கங்களுக்குப் பிறப்பிடமுமாகிய 'திருவாழ்மார்பன்' என்பவருடைய செல்வப்புதல்வியும், 'உடையநங்கையார்' என்று திருநாமம் சூட்டப்பெற்றவளுமான நற்குணச் செல்வியையே தன் தனயனுக்குத் தகுந்த தர்மபத்தினியாகப் பொற்காரியார் தேர்ந்தெடுத்தார். ஏனைய உற்றார் உறவினர் பெரியோர்கள்முதலியவர்களின் சம்மதியுடன் காரியாருடையவும் கருத்தொற்றுமையை அறிந்து, தக்கோர் வாயிலாகத் திருவாழ்மார்பருக்குச் செய்தியனுப்பினர். அன்னாரும் அமிழ்தினுமினிய இந்நற்செய்தியைக் கேட்டுப் பேருவகையுடன் அவ்வாறேஇசைந்தார். மங்களகரமான சுபமுகூர்த்தத்தில் காரியாருக்கும், உடையநங்கையாருக்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது, சிறிதுகாலம் மணமகளின் இல்லத்திலேயே இன்பகரமாக வசித்துத் தக்கவெகுமதிகளுடன் இளங்காதலர் இருவரும் மணமகனது இருப்பிடம் சேர்ந்தனர்.

ஆண்டுகள் பல கழிந்தன. காரியாருக்குப் புத்திரசந்தானம் உண்டாகவில்லை. அதனால் பெரிதும் வருத்தமுற்றனர். தங்கள் குலதெய்வமாகிய ஆதிநாதப் பெருமாள் திருவடிகளில் தம் குறையை விண்ணப்பம் செய்தனர். "திருக்குறுங்குடிக்குச் சென்று அங்கு திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் நம்பியைத் தொழுதால் மக்கட்பேறு பெறலாம்' என அவ்வெம்பெருமான் அருளினர். சதிபதிகளிருவரும் அவ்வாறே பயணமாகித் திருக்குறுங்குடிக்குச்சென்று, நம்பியைத் திருவடி தொழுது தங்களுக்குற்ற குறையை விண்ணப்பித்து, அதைத் தீர்த்தருளுமாறு வேண்டிக்கொண்டு, அன்று கோயிலிலேயே தங்கினர். அன்றிரவு கனவில் 'ஆதிநம்பி' தோன்றி, "நாமே உமக்கு மைந்தனாகத் தோன்றுகிறோம்" என்று அருளினர். இதைக்கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியுற்ற தம்பதிகளிருவரும் உதயமானதும் மீண்டும் நம்பியை வணங்கித் திருக்குருகூருக்குத் திரும்பினர்.

அடியார்க்கு மெய்யனுகிய எம்பெருமானுடைய திருவருள் உடனே பலித்தது. உடையநங்கையார் கருவுற்றனர். பத்து மாதங்கள் கழிந்தன. கலியுகம் பிறந்த 43ம்நாள் வைகாசித் திங்கள் விசாகநக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில்; இம்மண்ணுலகின்கண் தொன்று தொட்டு தொடர்ந்து சூழ்ந்து வருவதும், எம்பெருமான் தன்னுலும் இராமகிருஷ்ணுத்யவதாரங்களால் மாய்க்கவியலாமல் விடப்பட்டதுமான அகவிருள் அறவே ஒழியுமாறு உலகங்களுக்கெல்லாம் ஒரே ஞானப்பரிதியாக நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருளினர்.

இதைச்செவியுற்ற காரியார் ஆனந்தக்கடலிலாழ்ந்தனர். மங்கள வாத்தியங்கள் முழங்கின. பிறந்த குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகள் யாவும் மருத்துவமாதரால் செவ்வனே செய்து முடிக்கப்பெற்றன. ஏராளமான தான தர்மங்கள் வழங்கப்பெற்றன. நகரம் எங்கும் இவ்வின்பச்செய்தி பாய்ந்தோடியது. தம் நாட்டுமன்னனுக்குத் தவப்பயனுய்த் தோன்றிய அருமந்த மைந்தனைக் காண விரும்பிக் குடிகள் திரள் திரளாகக் காரியாரின் திருமாளிகைக்குச் செல்லலாயினர்.

இவ்வானந்தம் விரைவில் மழுங்கிவிட்டது. பிறந்த குழந்தை செயலற்றுக்கிடந்தது. கை கால்களை அசைப்பதில்லை. கண்கள் திறக்கவில்லை. அழுவதும் கிடையாது. மூச்சுமட்டும் வந்து கொண்டிருந்தது. மருத்துவமாதரும், வயது முதிர்ந்த பாட்டிகளும் கூடிக் கூடியோசித்து என்னென்னவோவெல்லாம் செய்துப் பார்த்துவிட்டனர். ஒன்றும் பயனில்லை. 'மறுபிறப்பு' என்னும்படியாகப் பிரசவமாகிற பெரும் அபாயத்தினின்றும் விடுபட்ட உடையநங்கையாருக்கு இவ்வேதனை தாங்க முடியாததாயிருந்தது. அவர் தன் அருமைச்செல்வனை ஆவலுடன் வாரியெடுத்து முத்தமிட்டு மார்போடணைத்துப் பலவிதமாகச்சீராட்டி முலைப்பாலைப் புகட்டிப் பார்த்தார். அவ்வாறு பலவந்தமாகப் புகட்டப்பெற்ற பால், குழந்தையின் கடைவாய்வழியாக வெளியில் வழிந்தோடியது. தாயின் பேதைமனம் பதறியது. இயற்கையே தன்னைச்சோதனை செய்வதைக்கண்டு உள்ளங் குமுறுகிறது. எந்தநிமிஷத்திலும் இந்த ஒரு கொடிமூச்சு நின்று

விடக்கூடும். பிறகு தன்கதி என்ன? இதைநினைத்துப்பார்க்கவும் முடியவில்லை. பறவைகளும் விலங்குகளும் கூடத் தான் பெற்ற சேயை எவ்வளவு அற்புதமாய் வளர்க்கின்றன? கருணைக்கடலாகிய எம்பெருமானுடைய இன்னருள் தன் விஷயத்தில் பயனுறுமற்போவதேனோ? என்று பெரிதும் கலங்கினர். வெட்கமும் துக்கமும் தாங்கமுடியாமல் எம்பெருமானைப் பலவாறு வேண்டிக் கொண்டார்.

இறைவனது திருவுளத்தை ஆரேயறிபவர்? அவன், தன் சொந்தக்காரியத்திற்காகவன்றோ? ஆழ்வாரைத் தோற்றுவித்தான். அதற்கேற்ப, அவனது முன்னேற்பாடுகள் யாவும் நடந்தேறின. எம்பெருமானுடைய படுக்கையான ஆதிசேடன் வெகுநாட்கள் முன்னமே திருக்குருகூர் கோயிற்பிராகாரத்தில் ஒரு புளியமரமாய்த்தோன்றி ஓங்கிவளர்ந்து நின்றருளினன். சேனை முதலியாரின் அம்சாவதாரமாய் நம்மாழ்வார் திருவவதாரம் செய்தார். குழந்தை பிறந்ததும் திருமகள்கேள்வன் ஒருவருக்கும் புலப்படாமல் தோன்றி. ஆழ்வாருக்கு திவ்யஜ்ஞானத்தை உபதேசித்தருளித் தன் தேனேமலரும் திருப்பாதங்களை ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் பதியவைத்துச் சென்றனன். இவ்வமுதத்தையே நிரந்தரமாகப்பருகி உய்ந்திருந்த நம்மாழ்வார் வேறொன்றையும் அறிந்திலர். உயர்வறஉயர்ந்ததான இவ்வமுதத்தைப் பருகுவதனுல் ஆழ்வாருடைய திருமேனி எவ்விதமான வாட்டமுமின்றி அற்புதமாய் மேலும் மேலும் வளர்ந்து வந்தது.

இந்த உண்மையை யாரும் அறியவில்லை. பொதுவாகப் பாலுண்ணுமையினுல்குழந்தைக்கு எவ்விதமான கேடும் வரவில்லை என்பதை அறிந்து ஒருவாறு தங்கள் மனதைத் தேற்றிக் கொண்டனர். பத்துதினங்கள் கழிந்தன. ஆணிப்பொன்னுற் செய்த வண்ணச்சிறு தொட்டிலில் தங்கள் தவச்செல்வனைக் கிடத்தி, வழக்கப்படி செய்யவேண்டிய சடங்குகளைச் செவ்வனே பூர்த்திசெய்து, “மாறன்” எனப் பெயரிட்டனர். பிறந்ததுமுதல் உலகவியற்கைக்கு மாருகவே வளர்ந்து வந்ததனுல், இவ்வாறு பெயரிட்டனர். எல்லோருமாகக்கூடி ஒருமுடிவுக்கு வந்தனர்.

இவ்விசித்திரப் பிறவியான குழந்தையை நம்வீட்டில் வைத்திருப்பதனால் ஒருபயனுமில்லை. எம்பெருமான் திருவருளாலேயே இது சீர்திருத்தப்பெறவேண்டுமாதலால், இக்குழவியைக் கோயிலுக்குக் கொண்டுபோய் எம்பெருமான் திருமுன்பே கிடத்தி அவனிடம் ஒப்புவித்தால் ஏதாவது பரிகாரம் கிடைப்பது திண்ணம் என்று தீர்மானித்தனர். காரியாரும் இதற்கிசைந்தார். எதற்கும் அவனருளையே நாடிநிற்கும் குடியல்லவா?

அற்புதமாக அலங்கரிக்கப்பெற்ற தந்தச்சிவிகையில் குழந்தை அமர்த்தப்பெற்றது. மங்களவாத்தியங்கள் முழங்கப் பலவிதமான ராஜமரியாதைகளுடன் குழந்தையை எடுத்துக் கொண்டு, 'பொலிந்து நின்றபிரான்' சன்னிதியில் பிரவேசித்தனர். காரியாரும் உடையநங்கையாரும், எம்பெருமானைத்தெண்டனிட்டுவணங்கியபின், குழந்தையையும் வணங்கும் பாவனையாகத் தரையில் கிடத்தினர். அதுவேகாரணமாகக் குழந்தை தவழ்ந்து செல்லவாரம்பித்தது. எல்லோரும் ப்ரமித்து நின்றனர். உடைய நங்கையாரின் மனங்குளிர்ந்தது. காரியாரின் முகமலர்ந்தது. அமுதகிரணங்களைப் பொழியும் திங்களைப் போன்ற திருமுகத்தைக் கம்பீரமாக நிமிர்த்திப் பல்வேறு அணிகள் கணீர் கணீர் என்று ஒலிக்க, அதன் நடைக்கேற்ப மங்களவாத்யங்களும் கீதங்களும் முழங்க, அங்கு கூடியிருந்த ஜனத்திரளை ஆனந்தஸாகரத்தில் ஆழ்த்திக்கொண்டு, சன்னிதியின் பிராகாரத்தைக் குழந்தை பிரதக்ஷிணம் செய்து, வடபுறத்தில் இருக்கும் புளியமரத்தின் கீழ்ச் சென்று யோகாசனத்தில் உபதேச முத்திரைக் கையுடன் அமர்ந்துவிட்டது.

இதுவரை வாளாகப் பின் தொடர்ந்து வந்த அனைவரும் இனிச்செய்வதென்னென்றுபுரியாமல் திகைத்தனர். குழந்தையை எடுத்தனர். அது மலைபோல் கனமாயிருந்தது. ஒருவராலும் அசைக்க முடியவில்லை. எத்தனையோ மந்திரவாதிகள்-வைத்தியர்கள்-பலவிதமாக முயன்று பார்த்தனர். ஒன்றும் பயனில்லை.

குழந்தையை விட்டகலமுடியாமல், காரியாரும் உடைய நங்கையாரும், தகுந்த வசதிகள் செய்வித்துக்கொண்டு அப்

பிராகாரத்திலேயே தங்கிவிட்டனர். ஈ யெறும்பு கடிக்காமல் தங்கள் செல்வப்புதல்வனை அனவரதமும் பாதுகாத்து வந்தனர்.

'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்றிருந்த ஆழ்வார் இவ்வுலகையே மறந்து யோக நிஷ்டையில் ஆழ்ந்திருந்தார். அவருடைய திருமேனி யோகாஸனத்திலமர்ந்தவாறே எவ்வித அசைவுமின்றிக் கிடந்தது. மழை-வெயில்-பனி-இவைகள், கல் - மண் - முதலியவைகளைப் போல், அவரது பொன்மேனியையும் தங்கு தடையின்றித் தாக்கி வந்தன. இவைகளுக்காகப் பிறர் செய்யும் பணிவிடைகளை, ஏற்றுக்கொள்வதோ விலக்குவதோ கிடையாது. திருமேனியோ வெனில் மேலும் மேலும் அற்புதமாய் வளர்ந்துகொண்டே வந்தது. ஸ்ரீவைகுண்டத்தில் திருவோலக்கங் கொண்டெழுந்தருளியிருக்கும் திருமகள்கேள்வன் கட்டளைப்படி, சேனை முதலியார் ஆங்கெழுந்தருளி, ஸகல தத்த்வார்த்தங்களையும் ஆழ்வார்க்குபதேசித்துச் சென்றனர். ஆண்டுகள் பதினாறு கழிந்தன. இவ்வதிசயம் நாடெங்கும் பரவியது. ஏராளமான ஜனங்கள் இவ்வதிசயத்தை நேரில் வந்து கண்டு வியந்தனர். காலம் சென்றுகொண்டே யிருந்தது.

திருக்குருகூருக்குக் கிழக்கே 'திருக்கோளூர்' என்றொரு திருப்பதி உளது. அதில், அந்தணர் குலத்தில் 'மதுரகவியார்' என்னுமோர் பெரியார் திருவவதாரம் செய்தனர். அன்னார் ஸகல சாஸ்திரங்களிலும் தேர்ந்தவராகித் தவத்தின் காரணமாக வடதிசையில் கங்கை நதிக்கரையில் வஸித்து வந்தார். ஒருநாள் இரவு, தென்திசையில் கோடி சூரியோதயமானாற்போல் பெரியதோர் ஒளிக்குவியல் அவருக்குத் தோன்றியது. இது மற்றெவருக்கும் தெரிவதில்லை. அதனால் இதன் காரணத்தை யறிய விரும்பி, அதையே வழிகாட்டியாகக் கொண்டு, இரவெல்லாம் வழிநடப்பதும் பகலில் இளைப்பாறுவதுமாகத் தென்திசை நோக்கி நெடுநாள் பிரயாணம் செய்தார். வரவர அச்சோதி அணித்தாகிக்கொண்டே வந்தது. திருக்குருகூர் வந்து சேர்ந்தார். அன்றிரவு தென்திசையில் நோக்கினர். வழக்கம்போல் அச்சோதி புலனாகவில்லை. அதனால் திருக்குருகூரிலேயே ஏதோ விசேஷம் இருக்கவேண்டுமெனக்கருதி அங்குற்றாரைக் கண்டு விசாரிக்கலாயினர்.

அவர்களால் ஆழ்வார் வரலாற்றை யறிந்து, பொலிந்து நின்றபிரான் திருக்கோயிலுக்கெழுந்தருளிப் பிராகாரத்தின் வடபுறத்தில் ஞானமூர்த்தியாய் வீற்றிருக்கும் நம்மாழ்வாரைக் கண்டார். கண்ட மாத்திரத்தில் தன்னை இங்கு அழைத்துவந்த தேஜஸ் இப்பெரியாருடையதே என்பதை அறிந்தார். ஆழ்வாரின் திருமுகத்தில் ஒப்புயர்வற்ற அற்புதமான ஞானப் பிரகாசம் வீசுவதைக் கண்டார். பேரானந்தங்கொண்டார். மும்முறை வலம்வந்து வணங்கினர். ஆழ்வார் திருமேனியைக் கூர்ந்து கவனித்தார். உச்சி முதல் உள்ளங்கால் வரை காடி போல் உரோமம் முளைத்துச் சடைபோட்டுக்கொண்டிருந்தது. அசைவற்றிருந்தமையால், உடம்பில் வாசியின்றி ஒரேமாதிரியாக எல்லா இடங்களிலும் உரோமம் படர்ந்திருந்தது. காற்றும் வெயிலும் மழையும் தங்கு தடையின்றி அத்திருமேனியைத் தாக்கியதனால் பாசி பிடித்துப்போயிருந்ததிலிருந்து, இவ்வுடலில் ஆழ்வார் எவ்வளவு அனுதாவுடன் எழுந்தருளியிருந்தார் என்பது தெள்ளென விளங்கியது.

எப்படியாவது முயன்று இவரைப் பேசவைத்து, அவரது அமுதமொழிகளைப் பருகித் தத்வங்களையுணர்ந்து நற்கதிபெற வேண்டுமென்று துணிந்தார். இவ்வாறு பலர் பலதரம் முயன்று பார்த்து வீணே திரும்பியதைக்கண்டவர்களான காரியாரும், ஏனையோரும்; ஸ்ரீமதுரகவியாருடைய முயற்சிகளை அன்புடன் வரவேற்று; எப்படியாவது தங்களுடைய அருமந்தப்புதல்வனைப் பேச வைக்குமாறு வேண்டிக்கொண்டனர். அதற்காக ஏராளமான வெகுமதிகளும் தருவதாகப் பகன்றனர்.

மதுரகவியார் ஆழ்வாருடைய திருமேனியை அணுகிக் கூர்ந்து கவனித்தனர். திருக்கண்கள் மூடியவண்ணமே யிருந்தன. இவரைக் கண் திறந்து பார்க்குமாறு செய்யவெண்ணி, ஒரு பெரிய கல்லை எடுத்துப் பெரிய சத்தம் உண்டாகுமாறு ஆழ்வாரருகில் போட்டார். உடனே ஆழ்வார் கண் திறந்து பார்த்தார். இதைக்கண்ட மதுரகவியார் பேரானந்தம்கொண்டு, ஆழ்வாருடைய செவியருகில் சென்று ஒரு கேள்வியைக் கேட்டார்:—

* "செத்தத்தின் வயிற்றிற் சிறியது பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்? என்று. "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று சடக்கென ஆழ்வார் பதில் அருளிச் செய்தார்.

பதினாறு வருஷங்கள் கண் திறவாமலும் வாய் பேசாமலும் இருந்த ஆழ்வார், பத்துத் திக்குங் கேட்குமாறு கணீரென்று பேசியதைக் கேட்ட யாவரும் பேரானந்தங்கொண்டனர். ஸ்ரீ மதுரகவிகளைக் காரியார் பெரிதும் போற்றி வணங்கி, மேலும் தன் செல்வக்குமாரனைப் பேசுவிக்குமாறும் உணவருந்துவிக்குமாறும் வேண்டிக்கொண்டு, ஏராளமான வெகுமதிகளையும் அளித்தனர். அன்னார் அவ்வெகுமதிகளைத் தன் தவநெறிக்கு ஒவ்வாதெனக்கூறி மறுத்தார். ஆழ்வாருடைய உண்மை நிலையைக் காரியாருக்கு நன்கு விளக்கினார். ஆழ்வார் இவ்வுலகப் பற்றுக்களை அறவே துறந்து, தன் திருவுள்ளத்தில் கோடி சூர்யோதயமானாற்போல் ஒளி வீசுகிற எம்பெருமானுடைய திவ்ய ரூபத்தையே அனவரதமும் அனுபவித்து, அவ்வமுதக்கடலிலேயே மூழ்கிக் கிடப்பவரென்றும்; அவரை அற்பமான லௌகிக சுகங்களில் ஈடுபடுமாறு திருப்புவது சாத்யமல்லவென்றும்; 'தங்கள் பிள்ளை' என்னும் எண்ணத்தை மறந்து, உலகை உய்விக்கத் தோன்றிய இம்மஹாபுருஷனை பக்தியுடன் வணங்கி வழிபட வேண்டுமென்றும் எடுத்துக் கூறினர். அதைக் கேட்ட காரியாரும் உடையநங்கையாரும் ஒருவாறு மனந்தெளிந்து துயர் தீர்ந்தனர்.

எம்பெருமான் இப்புவியில் ஆழ்வாரைத் தோற்றுவித்த தன் குறிக்கோள் பூர்த்தியாக வேண்டிய காலம் வந்தது. ஸ்ரீவைகுண்டநாதன் திருமகள்-நிலமகள்-நீளாதேவி சமேதனாய், பெரிய திருவடியின் மேலேறிவந்து ஆழ்வாருக்குக் காட்சியளித்தான். இம்மண்ணுலகில் ஆங்காங்கு பற்பல திருப்பதிகளில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் யாவரும், ஆழ்வாருடைய தெய்வீகப் பாடல்களில் இடம் பெறுவதற்காக, அவருக்கு நிழல் கொடுத்துக்கொண்டிருந்த புளியமரத்தில்

* செத்தது = அசேதனமான பிரகிருதி. 'அதன் வயிற்றில் = அதனுள், சிறியது = அணுவடிவமான ஜீவாத்மா. பிறந்தால் = வினைப்பயனைப் பிறந்தால், எத்தைத் தின்று எங்கே கிடக்கும்? என்பது கேள்வி. 'அத்தை = அந்த பிரகிருதியின் தோற்றமாகிய ஐம்புலன்களை, தின்று = அனுபவித்து, அங்கே = அந்தப் பிரகிருதியிலேயே, கிடக்கும் = என்பது பதில்.

இலக்கோரொருவராய்த் தங்கள் பரிவாரங்களுடன் வந்து சூழ்ந்திருந்து ஆழ்வாருக்குக் காட்சியளித்தனர். இவ்வாறு ஆழ்வாருடைய மனமும், அவர் வீற்றிருந்த இடமும் எம்பெருமானுடைய பல்வேறு வடிவங்களால் சூழப்பெற்று ரஜஸ்-தமஸ்-சிறிதும் இல்லாமல் ஸத்த்வகுணமே நிறைந்ததாய்த் திகழ்ந்தது. ஸ்ரீமதுரகவியார் முறைப்படி ஆழ்வாரை வணங்கித் தத்வார்த்தங்களனைத்தையும் திருவாய்மலர்ந்தருளித் தன்னையும் இவ்வுலகையும் க்ஷேமத்தைறப் பண்ணுமாறு ஆழ்வாரை வேண்டினார்.

திருவாய்மொழியின் சிறப்பு

இவ்வாறு மதுரகவியாரால் பிரார்த்திக்கப்பட்ட நம்மாழ்வார், தன் சோதிவாய் திறந்து, நான்கு ப்ரபந்தங்களைப் பாடியருளினார். ஆழ்வார், தம் அகத்தில் பெருகி ஓடும் பக்தி வெள்ளத்திற்குப் போக்கு வீடாகத் திருவாய்மலர்ந்தருளியதை, அவ்விடத்தே அல்லும் பகலும் அமர்ந்திருந்து சிரத்தையுடன் பட்டோலைப்படுத்தி வந்தார் மதுரகவியார். இவைகளே மேற்கூறிய நான்கு ப்ரபந்தங்களாயமைந்தன. அவை முறையே (1) திருவிருத்தம் - (100-பாட்டுக்கள்), (2) திருவாசிரியம் - (7-பாட்டுக்கள்) (3) பெரிய திருவந்தாதி - (87-பாட்டுக்கள்) (4) திருவாய்மொழி . (1102 பாட்டுக்கள்) என்பனவாம்.

இந்நான்கு ப்ரபந்தங்களும் அந்தாதித் தொடையிலேயே அமைந்துள்ளன. இவை மயர்வற மதிநலமருளப் பெற்றவராகிய நம்மாழ்வாரால் பாடப்பெற்றமையினாலும், பரம்பொருளாகிய இறைவனது திருவிளையாடல்களையும் - குணங்களையும் - அவதார வைபவங்களையுமே பேசுவதனாலும், சொற்குற்றம் - பொருட்குற்றம்-முதலியன சிறிதும் இல்லாததாய் எல்லோருக்கும் பிரமாணமாகக் கொள்ளக் கூடியனவாய் அமைந்தன. இவைகளுள் முறையே திருவிருத்தம்-ருக்வேதத்தின் ஸாரத்தையும், திருவாசிரியம்-யஜுர்வேத ஸாரத்தையும், பெரிய திருவந்தாதி-அதர்வண வேதத்தின் ஸாரத்தையும், திருவாய்மொழி-ஸாமவேத ஸாரத்தையும், விளக்குகின்றன என்று ஆன்றோர் கூறுவர். இவைகளுள் கடையானது "திருவாய்மொழி"யாகும்.

இவற்றுள் திருவாய்மொழியின் சிறப்பைப் பொதுவாகச் சிறிது விளக்குவோமிங்கு. திருவாய்மொழியில் ஒவ்வொரு பதிகங்களிலும் கடைச் செய்யுட்கள், நம்மாழ்வாருடைய திரு நாம முத்திரையுடன் இப்ரபந்தத்தின் சிறப்பையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இவற்றில் சிலவற்றை இங்கே தருகிறோம்.

'அமர்சுவை யாயிரத்து' (1-3-11)=சொற்சுவை-பொருட்சுவை பொருந்தின ஆயிரத்து.

'அளவியன்ற அந்தாதியாயிரத்துள்'(1-4-11)=எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரங்களைச் சொல்லுகிற பிரமாணங் களிலே நிற்கிற......

'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பாவுமாயிரத்தின்' (1-5-11) பால்போலே இனிய தமிழையுடையவர்கள், இசையறிவார், பக்தி யுடையார்-இவர்கள் கொண்டாடும் ஆயிரத்தின்.

'ஏதமிலாயிரத்து (1-6-11)=குற்றமற்ற ஆயிரம்.

'சொல்பணிசெயாயிரத்துள் (1-10-11) = சொல்லாலே பணி செய்த ஆயிரம்.

'தெருள்கொள்ளச் சொன்னவாயிரம் (2-10-11) = (கேட்டார்) தத்வஜ்ஞானம் பெறுமாறு சொன்ன ஆயிரம்.

'பண்கொளாயிரம் (3-6-11)=பண் நிறைந்த ஆயிரம்.

'பொய்யில் பாடலாயிரத்துள் (4-3-11)=பொய் இல்லாத பாடல் ஆயிரத்து.

'வேட்கையால் சொன்ன பாடலாயிரத்துள் (4-10-11) =பக்தி உள்ளடங்காமையால் அதற்குப் போக்கு வீடாய்ச் சொன்ன ஆயிரம்.

'குழலின் மலியச் சொன்ன ஓராயிரத்துள் (5-8-11) = குழ லோசையிலும் இனியதான ஆயிரம்.

'முந்தையாயிரத்துள் (6-5-11) = பழையதான வேதங்களின் கருத்தைத் தெளிவிப்பதான ஆயிரம்.

தோற்றங்களாயிரத்துள் (6-8-11) = எம்பெருமானுடைய அரு ளால் தோன்றிய வாயிரம்.

'தீர்த்தங்களாயிரத்துள்' (7-10-11) = பரிசுத்தப்படுத்துவதான ஆயிரம்.

'பாலோடமுதன்ன ஆயிரத்து' (8-6-11) = பாலும் அமுதும் கலந்தாப்போலே யிருக்கிற ஆயிரம்.

(மற்றும் சில)

'தானே யானென்பானாகித் தன்னைத் தானே துதித்து' (10-7-2)

'பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடி' (10-7-5)

இராமாயணத்தை இயற்றிய வால்மீகி மகரிஷி, தன் வாயினின்றும் வெளிவந்த சுலோகத்தின் அற்புதமான அமைப்பை நினைந்து பிரமித்திருக்கையில், "மச்சந்தாதேவ தே ப்ரஹ்மந்! ப்ரவ்ருத்தேயம் ஸரஸ்வதீ" என்று பிரம்மதேவன் உண்மையை விளக்கினாற்போல்; ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளிய இவ்வண்டமிழ் கவிகள், இவரால் சிருஷ்டித்துக் கூறப்பட்டவையல்ல. எம் பெருமானாலேயே ஆழ்வாரை வியாஜமாக்கிக் கொண்டு உலக க்ஷேமார்த்தமாய்த் தோற்றுவிக்கப்பட்டனவாகும். இப்பாடல்களின் அருமை பெருமைகளை நன்குணர்ந்து ஆழங்காற்பட்ட நம் கவிச்சக்ரவர்த்தி, தம் சடகோபரந்தாதியில் இத்திருவாய்மொழியை அற்புதமாகப் புகழ்ந்து பாடியுள்ளார். அவற்றுள் சிலவற்றைக் காண்மின்!

"தோன்று வுபநிடதப் பொருள் தோன்றலுற்றார் தமக்குஞ் சான்றுமிவை... .."

ஆயிர மாமறைக்கும் அலங்காரம், அருந்தமிழ்க்குப்
பாயிரம், நாற்கவிக்குப் படிச்சந்தம், பனுவற்கெல்லாம்
தாயிரு நாற்றிசைக்குந் தனித்தீபம், தண்ணங்குருகூர்ச்
சேயிருமாமரபுஞ் செவ்வியான் செய்த செய்யுட்களே.

"......ஆராவமுதங் கவியாயிரம்..."

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன், "தமிழ் வேதமறிந்த பகவர்களே" என்றும், "செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்றும் புகழ்ந்துரைத்ததுடன்; "சந்தமிகு

தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு" என்று தன்னைப் பெருமிதத்துடன் கூறியுள்ளார். "யஜுஸ்ஸாகாத்யாயீ" "ஸாமசாகாத்யாயீ" என்பதுபோல், திருவாய்மொழியோதுவதையே கடமையாகக் கொண்ட நற்குலத்திலுதித்த ணைக்காகத் தன்னையே சிறப்பித்துக்கொண்டபடி. இதையும், இதற்குப் பெரியோர்களால் எழுதப்பெற்றுள்ள உரைகளையும் அனவரதமும் பிரசாரம் செய்வதேயன்றி மற்றொன்றிலும் மனம் செல்லாதவராய்த் தனது ஆயுட்கால முழுதும் நன்னாளாகக் கழித்துப் பேரின்பமெய்தினர் ஸ்ரீ மணவாளமாமுனிகள். இவ்வாறு இவ்வினிய ப்ரபந்தம், தோன்றிய காலம் முதல் இன்றளவும் அடியார்கள் குழாங்களாலும், தமிழன்பர்களாலும் போற்றிக் காப்பாற்றப்பட்டு வருவதாகும்.

இதன் பெருமையை முழுதும் எடுத்துரைக்க அடியேன் போன்ற அறிவிலிகள் துணிவுடன் முற்படுவது, "திதீர்ஷுர் துஸ்தரம் மோஹாத்" என்று கவிகோகிலம் கூஜித்தபடி நகைப்பிற்கிடமாவது மட்டுமின்றி; * "மாசூணா வுணபாத மலர்ச் சோதி மழுங்காதே" என்றபடி இதற்குக் குறைவாகவே முடியும். ஆகலின், ஏனைய துறைகளைத் தவிர்த்து, தத்துவ மார்க்கத்தில் இந்நூலின் கருத்தைப் பூர்வாசார்யர்கள் அறுதியிட்டபடி சுருக்கமாய் எழுதுகிறேன்.

"ப்ரூதே காதா ஸஹஸ்ரம் முரமதன குணஸ்தோம கர்ப்பம் முனீந்த்ர:" என்கிறபடி எம்பெருமானுடைய கல்யாண குணங்களையே பன்னியுரைப்பது இந்நூல். ஆயினும் இதில் முக்கியமாக விவரிக்கப்படுவது 'அர்த்த பஞ்சகம்' என்னும் ஐம்பொருள்களேயாகும். அவையாவன:— (1) பரம்பொருளான இறைவனது தன்மை (2) ஜீவாத்மாவின் (உயிரின்) தன்மை, (3) இவ்வுயிர் அப்பரம்பொருளைப் பெறுவதற்கான உபாயம். (4) அவ்வாறு பெறவொட்டாமல் தடையாயிருப்பவை. (5) எம்பெருமானை அடைந்து அனுபவிக்கும் பேரின்பத்தின் தன்மை, என்பனவாம். இவைகளை ஒவ்வொருவரும் அறியவேண்டுவது இன்றியமையாததாகும். ஸகலமான உபநிஷத்துக்களும் இதையே எடுத்துரைக்கின்றன. ஸித்த ஸாத்யபரமான ப்ரம்ம

---

* திருவாய்மொழி (3-1-8)

ஸூத்திரங்களும் இதையே விவரிக்கின்றன. 1000 பாட்டுக்களுள்ள திருவாய்மொழியில் 200 பாட்டுக்கள் (இரண்டு பத்துக்கள்) கொண்ட ஒவ்வொரு பகுதியும் முறையே மேற்கூறிய ஐந்து பொருள்களையும் விளக்குகின்றன.

இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையான மற்றொன்றும் இத்திருவாய்மொழியின் முக்கியமான குறிக்கோளாகும். அதுவே 'சரீராத்மபாவ ஸம்பந்த'மென்பது. சரீரம்-உடம்பு. ஆத்மா-அதனுள் புகுந்திருக்கும் உயிர். உடலுக்கும் உயிருக்கும் பரஸ்பரம் சில ஸம்பந்தங்கள் உள்ளன. அவை யாவும், இறைவனுக்கும், மற்ற சேதநாசேதனங்களுக்கும் உள்ளன' என்னும் இவ்வர்த்தம் மிகவும் முக்கியமானது. ஸகல வேதங்களும்-உபநிஷத்துக்களும்-புராணங்களும் இந்த 'சரீராத்மபாவ' ஸம்பந்தத்தையே எடுத்துரைக்கின்றன. இந்த ஸம்பந்தத்தையும், இவ்வைம்பொருள்களையும் ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். பேரின்பம் பெற விரும்புகிறவர்களுக்கோவெனில் மிக மிக முக்கியமாகும் என்பது சொல்ல வேண்டுவதில்லை. அதனாலேயே கருணைக்கடலும் மயர்வற மதிநலமருளப் பெற்றவருமாகிய நம்மாழ்வார், இவ்வுண்மைகளையே திருவாய்மொழியில் திட்டமாய் விளக்கியுள்ளார். இதில் முந்துறமுன்னம் 'சரீராத்மபாவ' ஸம்பந்தத்தைச் சுருக்கமாய்ச் சொல்லி, அதன்பிறகு அர்த்த பஞ்சகத்தை விளக்குவோம்.

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசைப்
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.

இது திருவாய்மொழி முதற்பத்து-முதல் திருவாய்மொழி-7-ம் பாட்டு. இதில் மூன்றுமடியிலே 'சரீராத்மபாவ' ஸம்பந்தம் சொல்லப்பட்டுள்ளது. முதல் இரண்டு அடிகளாலே இறைவனுக்கு உடம்பாக உள்ள ஸகல சேதநாசேதனங்களையும் சொல்லி, 'இவையுண்ட சுரனே' என்கிற பகுதியால் சரீரி (உயிர்)யான எம்பெருமானைச் சொல்லி, உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்து - என்பதினால், ஸம்பந்தத்தை விளக்கி, 'உளன் சுடர்மிகு சுருதியுள்' என்பதனால், இவ்விஷயம் தோஷமற்ற

வேதங்களில் சொல்லப்பட்டுள்ளதென்றருளிச் செய்கிறார்.

நம்முடைய உடம்பில், "நான்" என்று தன்னை அழைத்துக் கொள்ளும் உயிர், எந்தவிதமான ஸம்பந்தத்துடன் இருந்துவருகிறதோ; அதுவே இறைவனுக்கும் மற்ற பொருள்களுக்கும் உளதாக அறுதியிடவேண்டும். 'ஆதேயத்வம், விதேயத்வம், சேஷத்வம். இவை சரீரத்தின் தன்மைகள். ஆதாரத்வம், நியந்த்ருத்வம், சேஷித்வம்-இவை சரீரியின் (உயிரின்) தன்மைகள். முந்தியதான மூன்றையும் பின்புள்ள மூன்றுடன் நேருக்கு நேராகச் சேர்த்து 'ஆதாராதேய பாவம், "நியந்த்ரு நியாம்ய பாவம் "சேஷசேஷிபாவம்" என்று வழங்குவர். 'ஆதேயம் = தாங்கப்படுவது. 'ஆதாரம் = தாங்கி நிற்பது. 'விதேயம் - அல்லது- நியாம்யம் = பிறரால் இஷ்டம்போல் உபயோகித்துக்கொள்ளக் கூடியதாய் இட்ட வழக்காயிருப்பது. 'நியந்தா = இயக்குபவன். ஒரு பொருள் ஒரு காரியத்தைச் செய்வது - அல்லது செய்யாதொழிவதைத் தன் வசமாக்கிக்கொண்டுள்ளவன். 'சேஷம் = பிறருடைய ப்ரயோஜனத்துக்காகவே யிருப்பது. 'சேஷீ = சேஷ வஸ்துவினால் உண்டு பண்ணப்படும் * அதிசயத்தைப்பெறுபவன்.

நம்முடைய சரீரம் - உள்ளே யிருக்கும் ஆத்மாவினால் சிதறிப்போகாமல் தாங்கப்படுகிறது. அதனால் இது ஆதேயமாகிறது. உயிர் இதற்கு ஆதாரமாகிறது. ஆத்மா தன் இஷ்டப்படி, உடலை வேலை செய்யுமாறு - அல்லது - செய்யாதிருக்குமாறு கட்டளையிடுகின்றது. சரீரம் அதற்கு உட்பட்டே இருக்கின்றது. அதனால் உடல் நியாம்யம்-அல்லது விதேயமென்றும், ஆத்மா நியந்தாவாகவும் தேறுகின்றது. அவ்வாறே இவ்வுடல் ஆத்மாவின் ஸௌகர்யத்திற்காகவே எற்பட்டுளது. அதுவேயன்றி, உடல் தனக்கென்று ஒரு ப்ரயோஜனத்தை வைத்திருக்கவில்லை. உடலினால் ஆத்மா தன் ஸுகதுக்கானுபவத்தைப் பெறுகிறது. ஆகலின் உடல் சேஷமாகவும் உயிர் சேஷியாகவும் கூறப்பட்டது.

இதில் மூன்றாவதான சேஷ-சேஷிபாவத்தில் ஒரு விசேஷம். சேஷமானவஸ்துவும், சேஷியான வஸ்துவும் சேதனமாயிருப்பின்; அப்பொழுது, இதுவே 'தாஸத்வ – ஸ்வாமித்வ' மென்று வழங்கப்படும். தாஸத்வமாவது; " எஜமானனுக்கு 'இது' பிரிய

---

* அதிசயம் = மேன்மை உயர்வு.

மானது” என்கிற எண்ணத்துடன் அவனுக்காக ஒருகாரியத்தைச் செய்து அவனை ஸந்தோஷப்படுத்துதல். ‘ஸ்வாமித்வமாவது; “இவன் செய்த காரியம் நமக்குப் பிரியமானது” என்று நினைத்து அதனால் இன்புறுதல். இரண்டிலொன்று அசேதனமாயிருப்பின் இது வாராது. ஒருவன் ஒருகட்டிடத்திற்கு வர்ணம் தீட்டுகிறான். இங்கு சேஷியான கட்டிடம் அசேதனம். சேஷனான ஒருவன் செய்யும்வேலையினால், அது, தான் என்னவிதமான மேன்மையைப் பெறுகிறோமென்று உணரும் சக்தியற்றது. ஒருவன் வெயிலில் செருப்பு போட்டுக்கொண்டு நடக்கிறான். இங்கு சேஷமாகிய செருப்பு அசேதனம். அது தான் சொந்தக்காரனுக்கு எந்தவித மான ஸௌகரியத்தைச்செய்கிறோமென்று உணர்ந்து அதைச்செய் யும் இயலபற்றது. எஜமானனுக்குக் குறிப்பறிந்து பணிவிடைகள் செய்யும் வேலைக்காரன் ‘தாஸன்’ (சேஷம்) எனப்படுவான். அவ்வாறே வேலைக்காரனால் உண்டாகும் ஸௌகரியத்தைப்புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளும் எஜமானன் (சேஷீ) ‘ஸ்வாமீ’ எனப் படுவான்.

இவ்வாறு உலகவியற்கையில் நாம் கண்ட சரீராத்மபாவஸம் பந்தமே, எம்பெருமானுக்கும் மற்றுமுள்ள பொருள்களுக்கும் இயற்கையாய் அமைந்துள்ளது. இதை நன்கு தெரிந்து கொள்ளா விடில் யாருக்கும் பேரின்பத்தைப் பெறுவதும், அதற்கான உபாயங்களில் இழிவதும் ஸாத்யமாகாது. தனக்குத்தானே சேஷியாகவோ, அல்லது தனக்கு எம்பெருமானைத்தவிர வேறு சேஷி இருப்பதாகவோ நினைத்திருந்தானாகில் (இதுவே உண்மை என்றிருந்தானாகில்) எம்பெருமானை தியானித்து, அவனருளால் அவன்திருவடிகளையே அனவரதம் தொழுதெழுவதாகிய பேரின் பத்தைப்பெறுவதற்கு விரும்புவதும் முயற்சிப்பதும் சிறிதும் பொருந்தாது. அதனாலேயே உண்மை நிலைமையைப் ப்ரத்யக்ஷ மாகக்கண்டறிந்த ஆழ்வார், முதலில் இந்த சரீராத்மபாவ ஸம்பந்தத்தைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதுபோலவே அர்த்தபஞ்சகமும் எல்லோருக்கும் அவசியம் அறிந்துகொள்ள வேண்டியதாகையினால், இந்நூலை ஐந்து பகுதிகளாக வகுத்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அர்த்தத்தைத் தெரிவித்தார். இதனாலேயே இந்நூல் “பகவத்விஷயம்” என்றே இன்றும் வழங்கப்பட்டுவருகிறது.

அவைகளில் முதலாவது 'ப்ராப்யஸ்ய ப்ரம்மணோ ரூபம்' (பெறவேண்டியதான பரம்பொருளின் தன்மை) திருவாய்மொழியில் முதல் இரண்டு பத்துக்களால் (200—பாட்டுக்கள்) விளக்கப்படுவது. முதல்பத்து முதல் திருவாய்மொழி இரண்டாம் பாட்டில் "உணர்முழுநலம்" என்கிறவார்த்தையால் இறைவனது தன்மையை விளக்குகிறார். இதிலுள்ள "முழு" என்னும்பதம் 'உணர்' 'நலம்' என்னும் இரண்டு சொற்களுடனும் சேர்க்கப்பட வேண்டும். அதனால் 'முழு உணர்', 'முழுநலம்', என்று தேறுகிறது. 'உணர் = ஞானம்'. 'நலம் = ஆனந்தம்'. எம்பெருமான் முழுதும் ஜ்ஞானனந்தஸ்வரூபமானவன். ஜ்ஞானமும் ஆனந்தமுமே எம்பெருமானுடைய ஸ்வரூபமாகும். எங்கும் வியாபித்து நிற்கும் அகண்ட பரிபூர்ணஸ்வரூபத்தில் சிறிது ஜ்ஞானமாயும்-சிறிது ஜ்ஞானமில்லாததாயும் இருக்காது. அப்படியே சிலபகுதி ஆனந்த ரூபமாகவும், ஏனையபகுதி ஆனந்தரூபமல்லாததாகவும் இருக்காது. முழுதும் ஜ்ஞானரூபமாகவும், முழுதும் ஆனந்தரூபமாகவுமே எம்பெருமான் இருக்கிறான்.

இப்படிப்பட்ட எம்பெருமான் எக்காலமும இணைபிரியாமல் திருமகளோடு சேர்ந்தேயிருப்பவன் "மலர்மங்கையுறைமார்பன்" "அகலகில்லேனிறையு மென்று அலர்மேல்மங்கையுறைமார்பா!- "கோலத்திருமாமகளோடுன்னை" என்பதுபோன்ற பல பாசுரங்களில் இதைக்கூறியுள்ளார். மேலும் எண்ணற்கரிய நற்குணங்களுள்ளவன் எம்பெருமான். 'உயர்வற உயர்நலமுடையவன், வல்வினைபேனையீர்கின்ற குணங்களை யுடையாய்" என்பதால் இதை விளக்குகிறார். இதுபோலவே திவ்யமங்கள விக்ரஹமும், அனந்த கருட விஷ்வக்ஸேனாதிகளான பரிஜனங்களும், நித்யவிபூதி - லீலாவிபூதி எனப்படும் இரண்டு விபூதிகளும், 'பர - வ்யூஹ - விபவ - ஹார்த்த - அர்ச்சா - என்று சொல்லப்படும் ஐந்து வகையான வடிவங்களும், தன் ஸங்கல்ப மாத்ரத்தால் எல்லாவுலகங்களையும் ஆக்கிபழிக்கும் சக்தியும், இதுபோல் பல்வேறு விசேஷங்களும், அவனுக்கு இருப்பதாக இத்திருவாய்மொழியில் ஆங்காங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்விதமாயிருக்கும் பரப்ரம்மத்தைப்பெற்று அந்தமில் பேரின்பமெய்துவதற்கு இவ்விஷயங்களைத் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகையால் முதல் 200 பாட்டுக்களால் முக்கியமாக இவை விளக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது-'ப்ராப்துஸ்ச ப்ரத்யகாத்மந:'(பரம்பொருளைப் பெறவிரும்பும் ஜீவாத்மாவின் ஸ்வரூபம்) இது திருவாய்மொழியில் 3-4-பத்துக்களால் (200 லிருந்து 400 வரை உள்ள 200 பாட்டுக்கள்) விளக்கப்படுகிறது. இந்த ஜீவாத்மாவுக்கும் எம்பெருமானைப் போலவே ஜ்ஞானம் ஆனந்தம் இதுவே ஸ்வரூபமாயிருக்கும். ஆனால் 'அணு'வடிவமானது. இயற்கையில் ஒருதோஷமும் இல்லாதது. எம்பெருமானை விட்டுத்தனித்து நிற்கும் இயல் பற்றது. எம்பெருமானுக்குச் சரீரமாய் அமைந்தது. எம்பெருமானால் தரிக்கப்பட்டு, அவனிட்ட வழக்காய், அவனுக்காகவே இருப்பதனால் அவனுக்குச் சரீரமாகும். தனக்கு அந்தர்யாமியான இறைவனை உள்ளபடி உணர்ந்து, அவனையே அனவரதமும் அனுபவிப்பதிலேயே இவ்வாத்மாவுக்குப் பேரின்பம் உளது. அப்பரம்பொருள் ஒன்றே இந்த ஜீவாத்மாவுக்கு உண்மையில் இன்பகரமானது. மற்றவைகள் யாவும் போலியேயாகும்.

அணுவடிவான இந்தஜீவாத்மாவின் அறிவு (தர்மபூதஜ்ஞானம்) எங்கும் வியாபித்து நிற்கும் இயல்புடைத்து. எம்பெருமானிடம் அளவிலா அன்புடன், அவனுக்குப் பிரியமான பலவிதமான பணிவிடைகளைச் செய்வதிலேயே உண்மையான இன்பத்தைக்காண்பது இதன் இயற்கைச்சொத்தாகும். இது எல்லாவுயிர்களுக்கும் பொதுவானது. அவைகளுள் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் வினைப்பயனாக வந்தவையே. இதையிழந்து, அநாதியான கர்மங்களால் (வினைகளால்) கட்டுண்டு, அசேதனமான ப்ரக்ருதியின் வசப்பட்டு, அதிலேயே மூழ்கிப் போலியான இன்பங்களிலேயே மனதைப் பறிகொடுத்து, எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து ஏங்கி நிற்பது, இந்த ஜீவாத்மாவுக்கு வந்தேறியேயாகும். அவனடியார்க்கடிமை செய்து இன்புறுவதே பேரின்பத்தின் எல்லையாகும். இதுபோன்ற பல விஷயங்களையும் 3-4-பத்துக்களில் அருளிச்செய்தார்.

மூன்றாவது - ப்ராப்த்யுபாயம் (ஜீவாத்மா எம்பெருமானைப் பெறுவதற்கான உபாயம்). இது இருவகைப்படும்:— 1. ஸித்தோபாயம் 2. ஸாத்யோபாயம் என்று. இதை-5-6-பத்துக்களால் (400 முதல் 600 வரை உள்ள 200 பாட்டுக்களால்) விரித்துரைக்கிறார். இதில் 'ஸித்தோபாயமாவது:— ஸித்தமான உபாயம்.

ஒருவனால் செய்யப்படவேண்டிய அவசியமின்றித், தானே ஸித்த மாயிருப்பது என்றபடி. இறைவனே மோக்ஷம் பெறுபவனுக்கு ஸித்தோபாயமானவன். அவனே, இந்த ஜீவாத்மாவைத் தன் நற்பொற்சோதித்தாளிணைகளை அடையுமாறு அழைத்துக் கொண்டாலன்றி, இவனாக அவ்வந்தமில் பேரின்பத்தைப் பெறுவது சாத்தியமில்லை. இறைவன் கருணைக்கடல். அன்றீன்ற கன்றினிடம் பசுவுக்கிருப்பதுபோல் ஸகல ஜீவராசிகளிடமும் எல்லை கடந்த அன்புகொண்டவன். இவர்கள், தன் கர்மானுகுணமாய், வெவ்வேறு அற்ப ஸுகங்களில் கால்தாழ்ந்து அவதிப்படுவதைக் கண்டு மனமிரங்கி; எந்த விதத்திலாவது இவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்திக்கொள்வதிலேயே முழுநோக்கங்கொண்டு அதற்காகப் பல அடியார்களைத் தோற்றுவிப்பவன். அவ்வாறு ஆசார்யர்களால் திருத்தினவர்களுக்குத் தன்பால் எல்லையற்ற பிரேமத்தையுண்டுபண்ணிப் பேரின்பத்தைப் பெறுவதில் ஆவல் உண்டாகுமாறு செய்பவன். எதையும் தான் நினைத்த மாத்திரத்தில் செய்யும் சக்தியுள்ளவன். ஸ்வதந்த்ரன். இந்த உயிர் வகைகளை 'பக்தி' 'ப்ரபத்தி' முதலான ஏதேனுமொரு உபாயத்தில் இழியும்படி செய்து, அதையே வ்யாஜமாக வைத்துக் கொண்டு இவர்களுடைய பழவினைகளைப் பற்றறுத்துத் தன் [1]செம்மாபாத பற்புக்களுடன் சேர்ப்பித்துக்கொள்பவன் ஸகல சேதனாசேதனங்களும் அவனுடைய சொத்தாகையால், சொத்துக்குடையவன் அதைக் காப்பாற்றுகிறதைப் போன்ற அவசியமும் உரிமையும் உள்ளவன்.

இவ்வாறு ஸித்தோபாயமான எம்பெருமான் ஆர்த்த ரக்ஷணத்திலே தீக்ஷிதனாயிருந்தும், இவ்வுபாயத்தைக் காரிய ஸாதகமாக்கிக் கொள்வதற்காக மோக்ஷம் பெற விரும்புகிறவன் செய்ய வேண்டுவதொன்றுண்டு. அதுவே 'ஸாத்யோபாய' மெனப்படுவது. 'ஸாத்யம்=புருஷனால் செய்யக்கூடியது எம்பெருமானைப்போல் தானாகவே ஸித்தமாயிருப்பதல்லாமல் இவனால் ஸாதிக்கப்பட வேண்டியதாயிருப்பது. அது - பக்தி - ப்ரபத்தி என இருவகைப்படும். பக்தி=அன்பு. உயர்ந்தவனிடம் தாழ்ந்தவன் செலுத்தும் அன்பு. உபநிஷத்துக்களில் விதிக்கப்

[1] திருவா-2-9-1.

பட்டுள்ள பல்வேறு 'உபாஸநங்களும்' பக்தி எனப்படும். *இதுவே பக்தியோகம் என்றும் வழங்கப்படும்

இரண்டாம்வகை, சரணாகதி, ப்ரந்யாஸம், பரஸமர்ப்பணம், ஆத்மநிக்ஷேபம், ப்ரபதனம், என்று சாஸ்த்ரகாரர்களால் வழங்கப்படுவதாகும். 'அடைக்கலம்புகுதல்' என்பதே இதன் தமிழ்ப் பெயராகும். இவ்விரண்டுக்குள் பக்திபோகத்தையும், அதிலிழிவார் செயயவேண்டியவற்றையும், 'வீடுமின் முற்றவும் - (திருவாய்மொழி-1-1-2.) முதலியவிடங்களில் கூறியுள்ளார். இங்கு இவ்விரண்டு மார்க்கங்களுக்கும் பொதுவான அம்சங்களைக் கூறிக் கடைசியில் எல்லோரும் வாசியின்றி ஈடுபடக்கூடியதாகையால் சரணாகதியை விவரிக்கிறார்.

இவ்வுபாயங்கள் இரண்டுக்குள் ஏதேனுமொன்றில் இழிவதனால், ஒருவன் தன் பக்கல் எம்பெருமானுடைய அருள் சுரக்குமாறு செய்கிறான். ஏதேனுமொரு முகாந்தரத்தை எதிர் பார்த்திருக்கும் இறைவன், சுதந்திரனும்-சக்தியுடையவனுமாகையால், உடனே அவனுக்குப் பேரின்பத்தை யளிக்கிறான். இவ்விதமான ஸாத்யோபாயம் இல்லாவிடில் ஸித்தோபாயமான இறைவனால் மட்டில் ஒருவனுக்கு மோக்ஷம் கிடைப்பது ஸாத்யமில்லை. 'ந மே த்வேஷ்யோஸ்தி ந ப்ரிய:' என்றும், 'ஸமோஹம்-ஸர்வபூதேஷு' என்றும் சொல்லுகிறபடி, வேண்டுதல் வேண்டாமையற்றவனாய் எல்லோருக்கும் பொதுவானவனாய், அவரவர்களுக்குத் தம் வினைகளுக்கேற்ற பயனைக்கொடுப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்ட இறைவன், ஒருவனுக்கு ஒரு காரணமுமின்றிக்கே பேரின்பம் வழங்குவதும், மற்றொருவனுக்கு அதை வழங்காதிருத்தலும் ஒவ்வாது. எம்பெருமான் சிலர் விஷயத்தில் "இரக்கமற்றவன்" என்றும், "பக்ஷபாதமுள்ளவன்" என்றும் சொல்லவேண்டி நேரிடும். "ஸக்ருதேவ ப்ரபந்நாய" "சரணமாகும் தனதாளடைந்தார்கெல்லாம், மரணமானால் வைகுந்தங்கொடுக்கும்பிரான்" 'விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே' என்பன போன்ற பல பிரமாண வசனங்களுடன் இது விரோதிக்கும். அதனால் ஸாத்யோபாயம் அவசியமாகிறது.

இதில் பக்தியோகமாவது:— பரம்பொருளான எம்பெருமானை, விலக்ஷணமான ஸ்வரூப ரூப குண விபூதிகளுடன் கூடிய

---

* பக்தியோகம் - த்யானம். யோகம் - தபஸ் - உபாஸநம் - பரபக்தி - பக்தி - என்பன ஒரே பொருளுள்ள சொற்களாகும்.

வனுக, முறைப்படி அன்புடன் இடையறுது தியானம் செய்தல். இவ்வாறு செய்யப்படும் தியானம், எண்ணெயின் தாரைபோல் தொடர்ந்துள்ளதாய், மோக்ஷம் பெறுகிற காலம் வரை, நாள் தோறும் படிப்படியாக வளர்ந்துகொண்டே வரக்கூடியதாகும். இந்தத் தியானமே ப்ரீதிரூபமான ஜ்ஞானம் எனப்படுவது. இது இறைவனை நேரில் ப்ரத்யக்ஷமாய் காண்பதற்கொப்பாகும். இவ்வாறு பக்திபண்ணுபவன், தனக்கென விதிக்கப்பட்டுள்ள வர்ணாச்ரம தர்மங்களைத் தவருமல் அனுஷ்டித்தல் வேண்டும். இந்த கர்மானுஷ்டானம்; இவனுடைய பக்திக்குத் தீங்கு விளைவித்து அதைக் கெடுக்கக்கூடிய பாபங்களை நாசம்செய்து, இந்த பக்தியோகம் பூர்த்தியாவதற்குத் துணைசெய்யும்.

இந்த பக்தியே 'பரபக்தி' எனப்படும். இதுமுதிர்ந்த நிலையில் வந்தவாறே, எம்பெருமானைக் கண்டல்லது தரிக்கவொண்ணுத நிலைமையை உண்டாக்கும். அது எம்பெருமானது அருளைத்தூண்டித் தன்னுடைய திவ்யரூபத்தைக் காண்பித்தருளுமாறு செய்யும். இவ்வாறு இறைவனை பக்தியோகத்தால் காண்பது 'பரஜ்ஞான' மெனப்படும். இப்படி ப்ரத்யக்ஷமாக எம்பெருமானைக் கண்டவாறே உண்டாகும் விலக்ஷணமான பேரன்பு 'பரமபக்தி' எனப்படும். பெருவிடாய்ப்பட்டவன் பெரியதான நீர்நிலையைக் கண்டவாறே அவன் மனதில் எழும் ப்ரீதியைப் போன்றதாகும் இப்பிரேமம். இம்மூன்றையும் ஒன்ருகச் சேர்த்துப் பரபக்தி-பரஜ்ஞான-பரமபக்தி-என்று வழங்குவர். நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய ப்ரபந்தங்கள் நான்கனுள், * "பொய்ந்நின்ற ஞானம்' தொடங்கி - (திருவிருத்தம்), 'சூழ்விசும்பணி முகில் (திருவாய்மொழி 10-9-) வரையில் பரபக்திநிலை சென்றது. 'சூழ்விசும்பணிமுகில்' பரஜ்ஞானத்தாலே. இத்திருவாய்மொழி (முனியே நான்முகனே!) பரமபக்தியாலே".

இந்த பக்தியோகம் பலித்த பிறகு, எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்கள் - யாவையும் உபாஸகனுக்குப் புலனுகும். ஆனல் தியானம் செய்யும் காலத்தில் அவ்வாறல்ல. இது ஒரு வரையறைக்குட்பட்டதாகும். சில குறிப்பிட்ட குணங்களுடன் கூடிய பகவானை - 'இன்னவிதமாக'

* திருவாய்மொழி வாசகமாலை 132-ம் பக்கம் பார்க்க.

தியானிக்க வேண்டுமென்று உபநிஷத்துக்களில் விதிக்கப்பட்டுள்ளது. அவைகளில் ஏதேனுமொரு துறையில் இழிந்து உபாஸநம் பண்ணுபவன் அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விதமாகவே பகவானைத் தியானிக்க வேண்டும். சிறிதும் ஏற்றத் தாழ்வு கூடாது. மேலும் இந்த பக்தி இடையூறுகள் இல்லாமல் பூர்த்தியாவதற்காகத் தன் வர்ணாச்ரம தர்மங்களைச் சிறிதும் பிறழாமல் அநுஷ்டிக்க வேண்டும். இப்படி ஸ்வகர்மங்களைச் செவ்வனே செய்யும் சக்தியும், தான் தியானிக்கவேண்டிய பரம்பொருளின் தன்மை-தியானிப்பவனாகிய தனது தன்மை - இவைகளைப் பற்றிய அறிவும் உள்ளவனே இந்த பக்தியோகத்தில் இழிவது ஸாத்யம். மேலும் "பஹூநாம் ஜந்மநாமந்தே" என்கிறவாறு பல பிறவிகளிலும் இந்த பக்தியோகம் அவனருளால் தொடர்ந்து செய்யப்பட்டுப் பிறகு பலிக்கக் கூடியதாயிருக்கும். இதிலிழிபவர் இவ்விளம்பத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதமான கர்மாநுஷ்டான சக்தியும், பக்தியோகத்திற் கவசியமான அறிவும் அற்றவர்கள் - எம்பெருமானைப் பெறுவதில் காலவிளம்பத்தைப் பொறாதவர்கள் - ஆகியோருக்கு இந்த பக்தியோகம் பொருந்தாது. அவர்கள் இரண்டாம் வகையான சரணாகதியிலிழியக்கடவர்கள்.

இந்தச் சரணாகதி மார்க்கத்தில் இழிபவனுக்கு ஒருவிதமான அதிகாரமும் (யோக்யதையும்) தேவையில்லை. திக்கற்றவனே இதற்கு அதிகாரி. இதனால் எல்லாவிதமான பேறுகளையும் பெறலாம். இதற்கு ஜாதிநியமம் முதலியன ஒன்றும் இல்லை. காகம்-முதலான ஸகலப்பிராணிகளும் வாசியின்றிக்கே இதனால் பயன்பெற்றதைக் காணுகின்றோம். "அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி" என்பது ஸ்ரீராமபிரானின் திருவாக்கு. இதையே "சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தங்கொடுக்கும் பிரான்" என்று ஆழ்வார் அருளிச் செய்தார். 'விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே' என்பது ஸ்ரீபாஷ்யகாரர் அமுதமொழி.

"அந்தண ரந்தியரெல்லையினின்ற வனைத்துலகும்
நொந்தவரே முதலாக் நடங்கியநன்னியராய்

வந்தடையும்வகை வன்றகவேந்திவருந்தியநம்
அந்தமிலாதியை யன்பரறிந்தறி வித்தனரே.

என்பது ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனின் அமுதவாக்கு. இதன் ஸ்வருபத்தைச் சுருக்கமாய் இங்கு விவரிப்போம். ஒருகாரியத்தைத் தன் சொந்த சக்தியால் சாதித்துக்கொள்ள இயலாதவன், அதைச் செய்துகொடுக்கக்கூடிய சக்தியுள்ள மற்றொருவனிடம் அதைச் செய்துகொடுக்குமாறு வேண்டிக்கொள்வது இயற்கையே. இதையே 'சரணாகதி' என்று இங்கு வழங்குவர். தான் விரும்புகிற பேற்றைப் பெறுவதற்கு, வேறு உபாயம் ஒன்றும் தன்னிடம் இல்லாமையினாலேயே அதற்காகப் பிறரை நாடுவது இயல்பு. வேறு உபாயம் தன் வசத்தில் இருக்குமாகில் அதனாலேயே அப்பேற்றைப் பெறக்கூடுமல்லவா?. அப்படிப்பட்டவன் பிறரைச் சரணமாக அடையமாட்டான். இந்நிலைபையே ஆகிஞ்சந்யம் என்று இங்கு கூறப்படுகிறது. 'திக்கற்றவனாயிருத்தல்' 'வேறு உபாயமில்லாதவனா யிருத்தல்' என்பது இதன் பொருள். சரணாகதியிலிழிபவன் இந்நிலையிலிருத்தல் வேண்டும். இதையே "புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று ஆழ்வார் அருளிச்செய்தார்.

இதேபோல் ஒரு பயனைப்பெறவிரும்பி அதற்காக ஒருவனிடம் அடைக்கலம் புகுமவன் அப்பயனைத்தவிர வேறு பேறுகளில் நாட்டமுடையவனாயிருக்கலாகாது. அவ்வாறிருப்பின் இந்த சரணாகதி போலியேயாகும். இந்நிலைமையை 'அநந்யகதித்வம்' என்று வழங்குவர். "அகிஞ்சநோऽநந்யகதிః சரண்ய! த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே" என்பது ஸ்தோத்ரரத்நம். இதேபோல் தன் சரணாகதியினால் அருள் தலையெடுத்துத் தான் விரும்பியபேற்றைக் கொடுக்கவல்லவனாகிய ஒருவனிடமே, இச்சரணாகதி செய்யப்படுவது இயற்கையாகையால், தான் அடைக்கலம்புகுமிடம் 'இவ்வாறு உளது' என்பதை முதலில் அறிந்துகொள்ளவேண்டியதவசியம். இவ்விஷயம் பக்திமார்க்கத்துக்கும் ஸமாநமாகும். ஆகிஞ்சன்யமும் அநந்யகதித்வமும் சரணாகதிமார்க்கத்தில் 'அதிகாரம்' எனப்படும். அதாவது இவைகளையுடையவனே இதைச் செய்யத்தகுந்தவன் - என்றபடி.

இவ்விதமான அதிகாரியினால் செய்யப்படும் இந்தப்ரபத்தி அதன் இயற்கையைத்தழுவி ஐந்து உறுப்புக்களுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவையாவன:— [1]ஆநுகூல்யஸங்கல்பம். [2]ப்ராதிகூல்யவர்ஜநம். [3]கார்ப்பண்யம். [4]மஹாவிச்வாஸம். [5]கோப்த்ருத்வவரணம்' என்பவையாம்.

இவைகளுள் ஆநுகூல்யஸங்கல்பமாவது:— அடைக்கலம் புகுமவன், தனக்கு ரக்ஷகனானவனிடத்தில் அனுகூலமாகவே இருப்பதாக உறுதியை மேற்கொள்வதாகும். ப்ராதிகூல்யவர்ஜநமாவது:-அவனுக்கு ப்ரதிகூலமான எதையும் அறவே விடுதல். கார்ப்பண்யமாவது-தன், திக்கற்ற நிலையையும், வேறு எதையும் விரும்பாமையையும் நினைத்தல். மஹாவிச்வாஸமாவது:— பெரும் நம்பிக்கை - சிறிதும் தளராத திடமான நம்பிக்கை. கோப்த்ருத்வவரணமாவது:- ரக்ஷகனானவன் தன்னைக்காத்தருள வேண்டுமென்கிற தன் எண்ணத்தை அவனுக்குத் தெரிவித்தல். இவ்வைந்தும் அடைக்கலம் புகுவதற்கு இன்றியமையாதன வாகலின், சரணாகதியின் அங்கங்களாக அமைந்தன.

இவ்வைந்து உறுப்புக்களுடன் கூடிய சரணாகதியாவது:— அடைக்கலம் புகுதல். "தான் - தன்னைரக்ஷிக்கும் பொறுப்பு - அப்படி ரக்ஷிப்பதனால் உண்டாகும் பயன்" இவைகளைத் "தன்னுடையதல்ல" வென்றும்-அவை "எம்பெருமானுடையனவே" என்றும் நினைத்தல். இது மோக்ஷத்தைப் பெறுவதற்கான சரணாகதி. இந்தசரணாகதி ஸர்வபலஸாதனமாகையால், அந்தந்த பலங்களுக்கேற்றவாறு இதை ஊகித்துக்கொள்ளவேண்டும். பேரின்பமே உயர்வற உயர்ந்தபேறாகையால், அதைக்கொடுக்க வல்ல எம்பெருமானிடம், அற்பமான நிலையற்றபேறுகளை வேண்டுவது 'கோடீச்வரனைக் கோமணம் கேட்பதைப்போலாகுமாதலால், ஆன்றோர் மோக்ஷமொன்றையே எம்பெருமானிடம் பிரார்த்திப்பது இயல்பாகும்.

இதில் பக்திமார்க்கத்தில்போல் - பலம் ஸமானமாயிருக்கச்செய்தேயும், வரையறை ஏதுமின்றி யாவரும் எந்நிலைமையிலும் உபயோகிக்ககூடியதாயிருப்பதும், எளிதில் செய்யக் கூடியதாயிருத்தலும் - ஏற்றமாகும். இதில் ஆர்த்தப்ரபன்னன்

என்றும் - த்ருப்த ப்ரபன்னன் - என்றும் இருவகை உண்டு. விரும்பிய பேற்றை உடனேயே பெறவேண்டுமென்று, பலத்தைப் பெறுவதிலுள்ள த்வரையினால் விரும்புகிறவன் ஆர்த்தப்ரபன்னன். ப்ரபத்தி பண்ணுகிறகாலத்தில் உள்ள சரீரம் முடிந்தவாறே பயனைப்பெறுவதற்கு விரும்புகிறவன் த்ருப்த ப்ரபன்னன். 'த்ருப்தன் = இந்தசரீரம் உள்ளவரை இடைக்காலத்தைப் பொறுத்துக்கொள்ளும் சக்தியுள்ளவன். இதைத் தனக்காகத் தானே செய்வதும், பிறரைக்கொண்டு செய்விப்பதும் உண்டு. இவ்வாறான - ஸித்தோபாயம் - ஸாத்யோபாயம் - என்னும் உபாயங்களை 5-6-பத்துக்களால் உபதேசித்தார்.

நான்காவது 'ப்ராப்தி விரோதி' ப்ராப்தி - பேரின்பம் பெறுதல். அதற்கு விரோதி - இடையூறு. இதையும், இதை விலக்கும்வகையையும் 7-8-பத்துக்களால் அருளிச்செய்கிறார். (600வது பாட்டிலிருந்து 800-பாட்டுவரை, 200-பாட்டுக்கள்) இதில் 7-ம்பத்தில் விரோதியான வஸ்துக்களின் தன்மையையும். 8-ம்பத்தில் அவ்விரோதிகளைக் கழிக்கும் வகையையும் அருளிச் செய்கிறார். இதில் எம்பெருமானைப் பெறுவதற்கு இடையூறாக நிற்பன:— அநாதியான *அவித்யை (அஹங்கார-மமகாரங்கள்) கர்மம்-(வினை) வாஸநா-ருசி-ப்ரக்ருதிஸம்பந்தம்-இவைகளாகும். இவைகளுக்கு மூலகாரணம், அநாதியான பகவந்நிக்ரகமேயாகும். அதாவது 'ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' என்கிறபடி, எம்பெருமானுடைய கட்டளையாகிற சாஸ்திரங்களை அலக்ஷியம் செய்து மீறுவதனால் எம்பெருமானுடைய கோபத்திற்கிலக்காகுதல்.

இவ்விதமாக இறைவனுக்குக் கோபமுண்டானால், அதனால் அவன் இவர்களுடைய விரிவான அறிவை மழுங்கிப் போகுமாறு செய்கிறான். அதன்மேல் ஸத்த்வ ரஜஸ் - தமோ - குணமயமான ப்ரக்ருதியில் இவர்களைச் சிக்கவைத்து, அந்தப்ரக்ருதியின் பல்வேறு தோற்றங்களாகிய ஐம்புலன்களாலே தன் வழியே இழுத்துச்செல்லப்பட்ட இவர்களை, அற்பசாரங்களாகிய அவை

---

* அஜ்ஞானம். உடம்பே ஆத்மா - என்றும், அப்படி வேறாயிருந்தாலும், அது, தனக்குத்தானே சுதந்திரமானது-என்றும், இது போன்றது.

களிலேயே கால்தாழ்ப்பண்ணித் தன் பிறப்புரிமையாகிற பேரின்பத்தைப் பற்றிய நினைவுங்கூட வெறுக்கத்தக்கதாகிய நிலையில் வைக்கிறான். இவ்விரோதிகள் மிகவும் வலியனவாகும். இந்த ஜீவாத்மா, தன் சொந்த சக்தியைக்கொண்டு இவைகளை அறுத்தெறிவது அஸாத்தியமானது. ஆனால் ஸர்வசக்தனான எம்பெருமான் இவைகளை அகற்றி, இந்த ஜீவாத்மாவை அதனின்றும் விடுவிக்க எண்ணினால், அவனுக்கு ஒருவனுக்கே அது ஸாத்யமாகும். ப்ரக்ருதியும்-அதன் பல பரிணாமங்களும் எம்பெருமானுக்கு இட்டவழக்கா யிருப்பவையாகும். இவ்வாறு அனாதியான பகவந்நிக்ரஹத்தாலுண்டான எல்லையற்ற துன்பங்களுக்கு ஏற்ற பரிகாரம் 'அவன்திருவடிகளில் சரண்புகுவதே யன்றி வேறில்லை. இந்தச் சரணாகதியினால், அவனுக்கு இவன்பால் இருந்த சீற்றம் மாறி அருள் சுரக்கிறது. அதனால் இந்த விரோதிகள் தானே தொலைகின்றன. இதை 7-8-பத்துக்களால் விவரித்தருளினார்.

ஐந்தாவது 'பலம் ப்ராப்தேஃ'. இவ்வாறு சரணாகதியினால் எம்பெருமானைப் பெறுகிறவன் அனுபவிக்கும் பேரின்பத்தின் தன்மை. இதை 9-10 - பத்துக்களால் அருளிச் செய்கிறார். 801-லிருந்து 1000-பாக்கள் வரை.) இதில் 9-ம் பத்தில் பலத்தின் ஸ்வரூபத்தையும், 10-ம் பத்தில் அதைப் பெறும் வகையையும் அருளிச்செய்கிறார். பரம்பொருளான இறைவனே இங்கு 'பலம்' எனப்படுபவன். திருவாய்மொழியில் 1-2-பத்துக்களில், எம்பெருமானுடைய ஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டது. 'அதுவே முக்யமான ப்ரயோஜனம். ஆனந்தமயமான அவ்வெம்பெருமான் ஒருவனே இவனுக்குரிய பேறு' என்னுமிவ்வர்த்தம் 9-ம் பத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது.

எம்பெருமான் ஒருவனே நமக்கு இன்றியமையாத உறவினன். மற்றெல்லோரும் ஒரு காரணத்தால் அவ்வாறாகி, அக்காரணம் கழிந்தவாறே அகன்றுவிடும் தன்மையினர். அவன் திருவடிகளில் அனவரதம் கைங்கர்யங்கள் செய்வதே பேரின்பமாகும். அவனே தெவிட்டாத வமுதம். அவனது கல்யாண குணங்கள் உயர்வற உயர்ந்தவை. எவ்வளவு காலம் அவைகளை அனுபவித்தாலும், அவ்வப்போது புதிது புதிதாகவே தோன்றி

மனதை ஆகர்ஷிக்கும் தன்மையுடையன. நினைத்த மாத்திரத்தில் உள்ளமுருகும்படியான அற்புதத்தன்மை வாய்ந்தவை. இதனை உள்ளபடியறிந்தார்க்கு ஒரு கணமும் இதை விட்டாறியிருக்கமுடியாது. இவ்விதமான எம்பெருமானைப்பெற்று அவனடியார்க்கடியனாயிருப்பதே பேரின்பம்.

'உணர்முழுநலம்' என்பதான அகண்ட ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமானவனும்; ஸ்ரீவைகுண்டம்-பரமபதம்-நித்யவிபூதி-என்றிப்படி யெல்லாம் வழங்கப்படும் ஒரு தேச விசேஷத்திலே, ஆனந்தமயமான திருமாமணிமண்டபத்தில், ஆதிசேஷன் எனப்படும் பாம்பணையில், ஸகல திவ்யாபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனாய், சங்கசக்ராதி திவ்யாயுதங்களை யுடையவனாய், திவ்ய பீதாம்பரதாரியாய், தேவிமார்களுடன், 'நித்யஸூரிகள்' என்றும், அயர்வறுமமரர்களென்றும் வழங்கப்படும் நீக்கமில்லா வடியார்கள் குழாங்களால் சூழப்பட்டு, "சோதி வெள்ளத்துள்ளே எழுவதோருரு-என்கிறபடி திருவோலக்கங்கொண் டெழுந்தருளியிருப்பவனுமாகிய எம்பெருமான்; இவ்விருள் தருமாஞாலத்திலுள்ளார் தன்னைப் பெறுவதற்குத் தானே துணைபுரிவான். அநாதிகாலமாக ஸம்ஸார மார்க்கத்தில் பிரயாணம் செய்து, எல்லையற்ற துன்பம் அனுபவித்ததெல்லாம் அவனுடைய திருநாமங்களை நினைத்த மாத்திரத்தில் அகலும். இவ்விருள் தருமாஞாலத்தினின்றும் அர்ச்சிராதி மார்க்கத்தால் அடியார்களைத் தன்னுடைச் சோதிக்குக் கொண்டுபோகும் பரமோதாரன். 'ஸோऽச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரம்மணா விபச்சிதா' என்கிறபடியே தன்னோடு பரமஸாயுஜ்யத்தைத் தருபவன். என்றிப்படி பரமபுருஷார்த்தமான பேரின்பத்தைப் பெறும் வகையைப் பேசி யனுபவித்து அவாவற்று வீடுபெற்று அந்தமில் பேரின்பத்தடியரோடிருப்பாகிற நிரதிசயானந்தத்தில் இரண்டறக் கலந்தார் நம்மாழ்வார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் அவசியமாய் அறிந்துகொள்ள வேண்டியதான ஐந்து பொருள்களையும் 10 பத்துக்களாலே அருளிச்செய்தார். விரிவைத் தவிர்க்கவேண்டி மிகவும் சுருக்கமாகவே இவை இங்கு குறிப்பிடப்பட்டன. இவைகளின் விரிவான விளக்கம், திருவாய்மொழியின் உரைநூல்களிலும், ஏனைய

பூர்வாசார்யர்களுடைய நூல்களிலும் காணலாம். இதேபோல் ஒவ்வொரு பத்துக்கும் (100 பாட்டுக்கள்) இவ்வைம்பொருள் களுக்கேற்ற வகையில், பொதுவான பொருள், பூர்வாசார்யர்க ளால் உரைக்கப்பட்டுளது. அதுவும் இக்குறிப்பிலேயே பெரும் பாலும் அடங்கியுள்ளமையின் தனியாக எழுதப்படவில்லை. அவ் வாறே, ஒவ்வொரு பதிகத்திற்கும்பொருள்கள்கூறப்பட்டுள்ளன. இதைத் "திருவாய்மொழி வாசகமாலை, பொருளடக்கம்" என்னும் தலைப்புடன் வேறிடத்தில் சேர்த்துள்ளோம். ஒவ்வொரு பாட்டிற் கும் தனியான பொருளும், அதன் முன்பின்தொடர்பின் பொ ருத்தமும், இச்சிறிய நூலின் தன்மைக்கு அத்தியாவசியமில்லாத தாகக் கருதப்பட்டு விடப்பட்டன. முன்னோர்கள் எழுதிய உரை நூல்களில் அவை நன்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சக்தியும் ஸௌகர்யமும் உள்ளவர்கள், அதையும் நன்கு தெரிந்துகொண்டு இந்நூலைப் பயிலுவராகில், அதனால் மிகுந்த உபயோகமுண்டு.

பக்தசிகாமணியாகிய நம்மாழ்வாரால் அருளப்பட்ட இந்தப் பொய்யில் பாடலாயிரத்தில் அடியிலிருந்து முடிவுவரை எந்தப் பாட்டை எடுத்தாலும், அது ஒன்றே ஆயுள்முழுதும் இன்பமாய்க் கழிக்கக் காரணமாம். "தேனும் பாலும் கன்னலும் அமுது மொத்தே" என்றும், 'கொள்ளமாளா இன்பவெள்ளம் கோதில தந்திடும்' என்றும் ஆழ்வார் எம்பெருமானைப்பற்றிக் கூறியிருப் பது, இப்பாடல்களுக்கும் நன்குபொருந்தும். இதைக்கற்பவர்கள்; ஒப்புயர்வற்ற இலக்கிய இலக்கணங்களின் அமைப்பையும், செய் யுள் நடையையும், சொற்சுவை-பொருட்சுவை—இசையின்பம், லௌகிக விஷயங்களின் கலப்பற்ற கேவலமான பகவத்குணா னுபவம் - இவைகளைப் பெறுவதுடன், இம்மையில்' வாழுநன் மக்களைப் பெற்று வைகலும் மகிழ்வெய்தி, மறுமையிலும் அந்தமில் பேரின்பத்தடியரோடிருக்கப் பெறுவர்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் ஆழ்வாருடைய நாயிகாபாவம். அதாவது — ஆண்மகவாய்ப் பிறந்த ஆழ்வார், தன் ஆண்மையழிந்து ஒரு தலைமகளின் தன்மையை அடைதல். இத்திருவாய்மொழியில் ஆங்காங்கு சில பதிகங்கள் இத்துறையில் அமைந்துள்ளன. அவைகளுள்ள இடத்தையும், அகப்பொருட்டுறைகளில்—அவ்வோ பதிகங்களில்

அமைக்கப் பட்டுள்ள துறைகளையும் தனியாக வேறிடத்தில் சேர்த்துள்ளோம். பெண்ணாகவோ — ஆணாகவோ—பிறந்தவர்கள், சிற்சில சந்தர்ப்பங்களில் முறையே தங்களது இயற்கையான தன்மையை மறந்து மற்றொரு இனத்தைச் சார்ந்தவராகி, அதற்கேற்ப நடந்து கொள்வதைப் புராணங்களில் மகரிஷிகள் பேசியுள்ளார்கள். அவ்வாறாகும்போது அவர்களது மெய்—வாய் சிந்தை - ஆகிய மூன்றில் - முதலாவதான உடல் அமைப்பு முன் போலவே தொடர்ந்து வரினும், வார்த்தையும் - எண்ணமும் முற்றிலும் மாறியிருக்கும். இப்படி அற்புதமான, மிக மிகப் பெரிய தடுமாற்றத்தைச் சில அபூர்வ சந்தர்ப்பங்களிலேயே காணக்கூடும்.

இராமாயணத்தில், இராமனது திருமேனியழகையும், பெருந்தன்மையையும், சிறந்த - நற்குணங்கள் யாவும் ஒருங்கே அமைந்துள்ளமையையும் - கண்ணுற்ற ஆடவர்கள் அனைவரும், தங்கள் கண்களையும் மனதையும் பறிகொடுத்து, மீண்டும் அவைகளை வாங்க முடியாமல் கலங்கித் தவித்தனர், என்கிறார் ஸ்ரீவால்மீகி பகவான். இங்கு பெண்களைக் குறிப்பிடாமல் 'பும்ஸாம்' த்ருஷ்டி சித்தாபஹாரிணம்' என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ராமராஜ்யத்தில், ஒருவரும் சிறிதும் நெறி தவறி நடந்தது கிடையாது. 'யதா ராஜா ததா ப்ரஜா:' 'ந ராம: பரதாரான்வை சக்ஷுர்ப்யாமபி பச்யதி' ஏக பத்னீவிரதமே வடிவெடுத்தாற் போன்றவராகிய ஸ்ரீராமபிரான் பிறருடைய மனைவிமார்களைக் கண்ணெடுத்துப் பாரார். மனதிலும் நினையார். அதாவது மற்ற பெண்கள் யாவரையும் அவர்களின் தன்மைக்கேற்ப, தாய்மாராகவும் - உடன் பிறந்தவர்களாகவும், மக்களாகவுமே நோக்கும் இயல்பையுடையவர். அதனால் அவர்களும் இதே முறையில் எவ்வித விகற்பமுமின்றியே ஸ்ரீராமபிரானைப் பாராட்டிவந்தனர். ஆண்மக்களோவெனில், ஸ்ரீராமச்சந்திரனுடைய அழகில் கால் தாழ்ந்து. அடங்காக்காதல்கொண்டு தாமான தன்மையழிந்து - (தாங்களும் பெண்ணாய்ப் பிறந்து) இவனை நாயகனாகப் பெற்று வாழும் பாக்கியம் பெற்றிலமே' என்று வைத்தகண் வாங்காமல் ஏங்கி நின்றனர். இவ் விசித்திரமான நிலைமையை உண்டுபண்ணியது ஸ்ரீராமபிரானுடைய உயர்ந்த அழகு என்பது கவியின் தாத்பரியம்.

இதேபோல் ஸ்ரீமகாபாரதத்திலும், திரௌபதியின் அழகில் ஈடுபட்ட பெண்கள் யாவரும் தாங்கள் 'மனதால் ஆணாக மாறினர்' என்கிறார் ஸ்ரீ வியாஸ பகவான். இது போலவே விலக்ஷணமான பகவத் விஷயத்தில் ஈடுபட்ட ஆழ்வாரும், ஒரு தலைவியாக மாறினார். அதுவும் சிற்சில சந்தர்ப்பங்களில் தான் நிகழ்ந்துள்ளது. அகத்தில் வெள்ளமிட்டோடும் பகவதநுபவம் ஒரே மாதிரியிருந்தால் இவ்வித நிலைமை உண்டாவதில்லை. சிற்சில சமயங்களில் அவ்வனுபவம் உள்ளடங்காமல் போய்விடும். அப்பொழுது ஏதாவதொரு புறம்பான செயல் தோன்றும். தன் மனத்தில் ப்ரகாசிக்கும் எம்பெருமானை அக்கோலத்திலேயே இரண்டு கைகளாலும் அணைத்துக் கொள்ள முயலுவர் ஆழ்வார். இதுவே உள்ளடங்காத காதல்வேகத்தின் போக்கு வீடாகும். அவ்வாறு முயற்சி செய்யும் பொழுது, அது பயனுறாமையால் மோஹமடைவார். இவருக்குத் தோன்றுவது அகத்திலேயாகையால், அதைக்கொண்டு எம்பெருமானைக் கைகளால் தழுவிக்கொள்வதும், கண்களால் குளிரப்பார்ப்பதும், உரையாடுவதும் சாத்தியமில்லாமற் போய்விடுகின்றன. இதை இவ்வாறு உணராமல், தன்னை எம்பெருமான் புறக்கணித்து விட்டதாகவும், இனி அவனைப் பெறுதல் அசாத்தியமென்றும் ஆழ்வார் நினைத்து விடுகிறார். அநவரதம் எம்பெருமானையே அனுபவித்து ஆனந்தத்தில் தோய்ந்துள்ள ஆழ்வாருடைய மனம் மிகவும் மென்மையானது. அது இம்மாபெரும் அதிர்ச்சியைத் தாங்கமுடியாமல் உடனே மோகமடைகிறது. இந்நிலையில்தான் ஆழ்வார் நாமான தன்மையழிந்து ஒரு தலைமகளாக மாறுவது.

சாதாரணமாக ஒருவருக்கு மோகம் (மூர்ச்சை) உண்டாகுமாயின், விசித்திரமான பல்வேறு அனுபவங்கள் உண்டாகும். மூர்ச்சை தெளிந்து எழுந்தபிறகு, அவர்களுக்கே அதைப்பற்றிய நினைவும் வாராது. ஒன்றும் சொல்லவும் தெரியாது. ஆழ்வோருக்கோவெனில், எம்பெருமானைத் தவிர வேறு ஒரு பொருளும் தெரியாது. 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'னென்றிருக்கிறவர் இவர். ஆகவின் மோக தசையிலும் எம்பெருமானையன்றி வேறு பொருள்கள் இவருக்குத் தோன்ற முடியாது. அதனால் இறைவனையே மோக தசை

யிலும் ஆழ்வார் அனுபவிக்கிறார். அவ்வனுபவம் சிறிது மாறுபாடடைகின்றது.

*ஆழ்வார் ஒரு தலைமகள். எம்பெருமானே தலைமகன். ஆசார்யர்களே தூதுவர். ஸ்ரீமதுரகவிகள் போன்ற நண்பர்கள், தோழிமார், தாய்மார், செவிலி முதலானோராகின்றனர். பழந்தமிழர் மரபுக்கேற்ப, ஒரு தலைமகளின் அனுபவங்கள் இம்மோக காலத்தில் உண்டாகின்றன. இதில், தலைமகளின் ஆற்றாமையைக்கண்டு தாய் இரங்குவதும், தோழிமார் வார்த்தையும், வெறிவிலக்கும், மடலூர்தலும், தூதுவிடுவதும், ஊடலும் கூடலும் இதுபோன்ற பல துறைகள் அமைகின்றன. இவ்வனுபவங்கள் யாவும், எம்பெருமானையே 'தலைமகள்' என்னும் ரீதியில் அனுபவிப்பதாயிருப்பதுடன், இவைகளில் உட்பொருளாக, உயர்ந்த வேதாந்த விஷயமான கருத்துக்களும் அமைந்திருக்கும். இதுவே "அந்யாபதேசம்" என்று திருவாய்மொழி வியாக்கியானங்களில் வழங்கப்படுகின்றது.

அடியவர்கள் இறைவனிடத்தில் செலுத்தும் பக்தி, ஒரு பதிவ்ரதையான பெண், தன் கணவன்பால் கொண்டுள்ள அன்பைப் போன்றதேயாகும். சிற்றின்பமென்று இதை வழங்குவது, பேரின்பத்தின் சாயை இதில் பதிந்துகிடப்பதனாலேயேயாகும். உலகவியல்பில் சாதாரணமாகத் தலைவன், தலைவி இருவருக்குள் உண்டாகும் காதலும், எம்பெருமானிடம் அடியார்கள் செலுத்தும் ப்ரேமையும், ஒரே தன்மையில் தோன்றுவனவாகும். அவை உண்மையில் மாறுபாடற்றவையே. இதில், அன்பிற்குப் பற்றுக்கோடான இரு தலையும் நிலையற்ற மானிட வடிவமாயிருத்தலே அதன் பெருமையை அற்பமாகவும், நிலையற்றதாகவும் செய்து விடுகின்றது.

அழியும் தன்மையதான உடலைக்கழித்து (அநாதவு பண்ணி) அதனுள்ளிருக்கும் அழிவற்ற ஆத்மாவானது, தனக்குத் 'தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமான' இறைவன்பால் செலுத்தும் அன்பானது, வளரவளரக் காலக்கிரமத்தில் அதுவே "பேரின்பம்" என்னும் பெயரை அடைந்துவிடுகின்றது. இருதலையும் அழிவற்றதாயிருத்தலும், ஒன்றுக்கொன்று அருள் புரிவதும் அருள் பெறுவதும் இன்றியமையாததாயிருத்தலும், நிலையற்றதும் வந்தேறிகளாயுமுள்ள பொருள் எதுவும் இவ்வன்பின் குறிக்கோளாக அமையப் பெறாததுமே இவ்வுயர்வுக்குக் காரண

---

* "...காமனே கண்டபோழ்தும்.....பெண்ணவா நிற்கும்.. ...
(சீவக சிந்தாமணி. கேமசரியாரிலம்பகம் 117-ம் பாட்டு)

" ஆடவர் பெண்மையை யவாவும் தோளினாய்!
(கம்பராமாயணம். பால காண்டம்- தாடகைவதைப் படலம்-42ம் பாட்டு)

மாகும். இதனாலேயே பக்தர்களிலும் பலர் எம்பெருமானைத் தன் தனயனாகவும், தன்னைத் தாயாகவும் பாவித்து அன்பு பாராட்டுவதைக் காணுகின்றோம். அன்பிற்கு ஏற்றதாக உலக வழக்கில் அமைந்துள்ள துறைகள் எதுவாயினும், அவை எம்பெருமான் திறத்தில் செலுத்தப்படுமாயின் அதுவே பேரின்பத்தின் ஆரம்பப் பருவமாகும். முதிர்ந்த நிலையில் அதுவே பேரின்பமாகும். எதற்கும் கட்டுப்படாத இறைவன், அடியார்களின் அன்புத்தளையை மீறிச் செல்லும் சக்தியற்றவனல்லவா? இந்த வழியிலேயே ஆழ்வாருடைய நாயிகாபாவமும் செல்கிறது.

அகத்தில் ஓடுகிற பகவத்ஸ்வரூபானுபவம் மட்டுக்கட்டி அனுபவிக்கமாட்டாமல் கிளர்ந்தெழுந்து ஆழ்வாரைப்படாதபாடு படுத்துகிற சந்தர்ப்பங்களில், இதன் வேகத்தினால் ஆழ்வார் முடிந்து போய் விடும்படியான நிலைமை ஏற்பட்டு விடும். அப்போது ஏதாவதொரு காரணத்தைத் தோற்றுவித்து, அவ்வனுபவம் சிறிதளவு குறையும்படியாகப் பண்ணி, அவ்வபாயத்தினின்றும் ஆழ்வாரைக் காத்தருளத் திருவுளங்கொண்ட எம்பெருமானாலேயே இம்மாதிரியான நிலைமை சிருஷ்டிக்கப் படுகின்றது. உலக க்ஷேமார்த்தமான திருவாய்மொழி பூராவும் வெளிவரும் வரை, இப்படியே பெரும்பாடு பட்டு ஆழ்வாரைக் காப்பாற்றிக் கொண்டு போந்த இறைவன், அது முடியும் கட்டம் வந்தவாறே ஆழ்வாருக்குப் பரஜ்ஞானத்தை விளைவித்துப் பெருமிடறு செய்துத் திருவாணையிட்டுக் கூப்பிடுமாறு விடாய்ப்பித்து; அவரது விடாயும், அதிலும் பெரிதான தன்னுடைய விடாயும் ஒருங்கே தீருமாறு ஆழ்வாரைத் தன்னுடைச்சோதியில் சேர்த்துத் தேனும் பாலும் கன்னலு மமுது மொக்க, அடியார்கள் குழாங்களோடு உடன் கூட்டியருளினான்.

இவ்வாறு எம்பெருமானால் ஆழ்வார் வாயிலாகத் தோற்றுவிக்கப்பட்ட இப்பொய்யில்பாடல்களில் வேதத்தினுட்பொருள்கள் அற்புதமாய் அமைந்துள்ளன. ஆழ்வார் யாருடனும் வாய்திறந்து பேசவில்லை. வேதமோதவில்லை. ஆனால் அவரது அமுதமொழிகள், எல்லோரும் தங்கு தடையின்றி நன்கு புரிந்து கொள்ளுமாறு வேதங்களின் அரிய கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன. இதைச் சில உதாரணங்களால் விளக்குகிறோம் :—

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
உயர்வற உயர்நல முடையவன் (1—1—1)	'ஸ ஏகோ ப்ரம்மண ஆனந்த: ஆனந்தோப்ரம்ம (தைத்-உப)
'...இனனுணர் முழுநலம்' (1—1—2)	'விஜ்ஞானமானந்தம் ப்ரம்ம' (ப்ருஹதா - உப 5-9-28)

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
'...மிகு நரையிலனே' (1-1-2)	'நதத் ஸமஸ்சாப்யதிகஸ்ச த்ருச்யதே (ச்வேதா-உப)
'பயிலும் சுடரொளி மூர்த்தியை (3—7—1)	'நாராயண பரோஜ்யோதிః' (தைத்—உப)
'பரஞ்சோதி! (3—1—2)	பரம் ஜ்யோதிருபஸம்பத்ய (சாந்தோ - உப)
'பங்கயக்கண்ணனே' (3-7-1)	...யதா கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ (சாந்தோ — உப — 1-6-7)
'செம்பொன் திருவுடம்பே(2—5—1)	ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: (சாந்தோ-உப-1-6-6)
"எண்ணின் மீதியன் எம்பெருமான்' (2-2-1)	'அப்ராப்ய மனஸா ஸஹ' (தைத் - உப)
"சொல்லளவன்று" (8-2-6)	'யதோ வாசோ நிவர்த்தந்தே' (தைத் - உப)
'இமையோர் தமக்கும் எல்லை யிலாதன கூழ்ப்புச் செய்யும் (8-2-6)	யஸ்யாமதம் தஸ்ய மதம், மதம் யஸ்ய ந வேத ஸ:. அவிஜ்ஞாதம் விஜாநதாம் விஜ்ஞாத மவிஜாநதாம். (கேனோபநிஷத் - 2 - 3)
'என் வல்வினைமாய்ந்தறச் செய்குந்தன் (7-9-7)	'ஸர்வேபாப்மாந:பரதூயந்தே (சாந்தோ - உப - 5-24-3)
'கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ (7-5-1)	'யத்ர நாந்யத்பச்யதி, நாந்யத் ச்ருணோதி, நாந்யத் விஜாநாதி ஸ பூமா (சாந்தோ-உப - 7-24-1)

இதுவரை இறைவனது தன்மையை விளக்கும் வாக்கியங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. இனி காரண வாக்யங்களில் சில காட்டப்படுகின்றன.

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
'முதல் தனி வித்தேயோ! (10-10-8)	ஏகோ ஹவை நாராயண ஆஸீத் (மஹோபநிஷத்)
'தானேருருவே தனி வித்தாய்' (1-5-4)	'ப்ரம்மவா இதமேக மேவாக்ர ஆஸீத்'(ப்ருஹதா-உப-3-4-11
'மூவாத்தனி முதலாய்' (2-8-5)	'ஆத்மாவா இத மக்ர ஆஸீத்தேக மேவ'(ப்ருஹதா-உப-3-4-17)
'நினைந்த வெல்லாப் பொருள் கட்கும் வித்தாய் (1-5-2)	'ஸதேவ ஸோம்யேத மக்ர ஆஸீத்தேகமேவ (சாந்தோ-உப-6-8-1)

இனி ஸ்ருஷ்டி வாக்யங்கள்

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
'பாமரு மூவுலகும் படைத்த (7-6-1)	ததைக்ஷத லோகாந்நு ஸ்ருஜா இதி (சாந்தோ-உப-6-8-1)
'தானேஉலகெல்லாம் தானே படைத்து (10-5-3)	'இதம் ஸர்வமஸ்ருஜத' (தைத்-உப)
'எல்லாவுலகு முயிரும் தானே யாய் (10-7-2)	'ஸத்ச த்யச்சாபவத்' (தைத்-உப)
'யாவையும் யவையும் தானாய்' (3-4-10)	'ஸர்வம் கல்விதம் ப்ரம்ம (சாந்தோ-உப-3-14-1)

மேற் சொன்ன வாக்கியங்கள் சில இறைவனை மற்ற பொருள்களோடு வேறுபாடின்றி குறிப்பிடுகின்றன. இதை வடமொழி நூல்களில் "ஸாமாநாதிகரண்யம்" என்று வழங்குவர். "நீலோ கட:" 'குடம் கருப்பானது' என்னுமிடத்தில் — 'குடம்' என்னும் சொல்லும் — 'கருப்பானது' என்னும் சொல்லும் ஸாமாநாதிகரண்யம் உள்ளவை. அதாவது இரண்டு சொற்களும், வெவ்வேறு தன்மையை முன்னிட்டு, ஒரே பொருளைக் குறிப்பிடுகின்றன. இந்த ஸாமாநாதிகரண்யம், உண்மையில் வேறான பல பொருள்களைக் குறிக்கும் சொற்களுள் சில இடங்களில் காணப்படுகின்றது. அங்கு அப்பொருள்களுள் அபேதம் (வேற்றுமை

யின்மை) உண்மையில் இல்லையாகலின், அதை வேறு சில முறைகளால் பொருந்தவிடுவர். அதை இருவகையாக ஆன்றோர் நிரூபித்துள்ளனர். கார்ய காரணபாவத்தைப் பற்ற - அல்லது ஆத்ம சரீரபாவத்தைப் பற்ற - இந்த ஸாமாநாதிகரண்யம் தோன்றியுள்ளதென்று இதை நிர்வஹிப்பர். இதற்கு வழிகாட்டியாய் உபநிஷத் வாக்யங்கள் அமைந்துள்ளன. அதே போல் திருவாய்மொழியிலும் உள்ளது. அவற்றில் சிலவற்றைத் தருகிறோம் :—

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
'பெரியவப்பனைப் பிரமனப்பனை உருத்திரனப்பனை (8-1-11)	'நாராயணாத் ப்ரம்மாஜாயதே. நாராயணாத் ருத்ரோஜாயதே.

(இவ்வாக்பம் இறைவனுக்கு மற்றப் பொருள்களுடன் காரிய காரணபாவத்தால் வந்ததாக ஸாமாநாதிகரண்யத்தை நிர்வஹிக்கிறது.)

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
'ஒருயிரேயோ உலகங்கட்கெல்லாம் (8-1-5)	ப்ருஹதாரண்யகம் அந்தர்யாமி ப்ராம்மணம்.

(இவ்வாக்யம் ஷை ஸாமாநாதிகரண்யத்தை ஆத்ம சரீரபாவமடியாக வந்ததாக நிர்வஹிக்கிறது.)

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
'பரந்த சிவிடந்தொறும் இடந்திகழ் பொருடோறும் கரந்தெங்கும் பரந்துளன் (1-1-10)	யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதே பிவா. அந்தர் பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: (தைத்-உப)
'தானேயாகிநிறைந்து(10-7-2)	தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் (தைத்-உப)
முதலில் சிதைபாமே (1-5-2)	...பூர்ணமேவா வசிஷ்யதே (ச்வேதாச்-உப)
பெரிய நீர் படைத்தங்குறைந்து (8-1-5)	ஆபோவா இதமக்ரே ஸலிலமாஸீத் தஸ்மிந் ப்ராஜாபதிர்

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
	வாயுர்பூத்வாசரத் (தைத்-ஸம் 7-1-5-1)
'ஏனமாய் நிலங்கீண்ட (5-7-6)	தாம் வராஹோ பூத்வா ஹரத் (தைத்-ஸம்-ஷடி ஷ)
வன்மா வையமளந்த எம் வாமனா! (3-2-2)	விசக்ரமே ப்ருதிவீ மேஷ ஏதாம் (புருஷஸூக்தம்)
'எல்லையில் சீர் (2-5-9)	... விபூதீநாம் நாஸ்த்யந்தோ விஸ்தாரஸ்யமே (பகவத்கீதை)
தானேயாள்வானே' (10-5-3)	அந்தஃ ப்ரவிஷ்டஃ சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா. (தைத்-ஆரண்யகம்-3)
அயனும் சிவனும் திருமாலால் (8-8-11) அரியை அயனை அரனையலற்றி (10-10-11) அவனே அவனும் அவனும் அவனும் (9-3-2)	*ஸப்ரம்மா-ஸசிவ: ஸேந்த்ர: (தைத்-உப)
கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும் (5-6-1)	'தத் ஹைதத் பச்யந் ருஷி: வாமதேவ: ப்ரதிபேதே 'அஹம் மநுரபவம் ஸூர்யச்ச (ப்ருஹதா-உப-3-4-10)
தன்மை பெறுத்தி (3-7-7)	'ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (சாந்தோ-உப-8.12-2)

* குறிப்பு :— 'ஸப்ரம்ம' என்று ஈற்றெழுத்தைக் குறிலாக்கி அதை ஒன்றன் பாலாகவும், 'ஸஹசிஃ' என்று அதிக பாடம் சேர்த்தும் ஓதுவது, நம்மாழ்வார் பாடலுடன் ஒவ்வாதமை காண்க. அப்பொழுது 'அவனே அதுவும் அவனும் அவனும் அவனும்' என்று திருவாய்மொழி அமையவேண்டியிருக்கும்.

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
நல்லவமுதம் (2-5-9)	இதமம்ருதம் (ப்ருஹதா-உப 4-5-14)
'இல்லத்தாரும் புறத்தாரும் மொய்த்து' (8-8-8)	'ஜ்ஞாதய: பர்யுபாஸதே ஜாநாஸிமாம் ஜாநாஸி மாமிதி (சாந்தோ-உப (6-15-1)
இனிப் பிறவி யான் வேண்டேன் (10-6-1)	'லிந்து மாபிகாம் (சாந்தோ உப-8-14-1)
மாகவைகுந்தத்து மகிழ்வெய்துவர் வைகலுமே (5-10-11)	'தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: (தைத்-ஸம்-1-3-6-2)
மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவாவோ! (8-1-5)	தமீச்வராணும் பரமம் மஹேச்வரம்.
'ஆருயிரேயோ! (8-1-5)	ப்ராணஸ்யப்ராண:.கேநோப-1-2
'கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும் (9-1-1)	ததேதத் ப்ரேய: புத்ராத், ப்ரேயோ மித்ராத், ப்ரேயோ வித்தாத், (ப்ருஹதா-உப 3-4-8)
'நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே (8-10-11)	நாஸ்யாப்ரம்மவித் குலேபவதி (முண்டகோ-3-2-9)
'சந்தங்களாயிரத்து' (10-9-11)	தத் சந்தஸாம் சந்தஸ்த்வம் ப்ரம்மவை சந்தாம்ஸி (தைத்-ஸம்-5-6-6-1)
'பொறியுணர்வவையிலன்' (1-1-2)	யத் தத் அத்ரேச்யம்' அக்ராஹ்யம் (முண்டகோப: 1-6)
'யாவையும் யவரும்தானய் அவரவர் சமயந்தோறும் தோய்விலன் (3-4-10)	ஏகஸ் ததா ஸர்வபூதாந்தராத்மா நலிப்யதே லோகதுக்கேந பாஹ்ய: (கடோபநி-2-5-11)

திருவாய்மொழி	உபநிஷத்துக்கள்
பெருநாடுகாண இம்மையிலே பிச்சை தாம் கொள்வர் (4-1-1)	'ச்வோபாவாமர்த்யஸ்ய யதந்தகைதத் (கடோபநி- 1-1-26)
தோற்றங்களாயிரத்துள் (6-8-11)	'வாசா விரூப நித்யயா (தைத்-ஸம்2-6-11-2)
'நாரணற்காளன்றி யாவரோ? (7-5-2)	'ப்ரம்மதம் பராதாத்... (ப்ருஹதா - உப - 4-4-6)
'இன் கவிகள் யானாய்த் தன்னைத்தான்பாடி (10-7-5)	ஏதஸ்யை வைதாநி ஸர்வாணி நிச்வஸிதாநி(ப்ருஹதா- 4-4-10)
...பல பிறப்பாய் (1-3-2)	'பஹுதா விஜாயதே (புருஷ ஸூக்தம்)
'உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணனெம்பெருமான் (6-7-1)	'வாஸுதேவ: ஸர்வமிதி.... (பகவத்கீதை)

இவ்வாறு திருவாய்மொழி முற்றும் ஏராளமாய்க் கொடுக்கக் கூடும். விரிவைத் தவிர்க்கவேண்டி இத்துடன் நிறுத்தி, இந் நூலுக்கு இன்றியமையாததான 'உயர்வற' என்கிற பாட்டின் சிறப்பைச் சிறிது விவரிக்கிறோம்.

முதற்பாட்டின் மகிமை.

'உயர்வற உயர் நலமுடையவன் ..' என்பது திருவாய்மொழியின் முதற்பாட்டு. 1102 பாட்டுக்கள் உள்ளதான திருவாய்மொழியின் அற்புதமான கருத்துக்கள் யாவும், வித்தினுள் ஸூக்ஷ்ம ஸ்வரூபமாய்க்கிடக்கும் பெரியமரம் போலே இம்முதல் பாட்டினுள் அடக்கப்பட்டுள்ளன. "திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹம் முதல் திருவாய்மொழி. முதல் திருவாய்மொழியினுடைய ஸங்க்ரஹம் முதல் மூன்று பாட்டு. முதல் மூன்று பாட்டினுடைய ஸங்க்ரஹம் முதற்பாட்டு. முதற்பாட்டினுடைய ஸங்க்ரஹம் முதல் அடி" என்று, 'ஈடு' இதன் பெருமையைவிளக்குகிறது. இவ்வாறு பேசப் புகுந்த ஸ்ரீ நம்பிள்ளைகள் இக்கருத்தையே முக்கியமாகக்கொண்டு, ஒருமுறை விரிவாய்க் காலக்ஷேபம்

ஸாதித்திருத்தல் வேண்டும். அதுவே இந்நூலாக உருவாகி யிருக்கக்கூடும், என்று யூகிக்க இடம் இருக்கிறது. இதைப் பிறகு ஆராய்வோம். இங்கு இம்முதல் பாசுரத்தின் கருத்தை மட்டும் சுருக்கமாக விளக்குவோம். இப்பாசுரம் மூலமும், இதன் பத வுரையும் இந்நூலின் 'அவதாரிகை'யில் எழுதப்பட்டுள்ளன.

"உயர்வற உயர்நல முடையவன் யவனவன்"

எம்பெருமான், ஆழ்வாருக்கு, ஒரு காரணமுமின்றியே, தன் ஸ்வ ரூபத்தையும், கல்யாண குணங்களையும், பல்கோடி நூறாயிரம் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனுயிருக்கும்படியையும், தன்னு டைய திவ்யமங்கள விக்ரஹத்தின் சிறப்பையும் காட்டி உபகரித் தான். இவற்றை உள்ளபடி ப்ரத்யக்ஷமாய் அனுபவித்த ஆழ் வார், அதனுல் உண்டான அளவிடமுடியாத ப்ரீதிவேகத்தால் இவ்வின்பவெள்ளத்தை வாயினுல் பாடியல்லது தரிக்கமாட்டாத நிலைமையில், தான் அனுபவித்தவாறே பேசுகிறுர். உயர்வு அற = வருத்தமில்லாமல். உயர்வுண்டாகும்போது அதைப் பெறுவதற்காக பிரயாசைப்படுவது இன்றியமையாததாயிருக் கும் மற்றவர்கள் விஷயத்தில். பிரமன் (நான்முகன்) பலகோடி யுகங்கள் ஸ்ரீமகாவிஷ்ணுவைக் குறித்துத் தவம் செய்து, மீண்டும் தன் ஸ்தானத்தைப் பெற்றுன். இவ்வாறு, அவரவர்கள் தங்கள் பேற்றுக்கேற்றவாறு அனுபவிக்கும் வருத்தம் சிறிதும் இல் லாதபடி என்கை.

உயர்நலம் = உயர்ந்துகொண்டிருக்கிற ஆனந்த குணம். 'நலம்' என்பது 'ஆனந்தம்' என்னும் குணத்தைக்குறிக்கும். நல்லகுணங்கள் யாவற்றையுங் குறிக்கும். அல்லது ஆனந்த த்திற்குக் காரணமான விபூதிகளை (நித்ய விபூதி — லீலா விபூதி)க் குறிக்கும். 'உயர்வற உயர்ந்ததான ஆனந்த குணத்தை, அல்லது, எண்ணற்ற நற்குணங்களை, அல்லது, அளவிலாத ஆனந்தத்தைத் தரக்கூடிய ஸகல சேதன சேதன ரூபமான ஸமஸ்த விபூதிகளையும் உடையவன் எம்பெருமான்' என்றுரா யிற்று. இவ்வானந்த குணம் முதலியவற்றைப் பெறுவதற்காக ஒருவிதத்திலும் வருந்த வேண்டாதபடி இவை இயற்கையாகவே அமையப்பெற்றவன் எம்பெருமான்.

'உயர்வு' என்பது மேன்மையைக் குறிப்பதாகவும் பொருள் கூறுவர். உயர்வு- எம்பெருமானைத் தவிர மற்ற எல்லா வஸ்துக் களுக்கும் உண்டான எல்லாவிதமான உயர்வும், அற-இல்லாமல்

போகும்படி. உலகில் உள்ள பொருள்கள் யாவும் ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ இருக்கின்றன. இது இயற்கையாக அமைந்தது. அங்ஙனமிருக்க, எம்பெருமானுடைய உயர்வை நோக்குங்கால், மற்றவைகளின் உயர்த்தி அற்றுப்போய் விடுவதாவது; சூரியன் பிரகாசிக்கும்பொழுது நக்ஷத்திரங்கள் போலவும், மேரு பர்வதத்தின் உச்சியில் நிற்பவனுக்குக் கீழே உள்ள பொருள்கள் போலவும், இருக்கும்போழுதே இல்லையென்னலாம்படி, தோன்றாமல் இருக்கை.

இப்படி, அல்லாதவற்றை இல்லையென்னலாம்படிபண்ணுகிற எம்பெருமானுடைய ஆனந்தகுணம்தான் அளவிட்டுச் சொல்லக் கூடியதாயிருக்குமோ வெனில்; உயர் = அவ்வாறு அளவிடமுடியாது. ஸர்வஜ்ஞர்களான அயர்வறுமமரர்கள், குழாங்களாகக்கூடிக் காலதத்வ முள்ளதனையும் அயர்வின்றிக்கே இதை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆயினும், அவர்களாலும் எல்லை காண முடியாதபடி மேல்மேல் உயர்ந்துகொண்டேயிருக்கும் என்றாராயிற்று. "தொல்லையஞ்சோதி நினைக்குங்கால் என் சொல்லளவன்று, இமையோர் தமக்கும் எல்லையிலாதன கூழ்ப்புச் செய்யும்" என்று இவர் தாமே பேசும்படியிருக்கும். உயர்வு அதிகமாக ஆக, அது வீழ்ச்சியிலேயே முடியுமென்கிற உலகவியற்கையை மீறிய இயல்புடைத்து எம்பெருமானுடைய ஆனந்த குணம். யாராலும் எக்காலத்தும் அளவிட்டு அனுபவிக்கக்கூடாதது என்றபடி.

இப்படி எல்லை காண முடியாததான எம்பெருமானுடைய நற்குணங்கள், அனுபவிக்கிறவர்களுக்கு நலமாயிருக்கும். இன்பகரமாயிருக்குமென்றபடி. அதனாலேயே 'குணம்' என்னாதே 'நலம்' என்றார். 'உயர்வற உயர்குண முடையவன்' என்று சொல்ல வேண்டியிருக்க, 'உயர்வற உயர் நலமுடையவன்' என்றது, இதையே கருத்தில் கொண்டு. இவ்வாறு உயர்வற உயரா நின்ற எல்லையிலாத நற்குணங்களை உடையவன் எம்பெருமான். 'இக் குணங்கள் எம்பெருமானிடம் உள்ளன' என்றாரில்லை. ஆனால் 'உயர்வற உயர்நலமுடையவன்' என்றருளினார். இதன் கருத்து யாதெனில்; இக்குணங்களை விட்டு ஒரு க்ஷணமும் எம்பெருமான்

இருக்கமாட்டான். சந்தனக்கட்டையை அதன் வாசனையால் அறிந்து கொள்வதைப்போல், இக்குணங்களையிட்டு எம்பெருமானைச் சொல்ல வேண்டும்படியிருக்கும். இக்குணங்கள் எம்பெருமானிடம் சிலகாலம் இருந்தும் சிலகாலம் இல்லாமலும் இருக்கும் தன்மையனவன்று. ஆனால் இறைவனது ஸ்வரூபத்தோடே விட்டுப் பிரியாததாய் இழைந்திருக்குமென்றபடி.

இங்கு 'நலம்' என்னும் சொல் 'ஆனந்த குணம்-எண்ணற்ற நற்குணங்கள்-- ஸமஸ்த சேதநாசேதனங்களாகிற எம்பெருமானுடைய விபூதிகள்' என்று மூவகையாகப் பொருள்படும். 'ஸமஸ்த கல்யாண குணாத்மகோஸௌ' என்பனபோன்ற புராண வசனங்களைக் காண்க.

'யவன்' என்பது இக்குணங்களுக்கெல்லாம் இருப்பிடமான இறைவனது ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. "யவன்=யாவனொருவன், உயர்வற உயர்நலமுடையவன்; அவன்" என்று சேர்ப்பது. இத்தால் இவ்வானந்தாதி குணங்களால் எம்பெருமான் ஏற்றமடைகிறானென்பதல்ல. இதற்குமாறாக அக்குணங்கள் தானே, தன்னை அடைந்து நிறம் பெறுகின்றன என்னும்படியான ஸ்வரூப வைலக்ஷண்யம் உள்ளவன் எம்பெருமான், என்று சொல்லிற்றாயிற்று. "உயர்வற உயர்நல முடையவனான எம்பெருமான் மயர்வற மதிநலமருளினன்" என்று சொல்லாமல் "யவன் உயர்வற உயர்நலமுடையவன், அவன்-என்று அருளிச் செய்ததனால் இவ்வர்த்தம் கிடைக்கிறது.

எம்பெருமானுடைய ஆனந்த குணம் உயர்வற உயர்ந்தது, என்று கூறும் இம்முதலடி, தைத்திரீயோபநிஷத்தில் 'ஆனந்த வல்லீ' என்னும் பாகத்தின் கருத்தை விளக்கிக் கூறுவதாகும். எம்பெருமானுடைய ஆனந்தம் எத்தன்மையது? என்பதை அவ்வுபநிஷத் விவரிக்கிறது. முந்துறமுன்னம் மனுஷ்யானந்தம் என்று ஒன்றை நமக்குப் பற்றுக்கோடாகக் காட்டுகிறது. மனுஷ்யானந்தம் என்றால் மனிதர்கள் அனுபவிக்கும் ஆனந்தம்-என்று பொருள். நாம் தினசரி வாழ்க்கையில் கண்கூடாகக் காணும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு பரம்பொருளின் ஆனந்த குணத்தை விளக்கிக் கூற முயற்சிக்கிறது வேதம். சிறு

பொருளை உடையவனுடைய ஆனந்தம் ஒருவிதமானது. பெருஞ் செல்வம் படைத்தவனுடைய ஆனந்தம் வேறு வகையானது. அவ்விதமே அழகிற் குறைந்தவனுக்கும் - அழகு நிறைந்தவனுக்கும், அறிவு குறைந்தவனுக்கும் - பேரறிவாளனுக்கும் உண்டாகும் ஆனந்தம் வெவ்வேறு வகையானதாகும். யௌவனப் பருவத்தினரிடம் காணப்படும் ஆனந்தம் வேறு. வயது முதிர்ந்தவர்களிடம் அவ்வானந்தத்தைக் காண முடியாது.

இவ்வாறு உலகம் பூராவும் மனிதர்களிடம் காணப்படும் ஆனந்தம் ஒன்றைப்போல் மற்றொன்று இருப்பதில்லை. ஏற்றத் தாழ்வாகவே காணப்படுகிறது. அதுவும் செல்வம்-கல்வி அறிவு - பருவம் - அழகு - முதலியவைகளின் ஏற்றத் தாழ்வினால் வந்ததாகவே உள்ளது. இதிலிருந்து நாம் ஒரு ஆனந்தத்தைக் கற்பனைசெய்து பார்க்கவேண்டும். நல்ல யௌவனப் பருவத்திலேயே இருப்பவனும், அளவுகடந்த கல்வி அறிவு படைத்தவனும், தன்னைப்போன்ற பல யுவர்களுக்குக் கல்வி போதிக்கும் பாக்யம் வாய்க்கப்பெற்றவனாயும், தாராளமாக உணவு உட்கொள்ளும் தன்மையனும், திடகாத்திரம் படைத்தவனும், நல்ல பலசாலியாகவும் ஒருவன் இருந்தால்; அவனுக்கு இப்பூமியே பெட்டியாக அது நிறைந்த பணமும் இருந்தால், அவன் அனுபவிக்கும் ஆனந்தம் எத்தன்மையதாயிருக்கும்! என்பதை நாம் ஊகித்துப்பார்க்கவேண்டும். இதுவே இங்கு 'மனுஷ்யானந்தம்' எனப்படும்.

இப்படி மனுஷ்யானந்தத்தை ஒருவாறு வேதம் நமக்குச் சொல்லிக்கொடுத்து மேலே செல்லுகிறது. இனி நமக்கு அதிகமான சிரமம் இல்லை. கணக்கு மட்டும் சரியாகப்போடத் தெரிந்தால்போதும். மனுஷ்யானந்தத்தைப்போல் நூறு மடங்கு அதிகமானது. "மனுஷ்ய கந்தர்வர்களின்" ஒரு ஆனந்தமாகும். இதிலும் நூறு மடங்கு அதிகமானது "தேவ கந்தர்வர்களின்" ஒரு ஆனந்தம். இதைப்போல் நூறு மடங்கு அதிகமானது "சிரலோகலோகர்கள்" என்னும் பித்ருக்களின் ஒரு ஆனந்தமாகும். இதற்கடுத்தபடியில் "ஆஜானஜ தேவர்களின்" ஆனந்தம். அதன்மேல் "கர்மதேவர்களி"ன் ஆனந்தம். அதன்பிறகு "தேவர்"களின் ஆனந்தம். அதற்கு மேல் இந்திரனுடைய

ஆனந்தம். அதிலும் உயர்ந்தது ப்ருஹஸ்பதியின் ஆனந்தம். இதிலும் சிறந்தது 'பிரஜாபதி'யினுடைய ஆனந்தம். இதிலும் நூறுமடங்கு அதிகமானது பரப்ரம்மத்தின் ஆனந்தம் என்று முடிவு கட்டுகிறது. இதையே ப்ரம்மானந்தம் என்று வழங்குவர்

ஒன்றைவிட நூறுமடங்கு உயர்ந்தது மற்றொன்றாகப் பதினொன்று முறை கூட்டிக்கொண்டே போனால், முதல்படியில் குறிப்பிட்ட ஒரு ஆனந்தத்தைப்போல் 11வது படியில் குறிப்பிடப்படும் ஆனந்தம் எத்தனை மடங்கு அதிகமானது, என்பதைக் கணக்கு பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும். முதலில் 1 என்னும் இலக்கத்தை எழுதி அதன்மேல் வரிசையாகப் பூஜ்யங்களை அடுக்கிக்கொண்டே போகவேண்டியதுதான். முடிவில் நிற்கும் பூஜ்யங்களின் எண்ணிக்கையளவை உள்ளபடி தெரிந்கொள்வது சற்று கடினமாகவே இருக்கும். கணித சாஸ்திரத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களே இதைச்செய்ய முடியும். ஆனால் இதைவிடச் சுலபமான வேறு முறைஇல்லாமையால் வேதம் இவ்வழியில் சென்றது.

இவ்வாறு பேசியும் கூட ப்ரம்மானந்தத்தை ஒரு சிறிதளவு கூட உள்ளபடி சொன்னதாக நினைக்கமுடியவில்லை. அதனால் இதில் முடிவில் சொன்ன ப்ரம்மானந்தத்தை, முதலான மனுஷ்யானந்தத்தின் இடத்தில் வைத்து, மீண்டும் முன்போல் நூறு மடங்கு படிப்படியாக உயர்த்திக்கொண்டேபோய் 11-வது படியில் ப்ரம்மானந்தத்தை வைத்துப் பார்த்தது, இம்முறையிலும் அதே கதிதான் ஏற்பட்டது. ப்ரம்மானந்தத்தை உள்ளபடி சொல்லித் தலைக்கட்ட இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டியிருந்தது. வேதமும் ஓய்வதில்லை, மீண்டும் மனுஷ்யானந்த ஸ்தானத்தில் வைத்துப் பழையபடியே 11-தரம் கூட்டிப் பார்த்தது. இவ்வாறு எத்தனை தரம் கூட்டிக்கொண்டே போனாலும் ப்ரம்மானந்தம் இன்னும் அவ்வருகாகவே இருக்கிறதேயன்றி, அதைச் சொற்களால் உள்ளபடி கூற இயலவில்லை. மனத்தாலும் எண்ணிப் பார்க்கமுடியவில்லை.

இதை வேதமே பின்னால் ஒப்புக்கொள்கிறது. 'யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ' என்று இவ்விஷயத்தில் தன் தோல்வியை வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறது. இதையே ஒரு பெரியார் "உபர்யுபர்யப்ஜபுவோபி பூருஷாந் ப்ரகல்ப்ய தேயே சத மித்யனுக்ரமாத். கிரஸ்த்வதேகைக

குணவதீப்ஸ்யா ஸ்தாஸ்திதா நோத்யமதோதிசேரதே” என்று அருளிச்செய்தார். “உனது குணங்களின் அருமை பெருமைகளைக் கணிசியாமல், அவைகளில் ஒன்றின் எல்லையைக் காணத் தொடங்கிய வேதங்கள், படாத பாடுபட்டு, என்னென்னவோ கற்பனைகளெல்லாம் செய்துபார்த்தும் வெற்றிபெற முடியாமல் இன்றளவும் முயற்சியிலேயே நிற்கின்றன”. என்பது இதன் கருத்து.

வேதத்தினுட்பொருளைத் தெளிவாக விளக்குவதற்காகவே அவதரித்தது திருவாய்மொழி. இதன் உதவியால் வேதங்களின் எந்தப்பகுதியையும் சிறிதும் மாறுபடாமல் தெளிவாய்த்தெரிந்து கொள்ளலாம். இதனாலேயே ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் “செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே” என்றருளிச்செய்தார். ஆனந்தவல்லியில் வேதம் தான் மேற்கொண்ட காரியத்தைத் தலைக்கட்ட முடியாமல் திணறுவதைக்கண்ட ஆழ்வார், இதை எளிதில் எல்லோரும் புரிந்துகொள்ளும்படி விளக்கிக் கூற விரும்பினர். அதன் பயனாகவே திருவாய்மொழியின் முதற்பாட்டின் முதலடியில் முதல் பதம் வெளிவந்தது.

“உயர்வற உயர்நலமுடையவன்” என்கிற இச்சொல்,எந்தக் கருத்தை வெளியிடுகிறதோ, அதே கருத்தைத்தான் தைத்திரீயோபநிஷத்தில் ஆனந்தவல்லியும் எடுத்துரைக்கிறது. ஆனால் இரண்டுக்கும் நெடுவாசி உண்டு. உபநிஷத்தை எல்லோரும் இஷ்டம்போல் பயின்று அதன் பொருளைப்புரிந்து கொள்வது சாத்தியமில்லை. அப்படிப்பயின்றவர்களும்கூட, கணிதசாஸ்திரத்தில் நல்ல தேர்ச்சியும், அபாரமான கற்பனாசக்தியும் உள்ளவர்களே இவ்விஷயத்தில் ஈடுபடமுடியும். ஆழ்வாருடைய திருவாய்மொழியை எல்லோரும் எவ்வித வரையறையுமின்றிக்கே பயிலலாம். அதன் கருத்துக்களும் “விச்வஜநாநுமோதநம்” என்கிறபடி சாதாரணமானவர்களுங்கூட எளிதில் புரிந்துகொள்ளுமாறே அமைந்துள்ளன.

இவ்விடத்தில் இதை நன்கு நிரூபிக்கலாம். “எம்பெருமானுடைய ஆனந்தகுணம் உயர்வறவுயர்ந்தது” என்கிற இவ்வளவே ஆழ்வார் கூறுவது. இதைப்புரிந்து கொள்வதில் ஒரு கஷ்டமும்

இல்லை. உலகவாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும், ஏதாவதொரு பொருளை 'உயர்ந்ததாக'த் தங்கள் அனுபவத்தினாலேயே தெரிந்து கொண்டிருப்பார்கள். பல்வேறு காரணங்களால் அது உயர்ந்தும் தாழ்ந்தும் இருப்பதையும் கண் கூடாகக் காணலாம். இங்கு, ஒருவன் உயர்ந்ததாகக் கருதும் ஒரு பொருளையே பற்றுக்கோடாக வைத்துக்கொண்டு, எம்பெருமானுடைய ஆனந்தத்தைத் தெரிந்து கொள்ளலாம். அவன் ஏற்கெனவே தெரிந்து கொண்டுள்ள பொருள் எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும், "அதைவிட உயர்ந்தது ப்ரம்மானந்தம்" என்பதே அவன் தெரிந்து கொள்ளவேண்டியது.

ஒரு சிறு குழந்தை, தாய்ப்பால், உண்பதிலேயே பேரானந்தம் காண்கின்றது. அதைவிட உயர்ந்தது ப்ரம்மானந்தம் என்று நாம் அதற்கும் சொல்லிக் காண்பிக்கலாம். ஒரு ராஜ்யத்தின் அரசன், தன் பிரஜைகளை நன்கு பரிபாலனம் செய்வதிலேயே உண்மையான ஆனந்தங்கொள்வான். காதலர், தாங்கள் இருவரும் கூடிக் களிப்பதையே பேரானந்தமாகக் கருதுவர் தேவேந்திரன், மூவுலகுந் தனிக்கோல் செலுத்தும் சீரையே சிறந்ததாகக் கருதுபவன். இவ்வாறு பலதரப்பட்டவர்களுக்கும் "உயர்வற உயர்நல முடையவன்" என்கிற இவ்வொரு பதம்தானே, அவரவர்கள் தன்மைக்கேற்ப வெவ்வேறு விதத்தில் சுருக்கமாகப் பொருள் கொடுக்கின்றது. கல்வி வாசனையே சிறிதும் இல்லாதவனுக்கும், சிறந்த அறிவாளிகளுக்கும், ஏழைக்கும், பணக்காரனுக்கும், சிறு குழந்தைக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும், மானிடர்க்கும், தேவர்க்கும், இப்பதம் ஒன்றையே வைத்துக்கொண்டு இறைவனைக் காட்டமுடியும். இதற்குக் கணித சாஸ்திரம் பயிலத் தேவையில்லை. மிகுந்த சிரமத்துடன், பல நாள் வேதாத்யயனம் செய்ய வேண்டியதும் இல்லை.

இதேபோல் இப்ரபந்தம் பூராவும் ஆங்காங்கு வேத வாக்கியங்கள் பலவும் எளிதில் புரிந்துகொள்ளுமாறு பரிவுடன் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இவ்வண்டீங்கவிகள் அற்புதமாக அமைந்ததற்கு இறைவனது இன்னருளும், ஆழ்வாருடைய சொந்த அனுபவமுமே காரணமாகும். ஆழ்வார் தன் அனுபவத்தில் கண்டதை அப்படியே பாடியுள்ளார். பிறர்க்கு உபதேசிப்பதற்காகத் தன் அனுபவத்தைக் குறைத்துக்கொள்ள முடியாத

நிலையில் அவர் இருந்தார். தான் மட்டும் தனிமையில் இப்பேரின்பவெள்ளத்தை அனுபவிக்கும் இயல்பும் படைத்தவரல்லர். அதனாலேயே இத்திருவாய்மொழி 'உபதேசகர்ப்பானுபவம்' என்றும், 'அனுபவ கர்ப்போபதேசம்' என்றும் கூறப்படும். இதை இவ்வளவில் நிறுத்தி இரண்டாமடியின் கருத்தை விளக்குவோம்.

'மயர்வற மதிநலமருளினன் யவனவன்'

இப்படிப்பட்ட 'ஆனந்தம்' முதலான எண்ணிறந்த கல்யாண குணங்கள் உடையவனான எம்பெருமான், ஆழ்வாருக்கு 'மயர்வற மதிநலம் அருளினன். மயர்வு - ப்ரமம். அது மூன்று வகையாகும்:— (1) இவ்வுடலைக் காட்டிலும் வேறு ஆத்மா (உயிர்) இல்லை. இவ்வுடம்போடு எல்லாம் முடிந்துவிடுகிறது. என்கிற எண்ணம். (2) உடலைக்காட்டிலும் வேறாக ஆத்மா ஒன்று உண்டு. ஆனால் அது ஸ்ரீமந்நாராயணனுக்கே அடிமை செய்து உய்யும் இயல்புடைத்தன்று. மற்ற தெய்வங்களுக்குச் சேஷமானது, என்று நினைத்தல். (3) இவ்வாத்மா யாருக்கும் சேஷமாயிருப்பதல்ல, தனக்குத் தானே எஜமானனாய் ஸ்வதந்த்ரமானது, என்கிற எண்ணம். இப்படி மூன்று விதமான மயர்வும் அறும்படி பண்ணினான். மதியையும் நலத்தையும் அருளினான். மதி - பகவத் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிதல். நலம் - எம்பெருமானிடம் அளவுகடந்த அன்பு (பக்தி). இவைகளைத் தன் அருள் ஒன்றைத்தவிர வேறு ஒரு காரணமுமின்றிக்கே கொடுத்து உதவினான்.

எம்பெருமானை உள்ளபடி அறிவதும், உயர்வற உயர்நலமுடையவனான அவனிடம் அன்பு பூண்டொழுகுவதும் அவனருளாலன்றி எவ்விதத்திலும் பெறக்கூடியதன்று. "தமக்ரதும் பச்யதி வீதசோகோ தாதுঃ ப்ரஸாதாத் மஹிமாநமீசம்" என்பதைக் காண்க. மதிநலம் - என்பதற்கு வேறு விதமாகவும் பொருள் கூறலாம் :— நலமான மதியை அருளினான். மதிக்கு நலமாவது - நல்ல விஷயத்தையே பற்றுகையாகும். உலகத்தாரைப் போல் ஸம்ஸார ஸுகங்களில் செல்லாமல், திருத்துழாய் முளைக்கும் பொழுதே நறுமணத்துடன் தோன்றுகிற மாதிரி, இவ்வாழ்வார் ஒருவருக்குத்தான் 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்கிறபடி எம்பெரு

மானைத் தவிர மற்றப் பொருள்கள் தோன்றாதபடியும், இடை யறாது அவனையே சிந்தித்து இன்புற்றமர்ந்திருக்கும் படியும் எம்பெருமான் அருளினான். 'அருளினன் = இவ்விதமான பேறு பெறுவதற்குத் தம்மிடம் ஒரு உபாயமுமில்லாதிருக்க, இறைவன் தன்னுடைய வாத்ஸல்யத்தினால் இப்பேற்றை அருளினன். 'ஸமோஹம் ஸர்வபூதேஷு' என்றிருக்கும் எம்பெருமான், ஒரு வருக்கு அருளி, ஏனையோருக்கு அருளாமல் இருப்பானாகில், ஆழ்வாரைத் தவிர மற்றவர் விஷயத்தில் அவனுக்கு வைஷம்ய மும், இரக்கமின்மையும் ப்ரஸங்கிக்கும். ஆதலால் இவ்வாறு அவனருளைப் பெறுவதற்கு, ஆழ்வார் பக்கலில் ஒரு முயற்சி இருந்தேயாக வேண்டும். இப்பேறு பெறுவதற்காக முன்பு ஆழ்வார் பண்ணின ப்ரபத்தி (சரணாகதி) யேயாகும் அவ்வுபா யம். "அருளினன்" என்னுமிடத்து இவ்வுபாயமும் குறிப் பிடப் பட்டதாகும். ஆனால் "நிர்ஹேதுகமாக அருளினன்" என்னும் உரை எவ்வாறு கூடுமெனில், பேற்றின் தன்மைக்கு ஏற்ற உபாயமில்லாமையை உரையாசிரியர் விளக்கியுள்ளார் எனக் கொள்க. "எனக்கு அருளினன்" என்று சொல்ல வேண்டி யிருக்க 'எனக்கு' என்பதைக் குறிப்பிடாதொழிந்தது; இம்மதி நலம் பெறுவதற்கு முன்பு, தம்மை உளராகக் கருதாமையினால். "அஸந்நேவ ஸ பவதி. அஸத் ப்ரம்மேதி வேத சேத்" என்பதைக் காண்க.

அயர்வறுமமரர்க ளதிபதி யவனவன்

இவ்வாறு நிர்ஹேதுகமாக அருளினவன், தன் அருளை விரும்புவார் யாருமில்லாதா னொருவனோ? என்னில்:- "அயர்வறு மமரர்க ளதிபதி" அயர்வு - மறதி. அதில்லாத நித்யஸூரிகள், குழாங்களாகக் கூடி அனுபவிக்குமாறு தன்னைக் கொடுத்துக் கொண்டிருக்கும் மஹோதாரனானவன். ஒரு விநாடியும் எம் பெருமானை மறந்தால் அவ்வளவிலே தன் ஸத்தையையே (இருப் பையே) இழந்து 'இலரா'கிவிடும் தன்மையுள்ளவர்களாகையால் 'அயர்வறுமமரர்கள்' (அயர்வற்றிருப்பதினாலேயே அமரரா யிருப்பவர்கள்) என்று வழங்கும்படியான நித்யஸூரிகளை ஒரு நாடாக உடையவன்.

தன் அருளையே நம்பி வாழும் நித்யஸூரிகளுக்குத் தலைவ னான எம்பெருமானுடைய 'துயரறு சுடரடி தொழுதெழென்

மனனே! என்று மனதைப் பார்த்துச் சொல்லுகிறார். 'துயரறு சுடரடி=அடியார்களுடைய துயரை அறுக்கும் ஸ்வபாவமுள்ள சுடர்மிக்க திருவடிகள். "சுடரடி" என்பது எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை (திருமேனியை)க் குறிப்பதாகும். "சுடரொளி மூர்த்தியை" 'மாசூணச் சுடருடம்பாய்' என்கிறபடி. அடியவன் இழியும் துறையாதலின் திருவடிகளைக் குறிப்பிட்டார். தாயைக் கண்ட சேய் முலையிலே வாய் வைக்குமா போலே, இவரும் எம்பெருமானுடைய 'தேனே மலரும் திருப்பாதம்' எனப்படும் திருவடிகளிலே வாய் வைக்கிறார்.

'துயரறு' என்பதற்கு மற்றொரு விதமாகவும் பொருள் கொள்ளக்கூடும். துயரறு=துயரந் தீர்ந்த என்று. அடியவர்களின் துயரை யறுத்த பிறகே தான் துயர் தீர்ந்தானுயிருக்கும் ஸ்வபாவமுள்ளவனன்றோ? எம்பெருமான். "வ்யஸநேஷு மனுஷ்யாணாம் ப்ருசம் பவதி துःகிதः" 'ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந் நாபஸர்ப்பதி' என்கிறபடி. ஆழ்வாருடைய மயர்வை அறுத்து, அதன்பின் இறைவன் தான் துயர்தீர்ந்தானுயிற்று. இவ்விதமான திருவடிகளில் ஸகலவிதமான கைங்கர்யங்களையும் செய்து, அனாதிகாலமாய்ப் புறம்பான விஷயங்களிலே ஈடுபட்டு அனுபவித்த துன்பங்களெல்லாம் தொலைந்து உஜ்ஜீவிக்குமாறு (கடைத்தேறுமாறு) 'என் மனனே! என்று தன் திருவுள்ளத்தைக் குறித்துச் சொல்லுகிறார். இரண்டாமடியில் 'எனக்கு அருளினன்' என்னுமல் 'அருளினன்' என்றவர், இங்கு 'என் மனனே! என்கிறார். மயர்வற மதிநல மருளப்பெற்று அதனால் எம்பெருமானை உள்ளபடி அறிந்திருப்பதனால், இப்பொழுது தன்னை உளராகக் கருதுகிறார். 'அஸ்தி ப்ரம்மேதி சேத் வேத. ஸந்தமேனம் ததோ விதுரிதி' என்கிறபடி.

'என் மனனே! என்று தன் மனதை முன்னிலையாக்கிப் பேசுகிறார். எம்பெருமானுடைய இன்னருளுக்கிலக்கான இவருக்குப் பிறந்த மதிநலம், மற்றவர்களுக்குப்போல் மனத்தின் உதவியுடன் வந்ததன்று. 'ஆத்ம மநஸ் ஸம்யோகம் (ஆத்மா மனதுடன் சேருவது) ஸகலவிதமான அறிவு (ஞானங்)களுக்கும் முதன்மையான காரணம்' என்பது நையாயிகர்களின் தர்க்க சாஸ்திரம்) கோட்பாடாகும். இதன்படி மனதின் உதவியின்றி

யாருக்கும் எவ்விதமான அறிவும் ஏற்பட முடியாது. ஆனால் இது, 'ஆத்மா ஜ்ஞானஸ்வரூபமன்று. ஜ்ஞானம் அதற்கு வந்தேறியே' என்கிறவர்களின் கொள்கை. இறைவனது அருள்; வெள்ளங்கோத் தாற்போல் பெருகி, "விதிவாய்க்கின்று காப்பாரார்?" என்கிறபடி பாய்ந்துத் "தானே யானென்பானாகித் தன்னைத்தானே துதித்து" என்கிறபடி உலகை உய்விக்க வேண்டி, ஆழ்வாரை அதற்கேற்ற கருவியாகக் கொண்டு, தோற்றுவித்த பொய்யில்பாடலாயிரமாகிய செஞ்சொற் கவிகள் விஷயத்தில் இவ்விதி செல்லாது. 'ப்ரஜ்ஞாச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ' எனப்படும் பரநன்மலர்ச்சோதி யாகிய ஆத்மஸ்வரூபம் ஜ்ஞானமயமானது. அதற்கு ஜ்ஞானம் வந்தேறியன்று. அதில் அந்தர்யாமியாய் அநுப்ரவேசம் செய்துள்ள இறைவனின் அருள் ஒன்றே காரணமாய் அவ் வாத்மாவினின்றும் கிளர்ந்தெழுகின்ற ஞானச் சுடருக்குப் புறம் பான காரணங்கள் இன்றியமையாதனவாகா. ஆதலின் அகத்தில் (ஆத்ம ஸ்வரூபத்தில்) ஊறுகிற இன்பத்தை, அதற்கு மிகவும் நெருக்கத்தில் உள்ளதான மனதை விளித்துச் சொல்லுகிறார். பெரும்பேறு பெற்ற ஒருவன் அதைத் தனக்கு அணித்தான வர்களிடம் சொல்லிக் கொள்ளுகிற மாதிரி.

'என் மனனே! உலகத்தாரைப்போல் 'அந்நமயம் ஹி ஸௌம்ய மந:' என்கிறபடி லௌகிகமான சோற்றின் சக்தி யினால் இயங்கும் மனமன்றே! இது. 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ண னெம்பெருமான்' என்றும், 'அத்யதேத்தி ச பூதாநி, தஸ்மாதந்நம் தது்ச்யத இதி' என்றும், 'வாஸுதேவஸ் ஸர்வம்' என்றும் சொல்லுகிறபடி எம் பெருமானையே ஸர்வவிதபோக்யமாகக் கொண்டுள்ள என்னு டைய மனமே! என்றுமாகவுமாம்.

'உயர்வற' என்று தொடங்கி முதல் மூன்று அடிகளையும் நான்காவது அடியுடன் தனித்தனியே சேர்த்து, இச்செய்யுளை மூன்று வாக்யமாக அமைக்கலாம்:— (1) உயர்வற உயர்நலமுடை யவன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! (2) மயர்வற மதிநல மருளினன் யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! (3) அயர்வறு மமரர்களதிபதி யவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! என்கிறபடி. இதில் 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! என்னும் நான்

காவது அடி. மேலும் இரண்டு தரம் ஆவ்ருத்தி செய்துகொள்ளப் படவேண்டும். 'ஸக்ருத்தே அக்ஙே நமஃ. த்விஸ்தே நமஃ. த்ரிஸ் தே நமஃ என்கிறபடியும்; 'நமஃ புரஸ்தா தத ப்ருஷ்டதஸ்தே' என்கிறபடியும், 'பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம' என்கிற படியும், 'நமோநமோ வர்ங்மநஸாதிபூமயே நமோ நமோ வாங்மனஸைகபூமயே, நமோநமோऽநந்தமஹாவிபூதயே நமோ நமோऽநந்ததயைகஸிந்தவே' என்கிறபடியும் காண்க.

இவ்வாறு அடிதோறும் ஒவ்வொரு குணத்தைச் சொல்லி அந்த குணத்தையுடையவனுகிய எம்பெருமானுடைய திருவடி களைத் தொழுதெழுமாறு திரும்பத் திரும்ப அருளிச்செய்வதின் கருத்து யாதெனில்; எம்பெருமானுடைய பரத்வத்தை இத்திரு வாய்மொழியிலே பேசுகிருராதலின், அதற்குச் சான்ருக அவ னுடைய குணங்களைப் பேசப் புகுங்கால்; ஒவ்வொரு குணமும், மற்றென்றின் உதவியை எதிர்பாராமலே இறைவனது பரத் வத்தை நிலைநிறுத்த வல்லதாக இருத்தலின், அதைக்காட்டுமாறு தனித்தனியே வாக்யம் யோஜிக்கப்படுகின்றது. ஒன்றேபோது மாயின் அவ்வளவிலே நிறுத்திக்கொள்ளலாகாதோ? வென்னில்; இவ்வாறன எண்ணிறந்த நற்குணங்கள் இயற்கையாகவே அமை யப்பெற்றவன் எம்பெருமான் என்பதை எடுத்துக் காட்டுவான் வேண்டி இரண்டு மூன்று குணங்களைப் பேசி அனுபவிக்கிருர்.

அதில்; தனக்கு ஒரு காரணமுமின்றிக்கே மயர்வற மதிநல மருளினவன்பால் உபகாரஸ்மிருதியாலே, அவனுடையகருணையை யும், ஔதார்யத்தையும் 2-வது 3-வது அடிகளாலே அனுபவிக்கி ருர். அவாப்த ஸமஸ்த காமனுய், உபயவிபூதிநாதனை உயர்வற உயர்நலமுடைய இறைவன் 'பொன்மலர் நாற்றமுடைத்தானுற் போலே மஹோதாரனுயிருப்பன். தன்னைப் பிரிந்து ஒருகண மும் தரித்திருக்கமாட்டாத பல்கோடி நூறுயிரம் அயர்வறுமமரர் களுக்குத் தன்னை ஸர்வகாலமும் அனுபவிக்கும்படி கொடுத்துக் கொண்டிருக்கும் வள்ளல் எம்பெருமான். இந்த க்ருபையும் ஔதார்யமும் இல்லையாகில் எம்பெருமானுடைய மற்ற பெருமை கள் யாவும் வீணேயாகும். அதனுல் அவன் கருணைக்கடலா யிருக்கு மிருப்பையும், மஹோதாரனு யிருப்பதையும் பேசி அனு பவித்தார். "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாந்தரும்'

'தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா விநாபூதா: என்பதைக் காண்க.

'உயர்வற உயர்நலமுடையவன் யவன், அவன் மயர்வற மதிநல மருளினன், மயர்வற மதிநலமருளினன் யவன், அவன் அயர்வறு மமரர்கள் அதிபதி, அயர்வறு மமரர்களதிபதி யவன் அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! என்று பாட்டு முழுவதையும் வாக்யைகவாக்யதையாய் ஒரே வாக்யமாகவும் யோஜிக்கலாம்.

'உயர்வற' என்னும் பாட்டில் 'அர்த்த பஞ்சகம்'

திருவாய்மொழியில் முக்யமாகக் கூறப்படுவது அர்த்த பஞ்சகமேயாகும் என்பது முன்னம் நிரூபிக்கப்பட்டுளது. அர்த்த பஞ்சகம் = ஐம்பொருள்கள். அவை 'மிக்கவிறை நிலையும், மெய்யாமுயிர் நிலையும், தக்கநெறியும், தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும், வாழ்வினையு மோதுங் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்' என்று திருவாய்மொழித் தனியன் பாட்டில் விளக்கப்பட்டுள்ளன. இப்ரபந்தத்தின் சுருக்கமான இம் முதற்பாட்டில் இவை அடங்கியுள்ளன. 'உயர்வற உயர்நலமுடையவன்-அயர்வறு மமரர்களதிபதி, என்கிற பகுதி இறைவனுடைய ஸ்வரூபத்தை விளக்குகிறது. 'மயர்வற' என்னும் பகுதி "தடையாகித்தொக்கியலும் ஊழ்வினையையும், அது அழிவதையும் விளக்குகிறது. 'அருளினன்' என்பதனால் பேரின்பத்திற்கான உபாயத்தைச் சொல்லுகிறது. 'துயரறு சுடரடி தொழுதெழு' என்கையாலே, எம்பெருமான் திருவடிகளில் பணி செய்து உய்வதே உண்மையான பேரின்பம் என்று பேற்றின் தன்மையை நிரூபிக்கிறது. 'என்மனனே' என்கையாலே அதிகாரி ஸ்வரூபம் சொல்லிற்று. இவ்வாறு அர்த்த பஞ்சகமும் இப்பாட்டில் ஒவ்வொரு பதங்களால் ஸூசிப்பிக்கபட்டது.

மற்றும் சில விசேஷார்த்தங்கள்.

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள் யாவும், தன்னை யறியாமல் பக்தி மீதூர்ந்து பரவசமாயிருந்த நிலையில் வெளி வந்தவை என்று பலகாலும் கூறியுள்ளோம். இறைவனால்

தோற்றுவிக்கப்பட்ட இப்பாட்டுக்கள் யாவும் உபநிஷத்துக்களிலும், புராணங்களிலும் ஆங்காங்கு காணப்படும் வாக்யங்களையே பிரதிபலிக்கின்றன என்பதையும் சிறிது விளக்கியுள்ளோம். இம்முதற்பாட்டிலும் சிலவற்றைக்கீழே தருகின்றோம்:

உயர்வறஉயர்நல முடையவன் = ஸ ஏகோ ப்ரம்மண ஆனந்தஃ (தைத்திரீயோபநிஷத் ஆனந்த வல்லீ.)

" " " ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருச்யதே (ச்வேதாச்வதரோபநிஷத்)

" " " நிரஸ்தாதிசயாஹ்லாதஸுகபாவை கலக்ஷண: (ஸ்ரீவிஷ்ணுபுராணம்)

" " " கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவான் (ஸ்ரீமத்ராமாயணம்)

" " " கேவலானுபவானந்தஸ்வரூப: பரம: ஸ்வராட். (ஸ்ரீமத்பாகவதம்)

இவ்வாறு பல்வேறு நூல்களுடன் இதன் ஒப்புமை நோக்கற்பாலதாயினும், சிறப்பாக ஸ்ரீமத் ராமாயணத்தையே பெரும்பாலும் இப்ரபந்தம் தழுவியிருப்பதாக ஆன்றோர் கூறுவர். இதை இவ்விருநூல்களின் தொடக்கத்தின்மூலம் நிரூபிப்போம்:-

ஸ்ரீமத்ராமாயணம், ஸ்ரீராமபிரானுடைய சரித்திரத்தைக்கூறும் வியாஜத்தால், எம்பெருமானுடைய கல்யாண குணங்களைப் பரக்கப்பேசி, 'அவனது அருளைப்பெறுவதற்கு அவனையே தஞ்சமாகக் கருதி அவனிடம் அடைக்கலம் புகுவதே வழி' என்பதைப் பல சந்தர்ப்பங்களால் நிரூபித்துக்காட்டுவதற்காகவே தோன்றிய நூலாகும். முதன் முதலில், ஸ்ரீ வால்மீகி முனிவர் நாரதரைப்பார்த்துக் கேட்கும்கேள்வியில், 'இவ்வுலகில் சிறந்தகுணங்கள் உள்ளவன் யார்? இதை எனக்குச்சொல்ல வேண்டும், என்று கேட்கிறார். நாரதபகவானும் "நீகேட்கும் குணங்கள் யாவும் அமையப்பெற்ற ஒருவன் கிடைப்பது அரிது. ஆயினும் நன்கு ஆராய்ந்துபார்த்துச் சொல்லுகிறேன்' என்று தொடங்கி, ஸ்ரீராமபிரானைச் சொல்லி அவருடைய நற்குணங்களை வரிசையாகச் சொல்லுகிறார். பிறகு அயோத்யா காண்டம் தொடக்கத்தில் ஸ்ரீராமபிரானுடைய திருக்கல்யாணகுணங்களையே

ஸவிஸ்தாரமாகப்பேசி "தமேவம்குணஸம்பந்நமகாமயத மேதிநீ" "பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்திதே" என்று இக் குணங்களில் ராஜ்யத்திலுள்ளாரனைவரும் ஆழங்கால்பட்டதைப் பேசினர்.

மேலும்பலவிடங்களிலும் "அஹமஸ்யாவரோப்ராதா குணைர் தாஸ்ய முபாகத:" என்பது போன்ற பல சுலோகங்களால் ஸ்ரீ ராமபிரானுடைய திருக்கல்யாணகுணங்களையும், அவை எல்லோருடையவும் மனதைக் கொள்ளைகொள்ளும் இயல்புடையன வாக இருப்பதையும் அடிக்கடி பரக்கப்பேசுகிறார். இதனால் நற் குணங்களையுடையவன் எம்பெருமான் என்பதை நிரூபிப்பதே இராமாயணத்தின் முக்கியமான குறிக்கோளாகும் என்பதை அறியலாம். அவ்வாறேமுதலில், ராவணனால்துன்புறுத்தப்பட்டதேவர்கள் எம்பெருமானிடம்சரண்புகுதலும், பிறகு பரதாழ்வான் சரணாகதியும், காட்டிலுள்ள ரிஷிகளின் சரணாகதியும், காகாஸுர சரணாகதியும், ஸுக்ரீவ சரணாகதியும், ஸமுத்ர சரணாகதியும், விபீஷண சரணாகதியும் இவ்வாறாக சரணாகதியின் தொடர்ச்சி ப்ரபந்தம் முழுதும் வியாபித்திருத்தலால், 'தீர்க்கசரணாகதிசாஸ்த்ரம்' என்று பெயர்பெறும்படி இந்நூல் அமைந்துள்ளது.

இதேபோல் திருவாய்மொழியும் அமைந்துள்ளது. உயர்வற உயர்நலமுடையவன்—என்கிற முதலடியில் 'நலம்' என்னும் சொல்—எம்பெருமானுடைய நற்குணங்கள் யாவற்றையும் குறிப்பிடும், ஆக—"நலமுடையவன்" என்பது "குணவான்" என்பதுடன் பொருள் ஒன்றியதாக அமைந்துள்ளது. இது கொண்டே 'ச்ருதே காதாஸஹஸ்ரம் முரமதந குணஸ்தோம கர்ப்பம் முனீந்த்ர:" என்று ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்தார். அப்படியே, பேரின்பத்தைப் பெறுவதற்கு எம்பெருமான் ஒருவனே உபாயமென்றும், அவனருளைப் பெறுவதற்கு, பக்தியும்-ப்ரபத்தியுமே இருவழிகள் என்றும், அதிலும் பக்திமார்க்கத்தைவிட ப்ரபத்திமார்க்கமே, எவ்விதமான வரையறையின்றி யாவரும் கையாளக்கூடியதாகையால் சாலச்சிறந்ததென்னும் இப்பொருள் திருவாய்மொழியிலும் முக்யமாக நிரூபிக்கப்படுகின்றது. இதை 'தேவ: ஸ்ரீமாந் ஸ்வஸித்தே: கரணம்' என்றும்; 'உபாய: ஸ்வப்ராப்தேருபநிஷததித: ஸ பகவான்

ப்ரஸத்யை தஸ்யோக்தே ப்ரபதந நிதித்யாஸநகதி' என்றும் ஆன்றோர் அருளிச்செய்தனர்.

இவ்வாறு ப்ரபந்தம் தொடங்கும் பொழுதே எம்பெருமானுடைய எண்ணற்கரிய கல்யாணகுணங்களையும், அவை உயர்வற உயர்ந்திருப்பதையும், சொல்லிக்கொண்டு தொடங்கினது என்னென்னில்; இவ்வாறு எம்பெருமான், தன்னுடைய இனிய கல்யாணகுணங்களைக்காட்டி ஆழ்வாரை ஆட்கொண்டான். ஆகலின் முற்பட குணங்களில் இழிகிறார். இப்படி எல்லையற்ற நற்குணங்களை உடையவன் எம்பெருமான் என்று ஆழ்வார், தொடங்கும்பொழுதே அருளிச் செய்ததனால்; 'ப்ரம்மத்திற்கு குணம் ஒன்றும் கிடையாது. அது நிர்க்குணம். அதற்கு விபூதிகளும் உடம்பும் கிடையாது' என்கிற வாதம் உண்மைக்குப் புறம்பானதென்பது தெளிவாகின்றது. "ஆழ்வான் பிள்ளைப் பிள்ளையைப் பார்த்து, "நிர்க்குணமென்பார் மிடற்றைப் பிடித்தாற்போலே ஆழ்வார் "நலமுடையவன்" என்றபடி கண்டாயே! என்று பணித்தான்" என்பது ஈடு.

வேதம் தமிழ்செய்த மாறன் நம்மாழ்வார். இவர் அருளிய ப்ரபந்தங்கள் நான்கனுள், திருவாய்மொழி ஸாம வேதத்தின் ஸாரம் என்பர். சொற்கள் அமைந்துள்ள விதத்தாலும், பொருளின் பொருத்தத்தாலும் இதை நன்கு அறியலாகும். "ஓமித்யேததக்ஷரம்' என்று சாந்தோக்யோபநிஷத் தொடங்குகிறது. திருவாய்மொழியும் அப்படியே. 'ஓம்' என்பது - அ - உ - ம் - என்று மூன்று எழுத்துக்களாலானது. இம் மூன்றெழுத்துக்களிலேயே இம்முதற்பாட்டின் முதல் மூன்றடிகள் தொடங்குகின்றன. ஆனால் முறை தவறியுள்ளது, அ - உ - ம் என்று இருக்கவேண்டியது, உ - ம - அ, என்று மாறுடி விழுந்துள்ளது. இதற்கு இருவிதமாகக் காரணம் கூறுவர்:—

(1) வேதத்தினுட் பொருளை, அதற்கு ஏற்படுத்தப் பட்டுள்ள வரையறைகளினின்றும் விடுவித்து, எல்லோரும் எந்த ஸமயத்திலும் எவ்விடத்திலும் தங்கு தடையின்றிப் பாடிப் புரிந்துகொள்ளுமாறு செய்வதையே குறிக்கோளாக உடைய இத்திருவாய்மொழியில், வேதத்தின் முக்யமான எழுத்தாகிய

ஓம்' என்பவை முறை தவறாமல் வைத்துப் பாடுவது தகாது. ஆனால் அதன் கருத்துக்கள் உள்ளபடி விளக்கப்படவேண்டுமாயின், அவ்வெழுத்துக்கள் இருந்தேயாக வேண்டும். அதற்காகவே இம்மூன்றெழுத்துக்களையும் முறை தவறி அமைத்துப் பாடினர் என்பர்.

(2) இது ஸாமவேதத்தின் ஸாரத்தை விளக்கும் ப்ரபந்தமாகையால், 'உத்கீதே' என்னும் சொல், இப்ரபந்தத்தில் முதலிலும் முடிவிலும் ஒவ்வோரெழுத்தாகவும், மற்ற எழுத்துக்கள் மத்தியில் இருப்பதாகவும் தோன்றுமாறு அமைக்கப் பெற்றுள்ளது. 'உத்கீதே' என்பதற்கு 'ஸாம வேதத்தில்' என்பது பொருள். 'ஸாமவேதத்தில் உள்ள கருத்துக்களை இந்நூலில உள்ளன, என்று அதன் கருத்து. 'உயர்வற உயர்நலம் - என்று தொடக்கத்தில் 'உ' என்னும் எழுத்து உளது. 'பிறந்தாருயர்ந்தே' என்று திருவாய்மொழியின் முடிவில் 'தே' என்னும் எழுந்து உளது. அ - உ - ம - என்கிற முறைப்படி 'அ' என்னும் எழுத்தை முதலில் அமைத்துப் பாடினால் இவ்வர்த்த விசேஷம் தோன்றுவதற்கு இடம் இராதாகலின் 'உகாரத்தை முதலாக வைத்துப் பாடினர் என்றும் கூறுவர்.

சாந்தோக்யோபநிஷத் முடிவில், 'லிந்து மாபிகாம்' என்றுளது. 'லிந்து' என்பது தாயின் வயிற்றிலிருந்து குழந்தை வெளிப்படும் மிக நெருக்கமான துவாரம். அதன் மூலம் தன் உடம்பை ஒடுக்கிக்கொண்டு வெளிப்படுவது குழந்தைக்கு மிகப் பிரயாசையாகும். இதை நினைந்து 'மீண்டும் அக்கஷ்டம் எனக்கு வாராதிருக்குமாறு அருள வேண்டும்' என்று இறைவனை ஜீவாத்மா இறைஞ்சுகின்றது இவ்வாக்யத்தால். இதனால் 'பிறவி'யை அறவே ஒழிக்குமாறு வேண்டிக்கொள்கிறது. 'அவாவற்று வீடுபெற்ற' என்னும் திருவாய்மொழியின் கடைசிப் பாட்டும், இக்கருத்தையே விளக்குகின்றது. இதுபோன்ற பல காரணங்களாலும், 'சந்தங்களாயிரம்' என்றும், 'பண்ணார் பாடலாயிரம்' என்றும், நம்மாழ்வார் தாமே பாடியிருப்பதனாலும், இத்திருவாய்மொழி ஸாமவேத ஸாரம் என்றறுதியிடுவர்.

'திருவாய்மொழி வாசகமாலை' என்னும் இந்நூல் தோன்றிய வழி.

இம்முதல் பாசுரத்தின் பெருமையை முழுதும் விவரிப்பதற்கு அடியேன் சிறிதும் தகுதியற்றவன். இதில் விவரிக்கப்படும் எம்பெருமானுடைய அகண்ட பரிபூர்ண ஸ்வரூபம்போல், இதுவும் சிறந்த ஞானிகளுக்கே நன்கு விளங்கும். இதில் பதிந்துள்ள அரிய கருத்துக்களை அநவரதம் பயின்று வந்த நம் பூர்வாசார்யர்கள், இப்பிரபந்தம் 1102 செய்யுட்களில் எதை எடுத்துக்கொண்டாலும், அதின் கருத்து இம்முதற் பாட்டிலேயே பதிந்து கிடக்கிறதென்றும், இதை விவரிப்பதற்காகவே அவை தோன்றியுள்ளனவென்றும், இக்கருத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு காலக்ஷேபங்கள் செய்தருளியிருக்கவேண்டும். திருவாய்மொழி கோஷ்டியில், அடியார்கள் குழாங்களாகக் கூடியே இவ்வின்னமுதத்தைப் பருகுவது தொன்றுதொட்டுவரும் வழக்கமாகும். இதில் திருவாய்மொழியை விரித்துரைக்கும் பெரியோர், மெய்ம்மறந்து அரிய கருத்துக்களைத் திறமையுடன் எடுத்துரைத்து அமுதமாரி பொழியுங்கால், சிரத்தையுடன் கேட்டுக்கொண்டிருக்கும் அவையிலுள்ளோரில் சிலர், இவ்வுயர்ந்த கருத்துக்களைப் பின்புள்ளாரும் அறியும்வண்ணம் அழியாமல் காப்பாற்றுவதற்காகவும், அதிலுள்ள அளவுகடந்த அன்பினாலும், ஓலை ஏடுகளில் எழுதிக் காப்பாற்றி வைத்துக்கொள்வதும் உண்டு. இதுவே இந்நூல் தோன்றிய வழி.

இக்காலத்தில் சுருக்கெழுத்து எழுதும் முறை தோன்றியுளது. பண்டை நாட்களில் அவ்வாறு இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் எல்லாவற்றையும் சிரத்தையுடன் கேட்டு மனதில் நன்கு பதியவைத்துக்கொண்டு, பலவருஷங்கள் கழிந்த பிறகுங்கூட சிறிதும் பிறழாமல் அப்படியே சொல்லும் திறமை நம் முன்னோர்களுக்கு இயற்கையாக இருந்துவந்துளது. இவ்விதமான ஞாபகசக்தி பற்பல அரும்பெரும் நூல்கள் உருவாகுமாறு செய்துள்ளது. ஆனால் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது:- இவ்வாறு குறிப்பு எடுத்து வைப்பவர்கள், பிறகு தன் ஆசானிடம் அதைக்காட்டி அவருடைய ஆசியைப்பெற்ற பின்பே அதை

நூலாக வெளியில் காண்பிக்க இசைவர். இல்லையேல் அது அவ ரோடு மறைந்து போகவேண்டியதுதான்.

நம் நூல்கள் பலவற்றின் தோற்றம் இம்மாதிரியே உள்ளது. வையாகரண மஹாபாஷ்யம் இவ்விதமே தோன்றியது. பிற் காலத்திலும் 'ச்ருதப்ரகாசிகா' என்னும் நூல் இவ்வழியிலேயே தோன்றியது. ஏன்? இத்திருவாய்மொழி ஆயிரமுங்கூட இவ் வழியிலேயே ஸ்ரீ மதுரகவிகளால் உருவாக்கப்பட்டது. இந் நூலாசிரியரும் இம்முறையிலேயே சென்று இந்தநூலை எழுதி முடித்திருத்தல் வேண்டும். கேள்வியினால் பெற்ற அறிவைக் கொண்டு தானே சுதந்திரமாகவும் எழுதியிருக்கலாம். ஆனால் சிலகாரணங்களால் இதைப்பிரகடனம் செய்யாமல் இருந்து விட்டார் என்று ஊகிக்க இடமிருக்கிறது.

'திருக்கோனேரி தாஸ்யை' என்று தன் பெயரை இவ்வாசி ரியர்தாமே நூலின் முடிவில் குறிப்பிட்டுள்ளார். நூல் தொடக் கத்தில் 15 ஓலை ஏடுகள் காணவில்லை. அதில் ஏதாவது இவ்வா சிரியர் அவசியமான விவரங்களைக் கூறியிருக்கக்கூடும். துா திர்ஷ்டவசமாக அவை நமக்குக் கிடைக்கவில்லை. ஆதலின் நூலின் முடிவில் உள்ள குறிப்புக்களையும், நூலின் அமைப்பையும் கொண்டே நாம் எதையும் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. 'தாஸ்யை' என்று கூறிக்கொள்வதனாலும், 'அடிமை செய்தாள்' என்று கூறுவதனாலும், இவர் ஒரு பெண்பால் என்பது புலனா கின்றது. எம்பெருமானார், சந்திரகிரி அய்யன், ஸ்ரீமந்நாராயண னய்யர், திருக்கோட்டியூர்ஜீயர், வடக்குத்திருவீதிப்பிள்ளை, என்கிற வரிசையில் ஆசார்யர்களின் க்ரமத்தைக் குறிப்பிடுவதனால், திரு வாய்மொழிக்கு ஒப்புயர்வற்ற உரையாகிய 'ஈடு' என்னும் நூலை ப்ரவசனம் செய்த வடக்குத்திருவீதிப்பிள்ளையின் சீடர் இவர் என்பது புலனாகிறது. "ஆங்கீரஸவருஷம்—மார்கழி மாதம்- 26-ம்தேதி, என்று இந்நூல் எழுதிமுடிந்த தேதியையும் குறிப் பிடுகிறார். இதனால் இவரது ஆசிரியர் பலதரம் காலக்ஷேபப் சொன்னவற்றுள், ஒருதரம் இந்நூல் உருவாக்கப்பட்டதென்று- அல்லது-அத்தேதியில் சுதந்திரமாக இந்நூல் எழுதிமுடிக்கப் பட்டதென்று நிச்சயிக்கக்கூடும். இதிலிருந்து இந்நூல், முறைப்

படி குருவிடம் கேட்கப்பட்ட விஷயங்களைக்கொண்டே எழுதப் பட்டதேயன்றி, தாங்தோன்றியாய் எழுதப்பட்டதல்ல என்பது நன்கு அறியக்கிடக்கின்றது. நூல்முழுதும் ஈடு முப்பத்தாறு யிரப்படியில் உள்ள சொற்றொடர்களே பெரும்பாலும் காணப்பட்டு வதனால், 'ஈடு' தோன்றிய காலத்திலேயே இந்நூலும் தோன்றி யிருக்கவேண்டு மென்று நினைக்க இடமுண்டாகிறது.

இவ்விதமிருக்க, இந்நூல் பிரபலமாக ப்ரசாரம்அடையாமல் இது வரையில் மறைந்திருந்ததற்குக் காரணம் (1) இவர், தனது ஆசிரியரின் ஸம்மதத்தைப் பெறமுடியாமையாக இருக்கலாம். நமக்கு இக்காலத்தில் அபூர்வமானதாகவும், சிறந்தவைகளாகவும் தோன்றும் கருத்துக்கள், அதை எடுத்துரைக்கும் ஆசிரியருக்கு (அக்காலத்திய நிலைமையில்) சர்வசாதாரணமாகத் தோன்றியிருக் கக்கூடுமல்லவா?. அதனால் அவர் இதை ஒரு நூலாக அமைக்க வேண்டிய அவசியம் இல்லையெனக் கருதியிருக்கலாம்.

(2) இவ்வுரை 100 பாட்டுக்களுக்கே உள்ளது. மற்ற ஈடு முதலான உரைகள் 1000 பாட்டுக்களுக்கும் பூர்த்தியாக உள் ளன. ஆகலின் அவை பிரசாரத்திற்கு வந்தபின் இதன் அவசியம் குறைந்துவிட்டதாக ஆசிரியர் நினைத்திருக்கலாம்.

(3) தன் ஆசார்யனுடைய அறிவுத்திறனை நேரில் கண்டனு பவித்த இந்நூலாசிரியர்; இது போன்ற நூல்களை எழுது வதற்குத் தன்னைத் தகுதியற்றவராக எண்ணி, இதை வெளிப்படு த்தாமல் இருந்திருக்கலாம்.

(4) இந்நூலின் ஏட்டுப்பிரதியில் எழுத்துப் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. அதாவது சிறந்த தமிழ்ச்சொற்கள் தவறுதலான எழுத்துக்களால் எழுதப்பெற்றுள்ளன. ர-ற, ந-ன த்த-ற்ற- இதுபோன்ற எழுத்துக்கள் பெரும்பாலும் தவறாக எழுதப்பெற்றுள்ளன. இதில்வரும் வடமொழிச்சொற்கள், அல் லது தமிழ்ச் சொற்களுள் கலந்துவரும் இரண்டொரு வடமொழி எழுத்துக்கள் —இவைகளோவெனில், ஒரு சிறு பிழைகூட இல்லா மல் (கிரந்த எழுத்தில்) எழுதப்பட்டுள்ளன. இதனால் இந்நூ லாசிரியர் தெலுங்கு தேசத்தைச் சார்ந்தவர் என்றும்; இவரது

தமிழ் அறிவு கேள்வியினாலேயே உண்டாகியது மட்டுமின்றி, வைணவநூல்களுக்குள்ளேயே (நாலாயிரதிவ்யப்ரபந்தம்-அதன் வியாக்யானங்கள்) முடிந்துவிட்டதென்றும் கூறக்கூடும். தெலுங்கைத் தாய்பாஷையாக உடையவர்களுக்கு, வடமொழிச்சொற்களும் எழுத்துக்களும் எளிதில் அறியக்கூடியன. இந்த ஊகம் சரியாயிருக்குமாயின், இவ்வாசிரியர் தன் தாய்நாடாகிய தெலுங்கு தேசத்திற்கு இந்நூலையும் எடுத்துச் சென்றிருக்கக்கூடும். அங்குள்ளவர்களுக்கு இது நன்கு புரியாமலும், இங்குள்ளவர்களுக்குக் கிடைக்காமலும் போய், இதுகாறும் வெளிவராமல் தங்கிவிட்டது. விஜயநகர ஸாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பலநூல்களுடன், அல்லது பிற்காலத்தில், இதுவும் தஞ்சை நூல்நிலையத்திற்கு வந்திருத்தல் கூடும். இதனாலேயே; பிற்காலத்தில் வைணவநூற்கள் யாவற்றையும் திறமையுடன் பிரசாரம் செய்வதையும், அவைகளுக்கு உரைகள் எழுதுவதையுமே குறிக்கோளாகக் கொண்டெழுந்தருளியிருந்த ஸ்ரீமணவாளமாமுனிகளுக்குங்கூட இந்நூல் கிடைக்காமல் போயிருத்தல் கூடும். தமிழ்நாட்டில் எந்த மூலையில் இருந்திருந்தாலும் அப்பெரியாரின் கண்ணில் அகப்படாமல் இருந்திருக்கமுடியாது.

நாலாயிரதிவ்யப்ரபந்த உரைநூல்கள் யாவற்றுக்கும் பல ஏட்டுப்பிரதிகள் பல இடங்களில் கிடைக்கின்றன. ஆனால் இந்நூல் அவ்வாறு வேறெங்கும் கிடைக்கவில்லை. தஞ்சை ஸரஸ்வதி மஹாலில் தற்பொழுது கிடைத்துள்ள ஒரே சுவடிதான் உளது. இதுவும் இவ்வாசிரியரால் தன் கையாலேயே எழுதப்பட்டதாகும். ஆகலின் இதைக்கொண்டே நாம் எதையும் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இந்நூல் இந்த நூல்நிலயத்துள் எப்பொழுது எவ்வாறு வந்தது,என்னும் விவரம் ஒன்றும் திட்டமாகத் தெரியவில்லை. ஆதலால் நாமாகவே ஊகித்து ஏதாவது முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. இந்நூலின் முதல் 15-ஏடுகள் எங்காவது கிடைத்தாலும்; தஞ்சைமன்னர்கள் நூல்களைச் சேகரம் செய்த குறிப்புக்களில் எங்காவது இதைப்பற்றின விவரம் கிடைத்தாலும் பேருதவியாயிருக்கும். இக்காலத்திலும் பற்பல கிராமங்களில் பலபெரியோர்கள் தங்கள் வீட்டிலேயே ஏராளமான ஓலைச்சுவடிகளைச் சேகரித்துக் காப்பாற்றி வருகின்

றனர். அதில் எங்காவது இதன் பிரதி இருந்தாலும் இருக்கக் கூடும். இதைக்கண்ணுறும் அன்பர்கள் தங்களுக்குத் தெரிந்த இடங்களில் விசாரித்துத் தெரிவித்தால் நலம்.

நூலின் சிறப்பு.

இது தோன்றிய விதம் எதுவாயினும், இதுவரை வெளி வராத காரணம் யாதாயினும், இன்று இது நமக்குக் கிடைத் துள்ளது நம் தமிழ் நாட்டின் பாக்யமேயாகும்.

இது போன்ற பல்லாயிரம் நூல்களைச் சேமித்து வைத்து நமக்களித்த தஞ்சை மன்னர்களுக்கு, நம் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுளது. தஞ்சை ஸரஸ்வதி மஹாலிலுள்ள தமிழ்ச் சுவடிகளை ஆராய்ந்து, வரிசைப்படுத்திக் காட்லாக் எழுதிய, காலஞ்சென்ற, சிறந்த தமிழ்ப்பேரறிஞர் திரு. L. உலகநாத பிள்ளையவர்கள், இந்நூலின் பெருமையைச் சுருக்கமாகவும் தெளி வாகவும் விளக்கியுள்ளார். அஃதொன்றே இதன் சிறப்பை நன்கு எடுத்துக்காட்டவல்லது. 'இணைவனு மெப்பொருட்கும்' என்கிறபடி, எம்பெருமானுடைய திவ்யஸ்வரூபம் போல் திரு வாய் மொழியின் முதல் பாசுரம், மற்றெல்லாப் பாட்டுக்களு டனும் இணைக்கப்பட்டு அவைகளுடன் பொருள் ஒன்றி நிற் பதை இந்நூல் விளக்குகிறது. *"வருந்தி நான் வாசகமாலை கொண்டு' என்ற ஆழ்வார் அருளிச்செயலுக்கேற்ப, திருவாய் மொழிச் செய்யுட்களை வசன நடையில் தொகுத்தாற்போல் அமைந்துள்ள இந்நூலுக்குத் "திருவாய்மொழி வாசகமாலை" எனப் பெயரிடப் பெற்றுளது.

இந்நூலைப் பயில விரும்புகிறவர்கள், இந்த 'உயர்வற' என் னும் பாட்டை நன்றாக மனப்பாடம் செய்து கொள்ளவேண்டும். இதன் பதவுரையும் நன்கு ஞாபகத்தில் இருக்கவேண்டும். அதன் மேல் இந்நூலைப் பயிலுவது நலம். "திருவாய்மொழி' 100 பதிகங்கள் கொண்ட ப்ரபந்தம். இந்நூலில் பெரும்பான்மை யாக, ஒவ்வொரு பதிகத்தினின்றும் ஏதேனுமொரு பாட்டை எடுத்துக்கொண்டு, அதை 'உயர்வற' என்னும் பாட்டுடன் கலந்து

* திருவாய் 3-8-10.

ஒரு புது மாதிரியாக உரை எழுதப்பெற்றுளது. ஆதலின் இதைப்படிப்பவர், தான் படிக்கத் தொடங்கும் பாசுரம் எந்தப் பதிகத்தில் அடங்கியுளதோ; அப்பதிகத்தின் *பொருளை முதலில் படித்துவிட்டு, அதன் பிறகு அந்த விவரணத்தைப் படித்தால் சுலபமாய் இருக்கும். ஆங்காங்கு, எளிதில் பொருள் விளங்காததாகக் கருதப்பட்ட பதங்களுக்கு, அடிக்குறிப்புக்களில் பொருள் விளக்கப்பெற்றுளது. அது சிறிது உதவியாக இருக்கும். அதில் பொருள் விளக்கப்பெறாததும்; ஓரிடத்தில் பொருள் விளக்கப்பெற்றமையின், மீண்டும் வருமிடத்து அடிக்குறிப்பில் சேர்க்கப்படாமல் விடப்பட்டிருப்பனவும் பல உண்டு. அவைகளை 'அருந்தொடர்ப்பொருளகராதி' என்னும் தலைப்பின் கீழ் சேர்த்துள்ளோம். இதில் சில ஏற்றத்தாழ்வுகள் இருப்பது இயல்பே. வாசகர்கள் அதைச்சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதிலும் தான் பார்க்க விரும்பும் சொல் வடமொழியைச் சார்ந்ததா? அல்லது- தமிழ்ச்சொல்லா? என்பதை வாசகர் சுயமாகவே முதலில் நிச்சயித்துக் கொள்ளவேண்டும். வடமொழிச் சொற்களும், தமிழ்ச்சொற்களும், தனித்தனியாகப் பிரித்துப் பொருளகராதியில சேர்க்கப்பட்டுள்ளன. வடமொழிச்சொற்கள், நூலினுள்ளே தமிழ் எழுத்தில் எழுதப்பட்டுள்ளமையின் பொருள்காதியில் வடமொழி எழுத்துக்களிலேயே (சரியான உச்சாரணம் தெரிவதற்காக) எழுதப்பெற்றுள்ளன. ஹிந்தி தாராளமாகப் பிரசாரம் செய்யப்படும் இக்காலத்தில் யாவரும் இதைப் படிப்பதற்குச் சிரமப்படவேண்டியிருக்காது. சில சொற்கள் வடமொழிப்பகுதியில் தொடங்கித் தமிழ்விகுதியுடன் முடிகின்றன, 'அதிகரித்தல் - 'ஆச்வஸிப்பித்தல்' இத்யாதி. அவைகளையும் உசிதம்போல் பொருளடக்கத்தில் சேர்த்துள்ளோம். மேலும், பல வைணவத் திருப்பதிகள் இந்நூலில் ஆங்காங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. அவைகளின் குறிப்பு ஒன்றும், 'பழமொழிகளின் விளக்கமும்' மற்றோரிடத்தில் சேர்க்கப்பட்டுளது. இவைகள் யாவும் திருவாய்மொழியிலும், அதன் உரைநூல்களிலும் பழக்கமில்லாதவர்களுக்காகவே சேர்க்கப்பட்டுள்ளன.

---

* "திருவாய்மொழி வாசகமாலைப் பொருளடக்கம்" என்னும் தலையங்கத்துடன், ஒவ்வொரு பதிகத்தின பொதுவான பொருள் விளக்கப்பட்டுள்ளது.

இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள், இந்நூலையும் திருவாய்மொழியின் மற்ற உரை நூல்களையும் ஒருவாறு கற்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந்நூலாசிரியர் 'உயர்வற' என்னும் முதற் பாட்டில் இருக்கும் சொற்களை, ஏதாவதொரு பாட்டின் சொற்களுடன் பொருத்தமாக இணைந்து இரண்டையும் ஒன்று சேர்த்துப் பொருள் கூறுவர். சில விடங்களில் - 'உயர்வற' பாட்டின் சொற்களுடைய பொருளை ஏனைய பாட்டுகள் வேறு முறையில் கூறும். அவ்விடங்களில் இவரும் அவ்வழியே செல்வார். இவ்வாறு இரண்டுசெய்யுட்களைச் சேர்த்துப் பொருள் கூறுமிடத்து, 'உயர்வற' பாட்டின் சொற்கள் சிலசமயங்களில் இருமுறை (ஆவ்ருத்தி) மீண்டும் மீண்டும் எடுக்கப் பட்டிருக்கும். சில இடங்களில் 'உயர்வற' பாட்டின் சொற்கள் மற்றொரு பாட்டின் முற்பகுதியாகவும் அமைக்கப் பெறுவதுண்டு.

"கங்குலும் பகலும் கண் துயிலறியாள்" (இந்நூல் - பக்கம் 184) என்பது திருவாய்மொழி, ஏழாம்பத்து, இரண்டாம் திருவாய்மொழி, முதற்பாட்டு. 'எம்பெருமானைப் பிரிந்த ஆழ்வார்நாயகி, இரவும் பகலும் உறக்கமின்றித் தவிக்கிறாள், என்பது இதன் பொருள். நம் நூலாசிரியர் 'உயர்வற உயர்நலமுடையவன் கங்குலும் பகலும் கண்துயிலறியாள்' என்று சேர்க்கிறார். 'உயர்வற' என்பது உயர்த்தியற்ற லீலா விபூதியை (ஈரேழு உலகங்களை)ச் சொல்லுகிறது. 'உயர்நலமுடையவன்' என்பது அவ்வெம்பெருமானுடைய இருப்பிடமான நித்ய விபூதியை (ஸ்ரீ வைகுண்டத்தை)ச் சொல்லுகிறது. 'கங்குல்' (இரவு) 'பகல்' என்னும் சொற்களும் இதையே குறிக்கின்றன. இரவு இருள் சூழ்ந்திருக்குமல்லவா? இந்த லீலா விபூதியும் இருள் தரு மாஞாலமல்லவா? இதில் 'உயர்வு' (மேன்மை) என்பது உண்மையில் இல்லையல்லவா? கர்மங்களின் தாரதம்யத்தாலே, ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததாகப் போய்க் கொண்டே இருப்பதனால், உயர்த்தியின் எல்லைநிலம் எம்பெருமானேயாகலின், அவன் நித்ய வாஸம் பண்ணுகிற நித்ய விபூதியே உயர்வுடைத்து. நித்ய விபூதியிலுள்ளார் மழுங்காத ஜ்ஞான முடையவர்களாகலின

அங்கு 'இருள்' (அஜ்ஞானம்) சிறிதும் கிடையாது. அதனால் "நித்ய விபூதியில்" என்னும் பொருளில் 'பகலும்' என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த நித்ய விபூதியையே 'உயர்நலமுடையவன்' என்னும் சொல் குறிப்பிடுகின்றது.

'தலைமகள், தலைமகனைப்பிரிந்து ஆற்றாமையால் இரவும் பகலும் உறக்கமின்றிக்கே இருக்கிறாள்' என்னும் கருத்து அன்யாபதேசத்தில் உளது. எம்பெருமானிடம், பக்தி பண்ணுகிறவன், இந்த லீலா விபூதியிலுள்ளவரை எம்பெருமானைப் பெறாமையால் வந்த ஏக்கத்தினால் உறங்குவதில்லை. அவனருளைப் பெற்று நித்ய விபூதியில் சேர்ந்த பிறகும் இவனுக்கு உறக்கமில்லை. 'தத் விஷ்ணோ: பரமம்பதம் ஸதா பச்யந்தி ஸூரய:' என்பதன்றோ? பரமபதத்தில் இருக்கும் நிலை. இவ்வர்த்தம் ஸ்வாபதேசத்திலுள்ளது. இப்பாட்டில் மறைபொருளாகக் கிடக்கும் ஸ்வாபதேசார்த்தத்தைக் காண்பதற்கு, இதை முதற்பாட்டின் சொற்களோடு இணைத்துப் பொருள் கூறுவதனால் எளிதான வழி கண்டு பிடிக்கப்பட்டதாகிறது.

'ஆழியெழ' என்னும் பாட்டில், (192-ம் பக்கம்) 'உயர்வற உயர்நலமுடையவன்' என்று தொடங்கி, இச்சொல்லால் வாமனனாயவதரித்த பகவானைக் குறிப்பிட்டு, அக்கதையைச் சிறிது பேசி, அதன்மேல் 'ஆழியெழ' என்பதைக் கொண்டு சேர்க்கிறார். இவ்வாறு 100 விவரணங்களிலும் வெகு அற்புதமாகச் சொற்களைப் பொருத்தமாக ஒன்றோடொன்று சேரும்படி பண்ணிப் பொருள் விளக்குகிறார்.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. திருவாய்மொழியில், ஒவ்வொரு பாட்டுக்கும், பதிகத்திற்கும், 'பத்து'க்களுக்கும், இன்ன பொருள் அமைந்துளது என்பதை, ஸ்ரீமந்நாதமுனிகள் தொடக்கமாகப் பெரியோர்கள் திட்டமாக அறுதியிட்டு, உபதேசமூலமாய், வெகு சிரத்தையுடன், இன்றளவும் காப்பாற்றி வருகின்றனர். இதில் முன்புள்ள ஆசார்யர்கள் சொன்ன கருத்துக்களுடன் அணுவளவும் முரண்படாமல் இருந்தால் மட்டும், பின்பு எழுதப்படும் உரைகள் தலைதூக்க முடியும். திருவாய்மொழி, நம்மாழ்வாரால் நாதமுனி

களுக்கு நேரில் உபதேசிக்கப்பட்டு, அவ்வுபதேசம் இன்றளவும் தொடர்ந்து வருவதே இதன் காரணம். அதற்குச் சிறிதேனும் மாறுபடுமாகில் பிந்தியதை யாரும் ஏற்கமாட்டார்கள். இது திருவாய்மொழியை ஓதுவதையே சிறந்த தொண்டாகக் கருதி, அதுவே மோக்ஷோபாயமென்று அதைக் காப்பாற்றிவரும் திருமாலடியார்களின் திடமான கொள்கையாகும். இவ்வளவு கடினமான நிர்ப்பந்தத்தின் எல்லையுள் பிரவேசித்து, முதற்பாட்டு ஒன்றையே முக்கியமாக்கி, 'மற்றவைகளின் ஸாராம்சம் இதிலேயே அடங்கியுள்ளது' என்பதைத் துணிவுடன் எடுத்துக்காட்ட முற்படுவது எளிதன்று.

இதுவரை வெளியிடப் பெற்றுள்ள திருவாய்மொழி உரை நூல்களைக் கவனித்தால், இவ்வுண்மை நன்கு புலனாகும். பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்த இருபத்திநாலாயிரப்படியில் உள்ள சொற்றொடர்கள், பெரும்பாலும் அப்படியே ஈடு முப்பத்தாறாயிரப்படியில் காணப்படுகின்றன. அதைக் காட்டிலும் அதிகமான பற்பல அரிய கருத்துக்கள் ஈட்டில் விவக்கப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆயினும் இவ்விரு உரைகளும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. இவ்விரு உரையாசிரியர்களும் ஒரே ஆசார்யரிடம் காலக்ஷேபம் கேட்டவர்களாயிருத்தல் இதற்கு ஒரு விதத்தில் காரணமாயிருக்கக் கூடும். ஆயினும், முன்புண்டான உரைகளுடன் சிறிதும் கருத்து வேற்றுமையின்றிக்கே பின்புண்டான உரைகள் அமைவது கண்கூடு. அதுபோலவே இந்நூலும் ஸ்ரீ வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய சொற்பொழிவினின்றும் உருவாக்கப்பட்டிருக்க வேண்டுமாதலால், பெரும்பாலும் ஈட்டில் உள்ள சொற்றொடர்களே இதிலும் காணப்படுகின்றன. ஆயினும் இந்நூலின் குறிக்கோள் கைவிடப்படாமல் நன்கு காப்பாற்றப்பட்டு வந்துளது, ஆசிரியரின் திறமையை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாசிரியர் கையாளும் முறை எவ்வளவு தூரம் பொருத்தமானதும், பாராட்டக் கூடியதுமாக வமைந்துள்ளது? என்பதைத் திருவாய்மொழி உரை நூல்களில் சிறந்த அனுபவம் பெற்றுள்ள நம் தமிழ்நாட்டுப் பெரியோர்களே தீர்மானிக்க வேண்டியவராவர். அடியேனுடைய சிற்றறிவுக் கெட்டியவரை இந்நூல் வெற்றிபெற்றுள்ளதென்பதே முடிவாகும்.

இவ்வாறு முதல் பாட்டிலேயே மற்ற பாட்டுக்களின் கருத்துக்கள் பதிந்துள்ளன என்பதால், அவ்வோ பாட்டுக்களுக்குத் தனியாக உரைகளில் விளக்கப்பட்டுள்ள அரிய கருத்துக்கள் சிறிதுகூடப் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகக் கொள்ளக்கூடாது. அவைகளுடன் இக்கருத்தையும் கூட்டிக்கொள்ள வேண்டும். இதுவே இந்நூலாசிரியரின் அடிப்படையான கொள்கையாகும். அதனாலேயே முதற்பாசுரத்தின் பெருமை மிக்க உயர்ந்து விளங்குகிறது. இங்ஙனன்றிக்கே, "திருவாய்மொழியில் முதற்பாசுரம் ஒன்றே தனிக் கருத்துள்ளது. மற்ற பாட்டுக்கள் அவ்வாறு இல்லை. அம்முதற்பாட்டிற்குள் அடங்கிய (ஒரு) கருத்தையே மற்றவை விரித்துரைக்கின்றன" என்பதை இந்நூலின் முக்கிய கருத்தாகக் கொள்ளக்கூடாது. அவ்வாறு கொள்வது திருவாய்மொழியின் பெருமையையும், இந்நூலின் பெருமையையும் ஒருங்கே குறைத்துக் கூறுவதாகும். இவ்வுலகில் காணப்படுவனவும், கேட்டுத் தெரிந்துகொண்டுள்ளவையுமான எல்லாப் பொருள்களும் இறைவனது தோற்றமாகவே இருப்பினும், அவை ஒன்றுக்கொன்று மாறுபட்ட இயல்புடையனவாகவும் இருப்பதைக் காணுகின்றோம். இதையே இப்பாட்டின் விஷயத்திலும் பொருத்தமான பதிலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதையே முன்பும் நாம் எடுத்துக் காட்டியுள்ளோம்.

நூலாசிரியர்

இந்நூலாசிரியர் ஒரு பெண்பால் என்று முன்னமே கூறியுள்ளோம். இவர், தன் ஊர்-தேசம்-முதலியவற்றையும், தன் தாய் தகப்பன் முதலிய விவரங்களையும், தன் குலத்தையும் இதுபோன்ற எந்த விவரத்தையும் நூலில் எங்கும் குறிப்பிடவில்லை. பழங்காலத்து ஓலைச்சுவடிகள் சிலவற்றில் வெளியிலேயே (மேற்புறத்திலுள்ள ஏட்டிலேயே) நூலின் பெயர், எழுதியவர் அல்லது சொந்தக்காரரின் பெயர், இவை எழுதப்பட்டிருப்பது வழக்கம். அவ்வாறும் இதில் ஒன்றும் இல்லை. நூலின் முடிவில் உள்ள குறிப்பும், ஆசார்யர்களின் வரிசைகளுமே இவரைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள விவரமாகும். 'ஏகாந்தீ வ்யபதேஷ்டவ்யோ நைவ க்ராமகுலாதிபி:' என்கிறபடி

யும், 'பண்டைக் குலத்தைத் தவிர்ந்து' என்கிறபடியும், தன் பிறப்பின் காரணமாய் வந்த குலம் முதலியவற்றை மறந்து, இயற்கையான 'தொண்டக் குலத்தையே வழக்கில் கொண்டு வந்திருப்பவர் இவர்' என்பது இதனால் புலனாகின்றது.

இந்நூல் இவருடைய சொந்தக் கைபெழுத்தேயாகும். பிறரைக்கொண்டு எழுதுவிக்கப்பட்டதல்ல. அடியிலிருந்து முடிவு வரை ஒரே கையால் எழுதப்பட்டதுமாகும். இவர் தமிழில் விசேஷமான அறிவு படைத்தவராக இருந்தாலும் எழுத்துக்களைச் சுத்தமாக எழுதும் திறமை நிரம்பப் பெற்றவரல்ல. இரண்டு மொழிகளிலும் உள்ள பல்வேறு இலக்கிய இலக்கணங்களையும் சாஸ்திரங்களையும் கசடறக் கற்ற பேரறிவாளர்களான ஆசார்யர்களிடம் இவர் மாணவியாய் இருந்தவர். அதனால்; இவரது நூலில் உள்ள மேற்கோள்கள், ஸம்ஸ்க்ருத தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்தும், தங்குதடையின்றி, மிகப் பொருத்தமாய் எடுக்கப்பட்டுள்ளன. இதை 'மேற்கோள்களின் அகராதி' என்னும் தலைப்புடன் மற்றோரிடத்தில் சேர்த்துள்ளோம். அவ்வளவையும் சிறிதும் தவறின்றி மனதில் பதியவைத்துக் கொண்டு, பிறருடைய உதவியை எதிர்பாராமல், ஓலையில் எழுதி வைத்திருப்பது இவ்வாசிரியரின் புத்தி கூர்மையையும், தாரணசக்தியையும், பரந்த நோக்கத்தையும் காட்டுகின்றது.

ஏதாவது அபூர்வமான ஒரு விஷயத்தைக் கண்டால், உடனே தானும் அதைச் செய்துபார்த்துவிடவேண்டும் என்னும் ஆர்வம் நம் நாட்டுப் பெண்மணிகளுக்கு உண்டு. கலியாண காலங்கள்-பண்டிகைகள்-திருவிழாக்கள் இவைகளில், வீதியிலும் வீட்டுக்குள்ளும், அலங்காரத்திற்காக அரிசி மாவினால் கோலங்கள் போடும்போது, மற்றப் பெண்கள் அதைக் கூர்ந்து, கவனிப்பதும், அது அபூர்வமாகவும், கவர்ச்சிகரமாகவும் இருந்தால் மறுதினமே அதைத் தன் வீட்டில் போட்டுத் திருப்தியடைவதும்; ஒருவர் அபூர்வமாக ஒரு பாட்டுப் பாடினால், அதைக் கவனமாகக் கேட்டு உடனே தன் வீட்டில் எழுதி வைத்துக்கொள்வதும் அவர்களது இயல்பாகும். திருவிழாக் காலங்களில், வீதியில் யானை குதிரை, தேர், இதுபோன்ற இறைவனுடைய பல்வேறு வாகனங்

களையும், அவ்வோ தினங்களில் சிறியனவாகவும் பெரியனவாகவும் அற்புதமாய்க் கோலம் போடுவதை நாளைக்கும் காணலாம். இம் மாதிரி பல கைவேலைகள், இதற்கான நூல்கள் ஏதுமின்றி தொன்றுதொட்டு நம்நாட்டுப் பெண்மக்களால் காப்பாற்றப் பட்டு வருகின்றன. இம்மாதிரியான முயற்சியின் பயனே இந் நூலும் என்பது அடியேனுடைய துணிபு. இந்நூலில், ஆசிரிய ரால், எழுத்தாணியால் எழுதப்பெற்றுள்ள ஸ்ரீ ஆராவமுதன் படம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். படம் மிகச் சிறந்த தாக இல்லாவிட்டாலும், ஓலையில் எழுத்தாணியால் கீறி அதை உருவாக்கியிருப்பது வியக்கத்தக்கதேயாகும். இவ்வாறு அரிய தோர் நூலைப் பின்புள்ளாருக்கு எழுதிக்கொடுத்துதவிய இவர், தன்னைப்பற்றி ஒரு சிறிதும் ஆடம்பரமாகக் குறிப்பிடாமல் விட்டிருப்பது, இவருடைய தன்னடக்கத்தையும், கல்விச் செருக் கற்ற உயர்ந்த பண்பையும் நிரூபிக்கின்றன. இவர் போன்ற பல்லாயிரக் கணக்கான மாணவ-மாணவிகளை, அவரவர்களுடைய கடமைகளுக்கு விரோதமில்லாதவாறு ஒழிந்த வேளைகளில் ஒன்றுகூட்டிக் காலக்ஷேபமென்னும் அமுதமாரி பொழிந்து, நம்நாட்டுக் கலைச்செல்வங்களைச் சிறந்த முறையில் காப்பாற்றி நம்மிடம் ஒப்புவித்துச் சென்றுள்ள தன்னலமற்றத் தியாகிக ளான நம் பூர்வாசார்யர்கட்கும், அதை நமக்கு எழுதித்தந்த இந்நூலாசிரியர் போன்றவர்களுக்கும் நம் தமிழ்நாட்டினர் பெரி தும் கடமைப்பட்டுள்ளனர்.

இவர் இருந்த காலம், இவருடைய ஆசிரியராகிய ஸ்ரீ வடக் குத்திருவீதிப்பிள்ளையின் ஸமகாலமென்றே கொள்ளவேண்டும். வேறு விவரம் ஒன்றும் நமக்கு இவ்விஷயத்தில் கிடைக்கவில்லை. நூல் முடிவில் இவ்வாசிரியர் குறிப்பிடும் ஆசார்யர்களின் வரிசை யில், எம்பெருமானருக் (ஸ்ரீபாஷ்யகாரருக்) கடுத்தபடியாக மூன்று பெயர்கள் உள்ளன. (1) சந்திரகிரி அய்யன். (2) ஸ்ரீமந் நாராயணனய்யர். (3) திருக்கோட்டியூர் ஜீயர் என்று. இவர் களைப்பற்றின விபரம் பல பெரியோர்களிடமும் விசாரிக்கப்பட் டது. எங்கும் திட்டமான தகவல் கிடைக்கவில்லை. இதற்கப் புறமே 'வடக்குத் திருவீதிப்பிள்ளையின் திருவடிகளே சரணம்' என்பது உளதாகலின், அன்னார் எழுந்தருளியிருந்த காலம்

பிரஸித்தமாய் இருப்பதை முன்னிட்டு, இம்மூவருடைய காலம் முதலியவற்றைப்பற்றி அடியேன் மேலும் சிரத்தை கொள்ள வில்லை. திருவாய்மொழியை முறைப்படி ஆசார்யனிடம் கேட்டு, அதன் உரைகளைக் குழாங்களாகக் கூடிக் கேட்டு இன்புறுவதும், பிற்காலத்தில், பிறருக்கு இதை விரித்துரைத்து அவர்களை உய் விப்பதுமே ஆயுள்கால முழுதும் சிறந்த யாத்திரையாகக் கொண் டவர்கள் நம்பூருவர்கள். அதில் இந்நூலாசிரியர் பல பெரியோர் களிடம் காலக்ஷேபம் கேட்டிருக்கக்கூடும். 'குரும் ப்ரகாசயேத் தீமாந்' என்கிறபடி அவர்களுடைய திருநாமங்களையும் இதில் சேர்த்திருக்கக்கூடும்.

இந்நூலின் முடிவில் "ஆங்கிரஸ வருஷம் மார்கழி மாதம் 26-ந் தேதி" என்று இந்நூலை எழுதிய நாள் குறிப்பிடப்பட் டுள்ளது. இதில், 'கலியுகாதி' அல்லது 'சக' வருஷங்களின் எண் கொடுக்கப்படவில்லை. அதனால், இது, ஸ்ரீவடக்குத் திருவீதிப் பிள்ளைகளின் திருவவதார காலமாகிய 'ஸர்வஜித்' வருஷத்திற்கப் புறம் வந்த 'ஆங்கிரஸ வருஷமாக இருக்கக்கூடும், என்று ஊகிக் கப்படுகிறது.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுடைய 'ந்யாஸவிம்சதி'யின் கடைச் சுலோகத்தின் கடைசிப் பகுதி "நிர்ப்பரோ நிர்ப்ப யோஸ்மி" என்று இந்நூலில் உதாஹரிக்கப்படுகிறது. அதனால் இந்நூலாசிரியருடைய காலம், ஸ்ரீ தேசிகனுடைய ஸமகாலம் அல்லது பிற்காலமென்று கொள்ள வேண்டியதாகின்றது. ஸ்ரீ மணவாளமாமுனிகளின் திருநாமம் இந்நூலில் எங்கும் எழுதப்பெறாததனால், அவருக்கு முற்பட்டவர் என்பது தெளிவு. அதனால் * A. D. 1370க்கு முன்பு, † A. D. 1270-க்குப் பின்பு இந்நூலாசிரியர் வாழ்ந்தவர் என்பது உறுதியாகின்றது.

ஆனால் இவ்வாறு கொள்வதில் ஒரு பாதகமும் உளது. ஸரஸ்வதி மஹாலில் இருக்கும் இந்நூலின் ஓலைப்பிரதியை சுமார் 700 வருஷங்கள் பழகியதாகச் சொல்ல முடியாது. அது 200-300வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்டிருக்கக்கூடும். அவ்வாறா யின், இது ஆசிரியராலேயே தன் கையால் எழுதப்பட்டதென்கிற

* ஸ்ரீ மணவாள மாமுனிகள். † ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன்.

கொள்கையைக் கைவிடவேண்டும். இப்பொழுது இந்நூலில் காணப்படும் சிற்சில தமிழ் எழுத்துப் பிழைகளின் பொறுப்பை இந்நூலாசிரியரின் பேரில் சுமத்துவது பொருந்தாது. இரண்டாவது முறை எழுதியவரே அவைகளுக்குப் பொறுப்பாளியாவார். அல்லது, ஆசிரியரால் முதலில் எழுதப் பட்ட எட்டுப் பிரதியைச் சிறிதும் மாறுபாடின்றி மறுமுறை எழுதியவர் காபி செய்திருத்தலும் கூடும். எவ்வாறாயினும், இவ் வாசிரியர் பெண்பால் என்பதும், இவருடைய அறிவு, கேள்வி யினாலேயே வளர்ந்து வந்ததென்பதும் திண்ணமாகக் காணக் கிடக்கிறது. அக்காலத்தில் 'காலக்ஷேபம்' சொல்லி வந்த நம் பூருவாசாரியர்கள், 'முதியோர் கல்வியை' எவ்வளவு திறமையுடன் வளர்த்து வந்துள்ளார்கள்' என்பதற்கு இந்நூலும், இந்நூலா சிரியரும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திருவாய்மொழியும் தற்கால அரசியலும்

திருவாய்மொழியில் உபதேசிக்கப்படும் முக்கியமான கொள்கைகள்:—

(1) காண்பனவும் கேட்பனவுமாகிய எல்லாப் பொருள் களும் இறைவனுடைய சொத்தாகும். அவனொருவனே இவை யாவற்றுக்கும் உடையவன்.

(2) எல்லாம் அவனால் தரிக்கப்பட்டும், தன்னிஷ்டம் போல் இயக்கப்பட்டும், அவனைவிட்டுத் தனித்து இருக்கமுடியா தனவாகவும், இருத்தலின் அவனுடைய உடம்பாகும். அவனே எல்லாவற்றுக்கும் உயிர். அவனுக்கு அன்புடன் அடிமை செய்துக் கிடப்பதே நமக்குரிய பேரின்பமாகும்.

(3) ஆனந்த மயமான இறைவன் அன்பிற்கே கட்டுப்படு வான். வேறு வழியில் அவனைப் பிடிக்க முடியாது.

(4) இதற்கு முக்கிய விரோதியானது 'அஹங்காரமும்' மமகாரமும். ('நான்' 'என்னுடையது' என்னும் எண்ணம்) இதை வேரறக் களைந்தெறிய வேண்டும்.

(5) தன் குழந்தைகளைக் கொண்டாடுகிற ஒருவனிடம் அவைகளின் தகப்பன் அன்புகொள்வான். அதுபோல், அவனடி

யார்களிடம் அன்பு பூண்டொழுகுவதே அவனருளைப் பெறுவதற் கான குறுக்கு வழியும், பேரின்பத்தின் எல்லை நிலமுமாகும்.

(6) தன்னையும், தன்னுடையவைகளையும் பற்றின பொறுப்புக்கள் யாவற்றையும் துணிவுடன் அவனிடம் ஒப்ப டைத்து, தன் கடமைகள் எல்லாவற்றையும், அவனுக்கும் அவனடியார்களுக்கும் செய்யப்படும் பணியாகவே கருத்தில் கொண்டு தவறாமல் செய்து வரவேண்டும்.

(7) உயிர் வகைகளில், இயற்கையாய் எவ்விதமான வேற்று மையும் கிடையாது. எல்லாப் பொருள்களிலும் இறைவனுடைய உருவம் படிந்திருப்பதைக் கண்டு, அவைகளிடம் களங்கமற்ற அன்பு பூண்டொழுகுவதே சாந்தமும் ஸந்தோஷமும் தழைத் தோங்குவதற்கான சிறந்த வழி.

(8) இவ்வாறு நடந்துகொள்பவர்கள் அவனது இன்னரு ளைப்பெற்று, இம்மையிலும் நன்மக்களைப் பெற்று, செல்வமும் சிறப்புமாக வாழ்ந்து மறுமையிலும் பேரின்பமெய்துவர். இதுபோன்ற பல அரிய கொள்கைகள் முக்கியமாக இதில் விளக்கப்படுகின்றன. இதுவே ஸகல புராணங்களினுடையவும் வேதங்கள் உபநிஷத்துக்களுடையவும் ஆழ்ந்த கருத்தாகும்.

இவைகளுடன் தற்கால அரசியல் கோள்கைகளின் ஒற்றுமை.

“நாவிஷ்ணுঃ ப்ருதிவீபதிঃ” என்பது முதுமொழி. அரச னும் அரசாங்கமும் விஷ்ணுவின் வடிவமேயாகும். ஆதலால் அரசாங்கத்துப்பிரஜைகள் தங்களை “வைணவர்களாகவே” நினைக்க வேண்டும். தற்கால ஜனநாயக அரசியலில் ஒவ்வொருவரும் இந்நாட்டு மன்னராவர். ஆகலின் எந்தக் காரியத்தையும் (தன் சொந்தத்திற்காகவேயன்றி) நாட்டின் பொதுநலனையே கருத்தில் கொண்டு செய்யவோ-செய்யாமலிருக்கவோ-வேண்டும். தனக் காக வாழ்வதைவிட நாட்டிற்காக வாழ்வதே சாலச் சிறந்தது. ‘தனக்கு’ அல்லது ‘தன்னுடையவனுக்கு’ என்று தனிப்பட்ட முறை யில் ஒரு மேன்மையைத் தேடுவது மிகவும் இழிவானது. இது போன்ற பரந்த நோக்கங்களையே மனதில் கொண்டு, “நாடெங் கும் வாழக் கேடெங்கும் இல்லை” என்று நாட்டின் நலனுக் காகவே வாழ்ந்து, அத்தொண்டு புரிவதற்கே தன்னை அர்ப்பணம்

செய்தவர்கள் சிறந்த தியாகிகள். அவர்கள் தெய்வீகமானவர்கள். சுயநலமியாயிருப்பதும், உயிர்வகைகளுள் ஏற்றத் தாழ்வு பாராட்டுவதுமே கொடிய பாவமாகும்.

இதுபோன்ற கொள்கைகள் திருவாய்மொழியின் கொள்கைகளுடன் பெரிதும் ஒற்றுமையுள்ளன. இவை, இனிய செந்தமிழ் நடையில் திருவாய்மொழியிலும் அதன் உரைநூல்களிலும் பரக்கப் பேசப்பட்டுள்ளன. அவற்றையே நம் அரசியல் தலைவர்கள் நடத்திக் காட்டுகின்றனர். "உலகெல்லாம் எனக்கே சொந்தமானது. நானே பெரியவன்" என்று *அஹங்கார-மமகாரங்கள் மிகுந்திருந்ததனாலேயே, அன்று இரணியனும், மஹாபலியும் இறைவனது கோபத்துக்காளாயினர். தன் தவறுகளுக்காகப் பச்சாத்தாபப்பட்டுத் திருந்தி நல்வழிப்படுவதற்குப் பலதரம் பரிபூர்ணமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டும் திருந்தாமையினால்) வேறு வழியின்றி இஷ்டமில்லாமலே இராவணன் கொல்லப்பட்டான். "கண்ணுங் கண்ணீருமாயிலே நின்று கொன்றது" (இந்நூல் 260-ம் பக்கம்) என்னும் திருவாய்மொழி உரையைக் காண்மின்! திருவாய்மொழியும் அதன் உரைநூல்களும் சிலருக்கு மட்டுமே சொந்தமானதென்றும் மற்றவர்களுக்கு அதில் ஒன்றும் சம்பந்தம் இல்லையென்றும் யாரும் எண்ணக்கூடாது. அவை நம் தமிழநாட்டின் பொதுச் சொத்தாகும். தேனினுமினிய தமிழ்மொழியில், நம் தமிழ்நாட்டுப் பெரியாரால், நாட்டின் க்ஷேமத்திற்காகவே அருளப்பட்டு, தன்னலமற்ற அடியார்கள் குழாங்களால், சிரத்தையுடன் பரிபாலிக்கப்பட்டு வரும் இவ்வரிய செல்வத்தை நம் நாட்டுமக்கள் அனைவரும் எவ்விதமான வேற்றுமைகளுமின்றிக்கே பகிர்ந்துகொண்டு இன்புற வேண்டிய அவசியமும் ஒவ்வொருவரின் உரிமையுமாகும். இவ்வழியில் நம் நாட்டு மக்களைத் திரும்புமாறு செய்வதற்கு இவ்வெளியீடு பெரிதும் பயன்படுமென்று நம்புகிறேன்.

இதுபோன்ற நூல்களைப் பதிப்பிப்பதற்குத் தகுதியுள்ள பெரியோர்கள் பலர் இருக்க, அடியேனுக்கு இந்த பாக்கியம் வாய்த்தது முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்ததற்கொப்பாகும். அடியேனுடைய குல முதல்வராகிய, ஸ்ரீ குமாரதாதாச்

---

* அகப்பற்றும்-புறப்பற்றும்.

சாரியர் என்னும் பெரியார், தஞ்சை நாயக்கமன்னர்களுக்குக் குலகுருவாக இருந்தவர். அம்மன்னர்கள், சிறந்த அறிவு படைத்தவர்களாகவும், கற்றறிந்த புலவர்கள்பால் பேராதரவு உள்ளவர்களாகவும் இருந்ததற்கு அவரே முழுப் பொறுப்பாளியாவார். 'ஸரஸ்வதீ பண்டாரம்' என்னும் பெயருடன், இந்த ஸரஸ்வதி மகாலை, அந்நாட்களில் தோற்றுவித்த பெருந்தகையார் அவரே. அன்னாரின் வழித்தோன்றலாகிய அடியேனுக்கு இதுபோன்ற திருப்பணியில் அளவற்ற ஆர்வம் இருப்பது இயல்பே. ஆகலின் இதை எனது கடமையாகக் கருதி, என் சிற்றறிவுக்கெட்டியவரை ஜாக்ரதையுடன் பதிப்பித்துள்ளேன்.

ஓலைச் சுவடியிலிருந்து, சரியாகச் சொற்களை எடுத்தெழுதுவது மிகவும் சிரம சாத்தியமாயிருந்தது. இந்நூலை எழுதியவர் பல இடங்களில், வார்த்தைகளை வாயினால் சொல்லுகிற மாதிரியே எழுத்திலும் எழுதியுள்ளார். அதிலும் எதிர்பார்க்கக் கூடாத எழுத்துப் பிழைகள் அதிகம். ஸ்ரீ ஆராவமுதன் (சேஷசாயி) பட விளக்கத்தில், ஓலைச் சுவடியிலுள்ளது உள்ளபடியே, இந்நூலின் சிறு பகுதி அச்சிடப்பெற்றுள்ளது. அதையும், இந்நூலில் 124-ம் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் அதன் திருத்தமான வாசகத்தையும் அன்பர்கள் கவனிக்க வேண்டும். அதிலிருந்து இந்நூலை உருவாக்குவதில் அடியேனுக்கு நேர்ந்திருக்கக் கூடிய சங்கடங்களை ஒருவாறு ஊகித்தறியக்கூடும். மிகுந்த ஜாக்ரதையுடனேயே இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும், மேற்கூறிய காரணங்களால், சிற்சில இடங்களில் பிழைகள் இடம் பெற்றுவிட்டன. அவைகளுக்காகவும், அடியேனுடைய அறிவீனத்தால் நிகழ்ந்துள்ள மற்ற குறைபாடுகளுக்காகவும், கற்றறிந்த பெரியோர்கள் அடியேனை மன்னித்தருள வேண்டும். இப்பதிப்பில், பொருத்தமாக ஏதேனும் அமைந்திருப்பின், அதற்கான முழுப்பொறுப்பும், பொருளல்லாத வென்னைப் பொருளாக்கித் திருத்திப் பணி கொண்டருளிய என் சற்குருநாதருடையதேயாகும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்புனிதமான திருப்பணியில் என்னை ஈடுபடுத்திய, ஸரஸ்வதி மஹால் கௌரவ காரியதரிசி, ஸ்ரீ S. கோபாலன் அவர்களுக்கு, எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகும். ஸரஸ்வதி மஹால் தமிழ்ப்பண்டிதர், திருவாளர் S. முத்துரத்தின முதலியார், எனக்குப் பலவிதத்திலும் உறுதுணையாயிருந்து, இதைப் பூர்த்தி செய்து வைக்க உதவியுள்ளார். அன்னாருக்கும், இதைத் தன் சொந்தக் காரியமாகவே பாவித்துத் திறம்பட அச்சிட்டுப் பூர்த்தி செய்துவைத்த தேவகோட்டை ராஜாஜீ அச்சகத்தாருக்கும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்தியுஞ் சந்திப்பதமு மவைதம்மிலே தழைக்கும்
பந்தியும் பல்லலங்காரப் பொருளும் பயிலுகிற்பீர்!
வந்தியும் வந்திப்பவரை வணங்கும் வகையறிவீர்!
சிந்தியும் தென்குருகூர் தொழுதாட் செய்புந்தேவரையே.

நாத முனிக்கன்று நாலா யிரமுணர்த்தி
போதம் அருள்குருகூர் வித்தகனுர்—கோதில்
திருவாய் மொழிவா சகமாலைத் தேனைத்
தாவே எனக்கருள்செய் தார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸரஸ்வதி மஹால் நூல் நிலயம், தஞ்சை
19—8—52
நாவல்பாக்கம் ஸ்ரீ தேவநாதாச்சாரியர்.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலை பொருளடக்கம்.

மயர்வற மதிநலமருளப்பெற்ற நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய் மொழி 1102 பாட்டுக்களுள்ளது. இப்பிரபந்தம் 10 பெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகள் ஒவ்வொன்றும் 'பத்து' என்று வழங்கப்படுகின்றன. இந்தப் 'பத்துக்கள்' ஒவ்வொன்றும், தன்னூடே 10-பதிகங்களைக்கொண்டுள்ளன. அப்பதிகங்கள் முழுப்பிரபந்தத்தின் பெயராகிய 'திருவாய்மொழி' என்னும் சொல்லாலேயே வழங்கப்பெற்று வருகின்றன; இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் 11-செய்யுட்களைக் கொண்டனவாகும். இரண்டாம் பத்து- ஏழாம் திருவாய்மொழி (கேசவன் தமர்) மட்டும் (எம்பெருமானுடைய பன்னிருதிருநாமங்களின் பெருமையைப் பேசுவதால்) 13 செய்யுட்களுள்ளது. இம் முழுப் பிரபந்தத்திற்கும், ஒவ்வொரு பத்துக்களுக்கும், திருவாய்மொழிகளுக்கும், செய்யுட்களுக்கும், ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களால் பொருள்கள் அறுதியிடப்பெற்றுள்ளன. இந்நூலில் ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த 1103 பாடல்களுள் முதல் பாட்டாகிய 'உயர்வற உயர்நலம்' என்பதின் பொருளையே மற்ற பாட்டுக்கள் யாவும் விவரிக்கின்றன என்பது நூறு விவரணங்களால் (விரிவுரைகளால்) நிரூபிக்கப்படுகிறது. இவர் கையாண்டிருக்கும் முறையில் 11-பாட்டுக்கள் கொண்ட ஒவ்வொரு திருவாய்மொழியையும் எடுத்துக் கொண்டு, அதில், ஒன்று அல்லது இரண்டு பாட்டுக்கள் ஷை முதல்பாசுரத்துடன் பொருந்துமாறு உரை எழுதப் பட்டுளது. இந்நூலாசிரியர் விவரித்துள்ள 100 பகுதிகளின் சாராம்சமும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் உதவியினால் இந்நூலின் விரிவுரை எளிதில் புலப்படும் என்று நம்புகிறோம்.

செய்யுட்களின் முதற் குறிப்பு (முதல் பத்து)	பொருள்	பக்கம்
உயர்வற... (1-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	ஸர்வேச்வரன், தான் இயற்கையிலேயே எல்லா நற்குணங்களும் அமையப் பெற்றிருப்பதையும், தன் திவ்யாத்ம ஸ்வரூபத்தின் மேன்மையையும், நித்யஸூரிகளுக்குங் கூட அவ்வருகாயிருக்கிற இருப்பையும், தன் அற்புதமான திருமேனியையும், ஒருகாரணமுமின்றியே, தானாகவே ஆழ்வாருக்குக் காட்டி உபகரித்தான். இப்படி உபகாரகனானவன் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம் பண்ணிக் கடைத்தேறுமாறு தன் திருவுள்ளத்தோடே கூட்டுகிறார்.	
விடுமின்... (1-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	இப்படி எம்பெருமானுடைய உண்மை நிலையைப்பேசி, அற்பமானதும் நிலையற்றதுமான புறம்பான சுகங்களினின்றும் மனதைத்திருப்பி, பக்திபண்ணி எம்பெருமானை அடையும்படி பிறர்க்கு உபதேசிக்கிறார்.	
பத்துடை-யடியவர்.... (1-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	ஸர்வேச்வரனை, மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ள நாம் எவ்வாறு அணுகுவது? என்று கலங்க வேண்டா. அவன் ஸுலபன். (எளியவன்) என்று அருளிச் செய்கிறார்.	
அஞ்சிறைய.... (1-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	இப்படி ஸர்வேச்வரனுடைய பரத்வம், பக்தி பண்ணத்தகுந்தவனாயிருக்கை, ஸௌலப்யம் (எளிமை) இவற்றை அனுபவித்தார். உடனே அவனைக் கைகளால் தழுவிக் கொள்ள முயன்	

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
	ஞர். அது * கிடைக்கவில்லை. அதனால் மோஹமடைந்தார். அம்மோஹத்தில் இவருடைய பக்தி (அன்பு) காதலாக மாறியது. இயற்கையில் எம்பெருமானைக் கூடிப் பிரிந்த ஒரு பிராட்டி (தலைமகள்) நிலைமையை ஆழ்வார் அடைந்தார். தன் நாதன், தன்பேரில் குற்றங்கண்டு அகன்று நிற்பதாகவும், "குற்றங்களைப் பொறுத்தருளும் தன்மை தனக்குண்டு" என்பதைத் தூதர் முகத்தால் அறிவித்தால் கிட்டுவன்" என்றும் எண்ணிப் பூங்காவிலே உள்ள நாரை, அன்னம், முதலான பறவைகளைத் தூது விடுகிறார். இதன் உட்கருத்து (ஸ்வாபதேசம்):- அடியவன் ஆசார்யர்கள் முகத்தால் எம்பெருமானிடம் தன் விருப்பத்தை விண்ணப்பம் செய்வதாகும்.	
வள வேழுலகு.... (1-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	இப்படி தூதர்கள் வாயிலாகத் தம் நிலையை உணர்த்தியதும், இவருடைய ஆற்றாமை தீரும் படி எம்பெருமான் இவரைக் கூடுவதற்கு நெருங்கிவர, அவனுடைய மேன்மையையும், தன் தாழ்மையையும் நினைத்து, "நாம் இவனைக் கூடினால் அவனுக்கு இழுக்காம்" என்று அகல வெண்ணினார். இதைக் கண்ட ஸர்வேச்வரன் இவர்பால் கொண்டுள்ள அன்பின் வேகத்தால் இவரை விடமாட்டாமல், தன் சீல குணத்தைக் காட்டி இவரை	

* இவருக்குப் பிறந்த ஜ்ஞானஸாக்ஷாத்காரமாகையால்.

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
	இணங்க வைத்துக்கொண்டான்" என்பதை அருளிச்செய்கிறார்.	
பரிவதில்.... (1-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	எம்பெருமான் பூர்ணன் (நிறைந்தவன் - ஒரு குறைவு மில்லாதவன்) அவனைச் சிறிதும் சக்தியற்றவராயும், ஏழையராக வுமிருக்கும் நாம் எங்ஙனம் திருப்தி செய்வித்து ஆச்ரயிப்பது? என்று தயங்க வேண்டா. அவன் பூர்ணனாகையினாலேயே நாம் கொடுக்கும் பொருள்களால் அவனுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. நம் பக்தியையே எதிர்பார்த்து நிற்பவனாகையால், எப்பொருளையும்கொண்டு அவனை ஆராதித்து ஆச்ரயிக்கக்கூடும். அவன் ஆராதிப்பதற்கு அரியனல்லன் என்றார்.	7—8
பிறவித்துயரற.... (1-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	'எம்பெருமானை ஆராதிப்பது இனித்தாயிருக்கும்' என்று சொல்லி இவ்விதமான எம்பெருமானை விட்டு அற்பமான வேறு ஸுகங்களில் மனதைச்செலுத்துபவர்களை இகழ்ந்து பேசுகிறார்.	8—10
ஓடும்புள்... (1-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	எம்பெருமானுடைய 'ஆர்ஜவ' குணத்தைச் சொல்லுகிறார். ஆர்ஜவமாவது:- மெய் - வாய் - மனம் ஆகிய கரணத்ரயமும் (மூன்று கருவிகளும்) ஒக்க இருத்தல். இவ்விதமில்லாத ஸம்ஸாரி சேதனர்களை எம்பெருமான் அடிமைகொள்ளுமிடத்து, தன் ஆர்ஜவம் குலையாமல் தன்னை அவர்களுடன் பொருந்தவிட்டு	10—

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
	அடிமைகொள்ளும் பாங்கை அருளிச்செய்தார்.	
இவையுமவையும்... அருகலிலாய... (1ம் பத்து, 9-ம் திருவாய்மொழி)	ஆர்ஜவ குணத்தை அநுஸந்தித்த தம்மிடத்தில் எம்பெருமான் ஸாத்மிக்க ஸாத்மிக்க (பொறுக்கப் பொறுக்க) எல்லா அவயவங்களிலும் தன் சேர்த்தியை அருள, அந்த இன்பத்தைப் பேசுகிறார்.	10—13
பொருமாநீள்... நம்பியை... (1-ம் பத்து, 10-ம் திருவாய்மொழி)	இவ்வாறு ஸகலவிதமான ஸுகங்களையும் அநுபவித்த ஆழ்வார் இப்பேற்றுக்கு ஏற்ற ஸாதனம் (காரணம்) தம்மிடம் ஒன்றுமில்லாமையை அநுஸந்தித்தார்.	13—16
(இரண்டாம்பத்து) வாயுந்திரை... வேவாரா- வேட்கை... (2-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இதில் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய ஸௌலப்யம் முதலிய குணங்களை அநுபவித்தார். விலக்ஷணமான இவ்வஸ்துவை உடனே கைகளால் அணைத்துக்கொள்ள விரும்பி அதற்கு முயற்சித்தார். அது கிட்டவில்லை. அதனால் ஆற்றாமை மிகுந்தது. அதனால் ஒரு நாயகியின் (தலைவியின்) நிலைமையை அடைந்தார். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் தன் இயற்கையான தொழிலில் ஈடுபட்டிருக்க, அதை அவ்வாறு உணராமல், அவைகளெல்லாம் தம்மைப்போலவே எம்பெருமானைப் பிரிந்து அதனால் துன்பப்படுவதாக நினைத்து அவைகளோடு சேர்ந்து புலம்பித் தரித்துக்	17—20

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
	கொள்கிறார்.	
திண்ணன் வீடு... (2-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	இவ்வாற்றாமையைப் போக்குகைக்கு எம்பெருமான் நெருங்கி நிற்க, அதனால் ஆற்றாமைதீர்ந்து அவதாரத்தில் பாத்வத்தை உபதேசித்தார்.	21—24
ஊனில் வாழுயிர்... இனியார் ஞானங்கள்... (2-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	இவ்விதமான அனுபவத்திற்கு ஏற்ற துணையாவார் இவ்வுலகின்கண் ஒருவரையும் காணாமல், நித்யஸூரிகள் (அயர்வறுமமரர்கள்) திரளிலே போய்ப் புகுவதெப்போதோ? என்று பாரித்தார்.	24—27
ஆடியாடி... வாட்டமில்... (2-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	இவ்வாசை உடனே கைகூடவில்லை. அதனால் பெரிதும் வாட்டமுற்றார். உடனே தலைமகளின் (நாயகி) நிலைமையை அடைந்தார். தன் பிரிவாற்றாமையைத் தானே எடுத்துரைக்கும் சக்தியற்றார். இதுகண்ட தாய், தன் மகள் படும் வேதனையைத் தலைமகனுக்கு அறிவிக்கிறாள். (இது அன்யாபதேசம். இதன் உட்கருத்து:- "தம்முடைய ஆற்றாமையைப் பரிவர் முகத்தால் எம்பெருமானுக்கு அறிவிக்கிறார்" என்பதாகும்.)	27—30
அந்தாமத்தன்பு... சொல்லீரென்னம் மானை... (2-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	இவருடைய துயரம் தீரும்படி எம்பெருமான் அடியார்களோடு வந்து கலக்க, அதனால் பெற்ற இன்பத்தைப் பேசுகிறார்.	30—33

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
வைகுந்தா... சிக்கென... (2-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	இவ்வாறு கலந்த கலவியினால் வரும் இன்பம் 'அவனுக்கே' என்றார். தம்மிடத்து ஆழ்வார் செய்யும் தாழ்மையைக் கண்டு ஈச்வரன் "இவர் தம்மைவிட்டு விலகி விடுவரோ" என்று ஐயமுற, "அவ்வாறு நான் உன்னை விட்டகல மாட்டேன்" என்று அவனைத் தேற்றினர்.	33—36
கேசவன் தமர்... (2-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	இப்படி எம்பெருமான் தன்னிடம் கொண்டுள்ள அன்பு தம்மோடு நில்லாமல் தம்மைச் சேர்ந்தவர்கள் வரை வெள்ளமிட்டுப் பெருகியதைப் பன்னிரு நாமங்களாலே பேசுகிறார்.	36—39
அணைவதரவணை... (2-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	தம்மைச் சேர்ந்தவர்களளவும் எம்பெருமானுடைய அருள் பெருகுவதைக் கண்ட ஆழ்வார் இவ்வுலகிலுள்ளார் யாவரையும் தம்முடையவர்களாகச் செய்து கொள்ள நினைத்து, அவர்களுக்கு அவன் மோக்ஷம் (பேரின்பம்) கொடுப்பதை உபதேசிக்கிறார்.	39—43
எம்மாவீடு... (2-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	இப்படி ஆழ்வார் விரும்பிய படியே எம்பெருமான் மோக்ஷம் கொடுக்கப் பாரிக்க, "அதை எனக்காகச் செய்யவேண்டா. உனக்காகவே தந்தருள வேண்டும்" என்கிறார். (பேரின்பத்தின் உண்மை நிலையை விளக்குகிறார்)	43—46

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
ஔரோளி... சதிரிளமடவார்... (2-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	கீழே அறுதியிட்ட பேரின்பத்தைப் பெறுவதற்குத் திருமாலிருஞ்சோலைமலையை ஆச்ரயிக்க வேண்டுமென்றார்.	46—48
(மூன்றும் பத்து)		
முடிச்சோதி... மாசூண... (3-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கிற "அழக"ருடைய திருமேனியழகு, திருவாபரணங்களின் அழகு முதலியவற்றை அனுபவித்தார்.	49—51
முந்நீர்ஞாலம் ... கிற்பன்... (3-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	அழகருடைய எழில் அளவிடக்கூடாததாயிருந்தது. "தன் காரணங்களின் (இந்திரியங்கள்) அசக்தியே இதற்குக் காரண" மென ஆழ்வார் ஏங்கியதை எம்பெருமான் தெளிவித்துத் திருமலையில் (திருப்பதியில்) இருக்கிற நிலையைக் காட்டித் தேற்றினதை அருளிச் செய்கிறார்.	51—54
ஒழிவில்காலம்... (3-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	திருவேங்கடமுடையான் திருவடிகளில் எல்லாவிதமான கைங்கர்யங்களையும் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டார்.	54—58
புகழுநல்லொருவன்... (3-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	எம்பெருமான் ஸகல பதார்த்தங்களிலும் அந்தர்யாமியாய் நிற்கும் நிலையைப் பாடி அனுபவிக்கிறார்.	58—61
மொய்ம்மாம்... (3-ம் பத்து 5-ம்) திவாய்மொழி)	திருமாலுக்கு அன்புடன் ஆட்செய்யும் அடியார்களைப் புகழ்ந்தும், அல்லாதாரை இகழ்ந்தும் பேசுகிறார்.	61—63

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
செய்யதாமரை... தஞ்சமாகிய... (3-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	பரம், வ்யூஹம், விபவம் இவைகளைக் காட்டிலும் அர்ச்சாவதாரமே பற்றுவதற்கு எளிதென்று உபதேசித்தார்.	63—66
பயிலுஞ்- சுடரொளி... சன்ம- சன்மாந்தரம்... (3-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	திருமாலடியார்கள் தனக்கு ஸ்வாமிகள் என்றார்.	67—70
முடியானே... வாசகமே... (3-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	அடியார்களை நினைத்ததனால் அதன்மூலம் எம்பெருமான் பக்கம் நினைவு திரும்பியது. தன்னுடைய இந்திரியங்கள் ஒவ்வொன்றும் தம் இயற்கையை மீறி, எல்லாவற்றினுடைய செயலையும் ஆசைப்பட்டதைச் சொல்லிக் கூப்பிடுகிறார்.	70—73
சொன்னால்... வாய்கொண்டு... (3-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	இகலோக ஸுகத்திலே ஈடுபட்டு நிற்கும் ஸம்ஸாரிகளைப் போலன்றிக்கே, தான் பகவத் விஷயம் தவிர மற்றொன்றின் வாசனையே அறியாத இந்திரியங்களைப் பெற்றேனென்று உகக்கிறார்.	73—77
சன்மம்பலபல... இடரின்றியே... (3-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	எம்பெருமானைப் பாடிப் புகழும் பாக்கியம் வாய்க்கப் பெற்றேனென்றார்.	77—80

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
(நாலாம்பத்து) ஒருநாயகம்... குறுகமிக... (4-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இகலோக ஸுகங்களையும், சுவர்க்கம் முதலிய வானோர் நாட்டின் இன்பத்தையும் நாடி நிற்கும் ஸம்ஸாரிகளைப் பார்த்து "இவை நிலையற்றவை. எம்பெருமானுடைய திருவடிகளில் வழுவிலாவடிமை செய்வதே பேரின்பமாகும்" என்று உபதேசம் செய்தார்.	81—83
பாலனாய்... பாவியல்... (4-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	இவ்வுபதேசம் பயனுறாமையால் ஈசுவரனிடம் இவருக்கிருந்த அன்பு பன்மடங்கு வளர்ந்து, அதனால் ஒரு தலைமகளின் நிலைமையை அடைந்தார். அவள் தன் காதலனுடைய (எம்பெருமானுடைய) காலங்கடந்தவைகளும் தமக்கு நிலமாகாத இடங்களிலுள்ளவைகளுமான வைபவங்களை இப்போதே அனுபவிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டதை நற்றாய் வார்த்தையாலே பேசுகிறார்.	83—86
கோவைவாயாள்... உரைக்க-வல்லேன்... (4-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	இவர் ஆசைப்பட்டபடியே எம்பெருமான் தன்படிகள் யாவற்றையும் காட்டிக் கொடுக்கக் கண்டு உகந்து அவனுடைய ப்ரணயித்வத்தை (தன்பால் அவனுக்குள்ள மோகத்தை)ப் பேசுகிறார்.	86—88
மண்ணையிருந்து... வீற்றிருந்து... (4-ம்பத்து 4-ம் திருவாய்மொழி)	இவ்வனுபவம் ஸாத்மிக்கைக்காக எம்பெருமான் சிறிது விலகி நின்றான். அதைத் தாளாமல் மோகமடைந்தார். அதனால்	89—92

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
	ஒரு நாயிகையின் நிலைமையை அடைந்தார். எம்பெருமானைப் பிரிந்த ஒரு தலைமகள் பிரிவாற்ருமையினுல் அவனைப் போன்றவைகளையும், அவனுடைய ஸம்பந்தமுள்ளவைகளையும் அவனுக ப்ரமித்துப் பிச்சேறிக் கதறு தலைத் தாய் சொல்லுகிற வார்த்தையாலே பேசுகிருர்.	
விற்றிருந்து... (4-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	இவருடைய விடாய் தீரும்படி எம்பெருமான் தனது பெருமை தோன்றவந்து கலக்க, அதனுல் தான் இன்பமெய்தியதைப் பேசினுர்.	92—95
தீர்ப்பாரை... உன்னித்து... (4-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	இவ்வனுபவம் மானஸமாயிருந்தது. (அகத்திலுள்ளது). அது தெரியாமல் பாஹ்ய ஸம்ச்லேஷத்தை விரும்பினுர். அது கைகூடாமையால் மோகமடைந்து ஒரு பிராட்டியின் தசையை அடைந்தார். தலைவியின் மோகத்திற்குக் காரணம் சில்லரைத் தெய்வங்களால் வந்ததென்று ஒரு கட்டுவிச்சி சொல்ல, உறவினர்களும், அதற்கேற்ற பரிகாரம் செய்யப்புக, இவளுடைய உண்மை நிலைமையறிந்த தோழியொருவள் அவ்வாறு செய்யவொட்டாமல் அவர்களை விலக்கி பகவானுடைய திருநாமங்களைச் சொல்லுவிக்க, அதனுல் மோகம் தெளிந்ததை 'வெறிவிலக்கு' என்னும் துறையாலே அருளிச்செய்கிருர்.	96—97

செய்யுட்களின் முதற்குறிப்பு	பொருள்	பக்கம்
சீலமில்லா... அறிந்தறிந்து... (4-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	இவ்வாறு மோஹம் தெளிந்து, அவனைக் காணவேண்டி இரவு பகலாக வருந்திக் கூப்பிட்டார்.	98—99
ஏறாளும்... மணிமாமை... (4-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	இப்படிக் கூப்பிட்டும் அவன் வந்து முகங்காட்டவில்லை. அதனுல் தன்னை அவன் கைவிட்டதாக நினைத்து; அவனுல் உபேக்ஷிக்கப்பட்ட தன் உயிரும், உடைமையும் தனக்கும் வேண்டா என்பதைத் தலைவியின் வார்த்தையாலே அருளிச்செய்கிருர்.	99—102
நண்ணுதார்... கூட்டுதிநின்.... (4-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	இவ்வாறு நோவுபடும் ஆழ்வார் எம்பெருமானிடம் பக்தியில்லாத இவ்வுலகிலுள்ளோர் நடுவில் வைக்காமல், தன்னை முடிக்க வேணுமென்று விண்ணப்பம் செய்தார். இவ்வளவில் எம்பெருமான் தன் திவ்ய ரூபத்தைக் காட்டக் கண்டு தரித்தார்.	103—105
ஒன்றுந்தேவும்.... (4-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	இவ்விதமான பகவதநுபவத்தை இழந்து புறம்பான வழிகளிலே சென்று துயருறும் உலகினரைக் கண்டு அருள்கூர்ந்து, பரதத்வமான ஸ்ரீமந்நாராயணனையே அடைந்து உய்யுங்கள் என்று உபதேசித்தார்.	105—107
(ஐந்தாம்பத்து) கையார்சக்கரம்.... (5-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	உண்மையான பக்தியில்லாமல் மெய்யன்பன்போல் நடித்து வஞ்சனையான வார்த்தைகளைச் சொன்ன எனக்கு, அவ்வளவிலேயே திருப்தியடைந்து உண்	108—111

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	மையான பேற்றைத் தந்தான் எம்பெருமான், என்கிறார்.	
பொலிகபொலிக... (5-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	தம்முடைய உபதேசத்தால் திருந்தித் திருமாலடியார்களான வர்களின் குழாங்களேயும், இந்த வைபவத்தைப்பார்த்துக் களிக்க வந்த நித்யஸூரிகளேயும் பார்த்து வாழ்த்தினர்.	111—113
மாசறுசோதி.... (5-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	இவ்வாறு ஸம்ஸாரிகளின் துன்பத்தைக்கண்டு மனந்தாளாமல் தன் உபதேசத்தால் அவர்களேத் திருத்தி அவர்களே அதற்காக வாழ்த்தினர். உடனே மீண்டும் 'எருளுமிறையோனில்' (4-8-1) இருந்த பிரிவாற்ருமை தலையெடுத்தது. அதனுல் ஒரு நாயகியின் நிலையை அடைந்து, 'வழியல்லாவழியே மடலூர்ந்தாகிலும் அவனே அடைவது' என்று துணிந்தார்.	113—115
ஊரெல்லாம்.... வெஞ்சுடரில்.... (5-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	இவ்வாறு மடலூரத்துணிந்தது அதனுல் 'இரக்கமற்றவன்' என்று அவனேப் பழிக்குமாறு செய்து அவனுகவே வந்து முகங் காட்டுமாறு செய்ய நினேத்தார். அதுவும் ஸாத்யமாகவில்லே. இரவு வேளே வந்துவிட்டது. தனக்குத் துணேயாவார்-அவன்பேரில் பழி சொல்வார் - ஆக இப்படி ஒருவரும் இல்லாமல் போயிற்று. நள்ளிரவில் இருளில் யாவரு முறங்கத்தனிமையில் செயலற்று ஆற்ருமை மீதூர்ந்து அலற்றினர்,	116—118

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	இதை 'இரவு நெடுமைக்கிரங்கல்' என்னும் துறையால் அருளிச் செய்கிறார்.	
எங்ஙனேயோ.... கழியமிக்கதோர்... (5-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	இக்குறைகள் தீரும்படி பொழுது புலர்ந்தது. (திருக்குறுங்குடி) நம்பியினுடைய வடிவழகும் ஒப்பனையழகும், திருவுள்ளத்தில் உருவெளிப்பாடாய்த் தோற்ற, அதனால் சிறிது தேறி, உடனே கிட்டப் பெறாமையால் கலங்கி, அநுகூலரான தோழிமாரும், கடிந்து கொள்ளும் தாய்மாரும் சூழப் பெற்றிருக்கையாலே விசனம் பலவிதமாகச் சிதறுவதனால் சற்று ஆறுதலும், தான் ஆசைப் பட்டபடி எம்பெருமானை அநுபவிக்கப் பெறாமையால் ஏக்கமும் இப்படி இன்பமும் துன்பமும் சமானமாய்ச் சென்றது.	118—121
கடல் ஞாலம்... கூந்தன்மலர்... (5-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	இதில் விசனம் அதிகமாகியது. அதனால் க்ருஷ்ணனைப் பிரிந்த கோபஸ்த்ரீக்கள் போல் அநுகரித்து தரிக்கிறார். அதாவது எம்பெருமானுடைய அற்புதமான செயல்கள், வார்த்தைகள் இவற்றைத்தானே மேற்கொள்வது. இங்கு ஆழ்வார் செயலற்றுக் கிடப்பவராதலால் 'வார்த்தை'களை மட்டும் அநுகரித்தார். இதைப் பிரிவாற்றாமையால் வாயில் வந்தபடி யெல்லாம் பிதற்றுகிற தன் பெண்ணின் நிலைமையை, வினவ வந்த	121—123

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	வர்களுக்குத் தலைவியின் தாய் சொல்லுகிற வார்த்தையால் பேசுகிருர்.	
நோற்ற நோன்பு... ஏனமாய்... (5-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	இப்படி அனுகரித்து தரித்தும் அவன் வந்து முகங்காட்டவில்லை. ஆதனுல் தம் செயல்களைத் "தன்னைப்பெறுகைக்கான உபாயமாகக் கருதி அது பூர்த்தியான உடன் வந்து முகங் காட்டுவோ" மென்றிருந்தானுக வேணும்" என்று நினைத்து, தம்மிடம் அவ்விதமான உபாயமொன்றுமில்லை என்பதைக்கூறி 'வானமாமலைப்' பெருமானிடத்தில் வேரற்ற மரம்போல் விழுந்து சரணம் புகுகிருர்.	124—126
ஆராவமுதே! (5-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	அவ்வளவிலும் தம்அபேக்ஷை பூர்த்தியாகவில்லை. திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதனைச் சரணடைந்தால் தன் குறை தீருமென்று எண்ணி அவ்வாறே செய்தார். அவ்வெம்பெருமானும்குளிரநோக்குதல்-வார்த்தை சொல்லுதல்- அணைத்தல் முதலியன் செய்யக் கண்டிலர். அவ்வடிவழகில் ஆழங்கால்பட்டு போரநொந்து கூப்பிட்டார்.	126—134
மானேய்நோக்கு... தொல்லருள்.... (5-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	அவ்வளவிலும் தம் விருப்பம் ஈடேறவில்லை. அதனுல் "திருவல்லவாழ்" போகப் புறப்பட்டார். அவ்வூருக்கு வெளியில் உள்ள நந்தவனத்தில் போய்; அதன் அழகிலும், அந்நகரத்தினின்றும் வெளிக்கிளம்பிய இனிய	135—137

செய்யுட்களின் முதற் குறிப்பு.	பொருள்	பக்கம்
	வாத்ய கோஷங்கள் முதலியவற்றிலும் ஈடுபட்டு அதற்குமேல் செல்லச் சக்தியற்றுக் கலங்கி, ஒரு தலைமகளின் தசையை அடைந்து தன் தோழிமார்க்குத் தன் ஆவலைத் தெரிவிக்கிற பாசுரத்தால் அருளிச் செய்கிறார்.	
பிறந்தவாறும்.... நாகணை மிசை.... (5-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	இவ்வாறு அர்ச்சாவதாரங்களில் தம் அபேக்ஷை பூர்த்தியடையவில்லையாகையால், விபவாவதாரங்களில் (இராமன், கிருஷ்ணன் முதலானவை) தன் மனதைச் செலுத்தினார். அவதார குணங்களை அனுபவித்தல் தன் தளர்ச்சிக்குக் காரணமாகாமல், பூர்ணமாய் அவைகளை அனுபவித்து இன்புறுமாறு அருள வேண்டுமென்று ஸ்ரீ கிருஷ்ணனை வேண்டிச் சரணம் புகுகிறார்.	137—140
(ஆறாம் பத்து) வைகல் பூங்கழி... காதல்-மென்பெடை... (6-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இவ்வளவிலும் தம் விருப்பம் ஈடேறவில்லை. இவரைக்கொண்டு திருவாய்மொழியைப் பாடுவித்து உலகைக் காப்பாற்ற வேணுமென்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றி யிருந்தான். இதையறியாமல் பெரிதும் கலக்கமுற்று, ஒரு தலைமகளின் நிலைமையை அடைந்து, திருவண்வண்டூரில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுக்குத் தம் நிலைமையைத் தெரிவிக்குமாறு பக்ஷிகளைத் தூதுவிடுகிறார்.	141—144

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
மின்னிடை... உவைகயால்... (6-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	இப்படி தூதர்களால் இவருடைய (ஆழ்வாராகிய தலைவியினுடைய) நிலைமையை அறிந்த எம்பெருமான் இவருடைய துயர் தீரும்படி கலந்து பரிமாற வாரா நின்றான், அந்த விளம்பம் பொறுக்கமாட்டாமல் அவன்பால் ஊடல்கொண்டு; "மற்ற நாயகிகள் சேர்த்தியிலே இன்புற்றிருந்த நீ அதனால் என்னை மறந்தனை. இனி நீ வந்து கலந்தாலும் நாம்உன்னுடன்கூடுவோமல்லோம். பிரிவாற்றாமையினால் முடிந்துவிடத் துணிந்தோம்" என்று பராங்முகமாயிருந்தார். இதுகண்ட எம்பெருமான் இவரைப் பிரிந்து தரிக்கமாட்டாதவனாய்த் தன் அழகையும், ஆற்றாமையையும் காட்டி இவருடைய ஊடலைத் தீர்த்து இவருடன் கலந்ததை அருளிச் செய்கிறார்.	145—147
நல்குரவும்... பாஞ்சுடருடம்பாய்... (6-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	இப்படித் தன் ஊடலைத் தணித்துத் தன்னை அனுகூலமாக்கிக் கலந்த எம்பெருமானுடைய அற்புத சக்தியை நினைந்து, ஒன்றுக்கொன்று விருத்தமான பல பொருள்களிலும் இழைந்து நிற்கும் அவனுடைய ஆச்சரியமான சக்தியைப் பேசினார்.	148—151
குரவை-யாய்ச்சியர்.. மண்மிசை... (6-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	கீழ் இவர் பட்ட கிலேசம் எல்லாம் தீரும்படி ("பிறந்தவாற்றில்" இவர் ஆசைப்பட்டபடி) ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவிளை	151—153

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	பாடல்களைக்கண்டு அனுபவித்து இன்புற்றதைச் சொல்லுகிறார்.	
துவளில்... பின்னைகொல்... (6-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	இவ்வனுபவத்தால் ஆசை மிகுந்து கைகளால் எம்பெருமானை அணைத்துக் கொள்ள முயன்றார். அது கிட்டாமையால் கலங்கி ஒரு தலைவியின் நிலையை அடைந்தார். திருத்தொலைவில்லிமங்கலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் காண விரும்பிப் பெறாத ஒரு தலைவி, ஆற்றாமை மீதூர்ந்து அவனுடைய குணங்களையும், செயல்களையும் சொல்லி அலற்றுவதைக்கண்ட தாய், இவளுடைய எல்லை கடந்த காதலைத்தவிர்த்து இவளைக் காப்பாற்றும் வகை என்னென்று தோழியைக் கேட்க; இவளுடைய உண்மை நிலைமையறிந்த தோழி 'இனி எவ்விதத்தாலும் இவளைத் திருப்பமுடியாது. இது இவளுடையஸ்வபாவமேயாகும். ஆகையால் நாம் இவளைக் கைவிட வேண்டியதுதான்' என்று சொல்லுகிறாள். தோழி வார்த்தையாலே தம் நிலைமையைப் பேசுகிறார்.	154—156
மாலுக்கு... (6-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	பிரிவாற்றாமையால் மெலிந்துபோன (ஆழ்வாராகிய) நாயகியின் ஆபரணங்கள் தாமாக நழுவிப்போனமையைத் தாய்ச் சொல்லால் பேசுகிறார். கீழ் (எருளுமிறையோனில், தான் "வேண்டா" என்று வெறுத்த	157—159

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	வைகளெல்லாம் தாமாகவே அழிந்து செல்லுகிறதைப் பேசினர்).	
உண்ணுஞ்சோறு (6-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	இவ்வாறு இவள் தசையைக் கண்ட தாயும் மோஹமடைந்தாள். மோஹந்தெளிந்து பார்க்கும்போது இவளைக் காணவில்லை. தன் குடியின் தன்மையையும், இவளுடைய ஸ்வபாவத்தையும் நன்குணர்ந்த தாய்; தன் மகள் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகிய 'திருக்கோளூரு'க்கே சென்றிருத்தல் வேண்டும். நெடுநாள் உணவின்றிக்கே கிடந்த இவளுக்குத் திருக்கோளூர் வரை நடந்து செல்லக்கூடுமோ? என்றுகலங்கி, நாட்டாரை (லௌகிகரை)ப்போலன்றிக்கே இவள் 'உண்ணுஞ்சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்று இருப்பவள், எனத்தெளிகிறாள். (எம்பெருமானோடு கூடுவதில் ஆழ்வாருக்கு உண்டான த்வரையைச் சொல்லுகிறது).	159—162
பொன்னுலகு.... பாசறவெய்தி... (6-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	இவ்வாறு தனியே புறப்பட்ட தலைவி (ஆழ்வார்) திருக்கோளூர் வரை செல்லும் சக்தி யற்று, நகரின் சமீபத்திலுள்ள பூங்காவிலே விழுந்து கிடந்து, அங்குள்ள பக்ஷிகளைத் தூதுவிட்டாள்.	162—165

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
நீராய்நிலனுய்.... ஞாலத்தூடே.... (6-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	இவளுடைய ஆற்ருமையைக் கண்டு பறவைகளும் கால் தாழ்ந்து, தூது செல்லும் திற மிழந்தன. அதனுல் பெரிதும் கலங்கி ஆற்ருமை கரைபுரண்டு தன்னுல் இயன்றவளவும் உரக் கக் கூப்பிட்டார்; அவனுக்கு ஸ்ரீ வைகுண்டத்திலும் இருப்பு அரி தாகுமாறு கேட்போர்க்ள் யா வரும் நீராயுருகுமாறு கதறினுர்.	165—173
உலகமுண்ட... அகலகில்லேன்... (6ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	இப்படிக் கூப்பிட்டபொழுதும் அவன்வந்து முகங்காட்டவில்லை. ஆனுல்ஸ்ரீவைகுண்டத்திற்கொப் பான 'திருவேங்கட'த்தைக் காட்டினுன். அங்குள்ள பெரிய பிராட்டியை (ஸ்ரீ மஹா லக்ஷ்மியை)ப் புருஷ காரமாகப் பற்றித் திருவேங்கடமுடை யான் திருவடிகளிலே வேறு புகலின்றிச் சரணம் புகுகிருர். (சரணுகதியின் ஸ்வரூபத்தை நன்கு விளக்குகிருர்)	173—180
(ஏழாம் பத்து) உண்ணிலாவிய.... இன்னமுதென... (7-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இப்படிச் சரணம்புக்கவிடத்தி லும் இவருடைய அபேக்ஷை பூர்த்தியாகவில்லை. அதனுல் மிகவும் வருந்தி, ஐம்புலன்கள் (சப்தாதி விஷயங்கள்), ஐம் பொறிகள் (கண்-காது-முதலிய இந்திரியங்கள்) இவைகளின் நடுவே வைத்து, என்னை நலிய வேண்டாமென்று கூவினுர்.	181—184
கங்குலும்பகலும் (7-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	இவ்வாறு கலங்கி மோஹ மடைந்த இவளுடைய (ஆழ்வா ராகிய தலைவியினுடைய) தாய்	184—189

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	இவளைத் திருவரங்கத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பெரியபெருமாள் (ஸ்ரீரங்கநாதர்) திருவடிகளிலே கிடத்தி "இவள் விஷயத்தில் நீர் செய்ய நினைத்திருக்கிறதென்? என்று கேட்கிற பேச்சாலே பேசுகிறார். (எம்பெருமானைப் பிரிந்தக்கால் தம் நிலைமையைத் தாய்ச் சொல்லாலே தெரிவிக்கிறார்)	
வெள்ளைச்சுரிசங்கு (7-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	இப்படி மோஹித்துக் கிடந்தவர், தாய் சொல்லிய எம்பெருமானுடைய திருநாமங் கேட்டு ஒருவாறு தெளிந்து, மீண்டும் பிரிவாற்றாமை தலையெடுத்து அணித்தானதென்திருப்பேரைக்குச் செல்லத் துணிந்ததைப் பேசுகிறார்.	189—192
ஆழியெழ... (7-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	இவருடைய ஆற்றாமை தீரும்படி ஸர்வேச்வரன், பலகாலும் தான் வெற்றிமாலை சூடிய நிகழ்ச்சிகள் யாவற்றையும் நேரில் கண்டு அநுபவிக்கும்படி அருள, அதைக்கண்டு இனியராகிறார்.	192—196
கற்பார்... வார்த்தையறிபவர். (7-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	தன் பெருமைகளை உலகினர் யாவரும் நன்கு கண்டு களிக்கும்படி எம்பெருமான் 'இராமன் - கிருஷ்ணன்' முதலிய அவதாரங்கள் செய்து காட்டியும்; ஸம்ஸாரிகள் மற்ற தெய்வங்களைப்பற்றித் துன்பப்படுவதே! என்று ஆச்சரியப்படுகிறார்.	196—204

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
பாமருமூவுலகும்... (7-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	இப்படி அவனுடைய நற்குணங்களை நினைத்ததனால், இப்படிப்பட்ட ஈச்வரனை இப்பொழுதே காணவேண்டும் என்று பெருமிடறு செய்து கூப்பிட்டார்.	205—208
ஏழையராவி ... (7-ம் பத்து 7ம்-திருவாய்மொழி)	இடையறாத சிந்தனையின் திறத்தினால் எம்பெருமானுடைய வடிவழகு (உருவெளிப்பாடாய்) பிரத்யக்ஷம்போல் தோன்ற, உடனே இவர் அணைந்துகொள்ள முயற்சித்து, அதுபெறாமையாலே கலங்கி ஒரு நாயிகை (தலைவி)யின் நிலைமையை அடைந்து, தன் நிலைமையைப் பேசுகிறார்.	208—212
மாயா!வாமனனே! பாசங்கள்நீக்கி... (7-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	தமக்குக் கீழே ஏற்பட்ட அனுபவம் 'உருவெளிப்பாடு' என்றறிந்தார். அவனோடு கூடியல்லது தரித்திருக்க இயலாத தன்னைப் பிரிவாற்றாமையினால் முடிந்து போகவொட்டாமலும், ஜீவித்திருக்கவொட்டாமலும் பண்ணின இறைவனது விசித்திர சக்தியைக் கண்டு வியந்தார்.	212—214
என்றைக்கும்.... வைகுந்தநாதன்.... (7-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	தனக்கு மயர்வற மதிநலமருளி, இனியும் இவ்வுலகிலேயே வைத்திருப்பதன் காரணம் யாது? என்று வினவ; "நமக்கும் நம்மடியார்களுக்கும் செவிக்கினிய பிரபந்தத்தை உம்மால் செய்துகொள்வதற்காக" என்று எம்பெருமான் அருளிச்செய்ய; இதைக்கண்டு இந்த உப	214—221

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	காரத்திற்குக் கைம்மாறு ஒன்றும் காணாமல் தான் தடுமாறினதைப் பேசினார்.	
இன்பம்பயக்க.... (7-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	இவ்வாறு தன்னை இன்கவி பாடுவித்த எம்பெருமான் தானும் திருமகளுமாகத் திருவாறன் விளையிலே எழுந்தருளியிருக்க, அங்கு சென்று அடிமைசெய்ய வேண்டுமென்று பாரித்தார்.	221—224
(எட்டாம் பத்து) தேவிமார்.... ஆருயிரேயோ!... (8-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இவ்விருப்பம் பூர்த்தியாகவில்லை. அதனால் 'அடியார்களுக்குப் பரதந்த்ரனாயிருக்கும் ஸ்வபாவம் உள்ளவன் எம்பெருமான்' என்பது பொய்யோ? என்று ஐயங்கொண்டார். இதைக் கண்ட ஸர்வேச்வரன் தன் நற்குணங்களைக்காட்டி, இவருடைய ஐயத்தைத் தெளிவித்தான். அதனால் ஐயந் தீர்ந்தமையைப் பேசினார்.	225—229
நங்கள் வரிவளை... தொல்லையஞ்சோதி... (8-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	எம்பெருமான் தன்னைக் கைவிடுவதற்குக் காரணம், நமக்கு ஸம்ஸாரஸுகங்களில் உள்ள பற்றுதல் ஒழியவில்லை, என்கிற கருத்தாகும், என நினைத்துத் தனக்கு அவ்விதமான பற்றுதல் இல்லாமையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். தலைமகனைப் பிரிந்த தலைமகள் அவனாகவே மீண்டும் தன்னோடு வந்து கூடாததால், 'தனக்குத் தோழிமார், தாய்மார் முதலியவர்களிடத்தில் அன்பு தளராமல் இருப்பதாக நினைத்தானாகவேணும். அதற்கு	229—232

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	விரோதமாகத் தன்னை அவர்களிடமிருந்து பிரிக்க மனமில்லாமல் அவன் வாராதிருக்கிறான்' என்று எண்ணித் தனக்கு அவ்விதமான பற்றுதல் ஒன்றுமில்லாமையைப் பேசினார்.	
அங்குமிங்கும்... பணியாவமரர் ... (8-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	ஈச்வரன் மானஸாநுபவமாய்த் (அகத்தில்) தன் வடிவழகைக் காட்டக் கண்டு இதன் மேன்மையைக் கண்டு பரிவுடன் மங்களாசாஸநம் (வாழ்த்து) பண்ணுவாரில்லையே, என்றஞ்சினார். இதைக்கண்ட எம்பெருமான், நித்ய ஸூரிகளும் முக்தர்களும்-முமுக்ஷுக்களும் எனக்கு மங்களாசாஸனமே யாத்திரையாயிருக்க நீர் பயப்படவேண்டா, என்று சொல்ல அதனால் அச்சந் தீர்ந்தமையைப் பேசினார்.	233—237
வார்கடாவருவி.... (8-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	ஸம்ஸாரிகளுடைய அபேக்ஷையைப் பூர்த்தி செய்விப்பதற்காக ஈச்வரன் இவ்வுலகின்கண் உலாவாநின்றான். அவனுக்குப் பரிவரான நித்யரும் முக்தரும் இங்கில்லை. இவ்வடிவழகுக்கு என்ன தீங்கு நேருமோ என்று அஞ்சினார். ஸர்வேச்வரன் தன் எல்லையற்ற சக்தியையும், அதனால் ஒருவருடைய பரிவும் தனக்கு அவசியமில்லை என்பதையும், திருச்செங்குன்றூரில் தனக்குப் பரிவர் மூவாயிரம் பேர் இருப்பதையும் காட்டிக் கொடுக்கக் கண்டு உகந்தார்.	238

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
மாயக்கூத்தா! கொண்டல்-வண்ணா! (8-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	திருச்செங்குன்றூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அகக் கண்ணால் குளிரக்கண்டு, உடனே கைகளால் அணைந்து கொள்ள முயற்சித்தார், அது பெறாமையாலே பெரும்விடாயோடு கூப்பிட்டார்.	239—241
எல்லியும்... (8-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	ஆழ்வாருடைய கூக்குரலைக் கேட்ட ஈச்வரன், இவருக்குமேற்பட்ட விடாயுடன் இவரோடு கலக்க வந்து, உடனே நெருங்கினால் ப்ரீதிவேகத்தை இவர்தாள மாட்டாரென அஞ்சித்திருக்கடித்தானத்தில் புறவீடு செய்திருந்தமையைக் காட்டிக் கொடுக்கக் கண்டு இனியராகிறார்.	241—243
இருத்தும்... அருள்தானினி... (8-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	ஆழ்வாருடைய வ்யஸநமெல்லாம் தீரும்படி எம்பெருமான் இவருடன் கலக்க; இது ப்ரமமோ? கனவோ? என்று சங்கித்துப் பிறகு உண்மையே எனத் தெளிந்து மகிழ்ந்ததைப் பேசுகிறார்.	244—246
கண்கள் சிவந்து... தெருளும்-மருளும்... (8-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	இக்கலவி நிலைத்திருக்க வேண்டும். ஆழ்வார் (வளவேழுலகில் போல்) தன் தாழ்மையை நினைந்து அகன்றுவிடாமல் இருக்கவேணும் என்பதற்காக, எம்பெருமான், தான் ஸகல சேதனர்களுக்கும் அந்தர்யாமியாக இருப்பதையும், (உயிருக்குயிராய் இருப்பதையும்) எல்லா வுயிர்களும் தனக்குச் சரீரமாக இருப்	246—248

செய்யுட்களின்-முதற் குறிப்பு.	பொருள்	பக்கம்
	பதையும் காட்டிக்கொடுத்தான். அதுகண்டு இனியராகிறார்.	
கருமாணிக்கமலை... திருவருள்மூழ்கி.. (8-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	இவ்வாறு தாம், எம்பெருமானுக்கு அடிமை செய்வதே ஸ்வரூபமாயும், அதற்கு விரோதியானவைகளெல்லாம் வந்தேறிகளாய், சேஷத்வமே இயற்கையில் அமைந்ததாகவும் இருக்கக் கண்டு இனியரான ஆழ்வார், அந்த ப்ரீதியின் வேகத்தினால் தாமான தன்மையழிந்து ஒரு தலைமகளின் நிலைமையை அடைந்து, தம் நிலைமையைப் பேசுகிறார். எம்பெருமானோடு கலந்து பிரிந்தாளொரு தலைமகளின் உறவினர் அவளுடைய பருவ நிலையைக்கண்டு, அவள் எம்பெருமான் பக்கல் ஈடுபட்டுள்ளதையறியாமல், ஸ்வயம்வரத்திற்கு மணமுரசறைவிக்க, இதைக்கண்ட உயிர்த்தோழியானவள் குறிப்புகளால் இவளுடைய உண்மை நிலையை அறிந்து அதை அவர்களுக்கு நிரூபித்து மணத்திற்கான ஏற்பாடுகளை விலக்குகிறாள். (ஜீவாத்மா எம்பெருமானுக்கேயன்றி மற்ற தெய்வங்கட்குச் சேஷமன்று என்பது ஸ்வாபதேசார்த்தம்)	249—251
நெடுமாற்கடிமை... தமர்கள்கூட்ட.... (8-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	திருமாலடியார்க்கடிமை செய்வதிலேயே இணையற்ற இன்பம் உளது எனக்கண்டு, தான் அதன் எல்லை நிலமாகவேண்டுமென்று ஆசைப்பட்டதைப் பேசினார்.	252—255

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
(ஒன்பதாம் பத்து) கொண்ட - பெண்டிர்... கண்ணனல்லால்.... (9-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இவ்வாறு அடியார்க்கடிமை செய்வதேபேரின்பத்தின்எல்லை, என அறுதியிட்ட ஆழ்வார்; இப்பேற்றைத் தமக்கருளிய எம்பெருமான் ஒருவனே தமக்கு நிருபாதிக (இன்றியமையாத) பந்து. மற்றவர்கள் யாவரும் ஒரு காரணத்தால் பந்துவானவர்கள், என்று எடுத்துக் காட்டி அவனையே பற்றுமாறு உலகினருக்கு உபதேசம் செய்கிறார்.	256—258
பண்டைநாளாலே கொடுவினை... (9-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	இப்படி நிருபாதிக பந்துவான எம்பெருமான் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே சென்று ஸகலவிதமான உறவுமுறைகளையும் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்.	258—262
ஓராயிரமாய்... மருந்தேநங்கள்... (9-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	இவற்றையெல்லாம் நீர் கேட்கவேணுமோ? நாமாகவே செய்ய வேண்டிய கடமையன்றோ? நமக்கு உம்மோடு உண்டான ஸம்பந்தம் இவ்வாறன்றோ? என்று காட்டக்கண்டு அவனுடைய * சீல குணத்திலே ஆழங்கால்பட்டார்.	262—264
மையார்... கண்டுகொண்டு... (9-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	இவ்வாறு சீல குணம் நிறைந்த எம்பெருமானை உடனே காண வேண்டுமென்று கூப்பிட, அவ்வாறே எம்பெருமானும் தன் வடிவழகைக் காட்டக் கண்டு இனியராகியதைப் பேசுகிறார்.	265—266

*சீலம்—மேன்மையுடையவன் தாழ்ந்தவனோடு வாசிதோற்றாமல் கலந்து பரிமாறுவது.

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
இன்னுயிர்... அந்தாம்நின்று... (9-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	இவ்வாறு அகத்தில் கண்ட எம்பெருமானைக் கண் குளிரக் காணவும், கைகளாரத்தழுவவும் விரும்பினர். அது கைகூடாமையாலே கலங்கி ஒரு தலைமகளின் நிலையை எய்தினர். பிரிவாற்றுமையினல் வருந்தும் தலைமகள் கிளி-மயில்-குயில் முதலியவற்றின் பேச்சுக்களைக்கேட்டு நோவுபடுகிற வார்த்தையாலே பேசுகிறார்.	267—269
உருகுமால்... ஆருயிர்... (9-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	இவ்வாறு அவனுடைய நினைவைத்தரும் பொருள்களால் பண்டு 'இருத்தும் வியந்தில்' கலவியை நினைந்து, புருஷோத்தமனன எம்பெருமான் நீசனுகிய என்னுடன் புரையறக் கலந்து பரிமாறுவதே! என்று அவனுடைய சீலகுணத்தில் ஆழங்கால்பட்டு, தளர்வடைந்து பேசுகிறார்.	269—271
எங்கானல்... எனக்கொன்று... (9-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	இந்த குணறு ஸந்தாகம் கலங்கி ஆற்றாமையே தலையெடுத்து, அதனல் ஒருதலைமகளின் நிலையை அடைந்து தூதுவிடுகிறார். இயற்கையிலே எம்பெருமானைக் கலந்து பிரிந்த ஒரு தலைவி ஆற்றாமையாலே சோலையில் சென்று அங்குள்ள பறவைகளைத் 'திருமூழிக்களத்தி' லுள்ள எம்பெருமானிடம், "உன் அழகையும், குணங்களையும் அறிந்தார் பிரிந்து தரிக்க வல்லராவரோ?" என்று எனக்காக ஒரு	272—274

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	வார்த்தை சொல்லுங்கோள் என்று இரக்கிறார்.	
அறுக்கும்வினை... (9-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	இவ்வாறு தூதுவிட்டும் உடனே அவன் வரக்காணுமையால் ஆற்றுமை மீதூர்ந்து நிலைகொள்ளாமல் துடித்து, அவனிருப்பிடமாகிய 'திருநாவாய்'க்குச் செல்லவேணுமென்று த்வரித்தார்.	274—277
மல்லிகைகமழ்... ஊதுமத்தின் குழல்... (9-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	"உன்னைக்கூடி அடிமை செய்யும் நாள் எப்போதோ? என்று கேட்க; எம்பெருமான் மறுமொழி கூறுவதற்குள் அவன் உபேக்ஷித்ததாக நினைத்து அலமந்து தன் விசனத்தைக் கண்ணனைப் பிரிந்த ஒரு கோபிகையின்வார்த்தையாலே பேசுகிறார்.	277—281
மாலைநண்ணி... சரணமாகும்... (9-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	"இவ்வுடம்பின் முடிவுக்குப்பின் உமது விருப்பங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்கிறோம்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, அதனால் பேருவகை கொண்டு, "திருக்கண்ணபுரத்திலே எல்லோரும் எளிதில் வந்தடையும்படி ஸாந்நித்யம் பண்ணியிருக்கும் சௌரிராஜனைப் பற்றி உய்யுங்கோள்" என்று பிறருக்கு உபதேசிக்கிறார்.	281—284
(பத்தாம் பத்து) தாளதாமரை.... (10-ம் பத்து 1-ம் திருவாய்மொழி)	இனி பரமபதத்திற்கு எழுந்தருளவேண்டி, திருமோகூரிலே எழுந்தருளியிருக்கும் *காளமேகத்தை வழித்துணையாகப் பற்றுகிறார்.	285—288

* இது அத்தலத்து எழுந்தருளியுள்ள எம்பெருமானின் திருநாமமாகும்.

செய்யுட்களின்-முதற்குறிப்பு.	பொருள்.	பக்கம்
கெடுமிடர்.... புண்ணியஞ்-செய்து.... (10-ம் பத்து 2-ம் திருவாய்மொழி)	ஸ்ரீவைகுண்டத்தில் பரமபதநாதனுக்குச் செய்யவிருக்கிற அடிமைகள் யாவையும், அதற்கொப்பான 'திருவனந்தபுர'த்திலேயே செய்யவமையுமென்று ஆசைப்பட்டார்.	288—291
வேய்மருதோள் ... பணிமொழி... (10-ம் பத்து 3-ம் திருவாய்மொழி)	ஆசைப்பட்டபடியே உடனே திருவனந்தபுரத்தில் புகப்பெற்றிலர். அதனால் எம்பெருமான் இனியும் தன்னைக் கைவிடுவனோ என்று ஐயமுற்று, எம்பெருமான் தெளிவிக்கத் தெளிந்தார். இதை கண்ணனோடு கூடியிருக்கச் செய்தே, அவன் பிரிந்தானாக நினைத்து வருந்தி, அவனால் தெளிவிக்கப்பெற்ற கோபஸ்த்ரீயின் வார்த்தையாலே அருளிச்செய்கிறார்.	292—297
சார்வே... (10-ம் பத்து 4-ம் திருவாய்மொழி)	கீழ் 'வீடுமின்முற்ற'த்திலும், 'பத்துடையடியவரி'லும் பிறர்க்கு உபதேசித்த 'பக்தி' தமக்குப் பலித்ததை அருளிச் செய்கிறார்.	297—301
கண்ணன்-கழலிணை ... மாதவனென்-றென்று... (10-ம் பத்து 5-ம் திருவாய்மொழி)	பக்தியின் தன்மையையும், அதைப் பண்ணும் வகையையும் சுருக்கமாகச் சொல்லிப் பிறர்க்குபதேசித்துத் தலைக்கட்டுகிறார்.	301—303
அருள்பெறுவார்... (10-ம் பத்து 6-ம் திருவாய்மொழி)	இவ்வாறு பக்தி ஸ்வரூபத்தை உபதேசித்த ஆழ்வாருடைய வைலக்ஷண்யத்தைக்கண்டு எம்பெருமான் இவர்பால் அடங்காக் காதல்கொண்டு, இவரைத் தன்னு	303—309

செய்யுட்களின்- முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	டைச் சோதியிலே இத்திருமேனியுடன் கொண்டுபோகத் தீர்மானித்து இவருடைய அனுமதியை எதிர்பார்த்துத் திருவாட்டாற்றிலே தங்குவேட்டையாக வந்து நின்றதை அருளிச்செய்தார்.	
செஞ்சொற்கவிகாள்... நண்ணுவசுரர்.... (10-ம் பத்து 7-ம் திருவாய்மொழி)	ஆழ்வார்பக்கல் காதல்மிகுந்து இவரை இத்திருமேனியுடனேயே பரமபதத்துக்குக் கொண்டுபோக நினைத்த ஈச்வரன் "அது எனக்கு வெறுக்கத்தக்கது. அதை விட்டருளவேணும்" என்று ஆழ்வார் சரணம்புக, அவ்வாறே இசைந்தான். 'இப்படி ஒரு சீலம் இருக்கும்படியே! என்று வியந்தார்.	309—315
திருமாலிருஞ்சோலை... இன்றென்னை.... (10-ம் பத்து 8-ம் திருவாய்மொழி)	தன்னைக் கொண்டுபோவதற்காகத் துடிக்கிற எம்பெருமானைப் பார்த்து, "இன்று இவ்வளவு பேரன்பு காட்டும் தேவரீர் இவ்வளவு காலம் என்னைக் கைவிட்டிருந்ததென்கொண்டு? இன்று இவ்வாறு அளவுகடந்த காதல் கொண்டுள்ளதெதனால்? என்று ஆழ்வார் கேட்க; இதற்குச் சொல்லக்கூடிய பதில் ஒன்றையும்காணாமல் ஈச்வரன் திகைத்து நின்றதைப் பேசி, அவனுடைய அருளின் மேன்மையை வியந்து பேசுகிறார்.	316—322
சூழ்விசும்பணி.... வந்தவரெதிர்.... (10-ம் பத்து 9-ம் திருவாய்மொழி)	பரமபதத்திற்குப் போகும் 'அர்ச்சிராதி' மார்க்கத்தையும்; அங்கு நடக்கிற மரியாதைகளையும், அவ்வழியாலே பரமபதம்	322—324

செய்யுட்களின் முதற்குறிப்பு.	பொருள்	பக்கம்
	போய்ச் சேர்ந்து அங்கு அந்தமில் பேரின்பத்தடியரோடே கூடஇருந்தமையையும் பேசினர்.	
முனியே!... சூழ்ந்தகன்-ருழ்ந்து... அவாவற... (10-ம் பத்து 10-ம் திருவாய்மொழி)	இவ்வாறு அந்தமில் பேரின் பத்தடியரோடிருந்த ஆழ்வார் இது அகத்தினூடே தோன்றும் தோற்றமாகவும், இன்னும் தாம் சரீரத்துடன் இந்த லோகத்திலேயே இருப்பதையும் கண்டு பெரிதும் கலங்கி, இனி ஒரு கணமும் தன்னை இங்குவிட்டுவைக்கக் கூடாதென்று திருவாணையிட்டுப் பெருமிடறு செய்து கூப்பிட, எம்பெருமானும், கருடாரூடனுய், ஸ்ரீபூமிநீளாஸமேதனுய், தனக்கே யுரித்தான ஸகல திருவாபரணங்களையுமுடையனுய், திவ்ய மங்கள விக்ரகத்துடன் நேரில் வந்து தோன்றி, இவருடைய விடாயெல்லாம் தீரும்படி இவரை இந்த உடலினின்றும் விடுவித்துத் தன்னுடைச் சோதிக்குக் கொண்டுபோனதை அருளி செய்கிருர்.	325—333

சுபமஸ்து.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலையில் குறிப்பிடப்பெற்றுள்ள திவ்ய தேசங்களின் (திருப்பதிகளின்) இருப்பிடம் முதலியன :—

பக்கம்	திவ்ய தேசத்தின் பெயர்.	இருக்குமிடம்.	மற்ற விவரங்கள்.
14, 118	திருக்குறுங்குடி	திருநெல்வேலிக்குத் தெற்கே 26 மைல்.	நம்பி. குறுங்குடிவல்லி நாச்சியார். பஞ்சகேதக விமானம். கிழக்கே திருமுகமண்டலம் நின்ற திருக்கோலம்.
46, 310	திருமாலிருஞ்சோலை	மதுரைக்கு வட கிழக்கே 12 மைல்.	அழகர். மாலலங்காரர். சுந்தரவல்லி நாச்சியார். சோமசுந்தர விமானம். சிலம்பாறு. கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.
54, 73, 173, 229	திருவேங்கடம் (திருப்பதி)	சித்தூர் ஜில்லா	திருவேங்கடமுடையான் (ஸ்ரீநிவாஸன்) அலர் மேல்மங்கைத்தாயார். கிழக்கே திருமுகமண்டலம் நின்றதிருக்கோலம்.
96	துவாரகை	பம்பாய் நகருக்கு வடக்கே 74 மைல்.	கல்யாணநாராயணன். கல்யாண நாச்சியார். அஷ்டமஹிஷிகள். மேற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம்.

பக்கம்	திவ்ய தேசத்தின் பெயர்	இருக்குமிடம்	மற்ற விவரங்கள்
105	திருக்குருகூர் (ஆழ்வார்திருநகரி)	திருநெல்வேலிக்குக் கிழக்கே 19 மைல்.	ஆதிநாதப் பெருமாள். பொலிந்து நின்ற பிரான். ஆதிநாதவல்லி. கோவிந்த விமானம். கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.
124	வானமாமலை	திருநெல்வேலிக்குத் தெற்கே 18 மைல்.	தெய்வநாயகன். சிரீவரமங்கை நாச்சியார். கிழக்கே திருமுக மண்டலம். வீற்றிருந்த திருக்கோலம்.
126, 230	திருக்குடந்தை (கும்பகோணம்)	கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கே 1 மைல்.	சார்ங்கபாணிப் பெருமாள். (ஆராவமுதன்.) கோமளவல்லி நாச்சியார். கிழக்கே திருமுக மண்டலம். உத்தியோக சயனம்.
135	திருவல்லவாழ்	திருவாங்கூர் ஸம்ஸ்தானம் அம்பலப்புழைக்கு வடக்கே 20 மைல்.	கோலப்பிரான். செல்வத்திருக்கொழுந்து நாச்சியார். கிழக்கே திருமுக மண்டலம் நின்றதிருக்கோலம்.
141	திருவண்வண்டூர்	அம்பலப்புழைக்குக் கிழக்கே 16 மைல்.	பாம்பணையப்பன். கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.

பக்கம்	திவ்ய தேசத்தின் பெயர்	இருக்குமிடம்	மற்ற விவரங்கள்
148	திருவிண்ணகர்	கும்பகோணத்திற்கு கிழக்கே 3 மைல்.	ஒப்பிலியப்பன். பூமிதேவிநாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம்.
154	தொலைவில்லிமங்கலம்	திருநெல்வேலிக்கு வடக்கே 25 மைல்.	தேவபிரான். அரவிந்தலோசனன். கருந்தடங் கண்ணி. கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். வீற்றிருந்த திருக்கோலம்.
159	திருக்கோளூர்	திருநெல்வேலிக்குக் கிழக்கே 20 மைல்.	வைத்தமாநிதி. கோளூர்வல்லி நாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம். புஜங்க சயனம்.
184	திருவரங்கம் (ஸ்ரீரங்கம்)	ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கே 1 மைல்.	ஸ்ரீரங்கநாதன். ஸ்ரீரங்கநாயகித்தாயார். தெற்கே திருமுக மண்டலம். சயனத் திருக்கோலம்.
189, 316	திருப்பேரை	திருநெல்வேலிக்குக் கிழக்கே 24 மைல்.	மகர நெடுங்குழைக்காதன். குழைக்காதுவல்லி நாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம்.
221	திருவாறன்விளை	கொல்லத்துக்கு வடகிழக்கே 62மைல்.	திருக்குறளப்பன். பத்மாஸந நாச்சியார். வடக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம்.

பக்கம்	திவ்ய தேசத்தின் பெயர்	இருக்குமிடம்	மற்ற விவரங்கள்
238	திருச்செங்குன்றூர்	கொல்லத்துக்கு வடகிழக்கே 58மைல்.	இமையவரப்பன். செங்கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.
239, 241, 242	திருக்கடித்தானம்	அம்பலப்புழைக்கு வடகிழக்கே 20மைல்.	அற்புத நாராயணன். கற்பகவல்லித்தாயார். கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.
249	திருப்புலியூர்	கொல்லத்துக்கு வடகிழக்கே 61 மைல்.	மாயப்பிரான். பொற்கொடி நாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம் நின்றதிருக்கோலம்.
256	வடமதுரை	மட்ரூ ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வடமேற்கே 9 மைல்.	கோவர்த்தனேசன். சத்தியபாமை. கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம்.
258	திருப்புளிங்குடி	திருநெல்வேலிக்கு கிழக்கே 17 மைல்.	காய்சின வேந்தன். மலர்மகள் நாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம். புஜங்க சயனம்.
269	திருக்காட்கரை	இடைப்பள்ளி ரயில்வே ஸ்டேஷனுக்கு 2 மைல் தூரம்.	அப்பன். பெருஞ்செல்வநாயகி. தெற்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம்.

பக்கம்	திவ்ய தேசத்தின் பெயர்	இருக்குமிடம்	மற்ற விவரங்கள்
272	திருமூழிக்களம்	கரிக்குட்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு 4 மைல் தூரம்.	திருமூழிக்களத்தான். மதுரவேணி நாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.
274	திருநாவாய்	திருவாங்கூர் ஸம்ஸ்தான ரயில்வே இடக்குளம் ஸ்டேஷன்.	நாராயணன். மலர்மங்கை நாச்சியார். தெற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம்.
281	திருக்கண்ணபுரம்	நன்னிலம் ஸ்டேஷனுக்கு $4\frac{1}{2}$ மைல் தூரம்.	சௌரிராஜன். கண்ணபுரநாயகி. கிழக்கே திருமுகமண்டலம். நின்றதிருக்கோலம்.
285	திருமோகூர்	மதுரைக்கு வடகிழக்கே 7 மைல்.	காளமேகப்பெருமாள். திருமோகூர்வல்லி நாச்சியார். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம்.
288	திருவனந்தபுரம்	திருநெல்வேலிக்குத் தென்மேற்கே 88 மைல்.	அநந்தபத்மநாபன். ஸ்ரீ ஹரிலக்ஷ்மி. கிழக்கே திருமுகமண்டலம். புஜங்க சயனம்.
303	திருவாட்டாறு	திருவனந்தபுரத்துக்குத் தென் கிழக்கே 28 மைல்.	ஆதிகேசவப்பெருமாள். மரகதவல்லி நாச்சியார். கிழக்கே திருமுகமண்டலம். புஜங்கசயனம்.

திருவாய்மொழி வாசகமாலை ஓலைச்சுவடியில் உள்ள

ஸ்ரீ ஆராவமுதன் - படம்



ஆரா வமுதே! யடியே னுடலம் நின்பா லன்பாயே-
நீரா யலைந்து கரைய வருக்கு கின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசுஞ் செழுநீர்த் திருக்குடந்தை-
ஏரார் கோலந் திகழக் கிடந்தாய்! கண்டே னெம்மானே!

(திருவாய்மொழி வாசகமாலை126-ம் பக்கம்)

பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும்நம் அரும்பெற லடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு
எத்திறம்! உரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே.

(திருவாய்மொழி-1-3-1)

நடந்த கால்கள் நொந்த வோ! ந டுங்க ஞால மேனமாய்-
இடந்த மெய்கு லுங்க வோ! வி லங்கு மால்வ ரைச்சுரம்-
கடந்த கால்ப ரந்த காவி ரிக்க ரைக்கு டந்தையுள்
கிடந்த வாறெ ழுந்தி ருந்து பேசு வாழி கேசனே!

(திருமழிசை ஆழ்வார்)

* சுவடியில் படத்தின் இடது புறம் உள்ள வாசகம் வருமாறு :—

தடுமாபோலே நெஞ்சையும கூடடிககொணடு விழிகிறார। எமமானே எனறு सम्बोधिககிறன வடிவோடொகக प्राप्तिயையிடடு எனனைகலிய வெணுமோ வெனகிறார। எமமானே சுடாடி தொழு தெழு எனமனமே। ஆழவாரை லபிககையால வநத प्रीतिயாலே துயராறு சுடாடி யாறறு। என மனமே अपर्याप्तामृत பாநததாலே களிறறு ஆநநதியாதே ஶேஷवृत्तिயாக அஞசலியைபபணணி வாததி என व्याமோஹமு முன व्याமோஹமும அவன व्याமோஹததிலககுளபபடி யாறறே। அதனை கணடிறுமாதே தொழு தெழு எனகிறார। अपचारानिमान् सर्वान् क्षमस्व पुरुषोत्तम.

ஆராவமுதாழவான திருவடிகளே சரணம.

---

*சுவடியில் வடமொழி எழுத்துக்கள் க்ரந்த எழுத்தில் உள்ளன. அவை இங்கு நாகா எழுத்தில் அச்சிடப்பெற்றுள்ளன.

குறிப்பு :— ஷை வாசகம் ஓலைச்சுவடியில் உள்ளபடியே அச்சிடப் பெற்றுள்ளது. பண்டை நாட்களில் ஓலைச்சுவடிகளில் எழுதும் முறை இதுவேயாகும். அதிலும் இந்நூல் முழுதும் எழுத்துப் பிழைகள் அதிகமாகவே உள்ளன. இதன் திருத்தப்பட்ட வாசகம் இந்நூலில் 134-ம் பக்கத்தில் 15வது வரியிலிருந்து 27வது வரி வரைக்கும் அச்சிடப் பெற்றிருப்பதைக் காணலாம்.

பட விளக்கம்

திருவாய்மொழி ஐந்தாம்பத்து எட்டாம் திருவாய்மொழி விவரணம் முடியுமிடத்தில இந்நூலாசிரியர் (ஓலைச்சுவடியில் 62 வது ஏட்டின் பின்புறத்தில்) எழுத்தாணி முனையால் இப் படத்தை வரைந்துள்ளார்.

இதில் மூன்று சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. (1) (இடதுபுறம்) திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கிறார். (2) (மத்தியில்) நாயிகாபாவம் (பக்தியின் மேலீட்டால் தன்மை யழிந்து ஒரு தலைமகளின் நிலைமை) அடைந்துள்ள நம்மாழ்வார் ஞானமுத்திரைக்கையுடன் பெண் வடிவத்தில் காட்சியளிக்கிறார். (3) (வலதுபுறம்) அன்னை யசோதையால் உரலினோடு இணைத்துக் கட்டப்பெற்ற மாமாயன் கண்ணபிரானும் இரட்டை மருத மரங்களும்.

(1)

தனது மென்மையான நீண்ட உடலை மூன்று தாம் ஒன்றன்மேல் ஒன்றாக நன்கு பொருத்தி, ஐந்து தலைகள் உள்ள அகன்ற படத்தை எம்பெருமான் திருமுடிக்கு மேற்புறம் குடைபோல் விரித்துப்பிடித்தவண்ணம் ஸ்ரீ ஆதிசேஷன் அற்புதமாகக் காட்சியளிக்கிறார். இவ்விதமான பாம்பணையில் ஸ்ரீ ஆராவமுதன் கண் வளர்ந்தருளுகிறார். தலையணையில் திருமுடியை வைத்துக்கொண்டு, ஒரு திருக்கையைத்தலையணையிலேயே வைத்து, மற்றொரு திருக்

கையை உடம்பில் மேல்புறம் நெடுகச் சேரவைத்துக்கொண்டு பள்ளிகொண்டுள்ளார். தனக்கே உரித்தான திவ்ய பீதாம்பரமும் கைகளிலும், திருமார்பு கழுத்து-காதுகள் போன்ற மற்ற அவயவங்களிலும் பல திருவாபரணங்களையும் செவ்வனே அணிந்து கொண்டு, திருமுடியில் *திருவபிஷேகமும், நெற்றியில் திலகமும் திகழ; இவ்வணிவரிசைகளுக்கெல்லாம் அழகு கொடுக்க வல்ல கம்பீரமான திருமேனியுடன் 'ஏரார்கோலந்திகழக் கிடக்கிறார் எம்பெருமான்.

ஆதிசேஷனுடைய ஐந்து தலைகளிலும் கண்களும், இரண்டாகப்பிரிந்த நாக்குகளும் தெளிவாக வரையப்பட்டுள்ளதும்; எம்பெருமான் அணிந்துள்ள பூமாலை, தோள்களில் அகன்று தெரிந்தும் இருகைகளின் கீழ் அது குவிந்து மீண்டும் இடுப்பின் இருபுறமும், விரிந்து தோன்றுவதும்; தலையணை எம்பெருமானுடைய திருமேனிக்கேற்றவாறு நன்கு அமைந்திருப்பதும் இவ்வாசிரியரின் ஓவியத்திறனை எடுத்துக்காட்டுகின்றன.

திருவாய்மொழியெனும் பாமாலையில் நடுநாயகமாகத்திகழும் இவ்வெம்பெருமான், ஒருகாலத்தில் உலகெங்கும் வழங்கப்படாமல் மறைந்து போயிருந்த திருவாய்மொழியெனும் செஞ்சொற்கவிகளாயிரத்தையும் மீண்டும் *ஸ்ரீமந்நாதமுனிகள் வாயிலாகத் தோற்றுவித்து உலகை உய்வித்ததனால் 'தமிழ்மறைதந்த கடவுள் எனப்போற்றப்படுபவர். 'நீயும் உன்றன் பைந்நாகம் பாய் சுருட்டிக்கொள்' நீயும் உன்றன் பைந்நாகம் பாய் படுத்துக் கொள், 'உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே' என்கிறபடி, திருமழிசை ஆழ்வார் இவ்வெம்பெருமானையும் 'கிடந்தவாறெழுந்திருந்து பேசு' என்று தைரியமாய்க்கட்டளையிட்டு; அப்படியே செய்த்துணிந்த இவ்வடியார்க்கன்பனை அவ்வளவிலேயே நிற்கும்படி உத்தரவிட்டு, 'வாழிகேசனே! என்று தன் சொற்படி நடந்ததற்காக அவனை வாழ்த்தித்தன் பக்தி வெள்ளத்திற்குப் போக்குவிட்டுக்கொண்டார். அத்துணை

* கிரீடம்

* மறைந்து போன திருவாய்மொழியைத்தன் தவவலிமையால் மீண்டும் பெற்று உலகெல்லாம் பிரசாரம் செய்த வைணவாசாரியர். 'ஆராவமுதே' என்னும் பதிகத்தின் கடைசிப்பாட்டில் 'ஆயிரத்துளிப்பத்தும்' என்றிருந்ததைக் கேட்டபிறகே இவர் இது போல் 1000 பாட்டுக்கள் உள்ளன என்பதை அறிந்தார். 'ஆராவமுதே' எனும் பதிகம் ஒன்றுதான் அழியாமல் காப்பாற்றப்பட்டுவந்தது மற்ற பிரபந்தத்தின் முழுப்பகுதியையும் கண்டெடுக்க வழிகாட்டியாயிருந்தது.

தைரியம் வாய்க்கப்பெறாத நம்மாழ்வார் இவ்வாராவமுதத்தில் தோய்ந்து கட்டுக்கடங்காத அன்பு வெள்ளத்தின் வேகத்தினால் உடலும் உயிரும் நீராயலைந்து கரையவுருகி; அவனும் அடியவர் பால் அடங்காக்காதல் கொண்டு மோஹித்து விழுந்துகிடப்பதைக் கண்டு'நெடுமாலே'என்றும்'ஏரார்கோலந்திகழக்கிடந்தாய்!கண்டேனெம்மானே!" என்றும் பாடி அனுபவித்சார். இங்கு கவனிக்க வேண்டிய அரிய பெரிய கருத்துக்களை இந்நூலில் 126 முதல் 134 வரை உள்ள பக்கங்களில் காண்க.

(2)

எம்பெருமானிடம் அளவுகடந்த அன்பு கொண்டு அவனோடு பலவிதமான பரிமாற்றங்களையும் பெறவிரும்பி, அது கிட்டாமையால் மனங்கலங்கி அதனால் ஒரு நாயிகையின் (தலைமகளின்) நிலைமையை அடைந்த நம்மாழ்வார் தலைவிக்கேற்றகோலத்துடன் உபதேசமுத்திரைக்கையுடன் மத்தியில் காட்சியளிக்கிறார். (இப்படம் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் படமாகவும் கொள்ளலாம்)

(3)

கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெ மாயன் கண்ணன், தன்னுடைய அழகிய திருமேனியில் குழந்தைப் பருவத்திற்கேற்ப நன்கு அலங்கரிக்கப்பெற்று, இடுப்பில் உரலினோடு இணைத்துக்கட்டப்பெற்று, இரட்டைமருதமரங்களின் நடுவே தவழ்ந்து சென்ற வண்ணம் காட்சிதருகிறார். உரல் மருதமரங்களின் இடையில் மாட்டிக்கொண்டு, மேலும் தான் தவழ்ந்து செல்வதைத்தடை செய்ததனால், முழங்கால்களினால் தரையில் ஊன்றி நின்ற வண்ணம் பின்புறம் திரும்பி இரு கைகளாலும் கயிற்றைப்பிடித்துப்பலமாக இழுக்கிறார். 'எத்திறம் உரலினோடிணைந்திருந்தேங்கிய எளிவே' என்று சொல்லி ஆறு மாதகாலம் ஆழ்வார் மோஹித்துக்கிடந்தாரென்பர் ஆன்றோர்.

பண்டைக்காலத்தில், நூல்கள் எழுதுவதற்குப்போல் ஓவியம் வரைவதற்கும் ஓலை ஏடுகள் உபயோகிக்கப்பட்டு வந்தனவென்பதையும்; சிறிதும் பிரயாசையில்லாமல் வேகமாக ஓலையில் எழுத்துக்களை எழுதுவதுபோலவே சித்திரங்களை வரைவதும் அவர்களுக்கு ஸஹஜமாயிருந்ததென்பதையும் இப்படம் விளக்குகின்றது.

சித்திரம் வரைந்துள்ள ஏட்டின் பின்புறம் நூலின் வாசகங்கள் தொடர்ந்து எழுதப்பட்டு (ச்சித்திரத்தின் இடதுபுறம்) இந்தப் பக்கத்திலும் வந்துள்ளன. இதிலும் பாக்கியாயிருந்த வாசகத்தின் சிறு பகுதி, ஏட்டின் மேற்புறத்தில், ஸ்ரீ ஆராவமுதன் இடது கை நுனிக்கும் ஆழ்வாருடைய திருமுடிக்கும் இடையிலுள்ள சிறிய இடைவெளியிலும்; கிருஷ்ணனுக்கும் மருதமரங்களுக்கும் இடையிலுள்ள இடத்திலும் எழுதப்பட்டிருப்பது, இந்நூலாசிரியரின் எழுத்தாணி, எழுத்துக்கள்-சித்திரம்-இவ்விரண்டிலும் வேற்றுமையின்றி வேகமாகச்செல்லவல்லது என்பதை நிரூபிக்கிறது.

ஸ்ரீ:

தனியன்கள்

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்.
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம். 1

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே.
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ ச்ரணம் ப்ரபத்யே. 2

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிः
ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்.
ஆத்யஸ்ய நः குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா. 3

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்.
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஸ்ராந்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம். 4

திருவாய்மொழித் தனியன்கள்

பக்தாம்ருதம் விஸ்வஜநாநுமோதநம்
ஸர்வார்த்ததம் ஸ்ரீசடகோபவாங்மயம்.
ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிடவேதஸாகரம். 5

திருவழுதி நாடென்றுந் தென்குருகூ ரென்று
மருவினிய வண்பொருநலென்றும்—அருமறைக
ளந்தாதி செய்தா னடியிணையே யெப்பொழுதும்
சிந்தியாய் நெஞ்சே! தெளிந்து. 6

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன் —தனத்தாலும்
ஏதுங் குறைவிலேன் எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று. 7

ஏய்ந்தபெருங் கீர்த்தி யிராமா நுசமுனிதன்
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன்—ஆய்ந்தபெரும்
சீரார் சடகோபன் செந்தமிழ்வே தந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற. 8

வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும்—ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமா நுசன். 9

மிக்க விறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையு மோதும் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல். 10

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீः

திருவாய்மொழி வாசகமாலை அவதாரிகை.

ஸ்ரியः பதியான ஸர்வேச்வரன்; இவ்விருள் தருமாஞாலத்தே ஓடியோடிப் பல பிறவிகளிலும் தோன்றித்தோன்றி எல்லையற்ற துன்பங்களை அனுபவித்துத் தன் உண்மையான ஸ்வரூபத்தை மறந்து தவிக்கும் எண்ணற்ற உயிர் (ஜீவாத்மாக்)களை உய்வித்து, நற்கதியை அடைவிப்பதற்காகத் தோற்றுவித்த தத்துவோபதேசநூல்களுள் "திருவாய்மொழி" யெனப்படும் செஞ்சொற் கவிகளாயிரமும் ஒன்றாகும். இது தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களுள் தலைசிறந்தவரும், மயர்வறமதிநல மருளப்பெற்றவரும், 'உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனெம்பெருமான்' என்றிருந்தவருமான நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட அந்தாதித்தொடையில் அமைந்துள்ள பிரபந்தங்கள் நான்கனுள் கடையானதாம். பக்தசிகாமணியாகிய நம்மாழ்வார், எம்பெருமானையும், அவனுடைய திவ்யமங்கள விக்ரகம், நற்குணங்கள், திவ்யாயுதங்கள், திருவாபரணங்கள், திருவிளையாடல்கள் இவைகளையும் உள்ளபடியே அறிந்து அனுபவித்து, அதனால் அடங்காக் காதல்கொண்டு வாயினாற்பாடியல்லது தரிக்கமுடியாத நிலையில் இப்பாடல்களைப் பாடியுள்ளார். இந்தப் பொய்யில்பாடல்கள், வேதத்தினுட்பொருளை எல்லோரும் ஒருவிதமான வரையறையுமின்றி அறிந்து உய்யுமாறு எடுத்துரைத்தலாலும், தேனினுமினிய தமிழ்மொழியில் தோன்றியுள்ளமையாலும், எம்பெருமான் தன்னாலேயே உலக க்ஷேமார்த்தமாக ஆழ்வாரை வியாஜமாகவைத்துப் பாடப்பெற்றுள்ளமையினாலும், (திருவாய்மொழி 7-9-1) 'தமிழ்மறை,

என்றும்' 'தமிழ்வேதம்' என்றும் ஆன்றோரால் புகழப்படும். தமிழகத்துக்கலைக்கோயில்களில் சிறந்ததாகிய இத்தெய்வீகப் பாடல்களில், எம்பெருமானுடைய பெருமைகளையும், பல்வேறு அவதாரங்களையும், திருவிளையாடல்களையும் ஆழ்வாரைப்போல் நாமும் ப்ரத்யக்ஷமாகக் கண்டு களிக்கிறோம். இதன் அருமை பெருமைகளை நன்குணர்ந்த நம் முன்னோர்கள் இவைகளைச் சிரத்தையுடன் காப்பாற்றி, உரைகளும் எழுதிவைத்துள்ளனர். மேலும் அடியார்கள் பலரும் குழாங்களாகக்கூடி, எம்பெருமான் திருமுன்பே பலகாலும் இப்பாடல்களைப்பாடிக் கேட்போர் மனதை வசீகரித்து, உலகை உய்விக்கவும் வகைசெய்துள்ளனர். 'திருவாய்மொழி வாசகமாலை' என்னும் இந்நூல், திருவாய்மொழியின் உரைகளுள் இதுகாறும் அச்சிடப்பெறாத அரியதோர் உரை நூலாகும். ஏனைய உரைநூல்கள்போல் இதுவும் மணிப்ரவாள நடையிலேயே அமைந்துள்ளது. திருவாய்மொழிப்பாடல்கள் யாவற்றுக்கும் இதில் உரை எழுதப்படவில்லை. 1102 பாடல்கள் கொண்டதான இத்திருவாய்மொழியில் 100 பாட்டுக்களுக்கே இந்நூலில் உரை எழுதப்பெற்றுளது. ஆனால் இந்த 100 பாட்டுக்களும் முதலிலிருந்து வரிசைக்கிரமமாக எடுக்கப்படவில்லை. நூறு பதிகங்களாக வமைந்துள்ள இப் ப்ரபந்தத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் ஒவ்வொரு பாடல்வீதம் 100 பாட்டுக்கள் இவ்வுரைநூலில் விவரிக்கப் படுகின்றன. அதனாலேயே இதற்கு "விவரணசதகம்" (நூறு விவரணங்கள் உள்ள நூல்) என்னும் மறுபெயரும் ஆசிரியராலேயே இடப்பெற்றுளது. அதிலும் ஒரு தனியான கொள்கை இவ்வாசிரியரால் பின்பற்றப்படுகிறது. 'திருவாய்மொழி ஆயிரம் பாட்டுக்களில் எதை எடுத்தாலும் அதன் கருத்து, திருவாய்மொழியின் முதல்பாசுரமாகிய 'உயர்வற' என்னும் பாட்டிலேயே அடங்கியுள்ளது, பெரிய ஆலமரம் அதன் சிறு விதைக்குள் அடங்கியிருப்பதைப்போல. அதனால் முதல்பாட்டையே விவரிக்கின்றன மற்ற திருவாய்மொழிச் செய்யுட்கள் யாவையும், என்பதே அக்கொள்கை. இக்கொள்கையை நிரூபிப்பதற்காகவே இந்நூலை இயற்றியுள்ளார் எனலாம். இவ்வாறு முதற்பாட்டின் தனிப்பெருமை எற்கெனவே பூர்வாசார்யர்களால் எடுத்துரைக்கப்பட்டதேயாயினும், இதற்காகவே ஒரு உரைநூல் எழுதப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. இதன் ஆசிரியர் 'திருக்கேனேரி தாஸ்யை' என்பவர். 'அடிமை செய்தாள் 'திருக்கேனேரிதாஸ்யை' என்று ஓலைச்சுவடியின் இறுதியில எழுதியுள்ளதால, இவர்பெண்பால் என்றும், தன் கையாலேயே இந்நூலை எழுதியுள்ளாரென்றும் அறியலாகும். தன் ஆசார்யர்களை வணங்குவதாகக்கூறும் சொற்றொடர்களைக் கடைசியில் சேர்த்திருப்பதனால், இது தாங்

தோன்றியாக இவரால் எழுதப்படவில்லை என்பது புலனாகிறது. துரதிர்ஷ்ட வசமாக இந்நூலின் முதல் 13 ஏடுகளும், 15-16 வது ஏடுகளும், மறைந்துவிட்டன. அதில் இந்நூலை எழுதுவதற்கான அவசியத்தையும், இச்கருத்துக்கள் தனக்குக் கிடைத்த வரலாற்றையும், மற்ற இன்றியமையாத தகவல்களையும் இவ்வாசிரியர் திண்ணமாக உரைத்திருப்பர். இப்பொழுது கிடைத்துள்ள ஏட்டுப் பகுதியில் *முதல்பத்து 6ம்திருவாய்மொழி விவரணம் பாதியிலிருந்து இந்நூலின் வாசகங்கள் தொடங்குகின்றன. பிறகு 7ம் திருவாய்மொழி விவரணம் முடிந்ததும், மீண்டும் 8-ம் திருவாய்மொழி விவரணம் முழுமையும், 9-ம் திருவாய்மொழி விவரணத்தின் ஆரம்பப்பகுதியும் இல்லை. அதிலிருந்து நூல்முழுதும் தொடர்ச்சியாக உளது. ஓலைச்சுவடியில் எழுதும் வழக்கப்படி ஆங்காங்கு, தொடக்கம் முடிவு இவை காட்டப்படாமல் ஒரே தொடர்ச்சியாக நூல்முழுவதும் எழுதப்பெற்றுள்ளது. வாசகர்களின் ஸௌகரியத்தை உத்தேசித்து ஒவ்வொரு 'விவரணத்தின் ஆரம்பம் முடிவு இவைகளைக்குறிக்கும் தலைப்புகளையும், அதற்கான திருவாய்மொழிச்செய்யுட்களையும், அவசியமான அடிக்குறிப்புக்களையும் சேர்த்து வெளியிட்டுள்ளோம். திருவாய்மொழியின் முதற்பாட்டு இந்நூலின் தன்மைக்கு இன்றியமையாததாகலின் அது மட்டும் பதவுரையுடன் சேர்க்கப்பட்டுளது.

---

* 110 பாட்டுக்கள் கொண்ட ப்ரபந்தத்தின் பகுதி 'பத்து' என்றும் 11 பாட்டுக்கள் கொண்ட பகுதி (பதிகம்) திருவாய்மொழி' என்றும் வழங்கப்பெறும்.

ஸ்ரீ:

திருவாய்மொழி முதற்பத்து

முதல் திருவாய்மொழி முதற்பாட்டு

(கலிவிருத்தம்)

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!

(பதவுரை) உயர்வு அற=மற்ற பொருள்களுக்குத் தன்னைக்காட்டிலும் அதிகமான உயர்த்தியில்லாதபடி; உயர்நல முடையவன்=உயர்ந்த நல்ல குணங்களை உடையவன், யவன்=யாவனொருவன், அவன்=அவனுடைய; மயர்வு அற=அஜ்ஞானம் நீங்கும்படி; மதிநலம் அருளினன்=தன் விஷயத்தில் நல்ல அறிவையும், பக்தியையும் (எனக்கு) தயையினால் கொடுத்தவன்; யவன்=யாவனொருவன், அவன்=அவனுடைய; அயர்வு அறும் அமரர்கள்=மறதியில்லாத நித்ய ஸூரிகளுக்கு, அதிபதி=நாயகன், யவன்=யாவனொருவன், அவன்=அவனுடைய, துயரறு=ஸகலவிதமான துன்பங்களையும் போக்க வல்லதான, சுடரடி தொழுது=தேஜஸ் மிகுந்த திருவடிகளைத் தொழுது—கைங்கர்யங்களைப்பண்ணி; எழு என் மனனே!—என்னுடைய மனமே! உஜ்ஜீவிக்கப்பார்.

முதற்பத்து இரண்டாம் திருவாய்மொழி—முதற்பாட்டு

(வஞ்சித்துறை)

வீடுமின் முற்றவும் வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை வீடுசெய்ம் மின்னே.

முதற்பத்து மூன்றாம் திருவாய்மொழி—முதற்பாட்டு

(கலிநிலைத்துறை)

பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய
வித்தகன் மலர்மகள் விரும்புமந்ம் அரும்பெற லடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு
எத்திறம்! உரலினோ டிணைந்திருந் தேங்கிய வெளிவே.

முதற்பத்து நான்காம் திருவாய்மொழி—முதற்பாட்டு

(தரவுகொச்சகக்கலிப்பா)

அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய்! நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவாவென் றெனக்கருளி
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தார்க்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்
வன்சிறையி லவன்வைக்கில் வைப்புண்டா லென்செயுமோ?

முதற்பத்து ஐந்தாம் திருவாய்மொழி—முதற்பாட்டு

(அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

வளவே ழுலகின் முதலாய
வானோ ரிறையை அருவினையேன்
'களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட
கள்வா! வென்பன் பின்னையும்
தளவேழ் முறுவற் பின்னைக்காய்
வல்லா னாயர் தலைவனாய்
இளவே றேழும் தழுவிய
வேந்தாய்! என்பன் நினைந்துநைந்தே.

(இனி அடுத்த பக்கத்திலிருந்து ஓலைச்சுவடியில் உள்ளபடி அச்சிடப் பெற்றுள்ளது. அடிக்குறிப்பு-தலையங்கங்கள் - முதலியவை மட்டும் புதிதாய் சேர்க்கப்பட்டவையாகும்.)

ஆறுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(வஞ்சிவிருத்தம்)

பரிவதி லீசனைப் பாடி, விரிவது மேவ லுறுவீர்!
பிரிவகை யின்றிநன் னீர்தூய்ப் புரிவதுவும் புகை பூவே. 1

கத [1]ஆச்ரயணீயன் ஆரென்ன, மயர்வற மதிநலமருளினன். அத்தாலே [2]தேவதாந்தரபஜந மற்று, அருளின பக்தியாலே ஸுகரமாக பகவத்ஸமாச்ரயணம் பண்ணப்பெற்றேன்.

நீங்களும் 'விரிவது மேவலுறுவீர்' அயர்வறுமமரர்களதிபதியானவனை ஆச்ரயித்து [3] விஸ்த்ருதராகவேண்டியிருப்பீர்.

பிரிவகையின்றி நன்னீர் தூவி, சற்றும் அசராமல் ஆச்ரயிக்கிற [4]நித்யருக் கதிபதியாய் [5] நியந்தாவானவனைத் துயரறு சுடரடி தொழுது.

'பிரிவகையின்றி நன்னீர் தூவி புரிவதுவும் புகைபூவே' பிரிவகையின்றி—[6]அயோக்யனென்றகலாதே. நன்னீர் தூவி—ஏலாதி [7]ஸம்ஸ்காராதிகள் வேண்டா. துயரறு சுடரடிகளாகையாலே, புரிவதுவும் புகைபூவே—ஏதேனும் பூவும் புகையுமமையும். 'கள்ளார் துழாயு' மித்யாதி.

---

[1] ஆச்ரயணீயன் (**आश्रयणीयन्**)—பக்தி பண்ணுதல்—அடைக்கலம் புகுதல்-இவை ஆச்ரயணம்' எனப்படும். இதற்குத் தகுந்தவன்
[2] தேவதாந்தரபஜநம் (**देवतान्तरभजनम्**) வேறு தெய்வங்களிடம் பக்தி பண்ணுதல்.
[3]விஸ்த்ருதர் (**विस्तृतर्**) விரிந்த (மழுங்காத) அறிவுடையவர்.
[4]நித்யர் (**नित्यर्**) ஸர்வகாலமும் பகவானை அனுபவிப்பவர்கள். புண்யம்-பாபம் எனப்படுகிற கர்மங்களின் ஸம்பந்தமற்றவர்கள். இயற்கையிலே ஸ்வயம்பிரகாசமான அறிவு, ஸம்ஸார தாபங்களால் மழுங்கப்பெறாதவர்கள். இந்நிலைமை என்றும் (முக்காலமும்) உள்ளதாகையால் 'நித்யர்' எனப்படுபவர். [5] நியந்தா (**नियन्ता**)—ஏவுகிறவன். [6] அயோக்யன் (**अयोग्यन्**)—எல்லா வஸ்துக்களையும் காட்டில் மேற்பட்டவனாகையாலே எல்லாவற்றிலும் தாழ்ந்த என்போல்வார்க்குப் பூஜிக்கத்தகாதவன்.
[7] ஸம்ஸ்காரம் (**संस्कारः**) —ஏற்றத்தைக் கொடுப்பது.

சுடரடி தொழுதெழென் மனனே! இப்படி ஸுலபமாய் ஸுகமான திருவடிகளைத்தொழுது [8] வர்த்தி என்கிறார்.

ஆறும் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

பிறவித் துயரற ஞானத்து ணின்று
துறவிச் சுடர்விளக் கந்தலைப் பெய்வா
ரறவனை யாழிப் படையந் தணனை
மறவியை யின்றி மனத்து வைப்பாரே. 1

பிறவித்துயரில் கீழ்ச்சொன்ன ஆச்ரயணந்தான் போகரூபமாயிருக்குமென்றார். இப்படி போக்யனானவனைவிட்டுப் ப்ரயோஜனாந்தரத்தைக் கொண்டு அகலுவதே! என்று [1]கேவலரை நிந்திக்கிறார்.

'உயர்வற' என்கிற பாட்டைப் 'பிறவித்துயர்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேஎன்னில்; [2] மனுஷ்யானந்தந்துடங்கி [3] ப்ரம்மானந்தத்தளவும் [4] காம்யபலங்களையும், அதுக்கு மவ்வருகான [5] கைவல்யத்தையும் பெறுவதேயென்று கேவலரை நிந்திக்கிறார்.

---

[8] வர்த்தி (वर्धि) —வளருவாய்.

[1] கேவலர் (केवलर्) பகவானைத் தியானம்செய்து அதன்மூலம் அவனுடைய அருளைப்பெற்றும், அதன்பயனாக அவன் திருவடிகளைப்பெற விரும்பாமல், ஸம்ஸாரத்தினின்றும் விடுபட்டதான சுத்தமான ஜீவாத்மாவின் (தன்னுடைய) ஸ்வரூபத்தையே கண்டு திருப்தியடைபவர். இதிலும் பன்மடங்கு உயர்ந்ததான ப்ரம்மானந்தத்தை இழந்து நிற்பவர்.

[2] மனுஷ்யானந்தம் = யௌவனப்பருவத்தினனாயும், தன்னைப் போன்ற பலயுவர்களுக்கு நல்ல ஆசானாகவும், நன்றாக உணவை உட்கொள்பவனும், நல்ல புஷ்டியும் பலமும் உள்ளவனுமான ஒருவனுக்கு ஏராளமான பணமும் இருந்தால், அவன் அநுபவிக்கிற ஆனந்தம். [3] ப்ரம்மானந்தம்=முன்பு சொன்ன மனுஷ்யானந்தத்தைப்போல் பலநூறுமடங்கு அதிகமானது ப்ரம்மத்தினுடைய ஆனந்தம். தைத்திரீயோபநிஷத்தில் ஆனந்த வல்லியில் கண்டுகொள்க. [4] காம்யபலம் (काम्यफलम्)=மனிதன் தானாக உலகவியற்கையை அனுஸரித்துப் பெறவிரும்பும் பேறு. (மோக்ஷம்தவிர) ஆரோக்யம் திடகாத்திரம் தனதான்யம் முதலியன. [5] கைவல்யம் (कैवल्यम्) ஸம்ஸாரபந்தமற்ற ஜீவாத்மஸ்வரூபத்தின் அநுபவம்.

உயர்வு அற, பிறவித்துயர் அற, ஸ்வர்க்காதிகளில் கைவல்யத்தில் உயர்த்தியுண்டோ என்ன, அவற்றுக்கொரு வகையாலுமுயர்வில்லை என்கிறது. [6] பரமானந்தத்தைப்பற்றச் சொல்லுகிறது.

உயர்நலமுடையவன் யவனவன் - [7] ஜ்ஞானாநந்தாதிஸ்வரூபனானவன். மயர்வற மதிநலமருளினன். பரமானந்த ஸ்வரூபனைப்பற்றி [8] ‘ஜராமரணமோக்ஷாய’ என்றதையறிந்து [9] ஆத்மாநுபவ மாத்திரத்திலே ஜ்ஞானம் முற்றியிருக்கை.

ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனை நோக்குகிற மதிநல மருளப்பெற்று அவனாலே ‘துறவிச்சுடர்விளக்கந்தலைப்பெய்வான்’ [10] பிரகிருதி விநிர்முக்தமான [11] ஆத்மஸ்வரூபத்தைப் பிராபிக்க வேண்டியிருப்பார். அயர்வறுமமரர்கள், யாவனொருவன், அவன் ஆழிப்படையந்தணனை’ அசர்வற்று, [12] அபர்யாப்தாம்ருதானந்த மக்னரான நித்யஸூரிஸேவ்யனை அகன்று, ஆத்மானுபவத்திலே மூளத்தேடுவதே. ஏதேனுமொன்றைத் தேடிப் பெறும்போது அவன் தன்னை யாச்ரயித்துப்பெற வேண்டும்படியிருக்கிற இது, ‘என்ன தார்மிகனோ’ என்கிறார்.

ஆழிப்படை யந்தணனைத்-துயரறு சுடரடிதொழுது எழு. ஆத்மானுபவ விரோதியைப் போக்கிக்கொள்வதே சுத்திகுண விசிஷ்டனென்றாயிற்று. அவர்கள் பற்றுற்றும், என்மனனே சுடரடிதொழுது எழும்படிபெற்றோமே. ஆழிப்படை யந்தணனை

---

6 பரமானந்தம் (**परमानन्दम्**) எல்லாவற்றிலும் உயர்ந்த ஆனந்தம்
7 ஜ்ஞானம் (**ज्ञानम्**) அறிவு, ஆனந்தம் (**आनन्दम्**) இவையே வடிவானவன். 8 ஜராமரணமோக்ஷாய (**जरामरणमोक्षाय**) கிழத்தனம் இறப்பு, இவைகளினின்றும் தப்புவதற்காக. 9 ஆத்மாநுபவம் (**आत्मानुभवम्**) முன்பு சொல்லப்பட்ட கைவல்யம்.
10 ஸத்வம், ரஜஸ்ஸு, தமஸ்ஸு என்கிற மூன்றுகுணஸ்வரூபமானது பிரகிருதி-அதினின்றும் விடுபட்டது. 11 ஆத்மஸ்வரூபம் ஆத்மாவின் உண்மையான வடிவம். 12 அபர்யாப்தாம்ருதானந்தம் (**अपर्याप्तामृतानन्दम्**) தெவிட்டாதவமுதத்தின் இன்பம். மக்நர் (**मग्नर्**) அதில் மூழ்கியவர்கள்-நித்யர் (**नित्यर्**) என்று சொல்லப்பட்டவர்கள்.

மறவியையின் மனத்துவைப்பாரே. [13] அந்திமஸ்மிருதி யில்லை யாகில் பழையஸம்ஸாரமே சித்திக்குமென்கிறார்.

முதற்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எட்டாந்திருவாய்மொழி—முதற்பாட்டு

(வஞ்சித்துறை)

ஓடும் புள்ளேறிச் சூடுந் தண்டுழாய்
நீடு நின்றவை யாடுமெம்மானே. (1)

'ஓடும் புள்ளில்—(இது ஓலைப்பிரதியின் 14வது ஏடுமுடிவில் உள்ளது. பிறகு இரண்டு ஏடுகள் காணவில்லை. 8, 9-வது திருவாய்மொழிகளின் விவரணம் மேற்படி இரண்டு ஏடுகளில் சென்றிருக்கிறது. ப-ர்.)

ஸ்ரீ:

ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்

(முதற்பாட்டு—அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

இவையு மவையு முவையு மிவரு மவரு முவரும்
யவையும் யவருந் தன்னுள்ளே யாகியு மாக்கியுங் காக்கு
மவையுட் டனிமுத லெம்மான் கண்ண பிரானென் னமுதஞ்
சுவையன் றிருவின் மணாள னென்னுடைச் சூழ லுளானே. (1)

அருகலி லாய பெருஞ்சீ ரமரர்க ளாதி முதல்வன்
கருகிய நீலநன் மேனி வண்ணன் செந்தாமரைக் கண்ணன்
பொருசிறைப் புள்ளுவந் தேறும் பூமக ளார்தனிக் கேள்வ
னொருகதி யின்சுவை தந்திட் டொழிவில னென்னோ டுடனே. (3)

=பூர்ணனுமாயிருக்கிறவன் · யாவனொருவன் அயர்வறு மமரர்களதிபதி. அமரர்களாதி முதலானவன். அக்குணங்களை நித்யஸூரி......வர்கள் தன் அதீனமாம்படியிருக்கிறவன்.

---

[13] அந்திமஸ்மிருதி (अन्तिमस्मृति) உடலைவிட்டு உயிர்போகுந் தறுவாயில் பகவானையே நினைத்தல்.

மயர்வற மதிநலமருளினன். அஜ்ஞான [1] கந்தாஹிதமான [2] பக்திரூபாபன்னஜ்ஞானத்தைத் [3] தன்னிர்ஹேதுக கடாக்ஷத்தி ேலே பூரித்தவன் யாவனொருவன் தன்னோடு [4] ஏகரஸமனுபவிக்கும்படி, பக்திரூபாபன்னஜ்ஞானத்தை யருளினவன்.

"கருகிய நீல நன்மேனி வண்ணன்" தம்மோடுண்டான அவயவாநுபவம் பண்ணினவற்றால் வந்த திருமேனியில் புகர் கருத்து செய்த்துப் பேசுகைக்க விஷயமாம்படியாயிற்று.

'செந்தாமரைக் கண்ணன்' அகவாயில் குணங்களுக்குப் பிரகாசகமான திருக்கண்களையுடையவன் எனக்கு மயர்வான அவித்யாதிகளைப் போக்கி, ஜ்ஞான பக்திகளாலே தன்னோடு ஐகரஸ்யம் பிறந்தனுபவிக்கும்படி பண்ணினவற்றால் வந்த என்னவா, தன்னதாம்படி திருமேனியும்....திருக்கண்களும் செவ்விபெற்று [5] விகஸிதமாயுகக்கிறவன் யாவனொருவன் 'அயர் வறுமமரர்களதிபதி' சற்றும் அசராதே ஏகரஸாநுபவ மக்னரானவர்களும் ரஸிக்கிற ஸ்வாமியானவன்.

'பொருசிறைப் புள்ளுவந்தேறும் பூமகளார் தனிக்கேள்வன் ஸர்வேச்வரன் பெரிய திருவடியை மேற்கொள்ளுவதாகக் கடாக்ஷித்தால், அவனுடைய அங்கீகாரம்பெற்றால், அந்த [6] ஹர்ஷத்தாலே பெருக்காறு சுழித்தாப்போலே, தன்னில்தான் பொரா நின்றுள்ள சிறகையுடையவனைக்கொண்டு ஆயிற்றுத் தோற்றுவது.

---

[1] கந்தம் (गंधम्) துளி (வாஸனை அல்ல) [2] பக்திரூபாபன்னஜ்ஞானம் (भक्तिरूपापन्नज्ञानम्) உயர்ந்தவனைத்தாழ்ந்தவன் அன்புடன் மனத்தால் நினைப்பது. எண்ணெயை ஊற்றினால் அதன் தாரை இடையறாமல் விழுகிறமாதிரி வேறு சிந்தையற்றிருத்தல், இவ்விதமான ஞானத்துக்கு 'பக்தி' என்று பெயர். அந்த நிலையை அடைந்த ஞானம் என்க. (அன்பு கோபம் முதலியவை ஞானத்தின் (அறிவின்) விகுதிகளேயென்பது பரமஸித்தாந்தம்.)

[3] நிர்ஹேதுககடாக்ஷம் (निर्हेतुककटाक्षम्) கடாக்ஷம் = அருள்-பகவானுடைய அருளைப்பெறுவதற்கு பல உபாயங்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவையொன்றையும் எதிர்பாராமல் அவன் தானாகவே புரியும் அருள்-என்கை. [4] ஒரேவிதமான ஸந்தோஷத்தையனுபவித்தல். [5] விகஸிதம் (विकसितम्) = மலர்ந்தது.

[6] ஹர்ஷம் (हर्षम्) = ஸந்தோஷம்.

இவனும் 'அவனை மேற்கொள்ளப் பெற்றோமிறே'—என்று திருவுள்ளத்தில் ப்ரீதியோடேயாயிற்று மேற்கொள்வது.

"பூமகளார் தனிக்கேள்வன்" புஷ்பத்தில் பரிமளம் வடிவு கொண்டாப்போலே யிருப்பாளாய், [7] போக்கியதைகவேஷையான பெரியபிராட்டியாருக்கு [8] வல்லபனென்றால், இரண்டாம் விரலுக்கு ஆளில்லாதவனாய் யாவனொருவனிருக்கிறான்—அவன் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே.

அவன் பண்ணின மஹோபகாரம் மட்டில்லையென்ன, அதிதன்னென்ன—'ஒருகதியின்சுவை தந்திட்டொழிவிலன்.' திருவனந்தாழ்வானுக்குப் படுக்கையால் வந்தமுறை, [9] திருவடிக்கு வாகனமான முறை, பிராட்டிமாருக்கு மகிஷியான முறை, ஸ்ரீ [10] சேனைபதியாழ்வானுக்குச் செங்கோல்செலுத்தின முறை, இப்படித் தனித்தனியே நித்யர்முக்தருக்கு, முறைமுறையால் வருங்கைங்கர்யங்களெல்லாம், அவரவர்களோடு பரிமாறும் பரிமாற்றமெல்லாம் இவருக்கொருவழியாலே வந்ததன்றிக்கே ஸர்வவிதரஸத்தையும் தந்து விடுகிறிலன். என்னளவில் நித்யமுக்தர்களெல்லாரளவிலும் பண்ணுமாதரத்தை என் பக்கலிலே பண்ணுநின்றான்.

"ஒழிவிலனென்னோடுடனே" இவனொருவன் விபூதிமான் அப்பனென்று தோற்றயிருக்கிறான். [11] நித்யவிபூதியில் கேள்வியும் இங்கேயிருந்தே கேட்குமித்தனை. தண்டாமஞ் செய்தென்று நித்யவிபூதியில் பண்ணுமாதரத்தைப் பண்ணினனென்றார்—கீழில் திருவாய்மொழியிலே. இதிலவ் விபூதியிலுள்ளாரோடு பரிமாறும்படியை என்னொருவனோடும் பரிமாறாநின்றானென்கிறார்.

---

[7] போக்கியதைகவேஷை (भोग्यतैकवेषा) = இன்பத்தையே தருவதானவடிவுகொண்டவள். [8] வல்லபன் (वल्लभन्) = கணவன். [9] கருடன் [10] விஷ்வக்ஸேனர்.

[11] நித்யவிபூதி (नित्यविभूति) (ப்ரகிருதியின் எல்லைக்கப்பால் உள்ளது) ஸ்ரீ வைகுண்டம் - பரமபதம் எனப்படுவது - நித்ய (नित्य) அழிவில்லாத-விபூதி- (विभूति), ஸொத்து-பரிஜனங்கள் - ஆகிய எல்லாம் 'விபூதி' எனப்படும்.

'பூசுஞ்சாந்தி' லேயிவரவயவங்களை......மாகக்கொண்டான். இதில் [12] போகவஸ்துக்களாகவும் போக [13] ஸாதனங்களாகவும் கொண்டான். 'ஒருகதியின் சுவைதந்திட்டொழிவிலனென்னோ டுடனே'—நீயுமோரனுபவங்குறையாமல் துயரறு சுடரடிதொழுது அனுபவித்தெழு என்மனனே என்கிறார், [14] உபகாரஸ்ம்ருதி யாலே.

திருவாய்மொழி முதல்பத்து 9ம்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

பொருமா நீள்படை யாழிசங் கத்தொடு
திருமா நீள்கழ லேழுல குந்தொழ
வொருமா ணிக்குற ளாகி நிமிர்ந்தவக்
கருமா ணிக்கமென் கண்ணுள்ள தாகுமே. (1)

'பொருமா நீள்படை' யிலிப்படிப்பட்ட பேற்றுக்கு இத் தலையி லொன்றுஞ் செய்யவேண்டாதபடி [1] ப்ராதிகூல்ய நிவ்ருத்தி துடக்கமாக, [2] பரமபக்தி பர்யந்தமாகத்தானே பிறப்பித்து, நித்ய ஸூரிகள் பேற்றையும் தந்தானென்கிறார்.

---

12 போகவஸ்து (भोगवस्तु) = சந்தனம், புஷ்பம் முதலியவை.
13 போகஸாதனம் (भोगसाधनम्) = கை, கால், கண், வீடு முதலியவை. 14 உபகாரஸ்ம்ருதி = நன்றியறிதல்.
1 ப்ராதிகூல்யநிவ்ருத்தி = விரோதமனப்பான்மை கழிதல்.
2 பரமபக்தி (परमभक्ति)=முன்பு சொன்ன பக்தியின் மற்றொரு நிலைமை. பகவானை ப்ரத்யக்ஷமாய்க் கண்டவுடன் எழும் அன்பு மேலீடு. பெருவிடாய்ப்பட்டவன் குளத்தைக்கண்டவாறே உண்டாகும் ப்ரீதியைப்போன்றது.

கீழில் திருவாய்மொழியிலே பிறந்த [3] ஸர்வாங்கஸம்ச்லேஷத்தை அநுஸந்தித்து உச்சியுள்ளே நிற்குமென்றிறே - கீழ் நின்றது. பேற்றிலினியிதுச்கு அவ்வருகேற்றமாகச்செய்து கொடுக்கலாவதில்லையென்று, [4] நிர்வ்ருதராகிருரென்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி.

நிர்வ்ருதி என்று ஸுகமாய்ச் சுகிக்கிருரென்றபடி-கீழே பிறந்த ஸர்வாங்க ஸம்ச்லேஷத்தையநுஸந்தித்துச் சொல்லுவது ஓரேற்றமுண்டு. உச்சியுள்ளே நிற்குமென்றிறே - கீழிதுக்குமே லேற்றமாக.........ப்பண்ணிக் கொடுக்கிருனென்றுபட்டாருளிச் செய்தார்.

'நீர்தாமிங்ஙனே கிடந்துபடுகிறதென்?' மறந்துபிழைக்கலாகாதோ' வென்ன 'எத்தைச்சொல்லிமறப்ப' னென்கிருர்.

ஒன்பதாம்பாட்டு

நம்பி யைத்தென் குறுங்குடி நின்றவச்
செம்பொ னேதிக ழுந்திரு மூர்த்தியை
யும்பர் வானவ ராதியஞ் சோதியை
யெம்பி ரானையென் சொல்லி மறப்பனே? (9)

'உயர்வற' என்கிற பாட்டை 'நம்பியைத் தென்குறுங்குடி நின்ற' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே என்னில்;

'உயர்வற' என்று மனுஷ்யானந்தந்துடங்கி பிரம்மானந்தத்தளவுமாக [5] லீலாவிபூதி யோகஞ்சொல்லுகிறது. உயர்நலமுடையவனென்று நித்யவிபூதி யோகஞ்சொல்லுகிறது. 'யவனவ' னென்று [6] உபயவிபூதியிலும், [7] அதிசயிதமான த்ருதீய விபூதிக்கும் நிர்வாககனன நம்பியை-பூர்ணனனவனை 'நம்பியைத் தென் குறுங்குடி நின்றவச் செம்பொனே திகழுந் திருமூர்த்தி.

---

[3] ஸர்வாங்கஸம்ச்லேஷம் सर्वांगसंश्लेषम्) = சரீரத்தில் எல்லா அவயவங்களும் நெருக்கமடையும்படி தழுவுதல். [4] நிர்வ்ருதர் = பெற விரும்பியதைப்பெற்றவர்.

[5] லீலாவிபூதிபோகம் (लीलाविभूति) = ஸ்ரீவைகுண்டம் தவிர மற்ற உலகங்கள் - அவற்றிலுள்ள சேதனங்களும் அசேதனங்களும். இவைகளை பகவான் விளையாட்டாகவே (ஆயாசமின்றியே) ஆக்கியழிப்பதால் இப்படிவழங்குவது. யோகம் = ஸம்பந்தம், [6] உபயவிபூதி (उभयविभूति) = கீழேசொன்னநித்யவிபூதி, லீலாவிபூதி ஆக இரு விபூதிகள். [7] அதிசயிதம் (अतिशयितम्) = மேலானது.

இப்படிப் பரிபூர்ணனானவன் எனக்கு 'மயர்வற மதிநல மருளித் தன் சிலாக்கியமான [8] பரத்வாதிகளிற் காட்டில் [9] அர்ச்சகபாராதீனமான திவ்யமங்களவிக்ரஹத்தைக் காட்டிப்பரத்வாதிகளில் மனஸு போகிற மயக்கத்தையறுத்து.

[10] அர்ச்சாவதாரத்திலும் திருக்குறுங்குடி நம்பியை யொழியப்போகாமல் மனனகமலமறும்படிபண்ணி, இப்படிமயர்வறமதிநலமருளினவன்யாவனொருவன் அவன், 'அயர்வறுமமரர்களதிபதியானவன்' என்றும்.

'உம்பர்வான வராதியஞ்சோதியை' இப்படி நித்யஸூரி ஸேவ்யனாய், [11] ஆதிகாரணமான [12] பரஞ்சோதியை' மறப்பதென்? அஜ்ஞாநகந்த ரஹிதரான மேலாத்தேவர்களுக்கும் நிலத்தேவர்களுக்குங்காரணமானவனை மறக்கவிரகுண்டோ? இப்படி உபகாரகனானவனை மறக்கவிரகுண்டோ?

'துயரறு சுடரடிதொழுதெழென் மனனே' மறக்கவொட்டாத் திருவடிகள், உன் மறப்பாகிற துயராறுக்கும். [13] அஜ்ஞானாந்தகாரம் நீக்கி ஜ்ஞானப்பிரகாசமாகிற பரஞ்சோதிஸ்ஸு உனக்கு விளக்காகக்காட்டுந்திருவடிகளைத்தொழு தெழப்பண்ணின எம்பிரானை 'என் சொல்லிமறப்பனோ'?

[14] அபூர்ணனென்று மறக்கவோ? [15] அஸன்னிஹிதனென்று மறக்கவோ? 'வடிவழகில்லை' யென்று மறக்கவோ? 'மேன்மை

பரத்வம் = மற்றெல்லா வற்றையுங் காட்டிலும் உயர்ந்தவனாயிருக்கை. [9] அர்ச்சகபாராதீனம் = தன்னைப் பூஜைசெய்யும் அர்ச்சகருக்கு அடங்கியிருக்கை. [10] அர்ச்சாவதாரம் = இவ்வுலகில் பக்தர்களால் ப்ரதிஷ்டை செய்விக்கப்படும் விக்ரஹங்கள். [11] ஆதிகாரணம் = முழுமுதல்வன். [12] பரஞ்சோதி = எல்லாவற்றையுங்காட்டிலும் மேலானசோதி. [13] அஜ்ஞானாந்தகாரம் (अज्ञानान्धकारम्) = அறிவில்லாமையாகிற இருள். [14] அபூர்ணன் நிறைவில்லாதவன். [15] அஸன்னிஹிதன் = ஸமீபத்திலில்லாதவன்.

யில்லை யென்று மறக்கவோ? 'எனக்குபகாரகனல்ல' னென்று மறக்கவோ? எத்தைச்சொல்லி மறப்பனென்கிறார்.

திருவாய்மொழி முதல் பத்து 10-வது திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

முதல்பத்து விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

இரண்டாம்பத்து விவரணம்

முதல்திருவாய்மொழி முதல்பாட்டு—(கலிவிருத்தம்)

வாயுந் திரையுகளும் கானல் மடநாராய்!
ஆயு மமருலகுந் துஞ்சிலுநீ துஞ்சாயால்
நோயும் பயலமையு மீதூர வெம்மேபோல்
நீயுந் திருமாலால் நெஞ்சங்கோட் பட்டாயே? (1)

'வாயுந்திரையுக' ளில் [1]விலக்ஷணமாகையாலே பிரிவாற்ருமையாலே கலங்கியொரு பிராட்டிதசையைப் பிராப்தராய், கண்ணுற்கண்ட பதார்த்தங்களெல்லாம் [2]பகவதலாபத்தாலே நோவுபடுகின்றனவாகக்கொண்டு அவற்றுக்குமாக நோவுபடுகிற பாசுரத்தாலே யருளிச்செய்கிருர்.

கீழ்த்திருவாய்மொழியிலே 'மணியை வானவர் கண்ணனைத்தன்ன தோரணியை' யென்று [3]ஸௌலப்யமும் மேன்மையும் வடிவழகுமாகிற ஆகாரத்ரயமும் மேல்விழுகைக்குடலாகையாலே யிவ்விஷயத்தை யிப்போதே யனுபவிக்க வேணுமென்று [4]பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பண்ண; அனுபவம் பெருமையாலே பிறந்த [5]வவஸாதாதிசயத்தாலே ஒருபிராட்டி

---

1 விலக்ஷணம் (विलक्षणम्) = முற்றிலும் வேருனது. 2 பகவதலாபம் (भगवदलाभम्) = பகவானைப் பெறமுடியாமை. 3 ஸௌலப்யம் (सौलभ्यम्) = ஸுலகமாய் கிடைக்கக் கூடியவனுயிருக்கை. 4 ஸம்ச்லேஷம் (संश्लेषम्) = சேர்க்கை (கூடுவது). நிரந்தரமான த்யானத்தினுல் (பக்திப்பெருக்கால்) மனதில், பகவானை யனுபவித்தல், ஆந்தரஸம்ச்லேஷம் = (आन्तरसंश्लेषम्) பாஹ்யஸம்ச்லேஷம் = அவனுடைய திருமேனியைக் கைகளால் தழுவுதல். 5 அவஸாதாதிசயம் = வருத்தமிகுதி.

[6] தசையைப்பிராப்தராய் ஆற்றாமை கைகொடுக்கத் தன் [7] லீலோத்யானத்திலே சென்றிருந்து, அங்கே [8] வர்த்திக்கிற பதார்த்தங்களைக்கண்டு அவையெல்லாந் தன்னைப்போலே நோவுபடுகிறனவாகக்கொண்டு, தானவற்றுக்குமாக நோவுபட, அப்போது [9] ஸர்வசக்தனானவன் இவரவஸாதமெல்லாந் தீரவந்து ஸம்ஶ்லேஷித்த எம்பெருமானைக்குறித்து, இனி ஒரு நாளும் என்னைக் கைவிடாதொழியவேண்டுமென்கிறார்.

(பத்தாம்பாட்டு—(கலிவிருத்தம்)

வேவாரா வேட்கைநோய் மெல்லாவி யுள்ளுலர்த்த
வோவாதி ராப்பக லுன்பாலே வீழ்த்தொழிந்தாய்
மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த
மூவா முதல்வா! வினியெம்மைச் சோரேலே. (10)

'உயர்வற' என்கிற பாட்டை 'வேவாராவேட்கை நோய்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்,

உயர்வற,வேவாரா,மனுஷ்யானந்தந்துடங்கி பிரம்மானந்தத்தளவும் லீலாவிபூதியாய், அதில்வர்த்திக்கிற [10] பத்தரைச்சொல்லுகிறது. அவர்க [11] ளர்த்தகாமங்களிலே ஈடுபடாநிற்கையாலே ஸம்ஸாரமக்நரானார்கள்.

உயர்நலமென்று நித்யவிபூதியையாய், அதில் வர்த்திக்கிற நித்யரைச்சொல்லுகிறது. அவர்கள் [12] ஸம்ச்லேஷைகபோகராகையாலே நித்யானந்தமக்நரானார்கள்.

---

[6] தசை (दशा) = நிலைமை.
[7] லீலோத்யானம் (लीलोद्यानम्) = பூங்காவனம். [8] வர்த்திக்கிற = இருக்கிற. [9] ஸர்வஶக்தன் (सर्वशक्तन्) = எல்லாம் வல்லவன்.
[10] பத்தர் (बद्धर्) = அனாதியான தன் கர்மங்களாகிற பாசத்தாலே கட்டுண்டு, பிறப்பும் இறப்புமாகிற ஸம்ஸாரத்தில் உழலுபவர்.
[11] அர்த்தகாமங்கள் (अर्थकामंगळ्) = பொருள், சிற்றின்பம்.
[12] ஸம்ச்லேஷைகபோகர் (संश्लेषैकभोगर्) = பகவானுடன் சேர்ந்தேயிருப்பதல்லது அவனை ஒருகாலும் பிரிந்தறியாதவர்.

இவரங்ஙனன்றிக்கே 'வேவாரா வேட்கைநோய் மெல்லாவி யுள்ளுலர்த்த' தாம் இரண்டு கோடியிலுங் கூட்டற்று, பகவத்காமமானது [13] அதாஹ்யமான ஆத்மாவைக் குருத்து வற்றும்படி வேவாநின்றது. [14] லௌகிகாக்நிக்கு தஹிக்கக்கூடாத ஆத்மாவை [15] ப்ரேமமாகிற அக்நி தஹிப்பது ஆவியையிறே.

இது எங்ஙனேயறிந்தீரென்ன;

மயர்வற மதிநல மருளுகையாலே அறிந்தேனென்ன;

அறிந்தபடியென்னென்ன;

மயர்வற மதிநல மருளின வுன்னிடத்தில் பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே; முன்புசொன்ன ஸம்ஸாரிகள் உண்டுடுத்து [16] திவாராத்ரவிபாகம் பாராமல் திரிய, நித்யரும் முக்தரும் பகவதனுபவமே [17] யாத்திரையாயிருக்க, உபய விபூதியில் உள்ளார் படியன்றிக்கே வேவாராவேட்கை நோயாலே 'ஓவாதிராப்பகலுன்பாலே வீழ்ந்தொழிந்தேன்'.

மெல்லாவியை, அல்பப்பிராணனை வேட்கைநோய் வேவாரா வுள்ளுலர்த்த—[18] 'கூடோக்நிரிவபாதபம்' என்கிறபடியே உள்ளேபிடித்துப்புறம்பே வேவாநின்றது.

"ஓவாதிராப்பகல் உன்பாலே வீழ்த்தொழிந்தாய்" அகப்பட்டார்க்கு மீளவொண்ணாத உன்பக்கலிலே விழவிட்டுக்கொண்டாய். இப்படியாக்கின நீயொருவருமில்லாதாளொருவனோ?

உயர்நலமுடையவனுய் அயர்வறுமமரர்களதிபதியானவன், 'மாவாய்பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த மூவாமுதல்வா, சற்றுமயர்வில்லாமல் ஆனந்தாம்ருதபானம் பண்ணும் நித்யமுக்தரனுபாவ்யமானநீ; கிருஷ்ணனுய் வந்தவதரித்து, கேசியை

---

[13] அதாஹ்யம் (**अदाह्यम्**) = எரிக்கமுடியாதது. [14] லௌகிகாக்நி (**लौकिकाग्नि**) = ஸாதாரணமான நெருப்பு. [15] ப்ரேமம் (**प्रेम**) = அன்பு (இங்கே காதல்). [16] திவராத்ரவிபாகம் (**दिवारात्रविभागः**) = பகல் இரவு என்கிற பாகுபாடு. [17] யாத்திரை = பொழுதுபோக்குதல். [18] கூடோக்நிரிவபாதபம் (**गूढोऽग्निरिवपादपम्**) = உள்ளேயே குமுறுகிற நெருப்பு மரத்தை எரிக்குமாபோலே.

ஸம்ஹரித்து, [19] யமளார்ஜுனங்கள் நடுவே தவழ்ந்துபோய், மகாபலியபஹரித்துக்கொண்ட பூமியை எல்லை நடந்து மீட்டுக்கொண்டு.

இப்படியுபகாரங்களைப் பண்ணினவனை உன்னுடைய துயரறு சுடரடி தொழுதெழப்பண்ணின 'மூவா முதல்வா, இனியெம்மைச் சோரேலே' இத்தனைக்குங் காரணனைநீ, சுடரடி தொழுதெழப்பண்ணினநீ, சோரவிடாதேகொள்.

ஒன்பது பாட்டிலும் 'நீயும் திருமாலால் நெஞ்சங் கோள்பட்டாயே' என்று [20] ஸமதுக்கிகளைக் கட்டிக்கொண்டழக் கண்ட திருமால்; சகிக்கமாட்டமால்வந்து [21] அரதியாற்றி, [22] ஸாந்த்வதானம்பண்ணி,

'மூவாமுதல்வாயினியெம்மைச்சோரேல்' 'சோம்பாதிப் பல்லுருவையெல்லாம் படர்வித்த எந்தாய், "[23] புத்வாகாலமதீதஞ்சமுமோஹபரமாதுர:" என்னுமாபோலே முன்புள்ள காலமிழந்தாலும், இனிமேலுள்ள காலம் கைவிடாதே கொள்—'சுடரடிதொழுதெழு என்மனனே. நீயும் மூவாமுதல்வனைச் சோரேல் கிடாயென்கிறார்'.

இரண்டாம் பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[19] யமளார்ஜுனங்கள் = இரட்டையான மருதமரங்கள்.
[20] ஸமதுக்கிகள் = தன்னோடு ஒரேவிதமான துக்கமுடையவர்கள்.
[21] அரதியாற்றுதல் = வருத்தந்தீர்த்தல். [22] ஸாந்த்வதானம் (सान्त्वदानम्) நல்வார்த்தை சொல்வது (தேற்றுதல்). [23] புத்வாகாலமதீதஞ்சமுமோஹபரமாதுரः (बुद्ध्वा कालमतीतंचमुमोहपरमातुर:) பகவானைக்கண்டு அவனுக்கு அடிமைசெய்யாமலே ஏராளமான காலம் கடந்துவிட்டது. அது தெரிந்தவாறே வருத்தந் தாங்காமல் மூர்ச்சையடைந்தார் — என்க. சீதையின் பிரிவினால், இராமன் மோகித்ததை இச்சுலோகம் சொல்லுகிறது. இந்நூலின் ஸந்தர்ப்பத்தையொட்டி மேற்கூறிய பொருள் தரப்பட்டது.

ஸ்ரீ:

இரண்டாம்பத்து இரண்டாம்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு—(வஞ்சிவிருத்தம்)

திண்ணன் வீடு முதன் முழுதுமா
யெண்ணின் மீதிய னெம்பெருமான்
மண்ணும் விண்ணுமெல் லாமுடனுண்ட நங்
கண்ணன்கண் ணல்ல தில்லையோர் கண்ணே. (1)

திண்ணன் வீட்டில் பிரிந்தாரைக்கண்ணுஞ்சுழலையிடப் பண்ணுமோபாதி கூடினாலும் மறக்கும்படி பண்ணுமென்கிறார்.

'உயர்வற உயர்நல' மென்கிறபாட்டைத் 'திண்ணன் வீடு' விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

உயர்வற, கீழ்த்திருவாய்மொழியில் இவருக்குப்பிறந்த [1] ஆற்றாமை பேச்சுக்கு நிலமன்றிறே.

'கடல்வெதும்பினால் விளாவநீரில்லை' என்னுமாபோலே ஆற்றாமையோடே. [2] முடியப்புக்கவாறே, [3] அனந்தரமவன் வந்து முகங்காட்டினவாறே ஆற்றாமைபுக்க விடங்கண்டிலர்.

இதுக்கடி என்னென்று ஆராய்ந்து பார்த்தவாறே, இதர விஷயங்களினுடைய [4] 'லாபாலாபத்தளவல்லாத' விஷயவைல க்ஷண்யமாயிருந்தது. பிரிந்தபோது தன்னையொழிய வேறொன்று தோன்றாதபடியாய்க் கலந்தபோதும் தன்னையொழிய மற்றொன்றும் தோற்றாதபடியான விஷயவைலக்ஷண்ய மாயிருந்தது.

[5] இதுக்கடி என்னென்று பார்த்தார். [6] ஸமஸ்தகல்யாண குணாத்மகனாயிருந்தது.

---

[1] ஆற்றாமை = துயரம். [2] முடியப்புகுதல் = உயிரைவிடத்துணிதல்.
[3] அனந்தரம் = பிறகு.
[4] லாபாலாபம் (लाभालाभम्) = (लाभम्) (லாபம்) கிடைத்தல்; (अलाभम्) (அலாபம்) = கிடையாமை. [5] அடி = காரணம்.
[6] ஸமஸ்தகல்யாண குணாத்மகன் (समस्तकल्याणगुणात्मकन्) = எல்லா நற்குணங்களும் இயற்கையாகவே அமையப்பெற்றவன் – என்க.

இது தனக்கடியென்னென்று பார்த்தவாறே, ஸர்வேச்வரனாகையாலேயாயிருந்தது.

உயர்வற உயர்நல முடையவனென்றால், அவன் அயர்வறு மமரர்க ளதிபதியென்றிறே தோற்றுவது. இப்படியறியும்படி மயர்வற மதிநல மருளினவன் என்றது.

ஆக யிங்ஙனே [7] பிராஸங்கிகமாக பிரஸ்துதமான ஸர்வேச்வரத்வத்தை யனுஸந்தித்து அத்தையருளிச்செய்கிறார். கீழே 'மூவா முதல்வா' என்று காரணத்வம் பிரஸ்துதமானவாறே, அந்தக் காரணத்வத்தை உபபாதிக்கிறாரென்று பிள்ளான் பணிப்பர்.

'உயர்வற உயர்நல முடையவன்யவனவன்' என்று சொல்விற்றில்லையோ? ஸர்வேச்வரத்வமென்னில், ஒருகால் சொன்னோமென்று கைவாங்கி யிருக்கவல்லவரல்லரிறே.

ஒருகால் சொல்விற்றென்று கைவாங்கலாம் விஷயமன்றிது. இனித்தான் பகவத் விஷயத்திலே புனருக்தி தோஷாயவாகாது. ஒரு குணத்தையே எல்லாக்காலத்திலு மனுபவிக்கவல்லாரிவர்.

மயர்வற மதிநல மருளுகையாலே ஒருகுணந்தன்னையே இதற்குமுன் அனுபவித்ததென்று தோற்றாதபடி, க்ஷணந்தோறும் புதுமை பிறப்பித்து அபர்யாப்தாம்ருதனாவான் இவனேயிறே,-பயிலாநிற்கச்செய்தேயிறே, 'பண்டிவரைக் கண்டறிவதெவ்வூ' ரிலென்பது.

ஆகையாலே உயர்நலமுடையவனே காரணமென்று "[8] சுருதிப்பிரசித்தன்." பிரம்மாதிகளைக் காரணமென்கிறவர்களைக் குறித்து வெந்நரகில்விழாதேகிடிகோள்' 'பெற்றதாயிருக்க மனை வெந்நீராடாதே கிடிகோள்.

---

[7] பிராஸங்கிகம் (प्रासङ्गिकम्) = ஒருவிஷயத்தைச்சொல்லுகையில் அத்துடன் ஏதாவதொரு விதத்தில் ஸம்பந்தமுள்ளதாய், அதனால் நினைவுக்கு வருகிற மற்றொரு விஷயம். [8] சுருதிப்பிரசித்தன்-(श्रुतिप्रसिद्धन्) = வேதங்களில் பரக்கக் கூறப்பட்டவன்.

உயர்நல முடையவன் யவனவன் 'திண்ணன் வீடுமுதல் முழுதுமாய்' [9] ஆனந்தாதி [10] கல்யாணகுணங்களிலே வைத்துக் கொண்டு [11] ஔதார்யகுணஞ் சொல்லுகிறார்.

'திண்ணன் வீடு' திருடமானவீடு என்று [12] ஆவிர்ப்பாவாதிகளான [13] கர்மநிபந்தனமாக வருமழிவில்லையென்கை.

இத்தால் திண்ணமென்று நித்யவிபூதி தொடக்கமான வெல்லாவிபூதியையு முடையவனானவன் யவனவன் மோக்ஷப் [14] பிரபிருத் [15] யசேஷ புருஷார்த்தப்ரதனானவனாகையாலே மயர்வற மதிநல மருளினன்'.

பக்தி ரூபாபன்னஜ்ஞானத்தாலே அறியலாமென்று பார்த்தாலும் 'எண்ணின்மீதியன்' எம்பெருமான். [16] 'அப்ராப்ய மனஸா ஸஹ என்று எண்ணுக்கு மேல்லே கடந்திருக்கும் என்கை.

ஓரோர் குணங்கள் வகையற எண்ணிறந்திருக்கும். ஆக [17] அஸங்க்யேயமான கல்யாணகுணங்களையுடைய எம்பெருமான் தன் குணவிபூதிகளைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவன். யாவனொருவன் அவன் அயர்வறுமமரர்களபதி "மண்ணும், விண்ணும், எல்லா முடனுண்ட, நம் கண்ணன் கண்ணல்ல தில்லையோர் கண்ணே".

---

[9] ஆனந்தம் (आनंदम्) = இங்கு பிரம்மாநந்தம் [10] கல்யாண குணங்கள் (कल्याणगुणङ्गळ्) = நல்லகுணங்கள். [11] ஔதார்யம் (औदार्यम्) = கொடைவள்ளலாயிருக்கை. [12] ஆவிர்பாவம் (आविर्भावम्) = தோற்றுகை. [13] கர்மநிபந்தனம் (कर्मनिबंधनम् =) வினைப் பயனாய் வந்தது. [14] பிரபிருதி (प्रभृति) = முதலான. [15] அசேஷபுருஷார்த்தப்ரதன் (अशेषपुरुषार्थप्रदन्) = மனிதன் விரும்புகிறபேறுகள் யாவும் கொடுக்கவல்லவன். [16] அப்ராப்ய மனஸா ஸஹ (अप्राप्यमनसासह) = (சொற்கள்) மனதுடன் கூட கடவுளின் குணங்களை அடைய முடியாமல் திரும்பிவிட்டன. மனத்தினால் எண்ணியும் வாயினால் சொல்லியும் எல்லைகாண முடியாதவை பகவானுடைய குணங்களென்கை. [17] அஸங்க்யேயம் (असंख्येयम्) = எண்ணிறந்தவை.

"அயர்வறுமமரர்கள்" சற்றுமயர்வில்லாமல் கைங்கர்யமே [18] தாரகமான நித்யமுக்தர்க்கனுபாவ்யமானவன், யாவனொருவன்-அவன்—மண்ணும், லீ லா வி பூ தி யி ல் பூம்யந்தரிக்ஷமுதலான லோகங்களெல்லாம் ஒருக்காலே யமுதுசெய்த என் கிருஷ்ணனே யல்ல தில்லை.

எல்லாவகைகளாலும் நிர்வாஹ கனவனொழிய வேறு நிர்வாஹகாருமில்லாதான் யாவனொருவன், அவன், 'துயரறுசுடரடிதொழுதெழென்மனனே' – என்று தன் திருவுள்ளத்தைக் குறித்தும், தம்நெஞ்சுபோல்வார்க்கும், 'நங்கண்ணன் கண்ணல்லதில்லையோர்கண்' ணுகையாலே, [19] ஹேயப்ரத்யநீகமான, வீடுமுதலான [20] 'ஸகலபலதோஹிவிஷ்ணு': என்று ஸர்வபலப்ரதமான தேஜஸ்ஸை யுடைய திருவடிகளைத்தொழுது, [21] தாபத்ரயங்களும் மாறும்படி [22] பத்தாஞ்சலிபுடா ஹ்ருஷ்டா:, என்கிறபடியே தொழுது [23] வர்த்தியுங்கோளென்று [24] உபதேசகர்ப்பானுபவம் பண்ணுகிறார்.

இரண்டாம் பத்து ஒவது திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதல்பாட்டு—(கலிவிருத்தம்)

ஊனில் வாழுயிரே நல்லைபோ வுன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூத னென்னம்மான்
றானும் யானுமெல்லாந் தன்னுள்ளே கலந்தொழிந்தோந்
தேனும் பாலுநெய்யுங் கன்னலு மமுதுமொத்தே. (1)

---

[18] தாரகம் (धारकम्) = உயிர்வாழ்வதற்காக உட்கொள்ளப்படும் ஆகாரம். [19] ஹேயப்ரத்யநீகம்=இகழக்கூடிய யாவற்றுக்கும் எதிர்த்தட்டானது. [20] ஸகலபலதோஹிவிஷ்ணு: (सकलफलदोहिविष्णु): = பகவான் எல்லாவற்றையும் கொடுக்குமவன் அன்றோ. [21] தாபத்ரயங்கள் = (आध्यात्मिकम्) (आधिभौतिकम्) (आधिदैविकम्) ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனப்படும் மூன்றுவிதமான துக்கங்கள். [22] பத்தாஞ்சலிபுடா ஹ்ருஷ்டா: = களிப்புடன் கைகூப்பினவர்களாய்.
[23] விருத்தியடையுங்கள் என்று பொருள். [24] உபதேசகர்ப்பானுபவம் (उपदेशगर्भानुभवम्) தன் அனுபவத்திலுள் பிறர்க்கு உபதேசமும் அடங்கியிருத்தல்.

'ஊனில்வாழுயிரில்' [1] ஆர்த்தி தீரவந்து ஸம்ச்லேஷித்த [2] ஸம்ச்லேஷம் உள்ளளவு பட்டிராமையாலே இப்பேற்றுக்கு [3] உசாத்துணையாவார் ஆரென்றுபார்த்தவிடத்தில், ஸம்ஸாரிகளிலாளில்லாமையாலே அவன் தன்னோடொக்க [4] ப்ராப்யருமாய், அவனை நித்யானுபவம்பண்ணுநிற்பாருமாய், பகவதனுபவத்துக்கு [5] தேசிகருமாயிருக்கிற நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு [6] 'போதயந்த: பரஸ்பரம்' பண்ணி அநுபவிக்கப்பெறுவதெப்போதோவென்று [7] அநவாப்தியோடே தலைக்கட்டினார்.

'வாயுந்திரையுகளில்' ஸம்ச்லேஷித்த ஸம்ச்லேஷத்தைச் சொல்லுகிறதிற்றிருவாய்மொழி—நடுவு ப்ராஸங்கிகமாக பரஸ்துதமானவித்தனை.

ஆற்றாமைக்கு அறிவு நடையாடாத [8] திர்யக்குகளானவற்றை "நீயும் நான்பட்டது பட்டாயோ" என்றவற்றைக் கட்டிக்கொண்டு அழுதாரங்கு—இங்கு பகவத் ஸம்ச்லேஷத்தால் வந்தப்ரீதிக்கு அறிவு [9] நைஸர்கிகமான நித்யஸூரிகளை உசாத்துணையாகத்தேடுகிறார்.

ஐந்தாம்பாட்டு —

இனியார் ஞானங்களா லெடுக்கலெழாத வெந்தாய்!
கனிவார் வீட்டின்பமே! யென்கடற் படாவமுதே!
தனியேன் வாழ்முதலே; பொழிலேழு மேனமொன்றாய்
நுனியார் கோட்டில் வைத்தாய்! உனபாதஞ் சேர்ந்தேனே. (5)

'உயர்வற' என்கிற பாட்டை 'இனியார் ஞானங்களா' லென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே என்னில் 'உயர்வற ,இனியார் ஞானங்களால்'–பிரம்மானந்தந்தொடங்கி மனுஷ்யானந்தத்தளவும் "ஆர்ஞானங்களாலே எடுக்கலெழாதவெந்தாய்" எத்தனையேனுமதிசயிதஜ்ஞானரானவர்களுடைய ஜ்ஞானவிசேஷங்

---

[1] ஆர்த்தி (आर्ति)= வருத்தம். [2] ஸம்ச்லேஷம் (संश्लेषम्) = தழுவுதல். [3] உசாத்துணை = உற்றதுணைவர். [4] ப்ராப்யர் = அடையவேண்டியவர். [5] தேசிகர் (देशिकर्)= ஆசான். [6] போதயந்த: பரஸ்பரம் (बोधयन्तः परस्परम्) = ஒருவருக்கொருவர் போதித்துக்கொண்டு. [7] அநவாப்தி (अनवाप्ति) = குறை.
[8] திர்யக் (तिर्यक्) = பறவைமுதலியன. [9] நைஸர்கிகம் (नैसर्गिकम्) = இயற்கையாயுள்ளது.

களாலும் ஸ்வயத்னத்தாலே எடுக்கப்பார்க்கு மன்று, பேர்க்கப் போகாதேயிருக்கிற என்னுபனுனவன் யாவனொருவன், அவன், மயர்வற மதிநலமருளினன்.

'தனிவார் வீட்டின்பம்' அஜ்ஞானகந்த ரஹிதமான பக்தி ரூபாபன்னஜ்ஞானருடைய ஹ்ருதயங்களிலே வஸியா நிற்கிற, கடல் படாவமுதே, அபர்யாப்தாம்ருதமானவனே.

அன்றியே, அவர்களிருப்பிடங்களிலே வந்து அவர்களுக்கு போக்யனுனவனே.

இப்படிபோக்யனுனவன் யாவனொருவன், அவன் 'அயர்வறு மமரர்களதிபதி யவனவன் = தனியேன் வாழ்முதல் = அசர்வில்லாதநித்யர்க்குபோக்யனுனவன். அமரர்க்கு இன்பத்தை விளைக்குமவன். அல்லாதார்க்கறியவொண்ணுதவன். இவ்விரண்டு கோடியிலும் எண்ணவொண்ணுதிருக்கிற எனக்கு [10] அயத்நஸித்தமான போக்யனுனவனே.

'தனியேன் வாழ்முதலே' அயர்வறுமமரர்களதிபதியான நீ தனியேன் வாழ்முதலாய், மயர்வையறுத்து மதிநலத்தையருளின பின்பு, உபயவிபூதியிலுங் கூட்டற்றுத் தனியனுன் இருக்கைக்கு முதலானவனே.

எனக்குப் பிரதானசுக்ருதமானவனே. '[11] ஏகாக்ஷீ' ஏககர்ணிகள் நடுவே பிராட்டி யிருந்தாப்போலே ஸம்ஸாரிகள் நடுவில் இருப்பதற்கு அஸஹ்யமானபடி யிருக்கிற எனக்கு வாழ்முதலானவனே.

இப்படி [12] ஸநாதன தர்மமானவன் அயர்வறுமமரர்களதிபதி. [13] உபாயோபேயமும், தானேயாய் பகவதாகஙக்ஷைகபாருக்கும் நித்யமுக்தருக்கும் போக்யனுன......

---

[10] அயத்நஸித்தம் (अयत्नसिद्धम्) = கஷ்டப்படாமல் கிடைத்தது.
[11] ஏகாக்ஷீ, ஏககர்ணீ = இலங்கையில் அசோகவனத்தில் ஸீதா தேவியைச் சிறைவைத்த ஸமயம் அங்கு காவலாளர்களாயிருந்த ராக்ஷஸிகளில் சிலர். [12] ஸநாதன தர்மம் (सनातनधर्मम्) முக்காலத்திலும் உள்ளது (सनातनम्) = அப்படிப்பட்ட தர்ம ஸ்வரூபமானவன். [13] உபாயோபேயம் = உபேயம் (उपेयम्) = அடைய வேண்டியது. உபாயம் (उपायम्)—அதற்குற்ற கருவி.

பொழிலேழும் ஏனமொன்றாய் நுனியார் கோட்டில்வைத்தாய். நீதான் தனிமையிலேவந்து உதவித்தில்லையோ- வராகரூபியாய் பிரளயங்கதமான புவனங்களெல்லாவற்றையும் எடுத்து 'நுனியார் கோட்டில்வைத்தாய்' கூர்மைமிக்க கோட்டிடையிலே வைத்து ரக்ஷித்தாய். இத்தால் ரக்ஷ்யவர்க்கத்தின் அளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்புச்சொல்லுகிறது.

இப்படித்தனிமையிலேயுதவி ரக்ஷிக்குமவன் துயராறு சுடரடி தொழுதெழு-[14]ஹேயப்ரதிபடமாய் தேஜோரூபமான திருவடிகளானவுன் பாதம் சேர்ந்தேனே-என்மனனே.

"இமையோர் தலைவா இன்னின்ற நீர்மை இனியாமுறாமை" யென்னும்படி நீயறிவு தந்தபோதே உன்பாதஞ்சேர்ந்தேனேயன்றோ. அடியார்கள் குழாங்களுடன் இனி சுடரடிதொழுது உஜ்ஜீவிக்குமத்தனையன்றோ என்றுகக்கிறார்.

இரண்டாம்பத்து மூன்றாந் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

இரண்டாம்பத்து நான்காந் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(வஞ்சிவிருத்தம்)

ஆடியாடி யகங்க ரைந்திசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி யெங்கு
நாடி நாடி நரசிங்கா வென்று
வாடி வாடு மிவ்வா ணுதலே. (1)

ஆடியாடியில் [1] ததீயஸம்ச்லேஷத்தை ஆசைப்பட்டுப் பெருமையால் வந்த இழவாலே பெற்ற ஸம்ச்லேஷமுமிழந்து அடியே பிடித்துகூப்பிட்டார்.

---

14 ப்ரதிபடம் = (प्रतिभटम्) — எதிரானது.

1 ததீயஸம்ச்லேஷம் (तदीयसंश्लेषं) — அவனடியார்களுடன்கூட இருத்தல்.

கீழில் திருவாய்மொழியிலே 'பருகிக்களித்தேனென்று, ஹ்ருஷ்டராய்,[2] அது தன்னை பாகவதர்களோடே உசாவித்தரிக்க வேணுமென்று பார்த்து, அதற்குஇவ்விபூதியிலாளில்லாமையாலே நித்யஸூரிகள் திரளிலேபோய்ப்புக்கு, 'போதயந்த: பரஸ்பரம்' பண்ணி, அனுபவிக்கக்கோலி நினைத்தபோதே யற்றிரனிலேபுகப் பெறுமையாலே மிகவு [3]மவஸந்நராய், தம்முடைய தசையை ஸ்வகீயரான [4]ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானுக்கறிவிக்கிற படியை [5]அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

பதினொன்றும் பாட்டு—

வாட்ட மில்புகழ் வாமனனை யிசை
கூட்டி வண்சட கோபன் சொல்லமை
பாட்டோ ராயிரத் திப்பத்தாலடி
சூட்ட லாகு மந்தாமமே. (11)

'உயர்வற' என்கிற பாட்டை 'வாட்டமில்புகழ்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே என்னில்–உயர்வற–வாட்டமில், மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவாக ஸ்வஸ்வாமி ஸம்பந்தத்தளவாக வருகிற உயர்த்தியற்ற, வாட்டமில்புகழ்வாமனன். உயர்நலமுடையவனுக்கு வாட்டமாவது. இந்த விபூதி [6]அந்ய சேஷத்வ [7]ஸ்வஸ்வாதந்த்ர்யங்களாலேவிஞ்சி [8] 'ஈச்வரோஹம்' என்றிருக்கையாலே ஈச்வரத்வத்தினுடைய வாட்டமாம்.

[9]சேஷித்வமும் ஸ்வாதந்த்ர்யமும் வாட்டமுண்டாய் வருகையாலே, அதுவாராமைக்காக, தன்னுடைமை பெறுகைக்குத் தானிரப்பாளனாய், மகாபலி பக்கலிலே மண்ணை இரந்தவாறே, அதுபெற்ற பின்பு 'வாட்டமில்புகழ்வாமனன்' என்கிறதல்ல.

---

[2] ஹ்ருஷ்டர் — களிப்பெய்தியவர். [3] அவஸந்நர் (अवसन्नर्)– வருந்தியவர். [4] ஸ்ரீவைஷ்ணவர்கள் — திருமாலுக்கடியார்கள். [5] அந்யாபதேசம்—பிறரைச்சாக்கிட்டுச்சொல்வது. [6] அந்யசேஷத்வம்(अन्यशेषत्वम्) —பிறருக்குச் சேஷமாயிருத்தல்–பிறருடைய ப்ரயோஜனத்துக்காக இருப்பது. [7] ஸ்வஸ்வாதந்த்ர்யம் (स्वस्वातन्त्र्यम्) தானே தனக்கு எஜமானனாயிருத்தல். [8] ஈச்வரோஹம் (ईश्वरोहम्) நான் எல்லாம் வல்லவன். [9] சேஷித்வம் (शेषित्वम्) = லோகத்துக்கு உடையவனாயிருக்கை, மற்ற ஸகல வஸ்துக்களும் இவனுக்காகவே யிருக்கின்றனவாகையால், அவைகளுக்கு ப்ரதானனாயிருக்கை.

என்னூர்த்தியிலி ஓதுத்திலனுகில் அவன் புகழுக்கு வாட்டம் வருமென்று, இவ்வளவிலேவந்து முகங்காட்டுகையாலே வாட்டமில்புகழ் வாமனனென்கிருர்.

ஒன்றிலே ஒன்று கண்ணழுவாமலிரந்தளந்துகொண்டவன் என்கிருர். நீர் இதறிந்தபடி என்னென்ன; அவன் மயர்வற மதிநல மருளப்பெற்றவத்தால் வந்த பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே யறிந்தேன்.

இசைகூட்டி [10] ஸாமரஸோத்கானமானது [11] சடகோபவாங்மயமென்று [12] ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமமான ஈரைந்தினுடைய 'இசைகூட்டி வண் சடகோபன்சொல்' லென்று லோகங்களெங்கும் பிரஸித்தமாம்படி மதிநல மருளினவன் யாவனொருவன், அவன் அயர்வறுமமரர்களதிபதி—அஜ்ஞாநாந்தகார ரஹிதரான நித்யரானவர்கள் [13] "ஏதத் ஸாமகாயன்னாஸ்தே" என்று ஸாமத்தின் இசைகூட்டி ஸஹஸ்ரசாகையை 'அமைபாட்டோராயிரத்திப் பத்து' மமைந்தபடி, [14] மானஸாநுபவ மாத்திரமன்றிக்கே [15] வாசிகமாக்கி நாட்டை வாழ்வித்த ஔதார்யமிது.

'அமைபாட்டோ ராயிரத்திப்பத்தும்' அயர்வறு மமரர்களதிபதியவனவன் அடிசூட்ட, ஸாமகானத்திலிசை சற்று நாவறுதலற ரஸாநுபவத்திலேவந்த நித்யமுக்தருக்கு [16] உத்கீதார்த்தரஸஜ்ஞான முடையவனுனவன் துயரறு சுடரடி தொழுது 'அமைபாட்டோராயிரத்திப் பத்தாலடிசூட்ட லாகுமந்

---

10 ஸாமரஸோத்கானம் = ஸாமவேதத்தின்ஸாரமான திருவாய்மொழியைப்பாடுவது. 11 சடகோபவாங்மயம்—நம்மாழ்வாரின் திருவாய்மொழி. 12 ஸகஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்—ஆயிரம் சாகைகள் (பிரிவுகள்) உள்ளஸாமவேதத்தின் உபநிஷத்தின் ஸாரத்தை வெளியிடுவதான. 13 ஏதத்ஸாமகாயன்னாஸ்தே (एतत्सामगायन्नास्ते) अहमन्नं-अहमन्नाद: - என்கிற இந்த ஸாமத்தைப் பாடிக்கொண்டிருக்கிருன். 14 மானஸாநுபவம் (मानसानुभवम्)—மனத்தினுல் சிந்தித்தல். 15 வாசிகம் (वाचिकम्) — வாயால் பாடுதல். 16 உத்கீதார்த்தரஸஜ்ஞானம் — (उद्गीथम्) — ஸாமகானம் - அதன் பொருளின் சுவையை உணர்ந்தவனுயிருத்தல்

தாமமே” ஹேயப்ரத்யநீகமாய் [17] ஸர்வஸமாச்ரயணீயமுமான திருவடிகளிலே ஸாமசாகார்த்தமான ரஸங்களாலே அமையப்பட்ட வாயிரம் பாட்டிலும் வைத்துக்கொண்டு, இப் பத்துப் பாட்டை [18] அதிகரிக்கவல்லார்க்கு இச் செவ்விமாலையைக் கொண்டு அவன் திருவடிகளிலே நித்யகைங்கர்யம் பண்ணப் பெறுவர்—என்மனனே.

அடிசூட்டலாகுமந்தாமமே [19] ‘வாசகமாலையை’ யடி சூட்டலாகுமந்தாமமே. பித்ருதனம் புத்ரனுக்கனுபாவ்யமாமாபோலே யனுபாவ்யமாம். ஆழ்வார்; க்லேசம்வேண்டா, அவர்பேறேயிறே இதுகற்றார்க்கும் பேறு. அடியார்கள் குழாங்களையுடன் கூட்டி அங்கடியரோடிருந்தனுபவிக்கப்பெறுவரென்கிறார்.

இரண்டாம்பத்து நான்காந்திருவாய்மொழி

விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

அந்தாமத் தன்பு செய்தென் னுவிசே ரம்மானுக்
கந்தாம வாழ்முடிசங் காழிநூ லாரமுள
செந்தா மரைத்தடங்கண் செங்கனிவாய் செங்கமலஞ்
செந்தா மரையடிகள் செம்பொன் திருவுடம்பே. (1)

ஆடியாடியில் நதிய ஸம்ச்லேஷத்தை ஆசைப்பட்டுப் பெருமையால் வந்தவிழாவாலே, பெற்ற ஸம்ச்லேஷமுமிழந்து அடியே பிடித்துக் கூப்பிட்டார்.

---

[17] ஸர்வஸமாச்ரயணீயம் (सर्वसमाश्रयणीयम्) — எல்லோருக்கும் சரணடையக்கூடியது. [18] அதிகரித்தல் (अधिकरित्तल्) = அறிதல். [19] வாசகமாலையை = இந்நூலை.

கீழ் ஆடியாடியில் ஆழ்வாருக்குப் பிறந்த வியஸனமெல்லாம் மாறும்படியாக [1]'அதந்த்ரித சமூபதி ப்ரஹித ஹஸ்த' மென்கிற படியே பெரியத்வரையோடே, ஆயுதாபரணங்களை [2] அக்ரமமாக தரித்துக்கொண்டுவந்து ஸ்ரீ [3] கஜேந்திராழ்வானுக்கு வந்துதவினாப்போலே, இவரும் "வலங்கொள் புள்ளுயர்த்தாய்" என்று கூப்பிட்ட [4] ஆர்த்தநாதஞ் செவிப்பட்டு, 'அழகிதாக [5] ஜகந்நிர்வஹணம்பண்ணினோ' மென்று பிற்பாட்டுக்கு லஜ்ஜித்து, தன்னுடைய [6] ஸ்வரூபரூப குணவிபூதிசேஷ்டிதங்களொப்பவைகளான ஆயுதாபரணங்கள்சேர்ந்தசேர்த்தியோடேவந்து ஸம்ச்லேஷிக்கக் கண்டு ஹ்ருஷ்டராய், பெற்றபேற்றை உகந்து அநுபவிக்கிறார்.

ஒன்பதாம் பாட்டு—

சொல்லீரென் னம்மானை யென்னுவி யாவிதனை
யெல்லையில் சீரென் கருமாணிக் கச்சுடரை
நல்ல வமுதம் பெறற்கரிய வீடுமா
யல்லிமலர் விரை யொத் தாணல்லன் பெண்ணல்லனே. (9)

'உயர்வற' என்கிறபாட்டைச் 'சொல்லீரென்னம்மானை என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே என்னில்=

மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் அவரவர்கள் பிரயாசத்தாலே [7] ஆர்ஜிக்கிற போக்யதாநுபவங்களையெல்லாம் அல்பமாய், அஸ்திரங்களாயற்றது, ஆகையாலே 'உயர்வற என்கிறது. இத்தை நீங்களே யறிந்துகொண்டு, உயர்நலமுடை

---

[1] அதந்த்ரிதசமூபதிப்ரஹிதஹஸ்தம் (अतन्त्रितचमूपतिप्रहितहस्तं) (ஆர்த்த ரக்ஷணத்திற்காக பகவான் த்வரையுடன் எழுந்தருளும் பொழுது) ஸ்ரீ சேனை முதலியாரால் (மகாராஜாக்களின் வழக்கப்படி தாங்கிக்கொள்வதன் நிமித்தமாய்) காண்பிக்கப்பட்டகையை கவனிக்காமலும். [2] அக்ரமமாக = முறைதவறி. [3] ஸ்ரீ கஜேந்திரன் (श्रीगजेन्द्रन्) = முதலையால் பீடிக்கப்பட்டு 'ஆதிமூலமே' என்று கதறியயானை— [4] ஆர்த்த நாதம் (आर्तनादम्) = கூக்குரல். [5] ஜகந்நிர்வஹணம் (जगन्निर्वहणम्) = உலகைக்காப்பது. [6] ஸ்வரூபரூப குணவிபூதி சேஷ்டிதங்கள் (स्वरूपरूपगुणविभूति चेष्टितङ्गल्) = ஸ்வரூபம் = (தன்) உருவம், ரூபம் = திருமேனி. விபூதி = ஐச்வர்யம் = சொத்து. சேஷ்டிதங்கள் = செயல்கள். (இவைகளின் விரிவுரை முகவுரையில் காண்க) [7] ஆர்ஜிப்பது = ஸம்பாதிப்பது.

யவன் என்னோடே 'அந்தாமத்' தன்புசெய்து, தனக்கு [8] போக்ய போகோபகரணபோகஸ்தானங்களெல்லாம் என்னவயவங்களிலே யாம்படி கொண்டருளி, உயர்வறவுயர்நலமுடையவனாய் விளங்கு கிறபடியை 'சொல்லீரென்னம்மானை'.

[9] க்ஷுத்ரவிஷயங்களையனுபவித்து, அதுக்குப் பாசுரமிட்டுக் கவிசொல்லியிருக்கிற நீங்கள் சொல்லவல்லீர்களோ?

எல்லையில் சீரென் கருமாணிக்கச் சுடரை என்னம்மானை. தன் குணசேஷ்டிதங்களாலே எனக்கு மயர்வறமதிநலமருளி, அந்த பக்திரூபா பன்னஞ்ஞானத்தாலே என்னை சேஷத்வமுறை யிலே நிறுத்தினவன். 'மயர்வற' அஜ்ஞான கந்தரஹிதமான ஜ்ஞான பக்திகளாலே [10] ஆத்மபரமாத்மவிவேகத்தை உண்டாக் குகையாலே, 'என்னுயிரானை' என்னுத்மாவுக்கு அந்தராத்மா வானவனை.

'மதிநலமருளினன்' என்று க்ருபாகுணவிசிஷ்டமான குணங்கள் [11] கல்யாணகுணைகதானமாகையாலேயும் ஸௌந்தர் யாதிகுண விசிஷ்டமான திவ்யமங்களவிக்ரஹமும், புதுக்கணித்து தேஜோமயமாயிற்று.

யவனவன், அயர்வறுமமரர்களதிபதி அயர்வில்லாத நித்ய முக்தருக்கு போக்யபூதனானவன் யாவனொருவனவன், 'எல்லையில் சீர் என் கருமாணிக்கச்சுடரை' என்னோடே கலந்தபின்பு புகர் பெற்றானாயிருக்கிறபடி.

'நல்லவமுதம்' அப்ராக்ருத போக்யங்களில் தலையான வமிருதம்; அபர்யாப்தாமிருதம்.

---

[8] போக்யபோகோபகரணபோகஸ்தானங்கள்—போக்யம் (भोग्यम्) = சப்தம் முதலான விஷயங்கள். போகோபகரணம் (भोगोपकरणम्) ஐம்பொறிகள். போகஸ்தானம் (भोगस्थानम्) = வீடு, தோட்டம் முதலியன.

[9] க்ஷுத்ரம் (क्षुद्रम्) = அற்பமானது. [10] ஆத்மபரமாத்மவிவேகம் = ஆத்மா (आत्मा) = ஜீவன். பரமாத்மா (परमात्मा) = கடவுள் விவேகம் (विवेकम्) = இவைகளின் உண்மையான நிலைமையறிதல்.

[11] கல்யாண குணைகதானம் (कल्याणगुणैकतानम्) = நல்லகுணங்க ளுக்கே இருப்பிடம்.

'பெறற்கரிய வீடுமாய்' ஒருவராலும் ஸ்வயத்நத்தாலே பிராபிக்கவொண்ணாத மோக்ஷ புருஷார்த்தமுமானவன் யாவனொருவன், அவன் துயரறுசுடரடிதொழுதெழென்மனனே. 'இதர விஷயங்களில் [12] போகருசியற்று.

நிரவதிகதேஜோரூபமான 'அல்லி மலர் விரையொத்த' திருவடிகளையுடையவன். ஆணல்லன் பெண்ணல்லனே = இதர புருஷஸஜாதீயனல்லன் - பெண்ணல்லன் - அதுவுமப்படியே யாகையாலே உபபவிஷயஸஜாதீயனல்லனென்றபடி. அவன் திருவடிகளைத்தொழுது உஜ்ஜீவியென்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்தார்.

இரண்டாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி
விவரணம் முற்றிற்று
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(ஆசிரியத்துறை)

வைகுந்தா! மணிவண்ணனே! யென்போல்லாத் திருக்குறளா—
[வென்னுண்மன்னி
வைகும் வைகற்றேறு மமுதாய வானேறே!
செய்குந்தா வருந்தீமை யுன்னடி யார்க்குத் தீர்த்த
[சுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா! வுன்னைநான் பிடித்தேன்கோள் சிக்கெனவே. (1)

'அந்தாமத்தன்பில்' அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்றுகொல்லென்றிவர் ஆசைப்பட்டபடியேவந்து கலந்தானென்கிறார். அடியாடியிலார்த்தி தீர வந்து ஸம்ச்லேஷித்தபடி சொல்லித்தந்தாமத்தன்பு. அந்த ஸம்ச்லேஷத்தால் பிறந்த ப்ரீதி அவனது என்றமிடஞ்சொல்லுகிறது வைகுந்தாமணிவண்ணனில்.

---

[12] போகருசி (भोगरुचि) = அநுபவிக்கவேண்டுமென்னும் ஆசை.

இரண்டாம்பாட்டு—

சிக்கெனச் சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே யுலகுக
ளொக்கவே விழுங்கிப்புகுந்தான் புகுந்ததற்பின்
மிக்கஞான வெள்ளச் சுடர்விளக்காய்த் துளக்கற்றமுதமா யெங்கும்
பக்கநோக் கறியானெனன் பைந்தாமரைக்கண்ணனே. (2)

'உயர்வற' என்கிறபாட்டைச் 'சிக்கெனச் சிறிதோரிடமும் புறப்படா' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே என்னில், உயர்வற, மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் அல்பமான காம்ய ரஸங்களைப் புசித்து உயர்வற்றார்கள்.

உயர்நலமுடையவனெவனவன் [1] 'ஸர்வரஸ:' என்கிறவன்-ஸர்வரஸிகத்வமும் ஆழ்வாரோடே அனுபவிக்கைக்கு, இவ்விடத்தில் ஸர்வரக்ஷகத்வமும் செய்திருந்தால், இவரோடுஐகரஸ்யம் ஸித்தியாதே யென்று, அவற்றையெல்லாம் ஸ்வரக்ஷிதமாக வைத்து, பின்னையனுபவிப்போமென்றுபார்த்து, 'சிறிதும் புறப்படாத் தன்னுள்ளே உலகுகளொக்கவே விழுங்கி' ஆழ்வார் திருவுள்ளத்திலே சிக்கெனப்புகுந்தான்.

ஜகத்ரக்ஷணத்துக்கு வேண்டுமவையெல்லாம் தன்னுள்ளேயாக்கி, [3] அநந்ய்பரனுபனுபவித்துப் போகமாட்டாதேயிருந்தான்.

இவர் திருவுள்ளத்திலேயிருந்து செய்ததென்னென்னில்' இப்படிவரும், ஜகத்துக்கு ஸர்வரக்ஷகத்வங்களுமிவரிடத்திலே யாகவேணுமென்று, இவருக்கு மயர்வறமதிநலமருளினன்.

பின் "மிக்க ஞான வெள்ளச்சுடர்விளக்காய்" 'மயர்வற' இவருக் [4] கன்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்களாகிற இருளைப் போக்குகைக்கு பக்திரூபாபன்னமாகிற 'மிக்க ஞான வெள்ளச் சுடர்விளக்கை' நந்தாவிளக்காகப் பிரகாசிப்பித்து, அத்தாலே,

---

[1] ஸர்வரஸ: (सर्वरस:) = எல்லாவிதமான ரஸங்களையுமுடையவன். [2] ஐகரஸ்யம் (ऐकरस्यम्) = ஒரேவிதமான ஸுகத்தையனுபவித்தல். [3] அநந்யபரன் (अनन्यपरन्) = மற்றவிஷயங்களில் நோக்கில்லாதவன். [4] அந்யதாஜ்ஞானம் (अन्यथाज्ञानम्) = ஒருபொருளை வேறுவிதமாகஅறிதல். [5] விபரீதஜ்ஞானம் (विपरीतज्ञानम्) ஒருபொருளை அதன் தன்மைக்கு எதிரான தன்மையுள்ளதாக அறிவது.

தானும் [6] விகஸிதஸகஜ ஸார்வஜ்ஞ்யனும் [7] விஜ்வரனுமாயிற்று. விக்ரஹமும் புகர்பெற்றது இப்போதாயிற்று.

ஆழ்வாரை அனுபவித்து, இப்படி விளங்கினவன் யாவனொருவன், அவன் அபர்வறுமமரர்களதிபதி—அஜ்ஞானசக்திகளில்லாத அமரர்கள்-அநந்தவைனதேயாதிபிரப்ருதிகள் [8] த்ரிபாத் விபூதியுமடங்காதவர்கள் பரிசர்யை பண்ண இருக்கும் ஸ்வாமியானவன்.

'துளக்கற்றமுதமாய்' = அபர்யாப்தாம்ருதமாய். 'ஆடியாடியில்' பட்ட கிலேசம் தீர்ந்தான் தானுபிராகின்றான்.

இனியிவர் வளவேழுலகுதலையெடுத்து இவர் நம்மைவிடில் செய்வதென்னென்று உள் நடுக்கந்தீர்ந்ததிப்போதாயிற்று.

'துளக்கற்றமுதமாய்' அவனிவரை அபர்யாப்தாம்ருதமாய் [9] 'ப்ரமுமோதஹ' என்கிறபடியே, அவன் தம்மை விரும்பி போக்யமாக நினைத்திருக்கிறயிருப்பு, தமக்கு போக்யமாயிருக்கிறபடி.

இப்படி போக்யபூதனானவன் துயரறுசுடரடிதொழுதெழுஎன் மனனே. துயர்=துளக்கம். அறு=அற்ற. அமுதமான சுடரடிகளைத்தொழுது, உத்ஸாஹி.

அவன் நம்மைப் பார்த்தவர்க்கு 'எங்கும் பக்கம்நோக்கறியான் என்பைந்தாமரைக்கண்ணன்' எங்கும் பக்கம்நோக்கறியான்; அபர்வறுமமரர்கள்— [10] அநிமிஷராய் அபர்யாப்தாம்ருதமல்லதனுபவியாதவர்களையும், நோக்கவறியான்.

---

6 விகஸிதஸகஜஸார்வஜ்ஞ்யனுப் (विकसितसहजसार्वज्ञयन्) = எல்லாப் பொருள்களையும் அறிவது (सार्वज्ञ्यम्) = ஸார்வஜ்ஞ்யம். இது ஒரு காரணத்தால் வந்ததன்றி இயற்கையாகவே பகவானுக்கு அமைந்துள்ளது. அது இப்போதுதான் பிரகாசமாயிற்றென்றபடி.
7 விஜ்வரன் (विज्वरन्) = வருத்தந்தீர்ந்தவன். 8 த்ரிபாத்விபூதி (त्रिपाद्विभूति) = ஸ்ரீவைகுண்டம்—அதாவது, பரமபதத்தை மற்ற எல்லாவுலகங்களுடனும் சேர்த்து நோக்குங்கால், இது மூன்றுமடங்கும் மற்றவை ஒருமடங்கும் இருக்குமென்கை. மற்றெல்லாவுலகங்களையும் விட பல மடங்கு விஸ்தாரமானது பரமபதமென்கை. 9 ப்ரமுமோதஹ (प्रमुमोदह) = களிப்பெய்தினன்.
10 அநிமிஷராய்=இமைகொட்டுவதில்லாதவராய்.

"ஆழ்வார்பக்கல் [11] ப்ராவண்யத்தைத் தவிர்க்கலாமோ பார்ப்போமென்று, நாச்சிமார் திருமுலைத்தடத்தாலே நெருக்கி யணைத்தாலும் அவர்கள் பக்கல் கண்வைக்கமாட்டிற்றிலன். 'என்பைந்தாமரைக்கண்ணன்' என்பக்கல் ப்ரீதியாலே விகஸித மான திருக்கண்களையுடையவன் 'துயரறுசுடரடிதொழுதெழென் மனனே' யென்கிறார்.

இரண்டாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

இரண்டாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

அவதாரிகை

'வைகுந்தா மணிவண்ணனில்' தன்னையிவர் பிரியில், செய்வ தென்னென்று அதிசங்கை பண்ண "பிடித்தேன்கொள் சிக்கெனவே" யென்றும் [1] மாசுச: என்றும், சங்கையைத்தீர்த்து அவனையுள்ளுக்கினார்.

இவர் 'ஆடியாடியில்' பட்டகிலேசந்தீர 'கேசவன் தமரி' லிவ்வாழ்வாருடன் கலக்கையால் வந்த ப்ரீதிதான் இவரொருவ ரளவிலுமன்றிக்கே, இவரோடு [2] ஸம்பந்தஸம்பந்திகளளவும் வெள்ளமிட்டுப்பெருகுகிறபடியை யருளிச்செய்தார்.

வந்து கலந்தபடி சொல்லித்தந்தமத்தன்பில், அக்கலவியால் பிறந்த ப்ரீதி யவனதென்னுமிடஞ் சொல்லுகிறது, 'வைகுந்தா மணி வண்ணனில்'. அந்த ப்ரீதிதான், இவரொருவரளவிலுமன் றிக்கே இவர் ஸம்பந்த ஸம்பந்திகளளவும் வெள்ளமிட்டுப் பெரு குகிறபடி சொல்லுகிறது. 'கேசவன்தமரிலே' கண்டுகொள்வது.

---

[11] ப்ராவண்யம்(प्रावण्यम्) அபிமானம்.

[1] மாசுச: (माशुचः) = வருத்தப்படாதே

[2] ஸம்பந்த ஸம்பந்திகள் = சேர்ந்தவர்களைச்சேர்ந்தவர்கள்.

முதற்பாட்டு — (கலித்துறை)

கேசவன் றமர்கீழ் மேலெம ரேழெழு பிறப்பும்
மாசதி ரிதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா [ஞோர்
வீசனென்கரு மாணிக்கமேன் செங்கோலக் கண்ணன் விண்
ணாயக னெம்பிரா னெம்மா ஞாராயணனாலே. (1)

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கேசவன்தமர்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்; உயர்வற; மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ஆழ்வாருபதேசத்தாலே அந்யசேஷத்வ, ஸ்வஸ்வாதந்த்ர்யத்தாலே வந்த உயர்த்தியற்று [3]ஸம்பந்தஜ்ஞானம் பிறந்து கேசவன்தமரானார்கள்.

ஈப்ஸரனும் உயர்வற உயர்நலமுடையவனானான். 'அதஃ கேசவநாமவான்' என்கிறபடியே ஸர்வநிர்வாஹகனான நிலையிலேதோற்றிருக்குமவர்கள் என்னுதல்.

ஸர்வேச்வரனுடையாரென்றாயிற்று — ஆழ்வாரிவர்களை விரும்புவது.

'எமரெ'ன்று, ஆழ்வார் ஸம்பந்தங்கொண்டாயிற்று அவன் இவர்களை விரும்புவது.

இத்தாலொரு ஸ்ரீவைஷ்ணவாபிமானமே வேண்டுவது அவன் [4]விஷயீகரிக்கைக்கென்றபடி.

கீழ்மேலெழுபிறப்பும் கேசவன்தமரானார்கள். இப்படி இவர் கிருத்துகைக்கடி யென்னென்னில்- 'கேசவஃ [5]க்லேசநாசனஃ' என்கிறவன் யாவனொருவன்; அவன்- மயர்வறமதிநலமருளுகை

---

[3] ஸம்பந்தஜ்ஞானம் (संबंधज्ञानम्) = திருமால் நமக்கு ஸ்வாமி. நாம் அவனுக்கு ஸொத்து (ஸ்வம்). நாம் அவனுடைய ப்ரயோஜனத்திற்காக இருப்பவராதலால் சேஷபூதர்கள். அவன் நமக்குச் சேஷீ. நாம் அவனாலே தரிக்கப்பட்டும், ஏவப்பட்டும் வருவதால் அவனுக்கு 'உடம்பு'. அவன் நமக்கு (ச்சரீரி) உயிர். என்பவை- பகவானுக்கும் மற்ற சேதனர்கட்கும் உள்ள ஸம்பந்தங்கள். அவ்வகளையறிதல். [6] க்லேசநாசனஃ (क्लेशनाशनः) = துயரங்களையொழிப்பவன்.

யாலே முன்னைவினை, பின்னைவினை, [6]ப்ராரப்தங்களும், தாபத்ரயங்களுமெல்லாம் நசித்தது. பக்திரூபாபன்னஜ்ஞானம் பிறந்து பரோபதேசம் பண்ணித் திருத்தினபடி.

[7]'குலந்தாரயதே தாத ஸப்த ஸப்த ஸப்தச' என்கிறபடியே யிப்படிச்சொன்னவன் யாவனொருவன், அவன் [8]ப்ரஸாதத்தாலே லோகமானது திருந்தப்பெற்றது.

'மாசதிர்' பகவத்க்ருபை. மகத்தான சதிர்_ 'கீழ்மேலெழு பிறப்பு மாசதிரிது பெற்றுக் கேசவன் தமராஞர்கள்.

'மாசதிர்' இந்த சதிர் தம்மளவன்றிக்கே, தம்மோடு ஸம்பந்த ஸம்பந்திகளளவும் வெள்ளமிட்டுப்பெருகுகிறபடி, மயர்வற மதிநலமருளுகையாலே, 'மாசதிரிதுபெற்று- தன் தலையாலே வந்ததாகிலிறே, [9]ஸாவதியாவது. இது பெற்று=ஜ்ஞானபக்திகளைப்பெற்று.

யவன் அவன் மேல்மேலெனயிவர்களை சிரஸா வஹிக்கிறபடி "நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா" ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்து வாய்க்கிறபடி 'எழுபடிகா' லென்றளவில்லை- தொட்டாரைத் தொட்டு இருபத்தொருபடி கால் இன்னும் நம்மளவும்வருகிறபடி.

இப்படியுமக்கருளினவனுசொன்ன, அவன் அயர்வறுமமரர்களதிபதி- [10]ததீயசேஷத்வத்தில் அளவில்லாத வைகுந்தத்தமரரும்,முனிவரும் [11]மங்களாசாஸநம் பண்ணாவிருக்குமவன்.

---

[6] ப்ராரப்தம் (प्रारब्धम्) = ஜீவாத்மாவினுடைய நல்—தீவினைகள் அளவிடமுடியாதவை. அவைகளின் ஒரு பகுதியின் பயனை அனுபவித்தபிறகு மற்றொரு பகுதியின் பயனை அனுபவிக்கிறான். இதில் – அவ்வாறு பயனைக் கொடுத்துக் கொண்டிருக்கும் வினையின் பகுதிக்கு ப்ராரப்தம் (प्रारब्धम्) என்று பெயர்—பாக்கியாயிருக்கும் வினை களின் கூட்டத்திற்கு 'ஸஞ்சிதம்' என்று பெயர். [7] குலம் தாரயதே ... ஸப்தச. (कुलं तारयते तात सप्त सप्त च सप्त च) = 21 தலைமுறைகளை நற்கதியடையும்படி பண்ணுகிறான். [8] ப்ரஸாதம் (प्रसादम्) = அருள். [9] ஸாவதி = எல்லையுள்ளது. [10] ததீய சேஷத்வம் (तदीय शेषत्वम्) = திருமால் அடியார்க்கடியனுப் இருத்தல். [11] மங்களாசாஸனம் = பல்லாண்டுபாடுதல்.

'ஈசனென் கருமாணிக்கம், என் செங்கோலக் கண்ணன்' இப்படி விஷயீகரித்ததற்கு ஹேது, ஸ்வாமியாகையாலே வடிவழகாலும் கண்ணழகாலும் என்னை [12]அநந்யார்ஹனாக்கினவன்.

அயர்வறுமமரர்களதிபதியானவன் "விண்ணோர் நாயகன் எம்பிரான்- எம்மான் நாராயணனாலே" 'மாசகிரிதுபெற்று'த் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே.

நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா. நித்யஸூரிஸேவ்யனானவன், நமக்கு ஸ்வாமியானவுபகாரகனானவன். ஸர்வஸமாச்ரயணீயனானவன் திருவடிகளைத் தொழுது [13]"நித்யாஞ்ஜலிபுடாஃ ஹ்ருஷ்டாஃ" என்கிறபடியே கேசவன்தமரோடே வர்த்தி என்கிறார்.

இரண்டாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீஃ

இரண்டாம் பத்து எட்டாந் திருவாய்மொழி விவரணம்,

முதற்பாட்டு — (கலிவிருத்தம்)

அணைவ தரவணைமேற் பூம்பாவை யாகம்
புணர்வ திருவரவர் முதலுந் தானே
யிணைவனா மெப்பொருட்கும் வீடு முதலாம்
புணைவன் பிறவிக் கடனீந்து வார்க்கே. (1)

'அணைவதரவணையில்' அவனுடைய [1]முக்தமோக்ஷப்ரதத்வத்தை யருளிச் செய்கிறார்.

'அணைவதரவணையில்' நம்மோடே ஸம்பந்தமே ஹேதுவாக அவன் விஷயீகரிப்பதானபின்பு, ஸம்ஸாரிகளுக்கு நம்மோடே

---

[12] அநந்யார்ஹன் (अनन्यार्ह) = மற்றவருக்கு அடிமைசெய்யத் தகாதவன். [13] நித்யாஞ்ஜலிபுடாஃ ஹ்ருஷ்டாஃ (नित्यांजलिपुटाः हृष्टाः) = உள்ளளவும் கைகூப்பிக்களித்து நிற்பவர். [1] முக்தமோக்ஷப்ரதத்வம் = முக்தர்களுக்கு மோக்ஷம் கொடுக்கும் வகை.

ஒரு ஸம்பந்தமுண்டாக்கி அவன் கிருபைக்கு விஷயமாக்குவோமென்று பார்த்து அவர்களுக்கு மோக்ஷப்ரதத்வத்தை யருளிச் செய்கிறார்.

'உயர்வற' என்கிற பாட்டை 'அணைவதரவணை' விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்—

'உயர்வற' மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவாக [2]ஐஹிக [3]ஆமுஷ்மிக போகமே உத்தேச்யமென்று [4]புஜிக்கிறவர்களாகையாலே உயர்வற்றார்கள்.

உயர்நலமென்று பரப்பிரம்மானந்தமுடையவன் யவனவன் மோக்ஷப்ரதனானவன் 'அணைவதரவணைமேல் பூம்பாவையாகம் புணர்வது. [5]முக்தப்ராப்யபோகந்தானிருக்கிறபடி,—

[6]பர்யங்க வித்யையில் சொல்லுகிறபடியே, ஸர்வேச்வரனும் பிராட்டிமாரும், கூடியிருந்து [7]திருவனந்தாழ்வானுகிற படுக்கையிலே எழுந்தருளியிருக்க, இச்சேதனன் முக்தராய்ச் சென்று கிட்டினால், ஈச்வரன் '[8]கோஸி' என்றால் '[9]அஹம் பிரஹ்மாஸ்மி' நான் ராஜபுத்திரன் [10]பிரம்மப்ரகாரபூதன் என்னக் கடவன்.

'ஆகில் இங்ஙனேபோராய்' என்று, அவன் அங்கீகாரம் பெற்று, மாதாபிதாக்களிருந்த படுக்கையிலே ப்ரஜை சென்றேறுமாப்

---

[2] ஐஹிகம் (ऐहिकम्) = இந்தப்பிறப்பில் அனுபவிக்கப்படுவது.
[3] ஆமுஷ்மிகம் (आमुष्मिकम्) = மறுபிறப்பிலுள்ளது.
[4] புஜிக்கிறவர்கள் = இன்புறுகிறவர்கள். [5] முக்தப்ராப்யபோகம் = முக்தன் அடையும் இன்பம். [6] பர்யங்கவித்யை = கௌஷீதகி உபநிஷத். [7] திருவனந்தாழ்வான் = ஆதிசேஷன். [8] கோஸி = நீ யார்? [9] அஹம் பிரஹ்மாஸ்மி— இதன் பொருள் அடுத்து வரும்பதம். [10] பிரம்மப்ராகாரபூதன் (ब्रह्मप्रकारभूतन्) = ஒரு பொருளைவிட்டுத் தனித்திருக்க முடியாததும் அதற்கு இயற்கையாய் அமைந்துள்ளதுமான தன்மைக்கு ப்ரகாரம் (प्रकारम्) என்று பெயர். (கரும்புக்கு இனிப்பு- நெருப்புக்கு சுடுதல்) ஜீவாத்மாவும் கடவுளுடன் அவைபோலவே பிணைப்புண்டிருப்பவன். ஈச்வரன் சரீரி. இவன் (முக்தன்) அவனுக்குச்சரீரம். ஆக— பிரம்மத்துக்குச் சரீரமானவன் என்று பொருள்.

போலே [11]'பாதேநாத்யாரோஹதி' என்றேறக்கடவன் என்கிறது.

'அணைவது = தாபத்ரயங்களெல்லாம் மாறும்படியணைவது 'புணர்வது' என்கிறபடி மூவருக்குமொக்கும்படி பரிமாறினது.

ஆக, ஸர்வேச்வரனும் பிராட்டியுமாகத் திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே யிருக்க, இவனும் அநுமதியால் ஏற, அணைத்து மடியிலே வைத்துகந்து, '[12] க்ரியதாமிதி மாம் வத' என்று ஏவிக்கொள்ள அடிமை செய்கை முக்தப்ராப்யபோகமாகிறது.

இவருக்கு இப்பிராப்யத்துக்கு ஸாதகமேதென்ன - மயர்வறமதிநலமருளினன் - இவருடைய துர்க்கதி கண்டு தன்னிர்ஹேதுககிருபையாலே பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தைக்கொடுத்தது இதற்கு ஹேது.

இப்படிப்பட்டவன் யவனவன் "இருவரவர் முதலுந்தானே" பிரம்மருத்ராதிகளுக்குக் காரணபூதனாயிருக்க '[13] ஸ பிரம்மா ஸ சிவஸ்ஸேந்த்ர:' என்கிற ப்ரஸித்தியாலே சொல்லுகிறார். இவ்விபூதி காரிய காரணரூபத்தாலே வந்த ஸம்பந்தஞ் சொல்லிற்று. அவ்விபூதி [14] போகபூமியாய் நித்யமாயிருக்குமென்று சொல்லிற்றாயிற்று. இப்படி உபயவிபூதிக்கும் நாயகனானவன் யாவனொருவன் அவன் அயர்வறுமமரர்களதிபதி—

பிரும்மருத்ராதிகளைப் போலே [15] ஸம்ஸாரபந்தகரல்லா

- இதை ஷ்டிபதம் குறிக்கிறது. [11] பாதேநாத்யாரோஹதி (पादेनाध्यारोहति) = காலை வைத்து ஏறுகிறான்.

[12] க்ரியதாமிதி மாம் வத (क्रियतामिति मां वद) = 'இனி நான் செய்யவேண்டுவதென்ன' - இதை நீயே சொல்லியருள வேணும். (இலக்குமணன் இராமனைப்பார்த்துச் சொல்லியது.

[13] ஸபிரம்மா ஸசிவ: ஸேந்த்ர: (सब्रह्मा सशिव; सेन्द्रः) = நான்முகனும் முக்கண்ணப்பனும் இந்திரனும் அவனே-இவர்களை உண்டு பண்ணுகிறவன். மண்ணால் செய்யப்பட்ட குடத்தை "இக்குடம் மண்" என்று சொல்வதைப்போல், பிரம்ம ருத்ரர்களை அவர்களுக்குக் காரணமான ஸ்ரீமந் நாராயணனாகவே (கார்ய காரண பாவத்தைப்பற்றி) சொல்லுகிறது. [14] போகபூமி = இன்புறுமிடம் (भोगभूमि).

[15] ஸம்ஸாரபந்தகர் (संसारबन्धकर) = ஸம்ஸாரத்தில் ஆழ்த்துபவர்.

மையாலே [16] அமிருதசப்தவாசிகளாய்; 'அமிருதம் திவி' (अमृतं दिवि) வாஸிகளாய்; அபர்யாப்தாமிருத போகிகளாயிருக்கிற நித்யஸூரிகளாலே ஸேவ்யமானவனே மோக்ஷப்ரதன்.

பிரும்மருத்ராதிகளுக்குக் காரணபூதனாய் நிர்வஹிக்கிறான் யாவனொருவன், அவன் 'எப்பொருளுக்கு மிணைவனும். தேவாதி பதார்த்தங்கள் தோறும், ஸஜாதியனாய் வந்தவதரிக்கும்.

பிரும்மருத்ராதிகள் நடுவே விஷ்ணுநாமாவாயும், [17] உபேந்திரனும், சக்கிரவர்த்தித் திருமகனுயும், வஸுதேவபுத்ரனுயும் மஹாவாராஹமாயும், குப்ஜாம்ரமாயுமிப்படி. தாம் விட்டுப்பிறக்கிறதெதற்காகவென்னில், 'வீடுமுதலாம்' மோக்ஷப்ரதனுகைக்காக அவதரித்தது.

பக்ஷி பிசாசம் முதலானருக்கு மோக்ஷங் கொடுத்து ரக்ஷிக்கைக்காக என்ன; ஆனல் எல்லாரும் முக்தராகவேண்டாவோ பின்னையென்ன;—

துயரறு சுடரடி தொழுது 'பிறவிக் கடல் நீந்துவார்க்குப் புணைவன்' தேவதாந்தரபஜநாதிகளான துயரற்று மோக்ஷப்ரதனை [18] ஸர்வஸ்மாத்பரனானவன் திருவடிகளை, என் மனனே உனக்கு மயர்வற மதிநலமருளி மோக்ஷத்தையுந்தன்னிர்ஹேதுக கிருபையாலே தந்தவுபகாரகனைத் தொழுது, ஸம்ஸாரமாகிற பெருங்கடலை = அது யாராலுங் கடக்கப்போகாது - ப்ரபலமான நீயே கடத்தித் தரவேணு"மென்று [19] பரந்யாஸம் பண்ணியிருப்பார்க்கு [20] ப்ரதிபூவாய் நின்று, கடத்திக்கொடுக்கும் புணை

---

16 அமிருதசப்தவாசி (अमृतशब्दवाचि) = अमृत (அமிருத) (அழிவில்லாதது) என்கிற பதத்தால் சொல்லக்கூடியவர்கள்.

17 உபேந்திரன் (उपेन्द्रन्) = வாமனன். சக்கிரவர்த்தித் திருமகன் = இராமன். வ்ஸுதேவபுத்ரன் = கிருஷ்ணன். 18 ஸர்வஸ்மாத்பரன் (सर्वस्मात्परन्) = எல்லாவற்றையும் விட மேலானவன்.

19 பரந்யாஸம் (भरन्यासम्) = (சரணாகதி) தன் க்ஷேமத்திற்கான பொறுப்பை முழு நம்பிக்கையுடன் மற்றொருவரிடம் வைப்பது.

20 ப்ரதிபூ: (प्रतिभूः) = ஜாமீன்தார் (இங்கு) மோக்ஷத்தைத்

வன், புணையாமவன். [21] ஸர்வபரநிர்வாஹகன் - ஆனவன், என் மனனே தொழுதெழு.

[22] 'ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்தக்லேசபாஜநம். த்வாமேவ சரணம் ப்ராப்ய நிஸ்தரந்தி மநீஷிண:- ([23]விஷ்ணுபோதாச்ரயங்மே மந) என்னக் கடவதிறே. அக்கரையுமிக்கரையும் ஒன்றாய் நின்று கடத்துமோடமிறே.

இரண்டாம்பத்து எட்டாவது திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம் பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு — (கலிவிருத்தம்)

எம்மா வீட்டுத் திறமுஞ் செப்ப நின்
செம்மா பாதபற்புந் தலைசேர்த் தொல்லைக்
கைம்மா துன்பங் கடிந்த பிரானே
யம்மா வடியேன் வேண்டுவ தீதே. (1)

எம்மாவீட்டில் ஸர்வேச்வனிவர்க்கு மோக்ஷங் கொடுப்பானாகப் பாரிக்கிற படியைக் கண்டு, அங்கே போகவுமாம், இங்கே இருக்கவுமாம், ஏதேனுமாக எனக்கேயாயிருக்குமிருப்பு தவிர்த்து, உனக்கே உறுப்பாம்படி, அதுவே எனக்கு வடிவாம்படி. (வடிவு ஆகும்படி) தந்தருளவேணுமென்று [1] ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்தார்.

திண்ணமாகக் கொடுப்பதாக உறுதிமொழியளிப்பவன். [21] ஸர்வ பர நிர்வாஹகன் (सर्वभरनिर्वाहकन्) = எல்லோருடைய (எல்லாவிதமான) பொறுப்புகளையும் நிறைவேற்ற வல்லவன். [22] ஸம்ஸாரம் ஒரு பெரிய கடல் போன்றது. அதைக்கடப்பது மிகவும் கடினம். பகவானென்கிற ஓடம் ஒன்றின் உதவியினால் தான் அதைக் கடத்தல் ஸாத்யம். [23] இது ஜிலைப்பிரதியில் உள்ளது.

கீழே 'அணைவதரவணை' யிலே 'வீடுமுதலாமெ' ன்று தானு மநுஸந்தித்து "நல்மந்தமில்லதோர் நாடுபுகுவீரென்று" பிறர்க்குமுபதேசிக்கக் கண்டு, ஸர்வேச்வரனும் இவருக்கும் இவர் பரிகரத்துக்கும் மோக்ஷங்கொடுப்புதாக பாரிக்கிற படியைக் கண்டு, 'தேவரீரெனக்கு மோக்ஷந்தரப்பார்த்ததாகில், இங்ஙனே தரப்பார்ப்பது. அதாகிறது—

"உனக்கு மோக்ஷங்கொள்ளெ" ன்று எனக்காகத் தருகை யன்றிக்கே—'நமக்காகக்கொள்ளென்று'[2] தேவர்க்கே யாம்படி "[3]ஸ்ரக்சந்தனாதிகளாக 'தேவர்' கொள்ளும்படியாகத் தரவேணு" மென்று, தாம் நினைத்திருந்த படியைப் பிரார்த்திக்கிறார்.

'உயர்வற' என்கிற பாட்டை 'எம்மா வீடு' விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;—

உயர்வற உயர்நலம் எம்மா வீடு - "ஐஹிகாமுஷ்மிகாதிகளன்று; உயர்நலமான 'வீடு' கொள்ளும்" என்றானீச்வரன்.

"வேண்டா' வென்றார்.

"மாவீடு" "விலக்ஷணமான மோக்ஷங்கிடீ" ரென்றான்.

"அதுவும் வேண்டா" வென்றார்.

"எம்மா வீடு கிடீர்" "ஐச்வர்ய கைவல்யாதிகளென்றிருக்க வேண்டா - [4]பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷ" மென்றான்.

"அதுவும் வேண்டா" வென்றார்.

இவைகளெல்லாமெம்மாவீட்டுத் திறங்கள். 'செப்பம்' செப்போம். எவ்வகையாலும் உயர்நலமுண்டேயாகிலு மெனக்கு வேண்டா.

'செப்போம்'- சொல்லோம்- நீயும் ப்ரஸங்கிக்கவேண்டா—நானும் நிஷேதிக்கவும் வேண்டா-

---

[1] ஸ்வப்ராப்யம் (स्वप्राप्यम्) = தான் பெறவேண்டியது.

[2] தேவர்க்கே = தங்களுக்கே. [3] (स्रक्चन्दनादि) = பூமாலை, சந்தனம் முதலியன. தேவர் = தாங்கள்.

[4] பரமபுருஷார்த்தலக்ஷணமோக்ஷம் — மனிதன் பெறவேண்டிய பேறுகளில் மிக்க உயர்ந்தான மோக்ஷம் (பேரின்பம்).

எம்மா வீட்டுத்திறமாவது [5] ஸாலோக்ய ஸாரூப்ய ஸாமீப்ய ஸாயுஜ்யமென்றவைகள்.

உமக்கிப்படி யறியும்படி உபதேசித்ததாரென்ன- உயர்நல முடையவன் யவனவன்- எனக்கு மயர்வற மதிநலமருளினன்- எனக்கென்கிற மயர்வறுத்து அத்யந்தம் பரதந்திரனும்படியருளினன்-

'ஆகிலுமக்கு வேண்டுவதென்'னென்ன. —

'நின் செம்மாபாதபற்புத்தலை சேர்த்து'=அகவாய் சிவந்து புறவாய் கருத்து மஹத்தாய் மணத்து மலர்ந்த திருவடித்தாமரைகளை யடியேன் தலையிலே வைக்கவேணும்- நீ நிர்ஹேதுகமாக அருளின பக்தியைப் பெறுகையாலே இதுவே யமையும்.

யவனவன்- அயர்வறுமமரர்களதிபதி- நிமிஷமும் விச்லேஷிக்கப் பொறுத நித்யர்க்கு நிர்வாஹகனானவன் துயரறு சுடரடியான பாதபற்பை [6] ஆகிஞ்சன்யமும் [7] அநந்யகதித்வமுமுள்ளவனான வென் சிரஸ்ஸை அலங்கரிக்கையை;

ஒல்லை-இந்த [8] அர்த்தத்வம் இப்போதே செய்தருளவேணும். "நாமிப்படி சீக்கிரமாக யாருக்குச் செய்தோ" மென்ன= "கைம்மா துன்பங் கடிந்த பிரானே-" அயர்வறுமமரர்கள திபதியான நீ; 'அதந்த்ரிதசமூபதிப்ராஹிதஹஸ்தம்' என்று

---

[5] ஸாலோக்யம் (**सालोक्यम्**)=பகவானுடன் ஒரே லோகத்திலிருப்பது. ஸாரூப்யம் (**सारूप्यम्**)=அவனுடையதே போன்ற உருவமுடைத்தாயிருத்தல். (ரூபம்=உடம்பு.) ஸாமீப்யம் (**सामीप्यम्**)= அவன் ஸமீபத்திலேயே இருப்பது. ஸாயுஜ்யம் (**सायुज्यम्**)=அவனோடு கலந்து விடுதல்-கடல் நீரில் ஆற்றுவெள்ளம் கலந்து ஒன்றுகத் தோன்றுகிற மாதிரி, பகவானுடன் ஒன்றுசேர்ந்து தனியாகப் பிரித்துத் தெரிந்துகொள்ள முடியாத நிலைமையிலிருத்தல். [6] ஆகிஞ்சன்யம் (**आकिंचन्यम्**)=ஒருவிதமான ஸொத்தும் (இங்கே மோக்ஷத்துக்கு ஸாதனமான பக்தி முதலிய வேறு உபாயங்கள்) இல்லாமை. [7] அநந்யகதித்வம் (**अनन्यगतित्वम्**)= மோக்ஷந் தவிர்த்த பேறுகளில் விருப்பமில்லாமை. [8] அர்த்ததத்வம் (**अर्थतत्वम्**)=(உண்மையான கார்யம்).

பதறிக்கொண்டு வந்து தோன்றி, யானையின் துயரம் தீர்த்த வன் 'செம்மாபாதபற்புத் தலை சேர்த்து ஒல்லை' யிலே யருள வேணும்.

'கொக்குவாயும் பிடிகண்ணியுமிட்டாப் போலே' கழற்றும லாதரிக்கவேணும்-

" அம்மாவடியேன் வேண்டுவதீதே-" ஸ்வாமியானவுன் துயராறு சுடரடி, [9] துக்காந்தகாரமான காளராத்ரிக்கு, [10] அவிவேக கநாந்ததிங்முகத்திலே ப்ரளயகாலத்தில் ஸூர்யனைப் போலே என் ஹ்ருதயத்திலே யுதித்தும், போக்கும் திருவடிகளைத் தொழுதெழு என்று [11] அநுபவ சர்ப்போபதேசம் பண்ணுகிறார்

இரண்டாம் பத்து 9வது திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம் பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு— (கலிவிருத்தம்)

கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ் சோலை
தளர்வில ராகிச் சார்வது சதிரே. (1)

கிளரொளி யிளமையில் எம்மா வீட்டில் நிஷ்கர்ஷித்த ப்ராப்யம் பெறுகைக்குத் திருமலையை யாச்ரயித்தார்.

---

9 துக்காந்தகாரமான காளராத்ரி=துக்கமாகிற இருளையுடைய கொடிய இரவு. 10 அவிவேககநாந்ததிங்முகே (अविवेकघनान्तदिङ्मुखे)-அவிவேகம் (अविवेकम्)=பகுத்தறிவு இல்லாமை- மழை காலத்தில் கருமேகம்போல், ஸம்ஸாரத்திலுழலுகிறவனுக்குத் திசை தெரியாமல் இந்த அவிவேகம் திணற வைக்குமென்கை. 10 அநுபவகர்ப்போபதேசம் (अनुभवगर्भोपदेशम्)=பிறர்க்குச்செய் யுமுபதேசம்- தன் அநுபவத்தையுள்ளுடைத்தாயிருக்கை.

இரண்டாம்பாட்டு—

சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியா
ததிர்குரல் சங்கத் தழகர் தங்கோயின்
மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலைப்
பதியது வேத்தி யெழுவது பயனே. (2)

உயர்வற என்கிற பாட்டைச் சதிரிளமடவார் என்றபாட்டுவிவரிக்கிறது; எங்ஙனேயென்னில்-

'உயர்வற' 'சதிரிளமடவார் தாழ்ச்சியை மதியாது' மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் சதிராவது [1] பிரம்மபாவனுநிஷ்டரையுந் தங்கள் வசமாக்குகை.

பருவத்தால் வந்த விளமையாலும் மோஹிப்பிக்கை. [2] பவ்யர்களாயிருந்து வசீகரிக்கிற சதிராகையாலே 'உயர்வற' என்கிறது.

'மடவார்கள் தாழ்ச்சியை மதியாதே' அவர்கள் தங்கள் ஆகிஞ்சன்யந்தோன்ற வணங்கி யொடுங்கியாயிற்று வசீகரிப்பது. அவர்கள் பக்கல் மனஸை வைக்காதே- இது நெடுநாளவற்று உயர்த்திகோளே யினியமையும்.

உயர்நலமுடையவன் யவனவன்- ஸௌந்தர்யசீலாதி குணங்களை யுடையனுனவன் பக்கலிலே மனஸை வைமின் என்ன.

அவன் உங்களுக்கு மயர்வற மதிநல மருளுகைக்காகத் திருமலையிலே வந்து நிற்கிறவன்.

அதிர்குரல் சங்கத்தழகர், மயர்வு பிறப்பிக்கும்- 'மடவார் தாழ்ச்சியை மதியாதே' என்றும்; மதியிலே நலமான ஜ்ஞான பக்திவைராக்யம் பிறக்கும்படி, 'அதிர் குரல் சங்கத்து அழகர்' ஊதுகிற குழல்போலே சங்கமுழங்குகிறபடி.

---

[1] பிரம்மபாவனுநிஷ்டர் (ब्रह्मभावनानिष्ठर्) = ஸனகஸனந்தனுதிகள்.
[2] பவ்யர் (भव्यर्) = பிறர் இஷ்டம்போல் ஆக்ஷேபமின்றி நடந்து கொள்பவர்.

உயர்நலமுடையவன் யவனவன்- அயர்வறுமமரர்களதிபதி யவனவன்- அதிர்குரல் சங்கத்தழகர்-

ஸௌந்தர்யாதிகளில் கண் வைக்காதே- அடிமை செய்திருக்கும்படிக்கு, நித்யர் [3]முக்தர், [4]முமுக்ஷுக்கள், [5]பத்தர், [6]கர்மபாவனாநிஷ்டர், [7]பிரம்மபாவனாநிஷ்டர் [8]உபயபாவனாநிஷ்டர், [6]ஐச்வர்யார்த்திகள், கைவல்யார்த்திகள் எல்லாரும் அவரவர் பேறு பெறுகைக்கு; =

'மதிதவழ்குடுமி மாலிருஞ்சோலைப் பதியது வேத்தி எழுவதுபயனே'. துயரறு சுடரடி தொழுதெழுவது பயனே-சந்திரன் தவழும்படி ஓங்கின கொடுமுடியையுடைய மாலிருஞ்சோலை மலையை. பருத்து உயர்ந்த சோலையையுடைய மலையையே.

பதியது எத்தி; அழகர் நித்யவாஸம் செய்கிற பதியான கோயிலில், நலந்திகழ் நாரணன் துயரறு சுடரடி, ஸர்வஸமாச்ரயணீயமான திருவடிகளைத் தொழுது.

என் மனனே எழுவது பயனே- என்று தம் நெஞ்சுக்கும் நெஞ்சுபோல்வார்க்கும் உபதேசித்து உபதேசகர்ப்பானுபவம் பண்ணுகிறார்.

இரண்டாம்பத்து 10வது திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[3] முக்தர் (**मुक्तर्**) = மோக்ஷம் பெற்றவர். [4] முமுக்ஷுக்கள் = மோக்ஷத்தை விரும்புமவர்கள். [5] பத்தர் (**बद्धर**) = ஸம்ஸாரபாசத்தால் கட்டுண்டு கிடப்பவர். [6] கர்மபாவனாநிஷ்டர் (**कर्मभावनानिष्ठर**) [7] பிரம்மபாவனாநிஷ்டர் = (**ब्रह्मभावनानिष्ठर**) [8] உபயபாவனாநிஷ்டர் (**उभयभावनानिष्ठर**) இவைகளின் விவரம் முகவுரையில் காண்க. [9] ஐச்வர்யார்த்திகள் (**ऐश्वर्यार्थिकळ्**) = இந்திரன் முதலிய பட்டங்களை விரும்புமவர்கள்.

ஸ்ரீ:

மூன்றும்பத்து முதல்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(தரவுக்கோச்சகக் கலிப்பா)

முடிச்சோதி யாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ
வடிச்சோதி நீநின்ற தாமரையா யலர்ந்ததுவோ
படிச்சோதி யாடையோடும் பல்கலனாய் நின்பைம்போற்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே.

'முடிச்சோதியி'ல் அத்தேகத்தோடே ஸம்பந்தித்து நின்று அழகருடைய போக்யதையை யனுபவித்தார்.

கீழே "பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல் மருளில் வண்குருகூர் வண்சடகோபன்" என்றவன் கல்யாண குணவிஷயமாக அஜ்ஞானமில்லை யென்கிறார்- அந்த குணதிக்ய விஷயத்திலே அஜ்ஞானம் [1] அனுவர்த்திக்கிறபடி சொல்லுகிறாரிதில்.

எட்டாம்பாட்டு—

மாசூணச் சுடருடம்பாய் மலராது குவியாது
மாசூணா ஞானமாய் முழுதுமாய் முழுதியன்றாய்
மாசூணா வான்கோலத் தமரர்கோன் வழிப்பட்டான்—
மாசூணா வுனபாத மலர்ச்சோதி மழுங்காதே. (8)

'உயர்வற' என்கிற பாட்டை மாசூணச்சுடரும்பா' யென்கிற

---

[1] அனுவர்த்தித்தல்=தொடருதல்.

பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;=

'உயர்வற' உயர்நல முடையவன் யவனவன்' "மாசூணச் சுடரும்பாய் மலராது குவியாது" மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ஹேயசரீரங்களாலே எடுத்த தேவாதிகளாகப்பிரித்தாலது [2] மிச்ரஸத்வமாகையாலே மாசாயே யிருக்கும்.

இதங்ஙனன்றிக்கே ஸ்வரூபரூபகுணங்களாலும், ஹேயப்ரத்யநீகமான சுத்தஸத்வமயமாய், நிரவதிகதேஜோரூபமான திவ்யமங்களவிக்ரஹத்தையுடையையாய் '[3] யுவா குமார: அரும்பினையலரை' என்கிறபடியே ஏககாலத்திலே இரண்டவஸ்தையும் சொல்லலாயிருக்குமவன் யாவனொருவன்; அவன் மயர்வற மதிநலமருளினன்- 'மாசூணாஞானமாய்'= சாஸ்திரஜந்யஜ்ஞானங்களுக்கும் ஸ்வயத்ந ஸாபேக்ஷமான மாசுண்டு- அந்த மயர்வற பக்திரூபாபன்னஜ்ஞானத்தை நிர்ஹேதுகமாக வருளுகையாலே 'மாசூணாஞான மாயிற்று.

ஸஹேதுகமாக வருளுமாகில் ஜ்ஞானத்துக்கு மாசிறே. ஆகையாலே உபயருடைய ஜ்ஞானத்துக்கும் மாசற்றது. ஸம்ஸாரிகளைப் போலே [4] ஸ்வரூபாந்யதாபாவமில்லை. அவன் திருமேனிக்கும் ஜ்ஞானத்துக்கும் மாசிலாமையைச் சொல்லித்து.

"முழுதுமாய் முழுதியன்றாய்" அனுக்தமான குணங்களை யுடையனாய் வரம்பின்றி முழுதியன்றாய்-

இப்படி எல்லாவற்றையும் நிர்வஹிக்கிறவன் யவன் அவன்- அயர்வறுமமரர்களதிபதி. பிரம்மாதிகளைப் போலே ஸ்வாதந்த்ர்ய மில்லாத நித்யஸூரிகள் ஸேவ்யனானவனை.

"மாசூணாவான் கோலத்தமரர் கோன் வழிப்பட்டால்' கேவலம் பிரம்மபாவனையாகிற கோலத்தமரர்கோனை யுண்டாக்கி

---

[2] மிச்ரஸத்வம் (मिश्रसत्वम्)=ரஜஸ் தமஸ் இதுகளுடன் கலந்த ஸத்வகுணம். [3] யுவா குமார: (युवाऽकुमार:)= பகவான் எக்காலத்திலும் யௌவனப்பருவத்திலேயே இருக்குமவன்- சிறுபிள்ளைப்பருவம் அவனுக்கு இல்லை- [4] ஸ்வரூபாந்யதாபாவம் (स्वरूपान्यथाभाव:)= இளமை, யௌவனம் முதலிடன, அல்லது ஞானம் மழுங்குதல்.

னாலும், அவனும் மாசூணாமல் ஏத்தினால்[5]வத்யமா மத்தனையல்லது, உன்னுடைய வுயர்நலத்தைக்கரைகாண வல்லனோ.

உன் 'துயரறுசுடரடி' மாசூணாவுனபாதமலர்ச்சோதி மழுங்காதோ- [6]ஹேயப்ரதிபடமாய் பரஞ்சோதியான வுன்பாதம் விகஸிதமான தேஜஸ்ஸு மழுங்காதோ. 'அப்ராப்ய மனஸா ஸஹ' என்று வேதமே மீண்டவிஷயத்தை, இவனேத்தினவளவேயாய், மட்டுப்பட்டதாமிறே.

ஆகையாலே அவன் நிரவதிகமான பரஞ்சோதியை நம்மாலே ஏத்தலாயிருந்ததோவென்று கைவாங்காதே, என் மனமே; வல்லதோர் வண்ணஞ் சொன்னால்', அதுவே உனக்காம் வண்ணமென்று தொழுது, [7]த்ரிவித கரணங்களாலும் வந்த ஸம்சயமற்று வர்த்தித்து வாழ்வாயென்கிறார்.

மூன்றும்பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

மூன்றும்பத்துஇரண்டாந்திருவாய்மொழிவிவரணம்

முதற்பாட்டு — (கலிவிருத்தம்)

முன்னீர்ஞா லம்படைத்த வெம்முகில் வண்ணனே
யந்நாள் நீதந்த வாக்கையின் வழியுழல்வேன்
வெந்நா ளுய்வீய வினைகளை வேரறப்பாய்ந்
தெந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவனே. 1

'முன்னீர்ஞால'த்தில் அழகருடைய போக்யதையை யனுப

---

[5] அவத்யம் (अवद्यम्) = இழுக்கு.
[6] ப்ரதிபடம் (प्रतिभटम्) = எதிரானது. [7] த்ரிவிதகரணங்கள் (त्रिविधकरणङ्गळ्) = மனஸ், வாய், சரீரம்— என்னும் மூன்று கருவிகள்.

விக்கப்புக்கவிடத்தில் [1] பரிச்சேதித்தனுபவிக்க வொண்ணுமை யாலே கலங்கி, விஷயதெளர்லப்யத்தால் வந்ததென்றறியாதே, தம் [2] கரணஸங்கோசத்தால்வந்ததென்று அநுஸந்தித்து, அதுக் கடியான ஸம்ஸாரஸம்பந்தத்தையறுத்துத் தந்தருளவேணு மென்று கூப்பிட்டார்.

கிற்பன் கில்லே னென்றிலன் முனநாளா
லற்பசாரங் களவை சுவைத்த கன்றேழிந்தேன்
பற்பல் லாயிர முயிர்செய்த பரமாநின்
நற்பொற் சோதித்தா ணணுகுவ தென்ஞான்றே. 6

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கிற்பன் கில்லேன்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்; —

"உயர்வற- கிற்பன் கில்லேன்" மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ப்ராப்ய ப்ராபகங்களெல்லா மநித்ய மென்று விட்டு, இதரவிஷயங்களில் ஸாதனம் மஹா ஆயாஸம்- பலமும் அல்பாஸ்திரங்களாயிருக்கும்.

இது பகவத்விஷயத்தில் வந்தால் இச்சைக்கு (இச்சை-விருப் பம்) மேற்பட்டதோராயாஸமின்றிக்கே. பேற்றில் வந்தால் உயர் நலமுடையவன் யாவனொருவன், அவனதாய்; [3] புனராவ்ருத்தி யில்லாத விலக்ஷணமோக்ஷமாயிருக்கும்-

'அதுக்கீடாக வொன்றைச் செய்ய வல்லீரோ' வென்ன 'அது செய்கிறே' னென்றிலம்.

'அல்பாஸ்திரமான இதர விஷயத்தைத் தவிர வல்லீரோ' வென்றால்; 'அதுவுந்தவிருகிறேன்' என்றிலம்.

'கிற்பன் கில்லேன்' என்கிறவன் யவன் - "முனநாளால்

---

[1] பரிச்சேதித்து='இவ்வளவுதான்' என்று அறுதியிட்டு. [2] கரண சங்கோசம் (करण संकोचम्) = மனம், கண் முதலிய கருவிகள் மழுங்குதல்— (பகவானுடைய அழகை- உள்ளபடி அனுபவிப் பதற்குப் போதுமானவளவு திறமையற்றிருத்தல்.)

[3] புனராவ்ருத்தி (पुनरावृत्ति) = மறுபடியும் (ஸம்ஸாரத்துக்கே)

அல்பஸாரங்கள் அவை சுவைத்தகன் றொழிந்தவன்."

இப்படி "விஹிதத்தைச் செய்யாமையும் அவிஹிதத்தைச் செய்கையும் என்று தொடங்கி" என்றவன் கேழ்க்க;—

'முன நாளால், 'காலதத்வமுள்ளதனையுமிதுவே யன்றோ எனக்கு யாத்ரை.' புறம்பே நம்மை யொழியவும் துவக்க வற்றானதுண்டோ வென்ன — அல்ப ஸாரங்களவை உன்பக்கல் வாராதபடி, தகைய வேண்டுவதுண்டு.- அவற்றின் பக்கலுள்ளது முள்ளிப்பூ ரஸம் போலே அல்பமாய், பல பலவான விஷயங்கள்தோறும் கால் தாழ்ந்து, (ஈடுபட்டு - மூழ்கி) ஸர்வ சக்தியான [4]தேவரை யகன்றொழிந்தேன்.

இப்படி நீர் [5]கைகழிந்தீராகில் நம்மைச் செய்யச் சொல்லுகிறதென்னென்ன;

அயர்வறுமமரர்களதிபதியான நீ மயர்வற மதிநலமருளின பின்பு, [6]தத்வயதிரிக்த போகங்களெல்லாம் அல்பாஸ்திரங்களாய்த் தோற்றிற்று.

அபர்யாப்தாமிருதாசிகளான நித்யஸூரிகள் ஸேவ்யனான நீ 'பற்பலலாயிர முயிர் செய்த பரமா— உயிர் செய்கையாவது— சேதநருக்கு [7]கரணகளேபரங்களைக் கொடுத்து [8]ஸ்திதி கமன சயநாதிகளுக்கு யோக்யமானபடி — பதார்த்தங்களை யுண்டாக்குகை.

இதைச் செய்தான் யாவனொருவன், அவன் துயரறு சுடரடி தொழுதெழும்படி நின் 'நற்பொற் சோதித்தாள் நணுகுவது என் மனஸூ- எஞ்ஞான்று?' உபய விபூதி நாயகனான வுன்னுடைய, ஹேயப்ரதிபடமாய் அநவதிக தேஜோ ரூபமாய், அத்

திரும்புதல். [4]தேவரை = உம்மை. [5]கைகழிந்தீர் = எல்லை கடந்தீர். [6]தத்வ்யதிரிக்தம் (तद्व्यतिरिक्तम्) = அது தவிர மற்றது. [7]கரணகளேபரங்கள் (करणकलेबरङ्गळ) = ஐம்பொறிகளும் கருமேந்த்ரியங்களும் உடம்பும். [8]ஸ்திதி (स्थिति) = இருக்கை. கமனம் (गमनम्) போகை. சயனம் (शयनम्) = படுத்தல்.

யந்தம் [9] ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை நானும் எனது மனஸ்ஸு மிசைந்து வந்து பற்றித் தொழுது [10] வர்த்திப்பது என்று கோலோ; இதுக்கொரு குணதிக்யமுண்டாக்கி உன்னைக் கிட்டுகைக்கு [11] அவதிநாளிட்டுத் தரவேணுமென்கிறார்.

மூன்றும் பத்து இரண்டாந் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

மூன்றும்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

ஒழிவில் காலமெல் லாமுட னாய் மன்னி
வழுவிலா வடிமை செய்ய வேண்டுநாம்
தெழிகுரலரு வித்திரு வேங்கடத்
தெழில் கோள் சோதியே நதை தந்தை தந்தைக்கே. 1

ஒழிவில் காலத்தில், "நீர் கரண சங்கோசத்தை யனுஸந்தித்து ஈடுபடவேண்டா. இது விஷய ஸ்வபாவங்காணும். நித்யஸூரிகளும் நம்மை யனுபவிக்கப் புக்காலிப்படியே காணும் படுவது.

ஆனபின்பு இவ்வுடம்போடே உம்மை அடிமை கொள்ளுகைக்குத் திருமலையிலே வந்து நின்றோமே" யென்று அங்கு நிற்கிற நிலையைக் காட்டிக் கொடுக்கக் கண்டு அங்கே அடிமை செய்யப் பாரித்தார்.

'உயர்வற' என்கிற பாட்டை 'ஒழிவில் காலம்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

---

[9] ஸ்ப்ருஹணீயம் (स्पृहणीयम्) = விரும்பக்கூடியது.

[10] வர்த்திப்பது (वर्धिप्पदु) = விருத்தியடைவது.

[11] அவதிநாள் (अवधिनाळ) = கெடு.

திருமந்திரத்தில் [1]சரம சதுர்த்தியிற் சொன்ன புருஷார்த்தத்தைத் திருவாய் மொழியில் முதல் பாட்டாலே விவரிக்கிருர்.

அந்த அர்த்தத்தை 'ஒழிவில் கால' மென்கிற பாட்டாலேயருளிச் செய்கிருர், எங்ஙனே யென்னில் ;=

உயர்வற—ஒழிவில். உயர்வாவது, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக, [2]கலாகாஷ்டாதி ரூபமாக அநேக— [3]கல்பாவஸானமான, [4]பூதபவிஷ்யத் வர்த்தமான காலங்களெல்லாம் என்கிறபடி.

உயர்வற, ஒழிவில் காலம், ஒருவரைப்பார்க்க ஒருவர் உயருவதும் தாழ்வதுமாகையாலேயும் காலமும் அதுக் கனுரூபமாய் கலாகாஷ்டாதிகளுமாய் உயர்வது மறுவதுமாய்.

காலமும் அற—இல்- என்கிறது இல்லாமையைச் சொல்லுகிறது. உயர் நலம்-ஒழிவில்காலம் [5]அகால கால்யமான, 'நலமந்த மில்லதோர் நாடாய்' அயர்வறுமமரர்களதிபதியினுடைய பரமானந்தத்தைச் சொல்லுகிறது.

'உடையவன்' உபய விபூதியுமுடையனுய் யாவனொருவன்;

---

[1] சரமசதுர்த்தி (चरमचतुर्थी) = கடைசியிலுள்ள நான்காம் வேற்றுமை; திருமந்திரம் என்பது அஷ்டாக்ஷரம். அதில் 'நாராயணுய' (नारायणाय) என்று முடிவில் ஒரு—நான்காம்வேற்றுமை உளது. அதன் பொருள் 'அடிமைசெய்தல்' என்று அறுதியிடப்பட்டது. ஓம் (ओं) என்கிற ப்ரணவத்தில் அ (अ) என்னும் முதல் எழுத்தின்மேல் ஒரு நான்காம் வேற்றுமை உண்டு- அதன்றிக்கே கடைசியில் உள்ளதென்கை. [2] கலா காஷ்டா (कला काष्ठा) काष्ठा (காஷ்டா) 15 அல்லது 18 நிமிஷங்கள் கொண்டது ஒரு காஷ்டை कला (கலா) ஷஷ்டிகாஷ்டைகள் 30 கொண்டது ஒரு கலை. (இங்கு சொல்லபப்ட்ட நிமிஷம் 'இமை கொட்டுகிற' ஸமயமாகும்.)
[3] கல்பம் (कल्पम्) = ஒரு உலகம் தோன்றி அழியும் வரை உள்ள காலம். [4] பூதபவிஷ்யத்வர்த்தமானம் (भूत भविष्यद्वर्तमानम्) = இறந்த, வரும், நிகழ்-காலங்கள். [5] அகாலகால்யம் (अकालकाल्यम्) = காலம் கழிவதனுல் வரக்கூடிய மாறுபாடு இல்லாதது:

அவன். 'உடனாய்' உபயவிபூதி நாதனை யுடனாய் மன்னி. 'யவ னவன்' திவ்யாத்ம ஸ்வரூப ப்ரகாசகமான கல்யாணகுண[6]விசிஷ்ட மான திவ்ய மங்கள விக்ரஹத்தோடே கூடியிருக்கிற ஸ்வாமி யோடேகூட, [7]'தேவத்வே தேவ தேஹேயம் மனுஷ்யத்வே ச மாநுஷீ' என்கிற பிராட்டியைப் போலே உடனாய் மன்னி.

'காலமெல்லா' மென்று ஸர்வகாலமுமென்றது. "உடனு' யென்று ஸர்வதேசமும் மென்றது. "மன்னி" என்றது ஸர்வா வஸ்தையிலும் என்றபடி-

'விண்மீதிருப்பா' யித்யாதிப்படியே பரத்வாதிகள் ஐந்தி லும் தொடர்ந்தடிமை செய்ய வேணும்- யவன் [8]ப்ராப்யாதிகாரி அவன் ப்ராப்யனான திருவேங்கடமுடையான்.

மற்றுமிப்படி. நீர் அறிந்தபடி யென்னென்ன- மயர்வற வழுவிலாவடிமை- ப்ராப்யத்தில் மதிமயங்காமல் ஒன்றும் நழு வாமல்- அற-இல்லா. ப்ராப்யாந்தரத்தில் ருசியில்லாமலறுத்து மதிநலவருளினன்.

அடிமைசெய்கைக்குறுப்பாக, ஜ்ஞான சக்தி ப்ரேமங் களாய்க் கொண்டு ஸர்வ வித கைங்கர்யங்களும் செய்யும்படிக் கருளினன்.

அடிமைசெய்யவேண்டுநாமே-யவன் க்ருபாபாத்ர பூதனான நாம்; அவன் அருளினவன்.

[9]ஆர்ஜித்து வந்ததன்று. அர்த்தித்து வந்ததன்று. ஆகிஞ் சன்யமும் அநந்யகதித்வமுமே [11]பற்றாசாக அருளின பக்தியை யுடையவன்.

---

[6] விசிஷ்டம் (विशिष्टम्) = உடையது. [7] திருமகள் பகவானைவிட்டுப் பிரிந்திருக்கமுடியாதவள். அவன் பலவிதமான பிறவிகளில் தோன்றினும், இவளும் அவ்வோ பிறவிகளிலும் நிழல்போல் தொடருவள். அது தெய்வப்பிறவியாயினும் மானிடப்பிறவியா யினும் மற்றேதாயினும் வாசியில்லை. [8] ப்ராப்யாதிகாரி (प्राप्याधि-कारि) = பெறத்தகுந்தவன்.

[9] ஆர்ஜித்து = ஸம்பாதித்து. [10] அர்த்தித்து (अर्थित्वा) = இரந்து.
[11] பற்றாசாக = உபாயமாக.

அவன் கிருபாப்ரவாஹ முடையவனை அயர்வறுமமரர் களதிபதி, "தெழிகுரலருவித் திருவேங்கடத் தெழில் கொள் சோதி."

அபர் = அசர்வு. அசராமல் ப்ராப்யானந்தானுபவம் பண்ணுமவர்கள். 'தெழிகுரலருவி' [12] நாரங்களாய் நித்ய ஸூரிகள் அடிமை செய்கிறபடி.

அருவிகள், ப்ரீதி ப்ரேரிதராய்க் கொண்டு வாசா கைங்கர்யமான ஸாம கானமான— செஞ்சொற் கவிபாட வாருங்கோ ளென்று அழைப்பாரைப் போலே தெழிகுரலருவி சோரா நின்றது.

'தெள்ளருவி கொழிக்குந் திருவேங்கடமாமலை' யிறே. அதிபதி—எழில் கொள் சோதி. காலோசிதமாக அடிமை கொள்ளுமவன் யவனவன். 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி' என்று பாரித்தவனை 'க்ரியதாமிதி மாம் வத' என்று ஏவிக்கொள்ளுமவன். திருவேங்கடத்தெழில்கொள்சோதி, 'துயராறுசுடரடி' இப்படிப்பட்டவதிகாரிக்குத்துயராவது—[13] ருணத்ரயமும், [14] அபசாரத்ரயமும் வேங்கடங்களென்கையாலே மெய்ம்மேல் வினைமுற்றவும் வேம், வேங்கடத்தெழில்கொள்சோதி சுடரடி தொழுதெழு

'வானோர்சோதி, நீராழிச்சோதி, தந்தாமமே மேவியசோதி, ஞானச்சுடர்விளக்கு என்கிற சோதிகளில் [15] வ்யாவ்ருத்தி.

'வானோர் சோதி', பகல்விளக்குப்பட்டிருக்கும்.
நீராழிச்சோதி' நீர்பட்ட விளக்காயிருக்கும்.

---

[12] நாரங்கள் = ஜலம்.

[13] ருணத்ரயம் (ऋणत्रयम्) = மூன்று கடன்கள்-தேவர்கள், ருஷிகள், பித்ருக்கள் இவர்களிடம் இயற்கையாகவே ஒவ்வொருவரும் செலுத்தவேண்டியது. யாகம் செய்தல், வேதமோதுவது, மக்களைப்பெறுவது- இவைகளால் அம்மூன்று கடன்கள் தீரும்.

[14] அபசாரத்ரயம் = பகவானிடத்திலும், அவனடியார்களிடத்திலும் செய்யப்படும் தவறான நடவடிக்கைகள் இரண்டு வகை. அஸஹ்யாபசாரம். 3வது, ஒரு காரணமுமின்றியே பகவானுக்கு

'தந்தாமமே புக மேவியசோதி', அணையும்விளக்காயிருக்கும். 'ஞானச்சுடர் விளக்கு', குடத்திலிட்ட விளக்காயிருக்கும். 'வேங்கடத்தெழில்கொள்சோதி' குன்றத்திலிட்ட விளக்காயிருக்கும்.

'எந்தைதந்தைதந்தைக்கே' = இப்படிப்பட்ட ஸ்வாமியானவன்- சுடரடிதொழுதெழு என்மனனே- 'எந்தைதந்தைதந்தைக்கே' வழுவிலா அடிமைசெய்யவேண்டும் நாமென்று மனஸை [14] ஸம்போதிக்கிறார்-

நான் [17] கரணியும் நீ [18] கரணமும் ஆனுப்போலே நமக்கவன் ஸ்வாமியுமாய் ஸர்வவிதபந்துவுமானவன்- அவனுக்கு வழுவிலா வடிமைசெய்யவேண்டு நாமென்று ப்ராப்யத்தை அர்த்தித்துப் பெறுகிறார்.

மூன்றும்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

மூன்றும்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு — (அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

புகழு நல்லொருவ னென்கோ? பொருவில்சீர்ப் பூமி யென்கோ?
திகழுந் தண்பரவை யென்கோ? தீயென்கோ? வாயு வென்கோ?
நிகழுமா காச மென்கோ ? நீள்சுட ரிரண்டு மென்கோ ?
இகழ்விலிவ் வனைத்து மென்கோ? கண்ணனைக் கூவு மாறே.

எதிராயிருத்தல். இந்த மூன்று அபசாரங்கள். [15] வ்யாவ்ருத்தி பேதம். [16] ஸம்போதித்தல் = விளித்துச் சொல்லுதல்.

[17] கரணி (करणि) = கருவியை யுடையவன்.

[18] கரணம் (करणम्) = கருவி.

'புகழுநல்லொருவனி' லிவர் பாரிப்புக்கீடாகத் தன்னையும், [1] தன் விபூதியையும், [2] தன் ஸர்வாத்மபாவத்தையுங்காட்டிக் கொடுக்கக் கண்டு, ஹ்ருஷ்டராய் பாரித்தபடியே வாசிகமாக அடிமைசெய்து தலைக்கட்டினார்.

யாவையும் யவருந் தானா யவரவர் சமயந் தோறுந்-
தோய்விலன் புலனைந் துக்குஞ் சொலப்படா னுணர்வின் மூர்த்தி
யாவிசே ருயிரி னுள்ளா லாதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடி லவனையுங் கூட லாமே. 10

'உயர்வற' என்கிற பாட்டை 'யாவையும் யவருந்தானாய்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில் ; –

'உயர்வற-யாவையும் யவரும் என்று மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவாக, [3] பூதங்கள், பௌதிகங்கள், சிலாக்ய மான ரத்னாதிகள், ரஸவத்பதார்த்தங்கள், கானாதிகள், பகவத் ஸ்வரூபகுணங்களாயுள்ள யாவை, யவரும், தானாய் நிற்கையாலே, ஒன்றுக்கொன்று உயர்வுந்தாழ்வுமாயிருக்குமாகையாலே-உயர்வற உயர்நலமுடையவன் யவனவன்- சேதனாசேதனங்களிலே வியாபித்து நீ நின்றால், [5] தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும். சேதனாசேதனங்களடங்கத் "தானே" என்கிற சொல்லுக்குள்ளே யாய் [6] பிரகாரப் பிரகாரியாயிருக்குமத்தனை.

சேதனருடைய ஸுகித்வ துக்கித்வங்கள், அசேதனங்களு

---

[1] விபூதி (विभूति) = சொத்து (ஆளப்படுவது)- உடம்பு, வீடு-நிலம்- பரிஜனங்கள் = சாமரம் குடை முதலியன. [2] ஸர்வாத்ம பாவம் (सर्वात्मभावम्) = எல்லா வஸ்துக்களுக்கும் உட்புகுந்து அவைகளை அதனதன் செயல்களைச்செய்விக்கும் தன்மை. எல்லாவற்றுக்கும் உயிராக இருக்கும் தன்மை. [3] பூதங்கள் (भूतानि) = பூமி, ஜலம், அக்னி, காற்று, ஆகாயம். ஆகியவை. [4] பௌதிகங்கள (भौतिकङ्गळ्) = பூதங்களால் உண்டுபண்ணப்பட்ட வஸ்துக்கள். [5] தத்கததோஷை: அஸம்ஸ்ப்ருஷ்டன் (तद्गतदोषैः असंस्पृष्टन्) = அவைகளிலுள்ள தோஷங்களாலே தீண்டப்படாதவன். [6] ப்ரகார ப்ரகாரி- ப்ரகாரம் (प्रकारम्) = தன்மை; ப்ரகாரி (प्रकारि) = அதை

டைய [7] பரிணாமாதிகள் தட்டாதிருக்கிறபடி 'அவரவர் சமயந் தோறும் தோய்விலன்'. சேதனுசேதனங்களைத் 'தானே' ன்கிற சொல்லுக்குள்ளேயடங்கும்படி, அவற்றோடே கலந்து நீ நிற்கச் செய்தேயும், அவற்றினுடைய தோஷங்கள் தன்பக்கல் தட்டாத படி நிற்கும்.

சேதனனுக்கு [8] அசித்கதமான பரிணாமாதிகளில்லையேயாகிலும், அந்த அசித் [9]ஸம்ஸர்கத்தாலே ஸுகதுக்கங்கள் உண்டாகாநின்றதிறே- அப்படியே யிவனுக்கும் தட்டாதோவென்னத் தட்டாது- பிரவேசானுகுணத்தாலே.

இப்படி என்கொண்டறிந்தீரென்ன ; [10] விபூதிமானுயிருக்கிறுன் யாவனொருவன் அவன் மயர்வற மதிநல மருளுகையாலே யறிந்தேன்—பகவன்னிர்ஹேதுக கிருபையாலே பிரகாசித்தது.

தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான்- இந்திரியங் களாலேயுமறியப் போகாதவன்:—

யாவனொருவன் ; அவன் அயர்வறுமமரர்களதிபதி. சற்றும் [11] விஸ்மிருதியற்று அனுபவிக்கிற நித்ய முக்தர்க்கும் 'உணர்வின் மூர்த்தி' ஜ்ஞானனந்தங்களாலே ப்ரகாசமான திவ்யமங்களவிக்ரஹத்தையும், திவ்யாத்மஸ்வரூபத்தையுமுடையவன்-

யவனவன்- ஆவிசேர் உயிரினுள்ளான்- யாதுமோர் பற்றிலா தான்:—

[12] ஆவியுண்டு, ப்ராணுச்ரயமான சரீரம், அத்தோடே சேர்ந்திருந்த [13] உயிருண்டு- ஆத்மா. அதுக்கு அசித்ஸம்பந்தத்தாலே பால்யாதிகளுண்டாகிறுப்போலே பரமாத்மாவுக்கு தத்கத தோஷங்கள் வாராதோவென்னில்; யாதுமோர் பற்றிலாதான் பாவனை அதனைக் கூடில் ; அவன் பக்கலில் பக்தியுண்டாகில், அவ

யுடைய பொருள். [7] பரிணமம் (परिणामम्) = மாறுதல் (உருவத்தில்)
[8] அசித் (अचित्) = அறிவில்லாதது; ப்ரகிருதி. [9] ஸம்ஸர்கம் (संसर्गम्) = சேர்க்கை. [10] விபூதிமான் (विभूतिमान्) = ஐச்வர்யமுடையவன். [11] விஸ்ம்ருதி (विस्मृति) = மறதி.
[12] ஆவியுண்டு = ஆவியாவது. [13] உயிருண்டு = உயிராவது.

ஊையுங்கூடலாமே- என்மனனே- தொழுதெழு என்று நெஞ்சுக்கும் நெஞ்சுபோல்வாருக்குமுபதேசித்து உபதேசகர்ப்பானுபவம் பண்ணுகிருர்.

மூன்றும் பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்
முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

மூன்றும்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மோய்ம்மாம் பூம்போழில் போய்கை முதலைச் சிறைப்பட்டு நின்ற
கைம்மா வுக்கருள் செய்த கார்முகில் போல்வண்ணன் கண்ண-
னேம்மா ஊைச்சோல்லிப் பாடி யெழுந்தும் பறந்துந்துள் ளாதார்
தம்மாற் கருமமேன்? சோல்லீர் தண்கடல் வட்டத்துள் ளீரே. 1

'மொய்ம்மாம் பூம்பொழில் பொய்கை'யில் அவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே ஈடுபட்டிருக்குமவர்களைக் கொண்டாடியும்; அது இல்லாதாரை நிந்தித்து முகமை தலைமத்திடையிட்டுச் சொல்லுகிருர்.

கருமமுங் கரும பலனு மாகிய காரணன் றன்னைத்-
திருமணி வண்ணனைச் செங்கண் மாலினைத் தேவ பிரானை-
யோருமை மனத்தி னுள்வைத் துள்ளங் குழைந்தெழுந் தாடிப்
பெருமையு நாணுந் தவிர்ந்து பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே. 10

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கருமமும் கருமபலனு' மென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்—

உயர்வற- கருமமும் கருமபலனுமாகிறது- மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தமளவாக கர்மஜ்ஞானங்களாலும் தத்ஸாதனபலங்களாலும் உயர்வுந்தாழ்வுமாயிற்று.

அதில் விஞ்சின கைவல்யமாகிற படுகுழியிலே விழாமே ரக்ஷிக்கிறவன் யவனவன்- கருமமும் கருமபலனுமாகிய காரண மானவன் யாவனொருவன்- அவன் மயர்வறமதிநலமருளினவன். மயர்வாவது, அவித்யாதிகளால் வரும்காம்யபலன்களைப் போக் கித்தன்னையே ப்ராப்ய ப்ராபகங்களுமாக வறியும்படி, பக்தி ரூபாபன்னஜ்ஞானத்தைத்தன் நிர்ஹேதுக கிருபையாலே யருளி னவன் யாவனொருவன், அவன் கருமமும் கருமபலனுமான கார ணனும், அநுஷ்டாதாவும், [3] நியாமகனும், [4] பலப்ரதனுமவன். ஆகையாலே திருமணிவண்ணனைச் செங்கண்மாலினைத் தேவ பிரானை ; இப்படி உபாஸகருக்கு பலப்ரதாதாவானவன், ஸ்ரியஃ பதியாய் காந்திமிக்கிருந்துள்ள நீலரத்னம்போன்ற திருமேனி யையும் அகவாயில் வாத்ஸல்யந்தோன்றுந்திருக்கண்கள் கருணா மிருதம் பொழிகிற செங்கண்மாலினை.

தேவர்களுக்குபகாரகனை அயர்வறுமமரர்களதிபதியை அநிமிஷரான நித்யர்க்கு அதிபதியானவனை-

ஒருமை மனத்தினுள் வைத்து, நித்யஸூரிகளைப்போலே என்னையும் மனமும் இவனும் ஸதானுபவம் பண்ணும்படி அனு பவிப்பித்து எனக்குபகாரகனானவனை.

ஒருமை மனத்தினுள் வைத்துத் துயரறுசுடரடி தொழுதெ ழென்மனனே- "உள்ளங்குழைந்தெழுந்தாடிப்பெருமையும் நாண மும் தீர்ந்து பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே"

ஹேயப்ரதிபடமான சுடரடியைத்தொழுது, ஒரு ப்ரயோஜ னத்துக்காகவன்றிக்கே நெஞ்சிலே ஒருமிக்கவைத்து அத்தாலே அகவாய் சிதிலமாய் இருந்த விடத்திலிருக்க வொட்டாமையாலே

---

[1] கைவல்யம் (कैवल्यम्) =ஜீவாத்மஸ்வரூபத்தையே அனுபவித்து த்ருப்தராயிருக்கை. பரமாத்மாவின் ஸ்வரூபத்தையனுபவிப்ப தாகிற பேரின்பத்துக்குப் பெரும் விரோதியாய் இருத்தலால் இதைப்படுகுழி என்று நிந்தை பண்ணும்படியாயிற்று.

[2] அநுஷ்டாதா (अनुष्ठाता) =செய்பவன் [3] நியாமகன்= ஏவுகிற வன் [4] பல ப்ரதன் (फलप्रदन्) =பலத்தைக் கொடுப்பவன்.

ஆடிப் பெருமையையும் லஜ்ஜையையும் விட்டு அடைவுகெடவேத் துங்கள்-அதுவே உங்களுக்குப்புருஷார்த்தமென்று, நெஞ்சுக்கும் நெஞ்சுபோல்வார்க்குமுபதேசித்தனுபவிக்கிறார்.

இரண்டாம் பத்து 5வது திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும் பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—
(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

செய்ய தாமரைக் கண்ண னுயுல கேழு முண்ட வவன்கண்டீர்-
வையம் வானம் மனிசர் தெய்வம்மற் றும்மற் றுமற்று முற்றுமாய்
செய்ய சூழ்சுடர் ஞான மாய்வெளிப் பட்டிவைபடைத்தான் பின்னு
மோய்கோள் சோதியோ டாயினு னொரு மூவ ராகிய மூர்த்தியே.

செய்யதாமரைக்கண்ணனில் பகவத்குண ஜ்ஞானமில்லாமை யாலே ஈச்வரனுடைய விஷயீகாரத்துக்கு உறுப்பாக்கி, அர்ச்சாவதாரபர்யந்தமான [1] ஸௌலப்யகாஷ்டையை ஸம்ஸாரிகளுக்குபதேசிக்கிறார்.

தஞ்ச மாகிய தந்தை தாயொடு தானு மாயவை யல்லனு-
யெஞ்ச லிலம ரர்கு லமுதல் மூவர்த முள்ளு மாதியை-
யஞ்சி நீருல கத்துள் ளீர்க ளவனி வனென்று கூழேன்மின்
நெஞ்சி னுனிளைப் பான் யவனவ னாகும் நீள்கடல் வண்ணனே.

'உயர்வற' என்கிற பாட்டைத் 'தஞ்சமாகிய' என்கிற பாட்டு விவரிக்கிறது—எங்ஙனேயென்னில்: =

மனுஷ்யானந்தந்தொடங்கி, பிரம்மானந்தத்தளவும், தேவதாந்தர பஜனத்தாலே உயர்வற்றார்கள்- உயர்வறவுயர்நலமுடையவன் தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமாய்; அங்ஙனன்றிக்கே 'உயர்வறவுயர்நலமுடையவ' னென்று 'விண்மீதி' த்யாதிப்படியே பரத்வமே பிடித்து அவதாரகுணத்தளவுமுபதேசித்தார். அத்தாலே உயர்வற்றார்கள்.

---

[1] *காஷ்டை (காஷ்டை) = மிகவும் அதிகமான நிலைமை.*

'பரத்வம், வாசாமகோசரமாய் எட்டாநிலமாயிருந்தது. அவதாரத்துக்குப் பிற்பாடரானேனும்- நாங்கள் எங்கேயாரை ஆராதிப்போ' மென்ன—

நீங்கள் உகந்தபடியே உகந்தவற்றைத் திருமேனியாகக் கொண்டிருக்க, நீங்களுமவற்றை [2] திவ்யஸம்ஸ்தானமாக விரும்பி ஆச்ரயியுங்கோளென்கிறார்.

உயர்நலமுடையவன்யவன்-தஞ்சமாகிய தந்தைதாயித்யாதி' லோகத்திலே, ஒருவரையொருவர், தாய்தகப்பனாய்க்கொண்டு உயர்வுந்தாழ்வுமாயிருக்குமாப்போலே யன்றிறே- உயர்நலமுடையவன் தஞ்சமாகிய தந்தைதாயொடு தானுமானவன்.

அவர்களிவனுக்கோரிடர்கள் வந்தால் விட்டுட்போவர்கள். இவர்களோடுண்டான பந்தந்தான் கருமமடியாக வந்ததாகையாலே கருமம் [3] க்ஷயிக்க க்ஷயிக்கும்.

இங்ஙனன்றிக்கே [4] 'பூதானும் யோவ்யயః பிதா' [5] ஸத்தாயோகிஸகலபதார்த்தங்களுக்கும் பிதாவாயிருக்கும்.

யவனவன்-தானுமாய்; மாதாபிதாக்கள் போகட்டுப்போனாலும்நாம் ஜீவிக்க வேணுமென்றிறே- தனக்கு நன்மை பார்ப்பது-

'அவையல்லனுமாய்' கீழ்ச்சொன்னவர்களல்லனுமாய் [6] "த்வமேவ மாதாச பிதா த்வமேவ த்வமேவ பந்துச்ச குருஸ்த்வமேவ" என்கிறபடியே ஸர்வவிதபந்துவுமானமாத்திரமன்றிக்கே ஜ்ஞானப்ரதனான ஆசார்யனுமாய் மயர்வற மதிநலமருளினன்.

'சரீரமேவ மாதா பிதரௌ ஜநயதః' என்கிறவர்களல்லர்.

[7] ஸஹி வித்யாதஸ்தஞ்ஜநயதி' 'ச்ரேஷ்டம் ஜன்ம' என்கிறபடியே பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே 'ஸர்வவிதபந்துவும்

---

[2] திவ்யஸம்ஸ்தானம் (दिव्यसंस्थानम्) = அப்ராக்ருதமான திருமேனி.

[4] பூதானும் யோவ்யய: பிதா (भूतानां योऽव्ययः पिता) = ஸகலப்ராணிகளுக்கும் எவன் மாறுதலில்லாத தந்தையாயுள்ளவனோ. [5] ஸத்தாயோகி (सत्तायोगि) = உள்ளனவான [6] த்வமேவ மாதா ... ... குருஸ்த்வமேவ (त्वमेव माता च पिता त्वमेव त्वमेव बन्धुश्च गुरुस्त्वमेव) = தாயும் நீயே தந்தையும் நீயே- உற்றரும் ஆசார்யனும் நீயே.

[7] ஸஹி வித்யாதஸ்தஞ்ஜநயதி (सहि विद्यातस्तंजनयति) = கல்வியைக்

தானே' என்கிற மதிநலத்தை யருளினன்.

யவன் அவன்- அயர்வறுமமரர்களதிபதி 'எஞ்சலில் அமரர் குல முதல்' இப்படி யிருக்கிறவன் யாரென்னில், நித்யஸூரிகளுக்கு உஜ்ஜீவன ஹேது வானவன்-

எஞ்சல்=சுருக்கம்- அயர்வுமப்படியே. இரண்டாலும் பகவதனுபவத்தில் ஸங்கோசமில்லாத அமரர்குலமுண்டு=நித்யஸூரிகள் திரள்- அதற்கு நிர்வாஹகன் யாவனொருவன் அவன்- மூவர் தம் உள்ளுமாதியை= [8] த்யேயவஸ்துவை [9] 'காரணந்து த்யேயः' இறே.

அன்றியே பிரும்ம ருத்ராதிகளுக்கு நிர்வாஹகனானவனை.

அன்றியே 'மூவர்த முள்ளுமாதியை' என்று அனந்த கருட விஷ்வக்ஸேனர்கள் முதலானோர்க்கு [10] 'த்யேயோ நாராயணஸ்ஸதா' என்று அவர்கள் த்யானத்துக்கு ஆதியான காரணனை- ஆக ஸர்வகாரணனென்றபடி.

'அஞ்சி நீருலகத் துள்ளீர்கள் அவனிவ னென்று கூழேன்மின்' கீழ்ச் சொன்னவை யெல்லாம் அச்சத்துக்கு உடலிறே.

ஜகத்காரணபூதனாய், நித்யமுக்தாநுபாவ்யனுமாய், பிரம்ம ருத்ராதிகளுக்கு நியந்தாவானவன், [11] விபூதித்வயத்தி லுள்ளாரெல்லார்க்கும் ஒக்க, ஸர்வ பந்துவானவனை 'நம்மாலே கிட்டப் போமோ' வென்றிங்ஙனே 'அஞ்சி, நீருலகத் துள்ளீர்கள்'= லௌகிகரான நீங்கள் 'அஞ்சி அவனிவனென்று கூழேன்மின்'.

கொடுப்பதன் மூலம் பிறப்பின் லக்ஷ்யத்தை உருப்படுத்துபவன் ஆசானே. அவனே பெற்றோரைக் காட்டிலும் உயர்ந்தவன்.

[8] த்யேயவஸ்து (ध्येयवस्तु)= த்யானிக்கவேண்டிய பொருள்.

[9] காரணந்து த்யேயः (कारणन्तु ध्येयः)=எல்லாவற்றுக்கும் காரணமான பரம்பொருளே த்யானம் பண்ணக் கடவது. [10] த்யேயோ நாராயணஸ்ஸதா (ध्येयो नारायणस्सदा)= ஸ்ரீமந்நாராயணன் ஸர்வகாலமும் த்யானிக்கப்படவேண்டியவன். [11] விபூதித்வயம் (विभूतिद्वयम्)=நித்யவிபூதி, லீலாவிபூதி.

அவனுகிறான்; [12] தேசகாலவஸ்துக்களால் அபரிச்சின்னனுய், உயர்வற உயர்நலமுமுடையவனுய், அயர்வறுமமரர்களதிபதியான வன்.

தேவதாந்தர ப்ரதிபத்தியாகிற மயர்வற, மதிநலமருளி, பாத்வாதிகளில் அருமையை நினைத் தஞ்சின அச்சந்திர நாமுகந் தகொரு திரவ்யத்தைத் திருமேனியாகக்கொண்டு, 'இவன்' என்று ஸௌலப்யந்தோற்ற, நம்புத்தியதீனமாயிருப்பானொருவன் ஆன பின்பு, 'அவன்' அபரிச்சின்ன னென்றும் 'இவன்' பரிச்சின்ன னென்றும் இங்ஙனே [13] ஸம்சயிபா மாந்தராகாதே கொள்ளுங் கோள்.

'நீள் கடல்வண்ணன்' துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே. பராத்பரனே- அர்ச்சாவதார ஸுலபனுயிருக்க ஸம் சயித்து, பயப்படவேண்டா.

சுடரடி. 'பரஞ்சோதி நீபரமாய்' என்று குணபூர்த்தி யுள்ளது, அர்ச்சாவதாரத்திலே யாகையாலே 'அவனிவ னென்று கூழேன் மின்' அர்ச்சாவதாரத்தினுடைய திருவடிகளை ஆச்ரயியுங்கோள்.

பாத்வாதிகளைப் போலே 'கிட்டவரிதே' ன்கிற ஹேயமு மில்லை- அர்ச்சாவதாரம். ஸர்வஸுலபமாய், ஸர்வஸமாச்ரயணீயமு மாய், இருக்கிற திருவடிகளை ஆச்ரயியுங்கோள்- இவ்விடத்தை நித்யவிபூதியிலு மதிசயமாகக் கொண்டிருக்கிறவன் 'துயரறு சுட ரடி தொழுதெழு, என்மனனே' என்று தன் நெஞ்சுக்கும் நெஞ்சுபோல்வார்க்குமாக வுபதேசித்து, உபதேசகர்ப்பானுபவம் பண்ணுகிறுர்.

மூன்றும்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[12] தேசகாலவஸ்துக்களால் அபரிச்சின்னன்=தேச (இடம்) த் தாலும், காலத்தாலும், வஸ்துக் (பொருள்) களாலும், அளவிட முடியாதவன்- (இன்னதேசத்தில் இந்த காலத்தில் இந்தவஸ்துக் களில் தான் இருப்பானென்று வரையறுத்துச் சொல்லமுடியாத வன் என்கை.)

[13] ஸம்சயிபா மாந்தர்=ஸந்தேகிக்கிற மனிதர்கள்.

ஸ்ரீ:

மூன்றும் பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு — (கலிநிலைத்துறை)

பயிலுஞ் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப்-
பயில வினியநம் பாற்கடற் சேர்ந்த பரமனைப்-
பயிலுந் திருவுடை யார்யவரேலுமவர் கண்டீர்
பயிலும் பிறப்பிடை தோறெம்மை யாளும் பரமரே. 1

பயிலும் சுடரொளியில், இப்படி உபதேசிக்கச் செய்தேயும் நெஞ்சு நெகிழ்ச்சி யன்றிக்கே யிருந்த ஸம்ஸாரிகளைக் கண்டு நோவுபட, “நீரேனிவற்றில் நோவுபடுகிறீர். திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பாரீ” ரென்று காட்டிக் கொடுக்கக் கண்டு ப்ரீதராய் அவர்கள் எனக்கு நாதர், அவர்களுடைய சேஷத்வத்தி னுடைய எல்லைநில மாகவேணு மென்கிறார்.

சன்மசன் மாந்தரங் காத்தடி யார்களைக் கொண்டுபோய்த்-
தன்மை பெறுத்தித்தன் றாளிணைக் கீழ்க்கொள்ளு மப்பனைத்-
தொன்மை பிதற்றவல் லாரைப் பிதற்று மவர்கண்டீர்-
நன்மை பெறுத்தெம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பரே. 7

உயர்வற’ என்கிற பாட்டை, ‘சன்மசன்மாந்தரங் காத்தெ’ ன்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—
மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் ஜன்மஜன்மாந்தரமாவது;
‘பஞ்சாக்னிவித்தையில்’ சொல்லுகிறபடியே, ஜீவனானவன்

---

1 பஞ்சாக்னிவித்யை = ஜீவாத்மா இவ்வுடலை விட்டுப் பிரிந்ததும் ஐந்து அக்னிகளில் ஹோமம் செய்யப்பட்டு, பிறகு மறுபடியும் மற்றொரு சரீரத்தைப் பெறுகிறது- இவ்விஷயத்தைச் சொல்லும் ‘வித்யை’ உபநிஷத்.

மேகத்திலே புக்கு, வர்ஷ ரூபத்தாலே [2] பூகதமாய் [3] வ்ரீஹியிலே புக்கு, அன்னரூபத்தாலே புருஷன்பக்கலிலே புக்கு, பின்பு [4] பஞ்சமியான ஆஹுதியாலே புக்கபின்பிறே கர்ப்பமாவது.

இப்படி வருகிற ஜன்மபரம்பரைகளாகிற உயர்வற்று வேரறுத்து, வர்த்தமானஜந்மத்திலே யாக்கி;

'காத்து' பின்பொருதேகத்திலே புகாதபடி பண்ணி;

உயர்நலமுடையவன் யவன் அவன் "அடியார்களைக் கொண்டுபோய்', ஆனந்தாதி கல்யாணகுண பூர்ணனானவன், தன்னிடத்திலே ஸர்வபரந்யாஸம் பண்ணியிருக்கிற அடியார்களை;

நலமுடையவன் யாவனொருவன், அவன் மயர்வற மதிநலமருளி. பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே பாரதந்த்ர்யஸ்வரூபரான அடியார்களை.

மதிநல மருளினவன் யவனவன் [5] வேதைக ஸமதிகம்யனுகையாலே, நிர்ஹேதுகமான அநுக்ரஹத்தாலே கொண்டுபோய்;

மரணஸமயத் தளவும் பார்த்திருந்து, பக்தியும், அந்திமஸ்ம்ருதியும் தேவையாக்காதே [6] 'அஹம் ஸ்மராமி' என்று தான் நினைத்திருந்தபடியே [7] பிரம்மரந்த்ரவழி தெரியாதிருக்கிற இவனுக்கு [8] சதாதிகையான நாடியாலே [9] 'ஹார்த்தாநுக்ருஹீதः என்கிறபடியே தான் கூடக் கொண்டு புறப்பட்டு, இவனுக்கு இளைப்புத்தீர பரமப்ரவேசத்தைப் பண்ணுவித்து மேல்வழி போகைக்கும் தரிப்புண்டாம்படி பண்ணி;

'உயிர்கொண்டுடல் ஒழிய' இத்யாதிப்படியே, கர்மஸம்பந்த-

---

[2] பூகதமாய் (भूगतमाय्)= பூமியையடைந்ததாய் [3] வ்ரீஹி (व्रीहि) =நெல் [4] பஞ்சமியான ஆஹுதி=ஐந்தாவது ஹோமம்.
[5] வேதைக ஸமதிகம்யன் (वेदैकसमधिगम्यन्)=வேதங் (மறை)களாலே யன்றி மற்ற பிரமாணங்களால் அறியக் கூடியவ னல்லன்.
[6] அஹம் ஸ்மராமி (अहं स्मरामि)=(என் பக்தனை) நானே நினைக்கிறேன் [7] பிரம்ம ரந்த்ரம் (ब्रह्मरन्ध्रम्)= உச்சந்தலையில் உள்ள துவாரம். [8] சுதாதிக நாடி— நூற்றொன்றாவது நாடி (இரத்தக் குழாய்). [9] ஹார்தாநுக்ருஹீதः (हार्दानुगृहीतः)— ஹ்ருதயத்

மறச்செய்தேயும்- [10] வித்யா மாஹாத்ம்யத்தாலே [11] விரஜையள வும் [12] ஸூக்ஷ்மசரீரம் நிற்கும்படி பண்ணி;

[13] ஆர்ச்சிராதி கணங்களோடொக்க ஆளிட்டிராதே [14] 'நயாமி' என்கிறபடியே 'மாதவன் தந்துணையாய் நடந்தானே' ன்கிற படியே வழியிலுள்ளார் சிரஸா வஹித்துக்கொண்டு பரம பதத்திலே கொண்டுபோய் அயர்வறு மமரர்களுடன் கூட்டின அதிபதியவனவன் 'தன்மை பெறுத்தி' [15] 'ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே' என்கிறபடியே ஸ்வஸ்வரூப ப்ராப்தியைப் பண்ணிக் கொடுக்க;

அயர்வற்ற நித்யரைப் போலே யன்றிக்கே, பின்னையும் அதிசயமான [16] பாதோபதானமாகத் தன் தாளிணைக் கீழ்க் கொண்டு, துயரறு சுடரடி தொழுதெழப் பண்ணி;

இவன் துயரான சரீரஸம்பந்த மற்றவளவிலே துயரற்ற அடியாயிற்று.

இதுதான் இவனுக்கு உபகரித்தானு யன்றிக்கே 'தன் பேறாக' நினைத்திருக்கும் மஹோபகாரகனை,
'ஸாயுஜ்யம் [17] ப்ரதிபந்நா யே' என்கிறபடியே தன்மை பெறுத் திய வப்பனை.

திலே வஸிக்கிற பகவானுடைய அனுக்ரஹம் பெற்றவன்.
10 வித்யாமாஹாத்ம்யம் (विद्यामाहात्म्यम्)—வித்யை (ஞானத்தின்) யின் சக்தி 11 விரஜை (विरजा)—பரமபதத்துக்கு அருகிலிருக் கும் நதி. ரஜஸ் (அஞ்ஞானம்) அற்றது. 12 ஸூக்ஷ்மசரீரம்—இந்த ஸ்தூலமான உடம்பைப் போலவே எல்லா இந்திரியங்களு மமையப் பெற்றதான சிறு உடம்பு. 13 அர்ச்சிராதிகணங்கள் = பரமபதத்துக்குப் போகிற ஆத்மாவை எதிர்கொண்டு அழைத் துப் போவதற்காக நியமிக்கப் பட்டவர்கள் (வழிகாட்டிகள்).
14 நயாமி (नयामि)—நானே அழைத்துப் போகிறேன்.
15 ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே (स्वेन रूपेण अभिनिष्पद्यते) = தன் உண்மையான வடிவைப் (மழுங்காத ஞானம்) பெற்று விளங்கு கிறான். 16 பாதோபதானம் (पादोपधानम्) = பாதபீடம்.
17 ப்ரதிபந்ந: (प्रतिपन्नः)—அடைந்தவன்.

இப்படிச் செய்த உபகாரகனைத் 'தொன்மை பிதற்றவல்லார்' ஸ்வாபாவிகமான ஔதார்யகுணத்திலே ஈடுபட்டு அக்ரமமாகப் புகழுமவர்களே.

பிதற்றுமவர் கண்டீர் பயிலுந்திருவுடையார், நன்மைபெறுத் தெம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பரே. [18] பாகவத சேஷத்வ பர்யந்தமான பகவத்சேஷத்வ ஸம்பந்தத்தை யுண்டாக்கி;

நமக்கவன் திருவடிகளிலே கைங்கர்யத்தை [19] யாவதாத்ம பாவி நடத்தக்கடவ, விச்வஸநீயன்- துயரறுசுடரடி தொழுதெ ழென்மனனே-ததீயசேஷத்வ ப்ரதிபத்தி யுடையதாய்க் கொண்டு வர்த்தி என்கிறார்.

மூன்றும்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்
முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

மூன்றும்பத்து எட்டாந் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு — (கலித்துறை)

முடியானே ! மூவுல குந்தொழு தேத்துஞ்சீ
ரடியானே ! யாழ்கடலைக் கடைந் தாய் ! புள்ளூர்
கொடியானே ! கோண்ட ல்வண் ணவண்டத் தும்பரி
னெடியானே ! யென்று கிடக்குமென் னெஞ்சமே, 1

'முடியானே' யில் "தேர் கடவிய பெருமான் கனைகழல் காண்ப தென்று கொல் கண்கள்" என்று இவராசைப் பட்டபடியே கிடை யாமையாலும், ஸ்மாரக [1] ஸன்னிதியாலும் ஆற்றுமை மீதூர்ந்து, தாமும் தம்முடைய [2] கரணக்ராமங்களும் பெருவிடாய்ப் பட்டு

[18] பாகவதசேஷத்வம் அடியார்க்கடிமை செய்தல். [19] யாவதாத்மபாவி (यावदात्मभावि—ஆத்மா உள்ளளவு மிருப்பது.

[1] ஸ்மாரகஸன்னிதி (स्मारकसन्निधि)—(ஒரு வஸ்துவின்) ஞாபகம் உண்டுபண்ணுவதான மற்ற வஸ்துக்களின் ஸந்நிதி. [2] கரணக்ரா-

அவற்றினுடனே கூப்பிடுகிறார்.

வாசகமே யேத்த வருள்செய்யும் வானவர் தம்
நாயகனே ! நாளிளந் திங்களைக் கோள்விடுத்து
வேயகம் பால்வெண்ணெய் தொடுவுண்ட வானாயர்
தாயவனே ! யென்று தடவுமேன் கைகளே. 3

உயர்வற' என்கிற பாட்டை 'வாசகமே யேற்ற' என்கிற பாட்டு, விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

முடியானே'யில் 'தேர்கடவிய பெருமான் கனைகழல் காண்ப தென்று கொல்' லென்று விடாய்த்த இவர்க்கு; நிழலும் அடிதாறு மான ஸ்ரீவைஷ்ணவர்களைக் காட்டிக் கொடுக்கக் கண்டு; அனுபவித்து, அவர்கள் எனக்கு நாதர் என்று திருவடிகளிலே விழுந்தார்.

பாகவதவிஷயம் பகவத்விஷயத்திலே முட்டிற்று. அத்தாலே [3] அபிநிவேசம் தலையெடுத்துக் கரைபுரண்டு, 'என்று கொல்? கண்கள் காண்பதென்னுமளவன்றிக்கே, மற்ற இந்திரியங்களும் விடாய்த்து, ஒன்றின் [4] வ்ருத்தியை யொன்றாசைப்பட்டு எல்லா இந்திரியத்தின் வ்ருத்தியைத் தாமாசைப்பட்டுத் தன் கரணங்களும் தாமுமாய்க் கூப்பிடுகிறார்.

உயர்வற மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவாக அவரவர் கரணங்கள் அன்யமாய்ப் போகையாலே உயர்வற்றார்கள்.

உயர்வற உயர்நலமுடையவன், வாசகமேயேற்ற வருள் செய்யும்- ஜ்ஞானானந்தைக ஸ்வரூபனானவன் யாவனொருவன்- மயர்வற மதிநலம் அருளினவத்தால் வாசகமேயேத்த வருள் செய்தார். பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே [5] 'மனஃபூர்வோ வாகுத்தர:'

(ஏ)மங்கள்— கண் முதலான இந்திரியங்களின் கூட்டம்,

[3] அபிநிவேசம் (अभिनिवेशम्)—(விரும்பின பொருளைப்) பெற்றல்லது தரிக்கமுடியாமை.

[4] வ்ருத்தி—வியாபாரம் (செயல்) [5] மன: பூர்வோ வாகுத்தர: (मनःपूर्वोवागुत्तरः)— முதலில் மனதில் சிந்திப்பதையே பிறகு வாயால் சொல்வதால்- மனம் முந்தினது வாய் பிந்தியதென்கை.

என்கிறபடியே மனஸா அநுபவிக்க, அந்த அநுபவத்தை வாக்கு ஸ்துதித்து அநுபவிக்கையும், மனதைப்போலே ஸ்மரிக்கவும், வாய் வந்தாப்போலே ஸ்துதிக்கவும், தத்தத்வ்ருத்தியான ஆலிங்கனம் பண்ணும்படியும் ஆசைப்பட்டு 'இவ்வாசகமே யேற்றிப் போவதோ; நானுமொருக்கால் ஸ்மரித்து ஏத்தலாகாதோ' என்று நின்றது. [6]'விபங்யவ:' என்று நித்யஸூரிகள் ஏத்த இருக்கிறவனுக்கு நானுமொருக்கால் ஏத்தினலாகாதோ.

'அயர்வறுமமரர்கள்' [7]நம இத்யேவ வாதிந: [8]நமச்சப்தம் ப்ரயுஞ்ஜதே' என்பாராய், ஆக அயர்வற்ற 'வானவர் தம் நாயகனே' ஸ்வாமியான நீ என்னையும் வாசகமே ஏத்தப் பண்ணினலாகாதோ வென்று' கை, தன் வ்ருத்தியையும் செய்ய ஆசைப்பட்டு, வாக்கு விருத்திையயு மாசைப்படா நின்றது.

'நாளிளந் திங்களைக் கோள்விடுத்து வேயகம்பால் வெண்ணை தொடுவுண்டவாயர் தாயவனே' என்று தடவுமென் கைகளே' வேயகம் – மூங்கிலகம். படலடைத்த சிறு குரம்பை நுழைந்து புக்கு, இருட்டறையாகையாலே பசுவெண்ணை களவு காணப்புக்கு, தடவிக்கொண்டு வாரா நிற்கச்செய்தே; கையிலே உறி தாக்கினவாறே [9]ஸ்மிதம் பண்ணினன்.

அதுவே கைவிளக்காக, அறையிருட்டும் தன்னுடம் பிருளும்குழலிருளும் நீங்கிற்று.

அப்போது ஆழ்வார் தம்மபேக்ஷிதம் பெறுகைக்காக அவன் பின்னேடே' நுழைந்து சென்று, அயர்வறுமமரர்களதிபதியானவன் துயரறு சுடரடி தொழுது 'வாசகமே ஏத்தவருள் செய்யும் வானவர்தம் நாயகனே' யென்று தடவு மென்கைகளென்று தடவிப்பிடித்துக்கொண்டு [10]அர்த்திக்கிறார். 'எம்மனே வாக்காயங்கள் உனக்கு ஏதேனும் பச்சையிட்டதுண்டோ? இல்லையே. மனோவ்ருத்தியான நினைவும், வாக்கின் வ்ருத்தியான

---

[6] விபங்யவ: (विपन्यवः) நன்கு தோத்திரம்பண்ணுமவர்கள் [7] நம இத்யேவ வாதிந: (नमइत्येववादिनः) = இதன் பொருள் அடுத்த பதம்.
[8] நமச்சப்தம் ப்ரயுஞ்ஜதே (नमश्शब्दं प्रयुञ्जते) நம: என்கிற சப்தத்தைச் சொல்லுகிறார்கள்.
[9] ஸ்மிதம் (स्मितम्)—புன்சிரிப்பு. [10] அர்த்திக்கிறார்—யாசிக்கிறார்.

ஸ்துதியும், கையின் வ்ருத்தியான ஆலிங்கனமும் உண்டாகவேணு மென்று தடவாநின்றது.

'ஆயர்தாயவனே' ஆயருக்குத் தாய்போலே பரிவனான வனே என்று தடவும் என் கைகளே.

'அயர்வறுமமரர்களதிபதியை' 'அப்ராப்ய மனஸா ஸஹ' என்று வேதத்தால் எட்டாதவனை, படலையடைத்துள்ளே புக்குக் [11] கொண்டியிலே பிடிக்கக் காணுந் தேடுகிறது.

[12] நவநீத சௌர்ய வ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தவாறே அத்தால் வந்த ப்ரேமத்தாலே இரண்டு கைகளுக்குக் கண் தோற்றுகிற தில்லையிறே - கைகளாகத் தொழுகின்றதை மறந் தார். ஆயர் தாயவனை என்று தடவுமென் கைகளே' என்று ஈடுபடுகிறார்.

மூன்றாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

முதற்பாட்டு — (கலித்துறை)

சொன்னால் விரோதமி தாகிலுஞ் சொல்லுவன் கேண்மினோ
என்னாவி லின்கவி யானொரு வர்க்குங் கொடுக்கிலேன்
தென்னா தெனாவென்று வண்டு முரறிரு வேங்கடத்-
தென்னானை யென்னப்ப னெம்பெரு மானுள னாகவே. (1)

'சொன்னால் விரோதத்தில் ஊனில் வாழுயிரிலே யனுபவித் ததற்குத் துணைத் தேட்டமானவோபாதி, இழவுக்குந் துணை யாருண்டோ வென்று பார்த்தவிடத்து, அவர்கள் புறம்பே அந்ய பராயிருக்க; அவர்களை அதில் நின்று மீட்கலாமோவென்று

---

[11] கொண்டி — களவு. [12] நவநீதசௌர்யம் (नवनीतचौर्यम्) — வெண்ணை திருடுதல்

பார்த்து உபதேசித்தவிடத்து, அவர்கள் அதில்நின்றும் மீளாமையாலே அவர்களைப்போலன்றிக்கே நான் [1] அனன்யார்ஹ கரணனாகப்பெற்றேனென்றுகந்தார்.

வாய்கொண்டு மானிடம் பாடவந் தகவி யேனல்லேன்
ஆய்கொண்ட சீர்வள்ள லாழிப் பிரானெனக் கேயுளன்
சாய்கொண்ட விம்மையுஞ் சாதித்து வானவர் நாட்டையு
நீ கண்டு கொள்ளென்று வீடுந் தருநின் றுநின்றே (9)

'உயர்வற' என்கிற பாட்டை 'வாய்கொண்டு மானிடம் பாடவந்த' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:

உயர்வற மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும், உயர்வும் தாழ்வுமா யிருக்குமவர்களை வாய்கொண்டு மானிடம்பாடவந்த கவியேனல்லேன்.

[2] விசித்ரா தேகஸம்பத்திஃ ஈச்வராய நிவேதிதும் என்றிருக்கிற கரணங்களைக்கொண்டு பாடவல்லனோ. அதில் ப்ரதானமான மனோவாக்காயங்களைக் கொண்டு [3] க்ஷுத்ரரைக் கவிபாடுகைக்குப் பிறந்தவனல்லேன்.

[4] 'ஸ்ருஷ்டஸ்த்வம்வனவாஸாய' என்றுப்போலேயிறே, என் வாயும் பிறந்தபடி. நான் பிறரைக் கவிபாடினால், என்னையவன் ஸ்ருஷ்டித்ததற்குப் பிரயோஜநம் அவன் பெற்றானாம்படி எங்ஙனே? உயர்நல முடையவன் யாவனொருவன் அவன் [5] பராத்பரன். அவனைப் பாடவந்த கவியென்கிறார்.

---

[1] அநந்யார்ஹகரணன் (अनन्यार्हकरणन्) = என்கரணம் (மனது முதலான இந்திரியங்கள்) வேறுவிஷயங்களில் ஈடுபடாமல் அமையப்பெற்றேன். [2] விசித்ராதேகஸம்பத்தி: ஈச்வராயநிவேதிதும் (विचित्रा देहसंपत्तिरीश्वराय निवेदितुम्) பகவானுக்கு அர்ப்பணம் செய்வதற்காக இந்த அற்புதஸ்ருஷ்டியான உடம்பு அமையப்பெற்றது. [3] க்ஷுத்ரர் (क्षुद्र) = அற்பர். [4] ஸ்ருஷ்டஸ்த்வம்வனவாஸாய (सृष्टस्त्वं वनवासाय) = நீ (இராமனுடன்) காட்டில் வாழ்வதற்கென்றே பிறந்தாய்; (இலக்குமணனைப் பார்த்து ஸுமித்திரை சொல்லும் வார்த்தை.) [5] பராத்பரன் (परात्परन्) = மேலான வஸ்துக்களெல்லாவற்றையும்விட உயர்ந்தவன்.

மயர்வறமதிநல மருளினன் யவனவன். 'ஆய்கொண்ட சீர் வள்ளல்' "நீர் அவனைக் கவிபாடக் கடவோ" மென்றிருந்தாலும், வேதங்களும் 'யதோவாசோநிவர்த்தந்தே' என்று மீளுகிற விஷயத்தைக் கவிபாடப்போமோ உம்மாலே" யென்ன ;

மயர்வறமதிநல மருளினன் ஆய்கொண்ட சீர்வள்ள லாழிப் பிரா னெனக்கேயுளன், யவனவன் ;

[6] 'பக்தானும்' என்கிறபடியே தன்னை யெனக்காக்கிவைத் தா லெனக்குக் கவிபாடக் குறையுண்டோ? மயர்வாகிற மதிமயக் கத்தை யறுத்து மதிநலமருளினன் பக்தி ரூபாபன்னஜ்ஞானத் தைத் தன்நிர்ஹேதுகமான க்ருபையாலே யருளின "ஆய் கொண்டசீர்வள்ளல்" ஹேயப்ரதிபடமான கல்யாணகுணங்களை யுடையவன் யாவனொருவன் ;

அவன், வள்ளல் தனமாவது ஔதார்யம்—யவன்—ஆழி, அத்யந்தம் [7] சேஷபூதனானவன், அவன் 'பிரான்' [8] சேஷியான உபகாரகன்.

'எனக்கேயுளன்' என்பக்கலிலே விசேஷகடாக்ஷத்தைப் பண்ணினவன். கையுந்திருவாழியுமான சேர்த்தியழகைக் காட் டிக் கவிக்கு விஷயமாக்கிப், பாடுவித்துக் கொண்டபடி.

யவனவன்– 'சாய்கொண்ட இம்மையும் சாதித்து' இம்மை யிலே மோக்ஷ சுகத்தையுந் தந்து. சாய்=சாயல்; அதாவது பர மானந்தமான உயர்நலம். அந்த பரமானந்த ஸுகத்தை யிம்மை யிலே [9] சாதித்து.

அதிலுமிது அத்யந்த ஸுகமாம்படியருளி, தானே உபா யோபேயமாம்படி யாவதாத்மபாவியாய் தன்னையே அனுபவிக் கும்படி பண்ணி.

---

6 பக்தானும் (भक्तानाम्) = அடியவர்களுக்காகவே

7 சேஷன் = பிறருடைய பிரயோஜனத்துக்காகவே இருப்பவன். [8] சேஷி = முன்சொன்ன சேஷனின் கைங்கர்யத் தின் பயனைப் பெறுமவன்.

9 சாதித்து = கொடுத்து.

அபர்வறு மமரர்களதிபதி யாவனொருவன்; அவன் "வானவர் நாட்டையும் நீகண்டுகொள்"ளென்று அயர்வில்லாமல் ஆராவமுதா[10] சிகள் தனக்கும் அபர்யாப்தாமிருதமானவன் "வானவர் நாட்டையும் நீகண்டுகொள்" ளென்று கொடுக்கும்படி. "வானிளவரசுவைகுந்தக்குட்டன் வாஸுதேவனுகையாலே.

அதிலே தம்மோடுயிருப்பாமத்தனை. அத்தேசம் நித்யஸூரிகளதாயிருக்கும். [11] 'பவத்விஷயவாஸிந:' என்றதும் அவன் தன் பக்கலிலேயாயிருக்கிறது. யவன் முமுக்ஷுவானவன் அவன் வீடு தருமவன். 'வீடுந்தருமென்று [12] அபிசப்தத்தாலே, இம்மையிலே சாய்கொண்ட ஸாம்யபோகமும், வானவர்நாட்டையும், நீகண்டு கொள்ளென்று 'வீடுந்தரும்.'

[13] க்ருதந் தசகுணம்மயா' வென்று [14] பெருமாள் மீண்டெழுந்தருளினபோது ஸ்ரீ பரதாழ்வான் [15] ஸ்ரீ பண்டாரத்தை வளர்த்து பதின்மடங்காகக் காட்டி ஒப்பிப்பனுப்போலே இவனும். [16] 'பூர்வேஸாத்யாளோ'டு யிவர் தம்மோடு வாசியில்லை காணுமவனுக்கு. அன்றீன்ற கன்றின்பக்கல் தாயிரங்குமாப்போலே '[17] த்வயி கிஞ்சித் ஸமாபந்நே, கிம் கார்யம் ஸீதயா மம'

---

[10] அசிகள் (अशिकळ) = உண்பவர் (இங்கே அனுபவிப்பர்கள்.)
[11] பவத்விஷயவாஸிந: (भवद्विषयवासिनः) = உம்முடையதேசத்திலேயிருக்குமவர்கள். [12] அபிசப்தம் (अपिशब्दम्) = உம்மை. [13] க்ருதந் தசகுணம்மயா (कृतन्दशगुणंमया) = பத்துமடங்கு அதிகமாக்கியுள்ளேன். [14] பெருமாள் = இங்கே ஸ்ரீராமன். [15] ஸ்ரீபண்டாரம் = பொக்கிஷம். [16] பூர்வேஸாத்யா: (पूर्वेसाध्याः) = நித்யஸூரிகள். [17] த்வயிகிஞ்சித்ஸமாபந்நே கிங்கார்யம் ஸீதயாமம. (त्वयिकिञ्चित्समापन्ने किंकार्यंसीतयांमम) ஸுக்ரீவனைப்பார்த்து இராமன்சொல்வது:—
"உனக்கு ஏதாவது (கெடுதல்) நேர்ந்துவிட்டால் எனக்கு ஸீதையை பெற்று மனஸ் ஸந்தோஷமடையாது – இராமன் ஸீதையை மீட்கும்விஷயத்தில் துணைவனாக ஸுக்ரீவமகாராஜாவை ஏற்றுக்கொண்டார். அக்னிஸாக்ஷிகமாக ஸ்னேகம் ஏற்பட்டது. இப்படியே ஸீதாதேவியும் அக்னிஸாக்ஷிகமாக மணக்கப்பட்டவள். இவ்விருவருக்குள், ஸீதாதேவியைக்காட்டிலும் ஸுக்ரீவமகாராஜனிடமே அதிகமான வாத்ஸல்யம் இராமனுக்கு. "அன்றீன்ற கன்றின்பக்கல் – பசுவுக்குப்போலே - கன்பனை பறிகொடுத்தாவது நாயகியைப்பெற்றால்போதுமென்று தர்மஸூக்ஷ்மம் தெரியாமல் எண்ணுமவரன்றிவர்-தன் அபாயத்தை லக்ஷ்யம் செய்யாமல் கடந்துகொண்ட ஸமயம் ஸுக்ரீவ மஹாராஜாவை இம்மாதிரி கடிந்துபேசினர்.

என்றபடியை, நீயுமத்தைக் கண்டுகொண்டு தூயாறு சுடரடி தொழுதெழென் மனனே.

தூயாறு சுடரடி ஹேயப்ரத்யநீக மென்றபடி. இவனைப் பரிசுத்தமாக்கித் தான் சுத்தமானபடி.

"வீடுந் தரும் நின்றுநின்று" இப்படிக் கொடுத்திருக்கச் செய்தேயும் ஒன்றுங் கொடுத்திலனாகக் கடன்பட்டாப்போலே யிராநின்றான்.

அன்றிக்கே 'நின்று நின்றேதரும்' அதாவது முதல் தன் னிலே ஐஹிகத்திலே யனுபவிப்பித்துப் பின்பொரு தேசவிசே ஷத்திலேறக் கொண்டுபோய்வைத்துப் பின்பு கைங்கர்யஸாகத் தைக் கொடுக்கும்- ஆக [18] ஸாத்மிக்க ஸாத்மிக்கத் தரும்- தொழு தெழென் மனனே—ஆக அங்யஸ்தோத்ரத்தையும், [19] அஸேவ்ய ஸேவையையும் விட்டு, ப்ராப்தவிஷயத்தைத் தொழுதாடிப்பாடி வர்த்தி என்று தன் திருவுள்ளத்தோடு, லௌகிகரோடு வாசியற வுபதேசித்து உபதேசகர்ப்பானுபவம் பண்ணுகிறாராயிற்று.

மூன்றும்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

மூன்றும்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம்வில்
ஒண்மை யுடைய வுலக்கையொள் வாடண்டு கொண்டு
[புள்ளூர்ந் துலகில்
வன்மை யுடைய வரக்க ரசுரரை மாளப் படைபொருத
நன்மை யுடையவன் சீர்பரவப் பெற்ற நானோர் குறைவிலனே.(1)

---

18 ஸாத்மிக்க ஸாத்மிக்க=முதலில் உண்ட உணவு ஜீர்ணமான வாறே மீண்டும் உணவைக்கொடுக்கும்படி.

19 அஸேவ்யஸேவை (असेव्यसेवा) = வணங்கக்கூடாதவர்களை வணங்குதல்.

'சன்மம் பலபல'வில் இதரஸ்தோத்ரத்துக்கு அநர்ஹ கரணனன மாத்ரமேயோ, பகவத்ஸ்தோத்ரத்துக்கு அர்ஹ கரணனுகவும் பெற்றேனென்றுகந்தார்.

இடரின்றி யேயொரு நாளொரு போழ்திலெல் லாவுல குங்கழியப்-
படர்புகழ்ப் பார்த்தனும் வைதிக னுமுட னேறத்திண் டேர்கடவிச்-
சுடரோளி யாய்நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன்
[பிள்ளேகளே
உடலோடுங் கோண்டு கோடுத்தவ னேப்பற்றி யோன்றுந்
[துயரிலனே (5)

உயர்வற—இடரன்றியே. விபூதியில் ஈச்வரன் ஆச்ரிதனுடைய அபீஷ்டப்ரதானத்தின் ஒருவகையை யருளிச்செய்கிறுர் அவையெவை யென்னில்; [1] வைதிகபுத்ராநயனத்தை அநுஸந்தித்து இவனேப்பற்றின எனக்கொரு துக்கமுண்டோ? இல்லே யென்கிறுர்.

'உயர்வற' என்கிற பாட்டை 'இடரின்றியே' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவாக உயர்வு = வருத்தம் எல்லாருக்கும் வருத்தமுண்டாய் உயர வேணும். அற, உயர்வின்றியே=ப்ரயாஸமின்றியே, 'இடரின்றியே' இடர் = துக்கம்- ப்ரயாஸமின்றியே, உயர்நலமுடையவன் உயராநிற்கிற நலமுடையவன்.

கிருஷ்ணனுனவன் 'ஒருநாளொருபொழுதில்' ஏகாஹமென்கிற [2] க்ரதுவில் தீக்ஷித்திருக்கும்போது [3] ப்ராதஸ்ஸவநந் தலேக்கட்டி, மாத்யந்தின ஸவநத்துக்கு தக்ஷிணுஸமயத்திலே ஒரு வைதிகர் வந்து ஸ்துதித்து 'நாலாம் புத்திரனிது, முன்பு மூன்று புத்ரனேயிழந்தேன்- நாலாம் புத்ரனேயாகிலும் ரக்ஷித்துத் தரவேணுமென்ன ... (இங்கு ஓலேச்சுவடி முறிந்துபோனதால் எழுத்துக்கள் தெரியவில்லே. ஒரு க்ரந்தம் - அதாவது 32-எழுத்துக்கள் இருக்கும்.)

---

[1] வைதிகபுத்ராநயனம் (वैदिकपुत्रानयनम्)=ஒரு வைதிக பிராம்மணரின் பிள்ளேயைப் பிறந்ததும் உடம்போடுகூட மறைந்துபோனவனேத்திரும்ப அழைத்துவந்தது. [2] க்ரது (क्रतु) = யாகம்.
[3] ப்ராதஸ்ஸவநம் (प्रातस्सवनम्) = மாத்யந்தினஸவநம் (माध्यंदिनसवनम्) = ஸோமம் என்பது யாகத்துக்கு உதவும் ஒருவகைக் கொடி. அதை அம்மியில் வைத்து நசுக்கி, அதன் சாறைப் பிழிந்து யாகத்தில் ஹோமம் செய்வார்கள். அங்ஙனம் சாறு பிழிவதற்கு 'ஸவநம்' என்று பெயர். அது காலே, நடுப்பகல், மாலே வேளேகளில் செய்யப்படும். அதில் முதல் இரண்டு ஸவநங்களின் பெயர் இது. மூன்ருவது த்ருதீயஸவநம் (तृतीयसवनम्)

'யவனவன்- "எல்லாவுலகுங் கழியப் படர்புகழ்ப் பார்த்தனும் வைதிகனு முடனேற" எல்லாவுலகங்கழிய, மனுஷ்யலோகந் தொடங்கி பிரம்மலோகங் கடந்தவப்பாலே தேரை நடத்தி, எனக்கு மயர்வற மதிநல மருளினவன்.

அவர்களுக்கும் மயர்வற மதிநல மருளின கிருஷ்ணனும், படர்புகழ்ப் [4] பார்த்தனும், வைதிகனு முடனேறினவர்களுக்கு மயர்வற, அவர்கள் துக்கந்தீர,

'திண்டேர்கடவி=மதிநலமான ஜ்ஞானபக்திகளை யருளிச் செய்துகொண்டு, [5] "யஸ்யமந்த்ரீச கோப்தாச ஸுஹ்ருத் சைவ ஜனார்த்தன:" என்று கீதோபநிஷத்வாக்யங்களையும் 'மாமேக' மென்கிற வாக்யங்களையு முசாவிக்கொண்டு, திண்டேர்கடவி, யவனவன் வைதிகனுக்குப் பிரியந்தரும் அவன், அயர்வறு மமரர்களதிபதி.

யவனவன் கிருஷ்ணனுயவதரித்து, சுடரொளியாய் நின்ற தன்னுடைச்சோதியில் புகும்போது படர்புகழ்ப் பார்த்தனுக்கு அபகீர்த்தி வாராமல், [6] தமஸ்ஸளவிலே அவர்களை நிறுத்தி, ஸகல சாஸ்திரவித்தமனை, வைதிகன் புத்ரார்த்தியாய் வந்தவனுக்கு புத்ரலாப முண்டாம்படிக்கும் 'கலக்கவேழ்கடலேழி' த்யாதிப் படியே, ஸமபூமியிலே நடக்குமாப்போலே நடத்தி, காரணமான மூலப்ரக்ருதியில் செல்லாமல், அவ்வளவு மவர் காரியமான தேரோடே யவர்களை நிறுத்தி, தேருக்கு மிவர்களுக்கும் திண்மையைக் கொடுத்து நிறுத்தி;

"சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில்" நிரவதிக தேஜோரூபமாய் நின்ற, நித்தியமாய், தேஜோரூபமாய்நின்ற, தன்னுடைச்சோதி, தனக்கு அஸாதாரணமான ஜோதி.

---

4 பார்த்தன் (पार्थन्) = அர்ச்சுனன். 5 யஸ்யமந்த்ரீச கோப்தாச ஸுஹ்ருச்சைவஜனார்த்தன: (यस्य मन्त्री च गोप्ता च सुहृच्चैव जनार्दन:) = எவனுக்கு மந்திரியும், காப்பாற்றுபவனும், தோழனுமாக ஸ்ரீ கிருஷ்ணன் இருந்தாரோ. 6 தமஸ் = (இங்கே) பிரகிருதி.

"[7] அத்யர்க்காநல தீப்தந் தத்தானம் விஷ்ணோர் மஹாத்மநः" என்று ஆயிரங்கோடி ஸூர்யாக்நிகளுடைய தேஜஸ்ஸை ஒடவைத்ததொரு தேஜஸ்ஸாக வகுத்தாப்போலேயிருக்கை யாலே யிவர்களுக்குக் கண்கொண்டு காணவொண்ணாது. ஆகை யாலே தமஸ்ஸிலே நிறுத்தி, தன்னுடைச் சோதியாகையாலே தானேபோய்ப் புக்கான். வைதிகன் பிள்ளைகளை யுடலோடுங் கொண்டு கொடுத்தவனைப் பற்றித் தொழுதெழென்மனனே.

உடலோடுங் கொணர்ந்து கொடுத்தபடியாவது; நாச்சியார் கிருஷ்ணவதாரஞ் சேவிக்கவேண்டி பிறக்கப்பிறக்கக் கொண்டு போனார்கள். அந்தப்படியே, கொணர்ந்து கொடுத்தவன்;

துயரறு சுடரடி தொழுதெழென்மனனே; துயரறுகையா வது; வைதிகன் துக்கந்தீரத் தன் திருவடிகள் துயரந்தீர்ந்து சுட ரொளியாயிற்று.

வைதிகனுக்குப் புத்ரசோகம், அர்ஜுனனுக்கு அபவாதம் நீக்க ஸாமர்த்தியம் எல்லாந்தானாயிற்று. "உடலோடு கொண்டு வந்து கொடுத்தவனைப்பற்றி ஒன்றுந் துயரிலேனே." இப்படி, போன பிள்ளைகளை மீட்டுக்கொடுத்த கிருஷ்ணன் திருவடிகளைப் பற்றின எனக்கு ஒரு துயரமுண்டோ வென்று இனியராகிறார்.

மூன்றும்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து விவரணம் முற்றிற்று.

---

[7] அத்யர்க்காநல......விஷ்ணோர் மஹாத்மநः (अत्यर्कानलदीप्त न्तत्स्थानं विष्णो र्महात्मनः) அந்த மாஹாவிஷ்ணுவின் இருப்பிடமாகிய பரமபதமானது அக்னி - ஸூரியன் - இவைகளைவிட பல்லாயிர மடங்கு ஒளிமிக்கது.

ஸ்ரீ:

நான்காம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு — (கலிநிலைத்துறை)

ஒருநா யகமா யோட வுலகுட னுண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையி லேபிச்சை தாங்கொள்வர்
திருநார ணன்தாள் காலம் பெறச்சிந்தித் துய்ம்மினோ (1)

'ஒருநாயக'த்தில் பின்னையுந்தன் செல்லாமையாலே அல்பாஸ்திரத்வாதிதோஷதுஷ்டமான, ஐச்வர்யகைவல்யங்களைப் பற்றி நிற்கிற ஸம்ஸாரிகளைப் பற்றி நிற்கிற ஸம்ஸாரிகளைப் பார்த்து அவற்றைவிட்டு ஸ்ரீயப்பதியைப் பற்றுகையே நிரவதிக ஸ்வரூபபுருஷார்த்தமென்று உபதேசித்தார்.

பத்தாம்பாட்டு

குறுக மிகவுணர் வத்தோடு நோக்கியெல் லாம்விட்ட
இறுக லிறப்பென்னு ஞானிக்கு மப்பய னில்லையேல்
சிறுக நினைவதோர் பாசமுண் டாம்பின்னும் வீடில்லை
மறுகலி லீசனைப் பற்றிவி டாவிடில் வீடஃதே (10)

'உயர்வற' என்கிறபாட்டைக் 'குறுகமிக' என்கிறபாட்டு விவரிக்கிறது; எங்ஙனேயென்னில்:—

மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ஐச்வர்ய கைவல்யங்களைச் சொல்லுகிறது.

உயர்வற:-குறுகமிக--ஐச்வர்யாதிகள் நிலைநில்லாதென்ன:- லீலாவிபூதியில் ஐச்வர்யம் நிலையில்லையாகிறது. அவைபோலன்றிக்கே [1] ஆத்மலாபம் நிலைநின்ற புருஷார்த்தமன்றோவென்னில்—கீழ்ச்சொன்னவற்றைக் குறித்து ஒரு நன்மையுண்டேயாகிலும்

---

1 ஆத்மலாபம் (आत्मलाभम्) = ஜீவாத்மாஸ்வரூபானுபவம் (கைவல்யம்).

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்துக்கு ஏற்றமுண்டானாப்போலே, பகவதானந்தத்தைப்பற்ற, ஆத்மானுபவம் தண்ணிது- ஆனபின்பு அவனைப் பற்றப் பாருங்கோள்.

உயர்நல முடையவன் யவனவன்—கல்யாணகுணங்களாலே பூர்ணனான, ச்ருதிபிரஸித்தனானவன், அவனைப்பற்றிக் 'குறுக மிக உணர்வத்தோடு நோக்கி. முதலிலே [2] ப்ரத்யாஹ்ருதேந்திரியனுக்கிறே- ஆத்மப்ராப்தியில் அதிகாரமுள்ளது.

பாஹ்யவிஷயங்களிலே தூரப்போய் க்ராஹிக்கும் மனஸை [3] ப்ரத்யக்விஷயமாக்கி, அதாவது கண்ணையிட்டுக் கண்ணைப் பார்த்தாப்போலே யிருப்பதொன்றிறே. ஆகையாலே 'குறுக' என்றது.

இந்த [4] இந்திரியநிக்ராஹம் ஸர்வேச்வரன் மயர்வற மதிநலமருளுகையாலே வந்தது. பாஹ்யங்களில் போன மயர்வை யறுத்துத்தர, ஸ்வஸ்வரூபவிஷயத்திலேயாம்படி மதிநலமருளினன் யாவனொருவனவன், பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே 'மிக வுணர்வத்தோடு நோக்கி' [5] சிரகாலம் பாஹ்யவிஷயத்திலே பண்ணிப்போந்த வாஸனையடைய, ஆத்மாவிலேயாம்படி பண்ணி விசதமாக அனுஸந்தித்து. 'எல்லாம்விட்டு' ஸ்ரீயஃபதி தோளும் தோள்மாலையுமாய் கருடவாஹநனாய் வந்துநிற்க, அந்த போக்யதையைப் பாராதே சுத்தியோகத்தையே பார்த்தது.

அயர்வறு மமரர்களதிபதியானவன்- அயர்வற்ற நித்யஸூரிஸேவ்யனாய் ஸ்ரீயஃபதியான அவனுடைய துயரறு சுடரடி தொழுதெழப் பாராதே 'இறுகலிறப்பென்னும் ஞானிக்கும்' அணுவான ஆத்மானுபவத்தை மோக்ஷமென்று சொல்லுகிறவாத்ம ஜ்ஞானிக்கும் 'அப்பயனில்லையேல்' பகவதனுபவமாகிற மோக்ஷஸுகமில்லை என்கிறார் இவர். அவ்வருகுண்டான போக்யங் கண்டவராகையாலே அத்தை 'ஸங்கோச' மென்கிறார்-

---

[2] ப்ரத்யாஹ்ருதேந்திரியன் (प्रत्याहृतेन्द्रियन्) = (புறம்பான விஷயங்களிலிருந்து) இந்திரியத்தை (மனதை) ஆத்மாவின்பக்கத்தில் திருப்பினவன். [3] ப்ரத்யக் = ஆத்மா. [4] இந்திரியநிக்ராஹம் (इन्द्रियनिग्रहम्) = கண்முதலான ஐம்பொறிகளையடக்குதல். [5] சிரகாலம் (चिरकालम्) = வெகுநாட்கள்.

பகவதுபாஸநத்துக்காகச் சுடரடி தொழுது ஆத்மப்ராப்தி பெறவேண்டுவ 'சிறுக நினைவதோர் பாசமுண்டாம் பின்னும் வீடில்லை' அவித்யாதிகளானவை வாஸனையாலே வருமாகில் பின்னும் வீடில்லை.

'மறுகலில் ஈசனைப்பற்றி விடாவிடில் வீடஃதே' மறுகலிலீசன்—ஸர்வவாஸனையாலே பற்றுமல் சுத்தியோகத்தையே பார்த்துப் பற்றி விடாமலிருக்கில், அது ஸித்திக்கும்- விடில் அது சித்தியாது. 'வீடஃதே' ஸர்வபாப [6]விமோசனனானவனைப்பற்றி விடாவிடில், கீழ்ச்சொன்ன இந்திரியஜயம் முதலாக பகவதுபாஸநத்தைப் பண்ணி கர்மக்ஷபம் பிறப்பித்து ஆத்மாவை லபிக்கப்பார்க்குமவனுக்கு; அந்திமஸ்ம்ருதி பண்ணி சரீரத்தை விடப்பாரானகில்=அந்த மோக்ஷமில்லை.

'அஃதே=திருநாரணன்தாள் சிந்தித்துய்மினோ' என்றும் 'துயரறு சுடரடி தொழுதெழு' என்னும் நான் சொல்லுகிற அதுவே புருஷார்த்தம். ஆகையாலே, 'தொழுதெழென் மனனே' என்று தன் திருவுள்ளத்துக்கு உபதேசித்துத் தன் திருவுள்ளம் போல்வார்க்கு முபதேசித்து உபதேசகர்ப்பானுபவம் பண்ணுகிறார்.

நான்காம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நான்காம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு — (கலிவிருத்தம்)

பாலனா யேழுல குண்டு பரிவின்றி
யாலிலை யன்ன வசஞ்செய்யு மண்ணலார்
தாளிணை மேலணி தண்ணந் துழாயென்றே
மாலுமால் வல்வினை யேன்மட வல்லியே (1)

[6] விமோசனன் (विमोचनः) = விடுவிப்பவன்.

'பாலனாயேழுலகில்' மூன்று களையும் பறித்துச் சங்காயம் வாரின பயிர், சததாசமாகப் பணைத்து விளையுமாப்போலே; அபிநிவேசம் சததாசமாய் விளைந்து, தேசகால[1] விப்ரக்ருஷ்டமான பதார்த்தங்களையும் தத்தத்தேசகால[2]விசிஷ்டமாகப் பெற்றனுபவிக்கவேணுமென்று விடாய்த்தார்.

பாவியல் வேதநன் மாலை பலகொண்டு
தேவர்கள் மாமுனி வரிறைஞ் சநின்ற
சேவடி மேலணி செம்பொற்று ழாயென்றே
கூவுமால் கோள்வினை யாட்டியேன் கோதையே (3)

'உயர்வற' என்கிற பாட்டைப் 'பாவியல்வேத' என்கிற பாட்டு விவரிக்கிறது- எங்ஙனேயென்னில்:—

உயர்வற பிரம்மானந்தந்தொடங்கி மனுஷ்யானந்தமளவாக காலோசிதமான பதார்த்தங்களை தத்தத்தேசகாலங்களிலே யனுபவிப்பார் அனுபவிக்கப்பெறாதே வந்த இழவாலே ஸுகமற்றார்கள், தத்வ்யதிரிக்தங்களாகையாலே.

இவர்க் கங்ஙனன்றிக்கே பகவத்ப்ரேமத்தாலே பூதகாலத்திலுள்ளதும், பவிஷ்யத்காலத்திலுள்ளதும், வர்த்தமானகாலத்தில் போலே உயர்நலமுடையவன் யவனவன்—திருவடிகளில் அத்திருத்துழாய் பெற ஆசைப்படுகிறார்.

உயர்நலமுடையவனைப் 'பாவியல் வேதநன்மாலை பலகொண்டு' ஒரு ஊருக்காக உதவினவதுவே யன்றிக்கே, ஒரு நாட்டுக்காக உதவினவன் பக்கலுள்ளது பெறத்தட்டே னென்று நின்றாள் என்கிறாள்.

'பாவியல்வேதம்' பாவாலே இயற்றப்பட்ட வேதம்- சந்தஸ்ஸுக்களாலே சொல்லப்பட்டவேதம்-

[3] அநுஷ்டுப், த்ரிஷ்டுப், ப்ருஹதீ சந்தஸ்ஸென்றுஞ் சொல்லப்பட்டவைகளை யுடைத்தான வேதம் சொல்லித்து, என்னென்னில்:—

---

[1] விப்ரக்ருஷ்டம் = தூரத்திலுள்ளது. [2] விசிஷ்டம் = கூடினது
[3] அநுஷ்டுப், த்ரிஷ்டுப், ப்ருஹதீ, சந்தஸ் 1. अनुष्टुप 2. त्रिष्टुप 3. बृहती இவை வேதங்களில் வரும் பல விருத்தங்களின் பெயர்கள். கலிவிருத்தம், கலித்துறை, என்பன போல்.

உயர்வற உயர்நல முடையவனென்றும், அவனுனந்தாதி குணங்களைச் சொல்லப்புக்கு, யவனவனென்று 'அப்ராப்ய மன ஸாஸஹ' என்று அளவிடமாட்டாமல் மீண்டவித்தை;

'பாவியல் வேதநன்மாலை பலகொண்டு' அதன் நன்றான மாலைகளைக் கொண்டு, ஸ்ரீபுருஷஸூக்தங்களைக்கொண்டு,

[4] 'ஸர்வே வேதா யத்பத மாமநந்தி, வேதைச்ச ஸர்வை ரஹ மேவ வேத்ய:' என்கிறபடியே. அல்லாதவிடங்களுக்கு ப்ரதிபாத்யன் அவனேயாகிலும், ஸ்வரூபரூபகுணவிபூதிசேஷ்டிதங்களுக்கு வாசகமானவற்றைக்கொண்டு;

மயர்வறமதிநல மருளப்பெற்றவர்களாகையாலே, அவனருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே வேதாந்தவேத்யனை [5] ஸாக்ஷாத்கரித்து; அயர்வறுமமரர்களதிபதி—அஜ்ஞானகந்த ரஹிதரான நித்யஸூரிஸேவ்யனுனவனை. தேவர்கள் மாமுனிவ ரிறைஞ்சநின்ற' தேவர்களும், சிலாக்கியமான [6] ஸநகாதிகளுமாகவுமாம்.

சேவடிமேலணி, துயரறு சுடரடி, ஆச்ரிதருடைய கிட்டப் பெறாத இழவுதீர்த்த சுடரடியான "சேவடிமேலணி செம்பொற் அழகமென்றே கூவுமால் கோள்வினையாட்டியேன் கோதையே."

சேவடி, சுடரடி. ஸங்கைஸ்ஸூராணு மென்கிறபடியே ஸ்தோத்ரம் பண்ணியாச்ரயிக்கத்திருவுலகளந்து நின்ற. சேவடிமாமுதலடிப் போதொன்று கவிழ்த்தலர்த்தி' என்கிறபடியே தலையிலே பூப்போலே வந்திருக்கிறபோது, மேலே பார்த்தவாறே—அனுபாவ்யமாயிருந்த சிவப்பை யுடைத்தாயிருக்கை - அடியில் [7] ராக மிறே - யிப்படியாக்கித்து இவளை.

---

[4] ஸர்வேவேதாயத்பதமாமநந்தி (सर्वेवेदायत्पदमामनन्ति) = எந்நாராயணன் திருவடிகளை எல்லா வேதங்களும் துதிக்கின்றனவோ. வேதைச்சஸர்வைரஹமேவவேத்ய: (वेदैश्चसर्वैरहमेववेद्य:) = எல்லாவேதங்களாலும் அறியப்படவேண்டியவன் நானே. [6] ஸநக (सनकः) = ஒரு சிறந்த பிரம்மஜ்ஞானி. [7] ராகம் (रागम्) = சிவப்பு.

அன்றியே, செவ்வியவடி, செவ்வையான அடி, ஆச்ரிதருக்கு செவ்வையாயேயிருக்கும் — [8] அனாச்ரிதருக்கு [9] குடிலமான அடியிறே.

“செவ்வடி மேலணி செம்பொற்றுழாயென்றே கூவுமால்” ஸ்ப்ருஹணீயமான திருத்துழாயென்றே கூவும்.

சொல்லி மாலேறும் கோள்வினையாட்டியென் கோதையே—முடித்தல்லது விடாத பாபத்தைப் பண்ணின நான்; என்னுடைய கோதை, தன் மாலையையும் மயிர் முடியையும், கண்டார் படுமதைத் தான் படுவதே.

நான்காம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நான்காம்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

கோவை வாயாள் பொருட்டேற்றி னெருத்த மிறுத்தாய் மதிளிலங்கைக்
கோவை வீயச் சிலைகுனித்தாய் குலநல் யானை மருப்பொசித்தாய்
பூவை வீயா நீர்தூவிப் போதால் வணங்கே னேலுநின்
பூவை வீயா மேனிக்குப் பூசுஞ் சாந்தென் னெஞ்சமே. (1)

‘கோவைவாயா’ளில் இவராசைப்பட்டபடியே எல்லாம் பெற்றாரம்படி, தன் ப்ரணயித்வ குணங்களைக் காட்டிக் கொடுக்கக் கண்டு ஹ்ருஷ்டரானார்.

உரைக்க வல்லே னல்லேனுன் னுலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்
கரைக்க ணென்று செல்வனான்? காதல் மைய லேறினேன்
புரைப்பி லாத பரம்பரனே! பொய்யி லாத பரஞ்சுடரே!
இரைத்து நல்ல மேன்மக்க ளேத்த யானு மேத்தினேன் (9)

---

[8] அனாச்ரிதர் (अनाश्रितर्) = சரணமடையாதார். [9] குடிலம் (कुटिलम्) = வஞ்சகம்.

'உயர்வற' என்கிறபாட்டை 'உரைக்கவல்லேனல்லே'னென்கிற பாட்டு விவரிக்கிறது - எங்ஙனேயென்னில்;—

மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ஒருவருக்கொரு புகழுண்டாயிருக்கும் - அதுவும் அல்பாஸ்திரமாய் உயர்வற்றிருக்கும்—இந்த உயர்வற உயர்நல முடையவன் யாவனொருவன், அவன், ஆனந்தாதி குணங்களுக்கு [2] அவதியில்லாமையாலே உரைக்கவல்லே னல்லேன்.

வேதங்களும் 'அப்ராப்ய மனஸாஸஹ' என்று மீண்ட விஷயத்தை உன் ஆனந்தாதி குணங்களெல்லாம் கூடினுலும் உன் [3] ப்ரணயித்வப்ரகர்ஷம் என்னுடைய பேச்சுக்கு நிலமல்ல வென்கிருர்.

இந்த ப்ரணயித்வ குணங்களையுடையவன் யாவனொருவன் அவனை 'உரைக்கவல்லேனல்லேன்'—உனக்கென்னுடைய மனோவாக்குக்காயங்கள் முதலானவற்றை [4] அங்கராகங்கள் முதலான போக்யவஸ்துவாகக் கொண்ட போக்ய பூதனை நீ, உன் ப்ரணயித்வகுணத்தை அனுஸந்தித்து அநுபவித்துக் குமிழிநீருண்டுபோமித்தனைபோக்கி, பேசித்தலைக்கட்டமாட்டுகிறிலேன்.

எல்லாம் பேசவொண்ணுதாகில், பேசலாமம்சம் பேசினுலோவென்னில், நீ மயர்வற மதிநல மருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே வந்த [5] பலங்கொண்டு பேசப்புக்கால், உன்னுலப்பில்கீர்த்திவெள்ளத்து—உன்னுடைய முடிவில்லாத ப்ரணயித்வத்தால் வந்த கீர்த்திஸாகரத்தினுடைய, கரையிலேதான் என்னுலே செல்லப்போமோ ?

இப்படிக் கரையருகும் செல்லவரிய விஷயத்தை நீர் பேசுவதாக [6] உத்யோகிப்பா னென்னெனென்ன; நீயருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே 'காதல் மையலேறினேன்' என் ப்ரேமத்தாலே மிக்க கலக்கத்தை யுடையேனுனேன். பிச்சேறினுரை

---

[1] ப்ரணயித்வம் (प्रणयित्वम्) = அன்புடைமை. [2] அவதி (अवधि) = எல்லை. [3] ப்ரணயித்வப்ரகர்ஷம் (प्रणयित्वप्रकर्षम्) = அதிகமான அன்பு. [4] அங்கராகம் (अङ्गरागम्) சந்தனம். [5] பலம் (बलम्) = சக்தி. [6] உத்யோகம் (उद्योगम्) = பிரயத்னம்.

" நீ இப்படிச் செய்வானேன்? எனக்கடவதோ? என்ன; இவ்விஷயத்தில் நீர் ப்ரமிப்பானேன்? பிரமிப்பார்க்கு [7] ஓர் ஆலம்பனம் வேண்டாவோவென்ன; அயர்வறுமமரர்களான நித்யஸூரிகள் பித்தேறி ஏத்தக்கண்டேன். அத்தாலே செய்தே னென்கிறார்.

[8] அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யரோடு, நித்யஸம்ஸாரியான இவரோடு, அவன் தன்னோடு, வாசியற்றிறே - ப்ரணயித்வ குணம், இவ்விஷயத்தில் ப்ரணயித்வ ப்ரபாவம் இருப்பது.

ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியான தான் அறியப்புக்காலும் தனக்கும், தன் தன்மை யறிவரியானாயிறே யிருப்பது. தன்னை யறியப்புக்க வேதங்கள் பட்டது படுமத்தனை தானும்.

புரைப்பிலாத பரம்பரனே-பொய்யிலாத பரஞ்சுடரே, நீ ஸர்வஸ்மாத்பரனா யிருப்பில், புரையில்லாதாப்போலே; என்னோட்டைக் கலவியால் வந்தவடிவில் பிறந்த புகரிலும் புரையன்றிக்கே யிருக்கிறவனே.

அன்றிக்கே - நிரவதிகமான ப்ரணயித்வகுண ஸத்பாவத்தில் கண்ணழிவில்லாதாப்போலே என்னோட்டைக் கலவியாலும்- பொய்யன்றிக்கே அத்தால் வந்த புகர் வடிவிலே தோன்றயிருக்கிறவனே யென்னுதல். "இரைத்து நல்ல மேல்மக்க ளேத்த யானு மேத்தினேன்-பரமபக்தியுக்தரானவர்கள் துயராறு சுடரடி தொழுது எழுந்து, கடல் கிளர்ந்தாப்போலே யிரைத்துக்கொண்டு ஏத்தக்காண்கையாலே, அயர்வறுமமரர்களதிபதியானவன் யவன் அவன் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே யென்று யானு மேத்தினேன் அத்தனையல்லது நான் சக்தனாய் ஏத்தினேனோ? ஹேயப்ரதிபடமான திருவடிகளும், பிராட்டியும், நீயும் விடிலும், திருவடிகளை விடாத திண்கழலைப் பேசித் தலைக்கட்டப்போமோ? என்கிறார்.

நான்காம்பத்து மூன்றாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[7] ஆலம்பனம் = (உண்மையான அம்சம்) = பற்றுக் கொம்பு – இருளில்; நிற்கும் மரக்கட்டையைப் பார்ப்பவன். "இது மனிதன்" என்று நினைக்கிறான். இதுதான் பிரமம் என்பது. இதில் 'மரத்துண்டு' கண்ணில்படுகிறது. அது உண்மையானது. அதுவே 'ஆலம்பனம்' எனப்படுவது. அதில் தோன்றும் 'மனிதன்' பொய்யானது.

[8] அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர் (अस्पृष्टसंसारगन्धर्) = சிறிதளவும் ஸம்ஸாரத்தில் உழலாதவர். [9] ஸத்பாவம் (सद्भावम्) = இருத்தல்.

ஸ்ரீ:

நான்காம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

மண்ணை யிருந்து துழாவி வாமனன் மண்ணிது வென்னும்
விண்ணைத் தொழுதவன் மேவு வைகுந்த மென்றுகை காட்டும்
கண்ணையுண் ணீர்மல்க நின்று கடல்வண்ண னென்னு மன்னே [யென்
பெண்ணைப் பெருமையல் செய்தார்க் கென் செய்கேன்? பெய்-
வளை யீரே. (1)

'மண்ணையிருந்து துழாவி'யில் கீழ்ப்பிறந்த ப்ரணயித்வ குணானுபவம் ஸாத்மிக்கைக்காக எம்பெருமான் பேரநிற்க' அவனோடு [1] ஸத்ருசபதார்த்தங்களையும், [2] ஸம்பந்தி பதார்த்தங்களையும் அவனாகப் பிரமித்து நோவுபட்டார்.

'உயர்வற' என்கிற பாட்டை "மண்ணையிருந்து துழாவி விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

ஆழ்வார் தம்முடைய உபாயாத்யவஸாய ஜ்ஞானத்திலே நின்று தம்முடைய திருவுள்ளத்தைப் பார்க்கும்போது, அது மயர்வறமதிநல மருளப்பெற்று அத்தாலே பகவானிடத்திலே [3] த்வரைவிஞ்சிச் செல்லுகிற ப்ரேமதசையைப் பார்த்து 'இது [4] அத்புதகார்யங்களாயிருந்தது.' இது ஏதென்று கேழ்க்கிற, அவர்களுக்கு; அதுக்கு [5] உத்தரமாக மானஸத்வரை சொல்லுமத்தை வினவி வந்தவர்களுக்கு [6] உபாயாத்யவஸாயதசையிலே நின்று ஆழ்வார் அருளிச்செய்கிறார்.

---

[1] ஸத்ருசம் (सदृशम्) = அவனோடு ஸமானமானது. [2] ஸம்பந்தி (संबन्धि) = (அவனைச்) சேர்ந்தவை. [3] த்வரை = அவசரம். [4] அத்புதம் (अद्भुतम्) = பிரமிக்கச்செய்கிற; வியக்கக்கூடிய. [5] உத்தரம்=பதில். [6] உபாயாத்யவஸாயதசை (उपायाध्यवसायदशा) = உபாயத்தை (வழியை) யோசிக்கும் (தேடும்) நிலைமை.

உயர்வற - மண்ணையிருந்து துழாவி, மண்ணுக்கு உயர்வாவது [7] தேவதிர்யங்மனுஷ்யஸ்தாவர ஜங்கமாதிகளாலே நிறைந்து [8] பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணமான பூமியாகையாலே உயர்வென்கிறது.

'இருந்து துழாவி' பகவத் வ்யதிரிக்தங்களைக் காரணமாகவும் காரியமாகவும் சொல்லாநின்றார்கள். இத்தையறிவோமென்றாராய்ந்து பார்க்க அவை [9] அஸ்திரமாயிருக்கையாலே 'உயர்வற' என்கிறார்.

அவையெல்லாமிவர் கைக்குள்ளே அடங்கி [10] ஸர்வகதத்வத்தை [11] கரதலாமலகமாகக் கண்டார்.

துழாவிப்பார்த்தார் - அதுக்கப்பாலும் உயர்நலம் போகையாலே வந்த பரமானந்தத்தைப் பார்த்து உயர்நலமுடையவன் யவன் அவன் வாமனனென்கிறார்.

கீழ்ச்சொன்ன [12] ஜகத்து அந்யசேஷத்வ, ஸ்வஸ்வாதந்த்ர்யங்களாயிருந்தது தவிரும்படி, வாமனனாய் மஹாபலி பக்கலிலே [13] அர்த்தியாய்ச் சென்று தன்னதாக்கின வாமனன் மண்ணிதுவென்னும்-

நலமுடையவன் யாவனொருவன் அவன் வாமனன் மண்ணிதுவென்னும், த்ரிவிக்ரம ரூபத்தாலே ஜகதாகாரனாய் நின்றபடி வாமனன் மண்ணிதுவென்னும்.

அடியிலே பிறந்துடைய [14] கந்தவதீ ப்ரிதிவீயிறே. [15] பத்ப்யாம் பூமியாகையாலே ஸர்வகந்தமும் தோற்றினபடி.

---

[7] தேவதிர்யக்மனுஷ்யஸ்தாவரஜங்கம (देवतिर्यङ्मनुष्यस्थावरजंगम) = தேவர்கள் மிருகங்கள். மனிதர்கள்-அசைவற்றவை - அசைகிறதுகள். [8] பஞ்சாசத் (पंचाशत्) = ஐம்பது. [9] அஸ்திரம் = நிலையற்றது. [10] ஸர்வகதத்வம் = எங்கும் நிறைந்திருக்கை. [11] கரதலாமலகம் = உள்ளங்கை நெல்லிக்கனி.

[12] ஜகத்து = உலகம். [13] அர்த்தி (अर्थी) = யாசகன். [14] கந்தவதீப்ரிதிவீ (गंधवतीपृथिवी) = மண் மணமுள்ளது. [15] பத்ப்யாம் பூமி: = (पद्भ्यां भूमिः) = (பகவானுடைய) திருவடிகளினின்றும் பூமியுண்டாயிற்று.

'யவன்-'இது' வென்னும் [16]மஞ்சாஃக்ரோசந்தி, போலே பூமியிலுள்ளாரைச் சொல்லுகிறது.

'அவன்' இப்படிப்பட்ட பூமியையுடையவன்-காரணபூதனென தன் ஜகதாகாரதையைக் காட்டி, ஒரு திருவடிகள் அங்கபேக்ஷத்வ-நிவ்ருத்தி பண்ண; மற்றத் திருவடிகள் ஸ்வஸ்வாதந்த்ர்யந் தவிர்த்து, ஸர்வசேஷியாய் நின்ற நிலையைக் காட்டினுனுபிற்று.

இவருக்கிந்த ப்ரேமத்துக்கடி யென்னென்ன - மயர்வற மதிநல மருளினவத்தாலே வந்த ஜ்ஞானத்தாலே யறிந்தபடி.

கண்ணைபுண்ணீர் மல்கநின்று; [17] அவரதேவதாப்ரதிபத்தியை நீக்கி, பராத்பரனைக் காணும்படி [18] 'திவ்யந் ததாமி தே சக்ஷுஃ'என்னும், 'தக்க ஞானக்கண்க'ளென்றும் சொல்லுகிற ஜ்ஞானசக்ஷுஸ்ஸுக்களைக் கொடுத்தபடி அருளின பக்தியாலே ஆனந்தாவஹமாய் [19] ஆனந்தாச்ரு குடிகொண்டபடி.

யவன் இப்படி யருளப்பட்ட சடகோபன் - ஸஹேதுகமாகில் தாழ்வுபடும் - நிர்ஹேதுகமாகையாலே நிரவதிகமாய்ப் பொங்கி வருகிறபடியாலே அருளப்பட்ட சடகோபன் என்கிறது.

அவன் 'கடல்வண்ணன்' ஜகதாகாரனைப்போலே ஸகல வஸ்துவைவும் தன்னுள்ளேகொண்டு நோக்குகிறபடி.

* 'என்னே' இதென்னவாச்சர்யம்? ஜகதாகாரதையை கரதலாமலகமாகக் கண்டும், அதற்குமேலே அயர்வறு மமரர்க-

---

16 மஞ்சாः (मञ्चाः) = க்ரோசந்தி (क्रोशन्ति) = மஞ்சம்-கட்டில் - கட்டிலில் இருக்கிற மனிதர்கள் கத்துகிறார்கள்' என்பதற்குப் பதிலாக 'கட்டில்கள் கத்துகின்றன' என்பது
17 அவரதேவதா (अवरदेवता) = உயர்நலமற்ற மற்ற தெய்வங்கள்.
18 திவ்யம் ததாமி தே சக்ஷுः (दिव्यंददामि ते चक्षुः) = உனக்கு திவ்யமான (அஸாதாரணமான) கண்ணைக் கொடுக்கிறேன்.
19 ஆனந்தாச்ரு (आनन्दाश्रु) = ஆனந்தக்கண்ணீர்.
* இங்கு மற்ற புஸ்தகங்களில் 'அன்னே' என்று பாடமுள்ளது. அதைத்தழுவி மூலம் எழுதிச் சேர்க்கப்பட்டது.

ளதிபதியானவன் - விண்ணுண்டு, பரமபதம் - அதற்குப் போலியான ஆகாசத்தைக்காட்டி 'அவன் மேவுவைகுந்த'மென்று நின்ருள்.

அயர்வறு மமரர்கள் [20] சந்தானுவ்ருத்திபண்ண, அவர்கள் நடுவே 'வீற்றிருந் தேழுலகுந் தனிக்கோல் செலுத்து'மவன் துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே.

அவன் மேவு வைகுந்தமான, விண்ணைத் தொழுது துயரறு சுடரடி தொழுது எழு என்மனனே.

என துள்ஜ்ஞானமாகிற பெண்ணைப் பெருமையல் செய்தார்க் கென்செய்கேன்? பெய்வளையீரே. பெருமையல், பகவதானந்தத்திலே புக்கழிந்த மையல். இத்தை விளைவிக்கிற வேதாந்தவேத்யனுக்கு என்செய்கேன்? இது ஸ்வயத்நஸாத்யமல்லவே.

பெய்வளையீரே. நீங்கள் ஸ்வரூபங் குலையாதிருக்க, இவள் 'தொழுதெழ' என்னவும் தெரியாதே, பித்தேறி ப்ரமிப்பதே இதென்ன ஆச்சர்யமென்கிருள்.

நான்காம்பத்து நான்காம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நான்காம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

(கலிநிலைத்துறை)

வீற்றிருந் தேழுல குந்தனிக் கோல்செல்ல வீவில்சீர்
ஆற்றன்மிக் காளுமம் மானைவேம் மாபிளந் தான்றன்னைப்
போற்றியேன் றேகைக ளாரத் தொழுது சொன்மாலைக
ளேற்றநோற் றேற்கினி யென்ன குறையேழு மையுமே? (1)

---

[20] சந்தானுவ்ருத்தி (छन्दानुवृत्ति) = அபிப்பிராயத்தை யனுஸரித்தல். (குறிப்பறிந்து அடிமை செய்தல்)

'வீற்றிருந்தேழுலகில்' கீழிவருக்குப் போலி கண்டு பிரமித்த விடாய் எல்லாம் தீரும்படி, நித்யவிபூதி யுடையனாயிருக்கிற தன் படிகள் ஒன்றுங் குறையாதபடி கொடுவந்து காட்டிக் கொடுத்துக் 'கண்டீரே நாமிருக்கிறபடி. இந்த ஐச்வர்யமெல்லாமொன்றாய்த் தலைக்கட்டித்து - நீர் உம்முடைய வாக்காலே ஒரு சொல்லு சொன்னால் காணு' மென்று, இவர் கைத்தாளத்தைக் கொடுக்க அவ்விருப்புக்கு [1] மங்களாசாஸநம் பண்ணியருளினர்.

*ஸ்ரீயஃ பதியாய், [2] அவாப்தஸமஸ்தகாமனாய், உபயவிபூதியுக்தனான ஸர்வேச்வரன், கீழே போலிகண்டு பிரமித்த இழவெல்லாம் போம்படி, நித்யவிபூதியையும் லீலாவிபூதியையும் உடையவனான படியைக் காட்டிக்கொடுத்துக் 'கண்டீரே நாமிருக்கிற இருப்பு, இந்த ஐச்வர்யமெல்லாம் ஒன்றாய்த் தலைக்கட்டித்தாம் - நீர் உம்முடைய வாக்காலே ஒரு சொல்லு சொன்னால் காணு, மென்றிவர் கையிலே தாளத்தைக் கொடுக்க அவ்விருப்புக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறார்.

'உயர்வற' என்கிற பாட்டை 'வீற்றிருந்தே'ன்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் உயர்வுந் தாழ்வுமாய் வருகையாலே 'உயர்வற' என்கிறது; லீலாவிபூதியை "வீற்றிருந்தேழுலகும்" என்றபடி.

உயர்நலமென்றது-நித்யவிபூதியை யுடையவனென்று, உபயவிபூதி யுக்தனென்றபடி.

யவனவன் ச்ருதிபிரஸித்தனானவன் 'தனிக்கோல்செல்லவீவில் சீர்' [3] ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுந் தனக்குச் சேஷமாய்த் தான் சேஷியாகையாலே, வந்த [4] வ்யாவ்ருத்தி

---

1 மங்களாசாஸநம் (मङ्गलशासनम्) = நன்மையைவிரும்புதல்; பல்லாண்டு பாடுதல். 2 அவாப்தஸமஸ்தகாமன் (अवाप्तसमस्तकामन्) = பெறவேண்டிய பேறெல்லாம் பெற்றொழிந்தவன். * இங்கு கீழ்வாக்யம் திரும்பவும் எழுதப்பட்டுள்ளது.

3 ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தவஸ்து (स्वव्यतिरिक्तसमस्तवस्तु) = தன்னைத் தவிர மற்ற எல்லாப்பொருள்கள். 4 வ்யாவ்ருத்தி = வாசி.

தோற்ற, நியந்தாவான சீர் தோற்ற வீற்றிருக்கை. இங்ஙனன்-ருகில், பரஸ்பரவ்யாவ்ருத்தி எல்லார்க்குமுண்டிறே - ஸகலாத்மாக்களுக்கும் [5] ஜ்ஞாநைகாகாரதபா ஸாம்ய முண்டாயிருக்கச் செய்தேயும் [6] விபுத்வ சேஷித்வ [7] நியந்த்ருத்வங்களாகிற இவை அவ்வாச்ரய மொன்றிலுமே கிடக்குமித்தனையிறே.

இப்படி ஸர்வகதனுய் வ்யாபித்து நிற்கிறது - நியமனார்த்தமாகவிறே. இப்படி நீரறிந்தபடி யெத்தாலே யென்ன – தன்நலமுடைய வானந்தத்தாலே மயர்வற மதிநலமருளின அத்தாலே யறிந்தேன்.

யவனவன் 'ஆற்றல் மிக்காளு மம்மான்' 'ஆற்றல்' என்மபர்வு அக மமதையால் வந்த மயக்கமற, ஆற்றல்—பொறுமை - லோகத்தாரோடே என் [8] ஆஜ்ஞாதிலங்கனமான வபராதத்தைப் பொறுத்து, 'அறவாற்றல் மிக்காளும்' [9] 'தஹ, பச' என்னுமல் பொறுத்து.

'எழுலகுந் தனிக்கோல் செலுத்தும் ஆற்றல்மிக்காளு மம்மான்' யாவனொருவன், அயர்வறு மமரர்களதிபதியா யிருந்து ஆளும் - சுற்றுப்பயணம்வந்து ஜகன்னிர்வஹணம் பண்ணுகையன்றிக்கே, நித்யவிபூதியிலிருந்த இருப்பிலே லோகங்களடைய தன் செங்கோல் செல்லும்படி யாளும்.

மதிநலமருளினனென்று - தேவதிர்யங்மனுஷ்யஸ்தாவர ஜங்கமாதிகளுக்கு அனுரூபமான பக்திரூபாபன்னஜ்ஞானத்தைத் தன்னிர்ஹேதுககிருபையாலே யருளினன்.

---

[5] ஜ்ஞாநைகாகாரதா (ज्ञानैकाकारता) = ஜ்ஞானஸ்வரூபமாகவே யிருக்கும் தன்மை. [6] விபுத்வம் (विभुत्वम्) = எல்லா வஸ்துக்களிலும் பரந்து இருத்தல். [7] நியந்த்ருத்வம் (नियन्तृत्वम्) = எல்லா சேதனர் - அசேதனங்கள் இவைகளை யடக்கியாளுதல். (அவைகளின் - ப்ரவ்ருத்தி - நிவ்ருத்திகள்-பகவானுக்கே அதீனமாகும்) [8] ஆஜ்ஞாதிலங்கனம் (आज्ञातिलङ्घनम्) = ஆக்ஞையை மீறி நடக்கை. [9] தஹ (दह) = கொளுத்து. பச (पच) = சமை.

அம்மான் - அயர்வறு மமரர்க ளதிபதியான ஸ்வாமியவன் [10] 'இந்த்ரியாணி ஹயானி' என்கிற தேஜிக் குதிரைபோலே ஓடுகிற மனஸையுடையவனை. அவன் 'வெம்மாவாய் கீண்ட செம்மா கண்ணன் - [11] இருடீகேசனுகையாலே நியமித்தான். இந்த க்ருதஜ்ஞதை தோற்றப் 'போற்றியென்றே கைகளாரத் தொழுது' அயர்வின்றிக்கே அபர்யாப்தாம்ருதானந்தமக்னராயானந்திக்க, அத்தாலே அவனுனந்திக்க, அதுகண்டிவர்களானந்திக்க, இப்படி அன்யோந்யம் ஆனந்திக்கிறபடியைக் கண்டு இவரானந்திக்கிற யிவரானந்தம், உபயவிபூதியிலுமிக்கது.

இப்படி 'ஏற்ற நோற்றேற் கினியென்ன குறை எழுமையுமே; துயராறு சுடரடி தொழுதெழென் மனமே. துயர்=துக்கம்; அதாவது ப்ரயாஸம். ப்ரயாஸமான ஸாதனுந்தரங்களால் வந்த துயர் அன்றிக்கே நிர்ஹேதுகமாக அளவிறந்த சுடரடி தொழு.

ஹேயப்ரத்யநீகமாய் நிரவதிக தேஜோரூபமான சுடரடிகளைப் 'போற்றியென்றே கைகளாரத்தொழுது, சொல்மாலைகள் ஏற்ற நோற்றேற் கினி என்ன குறை எழுமையுமே, - திருக்குழலிலே ஏறும்படியாக [12] 'க்ருண்ணுதி சிரஸாஸ்வயம்' என்கிறபடியே நோற்றேற்கு, இவரிப்போது நோற்றது 'மண்ணையிருந்து துழாவி' யிலார்த்தியை ஜனிப்பித்த கிருபையை 'இனி என்ன குறை எழுமையுமே' நித்யவிபூதியில் அனுபவத்தையிங்கே லபித்தா லெனக்கொரு குறையுண்டோ? 'விண்ணுலாரிலுஞ் சீரியரே' 'எனக்கார் நிகரகல்வானத்தே? என்று பகவதனுபவத்தாலே நித்யானந்த மக்னனை எனக்கொரு குறையுண்டோ? என்கிருர்.

நான்காம்பத்து ஐந்தாந் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

10 இந்த்ரியாணி ஹயானி (इन्द्रियाणिहयानि) = இந்திரியங்கள் குதிரைகள்போன்றவை (அடக்குவது கடினம்.) 11 இருடீகேசன் (हृषीकेशः) = (हृषीक) - இந்த்ரியங்களுக்கு (ईशः) = அதிகாரி.

12 க்ருண்ணுதிசிரஸாஸ்வயம் (गृह्णातिशिरसास्वयम्) = தானே தலையால் பெற்றுக்கொள்கிருன்.

ஸ்ரீ:

நான்காம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு (கலிநிலைத்துறை)

தீர்ப்பாரை யாமினி யெங்ஙனம்? நாடுது மன்னைமீர்!
ஓர்ப்பாலிவ் வொண்ணுத லுற்றநன் னோயிது தேறினோம்
போர்ப்பாகு தான்செய்தன் றைவரை வெல்வித்த மாயப்போர்த்
தேர்ப்பாக னார்க்கிவள் சிந்தை துழாய்த்திசைக் கின்றதே (1)

'தீர்ப்பாரையாமினி,யில் கீழ்ப் பிறந்தது,மானஸாநு ஸந்தானமாத்ரமாய், பாஹ்யஸம்ச்லேஷயோக்ய மில்லாமையாலே மோகித்து,[1] அந்யாபதேசமாய்ப் பேசினார்.

தீர்ப்பாரையாமினியில் மோஹித்தவர்க்குப் பரிஹாரமாக தேவதாந்தர்யாமிபரமாக[2] ஆச்வஸிப்பிக்கலாமோ வென்று பரிவர் பார்க்க; அவர்களைக்குறித்து அன்பர் விலக்கின பாசுரத்தை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

உன்னித்து மற்றொரு தெய்வந் தொழாளவனை யல்லால்
நும்மிச்சை சொல்லிநுந் தோள்குலைக் கப்படு மன்னைமீர்!
மன்னப் படுமறை வாணனை வண்டுவ ராபதி
மன்னனை யேத்துமி னேத்துத லுந்தொழு தாடுமே (10)

'உயர்வற' என்கிற பாட்டை 'உன்னித்து மற்றொரு தெய்வந்தொழா' ளென்கிற பாட்டு விவரிக்கிறது, எங்ஙனேயென்னில்;

மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத் தளவு மவர்உயர்வற, உன்னித்து மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத் தளவும் உற்று உற்றுப்பார்க்க, ஒன்றுக்கொன்று தொழுவாரும் தொழுவித்துக்கொள்வாரு மாயற்றது.

---

[1] அந்யாபதேசம் (अन्यापदेशम्) = பிறரை வ்யாஜமாக வைத்துப் பேசுவது. [2] ஆச்வஸிப்பித்தல் = தேற்றுதல்.

உயர்நல முடையவன் யவனவன் - வண்டுவராபதி மன் - னன், அவனையன்றி 'உன்னித்து மற்றொரு தெய்வந் தொழாள் அவனையல்லால், உயர்நலமான பரப்பிரம்மானந்த முடையவன் யவன், அவன் 'மன்னப்படு மறைவாணன் வண்டுவராபதி மன் னன் - ச்ருதிப்ரஸித்தனாய் ஸுலபனானவனை யொழிய மற்றொரு தேவதையைத் தொழுமவளோ இவள்?

எனக்கு அவன் அடியிலே மயவர்றமதிநல மருளிற்றிலனாகி லன்றோ [3] தேவதாந்தரபஜநம் பண்ணுவது. பக்திரூபாபன்னஜ் ஞானம் பெற்றவர் இதரதேவதையு முண்டென்று அறிவரோ?

'நும்மிச்சை சொல்லி நுந்தோள் * குலுக்கப்படுமன்னைமீர்' மயர்வற மதிநலம் பெற்றிருக்கிற எனக்குத் தோற்றினார் தோற் றினபடி சொல்லி [4] அணங்காடுகைக்குப் பிரயோஜனமென்ன?

யவன் இந்த மதிநலம் பெற்றாராயிருக்கிறவர், அவன் நிர்ஹேதுகமாக வருளினவன் யாவனொருவன், அவன் அயர்வறு மமரர்களதிபதி; மன்னப்படுமறைவாணன்' அஜ்ஞானாந்தகார ரஹிதரான நித்யமுக்தராலே ஸேவ்யராய், அபௌருஷேயமான வேதப்ரதிபாத்யனானவன் யவனவன் வண்டுவராபதி மன்னன்.

துயரறு சுடரடி தொழுது ஏத்துமின் ஏற்றிலும், என்னெஞ் சமே 'தொழுதாடுமினே' தொழுதெழென்று அன்பர் பரிவரைக் குறித்து வெறிவிலக்கின பாசுரத்தைத் தோழி தாயாரை வெறி விலக்கின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

நான்காம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[3] தேவதாந்தரபஜநம் (देवतान्तरभजनम्) = மற்ற தெய்வங்களைத் தொழுவது.

[4] அணங்காடுகை = தெய்வங்களால் ஆவேசங் கொள்ளப்பட்ட வர்கள் ஆடுவது.

* குலைக்கப்படும் என்று பல புத்தகங்களில் பாடமிருக்கிறது.

ஶ்ரீ:

நான்காம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு (அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

சீல மில்லாச் சிறிய னேலுஞ் செய்வினை யோடேரிதால்-
ஞால முண்டாய்! ஞான மூர்த்தி! நாராயணா! வென்றென்று-
காலந் தோறும் யானி ருந்து கைதலை பூசலிட்டால்-
கோல மேனி காண வாராய் கூவியுங் கொள்ளாயே- (1)

'சீலமில்லாச்சிறிய'னில் 'வண்டுவராபதி மன்ன'னென்கிற திருநாம ப்ரஸங்கத்தாலே மோஹந் தெளிந்து அதுதான் பேற்றுக்குடல ல்லாமையாலே கூப்பிடுகிறார்.

அறிந்த றிந்து தேறித் தேறி யானென தாவியுள்ளே-
நிறைந்த ஞான மூர்த்தி யாயை நின்மல மாகவைத்துப்-
பிறந்துஞ் செத்து நின்றி டறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்-
நறுந்து ழாயின் கண்ணி யம்மா! நானுன்னைக் கண்டு-
[கொண்டே. (7)

'உயர்வற, என்கிற பாட்டை 'அறிந்தறிந்தெ'ன்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக, பராத்பரன் ஆரென்றுபார்த்து,உயர்நலமுடையவனே பராத்பரனென்று 'அறிந்தறிந்து தேறித்தெளிந்து,

[1] பரத்வம், [2] பஜனீயதை, [3] ஸௌலப்யம், [4] அபராதஸஹத்வம், துடக்கமாகவறிந்து அறிந்து தேறித்தேறி.

---

[1] பரத்வம் (परत्वम्) = (எல்லாவற்றையுங்காட்டில்) மேலாகயிருத்தல். [2] பஜனீயதை (भजनीयतै) = பக்தி பண்ணுவதற்குத்தக்கவனாயிருத்தல். [3] ஸௌலப்யம் (सौलभ्यम्) = அப்படி பக்தி பண்ணுமவர்க்கு) சிரமமில்லாமல் பெறக்கூடியவனாயிருக்கை. [4] அபராதஸஹத்வம் (अपराधसहत्वम्) = குற்றங்களைப்பொருத்தருளும் தன்மை.

ஒரொரு குணங்களை அனுபவிக்கமாட்டாமை, மோஹமும் தெளிவுமா யென்னுதல்.

யவன். யான். அவன்- எனதாவியுள்ளே, எனதாவியாவியும் நீயென்று சொல்லப்பட்டவன்.

யவனவன் மயர்வற மதிநல மருளினவன் - நிறைந்த ஜ்ஞான மூர்த்தியானவன் - அஜ்ஞானாந்தகாரத்தைப் போக்கி ஜ்ஞானப் பிரகாசத்தைப் பண்ணித்தந்தவன்.

யவன் - நின்மலமாகவைத்தவன் - நின்மலமானவன் - அவன் நிர்ஹேதுகமாக வருளினவன். நின்மலமாகவைத்து, அயர் வறுகை - நிர்மலமாகை.

அயர்வில்லாத அமரர்களதிபதி - பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்த்தவன் யவனவன் - 'ஒழிந்தே'னென்னும் படி ஜநநமரணாதிகளை யொழித்தவன் 'நறுந்துழாயின்கண்ணியம் மான்' துயரறு சுடரடி தொழுது, ஹேயப்ரத்யநீகமாய நிரவதிக தேஜோமயமான திருவடிகளைத் தொழுது.

'நறுந்துழா யின்கண்ணி' பரிமளப்ரசுரமான திருத்துழாய் மாலையாலே அலங்க்ருதமான ஸ்வாமியைக் கண்டுகொண்டு, ஜ்ஞானஸாக்ஷாத்காரமாகக் கண்டுகொண்டு. பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன் - சுடரடி தொழுதெழென் மனனே என்கிறார்.

நான்காம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நான்காம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு (தரவுகொச்சகக்கலிப்பா)

ஏறாளு மிறையோனுந் திசைமுகனுந் திருமகளும்-
கூறாளுந் தனியுடம்பன் குலங்குலமா வசுரர்களை-
நீறாகும் படியாக நிருமித்துப் படைதொட்ட-
மாறாளன் கவராத மணிமாமை குறைவிலமே. (1)

'ஏழுலகுமிறையோனி'லிப்படிக் கூப்பிட்டவிடத்தில் வந்து முகங்காட்டாமையாலே அவனுக்கு உறுப்பல்லாத [1] ஆத்மாத்மீயங்களில் நசையற்றபடியைச் சொன்னார்.

மணிமாமை குறைவில்லா மலர்மாத ருறைமார்வன்-
அணிமானத் தடவரைத்தோ ளடலாழித் தடக்கையன்-
பணிமானம் பிழையாமே யடியேனைப் பணிகொண்ட-
மணிமாயன் கவராத மடநெஞ்சாற் குறைவிலமே. (2)

'உயர்வற' என்கிறபாட்டை 'மணிமாமை குறைவில்லா' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்: —

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக, தந் தாங்கரணங்களுந் தாங்களுமாக, இதர விஷயத்தில் சப்தாதி போக்யங்களை [2] புஜிக்க, இவர் அங்ஙனன்றிக்கே பகவானுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்களை விடுகிறார்.

'உயர்வற, உயர்நல, மணிமாமை குறைவில்லா மலர்மாதர்— உயர்நலமென்று [3] உகாரவாச்யையான பிராட்டிக்கு உயர்வறுகை யாவது - [4] 'ஈச்வரீம் ஸர்வபூதானாம்' மென்கிற உயர்த்தி அற, என்றது.

விஷ்ணுபத்னி யாகையாலே அவனுக்கு சேஷபூதையாய் தாழ்ந்திருக்கும், ஆகையாலே உயர்வற உயர்நல மென்றது.

ஆகையாலே பிராட்டிக்கும் சேஷித்வமும், சேஷத்வமும் ஸ்வபாவமாகையாலே சொல்லிற்று.

---

[1] ஆத்மாத்மீயம் (आत्मात्मीयम्) = தானும் தன்னுடையவைவும்.
[2] புஜிக்க (भुजिक्क) = அனுபவிக்க. [3] உகாரவாச்யை ('उ'कारवाच्यै) = 'उ'कारं = உகரம், அதனால் சொல்லப்படுமவள். அதாவது - ஓம் (ओं) என்கிற திருமந்திரத்தின் முதலெழுத்து, மூன்றெழுத்துக்களாலானது 'அ, உ, ம்' (अ, उ, म्) என்று. அவைகளில் 2 வதான எழுத்துக்குப் பொருள் 'பிராட்டி' என்கை.
[4] ஈச்வரீம் ஸர்வபூதானும் (ईश्वरींसर्वभूतानाम्) = எல்லாவற்றுக்கும் யஜமானியாயிருப்பவள்.

ஆக தத்வ்யத்ரிக்தங்களுக்கு ஸ்வாமினியாய் அவனுக்கு ஸ்வம்மாய் இருக்குமாகையாலே [5] 'ச்ரீயதே; ச்ரயதே, என்றது.

உயர்நலமுடையவன் யவனவன் - 'மணிமாமை குறைவில்லா மலர்மாத ருறைமார்பன்' பூவில்காட்டில் [6] ரமணீயதையும், நிறமும், குளிர்ச்சியும, மேன்மையும், மணமும், மதுவும், ஸௌகுமார்யமுமாக, எல்லாவற்றையுங்கட்டி ஒரு பெண்ணாக வகுத்தாப் போலேயிருக்கிற உயர்நலத்தையுடையவன் உறைமார்பன் - அவள் 'அகலகில்லேன்' என்று நித்யவாஸம்பண்ணுகிற மார்பையுடையவன்.

யவனவன் - ஸ்ரீய:பதியானவன் எனக்கு மயர்வற மதிநலமருளினன். யவனவன் 'அணிமானத்தடவரைத் தோளடலாழித் தடக்கையன்' மயர்வற - ஸாதனுந்தர ப்ரயோஜனாந்தர மாகிற மயர்வன்றிக்கே, மதிநலமருளின னென்றது. பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே தானே [7] உபாயோபேய மென்னும்படி மதிநலத்தையருளின "அணிமானத்தடவரைத்தோள்" அணி- அலங்காரம். மானம் - அளவில்லாமை; அலங்காரத்தாலும், அழகாலும் அளவில்லை என்றபடி.

அடலாழித்தடக்கையன் - அடலாழி - அவித்யாதிகளான கர்மங்களையும், பாஹ்யவிரோதிகளையும், நிரஸித்து, அலம்புரிந்த நெடுந்தடக்கையாகையாலே போரும் போருமெனக் கொடுத்த ஜ்ஞானபக்தி முதலாமோக்ஷம், அதின் பலமான கைங்கர்யலாம் ராஜ்யத்தையும் தருகிற 'அடலாழித்தடக்கையன். இப்படி நிர்ஹேதுகமாகவருளினவன் - யாவனொருவன், அவன் அயர்வறுமமரர்களதிபதி - அயராதே=சோம்பாதே [8] நித்யாமிருதாசிகளானவர்க்கு ஸ்வாமியானவன்.

---

[5] ச்ரீயதே ச்ரயதே (श्रीयते - श्रयते) = பகவானுடைய அருளைப் பெற விரும்புமவர்களால் முந்துற முன்னம் ஆச்ரயிக்கப்படுமவள். அவ்விதம் ஆச்ரயித்தவர்கள் பக்கல் அருள்புரிந்திடுமாறு எம்பெருமானைத்தானே ஆச்ரயிக்குமவன். [6] ரமணீயதை (रमणीयतै) = அழகு. [7] உபாயம் = பெறுவதற்கான கருவி; உபேயம் = பெறவேண்டிய பொருள்.

"பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்ட" பணி என்றது கைங்கர்யம், மானம் = அளவு. அதில் ஓரளவுங் குறையாதே [9] 'அஹம் ஸர்வங்கரிஷ்யாமி' என்கிறபடியே அடியேனைப் பணிகொண்ட 'க்ரியதாமிதிமாம் வத' என்று [10] இளைய பெருமாளை அடிமைகொண்டாற்போலே [11] இருவருங் கூட இருந்துகொணும் அடிமைகொண்டது.

இப்படி யடிமைகொண்டவன் யவனவன் - மணிமாயன் - துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

மணிமாயன் - நீலரத்னம் போன்ற வடிவழகைக் காட்டி துக்க [12] கந்தரஹிதமான நிரவதிகதேஜோரூபமான திருவடிகளைத் தொழப்பண்ணி; ஸ்வயத்நத்தால் வரும் ப்ராயாஸமன்றிக்கே பரஞ்சோதியானவன் பாதபங்கயங்களைத் தொழுதெழு என்மனனே - எனக்கு [13] பவ்யமான நெஞ்சே.

அன்றிக்கே "மணிமாயன் கவராத மடநெஞ்சால் குறைவிலமே" ரமணீயமான விக்ரஹத்தையும், ஆச்சர்யமான [14] குணசேஷ்டிதங்களையு முடையவன் விரும்பாதபவ்யமான நெஞ்சாலே என்ன ப்ரயோஜநமுண்டு?

பிராட்டியும் பெருமாளுமான சேர்த்தியிலே தொழுதெழும்படி யருளினுகில் என்மனனே - என் மடநெஞ்சமே என்றுஉன்னாலே என்ன ப்ரயோஜநமுண்டு? அவனுக்கு வேண்டாத என்னெஞ்ச மெனக்கும் வேண்டாவென்கிறார்.

நான்காம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[8] நித்யாமிருதாசிகள் (नित्यामृताशिकळ्) = ஸர்வகாலமும் அம்ருதத்தைப் பானம்பண்ணுமவர்கள். (அம்ருதம்-பகவான்). [9] அஹம்ஸர்வங்கரிஷ்யாமி (अहंसर्वंकरिष्यामि) = உமக்குச் செய்யவேண்டிய பணிவிடையெல்லாம் நானே செய்வேன். [10] இளையபெருமாள் (ஸ்ரீராமனுக்கு) இளையவரான லக்ஷ்மணன். [11] இருவரும் = பெருமாளும் பிராட்டியும் [12] கந்தம் = துளி. [13] பவ்யம் (भव्यम्) = அடங்கினதான. [14] குணசேஷ்டிதங்கள் = (गुणचेष्टितङ्गळ्) = குணங்களும் செய்கைகளும்.

ஸ்ரீ:

நான்காம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு— (தரவுகோச்சகக்கலிப்பா)

நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க-
எண்ணாராத் துயர்விளைக்கு மிவையென்ன வுலகியற்கை ?
கண்ணாளா ! கடல் கடைந்தாய் ! உனகழற்கே வரும்பரிசு-
தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய் சாமாறே. (1)

'நண்ணுதார் முறுவலிப்ப'வில், இப்படி 'உடம்புவேண்டா' 'உயிர் வேண்டா' என்றவிடத்திலும் போதாமையாலே, முடிக்கும் உன் தரவு வேண்டியிருந்தது. அத்தைத் தரவேணுமென்று இவர் அபேக்ஷிக்க;ஸம்ஸாரிகளில் தமக்குண்டான வ்யாவ்ருத்தியையும், நித்யவிபூதியிலே பெரிய பிராட்டியாருந்தானுமாயிருக்கிற இருப்பையுங் காட்டிக்கொடுக்கக் கண்டு தரித்தபடியையருளிச்செய்கிறார்.

கூட்டுதிநின் குரைகழல்க ளிமையோருந் தொழாவகைசெய்-
தாட்டுதிநீ யரவணையா யடியேனு மஃதறிவன்-
வேட்கையெல்லாம் விடுத்தேனையுன் றிருவடியே சுமந்துழலக்-
கூட்டரிய திருவடிக்கட் கூட்டினைநான் கண்டேனே. (9)

'உயர்வற' என்கிறபாட்டைக் 'கூட்டுதிநின்குரைகழல்களே'ன்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்: —

மனுஷ்யானந்தந்தொடங்கி ப்ரம்மானந்தத்தளவும் அவர்கள் தாரதம்யம்பாராதே நீயுகந்தாரைத் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளுதி. ப்ரம்மாதிகளேயாகிலும், நீ நினையாதார் உன்னை வந்து கிட்டாதபடி பண்ணியலைப்புதி. ஆகையாலே உயர்வற்றார்கள்.

உயர்நலமுடையவன் யவனவன் ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய், வேதைகஸமதிகம்யனான நீ.

---

[1] தரவு—சீட்டு.

'ஆட்டுதி நீ' மயர்வு—ஆட்டுகை. உன்லீலைக்கு விஷயமாக் குகை. மதிநலம்பெற்ற 'அடியேனுமஃதறிவன். [2] சேஷசாயி யான உன் படியை, சேஷபூதனான நான் 'நாராயணன்' என்கிற வத்தை யறிவன்.

நீர் அறிந்தபடி யென்னென்ன; நீ தந்த பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே, அயர்வறு மமரர்க ளதிபதியான நீ [3] க்ஷீராப்தி யிலே சேஷசாயியாய்க் கண்வளர்ந்தபடியை யடியேனு மஃதறிவன்.

என் வேட்கையெல்லாம் விடுத்து என்னையும் ஏகமனஸ்க ரான இவருடைய ஸம்ஸாராநுஸந்தானத்தால் வருத்த விசன மெல்லாம் தீரும்படி [4] திருநாட்டிலிருந்த இருப்பைக் காட்டி யருளக்கண்டு, அனுபவிக்கப் பெற்றொழிந்தவையாமத்தனை யன்றோ வேண்டுவது ஆசைப்படுகைக்கு.

உன் விபூதியில் [5] 'நான்' 'எனக்கு' என்னுததுண்டோ? நீ மயர்வற மதிநல மருளுவதற்கு முன்பு யாதானும்பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்திலையோ?

அயர்வறு மமரர்களதிபதி யவனவன் சுடரடியான 'திரு வடியே சுமந்துழல' 'துயரறு - [6] பாஹ்யவிஷயப்ராவண்யமற. 'சுடரடி' [7] பரமமான சுடரடி தொழுதெழ.

'திருவடியே சுமந்துழல' இதர விஷயங்களில் ஆசையற்று நிரந்தரம் உன்பக்கலிலேயாய், உன் திருவடிகளையே சிரஸா வகித்து அதுவே யாத்ரையாய். செல்லும்படிக்காகக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே.

துயரறு சுடரடி—கூட்டரிய துயரற்று, திருவடியைக் கூட் டினை நான் கண்டேனே. என் மனமே, நீயும் தொழுதெழு.

---

[2] சேஷசாயி = (शेषशायी) ஆதிசேஷன்மேல் பள்ளி கொள்பவன். [3] க்ஷீராப்தி = (क्षीराब्धि) பாற்கடல். [4] திரு நாடு = ஸ்ரீவைகுண்டம். [5] நான் என்பது அகங்காரத்தின் குறி. 'எனக்கு' என்பது 'மமகாரத்தின் குறி'. [6] பாஹ்யவிஷயப்ரா வண்யம். (बाह्यविषयप्रावण्यम्) புறம்பான ஸுகங்களையே முக்ய மாகக்கொள்ளுதல். [7] பரமம் (परमम्) உயர்ந்தது.

யாவர் சிலருக்கும் தந்தாமாலே சேர்த்துக்கொள்ள அரிய திருவடிகளை நான் சேரும்படி பண்ணினன். இதுதான் கேட்டார் வாய் கேட்டுச்சொல்லுகிறே னல்லேன். சுடரடி தொழுது 7 வர்த்தி என்கிறார்.

நான்காம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

—

ஸ்ரீ:

நான்காம்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு— (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

ஒன்றுந் தேவு முலகு முயிரு மற்றும் யாதுமில்லா-
வன்று நான்முகன் றன்னொடு தேவ ருலகோ டுயிர்படைத்தான்-
குன்றம் போன்மணி மாட நீடு திருக்குரு கூரதனுள்-
நின்ற வாதிப் பிரானிற்க மற்றைத் தெய்வ நாடுதிரே. (1)

ஒன்றுந்தேவில், எம்பெருமான் தன்னுலும் திருத்தவொண்ணாதென்று கைவிட்ட ஸம்ஸாரத்தை, பகவத்பரத்வஜ்ஞானத்தை உபதேசித்துத் திருத்தினபடியை அருளிச்செய்தார்.

கீழ் நண்ணாதார் முறுவலிப்பவிலே, ஸம்ஸாரிகள் படுகிற கிலேசம் பொறுக்கமாட்டாமையாலே, அவர்களைத் திருத்துவதாக நினைத்து; 'நீங்கள் தேவதாந்தரபஜனத்தாலே ஸம்ஸரிக்கிறிகோளிக்கனே. பராத்பரனை ஸர்வேச்வரனை ஆச்ரயித்து, ஸம்ஸாரபந்தத்தை அறுக்கப்பாருங்கோள்' என்று பரோபதேசப்ரவ்ருத்தராகிறார்,

---

7 வர்த்தி (वर्धि) வளருவாய்.

நாடி நீர்வ ணங்குந் தெய்வமு மும்மையு முன்படைத்தான்-
வீடில் சீர்ப்புக ழாதிப் பிரானவன் மேவி யுறைகோயில்-
மாட மாளிகை சூழ்ந்தழ காய திருக்குரு கூரதனைப்-
பாடி யாடிப் பரவிச்சேன் மின்கள் பல்லுலகீர்! பரந்தே. (2)

'உயர்வற' என்கிற பாட்டை 'நாடிநீர் வணங்குந்தெய்வம்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்=

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக, உயர்வாக தேவதாந்தரத்தை ஆச்ரயிப்பாரும், நீங்கள் ஆச்ரயணீயருமாயிறே யிருப்பது. ஆகையால் உயர்வும் தாழ்வுமாயிறே லீலா விபூதி இருப்பது.

உயர்நலமுடையவன் யாவனொருவன்; அவன் 'ஒன்றுந்தேவுமுலகு முயிரும் மற்றும் யாதுமில்லா' ஆச்ரயிக்கிற உங்களோடு, ஆச்ரயணீயரான அவர்களோடு, வாசியற, 'மற்றும் யாதுமில்லா வன்று நான்முகன் தன்னொடு தேவர் முதலானவை யுண்டாக்கினவன். நாடிநீர் வணங்குந் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்யாவனொருவன், அவன் மயர்வற மதிநலமருளினன்.

யவனவன் தேவதாந்தரபஜனமாகிற மயர்வை அறுத்து, அவர்கள் பக்கலில் பரத்வசங்கையையு மறுத்தான்; 'அவனே பராத்பரன்' என்கிற மதிநலத்தையருளினன்.

யவனவன் வீடில்சீர்ப்புகழாதிப்பிரான்அவன், நீங்கள் ஸேவை புரிகிற தேவதைகள் ஐச்வர்யத்துக்கடியான கருமம் நசிக்க, நசிக்கும்.

'வீடில்சீர்ப் புகழாதிப்பிரான்' அயர்வறு மமரர்களதிபதி. நித்யமான கல்யாணகுணபரிபூர்ணமான, காரணமான, புருஷோத்தமனான உபகாரகன். [1] 'காரணந்துத்யேயঃ' த்யேயோ நாராயணஸ் ஸதா' என்று அனுபவிக்கிற நித்யர்க்கு ஸேவ்யனானவன் நம்மெல்லோருக்கும் மோக்ஷப்ரதானம் பண்ணுகைக்காக

---

[1] காரணந்துத்யேயঃ (कारणन्तुध्येयः) (எல்லாவுலகுக்கும்) காரணமான பொருளே த்யானிக்கப்படவேண்டியது.

த்வரிதனாய் வந்து திருக்குருகூரிலே 'அவன்மேவியுறைகோயில்' இங்கேயாய்த்துத் திருவுள்ளம் பொருந்திற்று.

நித்யவிபூதி இங்கேயாய் மஹாநகரமும் மாடமாளிகைகளு மாயற்றது [2] 'தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம்' என்கிறபடியே, அவனோபாதி, அவன் குணவிபூதிகளும் [3] உபாஸ்ய மென்னு மிடஞ்சொல்லுகிறது.

'புகழ்' எல்லாரையும் ரக்ஷித்து மோக்ஷங் கொடுக்கவந்த புகழ்.

ஸௌலப்யமான 'வீடில்சீர்ப் புகழுடையவன், ஆச்ரய ணீயன் நித்யவாஸம் பண்ணுகிற 'திருக்குருகூரதனைப் பாடி யாடிப் பரவிச் சென்மின்கள் பல்லுலகீர்! பரந்தே.

துயரறு சுடரடி தொழுதெழுந் தாடிப் பாடிப் பல்லுலகீர் பரவிச் சென்மின்கள். துயர்—இளைப்பு, அற. அன்றிக்கே, சுடரடி—மோக்ஷானந்தப்ரதமான தேஜஸ்ஸையுடைய திருவடி களைத் தொழுதெழென் மனனே, என்றும் லௌகிகர்க்குமாகப் பரோபதேசம் பண்ணுகிறார்.

நான்காம்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[2] தஸ்மிந் யதந்தஸ் ததுபாஸிதவ்யம் (तस्मिन्यदन्तस्तदुपासितव्यम्) அந்த (முன்கூறப்பட்ட) ஹ்ருதய கமலத்திலுள்ள 'ஆகாய' மெனப்படும் பரம்பொருளும்; அதனுடைய நல்ல குணங்களும், விபூதிகளும் [3]உபாஸ்ம்(उपास्यं) த்யானிக்கவேண்டியவை.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து விவரணம்

முதல் திருவாய்மொழி—முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

கையார் சக்கரத் தென்கரு மாணிக்க மேயென்றென்று-
பொய்யே கைம்மைசொல் லிப்புற மேபுற மேயாடி-
மெய்யே பெற்றொழிந் தேன்விதி வாய்க்கின்று காப்பாரார்?
ஐயோ! கண்ணபிரா னறையோ! வினிப் போனாலே. (1)

கையார் சக்கரத்தில் ஸம்ஸாரிகளில் [1] அந்யதமனான வென்னை, அவர்களையுந் திருத்த வல்லேனும்படி, நிர்ஹேதுகமாக [2] விஷயீகரிப்பதே என்று, அவன், தம் பக்கல் பண்ணின உபகாரத்தை அநுஸந்தித்து இனியரானார்.

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கையார் சக்கரம்' விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும், தேவதாந்தரங்களைப் புகழாநிற்க, அவையற்று 'உயர்நலமுடையவனைக்' கையார் சக்கரத்தென் கருமாணிக்கமே என்றென்று; உயர்நலமுடையவனுடைய ஜ்ஞானானந்தங்களோ பாதி அவன் [3] சின்னமும், திருமூர்த்தியும், சிந்தித்து ஏற்றினவனல்லேன்.

உயர்நலமுடையவன் யாவனொருவன், அவன், மயர்வற மதிநலமருளினன்.

'பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடின நான் 'மெய்யே பெற்றொழிந்தேன், விதிவாய்க்கின்று காப்பாரார்?

---

[1] அந்யதமன் (अन्यतमन्) பலபேர்களி லொருவன். [2] விஷயீகரிப்பது = அருளுக்கு இலக்காகப் பண்ணுவது. [3] சின்னம் (चिह्नम्) அடையாளம்.

[4] அஹ்ருதயமாகச் சொன்ன வசனத்தை, ஸஹ்ருதயமாகச் சொன்னேனாகக் கொண்டு. மயர்வு = அஹ்ருதயம். புத்தி பூர்வமாகச் சொன்னே னல்லேன்.

மதிநலமான பக்திரூபாபன்னஜ்ஞானத்தை, அத்தால் பிறந்த வ்யாமோஹம், [5] இதர விஷய விரக்தியைப் பிறப்பித்தது. பகவத் விஷயத்தில் ப்ரேமம் விளையும்படி; நிர்ஹேதுகமாக விளையும்படி யருளினன். யவனவன் அயர்வறு மமரர்களதிபதி

யவனவன்; அவனாலே மெய்யே பெற்றொழிந்தேன்.

அஜ்ஞானகந்த ரஹிதரான நித்யஸூரிஸேவ்யன் முன்னே; அஜ்ஞான கார்யமான 'பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமேயாடி.' 'கைம்மை=மெய்கலவாத சுத்தப் பொய். இத் தால் பிறரைப் பகட்டுகிற பொய்யன்று - ஸர்வஜ்ஞனையும் பகட்டுகிற பொய்யிறே சொல்லிற்று.

மயர்வற மதிநல மருளின கிருபை பெருகி, அஹ்ருதய மான [6] உக்தியை ஸஹ்ருதயமாக்கி என் பக்கலிலே கிருபையை வர்ஷித்தான். மயர்வற மதிநலம் பெறுகையாலே, சப்தாதி களைப் 'புற' மென்று பூர்வ வ்ருத்தத்தைப் பார்த்துச் சொன்ன படி.

பரிபூர்ண விஷயத்துக்குத் தக்கதாகத் தமக்குப் போராமை யாலே பொய்யென்கிறார். பரமபதத்துக்குப் போனாலும் இப் பேற்றை அசையிட்டிருக்கு மத்தனை.

இனி இதிற் காட்டில் ஏற்றஞ் செய்வதில்லையென்ன; இதுக்கு ஹேதுவில்லை என்னுநின்றீர். பேறேதான் கனத்திரா நின்றது. இதுக்கடி யென்னென்ன;

'விதி வாய்க்கின்றது' பகவத்கிருபை கரைபுரளப் பெருகி;

---

[4] அஹ்ருதயம் (अहृदयम्) மனமாரச்சொல்லாதது.
[5] இதர விஷய விரக்தி (इतरविषयविरक्ति) மற்ற சுகங்களில் ஆசை யறுதல். [6] உக்தி (उक्ति) வார்த்தை.

துயரறு சுடரடி தொழுதெழுப் பண்ணுகின்றால்; நம்மால் செய்ய லாவதுண்டோ?

'துயரறு சுடரடி' 'பொய்சேர்' என்கிற துக்ககந்தாகித மாய்; மெய்யான பரஞ்சோதியானவன், தன் திருவடி தொழு தெழும்படி பரமமான கிருபை பெருகப்புக்கால்; அத்தைத் தகைவாருண்டோ?

'விதிவாய்க்கின்று காப்பாரார்? வாய்க்கின்ற கிருபை மஹாப்ரவாகமாகப் பெருக்கெடுத்தபடி, 'விதி' என்கிறார் பகவத் கிருபையை, விதியைத் தப்பவொண்ணாமையாலே, வாய்க்கின்ற கிருபை பெருகி அடியேனை இழுக்கக் காப்பாரார்? என் மனனே ஸ்வதந்த்ரன் கிருபை காப்பாரார்?

ஏன் காக்கவொண்ணாதோ? என்ன; 'காப்பாரா' ரென்றீரே எதிர் சூழல்புக்குத் திரிந்த விடத்திலுந் தப்பின நீர்தான் காக்க மாட்டீரோ? நாம்தான் ஸ்வதந்த்ரரல்லோமோ? நம் கிருபையைத் தகையச் சக்தியில்லையோ? நம் மார்பிலே யிருக்கிறவள் இதைக் குறைக்கில் என்ன;

'ஐயோ! கண்ணபிரான்! அறையோ! இனிப்போனாலே' [7]கிருபா ஜநகையாலும், கிருபாபரதந்த்ரனான உன்னாலும், கிருபாபர வசனான என்னாலும் காக்க முடியாது.

இந்த க்ருபாப்ரவாஹத்தை; பல போக்தாவான என்னா லும்; பல ப்ரதனானவுன்னாலும், பல [8]வர்த்திகையான அவளா லும்; தகையவொண்ணாது. தகைந்துதான் பார்க்கலாகாதோ வென்கிறார்.

[9]'மித்ரபாவேந' என்கிற உனக்கு அஜ்ஞானம் இவன் தோஷத் திலே விஸ்ம்ருதியும், ஸர்வசக்திக்கு இவனை விடுமிடத்திலே அசக்தியுமுடைய, கண்ணபிரானைத் தொழுதெழென் மனனே.

---

7 கிருபாஜநகை — (कृपाजनका) அருளை உண்டுபண்ணுபவள்- (லக்ஷ்மி). 8 வர்த்திகை (वार्धिके) வளரும்படி பண்ணுகிறவள்- 9 மித்ரபாவேந (मित्रभावेन) சிநேக மனப்பான்மையுடன் (வந் தடைகிற யாரையுங் கைவிடேன்) ஸ்ரீராமனுடைய வார்த்தை.

'ஐயோ! கண்ணபிரான்! அறையோ! இனிப்போனுலே' என்று, ஹர்ஷத்தாலே உபகாரசீலனைப் பார்த்து விண்ணப்பஞ் செய்து; தன் திருவுள்ளத்தைக் குறித்து உபகாரஸ்ம்ருதியாலே 'தொழுதெழு' என்று உபதேசிக்கிறுர்.

ஐந்தாம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம்

(முதற் பாட்டு—அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

போலிக போலிக போலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்-
நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங் கியாதொன்று மில்லை-
கலியுங் கெடுங்கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் [மண்மேல்-
மலியப் புகுந்திசை பாடி யாடி யுழிதரக் கண்டோம். (1)

'பொலிக பொலிக'விலே 'ஒன்றுந்தேவு' கேட்டுத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மங்களாசாஸனம் பண்ணியும்; திருந்தாதாரைத் திருத்தியுஞ் சொல்லுகிறுர்.

ஒன்றுந்தேவிலே தான் திருத்தின ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயைக்காண்கைக்காக, நித்யஸூரிகள் இங்கேவர; அவர்களையும் [1] வ்யூஹ [2] விபவஸ்தானீயரையும் கண்டு, மங்களாசாஸனம் பண்ணுகிறுர்.

திரியுங் கலியுகம் நீங்கித் தேவர்கள் தாமும் புகுந்து-
பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருகக்-
கரிய முகில்வண்ண னெம்மான் கடல்வண்ணன் பூதங்கள் [மண்மேல்-
இரியப் புகுந்திசை பாடி யெங்கு மிடங்கொண் டனவே. (3)

---

[1] வ்யூஹம் (व्यूहम्) வாஸுதேவ - ஸங்கர்ஷண - ப்ரத்யும்ன - அநிருத்த-என்கிற நான்கு ரூபங்கள். [2] விபவம் (विभवम्) இராமன்-கிருஷ்ணன் - முதலிய அவதாரங்கள்.

'உயர்வற' என்கிற பாட்டைத் 'திரியுங்கலியுக' மென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்=

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும், தேவதாந்தரத்தால் வந்த உயர்த்தியற்று, கலிதோஷத்தாலே தேவதாந்தரம் பண்ணித்திரிகிற உயர்த்தியற்று;

உயர்நல முடையவன் யவனவன், மயர்வற மதிநல மருளி, ஆழ்வாரைக்கொண்டு ஜகத்தைத் திருத்தத் திருந்தின ஸ்ரீ வைஷ்ணவர்களைக் காண 'தேவர்கள் தாமும் புகுந்து பெரிய கிதயுகம்பற்றிப் பேரின்ப வெள்ளம்பெருக.

உயர்நலமுடைய ஜ்ஞாநாநந்தஸ்வரூபனாய், ஜ்ஞானகுணகனாய், வேதைக ஸமதிகம்யனாலே மயர்வற மதிநல மருள வந்த பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே பரோபதேசம்பண்ண;

அத்தாலே திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களும், ஆழ்வாருமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயைக் காணவந்து புகுந்து, அவர்களுடனே கலந்து, ஆதி கிருதயுகம்போலே, பரப்பிரம்மானந்தம், பெருகும்படியாக யாவனொருவன் அருளினான்; அவன்பொருட்டு அவர்களுக்குப் 'பொலிக பொலிக' வென்று மங்களாசாஸனம் பண்ணிக் கண்டு உகக்கிறார்.

அயர்வறு மமரர்க ளதிபதி யவனவனோடே கூடிக் 'கரிய முகில் வண்ண னெம்மான் கடல் வண்ணன் பூதங்களும் மண்மேலிரிய; அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான, நித்யரான, வைகுந்தன் பூதங்களும்;

'தடங்கடற்பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களும்; 'மாதவன் பூதங்களும்;

'கடல்வண்ணன் பூதங்களான 'நேமிப்பிரான்தமர்போந்தார்,' 'இசியப்புகுந்திசைபாடி யெங்கு மிடங் கொண்டனவே.

"துயரறு சுடரடி தொழுதெழென் மனனே. ஸர்வ துக்க கந்த ரஹிதமாய், தேஜோரூபமான பகவானுடைய திருவடிகளான, சடகோபனைச் சிரஸாவஹித்து, அந்தச் சடகோபன் திரு-

நாமமே உனக்கு [3] தாஸ்யநாமமாக வகித்து இருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் சூடாடி தொழுதெழு.

அந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடி, [4] ப்ரேமபாரவச்யம் இருந்தவிடத் திருக்கவொட்டாமல் ஆடி எங்குமிடங் கொண்டனவே.

என்மனமே; தொழுது எழு [5] வர்த்தி, இஸ் ஸம்ருத்திக்கு மங்களாசாஸனம் பண்ணிச் சூழ்ந்திருந்து ஏத்தப்பாராய் என்கிறுர்.

ஐந்தாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

மாசறு சோதியென் செய்ய வாய்மணிக் குன்றத்தை-
ஆசறு சீலனை யாதி மூர்த்தியை நாடியே-
பாசற வெய்தி யறிவி ழந்தேனை நாளையம்?
ஏசறு மூரவர் கவ்வை தோழி! என்செய்யுமே? (1)

மாசறு சோதியில், நண்ணுதார் முறுவலிப்பவிலே, ஸம்ஸாரிகள் படுகிற கிலேசத்தை அநுஸந்தித்து, அதுக்குப் பரிகாரமாக, [1] பகவத்பாத்வஜ்ஞானத்தை உபதேசித்துத் திருத்தி; அதுக்கு உபகாரஸ்மிருதிபண்ணி, [2] அனந்தரம் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாசாஸனம் பண்ணி, இப்படி ஸம்ஸாரி பேறு தலைக்கட்டினவாறே, 'ஏறுளுமிறையோனில் இழவு

[3] தாஸ்யம் (दास्यम्) அடிமை செய்தல். [4] ப்ரேமபாரவச்யம்-(प्रेमपारवश्यम्) அன்பு மேலீட்டால் மெய்ம்மறந்திருத்தல். [5] வர்த்தி-(वर्धि) [1] பகவத்பாத்வஜ்ஞானம் (भगवत्परत्वज्ञानम्) 'பகவான் எல்லாவற்றையும்விட மேலானவன்' என்கிற ஞானம். [2] அனந்தரம் (अनन्तरम्) பிறகு.

தலையெடுத்து 'வழியல்லா வழியே மடலூர்ந்தாகிலும் கிட்டு மித்தனையென்று கலங்கினபடியைப் பேசினார்.

கீழே பாகவத ஸம்ருத்திக்கு மங்களாசாஸனம் பண்ணினார். 'மலியுஞ் சுடரொளி மூர்த்தியை' என்று, வடிவழகையும், குணங்களையும், உடையனானவனை பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, கையை நீட்டக் கைக்கெட்டாமையாலே கலங்கி, மடலெடுக்கையிலே [3] உபக்ரமிக்கிறார்.

இந்த [4] உத்யோகத்தைக் கண்ட தோழியானவள் வந்து '[5] தத்தஸ்யஸத்ருசம்பவேத்' என்று இருக்கக் கடவுனக்கு ஸத்ருசமன்று. ஆச்ரிதரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்கிற உன் நாயகனுக்கும் ஸத்ருசமன்று. நம் குடிக்கும் சேராது. மாசாய் விளையுங்காணென்று மடலெடுக்கையை நிஷேதிக்கிறதாயிருக்கிறது.

இத்தைத் தோழி சொல்ல, அவளைப் பார்த்து நாயகி சொல்லுகிறாள்.

'உயர்வற' என்கிற பாட்டை 'மாசறு சோதி, விவரிக்கிறது. எங்ஙனேயென்னில் =

மனுஷ்யானந்தந்தொடங்கி, பிரம்மானந்தத்தளவாக, ஸாதனாந்தரங்களால் வந்த தேவாதி சரீரங்கள் புண்யக்ஷயமானவுடனே, உயர்வறும்.

உயர்நலமுடையவன், யவனவன், மாசறு சோதியாய், ஜ்ஞானாநந்தஸ்வரூபனாய்; வேதாந்த வேத்யனாய், ஸௌந்தர்யாதி குண சேஷ்டிதங்களெல்லாம் மாசற்றிருக்கும்.

---

[3] உபக்ரமிக்கிறார் - தொடங்குகிறார்.

[4] உத்யோகம் (उद्योगः) பிரயத்னம். [5] தத்தஸ்யஸத்ருசம்பவேத்– (शरैस्तु संकुलां कृत्वा लंकां परबलार्दनः. मांनयेद्यदिकाकुत्स्थः तत्तस्यसदृशंभवेत्.) இலங்கையில் அசோக வனிகையில் சிறையிடப்பட்ட சீதாதேவி, 'தன்னை அந்த க்ஷணமே இராமனிடம் கொண்டுவிடுவதாகச்' சொல்லும் அனுமானைப் பார்த்துப் பணித்தது இந்த சுலோகம். இதன் பொருள்:–"அனுமானே, நீ சொல்வது தவறு. இவ்விலங்கையைத் தன் அற்புதமான அஸ்த்ரங்களால் திணரவைத்து, என் கணவன் (ககுத்தரென்று பிரஸித்தரான மகாவீரருடைய வம்சத்தில் தோன்றியவன்) தானே என்னை மீட்டுக்கொள்வானாகில், அதுவன்றோ? அவனுக்குத்தகும் (நீ சொல்லுகிறபடி செய்வது மகாவீரனாகிய என் கணவனின் பெருமைக்கு இழுக்காகாதோ) என்று.

ஹேயப்ரதிபடமானவன், என் செய்யவாய் மணிக்குன்றத்தை=சிவந்த வாயோடே கூட [6] அசலமானதொரு [7] நீலகிரி போன்ற வடிவையுடையவன்.

அயர்வறு மமரர்க ளதிபதியாய், மாசறு சீலனுன ஆதிமூர்த்தியானவன், மயர்வற மதிநல மருளுகையாலே வந்த பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தால் பிறந்த ஆசையாலே 'ஆசறு சீலனை, ஆதிமூர்த்தியை நாடியே, பாசறவெய்தி என்னே வினையேன் எனையூழி நைவேன்?

அவன், நான் மடலெடுக்க உத்யோகிக்க - உத்யோகிக்க. ஆக்கம் முற்றி, அவனுடைய வைலக்ஷண்யம் பிரகாசிக்கிறபடியாலே எனக்கு அதானே ஹேதுவாக அறிவு கலங்கி வருகிறபடியும் பாராய்.

அவ்வடிவு ஹேயப்ரயத்னீகங் காண். நான் மடலெடா திருக்கை அவ்வடிவுக்கு ஹேயங் காண். அவ்வடிவை உகந்தார்க்குக் கொடானென்னும் பழியைத் துடைக்கக்காண் நான் பார்க்கிறது.

'பக்தானு' மென்கிற உடம்பைத் தனக்கென்றிருக்கை மாசிறே என்ன;

ஊரார் பழிசொல்லி ஏசுகை, எல்லார்க்கும் குடிப்பழியன்றோவென்று மடல் எடாமல் தோழி நிஷேதிக்க;

நாம் அயர்வறு மமரர்க ளதிபதியான அந்த மாசறு சோதியிலே மாலாய் ஆசைப்பட்டு, துயரறு சுடரடி தொழுது எழுந்து, ஆதிமூர்த்தியை நாடியே என்மனமும் நானும் பாசறவெய்தியறிவழிந்தோம், 'ஏசறுமூரவர்கவை தோழி என்செய்யுமே?

ஊரவர் கவ்வையெருவிட்டு இத்யாதிப்படியே, எனக்கு அது தானன்றோ மடலெடுக்கைக்கு ஹேதுவென்கிருள்.

ஐந்தாம்பத்து மூன்ருந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

6 அசலம் (अचलम्) அசைவற்றது. 7 நீலகிரி (नीलगिरि) இந்திர நீலக்கல்மலை.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(தரவுகோச்சகக்கலிப்பா)

ஊரெல்லாந் துஞ்சி உலகெல்லாம் நள்ளிருளாய்-
நீரெல்லாந் தேறியோர் நீளிரவாய் நீண்டதால்-
பாரெல்லாம் உண்டநம் பாம்பணையான் வாரானால்-
ஆரெல்லே வல்வினையே னாவிகாப் பாரினியே. (1)

ஊரெல்லாந் துஞ்சியில் பாரித்தபடியே மடலூர வொண்ணாதபடி, அஸ்தமித்தவாறே,—உசாத்துணையும் அன்றிக்கே, ராத்ரியில் விசனம் அநுபவித்தார்.

வெஞ்சுடரிற் றானடுமால் வீங்கிருளி னுண்டுளியா-
யஞ்சுடர வெய்யோ னணிநெடுந்தேர் தோன்றாதால்-
செஞ்சுடர்த் தாமரைக்கட் செல்வனும் வாரானால்-
நெஞ்சிடர்தீர்ப் பாரினியார்? நின்றுருகு கின்றேனே. (9)

உயர்வற, என்கிற பாட்டை வெஞ்சுடரில் தானடுமாலென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக திவாராத்ரவிபாகமற, ஊனு முறக்கமு மாயிருக்க, எனக்கொருத்திக்கும் விடியாத இருளாய்த்து.

அது தானு மூழியாய், நீண்டு வீங்கிருளும் நுண்டுளியாய் விரஹாக்னியாலே தஹிக்கிறது.

அதினாலேயிருளும் குளிர்ந்த பனியும் தஹியாநின்றது. லௌகிகர்க்கு திவாராத்ர விபாகமாய், காலங்கழிந்து உயர்வற்றது. எனக்கு உர்நலமுடையவனைப்பற்றி யிருக்கையாலே இருளும் மோஹாந்தகாரம் நெடுகாநின்றது.

உயர்நலமுடையவன் யவனவன்—அவன் ஜ்ஞானனந்தைகஸ்வரூபனானவன்—எனக்கு மயர்வற மதிநல மருளினவற்றால் வந்த [1] பரபக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தாலே "யதாஸௌர்யஸ்ததாஜ்ஞானம், சந்த்ரோதயஸமம் என்று சொல்லுகிறபடியே

---

[1] பரபக்தி (परभक्ति) மோக்ஷத்திற்கு உபாயமாய் விதிக்கப்பட்ட பக்தி.

'அஞ்சுடர வெய்யோ னணிநெடுந்தேர் தோன்றுனல்' தன்னுடைய [2] தோற்றரவிலே துக்கநிவ்ருத்தி யுண்டாம்படியான அழகிய சுடரையுடைய ஆதித்யனும் வருகிறிலன்.

ப்ரளயத்தை நீஞ்சுவாரைப்போலே, ராத்ரியையும், இருளையும் நீஞ்சிக் கரைகாணுமல் படுகிறபாடு.

ஆதித்யோதயத்துக்கு அருணோதயம்போலே, அயர்வறுமமரர்களதிபதி மோஹாந்தகார ரஹிதமான நித்யஸூரிகளுக்கும், நித்யஸூர்யனுப், ஹேயப்ரதிபடனுனவன் யவனவன் ஸூர்யமண்டலவர்த்தியான செஞ்சுடர்த்தாமரைக்கட் செல்வனும் வாரானுல் "[3]கப்யாஸம் புண்டரீகம் ஏவ மக்ஷிணீ, என்கிறபடியே ஆதித்யமண்டலத்திலே எழுந்தருளியிருக்கிற ஸ்ரீயஃபதியும் வருகிறிலன்.

சிவந்த புகரையுடைய தாமரைபோன்ற கண்களையுடைய ஸ்ரீமானும் வருகிறிலன்.

ஆதித்யன் வருகிறிலன். ஆதித்யன் வந்தாலும் இருள் வர ஸம்பாவனே உண்டிறே - அஸ்தமியாத ஆதித்யனும் வருகிறிலன். ஸூர்யப்ரகாசம் [4] ப்ராதேசிகமா யிருக்கும். அயர்வறுமமரர்களதிபதியான, நித்யஸூரி ஸேவிதமான ஸூரியன் உபயவிபூதிக்கும், ப்ரகாசத்தைப் பண்ணுகிற ஆதித்யனிறே.

'பகல் கண்டேன், நாரணனைக் கண்டேன்' என்னக்கடவதிறே.

ஸ்ரீமானுன நாராயணன், சுடரடி=துயரறு சுடரடி தொழுதெழாமலிருந்த என் மனனே, 'நெஞ்சிடர் தீர்ப்பாரினியார், நின்றுருகுகின்றேனே.'

---

[2] தோற்றரவு—தோற்றம்.

[3] **कप्यासं पुण्डरीकमेव मक्षिणी**-சூரியோதய காலத்தில் சூரிய கிரணங்களால் மலர்ந்த செந்தாமரைப் பூப்போன்றவை எம்பெருமானுடைய திருக்கண்கள். [4] **प्रादेशिक**—ஓரிடத்தில் இருக்கும், மற்றோரிடத்தில் இருக்காது.

5 ஆந்தரமான மனோதுக்காந்தகாரத்தைப் போக்குவாரார்?
6 பாஹ்யாந்தகாரம் போக்கு மாதித்யனும் வருகிறிலன்.

ஆந்தரமான துக்காந்தகாரம், வைரம் பற்றின இருளிறே. அத்தைப் போக்கும்போது, நிலவனுமாய், அந்தரங்கனுமான வனே வேணும். "ஞானமாகி ஞாயிறாகி, என்னக்கடவதிறே.

நின்றுருகுகின்றேனே, விலக்ஷண விஷயமுருக்க வுருகுகிறது. தர்மிலோபம் பிறக்கவுமொட்டாதிறே. இன்னமொருக்கால் காணலாமோவென்கிற வாசையாலே இழவு ஜீவிக்கவொட்டாதென்கிறார்.

ஐந்தாம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

எங்ங னேயோ? வன்னை மீர்கா ளென்னை முனிவதுநீர்-
நங்கள் கோலத் திருக்கு றுங்குடி நம்பியை நான்கண்டபின்-
சங்கி னோடும் நேமி யோடுந் தாமரைக் கண்களோடும்-
செங்க னிவா யொன்றி னோடுஞ் செல்கின்ற தென்னெஞ்சமே. (1)

'எங்ஙனயோவில் இங்ஙன் 1 அதிமாத்ரப்ராவண்யம் ஆகாதென்று நிஷேதிக்கிற தாய்மாரைக் குறித்து, உங்கள் ஹிதவசனங் கேட்கவொண்ணாதபடி பண்ணுகின்றது, நம்பியுடைய வடிவழகென்று, பண்டு அனுபவித்த, நம்பியுடைய அழகு மறக்கவொண்ணாதபடி நெஞ்சிலே கிடக்கையாலும், இப்போது அனுபவிக்கப் பெறுமையாலும், ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது.

5 (आन्तर) அகத்திலுள்ளது.
6 बाह्यान्धकारं—புறவிருள். 1 अतिमात्र प्रावण्यम्—எல்லைகடந்த ஆசை.

கழிய மிக்கதோர் காதல ளிவளென் றன்னை காணக்கொடாள்-
வழுவில் கீர்த்தித் திருக்கு றுங்குடி நம்பியை நான்கண்டபின்-
குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதிவெள் ளத்தி
[னுள்ளே-
எழுவ தோருரு வென்னெஞ் சுள்ளெழு மார்க்கு மறிவரிதே.

உயர்வற என்கிற பாட்டைக் கழியமிக்கதோர் காதலள் என்கிற பாட்டு விவரிக்கிறது, எங்ஙனேயென்னில்—

மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தத்தளவாகக் காதல் அளவு பட்டிருக்குமிறே.

அங்ஙனன்றிக்கே உயர்நலமுடையவனிடத்தில் காமம் பகவதானந்தாதிகளிலும், கழியமிக்கதோர் காதல். இதர [2] விஸஜாதீயமான காதல். அன்றிக்கே, நாள் கழியக்கழியப் பெருகி வருகிறகாதல். [3] சோகச்ச கில காலேந கச்சதாஹ்யபகச்சதி. மமசாபச்யதஃ காந்தாம் அஹந்யஹநி வர்த்ததே.

நாட்டார் அபிமதவிஷயத்தைப் பிரிந்தநாளொருபடியும் பின்பொருபடியாய் மறந்துபோகாநிற்பர்கள்;

அங்ஙனன்றிக்கே - நாள் செல்ல நாள் செல்ல - சோகம் பெருகி வாராநின்றது. 'அன்னை காணக்கொடாள்' இவளொரு விஷயத்திலே காதல் பண்ணக் கண்டேனாகவல்லேனென்றிருக்கிறவளும் காணவொட்டுகிறிலள்.

ஆனால் இப்போது இங்ஙன் படுகிறது என்னென்னில் [4] தர்மிலோபம் வரும்படி ப்ரவணையாக வொட்டார்களே. ஆச்ரயமுண்டாய், மேல் நடக்கவேணுமென்று இருப்பார்களே.

---

[2] विसजातीयम्–வேறுபட்டது [3] शोकश्च किलकालेन गच्छताह्यपगच्छति ममचापश्यतः कान्तां अहन्यहनिवर्धते = தன் பொருள் நூலிலேயே உரைக்கப்பட்டது.

[4] தர்மிலோபம் (धर्मि लोपम्) ஆழ்வாராகிற நாயகி இங்கு 'தர்மி' எனப்படுபவள். பிரிவாற்றாமையால் அவளே முடிந்து விடுவாளோ என்றஞ்சி, எம்பெருமான் (நாயகன்) திறத்து மிக மிஞ்சி மனதைப் போகவிடாமல் காப்பாற்றுகிறார்களென்கை.

காண்கையாவது அனுஸந்திக்கை, 'நெஞ்சென்னுமுட்கண்' என்னக்கடவதிறே. நெஞ்சையுங்கூட வாய்கட்டா நின்றாள் என்ன:—

உனக்கிக்காதல் விளைந்தபடி யென்னென்ன, மயர்வற மதிநல மருளினன். உங்களிடத்தி லாசையான மயர்வையறுத்து ஆனந்தாதி குணவிசிஷ்டனைப் பற்றின காதல் மிக்கது.

உயர்வற உயர்நல முடையவன் யவனவன், மதிநல மருளினன் யவனவன், அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன் வழுவில் கீர்த்தித் திருக்குறுங்குடி நம்பியை, மதிநலமான பக்திரூபாபன்ன ஜ்ஞானமருளப்பெற்ற நான் கண்டபின்.

'வழுவில் கீர்த்தி' நிர்ஹேதுககிருபையாலே, ஆர்த்த ரக்ஷணத்திலே உத்யுக்தராய் வந்து, திருக்குறுங்குடியிலே கால் பாவி நின்ற அவன் காட்டக்கண்டபின்,

'வழுவில் கீர்த்தி, குறைவற்ற கீர்த்தி - அக் கீர்த்திக்கு மவனுக்கும் பிரிய ஸ்திதியில்லாதாப்போலே அவனையொழிய ஸ்திதியில்லாத நான் கண்டபின்.

அயர்வறு மமரர்க ளதிபதியை 'குழுமித்தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே—அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தராய்' அபர்யாப்தாம்ருதாசிகளான குழுமித்தேவர்கள் கூட்டங்கூட்டமாய்த் திரள் திரளவர்கள் [4] கிண்ணகத்திலிழிவாரைப் போலே கைகோர்த்துக்கொண்டு ஸௌந்தர்யாம்ருத ஸாகரத்தில் இழிவர்கள்.

அவயவசோபை, ஆயுதசோபை, ஆபரணசோபை ஸ்வரூபரூபகுண விபூதிகளாகிற சுழிகளிலே யமிழ்ந்து நீந்தி நீந்தி, சேஷவ்ருத்திகளைப் பண்ணயிருக்கிறவன், திருக்குறுங்குடியிலே ஸகலகுண ஸம்பூர்ணனாய் வந்து நின்ற நம்பியை, அபூர்ணனான நான் கண்டபின்.

---

[4] கிண்ணகம்—வெள்ளம்.

துயராறு சுடரடி தொழுது எழுகை, தொழச்சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு.

ஹேயப்ரதிபடமாய் நிரவதிகதேஜோரூபமான திருவடிகளிலே கைகளாரத் தொழுதெழு என் மனனே என்று, என்னெஞ்சு உள்ளெழு மார்க்கு மறிவரிதே.

நித்யஸூரிகள் நடுவே தோன்றுமாப்போலே என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாசியாநின்றது. "ஆர்க்கு மறிவரிதே, எனக்கு மறக்கவொண்ணாதாப்போலேயாயிற்று, ஸ்வயத்நத்தாலே அறிவார்க்கு அறியவொண்ணா திருக்கிறபடி என்கிறார்.

ஐந்தாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து ஆறாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

கடல்ஞாலஞ் செய்தேனும் யானே யென்னும்
கடல்ஞால மாவேனும் யானே யென்னும்
கடல்ஞாலங் கோண்டேனும் யானே யென்னும்
கடல்ஞாலங் கீண்டேனும் யானே யென்னும்
கடல்ஞால முண்டேனும் யானே யென்னும்
கடல்ஞாலத் தீசன்வந் தேறக் கோலோ?
கடல்ஞாலத் தீர்க்கி வையேன் சோல்லுகேன்?
கடல்ஞாலத் தேன்மகள் கற்கின் றவே. (1)

கடல் ஞாலத்தில் [1] அப்ரீத்யம்சமே தலையெடுத்து ஆற்றாமையாலே [2] அனுகரித்து [3] தரிக்கிறார்.

---

[1] அப்ரீத்யம்சம் = ஆற்றாமை. [2] अनुकरित्तल् — ஒருவனுடைய குணங்கள், செயல்கள், வேஷங்கள், முதலியவற்றை மற்றவன் மேற்கொள்வது. [3] தரிக்கிறார்—உயிர்போகாமல் தங்கும்படி செய்கிறார்.

கூந்தன்மலர் மங்கைக்கு மண்மடந் தைக்கும்
குலவாயர் கொழுந்துக்குங் கேள்வன் றன்னை
வாய்ந்த வழுதிவள நாடன் மன்னு
குருகூர்ச்சட கோபன்குற் றேவல் செய்து
ஆய்ந்த தமிழ்மாலை யாயி ரத்துள்
ளிவையுமோர் பத்தும் வல்லா ருலகில்
ஏய்ந்த பெருஞ்செல் வத்தராய்த் திருமா
லடியார்களைப் பூசிக்க நோற்றார் களே. (11)

"உயர்வற" என்கிற பாட்டைக் "கூந்தல் மலர் மங்கைக்கும்" என்கிற பாட்டு விவரிக்கிறது.

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ஸ்வர்க்காதி லோகங்கள், உத்க்ருஷ்டமான ரத்னதிகள், ரஸவத்பதார்த்தங்கள், வேதசாஸ்த்ராதிகள், ப்ரம்மருத்ராதிகளான தேவர்கள். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதிகளெல்லாம் நானே செய்தேனென்று, தன்னை ஜகத்காரணனான ஸர்வேச்வரனாக அனுகரித்து இருக்கக்கண்ட திருத்தாயார் வினவவந்தார்க்குச் சொல்லுகிறாள்.

உயர்வற உயர்நல முடையவன் யவனவன் "கூந்தல் மலர் மங்கைக்கும், மண்மடந்தைக்கும், குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் தன்னை.

கூந்தல் மலர் மங்கைக்கும்=ஸர்வேச்வரனுடைய ஐச்வர்யத்துக்கு ஹேதுபூதையாயிருக்கும் பெரிய பிராட்டியார், அதுக்கு விளைபூமியாயிருக்கும் ஸ்ரீ பூமிப்பிராட்டியார், அதனுடைய பலரூபையாயிருக்கும் நப்பின்னை பிராட்டியார், ஆக [4] உகாரவாச்யைகளான இவர்களையுடையனென்றது.

கேள்வன் தன்னை, இவர்களுக்குப் பதியாயுள்ளவனை. இத்தால் ஓரவதாரமாத்ர மன்றிக்கே, உபயவிபூதி நாதனான பூர்ண விஷயத்திலே அனுகரிக்கிறாரென்று, தோற்றியிருக்கிற படி.

---

[4] उकार वाच्यकल-ஓம்—என்கிற ப்ரணவததில் மூன்று எழுத்துக்கள் உள்ளன—அ-உ-ம் என்று. அவைகளில் 'உ' என்ற எழுத்தின் அர்த்தமாகக் கொள்ளப்பட்டவர்கள் என்று பொருள்.

இதற்கு ஹேது "உயர்நல முடையவன் யாவனொருவன் அவன் மயர்வற மதிநல மருளுகையாலே 'வாய்ந்த வழுதிவள நாடன்" மயர்வற, அவித்யாதிகள் வாஸனையோடேயற்ற, மதி நலமான பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே, அனுகரித்து தரிக்கப் பார்த்துக் கிட்டினபடி, அதாவது [5] பாவனா ப்ரகர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரிக்கை.

"மன்னுகுருகூர்ச்சடகோபன் குற்றேவல்செய்த அமரர்கள திபதி துபாறு சுடாரடி தொழுது. நித்யஸூரிநிர்வா ஹகனுன வன் வரையாதே ஸர்வஸமாச்ரயணீயமான திருவடிகளை யாச்ர யித்திருக்கு மடியாரைப்பூசிக்க நோற்றார்களே.

இந்த லோகத்திலே எல்லாரும் கொண்டாடும்படி வைஷ் ணவஸ்ரீயை உடையராய் [6] ஸ்ரீமத்புத்ரர்களை ஆராதிக்கப்பெறு வர்கள்.

ஆழ்வார் பகவத் பாகவதர்களை ஆராதித்தபடி இவரனு காரத்தாலே, ச்ரியபதிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ப்ரிய மாகத் தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னபடி. இது கற்றவர்களும் பகவத் பாகவதர்களுக்கு ப்ரியகரமான வ்ருத்திபண்ணி இருக்கப்பெற்றவர்கள்.

இப்பதத்தைக் கற்றவர்கள் "சுடரடி தொழுதெழென் மனனே என்றிருக்கப்பெறுவர்கள் - இப்படி அனுகரித்து அனுப விக்கிறார்.

அஸ்மத்குருப்யோநம:| ஆழ்வார் திருவடிகளே சரணம்.

"கரக்ருத மபராதம் க்ஷந்து மர்ஹந்தி ஸந்த:"

"करकृत मपराधं क्षन्तु मर्हन्ति सन्तः ॥

ஐந்தாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

---

5 भावना प्रकर्षः = தியானத்தின் முதிர்ந்த நிலை.

6 ஸ்ரீமத்புத்ரர்கள் - திருமாலடியார்கள்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(ஆசிரியத்துறை)

நோற்ற நோன்பிலே னுண்ண றிவிலே னாகி லுமினி யுன்னை
[விட்டொன்றும்
ஆற்ற கிற்கின்றி லேனர வினணை யம்மானே!
சேற்றுத் தாமரை செந்நெ லூடு மலர்சி ரீவர மங்க லநகர்
வீற்றிருந் தவெந்தா யுனக்கு மிகையல் லேனங்கே. (1)

நோற்ற நோன்பில் இப்படி அனுகரித்தவளவில் வந்து முகங்காட்டாமையாலே, 'தானே உபாயாநுஷ்டானம் பண்ணி வருகிறுளென்று இருந்தாகவேணு'மென்று நினைத்து, தம்முடைய உபாய சூன்யதையைச் சொல்லி, வானமாமலை திருவடிகளிலே, வேரற்ற மரம்போலே புகலற்று விழுந்து சரணம் புக்கார்.

ஏன மாய்நிலங் கீண்ட வென்னப்ப னே! கண்ணா! வென்று
[மென்னை யாளுடை
வான நாயக னே! மணி மாணிக் கச்சுடரே!
தேன மாம்பொழிற் றண்சி ரீவர மங்க லத்தவர் கைதொ ழவுறை
வான மாமலை யே! யடி! யேன்றொழ வந்தருளே. (6)

"உயர்வற" என்கிற பாட்டை "ஏனமாய் நிலங்கீண்ட" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக [1]சாஸ்திரபலம் ப்ரயோக்தரி, என்று, தாந்தாமுபாயானுஷ்டானத்தாலே பலம்பெறுநிற்க உமக்கிப்படி உபாயமுண்டோவென்ன:—

"உன்னுடைய உயர்நலத்துக்குத்தக்க ஸாதனமுண்டோ? என்கிறார். உயர்நல முடையவன் யாவனொருவன், அவனே எனக்கு உபாயோபேயங்கள் இரண்டுமென்கிறார். 'நோற்ற நோன்பிலேன்' என்று, உபாயசூன்யதையை அருளிச்செய்கிறார். இங்கே கைங்கர்யத்தை அபேக்ஷிக்கிறார்.

---

[1] शास्त्रफलं प्रयोक्तरि=யாகம் முதலிய கர்மங்களுக்கு அதற்கேற்ற பலங்கள் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ளன. அந்தக்காரியங்களை செய்பவனுக்குத்தான், அந்த பலங்கள் கிடைக்குமன்றி செய்யாதவனுக்குக் கிட்டாது.

"ஏனமாய் நிலங்கீண்ட என்னப்பனே! கண்ணா! என்று மென்னை யாளுடை" [2]ஆபன்னரானூர் அறிவிக்கையும்மிகையாம் படியன்றோ? உன்படி இருப்பது. ரக்ஷணமொருதலையானால் உன்னைப் பேணாதவனன்றோ?

'ஏனமாய் நிலங்கீண்ட என்னப்பனே! கண்ணா! மஹாவராஹமாய், ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாய்.

க்ருஷ்ணனாய் வந்தவதரித்து, ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னை எடுத்து, மயர்வற மதிநல மருளி, பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே உன்படியை அறிவித்து. ப்ரளயங்கதையான பூமிக்கு உதவினது தமக்கு உபகரித்ததாயிருக்கிறபடி.

என்னப்பனே! கண்ணா! என்னுடைய ரக்ஷணத்துக்கு ஏதேனும் முகம் பண்ணவேணுமோ? என்னுடைய ரக்ஷணத்துக்கொரு கோலங் கொள்ளவேணுமோ? கண்ணன் கோளிழைவாள் முகமிறே இவர்க்கு ரக்ஷகம்.

'என்றுமென்னை யாளுடை வானநாயகனே! மயர்வற மதிநல மருளினவன் யவனவன்; அயர்வறு மமரர்களதிபதி யவனவன்—தனக்கீடானாரோடு இருக்கும்போது இவர் [3]இடையாட்டமாய்த்து ஆராய்ந்து போருவது.

இவர் ஸத்தையே தொடங்கி கைக்கொண்டு நோக்கிக்கொண்டாய்த்துப் போருவது.

'மணிமாணிக்கச்சுடரே! இவர் உளரானபின்பு ஒரேற்றம் பண்ணிக்கொடுக்கையன்றிக்கே, அடியே பிடித்து நோக்கிக் கொண்டுபோந்து, மயர்வற மதிநல மருளி, இச்சை பிறந்தவாறே அவ்வளவிலே—அயர்வறு மமரர்களதிபதி யானவன், நித்யஸூரிகளுக்கு விடும் படியையும் இவருக்கு விட்டான்.

'மணிமாணிக்கச் சுடரே,' ரத்னச்ரேஷ்டமென்னுதல் மணியினுடையவும் மாணிக்கத்தினுடையவும் தேஜஸ்ஸையுடைத்தாயிருக்கை என்றுமாம்.

---

2 आपन्नर् —ஆபத்தையடைந்தவர். 3 இடையாட்டம் — விஷயம்.

அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன், ‘தேனமாம் பொழில் தண் சிரீவர மங்கலநகர்’ தேனையுடைத்தான மாம் பொழிலையுடைத்தாய், ச்ரமஹரமான, ஸ்ரீ வரமங்கலத்திலுள்ளார் அடிமைசெய்ய வீற்றிருக்கிற, [4] ஸ்வரூபாநுரூபமான கைங்கரியத்தைப்பண்ண எழுந்தருளியிருக்கிற ‘வானமாமலையே! ‘உன் துயரறு சுடரடி தொழுதெழ, வானமாமலை யத்ருப் தாம்ருதரூபரான நித்யஸூரிகளை அடிமைகொண்டிருக்கிற [5]வேண்டப்பாடுபோலே காணும் இங்குள்ளார் அடிமை செய்ய இருக்கிற இருப்பும்.

‘வானமாமலையே உன் துயரறு சுடரடி, அடியேன் தொழுதெழும்படி வந்தருளே.

[6] விச்லேஷ கந்தாஹிதமாய் ஸம்ச்லேஷவர்த்தகமாய், நிரவதிகதேஜஸ்ஸையுடைய திருவடிகளிலே சேஷபூதனான நான் அடிமைசெய்து வாழும்படிக் கிடாக என் முன்னே நாலடி நடந்து வரவேணும்.

அடிமை செய்கையாவது—‘அன்றிவ் வுலக மளந்தாயடி போற்றி’ என்னுமாப்போலே, அந்நடையழகு கண்டு மங்களா சாஸனம் பண்ணுகை. ‘வந்தருளே’ என் கண்வட்டத்திலே உலாவி நின்று அடிமைகொள்ளவேணு மென்கிறார்.

ஐந்தாம்பத்து ஏழாந் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற் பாட்டு — (அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

ஆரா வமுதே! யடியே னுடலம் நின்பா லன்பாயே-
நீரா யலைந்து கரைய வுருக்கு கின்ற நெடுமாலே!
சீரார் செந்நெல் கவரி வீசுஞ் செழுநீர்த் திருக்குடந்தை-
ஏரார் கோலந் திகழக் கிடந்தாய்! கண்டே னெம்மானே.!

---

[4] स्वरूपानुरूपम् — அவரவர்க்கு ஏற்றது. [5] வேண்டப்பாடு=பெருமை.

[6] विश्लेषगन्धः — विश्लेषः—பிரிவு - गन्धः — துளி.

ஆராவமுதில், அங்கு சரணம்புக்கவிடத்திலும், தம் அபேக்ஷிதம் பெறுமையாலே, திருக்குடந்தையளவும் வந்து [1] ஆராவமுதாழ்வார் திருவடிகளிலே விழுந்து கூப்பிட்டவிடத்திலும், இவரைக் குளிரக் கடாக்ஷித்தல், வினவுதல், செய்யக் காணாமையாலே இன்னுமெத்தனை திருவாசல் தட்டித்திரியக்கடவேனென்று அநவாப்தியோடே தலைக்கட்டினர்.

"உயர்வற" என்கிற பாட்டை 'ஆராவமுது' விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்—

உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் - ச்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஜ்ஞானனந்தைகஸ்வரூபனான ஸர்வேச்வரன், சேதனரிடத்திலே ஒரு கிருபை ஜனித்துத் திருவுள்ளம் பற்றுகிறபடி:—

'நாம் அம்ருதஸ்வரூபனாயிருக்க, சேதனரும் அம்ருத சப்த வாச்யராயிருக்க, [2] "அம்ருதந்திவி" என்று நித்ய விபூதியும் 'அம்ருதம்'என்று பேராயிருக்க, நாம் அம்ருதப்ரதானராய் இருக்கிற இருப்பை நித்யமுக்தர்கள் அனுபவித்து அம்ருதானந்த மக்னராயிருக்க:—

---

[1] ஆராவமுதாழ்வான் — ஸ்ரீ ஆராவமுதன் திருமழிசை ஆழ்வாருக்குத் தன் திருநாமத்திலுள்ள 'பிரான்' என்றும் பதத்தைக் கொடுத்து; அவருடையதான 'ஆழ்வார்' என்னும் பதத்தைத் தான் ஏற்றுக்கொண்டதால், இவருக்கு மேற்கண்ட விதமும், திருமழிசை ஆழ்வாருக்குத் 'திருமழிசைப்பிரான்' என்றும் பெயர் வழங்கலாயிற்று.

[2] अमृतन्दिवि ஆகாயத்தில் அம்ருதம் உள்ளது. இங்கு 'அம்ருதம்' என்னும் பதம் நித்யவிபூதியான ஸ்ரீவைகுண்டத்தைக் குறிப்பிடுகின்றது.

'லீலாவிபூதியார் இழக்கவொண்ணு' தென்று, அவர்களைத் திருத்திக் கரைமரஞ்சேர்த்து 'அவர்களும் அபர்யாப்தாம்ருதத்தை புஜிக்கத்தக்கதாக ஒருவரையுண்டாக்குவோ'மென்று, ஆழ்வாரிடத்திலே திருவுள்ளம்பற்றி, அவருக்கு மயர்வற மதிநல மருள;

ஆழ்வாரும் மயர்வற மதிநலம் பெற்று, அபர்யாப்தாம்ருதத்தை அனுபவித்து அனுபவகர்ப்போபதேசம் பண்ணுகிருர்.

உயர்வற உயர்நலமென்பது—ஆராவமுதே! என்றபடி.

உயர்வு=மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தமளவாக, ஒருவரானந்தம் ஒருவருக்கின்றிக்கே இருக்கும். அதுவுமல்பமாய்த்து. ஆகையாலே பரப்ரம்மானந்தத்தை உயர்நலமென்றபடி.

யவனவன் 'ஆராவமுதே! என்கிறவன்—உன்னழகாலே என்னையுருக்குகிற உன்னைக் கண்வளரக் கண்டேன். "குளிர நோக்குதல், அணைத்தருளுதல், செய்யக் காண் கி றி லே ன்" என்கிருர்.

ஆராவமுதே=அனுபவியாநின்ருலும் க்ரமப்ராப்தி பற்ருத விஷயத்தைப் பிரிந்தார் எங்ஙனேஆறியிருக்கும்படி? முற்பட தர்சனமாய், அனந்தரத்திலே யணுகிப் பின்னை ஸ்பர்சமாயிப்படியிறே அனுபவப்ரகாரங்கள். அத்தனைக்ரமம் பார்த்திருக்கவொண்ணுதபடியாயிருக்கை.

நலமுடையவனென்று — ஆனந்தகுண நிரூபகம். 'ஆராவமுதே' யென்றும் நிரூபகம். உயர்நலமென்றும் அபர்யாப்தாம்ருதம் என்றபடி.

யவனவன்—ஆராவமுது, கடலில் உப்புச் சாறு குடிப்பார்க்குத் தேவயோனியிலே பிறக்கவேணும். பிரம்மசர்யம் அனுஷ்டிக்கவேணும். இத்தனையும் பட்டால் [3] ஸக்ருத்ஸேவ்யமாயிருக்கும்.

---

[3] सकृत्—ஒருதரம்.

இது அங்ஙனன்றிக்கே ஸர்வாதிகாரமுமாய், ஸதாஸேவ்யமுமாய், ப்ரம்மசர்யாதி [4] வைகல்யம் உண்டானவையும் தானே பரிகரிக்கக்கடவதாயிருக்கும்.

அடியேன், யவனவன்—ச்ருதிப்ரசித்தமான திவ்யாத்மஸ்வரூபனுய், அபர்யாப்தாம்ருதானந்தஸ்வரூபனுனவனுக்கு அடியேன்—சேஷத்வாம்ருத வாச்யனுன அடியேன்.

"ஆராவமுதே" என்று ஸம்போகிக்கையாலே அம்ருதானந்தஸ்வரூபனுன சேஷியானவன் இவனை 'மேல்மேலெ'ன [5] பர்யாப்தி பிறவாதபடி. த்ருஷ்ணையை விளைவிக்கிறபடி.

அபர்யாப்தாம்ருதமென்றுல் பர்யாப்தி பிறவாதிறே. தனக்குந் தன் தன்மை அறிவரியானிறே.

'ஆராவமுதே' இத்திருவாய்மொழியில் இவர்க் குண்டான ஆற்றுமைக்கெல்லாம் [6] பீஜம் இப்பதமாய்த்து.

'அடியேன்' மயர்வற மதிநலம்பெற்ற ஸ்வரூபத்தாலே சொல்லுகிருரல்லர். போக்யதைக்குத் தோற்றுப் [7] புல் கவ்விச் சொல்லுகிறுர். [8] 'பரவானஸ்மி' என்கிறவர், [9] 'குணைர்தாஸ்யமுபாகத:' என்றுப்போலே.

"உடலும் நின்பால் அன்பாயே" சேஷத்வம் ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகுல், தேகம் அதற்கு விரோதியாய் நிற்கும் நிலை குலைந்து, "அஹம்" என்றிருக்கக்கடவ இவர்தாம் "அடியேன்" என்றது விஷயத்தினுடைய போக்யதாதிசயமிறே.

அப்படியே சரீரமும் விஷயாதீனமாக அழிந்தபடி "உடலும்" என்று அபிசப்தத்தாலே அடியேன் சேதனனுகையாலும், மயர்வற மதிநல மருளுகையாலும், அருளின பக்தியாலும்,

---

[4] वैकल्यम्—குறைவு (இல்லாமை). [5] पर्याप्ति— திருப்தி. [6] बीजम्—காரணம். [7] தோற்றவர் புல்லைக்கவ்வுதல் வழக்கம் என்றபடி. [8] परवान् — பராதீனனுயிருக்கிறேன். [9] गुणैर्दास्यमुपागतः— ஸ்ரீராமனுடைய நல்ல குணங்களுக்குத் தோற்று அடிமையானேன். இலக்குமணன்சொல்வது.

பக்திரூபாபன்ன ஜ்ஞானமானது "பெருகுமால் வேட்கையாலு முருகவடுக்கும், "உடலும், அசேதனமான சரீரமும் உருகின படி.

அப்படியருளினவன் யவன் ஆராவமுதான நின்பாலன்பாயே அன்புதான் வடிவுகொண்டாப்போலே யாய்த்து. சேஷத்வாகார ஞன ஆத்மாவைத் தன் வழியே இழுக்கை தவிர்ந்து அதன் வழியே தான் ஒழுகாநின்றது.

ஆரா—ஜ்ஞானமயமான ஆத்மாவாதல்—அதற்கு நேதாள் திண்டியான [10] ஜ்ஞானப்ரஸரத்வாரமான மனஸ்ஸாதலன்றிக்கே அவற்றுக்கு அவ்வருகான [11] த்வங்மாம்ஸமேதோஸ்திமயமான சரீரமும் அழியும்படி யாய்த்து.

'நின்பாலன்பாயே' சேதநாசேதந விபாகமற உருக்கவல்ல உன்பக்கலிலே, அன்புக்கு ஆச்ரயமாகிறது தவிர்ந்து, அன்பு தான் ஒரு வடிவுகொண்டாப்போலே இராநின்றது, வஸ்து வைலக்ஷண்யத்தாலே ஆராமை மிக்கபடி. சந்திரகாந்த முருகிற்றென்றால் அங்கு சைதன்ய மில்லையிறே.

அப்படியே 'மதிநல மருளின நின்பா லன்பாயே.' அன்பு தான், நீராயலைந்து ஸமுத்ரதரங்கம்போலே அலைஎறியா நிற்கச் செய்தே ஆரா-உடல்அன்பாய், அன்புநீராய், நீர்தான் பொங்கியலை எறியா நின்றது, மதிநலம் பெருகுகிறபடி.

[12] ச்ரவணமனனாதிகளால் வருகிறதன்றே. விஷயம் அழிக்க அழிகிறதித்தனை. அனுபவபரிபாகரூபமான தசாவிசேஷங் கள் மேல் மேலெனக் கிளர்ந்து வாரா நின்றது, அருளின பக்தி ரூபாபன்னஜ்ஞானத்தினுடைய ப்ரவாஹமிருக்கிறபடி.

ஆரா—கரைய; நீர், தன்பக்க லகப்பட்டதைக் கரைத்துத் தான் கரையாதிருக்குமாய்த்து.

---

[10] ज्ञानप्रसरद्वारम्-ஜ்ஞானம் பரவுவதற்கு வழியாயுள்ளது. [11] त्वङ्मांस-मेदः — अस्थि — தோல்-மாம்ஸம், கொழுப்பு-எலும்பு-இவைகளாலானது. [12] श्रवण—கேட்டல்—मननम्—சிந்தித்தல்.

இது அங்ஙனன்றிக்கே, நீர்தானுய்த்துக் கரைகிறது. அன்பு நீரானால் நீர்தான் கரையத் தட்டில்லையிறே.

இத்தலையளவு இதுவானால், அத்தலை செய்கிறதென்னென்னில், 'உருக்குகின்ற' கீழ் உருக்கின கிரமம் சொல்லிற்று. மேல் உருக்குகிறது சொல்லுக்கு அடங்காதிறே. ஆகையாலே 'உருக்குகின்ற' வென்றது.

அழிக்கைக்கு அடியிட்டவித்தனையாய்த்து. அழிப்பாளனானவன் ஆபரணமிக ளென்று பாராதே உருக்கி அழிக்குமாப்போலே காணும் அவன் தனக்குத் "தேசமானவணிகலனும் என்கைகூப்புச் செய்கை யென்கிறதிறே.

ஆழ்வாருக்குள்ள உடலை உருக்கி அழிக்குமித்தனையோ வென்னில்; 'நெடுமாலே' இவரது மால். அவனது=நெடுமால். எதிர்த்தலையில் அழிவு கண்டபின்பிறே இத்தலையில்அழிவு.

அவனுடைய வ்யாமோஹம் பார்க்கும்போது, இவரது ஒன்றும் போராதபடியாயிருக்கும், இவருக்கு ஸாத்மிக்க ஸாத்மிக்கப் பிறந்த அவஸ்தாவிசேஷம்.

அவன் அயர்வறுமமரர்களதிபதியாய் இருந்து வைத்து, ஆறமில்லாதான் ஒருவனைப் பெற்றாப்போலே ஆழ்வார் அவனுக்கு ஆராவமுதானபடி.

ஆழ்வாருக்கு நாக்குக்குமாத்திரம் ரஸித்தது. மதிநலம் பெற்ற இவர் அவனுக்கு [13]ஸர்வவித போக்யமுமானபடி. 'நெடுமாலுக்குப்' "பூசுஞ்சாந்து, புனையுங்கண்ணி, வாசகஞ்செய்மாலை, வான்பட்டாடை, தேசமானவணிகலன், உருவுமாருயிரும் உடனே யுண்டான் தானென்னை முற்றப்பருகினானென்கிற 'அஹமன்னம்' முதலான போக்யங்களெல்லாம் ஆகையாலே, அநுபவங்களை வாசாசொல்லிமுடியாதாகையாலே, 'நெடுமால்' என்னுமித்தனையிறே.

---

13 सर्वविधभोग्यम् — இன்பம் பயக்கும் பொருள்கள் யாவும்.

[14] அனந்தன் பாலும் [15]கருடன் பாலும் ஐது நொய்தாக வைத்து என் மனந்தன்னிலே வந்து வைகி வாழச்செய்த எம் பிரானென்கிறார். மாலென்று பெரியோனென்றபடி.

இப்படியிருக்கிறவன் யாவனொருவன் சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை, ஏரார்கோலந்திகழக் கிடந்தாய் கண்டேனெம்மானை.

துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே என்கிறார். மாலென்று, உபயவிபூதிநாதத்வஞ் சொல்லுகிறது.

ப்ருஹ்மருத்ராதிகளுக்கு நிர்வாஹகனானவன் மனிசர்க்குத் தேவர்போல், தேவர்க்குந் தேவனாய், அயர்வறு மமரர்களதிபதி- அயர்வு = த்ருப்தி. திருப்தி பிறவாமல் அத்ருப்தாம்ருதத்தைப் பானம்பண்ணி அதிசயிதரான நித்யர் முக்தர்க்கு அதிபதியான வன் ஆழ்வாரை அனுபவித்து ஆராமையாலே அத்யந்தம் வ்யா மோஹமாய்க்கிடக்கிற வ்யாமோஹம் தெளியும்படி;

'சீரார் செந்நெல் கவரிவீசும்' - மிக்க கனத்தை யுடைத்தான செந்நெல்க் கதிர்களானவை விடாய்த்துக் கண்வளர்ந்தருளுகிற அழகைக் கண்டு, பரிசர்யை பண்ணுவாரைப்போலே அமையா நிற்கும்.

செந்நெலுக்குச் சீர்மையாவது, ஆராவமுதாழ்வாருக்கு அமுதுபடியாகிற சீர்மையாகிலுமாம். அப்போது அஹமன்ன மென்கிற சீர்மை.

கவரி வீசும் - நித்யரும் - முக்தரும் பரிசர்யைபண்ணுமாப் போலே, செந்நெல்லானது சிசிரோபசாரம் பண்ணுகிறபடி. [15] A "அகாலபலிநோவ்ருக்ஷா." என்னுமாப்போலே அறுத்து நடவேண்டாபோலே காணும்.

கருத்தறிந்து அடிமைசெய்வாரைப்போலே, சேஷவஸ்துவின் வியாபாரமடைய, சேஷி, தனக்கு அடிமையாக நினைத்திருக்கிறபடி.

---

[14] अनन्तः — [15] गरुडः — இவர்கள் நித்யவிபூதியில் நியததைங் கரியம் செய்யுமவர்கள். [15] A अकालफलिनो वृक्षाः—மரங்கள் உரிய காலமில்லாவிடினும் கனிகளைத் தாங்கி நிற்குமாறு அருள வேண்டும், இராமன் சொல்வது.

அமரர்கள், செழுநீரான நாங்கள் பரிசர்யை பண்ண, அதிபதியாய்த் திருக்குடந்தையிலே, கண்வளர்ந்தருளுகிற ஸௌகுமார்யத்துக்குப் போரும்படி ஜலஸம்ருத்தியை உடைத்தான திருக்குடந்தையிலே.

'ஏரார் கோலம்' அழகு சமைந்த ஒப்பனை நிறம் பெறும்படி கண்வளர்ந்தருளினாய்.

நித்யவிபூதியிலிருப்பு, அந்தப்புரத்திலிருப்புப் போலே
16 திருமந்திரத்தில்படி. திருக்குடந்தையிலே வாஸஸ்தானம்
17 த்வயத்தில்படி

திருமந்த்ரத்தில் உபாயோபேயங்கள் ப்ரகாசிப்பது இங்கேயிறே. திருவடிபார்ச்வத்திலே ஒருபிராட்டி [18] புருஷகாரபூதையாய்கொண்டு. 'சரணௌ சரணம்' என்று திருவடிகளையே உபாயமாகப் பற்றுவிக்கிறாள். திருமுடிபார்ச்வத்திலே ஒரு பிராட்டி இருந்து "இச்சேர்த்தியிலே அடிமைசெய்" என்று அடிமைகொள்கிறாள்.

முக்தப்ராப்யபோகமாம் திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, திருமார்பில் நாச்சியாரோடேகூட 'ஏரார் கோலந்திகழக் கிடந்தாய் கண்டேன்.

ப்ரம்மாதிகள் சூழ்ந்து ஸேவிக்கக் கண்வளருகிறவன், யவன். இப்படி ஸாக்ஷாத்கரித்தவன். அவன் 'எம்மான்' இப்படி ப்ராப்யப்ராபகமும் தானேயானவன்.

'ஏரார் கோலம்' அபர்யாப்தாம்ருதமான கோலம், ஆச்ரிதன் எழுந்திருந்து பேசு என்ன, எழுந்திருக்க, அந்த உத்யோகத்துக்கு வாழி செய்த உத்யோகத்திலே அமைந்த கோலம்.

"மாமேகம்" என்றும் "சரணம் வ்ரஜ" என்றும் அருளிச்செய்த வாக்யத்தைத் தலைக்கட்டி, ஸத்யப்ரதிஜ்ஞைக்காக

---

16 திருமந்த்ரம்—திருவஷ்டாக்ஷரம் 'ओम् नमो नारायणाय' என்பது.
17 த்வயம் श्रीमन्नारायणचरणौ शरणं प्रपद्ये, श्रीमते नारायणाय नमः– என்கிற மந்த்ரம். 18 புருஷகாரம் — பரிந்துபேசி காரியத்தை முடித்துவைத்தல்.

அந்தத்திருத்தேரோடே வந்து சாய்ந்தருளின கோலமாகையாலே
19 மந்த்ரத்ரயமும் ப்ரகாசிக்கிற கோலம்.

'ஸமயா போதிதஃ ஸ்ரீமான்' கிடந்த கிடைக்கு ஆலத்தி வழிக்கவேண்டியிருக்கை. கிடந்தாய் கண்டேன். துயரறு சுடரடி தொழுதெழப் பண்ணவேணும்.

'கண்டேனெம்மானே-கிடையழகைக் கண்டேன் - நினைத்த பரிமாற்றம் பெற்றிலேன். எழுந்திருத்தல், இருத்தல், உலாவுதல், 'என்செய்தா'யென்னுதல். அணைத்தல், செய்யப்பெறுகிறிலேன்.

'எம்மானே' இதுவும் நமதென்று இராதொழியப் பெற்றேனாகிலாறியிருக்கலாயிற்றே. ஆழ்வார் ஆராமையாகிற ஆழ்கடலிலே முழுகி - முக்கவர் முத்துக்கடலிலே முழுகி, முத்துவாருமாப் போலே, வ்யாமோஹத்தின் ஸாகரத்திலே, 'ஏரார் கோலந்திகழக்கிடந்தாய் கண்டேன்' என்கிறார்.

'என் மனனே' என்று பெருக்காற்றிலிழிவார், துணைதேடுமாப் போலே நெஞ்சையும் கூட்டிக்கொண்டு விழிகிறார்.

'எம்மானே! என்று ஸம்போதித்து, உன் வடிவோடொக்க, ப்ராப்தியையிட்டு என்னை நலியவேணுமோ? என்கிறார்.

'எம்மானே' சுடரடி தொழுதெழென் மனனே. ஆழ்வாரை லபிக்கையால் வந்த ப்ரீதியாலே துயரறுசுடரடியாயிற்று.

'என் மனனே' அபர்யாப்தாம்ருதபானத்தாலே களித்து ஆனந்தியாதே, சேஷவ்ருத்தியான அஞ்சலியைப் பண்ணி
20 வர்த்தி. என் வ்யாமோஹமும், உன் வ்யாமோஹமும், அவன் வ்யாமோஹத்திற் குளப்படியாயிற்றே. அத்தைக் கண்டு இறுமாதே தொழுது [21] வர்த்தியென்கிறார். அபசாரானிமான் ஸர்வான், க்ஷமஸ்வபுருஷோத்தம. ஆராவமுதாழ்வார் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து எட்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

19 மந்த்ரத்ரயம்—அஷ்டாக்ஷரம்—த்வயம்—சரமச்லோகம்—என்கிற மூன்று மந்த்ரங்கள். 20 வர்த்தி–இரு. 21 वर्धि வளருவாய்—

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

மானேய் நோக்குநல் லீர்வைக லும்வினை யேன்மெலிய
வானார் வண்கமு கும்மது மல்லிகை கமழும்
தேனார் சோலைகள் சூழ்திரு வல்ல வாழுறையும்
கோனா ரையடி யேனடி கூடுவ தென்றுகொலோ? (1)

மானேய் நோக்கில் திருவல்லவாழிலே தம் அபேக்ஷிதம் கிடைக்குமென்று புறப்பட்டுப்போய், அங்குத்தை போக்யதையிலே நலிவுபட்டு, முடியப்போகவும் மாட்டாதே புறச் சோலையிலே விழுந்து கிடந்து கூப்பிட்டார்.

தொல்லருள் நல்வினை யாற்சொலக் கூடுங்கொல்? தோழிமீர்காள்!
தொல்லருள் மண்ணும்விண் ணுந்தொழ நின்ற திருநகரம்
நல்லரு ளாயிர வர்நல னேந்துந் திருவல்லவாழ்
நல்லருள் நம்பெரு மானா ராயண னுமங்களே. (10)

உயர்வற உயர்நலமுடையவன் யவன் அவனுடைய,தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுமின் தோழிமீர்காள்!

உயர்வற - மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும், அவரவராபீஷ்டங்களை [1]'தயமானமனா' என்கிறபடியே பகவத் க்ருபையாலே லபிக்கச்செய்தேயும், காம்யபலங்களாகையாலே உயர்வுந் தாழ்வுமாயறுகையாலே த்யாஜ்யங்கள்.

உயர்நலமுடையவன் நம்மிட விடத்தில் பண்ணின தொல்லருள், என்றுளன் ஈசன் உயிரு மன்றேயுண்டு கரணப்ரதானம் பண்ணின ஸ்வாபாவிகமான அருளாலே கழல்வளை பூரிப்ப யாம் நல் வினையால் - அதாவது அவனைக் காணப்பெற்று அப்ப்ரீதியாலே சொல்லக்கூடவற்றே.

அன்றிக்கே ஸ்வாபாவிகக்ருபையாகிற [2]ஸுக்ருதத்தாலே அவனைக் கண்டு திருநாமங்களைச் சொல்லவற்றே வென்னுதல்.

நா நீர்த்திருக்கையால் ஆராவமுதுஊறுமிறே. அவன் மயர்வற மதிநலமருளின தொல்லருளாலே, நா வறண்ட பாபம்போய், நா நீருண்டாய், 'திருநாமங்களைச் சொல்லோமோ' என்று அம்மங்கியம்மாள் வாக்கியார்த்தமாக அருளிச்செய்வர்.

இப்படியருள் அகலயிராதே, அயர்வறு மமரர்களதிபதி யவனவன் - தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழ நின்ற திருநகரம். தன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை ஸம்ஸாரத்திலுள்ளாரும் நித்யவிபூதியிலுள்ளாரும் தொழநின்ற மஹாநகரம்.

---

1 दयमानमनाः — தயைநிறைந்த உள்ளம் உடையவன். 2 सुकृतम् — புண்யம்.

அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான, நித்யஸூரிகளும் நித்ய ஸம்ஸாரிகளுங்கூடத் தொழும்படி ஸர்வஸ்மாத்பரனான ஸர்வேச்வரன் வந்து நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

'நல்லருளாயிரவர்- எம்பெருமானிலும், ப்ரஜாரக்ஷணத்தில் அனுக்ரஹ சீலராயிருக்கிறவர்கள்,

'நலனேந்தித்யாதி = அவனுடைய' உயர்நலமான கல்யாண குணங்களை உயரா நின்ற நலமென்று கொண்டாடி வர்த்திக்கும் ஊரென்னுதலாகைபாலே. நல்லருள் நம்பெருமான் "நாராயணன் துயராறு சுடரடி தொழுது, நாமங்களை, திருநாமோச்சாரணம் பண்ணித்தொழுது ஸ்துதித்து, என் மனனே எழு.

நல்லவருளையுடையனாய், நமக்கு ஸ்வாமியானவன் - நாராயணன். நல்லவருளாகிறது = வாத்ஸல்யாதிகள் [3] நாராயண சப்தார்த்தம். அர்த்தத்தை யருளிச்செய்து, பின்னை சப்தத்தை அருளிச்செய்கிறார்.

---

[3] 'நல்லருள் நம்பெருமான் நாராயணன்' என்பது திருவாய்மொழி மூலம். இதில் 'நல்லருள் நம்பெருமான்' என்கிற முற்பகுதி 'நாராயணன்' என்கிற பிற்பகுதியின் (நாராயணசப்தத்தின்) பொருளைக் கூறுவதாகும். **'नारायण'** என்கிற பதத்தில் இருவகை ஸமாஸங்கள் உள்ளன. **नाराः अयनं-यस्य सः - नारायणः'** என்பது ஒன்று. (பஹுவ்ரீஹி) **'नाराणां अयनं-नारायणः'** என்பது மற்றொன்று (தத்புருஷன்) 'நாரங்கள்' என்றால் 'ஸகல சேதனசேதனங்கள் என்றும்; அயனம் என்றால் — 'இருப்பிடம்' என்றும் பொருள். முதல் ஸமாஸத்தில்—ஸகல சேதனசேதனங்களையும் தனக்கு இருப்பிடமாகக்கொண்டுள்ளவன் (அவைகளில் வஸிப்பவன்) என்று பொருள் கிடைக்கும். புருஷோத்தமனான பகவான், தன்னைக்காட்டிலும் பல்லாயிரமடங்கு, தண்ணியதும், வெறுக்கக்கூடியதுமான - சேதனசேதனங்களில் - அவைகளின் க்ஷேமத்தையே கருதி வஸிப்பது 'வாத்ஸல்யத்தின் காரியமாகும். இரண்டாவது ஸமாஸத்தில் ஸகல சேதனங்கள் - அசேதனங்கள், இவைகளுக்கு இருப்பிடமானவன் - என்று பொருள் கிடைக்கும். அதாவது - அவைகளுள் ப்ரவேசித்து அவைகளைத் தரித்து நிற்பவன் - இவனில்லாவிடில் அவைகள் தரித்து நிற்க முடியாமல் சிதறிப்போய்விடுமென்கை. இவ்விதம் செய்வது அவைகளின் க்ஷேமத்துக்காகவேயாகும். இது ஸ்வாமித்வத்தைக் காரணமாக உடையது. லோகத்துக்கு உடையவன் அதன்பால் வைத்திருக்கும் ஆதரவைக்காட்டும். இதனால் வாத்ஸல்யமும்-ஸ்வாமித்வமும்-நாராயண சப்தத்தின் - அர்த்தமெனப்படும்.

நாராயணன் ஹேயப்ரதிபடமான திருவடிகளை, துபாறு சுடரடியாகையாலே அவித்யாதிகளற்றது. தேஜோமயமான திருவடிகளைத் தொழுதெழென்மனனே. திருநாமோச்சாரணத்தைப் பண்ணி [4] வர்த்தி.

நாராயணசப்தம் [5] தர்மிநிர்தேசம். இஸ்ஸ்வபாவங்களாலே நிரூபித வஸ்துவுக்கு உண்டான குணங்களுக்கு வாசகம், அல்லாத திருநாமங்களாகை. என்மனஸ்ஸுக்கொத்த தோழிமீர்! திருநாமோச்சாரணம் பண்ணவல்லேனோமோ வென்கிறார்.

ஐந்தாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஐந்தாம்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(ஆசிரியத்துறை)

பிறந்த வாறும் வளர்ந்த வாறும் பெரிய பாரதங் கைசெய் தைவர்க்குத்
திறங்கள் காட்டியிட் டுச்செய்து போன மாயங்களும்
நிறந்த னூடு புக்கெனதாவியை நின்று நின்று ருக்கியுண் கின்றவிச்-
சிறந்த வான்சுட ரே! யுன்னை யென்றுகொல்? சேர்வதுவே. (1)

பிறந்தவாற்றில் அத் திருநாமங்களைச் சொல்லித் தரிக்கப்பார்த்தவிடத்து, அது [1] சைதில்யத்தை விளைக்க; தரித்து நின்று திருநாமோச்சாரணம் பண்ணவல்லேனும்படி பண்ணியருளவேணுமென்று சரணம் புக்கார்.

---

[4] वर्धि. [5] தர்மிநிர்தேசம் (धर्मिनिर्देशम्) = இங்கு தர்மம் என்பது பகவானுடைய (ஸ்வரூபத்தைக் காண்பித்துக்கொடுக்கக்கூடிய வாத்ஸல்யம் - ஸ்வாமித்வம் - என்கிற) தன்மைகளைக் குறிப்பது. அவைகளையுடையவன் (பகவான்) தர்மி. அவனைச் சொல்வது என்று பொருள்.

[1] சைதில்யம்—(शैथिल्यम्) தளர்ச்சி - (உறுதிக்குலைவு).

நாக ணைமிசை நம்பி ரான்சர ணேச ரண்நமக் கென்று நாடொறு-
மேக சிந்தைய னய்க்குரு கூர்ச்சட கோபன்மாறன்
ஆக நூற்றவந் தாதி யாயிரத் துள்ளி வையுமோர் பத்தும் வல்லார்
மாக வைகுந்தத் துமகிழ் வெய்துவர் வைகலுமே. (11)

“உயர்வற” என்கிற பாட்டை “நாகணைமிசை நம்பிராமினென் கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

‘நாகணைமிசை நம்பிரான், உயர்வற உயர்நல மென்கிறவன் யாவனொருவன், மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும், உபாயோபேயங்களில் [2] தாரதம்ய முண்டாகையாலே உயர்வற்றிருக்கும்.

உயர்நலமுடையவன் யவனவன், அவனே தனக்கு உபா யோபேயம் என்கிறார்.

“நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்றும் திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய ஆனந்தாதி கல்யாணகுண பரிபூர்ணனை அனந்தசாயித்வம் ஸர் வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமாகையாலே, அவனே சரண்ய னென்கிறது. நமக்கும் திருவனந்தாழ்வானுடைய புருஷகாரஞ் சொல்லுகிறது.

இவனுடைய [3] உபாயபாவத்தில் புருஷகாரமாகவல்லார்-அவள் பரிகரத்திலுள்ளாராகையிறே. படுக்கை கிடப்பது அந்தப்புரத்திலேயிறே.

நம்பிரான் = மயர்வற மதிநலமருளுகையாலே - நம்பிரான். நமக்குபகாரகன். ஆச்ரிதவிஷயத்தில் உபகாரசீலனனவன்-

மதிநலமருளினவன், யவனவன் “சரணே சரண் நமக் கென்று [4] அவதாரணத்தாலே [5] உபாயநைரபேக்ஷயஞ் சொல் லுகிறது.

---

[2] तारतम्यम् = ஏற்றத்தாழ்வு — [3] उपायभावम्—உபாயமாகுகை.
[4] अवधारणम् = தேற்றம்.
[5] उपायनैरपेक्ष्यम् — மற்ற உபாயங்களின் அவசியமில்லாமை.

ஸாம்ஸாரிகஸ்வபாவங்கள் மேலிட்டு விபரீதமே பலியா நின்றாலும் அப்படியே [6] அடிக்கழிவு சொல்லுவார் ஒருவரல்லரே இவர்.

இதொழிய வேறொன்றில் கால்தாழாதொழிகை [7] மஹா விச்வாஸமாகிறது. இத்தால் [8] ஏகபதத்திலர்த்தஞ் சொல்லித்து.

பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே "நாடொறு மேக சிந்தையனாய்:- மதிநலத்தால் வந்த [9] த்ருடாத்யவஸாயம், புறம்புண்டான சிந்தனைபோய் இவ்விஷயத்திலே ஏகாகாரமனோரத முடையராய்.

அர்த்தார்ஜனம் பண்ணப்போவார், ஒரு [10] சிராயை விச்வஸித்து நாலாண்டு பத்தாண்டு கடலிலே இழியாநின்றார்களிறே. இப்பேற்றின் சீர்மையைப் பார்த்தால் இவ்வளவாகிலும் வேண்டாவோ.

இவ்விஷயத்திலே ஸம்ஸார ஸ்வபாவத்தாலே, வ்யஸனபரம்பரைகள் வந்தாலும் [11] வ்யவஸாயங் குலையாமே போருமதிறே ஸ்வரூபமாவது.

யவன் - குருகூர்ச்சடகோபன் மாறன் - அதுக்கெல்லாத் துக்குமடியான பிறப்பிருக்கிறபடி.

அவன் அயர்வறுமமரர்களதிபதி - உபாயாந்தர மறியாத நித்யஸூரிகளுக்குத் தானே ஸர்வவித போக்யமுமானவன் விஷயமாக "நூற்றவந்தாதி = தாமுளராகைக்காகச் சொன்ன அந்தாதி.

ஆயிரத்திலும் இப்பத்தை அப்யஸிக்க வல்லவர்கள் = மாக வைகுந்தத்து = மஹாகாசமென்று பேரையுடைய ஸ்ரீவைகுண்டத்திலே.

---

6 அடிக்கழிவு — முறைக்கேடு. 7 மஹாவிச்வாஸம் (**महाविश्वासम्**) —தளராத நம்பிக்கை. 8 ஏகபதம்— **एकपदम् - मामेकं** — என்கிற விடத்திலுள்ள **एकम्** என்கிற பதம். அதன் பொருள் தேற்றம்
9 த்ருடாத்யவஸாயம் (**दृढाध्यवसायम्**) — உறுதியான தீர்மானம்
10 சிராய் —மரத்துண்டு (கப்பல்)
11 வ்யவஸாயம் (**व्यवसायः**) தளிவான அறிவு (**निश्चय**). ‖

"வைகலும் மகிழ்வெய்துவர்" அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிஸேவ்யனானவன் துயரறு சுடரடிதொழுதெழென் மனனே.

வைகலும் மகிழ்வெய்துவரே - ஹேயப்ரதிபடமான, நிரவதிக தேஜோரூபமாய், ப்ராப்யப்ராபகமுமான திருவடிகளைக் காலதத்வமுள்ளதனையும், நித்யானுபவம் பண்ணி [12] யாவதாத்மபாவிவாழலாம் என்மனமே தொழுதெழு.

அனுஸந்தானத்துக்கு [13] விச்சேதம் வாராதபடி, பண்ணியருளவேணுமென்று ப்ரார்த்திக்கவேண்டும்படியான ஸம்ஸாரத்தைவிட்டு, பகவதனுபவத்துக்கு விச்சேதமொருநாளுமில்லாத பரமபதத்திலே புக்கு அனுபவிக்கப்பெறுவர்.

மாவென்று, மஹத்தை, [14] கம், என்று ஆகாசம். ஆக, மாக வைகுந்தத்து மகிழ்வெய்துவர் வைகலுமே.

ஐந்தாம்பத்து பத்தாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[12] யாவதாத்மபாவி (यावदात्मभावि)—ஆத்மா உள்ளளவும் உள்ளது. [13] விச்சேதம் (विच्छेदः)–அறுதல் [14] (खम्) ஆகாயம்

ஸ்ரீ:

ஆரும்பத்து முதல்திருவாய்மொழி விவரணம்

முதற் பாட்டு—(கலிநிலைத்துறை)

வைகல் பூங்கழி வாய்வந்து மேயுங் குருகினங்காள்!
செய்கோள் செந்நே லுயர்திரு வண்வண் டூருறையுங்-
கைகோள் சக்கரத் தென்கனி வாய்ப்பெரு மானைக்கண்டு-
கைகள் கூப்பிச்சோல் லீர்வினை யாட்டியேன்
[காதன்மையே. (I)

வைகல்பூங்கழிவாயில் இப்படிச் சரணம்புக்க விடத்திலும் வந்து முகங்காட்டாமையாலே, திருவண்வண்டூரில் ஸம்ருத்தியிலே அகப்பட்டு, நம்மை மறந்தானத்தனை ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்குமவன். ஆகையாலே நம் [1] ஆர்த்தியை அறிவிக்க, வரும். ஆனபின்பு அங்கே என் [2] தசையை அறிவியுங்கோளென்று தூதுவிட்டார்.

காதன் மேன்படை யோடுடன் மேயுங் கருநாராய்!
வேத வேள்வி யொலிமுழங் குந்தண் டிருவண்வண்டூர்-
நாதன் ஞாலமேல் லாமுண்ட நம்பெரு மானைக்கண்டு-
பாதங் கைதொழு துபணி யீரடி யேன்றிறமே. (2)

"உயர்வற என்கிற பாட்டைக் "காதல் மென்பெடை" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற - மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும், தம்பதிகளுக்குக் காதல்கள் ஏற்றமும் குறைச்சலுமாயாய்த் திருப்பது. உயர்நலமுடையவன் யவனிடத்தில் காமம் அளவிறந்திருக்குமிறே.

அப்படியே 'காதல் மென்பெடையோடுடன் மேயுங்கருநாராய்! "ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷித்தவனுக்கு என் ஆர்த்தி

---

[1] ஆர்த்தி (आर्ति) — துன்பம். [2] தசை (दशा) நிலைமை.

யையறிவிக்க, வரும். அறிவி' என்று ஒரு நாரையை இரக்கிருள்.

காதல் மென்பெடையோடு - முன்பு போகவிட்டவர்கள் கொண்டுவருகிறுர்களென்று ஆறியிருக்கலாம் விஷயமன்றே. [3] அங்ஙனேயாமன்று முன்பு பண்ணின ப்ரபத்தியே அமையுமே

உடன்மேயும் [4] "ஊர்த்தவம் மாஸாந் நஜீவிஷ்யே" என்றிலன். [5] "நஜீவேயம்க்ஷணமபி" என்பாருமுண்டாகாதே, ஸர்வஜ்ஞரோடே கலவாதொழியும்படியான பாக்யத்தைப் பண்ணுவதே நீங்கள்.

பின்பு கூடுகை தவிராதாகில், பிரிந்தாலென்செய்யவேணுமென்றிருப்பார்களிறே அவர்கள். அத்தனைகாரியப்பாடில்லையிறே இவற்றுக்கு.

மென்பெடையோடு - கலக்கவும் பொருத [6] மார்தவத்தையுடைத்தாயிருக்கை.

'உடன்மேயுங்கருநாராய் - பிரியில் தரியாதாய்க் கூடத்திரியுமத்தனை. உயர்நலமுடையவன் யவன் [7] இதம் மேத்யம், இதம்ஸ்வாது, என்கிறபடியேகாணும் இவை திரிகிறது.

பேடையின் நினைவறிந்து புஜிப்பிக்கும் சேவலுமுண்டாகாதே. தன் [8] ஆர்த்தத்வனி செவிப்பட்டால் அவற்றுக்கு மிடற்றுக்குக் கீழ் இழியாதென்றிருக்கிருள்.

கருநாராய்! பிரியாதார்க்குடம்புவேளாதே, மிகவும் நிறவாதோ. தன்னுடம்பு விவர்ணமானபடியைக் காட்டுகிருள்.

---

[3] அங்ஙனேயாமன்று—அப்படியாயின். [4] ஊர்த்வம் மாஸாந் நஜீவிஷ்யே (ऊर्ध्वंमासान्नजीविष्ये) — ஒருமாதத்திற்குமேல் உயிர்தரியேன். [5] நஜீவேயம்க்ஷணமபி (नजीवेयं क्षणमपि) — ஒரு நிமிஷமும் பிழைத்திரேன்.

[6] மார்தவம் (मार्दवम्)—மென்மை. [7] இதம்மேத்யம் இதம்ஸ்வாது:- इदम् मेध्यम् — இது சுத்தமானது. इदंस्वादु — இது இனிப்பாயிருக்கும். [8] ஆர்த்தத்வனி (आर्तध्वनि) — கூக்குரல்.

அவன் பிரிவுக்கு [9] ஹேதுவெதென்ன - மயர்வற மதிநல மருளி - தத்வ்யதிரிக்தங்களில் நெஞ்சு செல்லாதே, பக்திரூபா பன்னஜ்ஞானத்தாலே காதலை விளைத்தவன் அகன்ருன். நான் [10] விச்லேஷாஸஹையானேன். என்ன;

இப்படியுன்னைவிட்டெங்ஙனே போனுனென்ன = அவன் போயிருந்தவிடஞ்சொல்லுகிருள். 'வேதவேள்வியொலி முழங்குந் தண் திருவண்வண்டூர், வேதகோஷமும் [11] வைதிகக்ரியாகோஷமும் கண்டு, தன் நாயகன் கால்தாழ்ந்து வாராதிருக்கிறது. உங்களுக் கறிவிக்கையிறே வேண்டுவது.

தானயஜ்ஞவிவாஹஸ்தலங்களிலேயிறே அது [12] ஸாங்கமாகைக்காக எழுந்தருளியிருப்பது [13] "ஸமாஜேஷு மஹத்ஸுச" [14] தீர்க்கஸத்ராதிகளிலே இருப்பர்.

[15] "ந த்ரக்ஷ்யாம: புனர்ஜாது" அவரையவ்வோர் இடங்களிலே காணலாம். தார்மிகம் ராமமந்த்ரா - இத்யாதிப்படியே கண்டுகொள்வது.

அயர்வறுமமரர்களதிபதியவனவன் திருவண்வண்டூர் நாதன் - ஸ்ரீவைகுண்டநாதனிற்காட்டிலுண்டான ஏற்றஞ் சொல்லுகிறது. இவ்விடம் எளியாரை வலியாரடிக்க அயர்வறுமமர்களதிபதியாய்க் கோயில்ச்சாந்து பூசியிருக்குமது ஓரேற்றமோ? அன்றிறே.

---

[9] ஹேதுவெதென்ன — காரணம் யாதென்ன.
[10] விச்லேஷாஸஹை (विश्लेषासहै) — பிரிவைப் பொறுக்கமாட்டாதவள். [11] वैदिकक्रिया — வேதத்தில் சொல்லப்பட்ட சடங்குகள்.
[12] ஸாங்கமாகை — பூர்ணமாகை-பகவான் அவைகளை ஏற்றுக்கொள்வதிலேயே அவை பூரணமாகின்றன - என்கை.
[13] समाजेषु महत्सुच—பெரிய புலவர்களுடைய கூட்டத்தில் (பகவான் ஸர்வகாலமும் இருந்துவருவார்)
[14] दीर्घसत्र — பலவருஷங்களில் செய்துமுடிக்கவேண்டியதும், அனேகம் யஜமானர்களைக் கொண்டதுமான ஓர் யாகம்.
[15] नद्रक्ष्यामः पुनर्जातु धार्मिकं राममन्तरा — மேற்சொன்ன பெரிய ஸபைகள் போன்ற விடங்களில் தர்மசிலனுன ராமனை (முன்போல்) மீண்டும் ஒருக்கால் காணும் பாக்யம் பெறுவோமல்லோம். (அயோத்யையில் வாஸம்பண்ணுபவர்கள் சொல்வது)

ஞாலமெல்லாம் உண்ட அந்த [16] ஆபத்ஸகனிறே தளர்ந்தார் [17] தாவளமான நம்பெருமாளைக்கண்டு, துயராறு சுடரடி தொழுது எழுந்து 'பாதங்கள்மேலணிபூந்தொழ, என்றும் பாதங்கை தொழுது பணியீர்.

ஹேயப்ரதிபடமான சுடரடிகள், ஆச்ரிதரைக்கண்டால் நிரவதிக தேஜோமயமான திருவடிகளைக் கைகளாலாத் தொழுதெழு என்மனனே.

தொழுதார்க்கு நிற்க வொண்ணாது - தெண்டனிடு. உண்ணுநிற்க, மிடற்றைப் பிடிப்பாரைப்போலே யாகாமே திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பியாய். 'பாதங்கைதொழுது பணியீரடியேன் திறமே. [18] கடகரை உபசரித்துச் சொல்லவேணுமிறே.

'அடியேன் = உங்களைக்கொண்டு அழைப்பித்துக் கொள்ளவிருக்கிற அவனுக்கன்று. அவனால் வந்த இழவு பரிகரிக்கிற உங்களுக்கு அடியேன். நித்யம் [19] யதீயசரணௌ சரணம் மதீயம் என்கிறபடியே.

அடியேன் திறமே = என்திறஞ் சொல்லில், ஒரு மகாபாரதத்துக்குண்டு. திருவுள்ளமானபடி செய்யுங்கோளென்கிறாள்

ஆறும்பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆபத்ஸகன் = [16] ஆபத்காலத்தில் உதவி செய்பவன்' [17] தாவளம்:- ரக்ஷகன். [18] घटकर — நாயகனோடு நாயகியைச் சேர்த்து வைப்பவர் (இங்கு சேதனனை - பகவானிடம் சேர்ப்பிக்கும் ஆசாரியர்). [19] எனக்கு ஸர்வகாலமும் (மகாபக்தரான) நாதமுனிகளின் திருவடிகளே புகலிடம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(ஆசிரியத்துறை)

மின்னி டைமட வார்கள் நின்னருள் சூடு வார்முன்பு நான [தஞ்சுவன்-
மன்னு டையிலங் கைய ரண்காய்ந்த மாயவனே!
உன்னு டையசுண் டாயம் நானறி வனி னியது கோண்டு [செய்வதேன்?
என்னு டையபந் துங்கழ லுந்தந்து போகுநம்பீ! (1)

மின்னிடை மடவாரில் இவள் விட்ட ஆள் சென்று அத்தலைப்பட்டு அறிவித்து அவனும் வாரா நிற்க, அவ்வளவு பற்றாதே துடித்துஅலமர்க்க, அவன் வரவை நிச்சயித்து, கீழ்பட்ட கிலேசத்தாலே, 'இனி அவன்வந்தாலும் அவனோடே ஸம்ச்லேஷிப்போமல்லோம், விச்லேஷித்து முடியுமித்தனை' என்று முகமாறி வைத்திருக்க, அவனும் தன்னழகையுஞ் செல்லாமையையுங் காட்டி ஊடலைத் துறந்து அவர்களுடனே ஸம்ச்லேஷித்தபடியை அருளிச்செய்தார்.

உக்வை யால்நெஞ்ச முள்ளு ருகியுன் தாம ரைத்தடங் கண்- [விழிகளின்-
அகவ லைப்படுப் பானழித் தாயுன் திருவடியால்-
தகவு செய்திலை யெங்கள் சிற்றிலும் யாம டுசிறு சோறுங் கண்டுநின்-
முகவோ ளிதிக ழமுறு வல்செய்து நின்றிலையே. (9)

"உயர்வற" என்கிற பாட்டை "உகவையால் நெஞ்சமென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

உயர்வற உகவையால்-மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும், ஸாதன பலங்களாலே உயர்த்தியற் றிருப்பார்கள்.

உயர்நலமுடையவனிடத்தில் உகவை அளவிறந்திருக்கும். அவர்களுகவை அல்பமாகையாலே துக்கமேயாயிருக்கும். உன்னிடத்திலுகவை "அப்ராப்ய மனஸா ஸஹ" என்று அளவிடவொண்

ணாத ஸுகமேயாயிருக்கும். ஆகையாலே 'உகவையால் நெஞ்ச முள்ளுருகுகிறது. 'வாராய் உன் ப்ரவ்ருத்தி வ்யர்த்தங்காண். பிரித்து நெஞ்சைப் புண்படுத்துகையால் வந்த உருகுதலொழிய நீ பண்ணவிறே பார்த்தது. அது செய்யப்போகாது என்ன;

அதேதென்ன; உன் தாமரைத் தடங்கண்விழிகள், மயர்வற மதிநலமருளி, கருணாம்ருதவ்ருஷ்டிகளாலே பிறந்த பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே உகவையால் நெஞ்சம் உள்ளுருகப்பண்ணி உன் அகவலைப்படுத்தாய்.

தாமரைபோலே பரிமளம் செவ்வி குளிர்த்திகளை உடைத்தாய், [1] போக்தாக்களாலே [2] உண்டறுக்கவொண்ணாத போக்யதாப்ரகர்ஷத்தையுடைய திருக்கண்களில் நோக்காகிற வலையுளே அகப்படுத்தி, கண்ணியிலே அகப்பட்டால் [3] ஜ்வரஸன்னிபதிதரைப்போலே பிதற்றுமித்தனையிறே.

இனியகப்பட்டபின்பு செய்வதென்னென்ன;

அயர்வறுமமரர்களதிபதியாய் இருந்து வைத்து "தகவு செய்திலை" என்ன;

தகாததென்னென்ன;

[4] அரதிகந்தரஹிதராய் நித்யானந்தமக்னரான ஸூரிஸேவ்யனான உன்னுடைய துயரறுசுடரடியாயிருக்கிற திருவடிகளாலே அழித்தாய். துக்ககந்தரஹிதமாய் போக்யமே தேஜஸ்ஸான திருவடிகளாலே அழித்தாயென்ன;

எத்தையழித்தோமென்ன;

'எங்கள் சிற்றிலும் யாமடு சிறுசொறுங் கண்டு நின்முகவொளி திகழ முறுவல் செய்து நின்றிலையே. அழித்தாயுன் திருவடியால், [5] ஸங்கல்பத்தால் அழிக்கலாவது உன் சிற்றிலிறே. இவர்களுடைய சிற்றில் ஸ்பர்சித்து அழிக்கவேணுமே.

---

[1] भोक्ता = உண்பவர் - அனுபவிப்பவர். [2] உண்டறுத்தல் = உண்டு ஜீரணம் செய்துகொள்ளுதல் - இங்கு, அனுபவித்து எல்லைகாணுதல். [3] ज्वरसन्निपतितर् = ஜ்வரம் மிகுந்து ஜன்னி (தோஷம்) யில் அகப்பட்டவர். [4] अरतिगन्धरहितराय् = கொஞ்சங்கூட பிரிவைப்பறியாத. [5] सङ्कल्पः = எண்ணம்.

[6] ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. சேஷபூதனுக்குத் திருவடிகள் உத்தேச்யமானவோபாதி [7] ப்ரணயினிகளுக்கும் திருவடிகள் உத்தேச்யமாயிறே இருப்பது.

வெறுஞ் சிற்றிலேயன்று காண் நீ யழித்தது. எங்கள் அகவாயையு மழித்தாய் காண். காலாலே எங்கள் சிற்றிலை அழித்துக் கண்ணாலே எங்கள் [8] அபிஸந்தியைக் குலைத்தாய்.

உன் ஸ்ருஷ்டியைப்போலே நெருப்பும் நீருமா யன்றுகாண் எங்கள் சிற்றில். 'வண்டல் நுண்மணல் தெள்ளி யாம் வளைக்கைகளால் சிரமப்பட்டோம். [9] உபாதேயதமம் எங்கள் சிற்றில். உன்னுடைய ஸ்ருஷ்டி [10] அனுபாதேயம்.

யாமடு சிறு சோறுங்கண்டு, நீ அடுகிற சிறுசோறு நிர்மால்யத்தோபாதி புறம்புள்ளார்க்கு ஆகாது, நீயே புஜிக்குமத்தனை. யாமடு சிறுசோறு, மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து உண்ணும் சோறு.

'கண்டு நின் முகவொளி திகழ முறுவல் செய்து நின்றிலையே' கண்படைத்த ப்ரயோசனம் இவற்றைப் பார்த்து ப்ரீதி [11] ப்ரேரிதனாய் [12] "ப்ரஸன்னாதித்யவர்சஸம்" என்கிற முகவொளி திகழும் முறுவல் மந்தஸ்மிதம் பண்ணி நின்றிலையே.

அழித்தாயென்று [13] இன்னாப்பன்றி உகந்து அணைந்து கொண்டு சொல்லுகிறாள்.

ஆறும்பத்து இரண்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[6] जगदुपसंहारम् = உலகை அழித்தல். [7] प्रणयिनी = காதலி. [8] अभिसन्धि = திடமான எண்ணம். [9] उपादेयतमम् = நன்றாய் ஏற்கக் கூடியது. [10] अनुपादेयम्—ஏற்கக்கூடாதது. [11] प्रेरितः—தூண்டப் பட்டவன். [12] प्रसन्नादित्यवर्चसम् = நிர்மலமான சூரியனுடையது போன்ற ப்ரகாசத்தை (ஒளியை) யுடையவர். [13] இன்னாப்பு = துக்கம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு— (கலிநிலைத்துறை)

நல்குர வுஞ்செல் வும்நர குஞ்சு வர்க்கமுமாய்-
வெல்பகை யும்நட் பும்விட மும்ம முதமுமாய்ப்-
பல்வகை யும்பரந் தபெரு மானென்னை யாள்வானைச்-
செல்வ மல்கு குடித்திரு விண்ணகர்க் கண்டேனே. (1)

நல்குரவில் [1] ப்ரணயரோஷத்தாலே கிட்டோமென்றிருந்த தம்மைப் பொருந்தப்பண்ணின [2] வைசித்ரியத்தாலே [3] விருத்த விபூதியுக்தனனபடியை அனுஸந்தித்தார்.

பரஞ்சு டருடம் பாயழுக் குப்பதித் தஉடம்பாய்க்-
கரந்துந் தோன்றியும் நின்றுங்கை தவங்கள் செய்தும் - விண்ணோர்
சிரங்க ளால்வணங் குந்திரு விண்ணகர்ச் சேர்ந்தபிரான்-
வரங்கொள் பாதமல் லாலில்லை யாவர்க்கும் வன்சரணே. (7)

"உயர்வற" என்கிற பாட்டைப் "பரஞ்சுடருடம்" பென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

உயர்வற உயர்நலமுடையவன் யவனவன், உயர்வற பரஞ் சுடருடம்பாய் அழுக்குப் பதித்த உடம்பாய்; உயர்வற அழுக்குப்

---

[1] प्रणयरोष = அன்பினால் (காதலால்) வந்த ஊடல்.
[2] वैचित्र्यम् = ஆச்சரியப்படும்படியான தன்மை.
[3] विरुद्धविभूतियुक्तन्–ஒன்றுக்கொன்று நேர் எதிரியான பலவஸ்துக் களுக்கும் ஆத்மாவாய், அவைகளினுள்ளே அனுப்ரவேசம் பண்ணி, அவைகளின் காரியங்களைச் செய்வித்துக்கொண்டிருப் பவன். நெருப்பு சுடுகிறது. நீர் குளிர்ச்சியைத் தருகிறது. இவை இரண்டும் கடவுளின் அனுப்ரவேசத்தாலே தன் வேலை யைச் செய்கின்றன. அவர் ஒருவரே ஒன்றுக்கொன்று எதிர் தட் டான பல பொருள்களுள் புகுந்து, தன் அற்புதமான சக்தியால் இவ்வாறு செய்விக்கிறார்.

பதித்த உடம்பாய், உயர்நலமாவது பரஞ்சுடருடம்பாய். ஆக உயர்வற உயர்நலமுடையவனென்றபடி. பரஞ்சுடருடம்பாவது [4] சுத்த ஸத்வமான [5] அஸாதாரண திவ்யவிக்ரஹத்தையுடையனாய், [6] தேஜஸாம்ராசி மூர்ஜிதம், என்றபடி.

அழுக்குப்பதித்த உடம்பாய் [7] குணத்ரயவச்யமான [8] ஜகச்சரீரனாய் நின்றபடி.

நீர்இதறிந்தபடி என்னென்ன; மயர்வற மதிநல மருளினன் யவனவன், அவித்யாதிகளை அறுத்து பக்திரூபாபன்னஜ்ஞானத்தை நிர்ஹேதுகமாக அருளியவன் தானே தன்னைக்காட்டக் கண்டேன்.

யவனவன் அழுக்குப்படிந்த உடம்பிலே காந்தும், பரஞ்சுடருடம்பிலே தோன்றியும், 'நின்றும், இவற்றுக்கு அந்தராத்மாவாய் புக்கு நின்றும்.

இப்படி நிற்கச்செய்தே [9] "யமாத்மாநவேத" என்று இவற்றுக்குத் தோன்றாதபடி நின்று இவற்றின் ஸத்தையை நோக்கியும்.

யவனவன் = காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து இருப்பார்க்குக் காணலாம்படி, ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணியும், நாறுண்டு பதினோராயிரமாண்டு நின்றும்.

அவ்விடங்களிலே கைதவம் செய்தும் [10] க்ருத்ரிமத்தைப் பண்ணியும், அதாவது அவதரித்து நிற்கச்செய்தே தன்படிகள்

---

[4] शुद्धसत्व = ரஜஸ் - தமஸ், இவை கலக்காத ஸத்வகுணமாத்ரமான த்ரவ்யம். [5] असाधारण — தனக்கே உரியது.

[6] तेजसाँराशिमूर्जितम् = பலம் பொருந்திய தேஜஸ்ஸுக்களின் கூட்டம்போன்ற.

[7] गुणत्रयवश्यम् — ஸத்வம் - ரஜஸ் - தமஸ் - ஆகிய மூன்று குணங்களாலானது. [8] जगच्छरीरन्—உலகையுடம்பாய்க் கொண்டவன்.

[9] यमात्मा नवेद· आत्मा = ஜீவாத்மா - यं = தனக்குள்ளே புகுந்து, தன்னைப் புண்யபாபபலங்களை அனுபவிக்கும்படி பண்ணுகிறவனை பகவானை - नवेद् - மேற்கூறிய விதமாக அறிந்துகொள்ளச் சக்தியற்றிருக்கிறானே. [10] कृत्रिमम् — வஞ்சகம்.

சிசுபாலாதிகளுக்குத் தோற்றுதபடி பண்ணியும், ஆச்ரிதர்க்குத் தோற்றியுமிப்படி இருக்குமவன்.

யவனவன், அயர்வறு மமரர்க ளதிபதி = ராஜஸதாமஸ ரஹிதரான நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவனை, 'விண்ணோர் சிரங்களால் வணங்கும், பிரம்மாதிகள், தலைபடைத்த ப்ரயோஜனம் பெற்றோமென்று வணங்கும்படியும்.

ஸௌசீல்யாதிகளும், ஸௌலப்யாதி குணங்களும் கண்டு அனுபவிக்க, அயர்வறு மமரர்களும் வணங்கும்படி, திருவின்ணகரிலே வந்து நிற்கிற உபகாரகன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

'பிரான்' உபாயாந்தரங்களிலே புகலறுத்து, உபேயாந்தரங்களை விஸ்மரித்துத் தானே உபாயோபேயமான ரக்ஷணங்களை ப்ரகாசியாநின்ற சுடரடி. 'வரங்கொள் பாதமல்லா லில்லை யாவர்க்கும் வன்சரணே'=தொழுதெழென் மனனே. அனேககாலமெல்லாம் [11] அஸேவ்யஸேவ்யனாய்ப் போந்த நீ, ஸேவ்யன் பக்கலிலே ஸேவியாய்.

வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன் சரண் = எத்தனையேனுந் தண்ணியாரும் கிட்டலாம்படி சிரேஷ்டமான திருவடிகளல்லது. 'யாவர்க்கும்' எத்தனையேனுந் தண்ணியாருக்கும். பிரம்மாதிகள், ஸனகாதிகள் முமுக்ஷுக்கள், முக்தர், நித்யர் முதலானாருக்கும்.

அதிலும் பக்தருக்கு [12] முற்பாடனாய் வந்து புகுகைக்கு வலிய புகலில்லை. அவனையொழிந்த [13] சரண்யரடங்கலும் இவனைக்கொண்டு ஸம்ஸாரத்திலே முழுக்குகிறபேர்.

இவனைக்கொண்டு கரையேற்றவல்ல வலிய புகல், யவனவன் திருவடிக ளல்லதில்லை. அடியேபிடித்து ஜீவிக்கில், ஜீவிக்கு

---

[11] असेव्यसेव्यन् = இது பஹுவ்ரீஹி ஸமாஸம் - ஸேவிக்கத் தகாதவர்களை ஸேவிக்கவேண்டியவர்களாகக் கொண்டிருந்த நீ என்கை. [12] முற்பாடனாய் = முந்தினவனாய். [13] — அவனை யொழிந்த சரண்யரடங்கலும் = அவனைத்தவிற மற்றரக்ஷகர்கள் எல்லோரும்

மத்தனையாகையாலே, சூடரடி தொழுதெழென் மனனே என்கிறார்.

ஆறும்பத்து மூன்றும் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்.

முதற்பாட்டு (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

குரவை யாய்ச்சிய ரோடு கோத்ததுங் குன்றமோன் றேந்தியதும்-
உரவு நீர்ப்பொய்கை நாகங் காய்ந்தது முட்பட மற்றும்பல-
அரவிற் பள்ளிப் பிரான்றன் மாய வினைகளை யேயலற்றி-
இரவு நன்ப கலுந்த விர்கில னேன்ன குறையெனக்கே? (1)

"குரவையாய்ச்சியரில்" 'கிட்டியனுபவிக்கப் பெற்றிலோ' மென்கிற இழவுதீரக் கிருஷ்ணகுணசேஷ்டிதங்களைக் கிட்டித் தரித்து அனுபவிக்கப்பெற்றேனென்று உகக்கிறார்.

மண்மி சைப்பெரும் பாரம் நீங்கவோர் பாரத மாபெரும்போர்
பண்ணி மாயங்கள் செய்து சேனையைப் பாழ்பட நூற்றிட்டுப்போய்
விண்மி சைத்தன தாம மேபுக மேவிய சோதிதன்றாள்
நண்ணி நான்வணங் கப்பெற் றேனெனக் கார்பிறர் நாயகரே? (10)

"உயர்வற" என்கிற பாட்டை "மண்மிசைப் பெரும்பாரம் நீங்க" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

உயர்வற மனுஷ்யானந்தத்தில் [1] அஹங்கார [2] மமகாரங்களாலும், காமக்குரோதங்களாலு மிகுத்த பாரம்பொறாமல்' பூமிப்பிராட்டி ஸர்வேச்வரனுக்கு விண்ணப்பஞ் செய்ய,

---

[1] அகங்காரம் (अहङ्कारम्) — 'நான்' என்பது. [2] மமகாரம் (ममकारम्) — 'என்னுடையது' என்பது.

[3] பூபாராவதரணார்த்தமாக அவதரித்து, மண்மிசைப்பெரும் பாரம் நீங்க, 'விச்வம்பரை' என்றும், 'க்ஷமை' 'புறை' என்றும், பேரை உடைத்தாய், பரிக்கக்கடவளான பூமியாலும் பொறுக்க வொண்ணாதபடியிறே [4] துர்வர்க்கம் திரண்டபடி.

த்ரிபாத் விபூதியில் "யத்ரபூர்வேஸாத்யா:" என்கிற பூர்வ ஸாத்ய ராதனத்தா ருண்டாயிருக்கச் செய்தேயும் பாரமில்லை யிறே. அகங்காரஸ்பர்ச முடையா ரில்லாமையாலே. தங்கள் பரத்தை அவன் பக்கலிலே வைத்திருக்குமவர்களிறே அவர்கள். இப்படி உயர்வற உயர் நலமுடையவன் யவனவன், அவன் ஆனந்தாதி கல்யாணகுணங்களுக்கு அடியான அபராதஸஹனனவன்.

ஓர் பாரதமாய்ப் பெரும்போர் பண்ணி [5] அத்விதீயமான மஹாபாரதமாகிற மஹாயுத்தத்திலே, அர்ஜுனன் [6] பந்துவதம் ஆகாதென்று வில்லை விழவிட்டுச் சோகிக்க; அவன் சோகமாகிற மயர்வு அற, மதிநல மருளினன்.

அதாவது பகவத்கீதை பதினெட்டத்யாயத்தில், தர்மாதர்மங்களை யருளிச்செய்து, சோகநிவ்ருத்தியைப் பண்ணி, யுத்தத்திலே மூட்டி;

'மாயங்கள் செய்து' பகலை இரவாக்குவது; "ஆயுதமெடேனென்று" ஆயுதமெடுப்பது; எதிரியுடைய மர்மத்தைக் காட்டிக் கொடுப்பது; அவற்றைச் செய்து, மயர்வற மதிநல மருளினன்.

மாயங்களாவன [7] மாயா வயுநம் ஜ்ஞானம் - பிறப்பித்த பின்பு" 'சேனையைப் பாழ்பட தூற்றிட்டுப்போய், சேனையை வெறுந்தரையாம்படி மந்திரித்து முடித்திட்டுப்போய்.

---

[3] भूभारावतरणम् = பூமியின் பாரத்தைப் போக்குதல்.

[4] துர்வர்க்கம் (दुर्वर्गम्) = துஷ்டர்களின் கூட்டம். [5] அத்விதீயம் (अद्वितीयम्) = இணையற்றது. [6] பந்துவதம் (बन्धुवधम्) = உறவினரைக்கொல்வது. [7] மாயா - வயுனம்-ஜ்ஞானம் (मायावयुनम् ज्ञानम्) = இவைகள் "அறிவு" எனப் பொருள்படும்.

'விண் மிசைத் தனதாமமே புக' அயர்வறு மமரர்கள் எதிர் கொள்ள அந்தமில்பேரின்பத்து அடியரோடு இருந்தது.

ப்ரதிகூலரை நிரஸித்ததற்கு மேலே, அவர்களிருந்த இடத்திலிராதே, பரமபதத்தே போய்ப் புகப்பெற்றபடியே யென்று உகக்கிறர்.

'மேவிய சோதிதன் தாள் நண்ணி நான் வணங்கப் பெற்றேன். துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

க்ருஷ்ணனுடைய துயரறு சுடரடி, ஆச்ரிதர் கார்யந் தலைக் கட்டுகையாலே துயரற்று, வீரஸ்ரீயாலே தேஜோரூபமாய் விளங்காநின்றுள்ள திருவடிகள்.

அதுக்கு மேலே நித்யர் முக்தர் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே என்றிருந்த இடத்திலே நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கார் பிறர் நாயகரே?

8 "க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யாம் ப்ருதுலோசன:- மோஹயித்வா ஜகத்ஸர்வம் — என்கிறபடியே ப்ரதிகூலரை யடங்கலும் உளவுகோலாலே விழவிட்டு, அநுகூலரை யடங்கலும் கண்ணாலே விழவிட்டுப் போனன்.

9 "கத: ஸ்வஸ்தான முத்தமம்" 'நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கார் பிறர்நாயகரே? எனக்கு ஆர்தான் நிகர் என்கிறர்.

ஆறும்பத்து நான்காம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

8 कृत्वा भारावतरणम् पृथिव्यां पृथुलोचनः - मोहयित्वा जगत्सर्वम् — அகன்ற கண்களையுடைய கண்ணன் பூமியின் பாரத்தைப்போக்கி. இவ்வுலகிலுள்ளா ரெல்லோரையும் மோஹமடையும்படி பண்ணி.

9 गतः स्वस्थानमुत्तमम् — உயர்ந்ததான பரமபதம் என்று சொல்லப்பட்ட தன்னுடைச்சோதியை யடைந்தான்.

ஸ்ரீ:

ஆரும்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்).

துவளின் மாமணி மாட மோங்கு துலைவில் லிமங்க லந்தொழு-
மிவளை நீரினி யன்னை மீருமக் காசை யில்லை விடுமினோ-
தவள வோண்சங்கு சக்கர மென்றுந் தாம ரைத்தடங் கணென்றுங்
குவளை யோண்மலர்க் கண்க ணீர்மல்க நின்று நின்று குமுறுமே. (1)

'துவளில் மாமணி'யில் ப்ரீதி கலங்கி, 'பொய்நின்றஞான'ந் தொடங்கி இவ்வளவும்வர தமக்கு பகவத் விஷயத்திலுண்டான [1] அதிப்ராவண்யத்தைச் சொல்லுகிறதாகையாலே [2] தம் படியை அருளிச்செய்கிறார்.

பின்னை கோல்? நில மாம கள்கோல்? திரும கள்கோல்?
[பிறந்திட்டாள்-
என்ன மாயங்கோ லோ? வி வள்நெடு மாலென் றேநின்று கூவுமால்
முன்னி வந்தவன் நின்றி ருந்துறை யுந்தொ லைவில்லி மங்கலஞ்-
சென்னி யால்வணங் குமவ் வூர்த்திரு நாமங் கேட்பது
[சிந்தையே- (10)

"உயர்வற, என்கிற பாட்டைப் பின்னைகொல் என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

உயர்வு, மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் பகவத்வ்யதிரிக்தகாமங்களில் [3] ப்ரேமபரவசராய் இந்த லீலா விபூதியில் உயர்வுந் தாழ்வுமா யற்றுப்போக; இவளுக்கு உயர்நல முடையவன் யவன், அவனுலல்லது செல்லாத ப்ராவண்யாதிசயத்தைக் கண்டு, 'பிராட்டிமாரிலே ஒருத்தியோ' என்று தோழி சங்கிக்கிறதாகச் சொல்லுகிற தாகையாலே [4] தன்முகம் தம் படியை அருளிச்செய்கிறார்.

---

[1] அதிப்ராவண்யம் (अतिप्रावण्यम्) —எல்லையற்ற பக்தி.
[2] தம் படி— தன் நிலைமை.
[3] प्रेम — அன்பு. [4] தன் முகம் (मुखम्) தன் வாயிலாக.

உயர்நலமுடையவன் யவனவன் பின்னைகொல் இத்யாதி. உகாரவாச்யையான பிராட்டி, அவளுக்கு நிழல் போல்வரான மற்றைப் பிராட்டிமாரும், இம்மூவருங்கூடி இவளொருத்தியாக வந்து அவதரித்தார்களோ?

ஜ்ஞானனந்தஸ்வரூபனான ஸர்வேச்வரனுடைய போக மஹிஷியான் நப்பின்னைப்பிராட்டி பிறந்திட்டாளோ?

அன்றிக்கே, எல்லார்க்கு மிவ்வேற்றத்தைக் கொடுக்கும் பிராட்டிதானோ பிறந்திட்டாளோ.?

ஸர்வேச்வரனுடைய ஸம்பத்தானவளோ? அது விளையும் பூமியோ? அதின் பலரூபமானவளே பிறந்தாளோ?

அப்படியன்று இவள்படி, பிராட்டிமார் மூவருக்கும் இவள் படியில்லாமையாலே,அவரவர்களுக்குள்ள ஏற்றமெல்லாம் இங்கே காணலாகையாலே அவர்களொப்பன்று.

லோகமெல்லாம் வாழுகைக்கு இவளொருத்தியுமே பிறந் திட்டாளோ? என்றுமாம்.

5 "விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே" என்றாப்போலே 6 "உபமான மசேஷாணும் ஸாதூநும் யஸ்ஸதாபவத்" என்கிறபடியே இவரை எல்லார்க்குமொக்க ஒப்பாகச்சொல்லலாம். இவருக்கு ஒப்பாவார் ஒருவரும் இல்லைகாணும்.

'இதுக்கடியென்னென்ன;

மயர்வற மதிநல மருளினன் — என்ன மாயங்கொலோ? 'மாயா வயுனம் ஜ்ஞானம்' மயர்வற = பகவத்விபூதியில் அவித்யாதிகளைப்போக்கி, மதிநலம் = பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தைப் பிறப்பித்தருளினால் கூடாதது இல்லையாகாதே.

---

5 विष्णुनासदृशोवीर्ये = வீறுகொண்டெழுவதில் விஷ்ணுவுக்கு ஒப்பானவன். 6 उपमानमशेषाणां साधूनां यस्सदाभवत् = உலகிலுள்ள நல்லோர்களுக்கெல்லாம் உபமானமாகவுள்ளவர் - நல்லோர்களுள் தலைசிறந்தவர் என்கை.

என்ன மாயங் கொலோ? இதென்ன ஆச்சர்யந்தான். யவனவன் "இவள் நெடுமாலென்றே நின்று கூவுமால்" தன் பிச்சைக் கால்கடைக்கொண்டு, அவன்பிச்சைச்சொல்லிக் கூப்பிடாநின்ருள்.

மாலென்று, பெரியோன். அதாவது அயர்வறுமமரர்களதிபதி தெளிவுற்றுவீவின்றி நிற்கும் அமரர்களதிபதியானவன். நெடுமால் = பராத்பரன் - துயரறு சுடரடி தொழுதெழென்மனனே. என்ன;

அவனை நம்மாலே கிட்டவிரகுண்டோ என்ன; 'முன்னி வந்தவன் நின்றிருந்து உறையும் தொலைவில்லிமங்கலம்=பராத்பரனவன், நம்மைப் பெறுகைக்கு எளிதாகத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே எழுந்தருளி நிற்பதிருப்பதாகக் கிருஷிபண்ணின படி.

இப்படியவன் முற்பாடனய் வந்த உபகாரத்துக்குத். தோற்று "சென்னியால் வணங்கித் துயரறு சுடரடி தொழுதெழு ஹேயப்ரத்யநீகமான திருவடிகளைத் தொழுது "அவ்வூர்த் திருநாமங் கேழ்ப்பது சிந்தையே." அவ்வூர்த் திருநாமங் கேழ்க்கச் [7] செவிதாழ்கையிலே இவளுக்கு [8] மனோரதம்,

இவள் அவ்வூரென்கிறது, பெண்பிள்ளை சொன்னப்போலே இராமையாலே அவ்வூரென்கிருள். ஸர்வகரணங்களாலும் தொலைவில்லிமங்கலத்தை அனுபவிக்கிருள்.

ஆறும்பத்து ஐந்தாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[7] செவிதாழ்கை — செவிசாய்த்தல். [8] मनोरथम् — ஆசை.

ஸ்ரீ:

ஆரும்பத்து ஆருந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

மாலுக்கு வைய மளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்குக்
கோலச்சேந் தாமரைக் கண்ணற்கென் கோங்கல
ரேலக் குழலி யிழந்தது சங்கே. (1)

மாலுக்கு வையத்தில் பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அது பெருமையாலே அவஸந்நராய், 'எருளுமிறையோனில்' உடமாயிவர் வேண்டாவென்கிறவை எல்லாம் தன்னிடையே போகிறபடியை அருளிச் செய்தார்.

"உயர்வற" என்கிற பாட்டை "மாலுக்கு வையம்" என்கிற பாட்டு விவரிக்கிறது. உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தமளவாக அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தி பண்ணுகிறது.

உயர்நலமுடையவன் 'மாலுக்கு வைய மளந்த மணாளன். ஆனந்தாதிகுணவிசிஷ்டனாய்' ச்ருதிப்ரதிபாத்யனான ஸர்வேச்வரனுக்கு.

'மாலுக்கு வைய மளந்த மணாளற்கு, மாலென்று பெரியோனென்றபடி. [1] ஜகதாகாரனானவன் ஜகத்துக்கு அந்ய சேஷத்வத்தை ஒரு திருவடிகளாலே போக்கி, ஸ்வஸ்வாதந்த்ர்யத்தை ஒரு திருவடிகளாலே போக்கினபடியைச் சொல்லுகிறது.

'வைய மளந்த மணாளற்கு = [2] பதிம்விச்வஸ்ய" என்றும் [3] "கௌஸல்யா லோகபர்த்தாரம்" என்றும் சொல்லுகிறவர்க்கு

---

[1] जगदाकारन् — உலகைஉடம்பாய்உடையவன். [2] पतिं विश्वस्य— உலகெல்லாவற்றிற்கும் நாயகனானவனை. [3] कौसल्या लोकभर्तारं-सुषुवे यं मनस्विनी — நல்ல மனதுடைய கௌஸல்யை, உலகுக்கெல்லாம் நாயகனான ராமனைப் பெற்றாள்.

உகவாதாரை [4] விடமாட்டாதவன் வ்யாமோஹம், அழித்தா யுன் திருவடியால், உகந்த இவளை விடுமோ? இவளைத் தன் கால் கீழே இட்டுக்கொண்ட அச்செயலுக்குத் தோற்றுத்தன்னை யெழுதிக்கொடுத்தாள் இவளொருத்தியுமிறே.

இவளுக்குப் பிரேமம் விளைந்தபடி யென்னென்னில்? 'மயர் வறமதிநலமருளினவன் யவனவன் 'நீலக்கருநிற மேக நியா யற்கு "மயர்வற, தத்வ்யதிரிக்தங்களில்ஆசையறுத்துத் தன் விஷ யமான பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தை அருளுகையாலே, அத் யந்தம் ப்ரேமபாரவச்யத்தாலே செய்த்துக்கருத்த நிறத்தை யுடைய மேகஸ்வபாவருக்கு.

ப்ரயோஜன நிரபேக்ஷமாகக் கொடுக்கவும், கொடாத போது உடம்பு வெளுக்கையும், வ்யாமோஹ மின்றிக்கே யொழிந் தாலும் விடவொண்ணாத வடிவும், ஔதார்யமு மிருக்கிற இவ் வழகுக்குப் பிச்சேறினபடி.

அதன்மேலே அயர்வறுமமரர்களதிபதி யவனவன், "கோலச் செந்தாமரைக்கண்ணன் [5] "ஜிதந்தே புண்டரீகாக்ஷ" என்று அஜ்ஞானகந்தரஹிதரான நித்யரைத் தன் கண்ணழகாலே தோற்பித்தாப்போலே; தன் மேன்மையையும் கண்ணழகையும் காட்டியாயிற்று இவளை வசீகரித்தது.

'கோலச்செந்தாமரைக்கண்ணற்குத் துயரறுசுடரடிதொழு தெழென் மனனே என்று என்னேலக்குழலியிழந்தது சங்கே.

தர்சநீயமாய், வாத்ஸல்யத்தாலே விகாஸாதிகளையு முடைத் தான திருக்கண்களையு முடையவனுக்கு; 'தாமரைத் தடங்கண் விழிகளில் அகவலைப்படுத்தினவனுக்கு.

'என்னேலக்குழலி, ஏலம் [6] பரிமளிதமான திருவடிகளை சிரஸா வகிக்கையாலேயும்; 'ஸர்வகந்த:' 'ஸர்வரஸ:' என்கிற படியே, என் கொங்கலரேலக்குழலி, என்று நிரூபகமாய்த்து.

---

[4] விடமாட்டாதவன் — விடமாட்டாது, அவன்.

[5] जितन्ते पुण्डरीकाक्ष — செந்தாமரைபோன்ற திருக்கண்களையுடை யவனே, நீ என்றும் வெற்றியுடன் விளங்கவேண்டும்.

(परिमलितम्) நாற்றமுடையதாகப் பண்ணப்பட்டது.

[7] மது ஸ்யந்தியா நின்றுள்ள பூவையுடைத்தாய், நறு நாற்றத்தையு முடைத்தாயிருக்கிற இவள் மயிர்முடி ஒன்றுக்குந் தோற்றுக் குமிழிநீர் உண்ணுமவன்கிடீர்; ஒன்றுக்கொன்பது [8] அபதானங்காட்டி இவளை மயக்கிக் கழலாதவளையை அபகரித்தான். 'இழந்தது சங்கே' தனக்கடிமையாய்த் தொழுத கைவளையைக் கொள்வது தக்கதோ? என்கிறாள்.

ஆறும்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு— (கலிநிலைத்துறை)

உண்ணுஞ் சோறுப ருகுநீர் தின்னும்வெற் றிலையுமெல்லாங்
கண்ண னெம்பெரு மானென்றென் றேகண்க ணீர்மல்கி
மண்ணி னுளவன் சீர்வளம் மிக்கவ னூர்வினவித்
திண்ண மென்னிள மான்புகு மூர்திருக் கோளூரே. (1)

"உண்ணுஞ் சோற்றில்" கீழில் திருவாய்மொழியிலே மோஹங்கதையான இவள் தசையைக்கண்ட திருத்தாயார், இவள் [1] வளையாதிகள் இழந்தபடியைச் சொல்லிக் கூப்பிட்டுத் தானும் மோஹிக்க, அவ்வளவிலே, பெண்பிள்ளை உணர்ந்து இங்குத்தைத் தரிப்பற்று, 'அவனெழுந்தருளியிருந்த தேசமான திருக்கோளூரேறப்போனாளென்று திருத்தாயார் சொல்லுகிற பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

"உயர்வற" என்கிற பாட்டை "உண்ணுஞ்சோறு" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

---

[7] **मधुस्यन्दि** — தேனைப்பெருக்குகிறது. [8] **अपदानम्** — (தன்னுடைய) அற்புதமான செயல்கள்.

[1] வளையாதிகள் — வளை முதலியவை.

உயர்வற மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும், அன்னபானாதி முதலானவை [2] தாரகபோஷகபோக்யங்களா யிருக்கையினாலே அல்பாஸ்திரமாயற்றது.

உயர்நலமுடையவனே இவளுக்கு "உண்ணுஞ்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணனிறே. தத்வ்ய திரிக்தங்களறியாள்.

கொள்ளமாளாயின்பவெள்ளத்துக்கு மேலுண்டாய், இவள் அவ்வருகொரு தாரகாதிகளுண்டாய்த் தேடப்போனாளோ?

உயர்நலமுடையவன் யவனவனே "கண்ணனெம்பெரு மானென்றே கண்கள் நீர் மல்க.

உயர்நலமான ஆனந்தாதிகுணபரிபூர்ணனாய், ச்ருதிப்ரஸித் தனானவன் யாவனொருவன், அவனே எம்பெருமானாகிறான் என் றிந்த ஸ்ம்ருதியே யாத்ரையாய், அத்தாலே [3] ஆனந்தாச்ருவாய் மல்கயிருக்கிற இதுக்குஹேது; அவன் மயர்வற மதிநல மருளி னன். யவன் தன்னிடத்து ஜ்ஞானபக்திகளே தாரகாதிகளாகப் போய் 'மண்ணினுளவன் சீர்வளமிக்கவனூர் வினவி, லௌகிரைப் போலே அன்னபானாதிகளாலே தரித்து அங்கே புக்கு அவ னாலே தரிக்கப்போனாளோ? [4] அஹமந்நம், [5] அஹமந்நாத: என் றிருப்பார்க்கும் அவ்வருகு போகவேணுமோ?

எல்லாங் கண்ணனென்று இருக்குமவளுக்கு வேறொன்று வேணுமோ? 'கணை நாணினோவாத்தொழில் சார்ங்கன் தொல் சீரை நன்னெஞ்சே ஓவாதவுணவாக வுண்ணென்றுமிறே இருப்பது.

---

[2] धारक - पोषक भोग्यङ्गळ् — உடம்பில் உயிர் இருக்கும்படி செய் வது - தாரகம். (உணவு) அந்தச்சோறு நன்றாக ஜீரணமாவ தற்கு ஸகாயம்செய்து தேகத்துக்கு புஷ்டியைத்தருவது — போஷகம். (நீர்) ஸுகத்தைக்கொடுப்பது போக்யம் (வெற்றிலை)

[3] आनन्दाश्रु — ஸந்தோஷத்தினால் வரும் கண்ணீர்.

[4] अहमन्नम् — (நித்யர் முக்தர்களால்) அனுபவிக்கப்படும் பரம் பொருள் எனக்கு அந்தர்யாமியாயுள்ளது. [5] अहमन्नादः — அந்த இன்பமயமான பரம்பொருளைக்கண்டு இன்பம்பெறுபவன் நான்.

கண்கள்' நீர்கள் மல்கும் கண்ணும் அவள் [6] முகவிகாஸமு மன்றோ? எனக்குத் [7] தாரகம். என் ஜீவனத்தையுங் கொண்டுபோனாளே.

'அழுநீர் துளும்ப வலமர்கின்றனவாழியரோ' என்று மங்களாசாஸநம் பண்ணுகையிறே ப்ராப்தம்.

'மண்ணினுள்' விண்ணிலுள்ள 'அயர்வறுமமரர்களதிபதி' யானவன், தன்னுடைய அம்ருதானந்தத்தை அசராமல் புஜிக்கிற நித்யமுக்தர்க்கு ஸ்வாமியானவன் - மண்ணினுள் புகுமூர் திருக்கோளூரே.

அயர்வறுமமரர்களதிபதியானவன். இவளிடையாட்டமாக அவன் நினைத்திருப்பது, விண்ணுளாரிற் சீரியளான இவளை லபிக்கைக்காக வந்திருக்கிறவன் - மண்ணினுள் புகுமூர்த் திருக்கோளூரே.

அவன் - சீர்வளமிக்கவனூர் வினவி; லௌகிகர் எல்லோரும் யாவதாயுஷம் தாரகாதிகள் ஸம்பாதிக்குமாப்போலே, இவளும் அவன் சீரே யாவதாத்மபாவியாக தாரகாதிகளாகவும், நிரவதிக ஸம்பத்துவைத்தமாநிதியாகவும், அவன் ப்ரஸாதமே பேறாகவும் போனாள்.

"[8] ஸோச்நுதே ஸர்வான் காமான் ஸஹ, ப்ரம்மணா விபச்சிதா" என்று அவனோடு அவன் குணங்களோடு வாசியறப்ராப்யமாகிறவோபாதி, அவன் விரும்பின தேசமும் [9] ப்ராப்யாந்தர்கதமிறே.

அவன் சீர் யாவதாத்மபாவி தாரகாதிகளானப்போலே, துயராறு சுடரடி தொழுதெழுகையும் போஷகாதிகளும், போஷணாதிகளுமாய்த்து.

---

[6] मुखविकासः — முகமலர்ச்சி. [7] धारकम् = உயிர்தரிப்பதற்கு உருப்பானது. [8] सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चितेति — ஸர்வஜ்ஞனான பகவானோடு அவனுடைய கல்யாணகுணங்கள் எல்லாவற்றையும் முக்தன் அநுபவிக்கிறான்.
[9] प्राप्यान्तर्गतम् — பெறவேண்டியதொன்று.

'வளமிக்கவனூர் = பரமபதங் கலவிருக்கையோபாதி உகந்த விஷயத்தைப் பெறுமிடமிறே ஊராகிறது.

10 "கிம் கார்யம் ஸீதயா மம" இறே. 11 பரமபதத்திலும் ஆச்ரிதன் இருந்த இடமிறே ஊராவது.

அயர்வறுமமரர்கள் இருந்தவிடத்தில் சென்று, அவன் துயராறு சுடரடிதொழுதெழுகைக்கு, என் மனனே 'திண்ணம் என்னிளமான் புகுமூர் திருக்கோளூரே' என்கிறாள்.

ஆறும்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலித்துறை)

பொன்னுல காளீ ரோ? புவ னிமுழு தாளீரோ?
நன்னலப் புள்ளினங் காள்!வினை யாட்டியே னுனிரந்தேன்
முன்னுல கங்களெல் லாம்படைத் தமுகில் வண்ணன் கண்ணன்
என்னலங் கொண்ட பிரான்றனக் கென்நிலை மையுரைத்தே. (1)

"பொன்னுலகாளீரில்" திருக்கோளூரேறப்போனவள் முடியப்போய்த் தலைக்கட்டமாட்டாதே, 1 நகரோபவனத்திலே விழுந்துகிடந்து ஆர்த்தராய் ஏகரஸம் பற்றுசாகத் தூதுவிட்டார்.

---

10 किं कार्यं सीतया मम-எனக்கு ஸீதையினால் ஆகவேண்டியதென்ன?
11 பரமபதத்திலும் — பரமபதத்தைக்காட்டிலும்.

1 நகரோபவனம் (नगरोपवनम्) — நகரின் சமீபத்திலுள்ள பூங்காவனம்.

பாசற வெய்தியின் னேவினை யேனெனை யூழிநைவேன்?
ஆசறு தூவிவெள் ளைக்குரு கே! யருள் செய்தொருநாள்
மாசறு நீலச் சுடர்முடி வானவர் கோனைக்கண்டு
ஏசறு நும்மையல் லான்மறு நோக்கிலள் பேர்த்துமற்றே. (8)

"உயர்வற" என்கிற பாட்டைப் 'பாசற' என்கிற பாட்டு விவரிக்கிறது.

உயர்வற மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் ஸம்ஸரித்துக் கர்மபாசங்களாலே [2] பத்தாய், பசுலுங்குட்டிகளுமாய் வாழாநிற்கச்செய்தே, கர்மம் மாண்டு வாழ்வற்று நிற்கும்.

உயர்நலமுடையனென்று, நித்யானந்த ஸ்வரூபனோடே நித்யர் முக்தர் களித்தானந்தித்திருக்க, அடியேனொருவரோடு கூட்டற்றிருப்பனோ?

"பாசற வெய்தி" என்னுடம்பில் பசுமைபோய், வைவர்ண்யம் மிகவும் பரந்தது. 'இன்னுஞ் சிலகாலம் கழித்தாலறிவிக்கிறோ' மென்னு மளவா யிருந்ததோ என்தசை?

'இன்னே = என்னைக்கண்டவுங்களுக்குச் சொல்லவேண்டாவிறே. விஷயம் ஸாவதியாகிலிறே இது அளவுபட்டிருப்பது. இதுக்கொரு பாசுரமிட்டுச் சொல்லப் போகாது. உடம்பைக் காட்டுமத்தனை.

வினையேனெனை யூழிநைவேன்? விச்லேஷமும் ஸம்ச்லேஷத்தோபாதியாகப் பெற்றிலேன். அது [3] காதாசித்கமாய் இது நித்யமாயிருக்கிறபடி.

இதுக்கு ஹேது என்னென்ன? நித்யானந்த ஸ்வரூபனவன் யாவனொருவன்; அவன் மயர்வற மதிநலமருளினன். தன் நிர்ஹேதுகக்ருபையாலே பக்திரூபாபன்னஜ்ஞானத்தையிறே அருளினது.

---

[2] बद्धः — கட்டுண்டவர். [3] காதாசித்கம் (कादाचित्कम्) — பல நாள்களுக்கொருதரம் நிகழுவது.

அன்றுமுதல் எத்தனை யூழி நைவேன்?[4] சைதில்யத்தோடே எத்தனை [5] கல்பஞ்சென்றது?

'ஆசறு தூவி வெள்ளைக்குருகே' பழிப்பற்ற சிறகை யுடைத்தாய் [6] பரதுக்காஸஹிஷ்ணுதைக்கு உறுப்பாய் மனோ [7] நைர்மல்யத்தை உடைத்தாயிருக்கிறபடி.

மதிநலமருளினவன் யாவனொருவனை க்ருஷ்ணன் பிரிகைக்குப் புறம்போ லுள்ளும் கரியானைப்போலே, நீங்களுங் கூட்டுகைக்கு உள்ளும் புறம்பும் நிர்மலமா யிருக்கிறபடி.

அவன் மதிநலமருளினது பிரிந்து துடிக்கைக்கு ஹேதுவானைப்போலே யாகாதே — ஆசறுதூவி வெள்ளைக்குருகே யருள்செய் தொருநாள் — ஒருபோது க்ருபை பண்ணியருளினி கோளே.

ஆர்த்தியாலே அலைகிற ஸமயத்திலே, 'அஞ்சாதே' யென் றருளப் பெற்றேன், என்ன;

உமக்கென் செய்யவேணுமென்ன;

அயர்வறு மமரர்களதிபதி, விச்லேஷகந்தாஹிதரான நித்யஸூரிகளுக்கு போக்யபூதனாய்; மாசறு நீலச்சுடர் முடி வானவர்கோன், பழிப்பற்று நெய்த்திருந்துள்ள மயிர்முடியை, அநந்தவைநதேயாதிகள் பேணயிருக்கிறவனைக்கண்டு, துயரறு சுடரடி தொழுது எழுந்திருந்தொரு விண்ணப்பஞ் செய்யவேணு மென்ன;

விண்ணப்பமேதென்ன?

---

[4] சைதில்யம் (शैथिल्यम्)—தளர்ச்சி. [5] கல்பம் (कल्पम्)— நான்முகனின் ஒருபகல்காலம். 14மன்வந்தரங்களைக்கொண்டது. இதில் முதல் 3-உலகங்கள் அழிந்து மறுபடியும் தோன்றும்.
[6] பரதுக்காஸஹிஷ்ணுதை (परदुःखासहिष्णुता) — பிறர் துயரம் பொறுக்கமாட்டாமை. [7] மனோநைர்மல்யம் (मनोनैर्मल्यम्)—உள்ளத்தின் தூய்மை.

'ஏசறும்' ஒருநீர்ச்சாவியிலே க்ருபாம்ருத வ்ருஷ்டியை வர்ஷியாதே, கடலிலே வர்ஷிக்கிறப்போலே; நித்யவிபூதியாரோ பெறுவது? லீலா விபூதியார் [8] நிர்க்குணனென்னுமே ப்ரஸாதத்தைப் பண்ணவேணும் என்றும்;

'நம்மையல்லால் மறுநோக்கிலள்' உம்மையொழிய வேறு குளிர்ந்த விழியில்லை. விழிக்குங் கண்ணிலே நின்கண்மற்றல்லால் [9] வ்ருத்தகீர்த்தனத்துக்கு உம்மை யொழிய வேறொருவரை யுடையளல்லள்.

குணகீர்த்தனத்தால் தரிக்குமவளல்லள். என்மனம்போலே இருக்கிற நீங்கள், இவ்வளவு மருளிச்செய்யுங்கோளென்று குருகை இரக்கிறாள்.

ஆறும்பத்து எட்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்

(கலிநிலைத்துறை)

நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்-
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனா யயனானாய்க்-
கூரா ராழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்-
வாரா யொருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே. (1)

---

[8] நிர்க்குணன் (निर्गुणन्) இரக்கமற்றவன். [9] வ்ருத்தகீர்த்தனம் (वृत्तकीर्तनम्) — (எம்பெருமானுடைய அரிய) செயல்களைச் சொல்லுதல்.

"நீராய் நிலனில் தம் தசையைக் கண்டு தம் [1] பரிஸரத்தில் கால் எழுந்து போவாரில்லை" என்றறுதியிட்டு, ஈச்வரனுக்கு, முகங்காட்டி யல்லது நித்யவிபூதியிலிருப்பு அரிதாம்படி, ஆர்த்தியாலே நிரம்பித்தொருகடல் கையெடுத்துக் கூப்பிடுமாப் போலே பெருமிடறு செய்து கூப்பிட்டார்.

ஞாலத் தூடே நடந்தும், நின்றும் கிடந்திருந்தும்-
சாலப் பலநா ளுகந்தோ றுயிர்கள் காப்பானே!
கோலத் திருமா மகளோ டுன்னைக் கூடாதே-
சாலப் பலநா ளடியே னின்னுந் தளர்வேனோ? (3)

"உயர்வற என்கிறபாட்டை "ஞாலத்தூடே" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

[2] ஆர்த்தப்ரபன்னன் - நாராயண பதத்திற்கு ஸங்க்ரஹமான அகாரத்தாலே [3] அர்த்தபஞ்சகத்தை விவரிக்கிறது. உயர்வற ஞாலத் தூடே=மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும், அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களைப் போக்குகைக்காக, த்ரிவிக்ரமாபதானத்தாலே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்து நடந்தாப்போலே என் முன்னேயும் நடக்க வேணுமென்ன;

---

[1] பரிஸரம் (परिसरम्) — ஸமீபம். [2] आर्तप्रपन्न = ப்ரபத்தி யென்பது சரணடைதல். அதைச்செய்தவன் ப்ரபன்னன் அவன் இருவகைப்படுவன் - ஆர்த்தன் - த்ருப்தன் - என்று. சரணடையும் ஸமயத்திலேயே ஒரு நிமிஷம்கூடத் தாமதியாமல் வைகுண்டம் புகவிரும்புமவன் முதல் வகை. 'இந்த' சரீரம் முடிந்தவுடன் பரமபதம் விரும்புமவன் இரண்டாம்வகை.
[3] அர்த்தபஞ்சகம் (अर्थपञ्चकम्) = ஐந்துபொருள்கள் = (1) प्राप्यस्य ब्रह्मणोरूपम्=சரணாகதிபண்ணுமவன் பெறவேண்டிய பரம்பொருளின் தன்மை. (2) प्राप्तुश्चप्रत्यगात्मनः — அந்தப்பரம்பொருளைப் பெறவிருக்கிறதன்னுடைய (ஆத்மாவினுடைய) நிலை. (3) प्राप्त्युपायः—அந்த பரம்பொருளைப் பெறுவதற்கான உபாயம். (4) फलम् — அப்படிப் பெறுவதனால் வரும் பயன். (5) प्राप्तिविरोधि — அப்படிப்பெறும்போது, அதற்கு இடையூறாகத் தோன்றக்கூடியவை.

அது உமக்குக் காட்டுவது ஒருதேசவிசேஷத்திலே கொண்டுபோய்க் காட்டுகிறேமென்ன;

அதுதன்னை இங்கே காட்டித்தில்லையோ வென்கிறார்.

அதொருநாள் காதாசித்கமாகச் செய்தோமென்ன;

உயர்நலமுடையவனான நீ, யுகந்தோறும் ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணி ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக்கடவேனோ வென்கிறார்.

'ஞாலத்தூடே நடந்து' ஸதாதர்சனம் பண்ணுவார் முன்னே நடக்கக்கடவ நடையைக் காதாசித்கமாய் வந்தாலும் பாராதார் முன்னே கிடர் நடந்தது [4] அந்தகன் முன் நடக்குமாப் போலே. [5] "அக்ரத: ப்ரயயௌ ராம:" என்று நடந்தும்;

'நின்றும்' [6] "அவஷ்டப்யச திஷ்டந்தம் ததர்ச தனுரூர்ஜ்ஜிதம், ராமம் ராமானுஜஞ்சைவ பர்த்துச் சைவானுஜம் சுபா" என்று தாரையுகந்து சொன்னபடியே ஆகர்ஷகமாய் நின்றபடி.

'கிடந்தும்' [7] பாஹும் புஜங்கபோகாபம்உபதாயாரிஸூதன: என்று கடலையனுவர்த்தித்துக்கிடக்கிற கிடைதானே, இல்ங்கை குடிவாங்கவேண்டும்படி யிருக்கை.

---

[4] அந்தகன் (अन्धकन्) பிறவிக்குருடன். [5] அக்ரத: ப்ரயயௌ ராம: (अग्रतः प्रययौ रामः) ராமன் முன்னே சென்றான்.

[6] अवष्टभ्यच तिष्ठन्तं ददर्श धनुरूर्जितम् - रामं रामानुजं चैव भर्तुश्चैवानुजं शुभा = திடமான வில்லின்மேல் சாய்ந்தவண்ணம் நின்று காட்சியளிக்கும் ராமனையும், அன்னாரின் திருத்தம்பியாரையும் தன் கணவன் தம்பியான ஸுக்ரீவனையும் தாரையானவள் பார்த்தாள்.

[7] बाहुं भुजङ्गभोगाभं उपधायारिसूदनः — எதிரிகளை ஒழித்துக் கட்டுவதில் கைதேர்ந்தவரான ஸ்ரீராமன், பாம்பின் உடலைப் போன்ற திருக்கையையே தலையணையாக வைத்துக்கொண்டு கிடந்தார். (ஸமுத்ரத்தை சரணடைந்த ஸமயத்தில்).

இருந்தும் [8] "உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம்" என்றும், "[9] உடஜே ராமமாஸீநம்" என்றுஞ் சொல்லுகிறபடியேயிருக்கை.

நீரிதறிந்தபடி யென்னென்ன; நீ மயர்வற மதிநல மருளுகையாலே அறிந்து கண்டேன்.

'சாலப்பலநாள்'—உன்னுடைய ரக்ஷணம் அனுதியன்றே? யுகந்தோறும் "ஸம்பவாமி யுகேயுகே" என்னுமாபோலே.

உயிர்கள் = அயர்வறு மமரர்களான திருவடி, திருவனந்தாழ்வான், பிராட்டி இவர்களுக்காகவன்றுகிடீர். [10] ஸர்வாத்மஸம்ரக்ஷணம் பண்ணுவதன்றே வுன்னது? அமரர்களதிபதி" என்று ச்ருதிப்ரஸித்தனானவன் யாவனொருவன் அவன் காப்பானே; இவர்களுக்கழித்துக் கொள்ளுகை பணியானுப்போலேயிறே, அவனுக்கு நோக்குகை பணியானபடி.

அகாரத்தில் [11] அவரக்ஷணே, என்கிற [12] தாதுவாலே, ஸர்வரக்ஷகத்வஞ் சொல்லிற்று. நான் கைவாங்கினேன். இனிக் காவல் சோர்வு படாதபடி வேணுமாகில் நோக்கிக்கொள்.

அயர்வறு மமரர்களதிபதியானவன் யாவனொருவன் "கோலத்திருமாமகளோடுன்னைக்கூடி" அகாரத்தில் ஸ்ரீய:பதித்வஞ் சொல்லுகையாலே 'கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே;

அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரானவர்கள் பரிசர்யை பண்ண இருக்கிற கோலத்திருமாமகளோடு, உன்னைக் கூடியிருக்குமவர்கள் உன் துயரறு சுடரடிதொழ அடியேனுமப்படித் தொழுதெழாதே;

---

[8] उपविष्टं स्वलङ्कृतम् — ஸர்வாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அழகே உருவெடுத்தாற்போல் உட்கார்ந்து காட்சியளிக்குமவன். [9] उटजे राममासीनं = குடிசையில் உட்கார்ந்திருக்கும் ஸ்ரீராமனை.

[10] ஸர்வாத்மஸம்ரக்ஷணம் (सर्वात्मसंरक्षणम् — எல்லா உயிர்களையும் காப்பது. [11] அவ - ரக்ஷணே (अव - रक्षणे) = अव - என்கிற தாது காப்பது என்னும் பொருளில் வரும். [12] தாது (धातु) (Root) பகுதி.

தாயும் தம்மப்பனுஞ் சேரவிருக்கக் கிட்டப்பெறுதே [13]ஸ்தனந்தயப்ரஜை நாக்கொட்டிக்கிடந்து துடிக்குமாப்போலே இருக்கிறதுகாணும்.

இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்யவிறே இவருக்கும் ப்ராப்யம்.

'சாலப்பலனுளின்னனந் தளர்வேனே? முன்பு அனுதிகால மிழந்தால் இன்னு மிழக்கவேணுமோ? இன்னம் = மயர்வற மதிநலம் அருளின உனக்கு அடியேனுன பின்புந் தளர்வேனே?

துயரறு சுடரடி தொழுதெழ வென்ற அடியேனும் என் மனனும் சாலப்பலனுள் அடியேனின்னனந் தளர்வேனே?

இப்பாட்டில் [14] அகாரார்த்தத்தை [15] ஸக்ரமமாக வ்யாக்யாநம் பண்ணுகிருர்.

"அவரக்ஷணே" யிறே தாது. ரக்ஷிக்குமிடத்தில் [16] ஸர்வப்ராகாரமாக ரக்ஷிக்கவேணும். அதுதான் ஸர்வகாலமும் ரக்ஷிக்கவேணும். அப்படி ரக்ஷிக்குமிடத்தில் ஸர்வரக்ஷகனுகவேணும்.

இப்படி வரையறுதே ரக்ஷிக்குமிடத்தில் [17] "நகச்சிந்நாபராத்யதி" என்னுமவளும், "என்னடியாரது செய்யார்" என்னுமவனும் கூடவாயிற்று. ஆகையாலே அகாரம் [18] மிதுனத்திற்கு வாசகமாயிற்று.

உயர்வற ஞாலத்தூடே = இத்பாதியாலே ஸர்வப்ரகார ரக்ஷகத்வஞ் சொல்லிற்று — 'உயர்நலமுடையவன்' 'மயர்வற

---

13 ஸ்தனந்தயப்ரஜை (स्तनन्धयप्रजै) — முலைப்பாலுண்ணுங் குழந்தை. 14 ओम् — என்கிற ப்ரணவம் — अ-उ-म् — என்ற மூன்று எழுத்துக்களாலானது. அதில் முதலான अ என்கிற எழுத்தின் பொருளை—என்றபடி.
15 ஸக்ரமமாக — முறைப்படி. 16 ஸர்வப்ரகாரமாக — எல்லா விதமாகவும் - தன் திவ்யாயுதங்களை ஏவி, தானே நேராக எழுந்தருளி (இதுபோல்).
17 नकश्चिन्नापराध्यति — தவறு செய்யாதவனொருவனுமில்லை.
18 மிதுனம் (मिथुनम्) — பெருமாளும் பிராட்டியுமான இருவர்.

சாலப்பலநாளித்யாதியாலே ஸர்வகால ரக்ஷகத்வஞ் சொல்லிற்று. 'அயர்வறுமமரர்களதிபதி' 'கோலத் திருமாமகளோடுன்னை' என்கையாலே ஶ்ரிய:பதியே ப்ராப்யமென்றது. அகாரவிவரணமான திருமந்த்ரார்த்தஞ் சொல்லுகிறது.

'உயர்நலமுடையவன்' 'கோலத் திருமாமகளோடுன்னை, என்று பிரம்மஸ்வரூபஞ் சொல்லுகிறது 'அடியேனென் மனனே' என்கையாலே [19] ப்ரத்யகாத்மஸ்வரூபஞ் சொல்லுகிறது.

'அருளினனுயிர்கள் காப்பானே' என்கையாலே, உபாய ஸ்வரூபஞ் சொல்லுகிறது. சுடரடி தொழ — உன்னைக்கூட' என்கையாலே பலஞ் சொல்லிற்று. மயர்வற உன்னைக்கூடாதே தளர்வேனோ? என்கையாலே விரோதி ஸ்வரூபஞ் சொல்லிற்று.

ஆர்த்த ப்ரபன்னாதிகாரி ஸ்வரூபம் சொல்லுகிறது. அகாரத்தை விவரிக்கிறது "உயர்வற உயர்நலமென்கிற பாட்டு. உயர்வற உயர்நலத்தை விவரிக்கிறது 'ஞாலத்தூடே என்கிற பாட்டு. எங்ஙனே என்னில்;

அகாரத்திலே நாராயணபதம் விவரணமாகையாலே ஸர்வ விதபந்துவாய் ரக்ஷிக்குமென்கிறது. இந்த ஸர்வவித ரக்ஷகத்வத்தால் அவன் உயர்த்தி சொல்லுகிறது.

உயர்வென்றது மனுஷ்யானந்தந் தொடங்கி பிரமானந்தத்தளவும், மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவனென்கிறது. ஒருவரைப் பார்க்க ஒருவர் உச்ச்ராயம் என்றது. அந்த அர்த்தத்தை உட்கொண்டு 'ஞாலத்தூடே நடந்த என்கிறது. 'நடந்து' ஓங்கி உலகளந்தபடி. 'உயர்வற' என்றது அன்ய சேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யம் தவிர்த்தபடி. ஆகையாலே ஸர்வ சேஷியானவனே ரக்ஷகன் என்றபடி.

உயர்நலம் - ஆனந்தம். அகாரத்தில் ஸர்வவித ரக்ஷகத்வம். 'அவ-ரக்ஷணே' என்கிற தாதுவாலே ரக்ஷகத்வமே ஸ்வரூபம்

---

[19] ப்ரத்யகாத்மா (प्रत्यगात्मा) — தனக்குத்தானே தோன்றுந் தன்மையுள்ள ஜீவாத்மா.

என்கிறது. அதாவது த்ரிவிக்ரமாபதானத்தாலே ஜகதாகாரதையை நடத்திக்காட்டி, ஞாலத்துள்ளார் எல்லாம் அன்ய சேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களாகிற அஜ்ஞானுந்தகாரத்திலே கட்கண்ணும் உட்கண்ணும் குருடாய் அத்தை [1] வெளிச்செறிப்பிக்கைக்காக, உடையவனுகையாலே 'நடந்து நின்றும், நடந்தபோது அவர்கள் எதிரம்பு கோர்த்தும், நின்று, சத்ரு நிரஸனம் பண்ணிநின்றபோதும், [2] ஸஜாதீயபுத்திபண்ணி அகன்றும்.

யவன் அஜ்ஞரான சேதனர்கள் அறிவில்லாமையைக் கண்டு கிடந்தும். பாற்கடல் பள்ளிகொண்டவிடத்து நீள்நகர் நீளேரி வைத்தருளாய் என்ற கூக்குரல் கேட்டுப் புறப்பட்ட அம்புக்கு இரையாக்கியும், அவன் அனந்தசாயியானவன் எழுந்துவந்திருந்தும். நூராண்டு பதினோராயிரமாண்டு இருந்தும், ஸர்வவித ரக்ஷணம் பண்ணினவிடத்து, 'வையத்து நின்னை வல்லவர் பழித்து இந்தடவாலே குருடு நீங்கித்தில்லை யாகையாலே அகாரத்தில் சொன்ன ஸர்வாவஸ்தையிலும் ரக்ஷிக்குமென்கிறது.

ஆக அகாரவிவரணமான நாராயணபதத்தில் சொன்ன ஸர்வவிதாரக்ஷகத்வத்தை 'உயர்வற உயர்நலமுடையவன் யவனவன். இப்படி லீலாவிபூதியை நடத்துகிற ஸ்வாமியானவன் எனக்கு மயர்வற மதிநலமருளினவத்தையிறே 'சாலப்பலநாள்' என்கிறது. அகாரத்தில் ஸர்வகால ரக்ஷகத்வத்தைச் சொல்லுகிறது,

'சோம்பாதிப் பல்லுருவையெல்லாம் படர்வித்த' என்றது. அகாரத்தில் ப்ரதம சதுர்த்தியாலே சேஷத்வ ஜ்ஞானம் பிறந்தவன் மதிநலமாகிற பக்தி ரூபாபன்னஜ்ஞானம். அகாரத்தில் கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே ஸர்வகுணங்களுக்கும், க்ருபை காரணமாயற்றது.

அகாரம் ஸர்வசப்தத்துக்கும் காரணமாகையாலே தயமான மனுவாய் ஸ்ருஷ்டிக்கையாலே, ஸ்ருஷ்டிக்கும் தயை ப்ரேரகம். க்ருபையே காரணமாயிற்று.

---

[1] வெளிச்செறிப்பிக்கை = பிரகாசப்படுத்துகை.

[2] ஸஜாதீயபுத்தி = நம்போல்வான் ஒருவன் என்கிற எண்ணம்

யவனவன் யுகந்தோறுயிர்கள் காப்பானே! என்று க்ருபா பாத்ரமான ஜீவகோடிகளைச் சொல்லுகிறது. காப்பானென்று எதிர்ச்சூழல்புக்கு இத்யாதிப்படியே காத்து ரக்ஷிக்குமென்கிறது.

ஆக அகாரத்தில் சதுர்த்தியாலும், மயர்வற மதிநலமருளுகையாலும், உயிர்கள் காப்பானென்கையாலும், சேதனருக்கு உட்கண்ணும் குருடு தீர்ந்து தன்னைக்கண்டு அநுபவிக்கும்படி ஜ்ஞானசக்ஷுஸ்ஸை அருளி ப்ராபகாந்தரங்களில் போகாதே காத்தபடி. அகாரத்தில் சொன்ன ரக்ஷ்யவர்க்கத்தை 'யவன்' என்கிறது. அனன்யகதியான அதிகாரி அகாரவாச்யன். ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷிதனானவன் யாவனொருவன் அவன் அயர்வறுமமரர்களதிபதி. கடலில் அம்ருதாசிகள் அன்று. அமுதில் வரும் பெண்ணமுதுக்கு ஆராவமுதானவனை அருந்தும் அமரர்கள்.

கோலத்திருமாமகளோடு உன்னை - ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷிதரான கோலம். அகாரத்திலே லக்ஷ்மீஸம்பந்தம் சொல்லுகையாலே 'அகாரோ விஷ்ணுவாசக:' அர்த்தே லக்ஷ்மீவாசக: - என்கையாலே உன்னைக்கூட - என்கிறது.

இனிவரும் ஆர்த்தரக்ஷணத்திலே தீக்ஷித்து, அத்தனையும் சரணாகதியிலே தீக்ஷிப்பித்து, அத்தை ப்ராப்திபர்யந்தமாக நடத்தி விரஜையிலே அவபிருதமாட்டி. செய்தவேள்வியனைத் திருவடிக்கீழ் குற்றேவல் செய்திருக்கும்படி அருளினான் யாவனொருவன், அகாரவாச்யனான அயர்வறுமமரர்களதிபதி. அகாரத்தில் சொன்ன ஸர்வபலப்ரதத்வம் சொல்லுகிறது. ஆர்த்திஹரத்வம் சொல்லுகிறது. நித்யர் - முக்தர் பத்தர் - முமுக்ஷுக்களுக்கும் ஸர்வபலப்ரதானம் பண்ணி ஆர்த்தியைத் தீர்க்குமவன் யாவனொருவன். துயரறு சுடரடி தொழுதெழென்மனனே. சுடரடி-ஆர்த்திஹரமாய் மனோஹரமாய் தேஜோமயமான திருவடிகளையுடைய உன்னைக்கூடாதே.

கோலத் திருமாமகளோடுன்னைக் கூடாதே. இச்சேர்த்தியிலே சேரப்பெறாதே. அகாரவிவரணமான ஸ்ரீமந்நாராயணனைக்கூடாதே. துயரறு சுடரடி தொழாதே. துயர் - துக்கம். பிரயாஸம். பிரயாஸப்படாதே - ஸுகரமான திருவடிகளை ல்பிக்கப்பெறாதே.

'சாலப்பலநாள் - கீழ் கழிந்தகாலம் போராமல் என்மனனே வாள்களாகி நாள்கள் செல்லக்கழிந்தகாலம் போராதோ. அகார விவரணமான சரமசதுர்த்தியில் சொன்ன சேஷவ்ருத்தியின்படியே தொழுது எழுவன்றோ ப்ராப்தம். 'அஞ்ஜலி: பரமாமுத்ரா- என்று ஆர்த்தாதிகாரி லக்ஷணம் சொல்லியிருக்க, அதுலபியாமல் 'அடியேன் இன்னந்தளர்வேனோ?

ஆர்த்தலக்ஷணத்திலே தீக்ஷினை ச்ரிய:பதியினுடைய கடாக்ஷம் பெற்றும் 'இன்னந்தளர்வேனோ? அகாரவிவரணமான சரமசதுர்த்தியாலே ஸ்ரக்சந்தனாதிகளோபாதி அவனுக்கு போக்யமாக இருக்கிற நீ தொழுதெழென்று ப்ரார்த்தனாரூபமான சரணாகதி உண்டாயிருக்க, என்மனனே இன்னந்தளர்வேனோ?

அனாதிகாலம் அஸேவ்யஸேவை பண்ணித் திரிந்தது போராதோ? இன்னந்தளரவேணுமோ? கர்த்ருத்வபோக்த்ருத்வ புத்தி பிறந்துஅகன்றுபோகாமே துயரறு சுடரடி தொழுதெழென்மனனே - என்று அருளிச்செய்தருளினாராயிற்று.

உயர்வற என்றும், ஞாலத்தூடே நடந்துகந்தோறுயிர்கள் காப்பா'னென்று விரோதிஸ்வரூபமும், மதிநலமென்றும், உயிர்கள் காப்பா'னென்று உபாய ஸ்வரூபமும், அமரர்களதிபதி - கோலத்திருமாமகளோடுன்னை - என்று பரஸ்வரூபமும், தொழுதெழென்மனனே, அடியேன். என்று ஸ்வஸ்ரூபமும், உன்னைக் கூடாதே =தொழுதெழு, என்று ப்ராப்ய ஸ்வரூபமுமாக அர்த்த பஞ்சகம் சொல்லித்தாய்த்து.

ஆறும்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆறும்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற் பாட்டு — (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

உலக முண்ட பெருவாயா! வுலப்பில் கீர்த்தி யம்மானே!
நிலவுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி! நெடியா யடியே னுருயிரே!
திலத முலகுக் காய்நின்ற திருவேங் கடத்தெம் பெருமானே!
குலதோல் லடியே னுனபாதங் கூடு மாறு கூறுயே. (1)

"உலகமுண்ட பெருவாயனில், இப்படிக் கூப்பிட்டவிடத்திலும் வந்து முகம் காட்டாமையாலே, அனன்யகதி

காராய்க்கொண்டு பெரியபிராட்டியார் புருஷகாரமாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

அகல கில்லே னிறையுமேன் றலர்மேன் மங்கை யுறைமார்பா!
நிகரில் புகழா யுலகமூன் றுடையா யென்னை யாள்வானே!
நிகரி லமரர் முனிக்கணங்கள் விரும்புந் திருவேங் கடத்தானே!
புகலொன் றில்லா வடியேனுன் னடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே.(10)

உயர்வற, என்கிற பாட்டை "அகலகில்லே" னென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

உயர்வற - அகலகில்லேன் — கீழே தம்முடைய அபேக்ஷிதம் சடக்கென ஸித்திக்கைக்காகப் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு திருவேங்கட முடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார்.

ஆக ஒன்பது பாட்டாலும் [1] சரண்யன் ஸ்வரூபத்தைச் சொன்னார். இதில் தம்முடைய ஸ்வரூபத்தைச் சொல்லிச் சரணம் புகுகிறார்.

கீழே 'அடியே'னென்றும், 'அருவினையே'னென்றும், தன்னுடைய ஆகிஞ்சன்யத்தையும் சேஷத்வத்தையும், அவனுடைய சரண்யத்வத்தையும், அதுக்குறுப்பாகச் சொல்லிக் கொடுபோந்தார், இங்கே அதுதன்னையே பேற்றுக்குடலாகச் சொல்லிச் சரணம் புகுகிறார்.

இப்பாட்டு தன்னை த்வயத்தில் பதங்களோடொக்க [2] யோஜித்துக்கொண்டு தலைக்கட்டக்கடவது.

அதில் [3] அர்த்தப்ராப்தமான [4] அஹமர்த்தத்தை இங்கு 'அடியே'னென்கிறது. இது பாட்டுப்பிரவேசம்.

---

[1] சரண்யன் (शरण्यन्) ரக்ஷகனான எம்பெருமான். [2] யோஜித்துக் கொண்டு = சேர்த்துக்கொண்டு. [3] அர்த்தப்ராப்தம் (अर्थप्राप्तम्) =தொக்கிநிற்பது - 'போகிறேன்' என்று சொல்லுங்கால் 'நான்' என்பது சொல்லாமலே விளங்குவதுபோல்.
[4] அஹமர்த்தம் (अहमर्थम्) = 'நான்' என்பது (தன்மை).

ஸ்ரீ:—உயர்வற அகலகில்லேன் ஸ்ரீமன் = மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தத்தளவாக, ஒன்றுக்கொன்று உயர்வுந் தாழ்வுமா யிருக்கிறப்போலே; 'உயர்வென்று = உகார வாச்யையான பிராட்டிக்கு உயர்வுந் தாழ்வுமாவது, அது அறுகையாவது; உயர்வான [5] மிதிலை, [6] குண்டினபுரம், [7] க்ஷீராப்தி, அம்ருதம், தாமரைப்பூ, இவைகள் அதிசயமான பிறந்தகமா யிருக்க, அதில் ஸ்மரணையுமற்று அவற்றையகன்று விட்டு "உயர் நலம் அகலகில்லே னென்றிறையும்.

ஸ்ரீ: = ஸ்ரீயதே — ச்ரயதே. இதுக்கர்த்தம்—'ஸ்ரீயதே' தத்வபதிரிக்தங்களுக்கு ஸ்வாமினியாகையாலே வந்த ஏற்றம். 'ச்ரயதே, என்கையாலே. சேஷியான ஸர்வேச்வரனுக்கு ஆச்ரிதையாய், சேஷமாய் [8] பாரதந்த்ர்யைகபரை யாகையாலே உயர்த்தியற்றபடி.

உயர்நல மென்கின்றதும், அகலகில்லேனென்கிறதும் 'ச்ரயதே' என்கிறதும், பிறந்தகங்களை விட்டுத் திருமார்பை அகலகில்லேனென்கிறாள்.

அகலகில்லேனென்கிறவள் தான் ஆரென்னில்; நலமுடையவன் — ஸ்ரீமன் — 'அலர்மேல் மங்கையுறைமார்ப' னென்று சொல்லப்பட்ட நலம். அதாவது; பூவில் மிருதுவும், மதுவும், மணமும் [9] கிண்கிணிவாய்ச்செய்த பருவமும், [10] செவ்வியும், கூட்டியொரு பெண்ணாக வகுத்தாப்போலே யிருக்கிறவள், அகலகில்லேனென்கிறாள்.

ஸ்ரீமந் நாராயணன் நலமுடையவன் மங்கையுறை மார்பன். [11] நித்யாநபாயினியான பிராட்டி, 'எனக்குத் தேனே,

---

5 மிதிலா (मिथिला) = ஸீதாதேவிக்குப் பிறந்தகம், 6 குண்டின புரம் (कुण्डिनपुरम्) — = ருக்மிணிக்குப் பிறந்தகம்.
7 க்ஷீராப்தி (क्षीराब्धि) = லக்ஷ்மிக்குப் பிறந்தகம். 8 பாரதந்த்ர்யைகபரா. (पारतन्त्र्यैकपरा) = பகவானுக்கு அடங்கிப்பணி விடைகள் செய்வதிலேயே நோக்கமுள்ளவள். 9 கிண்கிணிவாய்— சிறுசதங்கையின் வாய்போலச் சிறிதே மலரத்தொடங்குதல்.
10 செவ்வி — அழகு. 11 नित्यानपायिनी — என்றும் விட்டுப்பிரியாதவள்.

பாலே, கன்னலே, அமுதே" என்கிற போக்யதையைப் பற்றச் சொல்லுகிறாள்.

"ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:" என்கிற போக்யதையைப்பற்ற "அகலகில்லே னகலகில்லேன்" என்கிறாள்.

தாமரைகளுக்குள்ள ஸௌகந்த்யாதிகளி னளவிறே அவனது ஸர்வகந்தத்துக்கும் ஸர்வரஸத்துக்கும் நேர் நிற்கவற்றோ? ஆகையாலெ 'இறையு மகலகில்லே'னென்கிறாள்.

யவனவன் என்று திவ்யாத்ம ஸ்வரூபஞ் சொல்லுகிறது.
[12] வ்யாபகமும் — ஸ்ரீய: [13] பதியாயே வ்யாபிப்பது.

ஆகையாலே உயர்நலமுடையவன் யாவனொருவன் அவன் ச்ருதிப்ரஸித்தனானவன். எனக்கு மயர்வற மதிநல மருளி [14] "சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று பற்றும்படி.

'நிகரில் புகழாய்' என்கிற வாக்யங்களாலே புருஷகார ஸாபேக்ஷனான அதிகாரியைச் சொல்லுகிறது. புருஷகார ஸாபேக்ஷமும், அதிகாரி ஸாபேக்ஷமு, மானவனென்று சரண்யனைச் சொல்லுகிறது. 'புருஷகாரமுமாய் ப்ராப்யையுமாயிருக்கு' மென்று பிராட்டியைச் சொல்லுகிறது. 'சரணௌ = திருவடிகளை; 'சரணம்=உபாயமாக; ப்ரபத்யே=பற்றுகிறேன். என்றது = அதிகாரி ஸ்வரூபம்.

மயர்வற மதிநலமருளின னென்றது = பக்தி ரூபாபன்ன ஜ்ஞான முடைய அதிகாரி.

'நிகரில் புகழாயுலக மூன்றுடையா யென்னையாள்வானே! என்ற அதிகாரி.

---

[12] வ்யாபகமும் = எங்கும் பரந்திருத்தலும்.

[13] ஸ்ரீய: பதியாயே = திருமகளின் நாயகனாகிய எம்பெருமான், சற்றும் பிரிந்திருக்கவியலாத லக்ஷ்மியுடன் கூடவே ஸர்வகாலமும், இருப்பவனாதலால்; எல்லா வஸ்துக்களிலும் பரந்து நிற்கும் பொழுதும் லக்ஷ்மியும் அவ்விதமே இருக்கிறாளென்றாராய்த்து.

[14] चरणौ शरणं प्रपद्ये = ஸ்ரீமானான நாராயணனுடைய திருவடிகளைச் சரணமாக அடைகிறேன்.

நிகரில் புகழாயென்றது = [15] ஸாத்யோபாயங்கள் [16] ஸித்தோபாயபூதனானவனுக்கு ஸஹாயமாகவேண்டா வென்கிறது.

நிகரில் = ததேகோபாய மவனே, என்றபடி. இந்தப்புகழை யுடையவன் யாவனொருவன், அவன் மயர்வற மதிநல மருளினன்.

உபாயாந்தரங்களை [17] ஸவாஸனமாக விடுவித்து அவனே 'உபாயோபேயம்" என்கிற "ஜ்ஞானப்ரேமங்களை நிர்ஹேதுகமாக வருளினவற்றையிறே; 'நிகரில் புகழா' யென்றது. அதாவது "சரணெளசரண" மென்கிற [18] ததேகோபாய த்வம்.

நிகரில் புகழாவது; நித்ய விபூதியிலே நித்யமுக்தர்க்கு அதிபதியாயிருக்குமதும், [19] ச்வேதத்வீபவாஸிகள் ஸேவிக்க இருக்குமதும், அயோத்யா வாஸிகளுக் கபிராமனுப் வஸிஷ்டாதிகள் நடுவேயிருக்குமதும், த்வாரகையிலே யாதவர்கள் ஸேவிக்க இருக்குமதும்; நிகரில் புகழல்ல.

[20] அந்தர்யாமித்வமும் கண் கொண்டு காணவொண்ணாது. ப்ரமாண ப்ரஸித்தி யத்தனை. அவை யொன்றுக்கொன்று அதிசயமாகையாலே நிகராகவிருக்கும்.

---

15 ஸாத்யோபாயம் (साध्योपायः) = பக்தி, ப்ரபத்தி, என்பவை. சேதனனால் ஸாதிக்கப்பட்டு (செய்யப்பட்டு) மோக்ஷத்திற்கு உபாயமாகுபவை.

16 ஸித்தோபாயம் (सिद्धोपायः) = பகவானுக்கு இந்தப் பெயர். மோக்ஷம் அவனாலே கிடைக்கிறது. அதனால் அவன் உபாயமென்றது. பக்தி முதலியவைபோல் புருஷனால் செய்யப்பட வேண்டியவ னல்லனாகையால் ஸித்தனென்றது.

17 ஸவாஸநம் (सवासनम्) = வாஸனையுடன் கூடியதாக = இங்கு வாஸனை என்பது நாற்றமல்ல (அவைகளின்) ஸூக்ஷ்மமான பாகம்.

18 ததேகோபாயத்வம் (तदेकोपायत्वम्) = அவனே உபாயமென்றிருத்தல். 19 ச்வேதத்வீபம் (श्वेतद्वीपम्) = பாற்கடலுக்கப்பாலுள்ள விசாலமான தீவு. 20 அந்தர்யாமித்வம் (अन्तर्यामित्वम्) = எல்லா உயிர்களுக்குள்ளும் ப்ரவேசித்து அவைகளுக்குத் தெரியாமலே; அவைகளை அதனதன் வினைப்பயனை அனுபவிக்கும்படி செய்துகொண்டிருத்தல்.

இவர் 'நிகரில் புகழா' யென்றது, [21] காகமும் [22] வானரமும் [23] வேடுமானவர்களுக்கு முகங் கொடுத்துக்கொண்டு நிற்கிற நிலை.

அதிலும் [24] அவஸ்துவான எனக்கு நிர்ஹேதுகமாக அருளின அருளுக்கு ஸத்ருசமுண்டோ? என்கிறார். காகமும், வானரமும், நித்யஸூரி [25] கோடியிலே யாம்படியன்றோ? என் நிலை. அவற்றுக்கு முகங் கொடுத்தது 'புகழ். எனக்கருளினது 'நிகரில் புகழ்.

க்ருபாகுணத்துக்கு வாத்ஸல்யாதிகள் நேராகமாட்டாது. எங்ஙனே யென்னில்;

க்ருபைதான் ஸர்வகுணங்களுக்கும் காரணமுமாய், [26] ப்ரேரகமுமாகையாலே. 'அருளின' னென்றதை 'நிகரில் புகழா' யென்கிறார்.

ஆக க்ருபாப்ரேரிகை பிராட்டி. க்ருபா ப்ரேர்யன் எம்பெருமான். க்ருபாபாத்ரம் அடியேன். ஆகையாலே பகவானுக்கு வாத்ஸல்யாதிகள் புகழல்ல. க்ருபையே அடியவர்க்குப் புகலாகையாலே நிகரில் புகழா யென்றது. [27] காருண்ய ரூபயா' என்றது.

"ப்ராப்த்யே" யவனவன் "உலகமூன்றுடையா யென்னை யாள்வானே" இப்படி யிருக்கிறவன் யாவனொருவன் — அவன்

---

[21] காகம் (काकम्) = காகாஸுரன். [22] வானரம் (वानरः) = ஸுக்ரீவன். [23] வேடு = குஹன். [24] அவஸ்து (अवस्तु) = பொருளேயல்லாதது. वस्तु = உளது. अवस्तु = இல்லாதது. (துச்சம் - என்றும் இதைச் சொல்வது) - (உதாரணம்) முயற் கொம்பு, மலடி மகன், ஆகாயத்திலுண்டானபூ, முதலியன. இங்கு ஆழ்வார் தன்னுடைய தாழ்ந்த நிலையைக் குறிக்கையில் அதன் எல்லையையே எடுத்தார்.

[25] कोटि = ஸ்தானம் - நிலைமை. [26] प्रेरकम् = தூண்டுவது. प्रेर्यम् = தூண்டப்படுவது. [27] காருண்யரூபயா (कारुण्यरूपया) = அருளே வடிவெடுத்தவள் (பிராட்டி).

க்ருபையாலே வாத்ஸல்யாதி குணப்ரவாஹம் ப்ரவஹிக்கை யாலே, மூன்றுலோகமும் நிறைந்து என்னளவு பூரித்தது.

[28] "லோக்யத இதி லோக:" என்றதிலே, தாமும் ஒருவனு யிருக்க "என்னையாள்வானே" என்றது; [29] த்ரிவிதசேதனரையும் [30] அதிகாராநுகுணமாக நியமித்து இவரை [31] க்ருபாநுகுணமாக நியமித்தது, அத்யந்தம் [32] பாரதந்த்ர்ய பராகாஷ்டையான 'பூசுஞ் சாந்தில்' படியே தனக்கு போக்யமாகக் கொண்டாளுகிறபடி.

பத்தர் — லீலைக்கும், முக்தர் - க்ருபைக்கும், நித்யர்-கைங்கர் யத்துக்கும், ஆனுப்போலே இவர் போக்யதைக்கே வடிவானர். ஆகையாலே, தன்னுகப்பிலே வருவார் இவரொருவரு மாகை யாலே "என்னையாள்வானே, என்று அவனுக்கு [33] நிரூபகமாய்த்து.

[34] உத்தரவாக்யம் 'ஸ்ரீமதே நாராயணாய நம:" 'அயர்வறு மமரர்களதிபதி யவனவன் "நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்புந் திருவேங்கடத்தானே!

ஸ்ரீமதே = பெரியபிராட்டியோடே கூடயிருந்தவனுக்கு. "அயர்வற" = அசர்வற்ற அமரர்களாய், அம்ருதானந்த மக்நரானவர்கள் பரிசர்யை பண்ண வீற்றிருக்கிற 'ஒண்டொடி யாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப.

'நிகரிலமரர்' பிரம்மாதிகள் [35] அமரத்வம் [36] கர்மமடியாக வாகையாலே நிகருண்டு இவர்க்கு பகவதனுபவத்தாலே வந்த அமரத்வமாகையாலே நிகரற்றிருக்கும்.

---

28 लोक्यत इति लोकः = 'லோகம்' என்றால் காணப்படுவது என்று பொருள். 29 த்ரிவித சேதனர் = பத்தர் - முக்தர் - நித்யர் - என்கிற மூன்றுவகை 'சேதனர்கள்' (உயிர்கள்).
30 அதிகாராநுகுணம் (अधिकारानुगुणम्) = அவரவர்கள் சக்திக் கேற்றவாறு. 31 க்ருபாநுகுணம் (कृपानुगुणम्) = தன் அருளுக் கேற்றவாறு. 32 பாரதந்த்ர்யபராகாஷ்டை (पारतन्त्र्यपराकाष्ठा) = (எம்பெருமானுக்கே) அடிமையாயிருத்தலின் எல்லை நிலம்.
33 நிரூபகம் (निरूपकम्) = சான்று. 34 உத்தரவாக்யம் - (उत्तरवाक्यम्) 'த்வயம்' என்கிற மந்திரத்தில் இரண்டாவதான வாக்யம். 35 அமரத்வம் (अमरत्वम्) = இறவாதிருத்தல்.
36 கர்மமடியாக = வினைப்பயனாக.

முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானை. கடலில் [37] அம்ருதாசிகளன்று. "நிகரில் அமரராவார் = அமுதில்வரும் பெண்ணமுதத்துக்கும் ஆராதவமுதாசிகளான அமரர்.

முனி = முக்தர். கணங்கள் = பத்தர். உயர்வற, மயர்வற, அயர்வற, துயரற, என்று — நித்யர், முக்தர், பத்தர், ஈச்வரன் இவர்கள் அடைவிலே துயர் தீர்ந்தது.

உபய விபூதிநாதனான தனக்குத் திருவேங்கட முடையானான பின்பு, எல்லார் [38] கடங்களும் வெந்ததாய்த்து.

ஆகையால் [39] "ருணம் ப்ரவ்ருத்தமிவ" என்றவன் ஆகையாலே "திருவேங்கடத்தானே" என்று நிரூபகமாய்த்து,

திருவென்றது, சிரிய நித்யையும் அஹமந்நமாயும் 'விரும்பும் திருவேங்கடத்தானை' உலகங்களுக்கெல்லாம் ஒருயிர் ஆனவனை.

"ஸ்ரீமதே நாராயணாய" 'அயர்வறு மமரர்களதிபதி' நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானை.

"நம:" துயரறு சுடரடி தொழுதெழென்பனனே. 'புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே.

நம:, தொழுது எழு, 'உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே. ஆகிஞ்சன்யமும் அநந்யகதித்வமுமுடைய சேஷபூதன், துயரறு சுடரடி யானதடைய [40] அசரண்யசரண்யனான உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேன். ப்ராப்யமும் அவனாகையாலே மனனே தொழுது [41] வர்த்தி என்கிறார்.

ஆறும்பத்து பத்தாம் திருவாய் மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

37 अमृताशिकल् = அமுதத்தை உண்பவர். 38 கடம் (कटम्) = பாபம். 39 ருணம் ப்வ்ருத்தமிவ (ऋणं प्रवृद्धमिव) = வட்டி அதிகமாக ஏறி வளர்ந்துவிட்ட கடனைப்போல். 40 அசரண்ய சரண்யன் (अशरण्य शरण्यन्) = திக்கற்றவர்குத் துணை (காப்பவன்) 41 वर्धि.

ஸ்ரீ:

ஏழாம்பத்து முதல்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(ஆசிரியத்துறை)

உண்ணி லாவிய வைவ ராற்குமை தீற்றி யென்னையுன் பாத
[பங்கயம்
நண்ணி லாவகை யோலி வானின்னு மேண்ணுகின்றாய்-
எண்ணி லாப்பெரு மாய னே! யிமை யோர்க ளேத்து
[முலக மூன்றுடை
அண்ண லே! அமு தே! யப்ப னே! யென்னை யாள்வானே! (1)

"உண்ணிலாவியில் இப்படி சரணம் புக்கவிடத்திலும் இவர் காரியஞ் செய்யாமையாலே மிகவும் அவஸந்நராய்; [1] விஷயங்களும் [2] இந்திரியங்களும் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே என்னை வைத்தபோதே கைவிடப் பார்த்தானாகவேணும்" என்று நிச்சயித்து; அவன் குணங்களைச் சொல்லி, என்னைக் கைவிடாதொழிய வேணுமென்று கூப்பிட்டார்.

இன்ன முதேனத் தோன்றி யோரைவர் யாவ ரையும்
[மயக்க-நீவைத்த
முன்னை மாயமேல் லாம்முழு வேரரிந் தேன்னையுன்
சின்ன முந்திரு மூர்த்தி யுஞ்சிந்தித் தேத்திக் கைதொழ
[வேய ருளேனக்கு-
என்னம் மா! வேன்கண் ணா! விமை யோர்தங் குலமுதலே! (8)

"உயர்வற" என்கிற பாட்டை "இன்னமுதெனத்தோன்றி" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

"உயர்வற இன்னமுதெனத்தோன்றி; மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவாக, சப்தாதிவிஷயங்களை போக்யமாக புத்தி பண்ணி, ச்ரோத்ராதிகளை விஷயங்களிலே மூட்ட புஜிக்கும்படி இருக்கிற இதுதான்; தந்தாம் ஸுக்ருதத்தாலேயாய் [3] உச்ச்ராய மற்றது.

---

[1] விஷயங்கள் (विषया:) = ஐம்புலன்கள். [2] இந்திரியங்கள் (इन्द्रियाणि) = ஐம்பொறிகள். [3] உச்ச்ராயம் (उच्छ्रायम्) = உயர்வு.

உயர் நலமுடையவனை நீ நித்யானந்தயுக்தனாகயிருக்க; யவனவன், "நைவேனென்னை" இந்திரிய வச்யனான என்னை.

இன்னமுதெனத்தோன்றிய = சப்தாதிகளே பரமபோக்யமாம்படி ஸ்ம்ருதிக்கு விஷயமாயற்றது.

அதுதான் [4] விபாகத்தில் பலிக்குமது முகப்பிலே யாகப் பெற்றேனாகில் கைவிடலாங்கிடீர். [5] "அக்ரே யத் அம்ருத மிவ" இறே. [6] பரிணாமத்திலே விஷமிறே. விபாகத்திலே பலிக்குமது முகப்பிலே யாகப்பெற்றேனாகில் கைவிடலாம்.

உபக்ரமத்திலே தோற்றிற்றாகில் மேல்விழா தொழியலாய்த்தே. பழியும் தர்மஹாநியுமாய், மேல் நரகமானாலும் விடப்போகாதிருக்கை. [7] ப்ரக்ருதி [8] ப்ராக்ருதங்களுக்கு, இங்ஙனேயொரு தண்மையுண்டு.

ஓரைவர் — தனித்தனியே ப்ரபலமாய் [9] அத்விதீயமான சப்தாதிவிஷயங்களைந்தும்.

"யாவரையும் மயக்க" க்ஷுத்ரரான மனுஷ்யரோடு, அளவுடைய பிரம்மாதிகளோடு, வாசியற அறிவு கெடுக்கும்படிக் கிடாகவாய்த்து அவைதானிருப்பது.

இவற்றினடைவு உமக்குத் தெரிந்தபடி என்னென்ன; நீ மயர்வற மதிநல மருளுகையாலே, "மயக்க நீ வைத்த" நீயருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே அது விஷயமாய்த்தோற்றிற்று.

---

[4] விபாகம் (विपाकम्) = பக்குவமான நிலைமை. (முடிவு)
[5] அக்ரேயத் அம்ருதமிவ (अग्रे यत् अमृतमिव) = अग्रे = முதலில் अमृतमिव = அம்ருதம்போல் (இனிப்பானது). [6] பரிணாமம் (परिणामः) = (இங்கு) முடிவு = கடைசி. [7] ப்ரக்ருதி (प्रकृति) = (சோற்றுக்கு அரிசிபோலவும், துணிக்குப் பஞ்சுபோலவும், பலவிதமான வஸ்துக்களால் நிறைந்த இவ்வுலகெல்லாவற்றுக்கும் காரணமான ஜடப் (அறிவற்ற) பொருள். [8] ப்ராக்ருதம் (प्राकृतम्) = ஷை ப்ரக்ருதியின் பலவிதமான தோற்றங்கள்.
[9] அத்விதீயம் (अद्वितीयम्) = நிகரற்றது.

யவன் = யாவனொருவன், அவன் ச்ருதி ப்ரஸித்தனானவன். மயர்வற — மயங்கப் பெறுநிற்கிற "முன்னமாய மெல்லாம் முழுவேரரிந்து" அனாதியான ஸம்ஸாரத்தையெல்லாம் ஊசி வேரோடே போம்படி ஸவாஸனமாகப் போக்கி.

'என்னை' [10] ஸம்ஸாரபயபீதனான என்னை, செய்த அம்சத்தே த்ருப்தனாயிருக்குமிறே அவன். ஜ்ஞானலாபம் பண்ணிக் கொடுத்தோ மென்றிறே அவனிருக்கிறது. அது போதாதிறே. ஸம்ஸாரத்தை ஸவாஸனமாகப் போக்கவேண்டியிருக்குமிறே இவருக்கு.

நீ அயர்வறு மமரர்களதிபதியானவன் "உன் சின்னமும் திருமூர்த்தியும்" அவர்வறுமமரர் ப்ரகிருதிபரவசரல்லாதவர்கள். பரமபதநாதனைப் பரிசர்யை பண்ணி, "தவளவொண் சங்கு சக்கர மென்றும், தாமரைத் தடங்கண்ணனென்றுஞ் சொல்லுகிறபடியே, திவ்யாயுதங்களையும், திவ்யாவயவங்களையும், அவற்றுக்கு ஸத்ருசமான திருமேனியையும் 'சிந்தித்தேத்திக் கைதொழவே அருளெனக்கு.

இவற்றை நெஞ்சாலே நினைத்தும், உள்ளடங்காமல் வாய் விட்டு ஸ்தோத்ரம் பண்ணி, பின்னை திருவடிகளிலே விழும்படிக் கீடாக அருளவேணும்.

வாயாலே ஒன்று சொல்லாநிற்க, நெஞ்சு வேறேயொன்று நினைத்தால்; உனக்குச் சேஷமென்று வேறே போரிடத்தே தொழில் செய்தலன்றிக்கே; மனோவாக்காயங்கள் மூன்றும் உன் துயாறு சுடரடி தொழுது எழும்படி, ஹேயப்ரதிபடமாய் நிரவதிகதேஜோரூபமான திருவடிகளிலே ப்ரவணமாம்படி பண்ணியருளவேணும்.

என்னம்மா! = எனக்குத் தாய்போலே பரிவனானவனே! என் கண்ணா! = அந்தப் பரிவை [11] அர்த்தக்ரியாகாரிய மாக்கினவனே!

---

10 **संसारभयभीतन्** = ஸம்ஸாரத்தினின்றும் (பிறப்பும் - இறப்புமானது ஸம்ஸாரம்) பயத்தினால் நடுக்கமுற்றவன். 11 அர்த்தக்ரியாகார்யம் **(अर्थक्रियाकार्यम्)** = பயனுள்ளது.

"இமையோர் தம் குல முதலே! ஒரு நாடாக உன்னைக் கொடுத்து அனுபவிக்கும்படி இருக்கிறவனல்லையோ? அனேகர் ஆசைப்பாடு ஒருவனுக்குண்டானால் கொடுக்கலாகாதோ ?

என் மனனே! என்னம்மா! என் கண்ணு! இமையோர் தம் குலமுதலே! த்ரிவிதகரணமும் உன் [12] வசவர்த்தியன்றோ? இத்தை யவன் மேலே வைத்திரு. என்னம்மா இத்யாதி = இம் மூன்றையு முன்மேலே வைத்தனுபவிக்கும்படி பண்ணியருள வேணுமென்கிறார்.

ஏழாம்பத்து முதல்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து இரண்டாம் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

கங்குலும் பகலுங் கண்டுயி லறியாள் கண்ணநீர் கைகளா [லிறைக்கும்
சங்குசக் கரங்க ளென்றுகை கூப்புந் தாமரைக் கண்- [ணென்றே தளரும்
எங்ஙனே தரிக்கே னுன்னைவிட் டென்னு மிருநிலங் கைதுழா [விருக்கும்
செங்கயல் பாய்நீர்த் திருவரங் கத்தா யிவடிறத் தென் [செய்கின் றாயே? (1)

"கங்குலும் பகலில் இவர் தசையை அனுஸந்தித்த ஈச்வரன், தான்நினைத்த காரியந் தலைக்கட்டு மளவும் இவரைத் தரிப்பிக்கும் வழியேதோ வென்று சிந்தியாநிற்க, அது பற்றாமை மோஹங் கதையாக, இவள் தசையைக் கண்ட திருத்தாயார் இவளைப் பெரியபெருமாள் திருவடிகளிலே பொகட்டு, இவளிடையாட்டம்

---

[12] வசவர்த்தி (वशवर्ति) = ஸ்வாதீனமானது.

பற்றி நீர் செய்ய நினைத்திருக்கிற தென்னென்று கேழ்க்கிற பாசுரத்தாலே [1]ஸ்வதசையை அருளிச்செய்கிறார்.

"உயர்வற" என்கிற பாட்டைக் "கங்குலும் பகல்" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

ஸ்ரீ: ப்ரம்மானந்தந்தொடங்கி மனுஷ்யானந்தங்களும் அஸ்திரமாய் அல்பமாயற்றது. அங்ஙனன்றிக்கே, ச்ரிய:பதியான ஸர்வேச்வரன், ஆழ்வாருக்கு 'மயர்வற மதிநல' மருளுகையாலே பரபக்திபர்யந்தமாகப் பிறந்தது.

"தர்சனம் பரபக்தி: ஸ்யாத் பரஜ்ஞானந்து ஸங்கம:, [2]புநர்விச்லேஷபீருத்வம் பரமா பக்தி ருச்யதே" என்கிற படியே, பரபக்தியாலே தர்சனமுண்டாய், பரஜ்ஞானத்தாலே [3]ஸங்கத்தையாசைப்பட்டு பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அணைக்கைக்காகக் கையை நீட்ட, [4]ஜ்ஞான ஸாக்ஷாத்கார மாகையாலே கைக்கெட்டாமல் மோஹங்கதராக, பரிவரான பாகவதர்கள் பெரியபெருமாள் ஸந்நிதியிலே கொணர்ந்து விட்டு இவர் தசையை அறிவிக்கிற பாசுரத்தாலே அருளிச் செய்கிறார்.

உயர்வற கங்குலும் பகலும் என்றபடி- உயர்வு மனுஷ்யா னந்தந்தொடங்கி பிரம்மானந்தமளவாக [5]திவாராத்ரவிபாகமா யிருக்கையாலே "கங்குலும் பகலும்" என்கிறது. "அற" என்றது 'திவாராத்ரவிபாகமற கண்டுயிலறியாள்' என்றபடி.

இத்தால் லீலாவிபூதியிலுள்ளார் ஊணுமுறக்கமுமாகக் களிக்க, இவளுக்குஅதில்லை என்றபடி. 'உயர்வற' என்று லீலா விபூதியைச் சொல்லிற்று. 'உயர்நலமுடையவன்' என்று நித்ய விபூதியோகஞ் சொல்லுகிறது. 'கங்குலும் பகலும்' என்கிறது; கங்குல் = லீலாவிபூதி; பகல் = நித்ய விபூதி.

---

[1]ஸ்வதசை (स्वदशा) = தன் நிலை. [2]புநர்விச்லேஷபீருத்வம் (पुनर्विश्लेषभीरुत्वम्) = 'மீண்டும் பிரிவு ஏற்படுமோ' என்கிற அச்சம். [3]सङ्गम् = சேர்க்கை. [4]ज्ञानसाक्षात्कारम् = அகக்கண்ணால் அறிதல். [5]दिवारात्रविभागः = பகல் இரவு என்கிற பாகுபாடு.

'கண்டுயிலறியா'ளென்கையாலே இவருக்கு உபயவிபூதியும் ஒரு பகலாயிருக்கிறபடி. காண்பதற்கு முன்பு உறக்கமில்லை, கண்டால் [6]" ஸதா பச்யந்தி" யாகையாலே உறக்கமில்லை, என்றபடி.

யவனவனென்று திவ்யாத்மஸ்வரூபம் எப்போதும் பிரகாசிக்கிறபடி. அதுக்கு மேலே மதிநல மருளுகையாலே பாஹ்யஸம்ச்லேஷங் கிடையாமல் ஹர்ஷசோகங்க ளிரண்டாலும் கண்கள் நீர் பெருகத்தொடங்கிற்று. இந்த மதிநல மருளினவனைக் காண ஆசைப்பட்டு, இந்த ஆர்த்தியே [7]செப்பேடாக வருமென்று பார்த்துக் கண்ணை நீர் மறையாமைக்காக, கைகளாலே இறையாநிற்கும். முற்று மாறுமையாலே இறைக் கையே யாத்ரையாய்த்து.

யவன் இந்தவதிகாரி, அவன் [8]ப்ரதமபரிஸ்பந்தமே தடங்கிக் காணவேணுமென்று ஆசைப்பட்டு, 'கண்ணநீர் கைகளாலிறைத்து சங்குசக்கரங்க ளென்று கைகூப்பும்' சங்கசக்கரங்களை யுடைய னவன் என்னார்த்தி தீர்க்க வந்ததோ என்று உபகாரஸ்ம்ருதி யாலே கைகூப்பும்.

மயர்வற்ற மதிநலத்தால் வந்த பக்திரூபாபன்னஜ்ஞானத் தாலே வந்த [9]வெளிச்செறிப்பாலே கைகூப்பும். மனஸுக்குத் திருவாழி யாழ்வான் [10]அதிஷ்டானதேவதை யாகையாலே, ஆழ்வான் ப்ரகாசமும் ஜ்ஞானப்ரகாசமுமாய், அதிப்ரகாச மாய்த்து. "பத்தாஞ்சலிபுடா ஹ்ருஷ்டா:" என்றஞ்சலிபண்ணிப் பார்த்துக்கொண்டிராநின்றாள்.

யவன் மயர்வற்றவன், அவனருளின அந்த "தாமரைக் கண்ணென்றே தளரும்" *ஆழ்வார்களளவும் அலைஎறிகிற கண். ஆழ்வார்களை விடிலு மும்மை விடேனென்று நோக்கினான்.

---

[6]ஸதாபச்யந்தி (सदा पश्यन्ति) = எப்பொழுதும் (இடைபறுமல்) பார்த்துக்கொண்டிருக்கின்றனர். [7]செப்பேடு—தாமிரசாஸனம்.
[8]ப்ரதமபரிஸ்பந்தம் (प्रथम परिस्पन्दम्) = முதன்முதலாக உண்டா கிற பழக்கம். [9]வெளிச்செறிப்பு = பிரகாசம்.
[10]அதிஷ்டானதேவதை (अधिष्ठान देवता) = ஒரு பொருளைத் தன் னுடையதாக நினைத்து அபிமானித்துவரும் தேவதை.
*ஆழ்வார்கள் (இங்கு) சங்கு சக்கரம் இவ்விரண்டும்.

‘தாமரைக்கண்களால் நோக்காய்’ என்றபடியே யருளினன். கண்ணொன்றே தளரும் = அங்ஙனே வந்து தோற்றக் காணாமை யாலே தளருமாய்த்து.

அயர்வறு மமரர்களதிபதியான ‘உன்னை விட்டெங்ஙனே தரிக்கே’ னென்னும். அயர்வு = தரியாமை, விச்லேஷியாமல் அநுபவிக்கிற நித்யரோ பாதியும் போராதோ? இவள் தரியாமை. யவன் “உன்னைவிட்டெங்ஙனே தரிக்கே” னென்றவன் அவன் அதிபதியாய் உபயவிபூதிநிர்வாஹகனாயிருக்க, நானிழந் திருப்பதே என்கிறாள்.

சுடரடி தொழுதெழ நினைத்து, இது [11]லபிக்குமோ லபியாதோ வென்று அங்கலாய்ப்பாலே “இருநிலங் கைதுழாவியிருக்கும்” விபூதித்வயமும் இவர் கைக்குள்ளே யடங்கி ஆராயும்படியாய்த்து.

தரியாமையாலே தரைதுழாவாநின்றாள். ஒரு பீங்கானுள் பட்ட சந்தனம் பட்டது பூமியும் படாநின்றது. துயராற்றும் இருநிலங் கைதொழாநிற்கும்.

“செங்கயல்பாய்நீர்த் திருவரங்கத்தா யிவள் திறத் தென் செய்கின்றாயே?” துயராறு = ஆர்த்தியாகிற துயர் தீர்க்கவன்றோ? திருவரங்கததே வந்து சாய்ந்தருளிற்று. திருவரங்கத்தாயுன் சுடரடி = அத்யந்தம் ஸுலபனான உன்னுடைய ஹேயப்ரத்ய நீகமான திருவடிகளைத் தொழுதெழென் மனனே. எனக்கு [12]பவ்யமான நெஞ்சே தொழுதெழென்னுநின்றாள்.

ஏகதேசவாஸிகளாய் ஸாரூப்யம் பெற்று, அவன் நீர்மையே தாரகமாய் [13]“ஜலான் மத்ஸ்யாவிவோத்ருதௌ” என்றிருக்கிற வர்களைப் போலன்றோ இவளும். செங்கயல் = [14]“முஹூர்த்த மபி

---

[11]லபிக்கும் = கிடைக்கும். லபியாது = கிடைக்காது.

[12]பவ்யம் (भव्यम्) = அடங்கியது. [13]ஜலான்மத்ஸ்யாவி - வோத்ருதௌ (जलान्मत्स्याविवोद्धृतौ) = நீரிலிருந்து வெளியில் எடுத்தெறியப்பட்ட மீன்கள்போல. [14]முஹூர்த்தமபிஜீவாவ: (मुहूर्तमपि जीवावः) = சிலநாழிகள்வரைகூடப் பிழைத்திரோம்.

ஜீவாவ:" என்னுமளவல்ல. [15]"நஜீவேயம் க்ஷணமபி" என்றிருக்கிற இவள்திறத் தென்செய்கின்றாயே?

ஆர்த்தரக்ஷணத்திலே [16]தீக்ஷித்து, கோயிலிலே [17]சாலா-ப்ரவேசம் பண்ணி, உன் சீலாதிகுணவிசிஷ்டரான [18]ச்ரௌதிகளோடே சரணாகதரக்ஷணம் பண்ணவிருக்கிற உமக்கு, ஆர்த்தருமாய் சரணாகதருமான இவள்திறத் தென்செய்கின்றாய்?

பரத்வமும் வ்யூஹமும் [19]தேசவிப்ரக்ருஷ்டம். அவதாரங்கள் [20]காலவிப்ரக்ருஷ்டம். ஸர்வதேச—ஸர்வகால—ஸர்வாவஸ்தையிலும் பண்ணியனுபவிக்கலாவது கோவிலிலே பணித்தாய் வந்திருக்கிற உன்னைவிட் டெங்ஙனே தரிப்பது?

ஊணுனு முறக்கத்தாலும், சூது சதுரங்கத்தாலும் பொழுதுபோக்குமவளோ இவள்? உன்னடிமையாலே தரிக்கப் பார்க்கு மிவள்திறத் தென்செய்கின்றாய்? தொழுதெழும்படி பார்க்கிறாயோ? கைவிடப்பார்க்கிறாயோ? என்கிறாள்.

---

[15]நஜீவேயம்க்ஷணமபி (न जीवेयं क्षणमपि) = ஒரு விநாடியும் உயிர் தரியேன்.

[16]தீக்ஷா (दीक्षा) = குறித்த காரியத்தில் உறுதியான எண்ணமும் அதற்கேற்ற கோலங்களும். இவைகளை ஏற்று.

[17]சாலாப்ரவேசம் (शालाप्रवेशः) = யாகம் (வேள்வி) செய்யுமவன், தன்னுடைய (வழக்கமாய் இருந்துவருகிற) இடத்தைவிட்டு, யாகத்திற்கெனவே உண்டுபண்ணப்பட்ட புதியதோர் இடத்திற்குப் (யாகசாலை) போவது வழக்கம். அவ்விதமே இங்கு எம்பெருமான் 'துன்புற்றாரைக் காப்பது' என்ற வேள்வியைச் செய்யவேண்டி, தன்னுடைச்சோதியை விட்டு, அவ் வேள்விக்கெனவே அமைக்கப்பட்ட 'திருவரங்கம்' என்னும் திருப்பதியில் (யாகசாலையில்) வந்து புகுந்தானென்றபடி.

[18]ச்ரௌதிகள் = (श्रौतिकळ्) = வேள்வி செய்வதில் யஜமானனுக்குஉதவிபுரியுமவர்கள். [19]தேசவிப்ரக்ருஷ்டம் (देशविप्रकृष्टम्)—எல்லோரும் எளிதில் அணுகமுடியாத இடத்திலுள்ளவை.

[20](कालविप्रकृष्टम्) = காலங்கடந்தவை — அல்லது — வெகு நாள்களுக்குப் பிறகு நிகழப்போகின்றவை.

ஆர்த்தையான "இவள்" திறத்து என்று [21]விரஹந்தின்ற உடம்பைக் காட்டுகிறாள். நித்ய விபூதியை விட்டு, ரக்ஷணத்திலே த்வரிதனாய் வந்திருக்கிற உன் ஸ்வரூபமெது? விளம்பமெது? விளம்பம் பொறுதாரோடே விளையாட்டுண்டோ?

என் செய்கின்றாயே? தொழுகை ஸ்வரூபமென்றிருக்கிறாயோ? குற்றமென்று கைவிடுகிறாயோ? என்கிறாள்.

ஏழாம்பத்து இரண்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து மூன்றாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

வெள்ளைச் சுரிசங்கொ டாழி யேந்தித் தாமரைக் கண்ணனென்னெஞ்சி னூடே
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீ ரென்சொல்லிச் சொல்லுகேனன்னை மீர்காள்!
வெள்ளச் சுகமவன் வீற்றி ருந்த வேத வொலியும் விழா வொலியும்
பிள்ளைக் குழாவிளை யாட்டொ லியு மறாத்திருப் பேரையில் சேர்வனானே. (1)

"வெள்ளைச் சுரி சங்கில்" இப்படி மோஹித்துக்கிடந்தவர் திருநாமப்ரஸங்கத்தாலே மோஹந் தெளிந்து, தென்திருப்பேரையிலே எழுந்தருளியிருக்கிற மஹாநெடுங்குழைக்காதன் பக்கலிலே [1]அபஹ்ருதசித்தரானபடியை யருளிச்செய்தார்.

'உயர்வற' என்கிற பாட்டை "வெள்ளைச் சுரிசங்கு" விவரிக்கிறது. எங்ஙனேயென்னில் :—

---

[21]விரஹம் — பிரிவாற்றாமை.
[1]அபஹ்ருதசித்தர் (अपहृत चित्तर्) = மனதைப்பறிகொடுத்தவர்.

உயர்வற மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் தந்தாம் [2]ப்ராப்யப்ராபகங்களுக்குத் தகுதியான [3]ப்ரமாணங்களைத் தந்தாம் நெஞ்சுகளிலே கொண்டு நடத்தாநிற்பர்கள். அதுதான் அல்பாஸ்திர மாகையாலே உயர்வற்றிருக்கும்.

உயர்நல முடையவன் யவனவன் வேத ப்ரதிபாத்யனுகையாலே அந்த வேதமானது ஆனந்தாதிகுணங்களை அளவிடுவோமென்று பேசப்புக்கு "அப்ராப்ய மனஸா ஸஹ" வென்று அளவிடமாட்டாமல் மீண்டதிறே.

அப்படிப்பட்ட பரமமான பிரம்மம் எனக்கு மயர்வற மதிநலமருளிக் காட்டக் கண்டேன்.

'கண்டபடி யென்'னென்னில்;

'வெள்ளைச் சுரிசங்கொ டாழியேந்தித் தாமரைக்கண்ணனென் நெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர்' நான் பக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தாலே கண்டாற்போலே யார் காணவல்லார்? என்ன;

நீதான் கண்டபடி சொல்வாயென்ன;

வெள்ளைச் சுரிசங்கு, சுத்தஸத்வமயமாய், [4]ப்ரணவாகாரமாய், திருமந்த்ரபூரிதமான [5]ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், மந்த்ரார்த்தத்தை நடத்துகிற அருளார்திருச்சக்கரமும், திருக்கையிலே பூவேந்தினாற்போலே யேந்திக்கொண்டு;

"தாமரைக்கண்ணன்—'ஜிதந்தே புண்டரீகாக்ஷ' என்னும் அயர்வறு மமரர்க ளதிபதியானவன் அவர்களைக் கண்ணழகாலே தோற்பிக்குமாபோலே என்னைத் தோற்பித்து;

'என்னெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற' அருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே, த்ரிபாத்விபூதியி லடங்காமல்

---

[2]ப்ராப்யப்ராபகம் (प्राप्य प्रापकम्) = பெறவிரும்பும் பேறு प्राप्यम्. அதற்கான உபாயம் प्रापकम्.
[3]ப்ரமாணம் (प्रमाणम्) = சான்று. [4]ப்ரணவாகாரம் (प्रणवाकारम्) —ஓங்காரவடிவானது. [5]ஸ்ரீபாஞ்சஜன்யம் (श्रीपाञ्चजन्यम्) — எம்பெருமான் கையில் ஏந்தியிருக்கிற சங்கின் பெயர்.

'வானவர் நாடு' என்னுமாபோலே நெஞ்சை 'நாடு' என்னும்படி மஹாநகரமாக்கி, 'புள்ளைக்கடாகின்ற — வேதமயனான பெரிய திருவடியை மேல்கொண்டு வேதாந்தவேத்யனானவன், தன்னையே என்னெஞ்சு ப்ரமாணபுரஸ்ஸரமாகப் பின்செல்லும்படி கடாக்ஷித்து. 'புள்ளைக்கடாகின்றவாற்றை' நெஞ்சமாநகரிலே யுலாவியருளாநின்றான். 'ஆற்றைக்காணீர்' - கண்கள் காதுகள் முதலான கரணங்கள் உஜ்ஜீவிக்கும்படி காணமாட்டிகளோ வென்ன;

நீ கண்டபடி சொல்லிக்காண். நீ தானே அனுபவியாதே யென்ன;

என்சொல்லிச்சொல்லுகேன்? [6]ஹம்ஸசக்ரவாகங்கள்போலே [7]ஆழ்வார்களும், காடுபடா வலர்ந்த தாமரைபோலேயிருக்கிற திவ்யாவயவங்களும் தடாகத்தில் நீருமிலேயும் போலேயிருக்கிற திருமேனியும், அந்தை மனத்துக் கினியவிருக்கிறதொரு மஹா மேரு தரித்தாற் போலே யிருக்கிற பெரியதிருவடியோடேகூட நித்யமுக்தர்கள் மங்களாசாஸநம் பண்ண, இவர் திருவுள்ளத்திலே உலாவுகிறபடி. இப்படியேயிறே யநுகூலரோடு பரிமாறும்படி.

அன்னைமீர்காள்! செந்தாமரைக் கண்ணன் துயாறு சுடாடி தொழுதெழுமினோ! அஜ்ஞானாந்தகாரம் நீங்க [8]வேதாந்த வேத்யனைச் சுடாடி தொழுங்கோ ளென்ன;

எங்கே போய்த் தொழுவதென்ன;

வெள்ளச் சுகமவன் வீற்றிருந்த வேதவொலியும் விழாவொலியும் பிள்ளைக்குழாவிளையாட்டொலியுமறாத் திருப்பேரையில்சேர்வன் நானுமென்மனனும். நீங்களுமென்னை நிஷேதியாதே கூடச் செல்லுங்கோள்.

வெள்ளச்சுகம் = பிரிவிலு [9]மரையாறு படாதபடி அவன் கலவியில் தேற்றிக்கொண்ட ஸுகாதிசய மிருக்கும்படி. 'அவன்

---

[6]हंस चक्रवाकम् — ஹம்ஸம் வெண்மையான பக்ஷி. இது சங்குக்குவமை. சக்ரவாகம் — உருண்டைவடிவமுள்ள பக்ஷி. இது சக்கரத்துக்குவமை. [7]ஆழ்வார்கள் — (இங்கு) சங்குசக்கரங்கள். (திருவழியாழ்வான்-திருச்சங்காழ்வான்) என்றபடி. [8]வேதாந்தவேத்யன் (वेदान्तम्) உபநிடதங்கள் ; அவைகளாலேயே वेद्यन् = அறியத்தகுந்தவன். [9]அரையாறு = குறைவு.

வீற்றிருந்த' நான் இட்டகா லிட்டகையா யிருக்கிறது. அவ்விடம் வேதவொலியும் விழாவொலியுமா யிருக்கிறது. அவன் நெஞ்சுகந்து தன் புணர்ப்பு சொல்லக் கேளாநின்றான்.

'விழாவொலியும்' = இவளைத் தோற்பித்த வெற்றிமாலை கேட்டு [10]நெய்யாடலாடாநின்றான். நித்யோத்ஸவம் நடக்கும்படி காணும் அவனிருக்கிறது. நானிருக்கிற இடமிறே, வெறிவிச்சாகக் கிடக்கிறது.

'பிள்ளைக்குழா விளையாட் டொலியுமறு' பருவம் நிரம்பாத பாலர்களெல்லாரும், பகவதனுபவமே யாத்திரையாயிருக்கிறது. [11]'பாலா அபி க்ரீடமாநா க்ருஹத்வாரேஷு ஸர்வச:' இத்யாதிப் படியே யிருக்கிற திருப்பேரையில் சேர்வன், நானும் நெஞ்சும்.

அவன் துயரறு சுடரடி தொழுதெழுவோம் — நீங்களும் போருங்கோளென்கிறாள்.

ஏழாம்பத்து மூன்றாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து நான்காம் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

ஆழி யெழச்சங்கும் வில்லு மெழத்-திசை
வாழி யெழத்தண்டும் வாளு மெழ-வண்டம்
மோழை யெழமுடி பாத மெழ-வப்பன்
ஊழி யெழவுல கங்கொண்ட வாறே. (1)

'ஆழியெழ'ச்சங்கில் ஸர்வேச்வரன் இவருக்குண்டான வாற்றாமை தீர்க்கைக்காகத் தன்னுடைய [1]விஜயபரம்பரையை

---

[10]நெய்யாடல் = மங்களமாக எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் பண்ணுதல். [11]बाला अपि क्रीडमाना गृहद्वारेषु सर्वशः = வீட்டு வாயிற்படியில் (இன்னும் அவ்விடத்தை தாண்டிச் செல்லும் பருவம் வராத) விளையாடுகிற குழந்தைகளும், சர்வகாலமும், இராமன் திருநாமங்களையே தங்கள் மழலைச்சொற்களால் பேசுகின்றன. எம்பெருமானுக்கும் மற்ற எல்லாவற்றையும்விட அதுவே பரமானந்தமாய் இருக்கிறதென்கை. [1]विजयपरंपरे - வெற்றிகளின் வரிசை (பலவெற்றிகள்).

பத்தும் பத்தாகக் காட்டிக் கொடுக்கக் கண்டு, அவனுடைய விஜய பரம்பரையை அநுஸந்தித்து ஹ்ருஷ்டராகிறார்.

'உயர்வற' என்கிற பாட்டை 'ஆழியெழ' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்.—

உயர்வற மனுஷ்யானந்தந்தொடங்கி ப்ரம்மானந்தத்தளவாக அன்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களாலே உயர்ந்திருந்தார்கள். அவர்களன்யசேஷத்வஸ்வஸ்வாதந்த்ர்யங்களை மாற்றுவிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, வாமனவதாரம்பண்ணி அவர்கள் ஸ்வாதந்த்ர்யம் அறும்படி பண்ணினான்.

எங்ஙனே என்னில் = உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் வாமனனாய், மாவலிபக்கல் சென்று மூன்றடி மண்ணின்றே தா வென்ன;

உதக பூர்வமாகக் கொடுக்க, வாங்கினபோது மூவடிமண் கொட்டளக்க த்ரிவிக்ரமனாய்க்கிளர, 'முன்னிய வண்ணமே கொண்டளவா'யென்று [2]நமுசி ப்ரப்ருதிகள் வளரவொட்டாமல் தகைந்து கொள்ள;

அப்போது 'ஆழியெழ' [3]தேவா: ஸ்வஸ்தான மாயாந்தி நிஹதா தைத்யதானவா:, நபயம் வித்யதே கிஞ்சித் ஜிதம் பகவதா ஜகத்' என்கிறபடியே தனக்காக்கிக் கொண்ட செயலிறே. ராவணாதிகளைப்போலே தலையறாதே, [4]குணலவ முண்டாகை யாலே நின்றநிலையில் தோற்பித்துக்கொண்டபடி. நாயகனுக் கடியாரிறே வென்று கொடுப்பார்.

நலமுடையவன் யவனவன், ஆனந்தாதிகுணபூர்த்தியாலே ச்ருதிப்ரஸித்தனானவன்; 'என்னுடைய ஜகதா காரதையைப்

---

[2]नमुचि — ஒரு அசுரன். [3]देवाः स्वस्थानमायान्ति — தேவர்கள் (மீண்டும்) தம்தம்மிடம் சேருகின்றனர். निहता दैत्यदानवाः = அசுரர்கள் கொல்லப்பெற்றனர்.

न भयं विद्यते किञ्चित् = (இனி) கொஞ்சமும் அச்சம் (யாருக்கும்) இல்லை. जितं भगवता जगत् = உலகு முழுதும் பகவானால் தன் வசமாக்கிக் கொள்ளப்பட்டது. [4]गुणलवम् = சிறிது நற்குணம்.

பாருங்கோ' ளென்று மயர்வற மதிநலமருளித் தான் திருவுல களக்கப் புக்கவாறே;

'ஆழி யெழச்சங்கும் வில்லுமெழ. ஸ்வாமியுடைய உத்யோக மறிந்து ஆயுதங்கள் முற்பட்டபடி. காட்டுக்கு முற்பட்ட இளைய பெருமாளைப்போலே யாய்த்து முற்பட்டபடி. [5]'த்ரும சீரை ரலங்க்ருத:' என்று முற்கோலினைப்போலே யாய்த்து. தோற் றத்திலே யரசு போராயிற்று; [6]ஹேதி ராஜனிறே.

ஆழியெழ, ஆயிரக்காதம் பறப்பதின்குட்டி, அஞ்ஞூற்றுக் (ஐந்நூற்றுக்) காதம் சிறகடி கொள்ளுமாபோலே, உத்யோ கத்தில் ஈச்வரனைப் பார்க்க விஞ்சினபடி.

'சங்கும் வில்லுமெழ' மற்றையாழ்வார்களும் மற்றைத் திருக்கையிலே ஏறினார்கள். இரைபெறுதவிடத்தே யிருந்து 'சீறுபாறென்னக் கடவவவர்கள், இரையுள்ளவிடத்தில் ஒருவர்க் கொருவர் விட்டுக்கொடார்களிறே.

'இடங்கை வலம்புரி நின் றார்ப்பரிக்கா நின்றடங்காரை யொடுங்குவித்ததாழி. அரவணைமேல்தோன்றல் திசையளப்ப பூவாரடி நிமிர்த்த போது, இவர்க ளிப்படிப் பொருதபடி காண் கைக்கு அவன் மயர்வற மதிநல மருளுகையாலே கண்டு,

'திசைவாழியெழ' ஜகதாகாரதையைக் கண்டு, இவ்வஸ்து வுக்கு என்ன தீங்கு வருகிறதோ? வென்றும், திவ்யாயுதங்களுக்கு மென்ன தீங்கு வருகிறதோ? வென்றும் 'பல்லாண்டொலி' ஏழாநிற்கும்.

---

[5] द्रुमचीरै रलंकृतः = மரவுரிகளாலே அழகுபெற்றவரென்கை. இயற்கையிலே நிறைந்த அழகுள்ள திருமேனியில், எந்த வஸ்து சேர்ந்தாலும் மேன்மேலும் அழகு செய்யுமேயன்றி அதைக் குறைக்கவல்லதன்று. இங்கு எம்பெருமானுக்கு சேஷபூதனாகப் பரிந்து செல்லுகையால் - அந்த அழகு பன்மடங்கு அதிகமாய்த் தோற்றமளிக்கும்படி. (இளையபெருமாள் = இலக்குமணன்.)

[6] ஹேதிராஜன் (हेतिराजन्) = சக்கரம். हेति—ஆயுதங்கள், राजन्—(அவைகளுக்கு) அரசன்.

'திசைவாழியெழ = திக்குகள்தோறும் அனுகூலருடைய 'வாழி வாழி' யென்கிற மங்களாசாஸநத்வநி கிளர. 'ஏத்த ஏழுலகுங் கொண்ட கோலக் கூத்தனிறே. 'தண்டும் வாளுமெழ' *தூசித்தலையிலே, [7]ஸ்ரீகதையாழ்வானும் [8]ஸ்ரீநந்தகாழ்வானும், 'நாமிருக்கத் [9]திருவாழியாழ்வான் முதலானரோ! பொருவதும். வெற்றிகொள்வதும்' என்று போர் புரப்பாய்த்துப் [10]பொருகிற படி.

நமுசி வந்து 'என்னயிதுமாய மென்னப்ப னறிந்திலன், முன்னிய வண்ணமே கொண்டளவா யென்ன; 'மன்னு நமுசியை வானில் சுழற்றி யெறிந்தவன். அன்று பிறந்தன்றே செய்த வ்யாபாரமிறே யிது.

'அண்டம் மோழையெழ = இந்திரனுக்காக த்ரைலோக்ய மித்தனையு மளக்கவேண்டின வ்யாஜத்தாலே, அன்யசேஷத்வ நிவ்ருத்தி பண்ணிற்று. அவ்வளவில் நில்லாதே அண்டாவகாச முள்ளவிடமெங்குஞ் சென்றளந்து, அண்டகடாஹத்திலே திருவடிகள் சென்று, 'ஒண்மிதியும் புனலுருவி யொருகால் நிற்ப' என்று கீழி லண்டகடாஹத்தை யுருவிற்று ஒரு திருவடிகள். அது பிளந்து [11]ஆவரணஜலம் மேலேயெழ, ஆவரண ஜலத்துக்கு நடுவே யொரு கழக்கோடி மிதக்குமாபோலே மிதக்கு மிறே அண்டம்.

---

[7]கதையாழ்வான்—கதை. [8]நந்தகாழ்வான் = 'நந்தகம்' என்கிற கத்தி. [9]திருவாழியாழ்வான் — சக்கரம். [10]பொருகிறபடி= யுத்தம்செய்கிறபடி.

[11]**ஆவரணஜலம்** — ஈரேழு உலகங்களுக்கும் 'அண்டம்' என்று பெயர். இந்த அண்டத்தைப்போல் 10-மடங்கு அதிகமான ஜலம் இதைச்சுற்றி (கோட்டைக்கு அகழிபோல்) கடவுளால் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜலம்தான் 'ஆவரண ஜலம்' எனப்படுவது. அது அண்டத்தினுள்ளே வாராமைக்காக அமைக்கப்பட்டிருக்கும் சுவர் 'அண்டபித்தி' என்பது. வாமனன் திருவடிகள் வளர்ந்து, கீழும் மேலும் அதைப்பிளந்தன என்கை. *தூசித்தலை = போர்க்களம்.

'முடிபாதமெழ = [12]திருவபிஷேகத்தளவும் திருவடிகள் ளளர. 'அப்பனூழியெழ' அயர்வறுமரர்களுக்கு அதிபதியானவன், ஜகதாகாரனுய் நின்ற நிலையை எனக்குபகரித்தவன், அப்பன் ஸ்வாமியானவன். ஜகதாகாரதையைக் கண்டு 'இதுக்கென் வருகிறதோ?' வென்று அஞ்சின வச்சந் தீர்ந்து, முக்தரும் மங்களாசாஸநம் பண்ணித் துயரறு சுடரடி. தொழுதார்கள். துயரறுகை உபயவிபூதிக்கும் ஈச்வரனுக்கு மொக்குமிறே.

'அப்பனூழியெழ— அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களாய்ச் சென்ற காலம் போய், பகவச்சேஷத்வ [13]பாரதந்த்ர்யபராகாஷ்டையாலே நல்லடிக்கால மாய்த்து.

'அப்பனூழியெழ உலகங் கொண்டவாறே. மகோபகாரகனுன ஸர்வேச்வரன் உலகளந்தப் ப்ரகாரத்தில், பொன்னடி அந்யசேஷத்வமாகிற ஹேயப்ரத்யநீகமாய் [14]அத்யுஜ்வலமான திருவடிகளை யென் மனனே! தொழுதெழு என்கிருர்.

ஏழாம்பத்து நான்காம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

கற்பா ரிராம பிரானையல் லால்மற்றுங் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன் றின்றியே
நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முக னுர்பெற்ற நாட்டுளே. (1)

கற்பாரி ராமபிரானில், இவ்விஜயத்துக் கடியாக அவன் [1]விபவகுணங்களை யனுஸந்தித்து ஹ்ருஷ்டராய், 'படுக்கைக்

---

[12] திருவபிஷேகம் = கிரீடம். [13] पारतन्त्र्यपराकाष्ठा — பகவானுக் கடங்கி அவனுக்கு அடிமைசெய்தலின் எல்லை நிலம். [14] அத்யுஜ்வலம் – ஒளிமிக்கது.

[1] विभवगुणंगळ् — பகவான் 'இராமன்' 'கிருஷ்ணன்' இம்மாதிரி வடிவங்களில் தோன்றுவது, 'விபவம்' எனப்படும். அம்மாதிரி அவதாரங்களின் 'குணங்களை' யென்கை.

கீழே நிதி கிடக்கப் புறங்கால் வீங்குவாரைப் போலே இக் குணங்களும் நடையாடாநிற்க ஸம்ஸாரிக ளிழப்பதே' யென்று அவர்களிழவுக்கு வெறுத்தார்.

உயர்வற என்கிற பாட்டைக் 'கற்பாரி ராமபிரான்' விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத்தளவும் வேத சாஸ்திராதிகளாலே [2] ப்ரதிபாதிக்கிறது உபாயோபேயங்கள் பலவாயிருக்கும். அதுதா னொன்றுக்கொன்று உயர்வுந்தாழ்வு மாயிருக்குமதாகையாலே ஏற்றமற்றிருக்கும்.

உயர்நல முடையவனென்று சக்ரவர்த்தித் திருமகனையிறே சொல்லுகிறுர். 'கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங் கற்பரோ? உயர்நலமான ஆனந்தாதி கல்யாணகுணங்களையுடைய இராமா பிரானையல்லால் மற்றுங் கற்பரோ?

நீர் எத்தாலே யறிந்து சொல்லுகிறீரென்ன; ச்ருதிப்ரஸித் தன்யாவனொருவன், அவன் 'மயர்வற மதிநல மருளின' அந்த பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே, பரத்வமே பிடித்து அவதாரா திகளை ஆராய்ந்து பார்த்தவிடத்து இன்னேர் காணுமையாலே பதர் கூட்டிக் கழிக்கவும் பற்றுது, இவ்விஷயத்தை யொழியக்கற் குங்கல்விகளெல்லாம். [3] 'தத் ஜ்ஞான மஜ்ஞான மதோந்யதுக்தம்' [4] 'வித்யாந்யா சில்ப நைபுணம்' என்றுர்களிறே. பகவல்லாபத்துக் குடலான ஜ்ஞானம் ஜ்ஞானமாகிறது. அல்லாதது அஜ்ஞான மாய்த்து.

ஆகையாலே 'கற்பார்' ஒருவனென்றைக் கற்பது அப்போ தைக்கினிதென்றுதல், பின்பு நன்மையை விளைக்குமென்றுதல்,

---

[2] प्रतिपादनं = அறிவித்தல். [3] तद्ज्ञानमज्ञानमतोन्यदुक्तम् — (யாதொன் றினுல் பரம்பொருளை அறிவதும் காண்பதும் பெறுவதும் சாதிக் கப்படுகிறதோ) அதுவே ஜ்ஞானம். மற்றது அஜ்ஞானமே யாகும்.

[4] विद्यान्या शिल्पनैपुणम् = மோக்ஷத்துக்கு உபாயமாகாத வித்யை (அறிவு) சிற்பத்தில் உண்டாகும் தேர்ச்சியையே ஒக்கும்.

என்றுய்த்துக்கற்பது. அவையிரண்டு மிவ்விஷயத்திலொழிய வில்லையென்கை.

'இவர்க் கதிசய மெடுதென்ன;

'புற்பா முதலா = பாவென்று படர்த்தியாய்ப் படருகிற புல்லென்னுதல் [5] தூர்வாதிஸ்தாவராந்தமாக என்றபடி.

'எறும்பு' ஜங்கமங்களில் கடையான எறும்பு தொடக்கமாக. பிரும்மாவை எண்ணினல் அநந்தரம் நிற்கக் கடவதிறே [6] பிபீலிகை.

'புற்பர முதலா' என்று இவற்றுக்கொரு ப்ராதான்யஞ் சொல்லுகிறாரல்லர். ராமவிஷயீகாரத்துக்கு முற்பட்டாரிவைக ளென்கிறார். வெள்ளமானது தாழ்ந்த இடத்தே ஓடுமாப்போலே.

ஸ்தாவரங்களில் தண்ணியது புல்லு, ஜங்கமங்களில் தண்ணியதுஎறும்பு. இவை இரண்டையுமொக்க எடுக்கையாலே [7] "ஜ்ஞான பலம் மோக்ஷ" மென்கிறவத்தைத் தவிர்க்கிறது. சைதன்ய முண்டாகையும் இல்லையாகையும் அப்ரயோஜகம் நலமுடைய பெருமாளருளின கிருபைக்கு என்கிறது. இவற்றின் [8] கர்ம தாரதம்யங்கள் அப்ரயோஜகமென்கிறது.

[9] நிருபாதிக சேஷி பக்கல் [10] அப்ரதிஷேதமே பேற்றுக்கு வேண்டுவது. [11] "அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: [12] உபதப்தோத

---

[5] दूर्वा = அருகம்புல் स्थावरम् — அசைவில்லாத வஸ்துக்கள். அவைகள்வரை. [6] पिपीलिका எறும்பு.

[7] ज्ञानफलम् அறிவின் பயனுபுள்ளது. [8] कर्मतारतम्यंगळ = பல்வேறு வினைகளின் ஏற்றத்தாழ்வு. [9] निरुपाधिक शेषी = பணியாளனுக்கு எஜமானன் ஊதியம் கொடுக்குமளவும் தான் சேஷியாயிருப்பான். அங்ஙனன்றிக்கே ஒரு காரணமுமில்லாமல் எல்லா வுலகுக்கும் சேஷியாயிருக்குமவன்.

[10] अप्रतिषेधम् (அவன் தானகவே உகந்து கொடுக்கும் பேற்றை) 'வேண்டா' என்னுமல் இருக்கை. [11] अपिवृक्षाः परिम्लानाः = (இராமன் முடிதுறந்து காட்டுக்குப் போகும் போது அந்தத் திக்கத்தால்) மரங்களும் வாடி வதங்கிப் போயின.

[12] उपतप्तोदकानद्यः = ஆறுகளும் கொதித்தன.

காநத்ய:—இத்யாதிப்படியே எல்லாமொக்க ராமவிரஹத்தால் கொதித்ததிறே.

'ஒன்றின்றியே' = தன் நிர்ஹேதுககிருபையாலே. ஒன்றின்றியே = பேற்றுக்கு ஈடாயிருப்பதொரு ஸாதநமின்றிக்கே யிருக்கச் செய்தே என்றபடி. தன் சிறுமையும் பேற்றின் பெருமையும் பார்த்தால், தன்பக்கலொரு ஸாதனமுமின்றிக்கே யிருக்குமிறே. இனி அங்கீகாரஹேது அயோத்யாவாஸமிறே.

'அயர்வறுமமரர்கள்' அயராதே ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ண வீற்றிருந்தாளுமவன், அயோத்யா வாஸம் பண்ணுகையாலே 'நற்பாலயோத்தியில் = நல்ல விடத்தையுடைத்தான அயோத்தியிலே. இத்தால் நிலமிகுதியே ராமபக்தியை விளைக்கை. [13] தேசோயம் ஸர்வகாமதுக்" என்னக்கடவதிறே. 'அயோத்தியில் வாழும்' 'வர்த்திக்கு' மென்னாதே, வாழுமென்றது; அத்தேச வாஸமே வாழ்வா மித்தனை. 'வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்' 'நல்லார்கள் வாழும் நளிரரங்கம்' என்னுமாபோலே ப்ராப்யதேசத்தில் [14] வர்த்தனந்தானே ப்ராப்யமிறே ப்ராப்யனவனாகையாலே. நமக்குக் கர்மஸம்ஸர்க்கத்தாலே குறைந்து தோற்றுகிறதிறே. [15] தர்மி ஐக்யத்தாலே எங்குமொத்திருக்குமிறே.

ஆகையாலே சுடரடி தொழும்படி 'நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுள்ளே'. நல்ல ஸ்வபாவத்தையுடைத்தாம்படி செலுத்தினான். அதாவது - இவற்றின் கர்மதாரதம்யத்தாலே வரிவிறே அவ்வோரவ்வோரளவுகளுக் கீடாயிருப்பது; அவனாலே வந்ததாகையாலே எல்லார்க்குமொக்க நன்மை விளைந்தது.

[16] 'மயாத்வம் ஸமநுஜ்ஞாதோ கச்சலோகானனுத்தமான்' என்றிங்குண்டான பற்றற்று, ஒரு தேச விசேஷத்திலே சென்றனு

---

[13] देशोऽयं सर्वकामधुक् – விரும்பின பேறெல்லாம் கொடுக்கும் தேசமிது. [14] வர்த்தனம் = வாஸம் பண்ணுதல். [15] धर्मि = (இங்கே) பகவான். [16] मयात्वं समनुज्ञातो गच्छ लोकाननुत्तमान् = நீ (ஜடாயு) என்னால் (இராமனால்) அநுமதிக்கப்பட்டாய். இனி உயர்ந்த லோகங்கள் எல்லாவற்றையும் நீயடைந்தனுபவிப்பாய்.

பவிக்குமனுபவத்தைக் கொடுக்கவல்லவன் இங்கு தன்னை யொழி யச்செல்லாமை விளைக்கை பணியுடைத்தன்றிறே.

'நற்பாலுக்குப்த்தனன்' நலமுடையவன், நலமருளின நற்பாலுக்குய்த்தனன். ஸ்வஸ்வரூப, பாஸ்வரூப 'ஸ்வராட்பவதி' என்கிற விடத்திலுற்றபடி.

ராஜா ஒருவனுக்கு ஒரு நாடு கொடுத்தால் அவனுடைய பவஸ்தினமாய், அவனுணையும் ஆஜ்னையுமாக, அவனுடைய ஸ்வா தந்த்ர்யத்தையே நடக்கும்படி பண்ணிக்கொடுக்குமாபோலே, ஸம்ஸாரி சேதனனுக்குத் தலையான சதுர்முகனுக்குக் கை யடைப்பான நாட்டுக்குள்ளே, அவன் ஸ்வாதந்த்ர்யத்தையுந் தவிர்த்து; இவற்றின் கர்மபாரதந்த்ர்யத்தையும் தன் குணத் தாலே பதஞ்செய்து; தன்னைப்பெற்றபோது ஜீவிக்கும்படியாய் பெறுதபோது உருவும்படியான தன்மையை யுண்டாக்கினுன்.

ஆனபின்பவன் சுடரடி தொழுது, என் மனனே வெறும் சிலவற்றைக் கற்பரோவென்கிறுர்.

பத்தாம் பாட்டு

வார்த்தை யறிபவர் மாயவற் காளன்றி யாவரோ?
போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொ டிறப்பிவை
பேர்த்துப் பெருந்துன்பம் வேரற நீக்கித்தன் றுளின் கீழ்ச்
சேர்த்தி யவன்செய்யுஞ் சேமத்தை யெண்ணித் தெளிவுற்றே. (10)

உயர்வற என்கிற பாட்டை 'வார்த்தையறிபவ'ரென்கிற பாட்டு விவரிக்கிறது. [17] வைகுண்டேது பரேலோகே ச்ரியா ஸார்த்தஞ் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா பக்தைர்

[17] वैकुण्ठे तु परेलोके श्रिया सार्धं जगत्पतिः– आस्ते विष्णु रचिन्त्यात्मा भक्तै भागवतैस्सह = ஸ்ரீ விஷ்ணுவானவர், பிரகிருதி மண்டலத்துக்கு அப்பாலுள்ள வைகுண்டமென்னும் உலகத்தில், உலகங்களெல் லாவற்றுக்கும் ஒருநாயகனுமாய் (பக்தி இல்லாதவர்களுக்கு) எண்ணமுடியாததான திவ்ய ஸ்வரூபமுடையவனுமாய், ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன், பக்தர்களான நித்யர் முக்தர்களால் சூழப்பட்டு வீற்றிருக்கிறுர்.

பாகவதைஸ்ஸஹ' என்கிறபடியே ச்ரிய:பதியாய், அவாப்த ஸமஸ்தகாமனுப், ஸ்ரீ வைகுண்ட [18] நிகேதனனுன ஸர்வேச்வரன் திருவுள்ளத்தில் நினைத்தபடி: —

'ஜகத் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கு பிரும்மாதிகளையமைத்தோம்.

வேதசாஸ்த்ர [19] ப்ரவர்த்தனங்களுக்கு மன்வாதிகளையும் வ்யாஸபராசரபாராசர்ய போதாயனுதிகளையு மமைத்தோம்.

மோக்ஷ சாஸ்த்ரங்களுக்கும் வேதாந்தங்களுக்கும் தாத்பர்யங்களையறிந்து, அதில் ஸாரமான [20] மந்த்ரத்ரயத்தாலே சரணுகதி வழியை நடத்துகைக்காக ஆழ்வார்களை அவதரிப்பித்து, ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலமருளி, அவர்கள் முகேந ஜகத்தைத் திருத்திக்கைக்கொண்டபடி சொல்லுகிறது.

இதிலாழ்வார்களைக் [21] கரணபூதராகவுடைய நம்மாழ்வார், திருவாய்மொழி முகத்தாலே சரணுகதியை யருளிச்செய்தார்.

திருமாலா லருளப்பட்ட சடகோபன், மயர்வற்று ஜகத்தைத் திருத்தப் பார்க்கும்போது, தம்மை முந்துறப்பார்த்தார். தம்மைப் பார்க்கத் தந்திருவுள்ளம் 'ஒண்டாமரையாள் கேள்வனொருவனே நோக்கு முணர்வுண்டாய்த் தமக்கு முந்துற்ற நெஞ்சாயிருந்தது.

அத்தைக் குறித்து மேல்மேலென வுபதேசித்து, ஈச்வரன் தமக்கு மயர்வற மதிநல மருளினுற் போலே, தந்திருவுள்ளத்துக்குத் தாம் [22] கரணியாகையாலே, கரணமான நெஞ்சைக் கொண்டாடுகிருர்.

---

18 நிகேதனம் (निकेतनम्) இருப்பிடம். 19 ப்ரவர்த்தனம் = (प्रवर्तनम्) = (எல்லோருக்கும்) கற்பித்தல்.

20 மந்த்ரத்ரயம் = (मन्त्रत्रयम्) = திருமந்திரம் (அஷ்டாக்ஷரம்), த்வயம், சரமச்லோகம், என்கிற மூன்று மந்த்ரங்கள்.

21 கரணபூதர் = (करण भूतर्) கை கால் முதலிய உறுப்புக்களாக அமைந்தவர்.

22 करणम् = கருவி (இங்கே) மனம். करणी கருவியையுடையவன்.

எங்ஙனேயென்னில் = 'உயர்வற வார்த்தை யறிபவர் = [23] பஞ்சமவேதமான மஹாபாரதத்தில், உபநிஷத்பாகமான ஸ்ரீ கீதையில், பதினெட்டத்யாயத்திலும், [24] தத்வவிவேகம் முதலான ஸர்வதர்மங்களும், பாரதத்திலும் வ்யாஸாதிகள் சொன்ன ஸகலதர்மங்களும்; ஸ்ரீ கீதாசார்யனருளிச் செய்த [25] சரமச்லோகத்தில் 'மா'மென்று தன்னைத் தொட்டுக்காட்டின மாமேக'மென்கிற ஸநாதன தர்மமானதும்; எல்லாத்தையுங்கூட வார்த்தை என்கிறது.

ப்ரயோஜனவத்தானதிறே வார்த்தையாவது. 'மாமேக' மென்று [26] பலவத்தானது இதுவிறே. இத்தையிறே 'உயர்வற உயர்நல' மென்கிற பாட்டு விவரிக்கிறது.

உயர்வு = ஸர்வதர்மாந் - வார்த்தை யறிபவர் - என்றது. ஸாதனாந்தரங்களையும் வார்த்தை என்றது. மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவாக ப்ராபகாந்தரங்களாலே ஒருவர்க்கொருவர் உயர்வுந் தாழ்வு மாகையா லுயர்த்தியற்றிப் ப்ராப்யாகையாலே 'உயர்வற' என்றது.

'ஸர்வதர்மா' னென்று மோக்ஷ பல ஸாதனங்க ளெல்லாம் கூடத் 'தர்ம' மென்றபடி. 'வார்த்தை' என்றது - தர்மசப்தங்களை. 'பரித்யஜ்ய, உயர்வற வார்த்தை அறிபவர், தர்மவத்தான வார்த்தையை யறிபவர் — [27] த்யாஜ்யோபாதேயமான வார்த்தையை யறிபவர் என்கிறது.

பாரத கீதைகளில் தர்ம சப்தமான வார்த்தைகள் பந்த மோக்ஷங்களுக்குப் பொதுவாயிருக்கையாலே த்யாஜ்யம். 'மாமேகம்' என்றது மோக்ஷத்துக்கே ஹேதுவாகையாலே உபாதேயம் என்கிறது. 'வார்த்தை யறிபவர்' = இப்படியறிபவர்.

---

[23] **पञ्चम वेदम्** = ஐந்தாம் வேதம். [24] தத்வவிவேகம் = (**तत्त्व-विवेकम्**) மெய்ப்பொருளுணர்த்தல். [25] சரமஶ்லோகம் = (**चरमश्लोकम्**) ஸ்ரீ கீதையின் கடைசிச்சுலோகம்—**सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज, अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः** என்பது. [26] பலவத் = (**फलवत्**) = பயனுள்ளது. [27] த்யாஜ்யோபாதேயம் (**त्याज्योपादेयम्**) கழிக்கக்கூடியது **त्याज्यम्**. எற்கவேண்டியது **उपादेयम्**.

மாமென்றது — உயர்நலமுடையவனென்றபடி. 'மாயவன் என்றவதும். மாமேகமென்றபடி. 'மாயா வயுநம் ஜ்ஞானம்' 'மாமென்று [28] ஸர்வஜ்ஞத்வ [29] ஸர்வசக்தித்வங்கள் [30] ஸௌலப்யங்கள், 'உயர்நலமுடையவ'னென்று ஆனந்தாதி குணங்கள்; 'மாயவ'னென்று ஜ்ஞானசக்த்யாதி குணங்கள்; ஆக இவைகளால் ஸர்வகுண ஸம்பூர்ணனென்றபடி.

'ஏகம் சரணம்' யவனவன் 'மாயவற்காள் — ஏகம்சரணமென்று [31] ஸஹகாரிநிரபேக்ஷமான ஸநாதனதர்மத்தைக் காட்டுகிறது.

யவனவன் = ஸநாதனதர்மமான [32] ஷாட்குண்ய விக்ரஹம் ஸ்வரூபப் ப்ரகாசமான திவ்யமங்களவிக்ரஹத்தைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட ஸௌலப்யாதி குணவிசிஷ்டனை 'மாயவன்' என்கிறது.

வ்ரஜ,மயர்வற, ஆளன்றி, 'வ்ரஜ — ஸ்வீகரி. மயர்வற = 'ஸ்வீகாரவஸ்துவை விஸ்மரியாதே. 'ஆளன்றி = கூழுக்காள் படாதே. தேவதாந்தரம் [33] ஸாதனாந்தரம் ப்ரயோஜனாந்தரங்களாகிற கூழுக்காள்படாதே என்றபடி.

அஹம் த்வா, மயர்வற மதிநலமருளினன் 'மாயவற்காளன்றி யாவரோ? அஹந்த்வா = ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனான நான், அஜ்ஞனாய் அசக்தனானவுன்னை, மயர்வற மதிநலமருளி = ஸாதனாந்தரபுத்தியைத் தவிர்த்து, பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே ஸநாதநதர்மத்தை யடைவித்து, மாயவற் காளன்றி யாவரோ? என்கிறபடி. நித்ய [34] கிங்கரஸ்வபாவனுக்கினவன். நானே 'ஸர்வ

---

28 ஸர்வஜ்ஞத்வம் (सर्वज्ञत्वं) எல்லாவற்றையும் அறிந்தவனாகை.
29 ஸர்வசக்தித்வம் (सर्वशक्तित्वं) = எல்லாம் செய்ய வல்லவனாகை.
30 ஸௌலப்யம் (सौलभ्यं) (பக்தர்களுக்கு) சிரமமின்றிக்கே கிடைக்குமவனாயிருக்கை. 31 ஸஹகாரி நிரபேக்ஷம் (सहकारि निरपेक्षम्) துணை யொன்றையும் எதிர் பாராதது. 32 ஷாட்குண்யம் (षाड्गुण्यम्) = [1] ज्ञानं [2] शक्तिः [3] बलं [4] ऐश्वर्यम् [5] वीर्य–[6] तेजः ([1] ஞானம் சக்தி [3] பலம் [4] ஐச்வர்யம் [6] வீர்யம் தேஜஸ்) என்னும் ஆறு குணங்கள். [33] அந்தரம் (अन्तरम्) (இங்கு) வேறு.
34 கிங்கரன் (किङ्करन्) அடியவன் (பணியாளன்)

பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்றருளினவன் யவனவன் அயர்வறு மமரர்க ளதிபதியாயிருக்கிறவன். உன்னுடைய 'போர்த்த பிறப்பொடு நோயொடு மூப்பொடு இறப்பிவை பேர்த்துப் பெருந்துன்பம் வேரற நீக்கினபடி='ஸர்வபாபேப்ய:- என்றது.

'மோக்ஷயிஷ்யாமி, அயராமலடிமை செய்கிற நித்ய முக்தரிலு மதிசயிதமான போக்யவஸ்துவாக உம்மைக்கொண்டபடி. உமக்கு ஜராமரணாதிகளாகிற பாபங்கள் [35] ஸவாஸநமாகப் போச்சுது. [36] ஆத்மப்ராப்தியாகிற மஹாதுக்கம் போச்சுது. 'மாசுச: = பயப்படாதே. ஸர்வநியந்தாவான நான் உன்னை யநுக்ரஹித்தால், பாபங்கள் நிற்கவற்றோ?

'யிஷ்யாமி [37] ணிச்சாலே நீயும் வேண்டா, நானும் வேண்டா உன்னுடைய ராஜகுலமாஹாத்ம்யத்தாலே அவை தன்னிடையே விட்டுப்போம். 'மாசுச:' சங்கையை விட்டு இரு.

துயரறு சுடரடி தொழுத உனக்கு சங்காபயங்க ளுண்டோ? 'தன்தாளின் கீழ்ச்சேர்த்தவன் செய்யுஞ் சேமத்தை யெண்ணித் தெளிவுற்றிரு. ஹேயப்ரத்யநீகமான திருவடிகளிலே சேர்த்து, உன்னைப் பெற்ற என் துக்கமுந்தீர்ந்து, உனக்கு ரக்ஷையே செய்கிற வித்தை எண்ணி, மனஸ்ஸு நிர்மலமாய். 'பத்தாஞ் ஜலிபுடா: ஹ்ருஷ்டா:' என்கிறபடி [38] 'நிர்பயோ நிர்பரோஸ்மி' என்றிரு என்மனனே, என்கிறார்.

ஏழாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[35] ஸவாஸனம் (सवासनम्) வாஸனையுடன் கூடியது. வாஸனையாவது; பலவிதமான உபாயங்களாலும் அழிக்கப் பார்த்தும் இறைவனருளின்றி அறவே ஒழியாத பழைய வினையின் மிகவும் ஸூக்ஷ்மமான தொடர்ச்சி. [36] ஆத்மப்ராப்தி (आत्मप्राप्ति) கைவல்யம். [37] णिच् —பிறவினை. [38] நிர்ப்பயோ நிர்ப்பரோஸ்மி= (निर्भयोनिर्भरोऽस्मि) பயம் அற்றவனும் பாரம் நீங்கினவனும் இருக்கிறேன்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

பாமரு மூவுல கும்படைத் தபற்ப நாபாவோ!
பாமரு மூவுல கும்மளந் தபற்ப பாதாவோ!
தாமரைக் கண்ணு! வோ! தனி யேன்தனி யாளாவோ!
தாமரைக் கையா! வோ! வுன்னை யென்றுகோல் ? சேர்வதுவே. (1)

பாமரு மூவுலகில் அவன் குணங்களையும் அழகையும் பெருமையையும் அநுஸந்தித்து, 'இப்போதே காணவேணு'மென்று பெருமிடறு செய்து கூப்பிட்டார்.

உயர்வற என்கிற பாட்டைப் 'பாமரு மூவுலகு' விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

'உயர்வற' பிரம்மானந்தந்தொடங்கி மனுஷ்யானந்தத்தளவும், தனித்தனியே காரியம் காரணங்களாயிருப்பார்க ளாகையாலே உயர்வறும்.

'உயர்வற உயர்நலமுடையவன்' 'பாமரு மூவுலகும் படைத்த பத்மநாபன். ஆனந்தாதி கல்யாண குணங்களையுடையவனாகை யாலே இக்குணங்களுக்கடியான காரண குணனானவன் என்கிறது.

'பாமரு மூவுலகம் — பாவென்று பதார்த்தவாசகமாய் பாமருவியிருந்துள்ள — பதார்த்தங் களினுடையநெருக்கத்தை யுடைத்தான 'மூவுலகும் படைத்த பற்பநாபன்' உயர்நல முடையவன்.

ஆக ஜகத்காரணபூதனாய், ஆனந்தாதி கல்யாண [1] குணோபேதனா ஸர்வேச்வரன் யவனவன், ச்ருதிப்ரஸித்தமான ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களுடையவன்.

---

[1] உபேதன் (उपेतन्) = கூடினவன்.

'மூவுலகம் படைத்த பற்பநாபன் = கீழும், மேலும், நடுவுமான லோகங்களை மூவுலகென்கிறது. இவற்றையுண்டாக்கின ஜகத்காரணமான கமலத்தை நாபியிலே யுடையவனே!

'உமக்கு நம் காரணத்வந் தெரிந்தபடி என்னென்ன; நீ மயர்வற மதிநல மருளுகையாலே யறிந்தேன். பக்திரூபாபன்ன ஜ்ஞானமான வெளிச்செறிப்பாலே யறிந்தேன்!

மதிநலமருளின நீ, பாமரு மூவுலக மளந்த பற்பபாதனை நீ தாய்போலே யித்தை யுண்டாக்கி, அதுக்கு முலைகொடுத்து வளர்க்குமாபோலே, உன் தேனேமலருந் திருப்பாதத்தை யவர்கள் சிரஸிலே வைத்தது. மகாபலி பக்கலிலே யிரந்து பெற்றுத் திருவுலகளக்கிற வ்யாஜத்தாலே, ஜகதா காரதையை எனக்குக் காட்டித் தந்தவனே!

தேவ திர்யக் மனுஷ்ய ஜங்கம ஸ்தாவரங்களுக்கெல்லாம் 'ஓர் தனிவித்தாய், முதலில் சிதையாமையும் மூவர் தனி முதலாய் மூவுலகுங்கலோனை நீ மாவலி வ்யாஜத்தாலே ஜகதா காரதையைக் காட்டி மூவுலகமளந்த பற்ப பாதாவோ!

'படிக்களவாக நிமிர்த்த பாதபங்கயமே தலைக்கணியாய்' என்றுசையுடைய நானிருக்க, இச்சையுமில்லாதார் தலையிலே திருவடிகளை வைப்பதே யென்ன;

'அது செய்தமையுண்டு. உமக்கபேக்ஷிதமென்'னென்ன;

'மதிநலமருளின தாமரைக்கண்ணாவோ! புண்டரீகாக்ஷனை நீ, அயர்வறு மமரர்க ளதிபதியா யிருந்துவைத்துத் திருவுல களக்கிற வ்யாஜத்தாலே, அங்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களை மாற்றி யுன்கால் கீழேயிட்டுக்கொண்டிலையோ?.

அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரானவர்களுக்கு, எதிர் விழி கொடுக்குங் கண்ணையுடையவனே! நான், 'தாமரைக்கண்ணாவோ! தனியேன் தனியாளாவோ! என்று முறையிட வேணுமோ? ஜகதுத் பத்தியும், வளர்க்கையும், ஜீவநமிடுகையும், எல்லாமெனக் குன்பக்கலிலே யாயிருக்க, [2] லோகமர்யாதையும் வேண்டாவோ?

[2] லோகமர்யாதை (लोकमर्यादा) உலகவழக்கம்.

எனக்கும் [3]'அவலோகன தானேன பூயோ மாம் பாலய' என்னுமாபோலே 'திருக்கண்களாலே குளிரநோக்காய்' என்று திருக்கண்களினழகை யனுஸந்தித்தார்.

அங்கண்ணழகே ஜீவனமாயிருக்கும் நித்யஸூரிகள் திரளிலே யிருக்கக் கண்டிலர். அத்தாலே 'தனியே'னென்கிறார்.

'தனியேன் தனியாளாவோ = ஸ்த்ரீகளுடைய நோக்கே தாரகமாயிருக்குமவர்களுடைய திரளுக்குங் கூட்டன்றிக்கே, உபயவிபூதியிலும் கூடாதே என்னை மூன்றும் விபூதியாக்கி யருளுகிறவனே!

அன்றிக்கே; உன் கிருபையே தாரக மாயிருக்கிறவென்னை. உன் கிருபைக்கு வேறுவிஷயம் என்னை யொழியவுண்டோ? என்னை யாளுகிற உன் கிருபையேயன்றோ?

இப்படியாளுகிறவன் யாவனொருவன் அவன் துயரறு சுடரடி தொழுதெழன் மனனே — என்தனிமையாகிற ஹேயத்தைத் தீர்த்து, பரஞ்சோதி சுடரடியைத்தொழுது விழுந்திருக்கிற வென்னை.

'தாமரைக் கையாவோ — திருவடிகளிலே அநந்யகதியாய் அகிஞ்சனனாய் விழுந்திருக்கிற என்னை, உன் தாமரைக் கண்ணாலே நோக்கி, தாமரைக் கையாலே யெடுத்தணைக்க வேண்டாவோ?

அக்ரூரனை யணைத்திலையோ? அவ்வளவு போரேனோ? 'ஸோப்யேநம்' இத்யாதி திருக்கையிலடையாள மித்தனையும் [4]இலச்சினைப்படியே அவனுடம்பிலே காணலாம்படி அவனை ஸ்பர்சித்து, அவனந்த ஸ்பர்சத்தாலே [5]ஸ்தப்தனாய் நிற்க, கையைப்பிடித்தேறிட்டுப் பின்னை யணைக் கையாலே இருவரு மொன்றாய்க் கண்டவித்தனை.

---

[3] अवलोकनदानेन भूयो मां पालयाव्यय—இதன் பொருள் நூலிலேயே அடுத்து வருகின்றமை காண்க.

[4] இலச்சினை = முத்திரை. [5] ஸ்தப்தன் (स्तब्धन्) = 'என் செய்வ' தென்றறியாதவன்.

'கரேண மிருதுநா தேவ: பாபாந் நிர்மோசயன் ஹரி:' என்கிறபடியே உன்னை 'என்று கொல்? சேர்வதுவே. 'பூர்ணே சதுர்தசே வர்ஷே பஞ்சம்யா'மென்று நாளிட்டுக் கொடுக்கலாவது தம்பியார்க்கோ? அஸாதாரண அடியாரானல், 'இன்ன நாள் பெறக்கடவதென்று ஒரு நாளிட்டுக் கொடுக்கலாகாதோ?

சேஷபூதனுகில், 'சேஷி கொடுத்த நாள் பெறக்கடவ'னென்றுறியிருக்க மாட்டுகிறிலேன். தனியேன் உன்னை என்று கொல்? சேர்வது' என்பானேன்? நாராயணனை யொழிந்திருப்பது ஒரு நாளு மில்லையே. இனிச் சேருகையாவது அடியார்கள் குழாங்களையுடன் கூடுகையிறே.

உன்னை'யென்னு நிற்கச் சேரும்படி யென்னென்ன; ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்டுவைக்கையாலே, உன்னைச் சேர்ந்து என்மனனும் நானும் தொழுதெழ வேணும் என்கிறுர்.

ஏழாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

ஏழைய ராவியுண் ணுமிணைக் கூற்றங் கோலோ? வறியேன் -
ஆழியங் கண்ண பிரான்றிருக் கண்கள் கோலோ? வறியேன் -
சூழவுந் தாமரை நாண்மலர் போல்வந்து தோன்றுங் கண்டீர் -
தோழியர் காளன்னை மீரேன்செய் கேன்? துய ராட்டியேனே. (1)

'ஏழையராவி'யிலிவ்வழகு மறக்கவொண்ணுதபடி, மனஸிலே [1] உருவெளிப்பாடாய் நலிய நோவுபட்டபடியை யருளிச் செய்தார்.

---

[1] உருவெளிப்பாடு = மனதில் எண்ணியிருக்கும்பொருள் வெளியில் கண்களுக்கு உண்மையான உருவத்துடன் இருப்பதுபோல் காணப்படுவது.

"உயர்வற" என்கிற பாட்டை "ஏழையராவி" விவரிக்கிறது எங்ஙனே யென்னில்:—

உயர்வற உயர்நலமுடையவன் ஏழையராவியுண்ணுமிணைக் கூற்றங்கள் கொலோ? வறியேன். உயர்வற மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் தந்தா மபிமத ஸாதனங்கள் பெறுகைக்கு பகவத் ஸமாச்ரயணம் பண்ணினுல், பகவான் கடாக்ஷிப்பது, கண்ணைச் [2]செம்பிளித்தாய்க்குக் கடாக்ஷிப்பது.

ஆகையாலே, ஸாதனபலங்கள் அல்பாஸ்திரமாயிருக்கையாலே கடாக்ஷமும் அல்பமாய்த்து. ஆகையாலே, உயர்வற்றிருக்கும். தமக்காகிஞ்சன்யமும் கண்டு, தம்மிடத்திலே தயைமிக்கு, இரண்டு திருக்கண்மலர்களும் விகஸிதமாய், [3]தயாவிஷபம் கிடைக்கையாலே க்ருபாப்ரவாஹம் பெருகப் புக்கது. நீஞ்சியும் அனுபவிக்க மாட்டாமை படுகிற பாட்டை, அன்பர்க்கும் பரிவர்க்குஞ் சொல்லித் தரிக்கப் பார்க்கிறார்.

நலமுடையவன் ஏழையராவியுண்ணும்— லீலாவிபூதியிலுள்ளாரைக் கர்மபலங்கள் கொண்டு நலிகிறது. அதிலொன்றுமில்லாத ஏழைபாய், பகவத் சேஷமாய், பாரதந்த்ர்யைகபரையாயிருக்கிறதாகையாலே நலியா நின்றது.

இதாவிஷயப்ராவண்யரை நலியலாகாதோ? தன்னிடத்தில் ப்ரேமத்தாலே அபலையான என்னுவியை யுண்ணா நின்றது. ம்ருத்யு போலே ப்ராணனை வாங்காநின்றது.

பிரிந்து ஆற்றுமையை விளைத்தவனுக்கன்றியே, 'இதாகா' தென்று ஹிதஞ் சொல்லி மீட்கப் பார்க்கிற தாய்மார் தோழிமாருக்கு மன்றிக்கே, அபலைகளையே முடிப்பனயிரண்டு கூற்றமோ?

தன் கண்ணழகு தானறிந்திலனே? கண்ணாடிப்புறத்திலும் கண்டறியானோ? கண்டானுகில் வாரானோ? ராமசரம் போலே ஒப்பனை யழியாதே முடிக்கிறபடி.

---

[2]செம்பிளித்தல் = அச்சம் முதலிய காரணங்களால் கண்ணை இடுக்கிக்கொள்ளுதல். [3]தயாவிஷபம் = அருள்புரிவதற்கேற்ற ஒருவன்.

அறியேன்—அறியேனென்பானென்? அறிந்தன்றோ? சொல்லுகிறாய் என்ன; உயர்நலமென்று ஆனந்தாதிகளும் ஸௌந்தர்யாதிகளும் உடைய [4]புண்டரீகாக்ஷன் நிர்ஹேதுகமாக மயர்வற மதிநல மருளினன்.

யவனவன் "ஆழியங்கண்ணபிரான் திருகண்கள்கொலோ? வறியேன். மயர்வற=மாதர் கயற் கண்ணென்றும் வலையை யறுத்து. கார்த்தன கமலக் கண்ணனென்றும் நெடுங்கயிறு பிடித்தென்னை யீர்த்துக் கொண்டு விளையாடுகிற ஈசன். [5]பும்ஸாந் த்ருஷ்டி சித்தாபஹாரியிறே. பாதந்த்ரரை யழியச் செய்கைக்குச் சொல்லவேணுமோ?.

ஆழியங்கண்=அம்ருதக் கடல் என்மேலே பொங்கியலையெறிகிறபடி. "பிரான்=மதிநலமான பக்திரூபாபன்னஜ்ஞானத்தையந்த வம்ருதஸாகரத்தை அலைமேலலையாய் வந்தென்னெஞ்சிலே தேக்குகிற மஹோபகாரகன். அம்ருதமானது ஜீவிக்கப் பண்ணுமோ? முடிக்குமோ?

'யவன் அறியேன்=இதுக்கு முன்பு பிரிந்தறியாமையாலே திருக்கண்கள் பாதகமென்று வ்யுத்பத்தியில்லை. 'உயிர்க்கெல்லாந் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண், ணென்றிறே கேட்டிருப்பது. இதுதானெனக்குக் கூற்றமாக வேணுமோ? லோகத்துக்குத்தாரகமான கண் பாதகமாவதே?

ஆனால் தப்பினலோ? வென்ன; 'சூழவுந் தாமரை நாண் மலர் போல் வந்து தோன்றும் கண்டீர்! அயர்வறு மமரர்களதிபதியானவன் யவனவன், த்ரிபாத் விபூதியாகச் சூழ்ந்திருந்து, ஜிதந்தே 'புண்டரீ காக்ஷ' என்று தோற்பிக்குங்கண்.

---

[4]புண்டரீகாக்ஷன் (पुण्डरीकाक्षन्) செந்தாமரைக் கண்ணன்.
[5]पुंसां दृष्टिचित्तापहारिणम्=(தன்னுடைய திருமேனியழகு; "வேண்டிற்றெல்லாந்தரும்" என்னும்படியான ஔதார்யம்; தயை, ஸௌசீல்யம், முதலிய குணங்கள் இவைகளின் பெருமையால் (மாதருடையன மட்டுமன்றிக்கே) ஆடவருடையனவான கண்கள்—மனம் இவைகளையும் கொள்ளைகொள்ளுமவன். (ஸ்ரீராமன்)

அயர்வறு மமரர்கள் = அக்கண்ணழகுக்குத் தோற்று கடாக்ஷாம்ருதபானத்தாலே நித்யரானவர்கள், அவசமாய் "நம இத்யேவ வாதின:" என்னும்படி தோற்பித்தவன்.

"சூழவு மித்யாதி = [6]மூலபலத்தினன்று பார்த்த பார்த்த விடமெல்லாம் பெருமாளே யானாற்போலே, ராமசரத்துக்கு ராக்ஷஸர் தம்பினாலாய்த்து இக் கண்ணழகுக்கு [7]அபலைகளாயிருப்பார்க்குத் தப்பலாவது.

[8]ஸர்ப்பயகாம் போலே அபலைகளுடைய இக்கண்ணழகிலே துவக்குண்டு திருவடிகளிலே விழும்படியா யிருந்தது. 'துயரறு சுடரடி தொழு தெழென் மனனே' யென்னும்படியா யிருக்கை.

தாமரை நாண்மலர் போல் வந்து தோன்றும் கண்டீர்! ப்ரத்யக்ஷத்திலும் அத்தலையாலே வரவானாற்போலே, உருவெளிப்பாட்டிலும் அத்தலையாலே வந்து தோன்றவாய்த்துத் தான் அறிகிறது.

துயரறு சுடர்டி வந்து தோன்றுங் கண்டீர்! தோழியர்காளன்னைமீர்! உங்களுக்கு அது தோற்றுகிற தில்லையோ? சிலர்க்குச் சொல்லி, சிலர்க்கு மறைக்கும்படி யன்று இவளுக்குப் பிறந்த தசாவிசேஷம்.

என் செய்கேன்? துயராட்டியேனே. இத்தைத் தப்பப் பார்ப்பதோ? அனுபவிக்கப் பார்ப்பதோ? எத்தைச் செய்வேன்? துயராட்டியேனே.

[9]ஆனந்தம் ப்ரம்மணோ வித்வான் நபிபேதி குதச்சன, என்று இருக்க வேண்டியிருக்க, அங்ஙனன்றிக்கே, [10]அவச்யமனு

---

[6]மூலபலம் = முக்கியமான சேனை [7]அபலைகள் (अबलेकळ) = பெண்டிர் (பலமில்லாதவர்கள்) [8]ஸர்ப்பயாகம் (सर्पयाग:) = ஜனமேஜயர், உலகில் பாம்புகளின் வம்சமே அற்றுப்போக வேண்டுமென்று ஸங்கல்பம் செய்து, அதற்காகச்செய்த ஒரு யாகம். அதில் மந்த்ரசக்தியால் பாம்புகளெல்லாம் இழுக்கப் பட்டு, ஹோமாக்நியிலே தள்ளப்பட்டு, எரிந்து நாசமடைந்தன — என்று கதை.

[9]आनन्दं ब्रह्मणो विद्वान् । न बिभेति कुतश्चन = பிரம்மத்தின் ஆனந்தத்தையறிந்தவன் எதைக்கண்டும் அஞ்சவேண்டியவனாகான்.

[10]अवश्यमनुभोक्तव्यम् = (தான் செய்த வினைப்பயனை ஒவ்வொருவரும்) கட்டாயமாய் அனுபவித்தே தீரவேண்டும்.

போக்தவ்யம், என்கிறபடியே பழைய விச்லேஷமே ஸித்திக்கும் படியாயிற்றென்கிறுள்.

ஏழாம் பத்து ஏழாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

மாயா! வாமன னே! மது சூதா! நீயருளாய்
தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்
தாயாய்த் தந்தை யாய்மக்க ளாய்மற்று மாய்முற்றுமாய்
நீயாய் நீநின்ற வாறிவை யென்ன நியாயங்களே? (1)

மாயாவாமனனில், இப்படி யுருவெளிப்பாடாய் நோவுபட்டவிடத்தில் [1]முடியாதபடியாகப் பண்ணின [2]வைசித்ரியைக் கண்டு, அவனுடைய விசித்ர ஜகதாகாரதையை அருளிச்செய்தார்.

பாசங்கள் நீக்கியேன் னையுனக் கேயறக் கொண்டிட்டு — நீ
வாச மலர்த்தண் டுழாய்முடி மாயவ னே! யருளாய்
காயமுஞ் சீவனு மாய்க்கழி வாய்ப்பிறப் பாய்ப்பின்னும் நீ
மாயங்கள் செய்துவைத் தியிவை யென்ன மயக்குக்களே? (5)

உயர்வற, என்கிற பாட்டைப் "பாசங்கள் நீக்கி" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

'உயர்வற பாசங்கள் நீக்கி, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவாக நானுவிதமான கர்மபாசங்களாலே பந்தகங்களான அவர்களுடைய உயர்வுந் தாழ்வுமாய் வருகிறவை

---

[1]முடியாதபடி—உயிர்போகாமல். [2]வைசித்ரீ = அற்புதமான சக்தி.

கள் புஜித்தறும் 'பாசங்கள் நீக்கி - பல் செய்வினை வன்கயிற்றால் சூழ்த்துக்கொண்ட அவித்யாதிகளை நீக்கி.

உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் = உன்னலமான ஆனந்தாதிகுணகணங்களா லளவிடவொண்ணாத உன்னலம் பாராதே, ஹேயமான 'என்னையுனக்கே யறக்கொண்டிட்டு மயர்வற மதிநல மருளினவன் யவனவன்.

எத்தைக் காட்டி? என்னில்; அயர்வறு மமரர்க ளதிபதியானவன் யாவனொருவ னவன் 'வாசமலர்த் தண்டுழாய் முடியைக்காட்டி வசீகரித்தான்.

'பாசங்கள் நீக்கி = மயர்வற மதிநல மருளி, என்னை யுனக்கே யறக்கொண்டிட்ட மாயவன்' [3]ஆதிராஜ்ய ஸூசகமான மாலையையும் முடியையுங் காட்டியாய்த்துப் புறம்புண்டான பற்றறுத்தது.

துயரறு = துக்கமே வடிவான [4]காயமும் ஜீவனுமாய் ஜந்ம ஜரா மரணாதிகளாகிற துயரறுத்து.

"கழிவாய்ப் பிறப்பாய், போவது வருவதாகிற ஜன்மத்தை ஸவாஸனமாகப் போக்கி.

'பின்னும் நீ உன் சுடரடி தொழுதெழப் பண்ணி. 'பின்னும் மாயங்கள் செய்து, ஹேயமான என் மனஸை மயர்வற மதிநல மருளிச் சுடரடி தொழுதெழப் பண்ணி, இச் சரீரத்திலே தானே 'மாயங்கள் செய்து வைத்தி இவையென்ன மயக்குகளே?

'நீ யங்கீகரித்தாயோ! என்றிருந்தேன். இங்கே வைக்கையாலே கைவிடப் பார்த்தாயோவென்றிரா நின்றேன். என் ப்ரமந்தீர ஒரு வார்த்தை யருளிச் செய்யவேணும்.

உயர்நலமுடையனை நீ, மதிநலமருளி, பாசங்கள் நீக்கி, என்னை யுனக்கே யறக் கொண்டிட்டு அயர்வறு மமரர்கள் முன்பாக, ததீய சேஷத்வ பர்யந்த மாக்கி, அவர்களை முன்னிட்டுச்

---

[3] ஆதிராஜ்யஸூசகம். (आधिराज्यसूचकम्) = 'சக்ரவர்த்தி' என்பதைக் காட்டுவது. [4] காயம்—உடம்பு.

சுடரடி தொழுதெழப் பண்ணி, சரீரத்திலேயிட்டு வைத்தாலாமோ?

சுடரடி தொழுதவர்களைத் துயராறுக்கிறதோ? துயரிலே மூட்டவோ? 'மாயவனே யருளாய், = இந்த வாச்சர்யத்தை ஆச்சர்ய யுக்தனான நீயே யருளிச் செய்யவேணுமென்கிருர்.

ஏழாம்பத்து எட்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி விவரணம்

முதற் பாட்டு—(கலிவிருத்தம்)

என்றைக்கு மென்னையுய் யக்கொண்டு போகிய
அன்றைக்கன் றென்னைத்தன் னாக்கியென் னாற்றன்னை
இன்றமிழ் பாடிய வீசனை யாதியாய்
நின்றவென் சோதியை யென்சொல்லி நிற்பனோ? (1)

"என்றைக்கு மென்னையில், உன்னாலல்லது செல்லாத என்னை யிஸ்ஸம்ஸாரத்திலே வைத்த போதே, இதுக்கு ப்ரயோஜனமென்னென்று கேழ்க்க; எனக்கும் என்னுடையார்க்கும் அனுபவிக்கும்படிக் கீடாக உம்மை வைத்துக்கொண்டு திருவாய்மொழி பாடுவிக்க வைத்தோமென்று சொல்ல; 'தனக்குச் சில கவி பாடுவிக்க வேண்டினல், அதுக்கீடான ஜ்ஞான சக்த்யாதிகளை யுடையரான முதலாழ்வார்களைக்கொண்டு பாடுவியாதே என்னைக்கொண்டு பாடுவிப்பதாகச் சொன்ன வார்த்தையின் நீர்மை யிருந்தபடியே' யென்று தம் பக்கலவன் பண்ணின உபகாரத்துக்குப் பிரத்யுபகாரங்காணமல் தடுமாறினர். ஸ்ரிய: பதியான ஸர்வேச்வரன் ஆர்த்த ரக்ஷணம் பண்ணி ரக்ஷித்தபடி இது.

'உயர்வற, என்கிற பாட்டை 'என்றைக்கு' மென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்;

'உயர்வற என்றைக்கு மென்னை— மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் என்றைக்குமென்று அனந்தமான காலந் தோறும் ஸர்வேச்வரன் 'ஆள் பார்த்துழுதருவான், என்கிற படியே யாள்தேடிக் கிடையாமல் சிந்திக்கிறபடி :—

பிரம்மாதிகள் ஸ்ருஷ்ட்யாதி காரியங்களிலே யமைந்தார்கள். மந்வாதிகள் சாஸ்த்ராதிகளிலே யமைந்தார்கள். வ்யாஸாதிகள் புராணாதிகளிலே யமைந்தார்கள். பத்தர் கர்மானு குணமாக ஸ்வர்க்க நரகாதிகளுக் கமைந்தார்கள். முமுக்ஷுக்களிலே சிலர் கைவல்ய மோக்ஷத்துக் கமைந்தார்கள். சிலர் பகவதனுபவத்துக் கமைந்தார்கள். நித்யரும் முக்தரும் [1]பகவதானந்தாவஹராய் ஸாமகானத்திலே யமைந்தார்கள்.

இனித் திருவாய்மொழி முதலான செஞ்சொற்கவி பாடு விக்கைக்கு ஆழ்வாரைத்தேடி எதிர்ச்சூழல் புக்கு, 'எனக்தோர் பிறப்பும் எனக்கே யருள் செய்ய விதிசூழ்ந்ததாலெனக்கே லெம்மான் திருவிக்கிரமனே, என்கிறபடியே தேடிப் பார்த்த விடத்தில், 'அஸந்நேவ, என்று [2]அஸத்கல்பனை வென்னை "[3]ஸந்தமேனந்ததோவிது:, என்னும்படி மயர்வற மதிநல மருளிக் கவிபாடுவித்துக் கொண்டானென்கிறார்.

உயர்வற என்றைக்குமென்னை = உயர்வற கீழ்ச்சொன்ன வர்கள் [4]பதங்களில் புகாதபடி [5]ப்ருதக்காக்கி.

உயர்நலமுடையவன் என்றைக்குமென்னை உய்யக்கொண்டு- யவன் அதிகாரியானவன், அவன் உய்யக் கொண்டவன்.

---

[1]आनन्दावहर — ஆனந்தத்தை உண்டுபண்ணுமவர் = [2]असत्कल्पन्- सन् = இருக்கும் வஸ்து. அப்படியில்லாதது असत्. அதைப் போன்றவன் ('முயற்கொம்பு') [3]सन्तमेनं ततो विदुः = பிரம்மத்தை உள்ளபடி அறிவானாகில்; பிறகு இவனை 'உளன்' என்று சொல்லுவார்கள். [4]பதம் (पद्) ஸ்தானம் [5]ப்ருதக் — (पृथक् = தனி.)

[6]ஆமுதல்வன் இவனென்றுதேற்றி நானுய்யும்படியும் தானுளனும்படியுமாகத் தேற்றித் திருவுள்ளம் பற்றி.

"மயர்வற போகிய அன்றைக்கன்று—காலந்தோறுங் காலந்தோறும் மயர்வற — அஞ்ஞானசக்திகளற.

மதிநல மருளினன் யவனவன் என்னைத் தன்னாக்கி-தன்னைப்போலே ஜ்ஞானசக்திகளுண்டாம்படி பண்ணி.

யவன் – மயர்வற்றவன், அவன் மயர்வறுத்தவன். "என்னால் = தனக்குத்தக்கக் கவிபாடச் சக்தனானவென்னால். தன்னை = என்னை ஸ்வரூபஜ்ஞானத்திலே நிறுத்தி, தன்னை = அயர்வறுமமரர்களதிபதியான தன்னை. யவன் கவிபாடினவன், அவன் இன்தமிழ்பாடிய ஈசன்.

அயராமல் ஸாமகானம் பண்ணுமவர்கள் அபர்யாப்தாம்ருதாசிகளைப்போலன்றிக்கே, அதிலு மினிதான "பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதனம் ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோபவாங்மயம், ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம் நமாம்யஹம் த்ராவிடவேதஸாகர"மான புகழ் வண்டீங்கவிபாடின ஸ்வாமியை.

யவன் பாட்டு கற்கிறவர், அவன் ஆதியாய் நின்றவென் சோதியைத் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

'என்சொல்லி நிற்பனோ? பிரம்மாதிகள் முதலானார் கவிகளல்ல, தான்பாடின கீதையல்ல. என்னைக்கொண்டு பாடினகவி உபயவிபூதியிலு மடங்காதாயிருந்தது. என் சொல்லி நிற்பன்? இதுக்கொரு உபகாரஸ்ம்ருதியுங் காண்கிறிலேனென்கிறார்.

ஏழாம்பாட்டு

வைகுந்த நாதனேன் வல்வினை மாய்ந்தறச்
செய்குந்தன் றன்னையேன் னாக்கியேன் னற்றன்னை
வைகுந்த னாகப் புகழ—வண் டீங்கவி
செய்குந்தன் றன்னையேங் நாள்சிந்தித் தார்வனோ? (7)

---

[6]ஆமுதல்வன் = ஸ்ரீ வைஷ்ணவசமயத்தை நன்கு உலகினருக்கு எடுத்துக்காட்டி, அதன் மூலமாக உலகைத்திருத்தி, நல்வழிக்கு அழைத்துவரும்படியான ஆற்றல் படைத்தவன்.

"உயர்வற, என்கிற பாட்டை "வைகுந்த நாத, னென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

உயர்வற உயர்நல முடையவன் யவனவன் வைகுந்நாத னென் = மனுஷ்யானந்தம் தொடங்கி பிரம்மாநந்தத் தளவும் பிரம் மாதிகள் முதலானோரைக்கொண்டு வேதம் முதலானவற்றைப் பாடுவித்துக்கொண்டவிடத்தி லிப்படி வாய்க்காதே ஐஹிகா முஷ்மிகாதிகளிலே மண்டி விழுந்தார்களாகையாலே 'உயர்வற, என்றது.

உயர்நலமுடையவன் = ஆனந்தாதி கல்யாணகுண பரிபூர்ணனான ஸர்வேச்வரன், பரமோதாரமான இனிய கவியை என்னைக்கொண்டு பாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்துக்கு இவனைக் காலதத்வ முள்ளதனையும் அநுபவியாநின்றாலு மாறுவனோ? வென்கிறார்.

உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் வைகுந்நாதன் எனக்குபகரித்தவன் என்னேடிணைய நின்றுஒருவனுய்த்,தான் ஆறியிருக்கிறேனோ? 'அப்ராப்ய மனஸாஸஹ, என்று வேதங் களாலும் அளவிடவொண்ணாத பராத்பரனானவன், வைகுந்த நாதன் = குந்தமென்று தள்ளுகையாய், 'வைகுந்தா' வென்று தள்ளாவான பதத்துக்கு நாதனென்றபடி. ஆக இத்தால் ஆனந்த ஸ்வரூபனென்றபடி.

இப்படி உபயவிபூதிநாதனானவன் 'வைகுந்நாதனென்' என்று என்னைத் தனக்கு நாதனாக எண்ணினான். ஒரு ஸம்ஸாரி சேதனனை மேல் விழுந்து உகவாநின்றால், நானெங்ஙனே யாறி யிருப்பேன்?

இப்படி அவன் உகக்கக் கூடுமோ வென்னில்; [7] "லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி" என்றதுக்கு மவ்வருகா யிருந்தது இதுவும். அவரை நாதனாக உடையராகைக்கு

[7] लोकनाथः पुराभूत्वा सुग्रीवं नाथमिच्छति। = முன்பு (இராமன்) உல குக்கெல்லாம் நாதனாயிருந்து இப்போது ஸுக்ரீவனைத் தனக்கு நாதனாகப் பெற விரும்புகிறார்.

யோக்யதை ஸம்பாதிக்கிறபடியாய்த்து, முன்பு லோகநாதரானது. பெறுவார் பெருதொழிவார் இச்சியா நின்றூர். கிடையாத வதிலேயிறே இச்சைதான் செல்லுவது. [8]"ஸராமோவாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே" என்றூற்போலே யாய்த்து அவனென்னை வேண்டிவந்து நின்றபடி.

'வைகுந்த நாதனென்' என்னை ஸ்வதந்த்ரனுக்கித் தான் ஆச்ரித பரதந்த்ரனு யிராநின்றுன். இதுக்குஹேது, என்னுகிஞ்சன்யமும் அநந்யகதித்வமுங்கண்டு இவனே 'வைகுந்தநாதனென்' நமக்கும் நம்முடையார்க்கும் நாதனென்று திருவுள்ளம்பற்றியிரா நின்றுன். 'வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்'ளென்று ஸமர்ப்பியாநின்றுன். 'அடியார் நிலாகின்ற வைகுந்தமோ? வையமோ? நுன்னிலேயிடம்' என்று கொண்டாடா நின்றுன். என்னை அரசமர்ந்தா னடிசூடு மரசாக்கித் தானவர் இளவரசு வைகுந்தக் குட்டனு யிருந்தான்.

[9] மஹாராஜர், தாம் நாதனுன வாசி தோற்ற, முதலிகளுந் தாமுமாகப் பிராட்டியைத் தேடிக்கொண்டு, ராவணவதம் பண்ணி, மீண்டெழுந்தருளித் திருவயோத்தியிலே திருவபிஷேகம் பண்ணின பின்பு க்ருதக்ருத்யரானுரிறே.

அப்படியே இவரு மறியவொண்ணுதபடி ஸம்ஸார [10]காந்தாரத்திலே, துர்கத்ரயமான மிச்ரஸத்வமாகிற லங்கையிலே புக்கு அஹங்காராதிகளாகிற ராக்ஷஸிகளாலே நோவுபட, ஆசார்யனுகிற திருவடி, திருமந்த்ரமாகிற திருவாழிமோதிரங் கொடுத்துத் தெளிவிக்கத் தெளிந்து, [11]தசேந்த்ரியாநநம் கோரம், என்கிற ராவணனுகிற இந்திரிய ஜயத்தைப் பண்ணிச் சரீரமாகிற லங்கையில் நின்றும் [12] பிரம்மரந்த்ரமென்கிற தலைவாசல் திறந்து

---

[8] सरामो वानरेन्द्रस्य प्रसादमभिकाङ्क्षते = அந்த ராமன் குரங்குவேந்தனுன ஸுக்ரீவனுடைய அருளை விரும்புகிறுர். [9] महराजर् (இங்கு) ஸுக்ரீவமகாராஜர். [10] कान्तारम् = காடு.

[11] दशेन्द्रियाननं घोरम् = அறிவுக்காக ஏற்பட்ட பொறிகள் 5. செயலுக்கானவை 5. இவையே பத்து தலைகளாகக் கொண்டதென்கை. இந்த்ரியங்களின் கூட்டங்களையே ராவணன் தலைகளாக ரூபகம்.

[12] ब्रह्मरन्ध्रम् = ப்ரம்மரந்த்ரம் = உச்சந்தலையிலுள்ள ஒரு சந்து

கொண்டு புறப்பட்டு 'அயோத்யை அபராஜிதை" என்று சொல்லப்பட்ட ஏர்கொள் வைகுந்தமான காற்றிலே ப்ரவேசிப்பித்து, 'வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்'ளென்று வீடு கொடுக்கும்படி யருளினுனைகயாலே 'வைகுந்த நாதனென்' என்றிதுவுமொரு த்ருஷ்டாந்தம்.

இப்படி நாதனைகப் பற்றினவன் 'வல்வினைமாய்ந்தற' வினை பின்பு செய்ததென்னென்ன; வினைபோக்யமாம்படி தான் மறந்துமயர்வற மதிநல மருளினவன்.

யவனவன் 'வல்வினை மாய்ந்தற-வல்வினை = ஸர்வசக்தனாலும் போக்கவொண்ணாத வலிய பாபங்கள். 'மாய்ந்தற = போன விடந்தெரியாமல் போக.

யவனவன் பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே தன்வசமாக என்னை யாக்கிக்கொண்டு 'செய்குந்தன் = என்விரோதியைப் போக்கின சுத்தியோகத்தை யுடையவன் யாவனொருவன் அவன் அயர்வறுமமரர்களதிபதி.

யவனவன் – ஹேயப்ரதிபடரான நித்யருக்கு நாதனானவன் என்னை நாதனைக்கி 'நின்னடியார்க் கென்செய்வ னென்றே யிருத்தி. 'நின்னடியார்க்குத் தீர்த்தசுரர்க்குத் தீமைகள் செய்குந்தா! என்னக்கடவதிறே. ஆச்ரிதருடைய பாபங்களை அனுச்ரிதர்பக்கலிலே விடும்படியான சுத்தியையுடையவன் என்கை. 'குந்த' னென்று திருநாமமாகவுமாம். 'முகுந்தஃ குந்தரஃ குந்தஃ' என்றது.

அயர்வறுமமரர்களதிபதி 'என்னைத் தன்னுக்கி = வல்வினையே ஸ்வரூபமான என்னை, தன் சுத்தியை எனக்குண்டாக்கி, ஜ்ஞான சக்த்யாதிகளாலே தன்னோடொக்கப் பண்ணி'என்னுல் தன்னை இன்தமிழ் பாடிய ஈசனை.

அஜ்ஞானசக்திக ளில்லாத நித்யஸூரி ஸேவ்யனானவன், வேதங்களும் 'அப்ராப்ய மனஸாஸஹ' என்று மீண்டவிஷயத்தை 'என்னுல் தன்னை இன்தமிழ்பாடிய ஈசனை, என்று, 'வைகுந்தனைகப் புகழ வண்டீங்கவி; நான் புகழ்ந்தால்தான் ஸ்ரீ வைகுந்தநாதனாய் ஸர்வஸ்வாமியாய் பரஞ்சோதி யாகாநின்றான்.

பிதா, புத்திரனுக்கு நீர் வார்த்துப் பசுவைக் கொடுத்துத் திரும்பவும் வாங்குமாபோலே இதுவும். நித்யவிபூதியிறே இவர் புகழ்ந்தவாறே நித்யவிபூதியாய்த்ததாக நினைத்திருந்தான்.

உயர்வற உயர் நலந்துடங்கி இவ்வளவும் வர வரப் புகரேறி வாராநின்றதிறே. அது எங்ஙனே யென்னில்:—

ஆத்மவஸ்துவும் [13]நித்யமாயிருக்கச் செய்தே 'அஸந்நேவ, என்றும் 'ஸந்தமேன' மென்றும் சொல்லுகிறவோபாதியாய்த் திதுவும். 'இவனுளனாகத் தானுளனானபடி.

செய்குந்தந் தன்னை எந்நாள் சிந்தித்தார்வனே? 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' யென்று இவரைக்கொண்டு கவிபாடின பின்பு தான் துயரற்றபடி.

இவர் துயரறத் தான் துயரற்றபடி. சரீரத்துக்கு வந்த துயர் சரீரியிறே அனுபவிப்பான். [14]'வ்யஸநேஷு மனுஷ்யாணும் ப்ருசம் பவதி துக்கித:' போலேயிறே படுவது.

திவ்யதிரிக்தப்ரேமமிறே நோயாவது. அது தீருகையிறே நோய் தீருகையாவது. அப்போதிறே இவனும் துயரற்றது.

'செய்குந்தன் தன்னை எந்நாள் சிந்தித்தார்வனே? அவன் பண்ணின உபகாரம் கனத்திராநின்றது. உபகாரஸ்ம்ருதிக்குக் காலம் போருகிறதில்லை. நானென்செய்வே னென்கிறார்.

---

[13] नित्यम् = எக்காலத்தும் உள்ளது. ஆயினும், பரம்பொருளான பிரம்மத்தை உள்ளபடி அறியானாகில்—அவன் இல்லாத வஸ்து (असन्) வாவான். பிரம்மத்தையறிந்தவனே 'உளனாவான்' என்கிறமாதிரி.

[14] व्यसनेषु मनुष्याणां भृशं भवति दुःखितः = (இராமன்) மானிடர்கள் துன்புற்றக்கால், துக்கமேலீட்டால் மிகவும் தவிக்கிறான் என்றபடி. இங்கு மனுஷ்யர்கள் என்பது உயிருள்ளவை எல்லாவற்றையும் குறிக்கும். ஆக எல்லா உயிர்களும் (ஜீவாத்மாக்களும்) எம்பெருமானுக்கு (அவைகளுள் அந்தர்யாமியாய்ப் புகுந்தவனுக்கு) உடம்பாகுமாதலின், உடம்பிற்கு வரும் துன்பங்களை உள்ளேயிருக்கும் உயிரே உணருமாபோலே எல்லா உயிர்களின் துன்பங்களையும் எம்பெருமான் அனுபவிக்கிறான் என்றபடி.

சரீரவிச்லேஷத்தில் வாய்புகும் நீராகையாலே அநுஸந்திக்க அவஸரமில்லை. இங்கிருந்த நாள் காலம் போருகிறதில்லை. பண்ணினஉபகாரமோ கனத்திராநின்றது. என் மனமே தொழுதெழென்கிறார்.

கரண ப்ரதானந் தொடங்கி இன்கவி சொல்லவல்லேனும்படி பண்ணின உபகாரத்துக்கு ப்ரத்யுபகார முண்டோ? உன் [15]ஸ்வரூபாநுரூபமான அஞ்சலியைப் பண்ணென்கிறார்.

ஏழாம்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஏழாம்பத்து பத்தாம் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு:—(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

இன்பம் பயக்க வெழின்மலர் மாதரும் தானுமிவ் வேழுலகை
இன்பம் பயக்க வினிதுடன் விற்றிருந் தாள்கின்ற வெங்கள்பிரான்
அன்புற் றமர்ந்துறை கின்ற வணிபொழில் சூழ்திரு வாறன்விளை
அன்புற் றமர்ந்து வலஞ்செய்து கைதொழு நாள்களு மாகுங்கொலோ?

'இன்பம் பயக்க'வி லிப்படி மஹோபகாரகனை ஸர்வேச்வரனைத் திருவாறன்விளையிலே பெரியபிராட்டியாருந் தானுமாக எழுந்தருளியிருக்கிற சேர்த்தியிலே கண்டு அநுகூல வ்ருத்திகளைப்பண்ண என்று மநோரதிக்கிறார்.

'உயர்வற' என்கிற பாட்டை 'இன்பம் பயக்க' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்;

---

15 स्वरूपानुरूपम् = உன் தன்மைக்கேற்றது.

எம்பெருமான் ஆழ்வாருக்கு மயர்வற மதிநல மருளித் திருவாய்மொழி யோதுவித்து, அந்த அத்புதமான கானத்தை ஸர்வரும் கூடின ஸதஸ்ஸிலே யிருந்து கேழ்க்கத் திருவுள்ளமாய்த் தானும் பிராட்டியுமாக இருந்து 'நித்யரும், முக்தரும் முமுக்ஷுக்கள் பக்தரும் கூடத் திருவாறன்விளையே எழுந்தருளியிருந்து, ஆழ்வாரை [1]யருளப்பாடிட்டுப் பாடச்சொல்லிக் கேட்டானநந்திக்கிறபடி சொல்லுகிறது.

உயர்வற உயர்நலம் இன்பம் பயக்க = மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மாநந்தத்தளவாக [2]அம்ருத ஸாகரத்தில் திவலை போலே இவர்களானந்தந் தோன்றுதாய்த்து. ஸூர்ய ப்ரகாசத்தில் மின்மினிபோலே ப்ரகாச மறும்படி பரப்ரம்மாநந்தம் நிரவதிக தேஜோரூபமாயிருக்கும். ஆகையாலே அவர்களும் அவர்களைச் சொல்லுகிற கானமும் உயர்வற்றிருக்கு மென்றபடி.

உயர்நலம் என்றும், இன்பம் பயக்க எழில்மலர்மாதரு மென்றும். உயர்நலம்—உகாரவாச்யையான பிராட்டியுடைய வானந்தமும், 'நலமுடையவ' னென்று எம்பெருமானுடைய ஆனந்தமுமாக இருவருடைய ஆனந்தமும் ச்ருதிப்ரஸித்தமிறே.

இப்படி ஆனந்தாதிகுணபூர்த்தியை யுடையவன் யாவனொருவன், அவன் இன்பம் பயக்க எழில்மலர்மாதருந் தானு மிவ்வேழுலகை யின்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந் தாள்கின்ற எங்கள் பிரான்.

ஆழ்வாருக்கு மயர்வற மதிநல மருளித் திருவாய்மொழி யோதுவித்து, இருவருங் கூடவிருந்து இவரைப் பாடச்சொல்லிக் கேட்டு ஆனந்திக்கிற ஆனந்தம், [3]த்ராவிடவேத ஸாகரத்தின் திவலை யென்னும்படி கானம்ருதஸாகரங் கொந்தளிக்கிறபடி.

யவன் மூவுலகு மின்பம் பயக்கப் பாடுகிறவர் — அவன் கானங் கேட்கிறவர். யவனவன் = வக்தாவான ஆழ்வாரும்

---

[1] அருளப்பாடு = எம்பெருமான் தன் முன்பாக ஒரு அடியாரைக் கூப்பிடுதல் 'அருளப்பாடு' என்று வழங்கப்படும்.

[2] अमृत सागरम् = அமுதக்கடல் = [3] द्राविड वेदम् = தமிழ் வேதம்.

ச்ரோதாவான ஸ்ரீய: பதியும். மயர்வற மதிநலம் பெற்று "ஏழுலகும் இன்பம் பயக்க = திருவாய்மொழி கேட்டார்கள் எல்லா மின்பம்பயக்க விருந்தார்கள்.

'இனிதுடன் வீற்றிருந் தாள்கின்ற எங்கள் பிரான் = "பக்தாம்ருதம் விச்வஜநானுமோதனமான இன்பக்கவி பாடுவித்தோன் [4]இந்திரையோடு மதிநலமான பக்தி ரூபாபன்னஜ்ஞானத்தாலே, பகவத்க்ருபாம்ருதவருஷ்டி, மஹாப்ரளய முடைந்து பெருகுமாபோலே ஸஹஸ்ர முகமாய் கங்காதி [5]தரங்கங்கள் போலே சரணாகதியும் ஆன்றதமிழ்மறை யாயிரமுமாய் [6]ப்ரவஹியா நின்றது. அது பொங்கிப் பாட்டாய்த்தலைக் கட்டித்து.

இப்படி யருளினவன் யாவனொருவன், அவன் அயர்வறு மமரர்களதிபதி. நிர்ஹேதுகமாக அருளின பாட்டுக் கேட்டு 'அன்புற்றமர்ந் துறைகின்ற அணிபொழில்சூழ் திருவாறன் விளையிலே 'கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே' என்னும்படி. இனிதானபடி. திருவாறன் விளையும் தளிரும் முறியுமாய்க் கொந்தளித்தது. [7]'அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:' இத்யாதிப்படியாய்த்தது.

யவன்—அருள் கொண்டாயிர மின்தமிழ் பாடினவர், அவன்—என்னால் தன்னைப் பாடிய வீசன். 'என்னோடே கூடத்தென்னா தெனாவென்று [8]ஆளத்தி வைக்கிறவன் யாவனொருவன், அவனெங்கள் பிரான். திருவாறன் விளையிலே யாழ்வார் திருவாய்மொழி பாடக் கேழ்க்கலாந் தேசமென்று,'அன்புற்றமர்ந்து வலஞ்செய்து = அநித்ய விபூதியை மறந்து இங்கேயன்புற்றமர்ந்துறைகின்றான். நித்யர் முக்தர்கள் ஸாமகானம் பண்ணத் தான் [9]'அவாக்யநாதர:' என்றிருக்கிற ஸ்வாமியானவன் 'கேட்டாரார்

---

4 இந்திரா (इन्दिरा) = லக்ஷ்மி. 5 (तरङ्गम्) = அலை. 6 (प्रवहिया) = பெருகா (நின்றது.) 7 இராமனைப் பிரிந்த ஸமயத்தில் எல்லையில்லாத் துயரத்தையடைந்தவைகளே மீண்டும் அவனைக் கண்டவாறே மிகுந்த ஸந்தோஷமடைந்தன. 8 ஆளத்திவைத்தல் = ராக ஆலாபனம்செய்தல் 9 அவாக்யநாதர: = (अवाक्यनादरः) = अवाकी = பேசாமலிருப்பவன். अनादरः = (பெறவேண்டிய பேறு ஒன்றுமில்லையாகையால்) எதிலும் நோக்கற்றவன். (பகவான்) இதனால்தான் अवाकी என்பது ஏற்பட்டது.

என்கிறபடியே யினிது ஆராமையாயிருந்தபடி, தானுங்கூட ப்ரீதி ப்ரேரிதனாய்க் கொண்டு பாடத்தொடங்கினான். 'அந்தாமத்தன்பு செய்து' இத்யாதிப்படியே யுகந்திரா நின்றான்.

நீயுமவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே. "அன்புற்றமர்ந்து வலஞ் செய்து கைதொழும் நாள்களு மாகுங் கொலோ? திருவடிகளுக்குத் துயரறுகையாவது:— நித்ய விபூதியில் நித்யர் முக்தர் பாடுகிற ஸாமகானம், நித்ய விபூதியளவிலே யாகையாலே ப்ரீதி பிறந்ததில்லை. ஆழ்வார் 'இன்பம் பயக்க எழில் மலர்மாதரும் தானுமிவ்வேழுலகை யின்பம் பயக்கப்பாடின திருவாய்மொழி 'கேட்டாரார் வானவர்க'ளென்று உபயவிபூதியும் தளிரும் முறியுமாய்க் கொந்தளித்தபடியும் இந்த லீலாவிபூதி யாரிலுங் கடையான தம்மைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்து, அது பாடக் கேட்டபடியாலே துயரற்று இன்பம் பயக்கப் பார்த்திருந்தான்.

அப்போதாழ்வார், ஜ்ஞானமுத்திரையுங் கையும், [10]கானோச்சாரணமான திருப்பவளப் பூரிப்பும், அர்த்த ஸ்ம்ருதியாலே பிறந்த [11]முகவிகாஸமும், ஆனந்தாச்ரு [12]பனிக்கிற திருநயனங்களும், கானனந்த மக்னரான புளகித காத்ரமுங் கண்டு, உபய விபூதியும் ஈச்வரனும் பிராட்டியு மானந்தாவஹரானார்கள்.

அன்புற்றமர்ந்துறைகின்ற = நூராண்டு பதினோ ராயிரமாண்டென்கிற அவதியன்றிக்கே, நித்ய விபூதியும் அநித்யமென்னும்படி அமைந்துறைகின்ற திருவாறன்விளை தீர்த்தனுக் குற்றபின், சுடரடி தொழுது வலஞ்செய்து வர்த்திக்கப் பாரா யென்கிறார்.

ஏழாம்பத்து பத்தாம்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஏழாம்பத்து விவரணம் முடிவுற்றது

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

10 गानोच्चारणम् (கானோச்சாரணம்) பாட்டுக்களைப்பாடுதல்.
11 முகவிகாஸம் (मुखविकासम्) = முகமலர்ச்சி. 12 பனிக்கிற= பெருகுகிற.

ஸ்ரீ:

எட்டாம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம்

முதற் பாட்டு—(எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

தேவிமா ராவார் திருமகள் பூமி
  யேவமற் றமரராட் செய்வார்
மேவிய வுலக் மூன்றவை யாட்சி
  வேண்டுவேண் டுருவம்நின் னுருவம்
பாவியேன் றன்னை யடுகின்ற கமலக்
  கண்ணதோர் பவளவாய் மணியே!
ஆவியே! யமுதே! யலைகடல் கடைந்த
  வப்பனே! காணுமா றருளாய். (1)

"தேவி மாரில், பாரித்தபடியே திருவாறன் விளையிலே போய்ப் புகப்பெறுமையாலே மிகவுமவஸந்நராய்; ஆச்ரித பாதந்த்ரனென்றும் ஸர்வ நிர்வாஹகனென்றும் சொல்லுகிற திது பொய்யோ? வென்று அதிசங்கை பண்ண, அவனுந் தன்படிகளைக்காட்டக் கண்டு [1]அதிசங்கைதீர்ந்தார்.

ஐந்தாம் பாட்டு

ஆருயி ரேயோ! வகலிட முழுதும்
  படைத்திடந் துண்டுமிழ்ந் தளந்த
பேருயி ரேயோ! பெரியநீர் படைத்தங்
  குறைந்தது கடைந்தடைத் துடைத்த
சீருயி ரேயோ! மனிசர்க்குத் தேவர்
  போலத் தேவர்க்கும் தேவாவோ!
ஒருயி ரேயோ! வுலகங்கட் கெல்லா
  முன்னனா னெங்குவந் துறுகோ?. (5)

"உயர்வற" என்கிற பாட்டை "ஆருயிரேயோ" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

இழில் பாட்டுக்களிலே "காணுமாறருளா" யென்றீர். அப்படியேகாணக்கடவிர். அதில் ஒரு குறையில்லை. 'சாஸ்த்ர பலம் ப்ரயோக்தரி' என்று பேறு உமதானால், ஸாதனமும் உம்

---

[1] அதிசங்கை (अतिशङ्का) = ஐயம்.

முடையதலையிலே யாகவேண்டாவோ? வென்ன; நான் யத்நம் பண்ணிவந்து காணவென்றொரு பொருளில்லைகா ணென்கிறார்.

'உயர்வற = மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தத் தளவும் அவரவர்கள் ஸாதனானுஷ்டானம் பண்ணி, ப்ரயோஜநாந்தரத்தைக் கொண்டு போகையாலே உயர்வற்றார்கள்.

உயர் நலமுடைய உன்னை = அரிய உயிரான வுன்னைப் பெற்றாருண்டோ? பரமமான ஜ்ஞானானந்த ஸ்வரூபனுக்கு ஒக்க ஒரு பொருளில்லை. அதுக்குத் தக்க ஸாதனமுண்டோ? நானொரு யத்நம் பண்ணி வந்து காணவென்றொரு பொருளில்லைகா ணென்கிறார்.

யவனவன் ச்ருதி ப்ரஸித்தனானவன் 'ஆருயிரேயோ = உயிர் நீயாயிருக்க, சரீரமான நானென்னென்ன ஸாதனானுஷ்டானம் பண்ணுவேன்? உன்னை வந்து கிட்டும் வகையென்? சரீர ரக்ஷணம் சரீரியதன்றோ? சரீரந்தான் தன்னை ரக்ஷித்துக் கொள்ளவோ? ஸம்பந்தமேயோ? அனுஷ்டானமுமில்லையோ? என்கிறார்.

அனுஷ்டான மேதென்ன;

மயர்வற மதிநல மருளித்தில்லையோ? என் [2]அவித்யாகர்ம வாஸநாருசிகளைப்போக்கி, உன்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களை விசதமாகக் காணும்படி பக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தை உன் நிர்ஹேதுக க்ருபையாலே யருளித்தில்லையோ?

அந்த க்ருபைதான் என்னளவேயோ? அகலிட முழுதும் படைத்து-[3]'பஹுஸ்யா'மென்று பூமிப்பரப்படைய ஸ்ருஷ்டித்து.

---

[2] அவித்யாகர்மவாஸநாருசி (अविद्या कर्मवासनारुचि) அவித்யா = அறியான அஜ்ஞானம். கர்மம் = வினை. வாஸனை = மேலும் அவ்வோ கர்மங்களிலேயே மனது ஈடுபடும்படி செய்கின்ற மனதின் ஒருவிதமான பக்குவநிலைமை. ருசி = அந்த வாசனையால் அந்தக் கர்மங்களை மீண்டும் மீண்டும் செய்யவேண்டுமென்று மனதில் உண்டாகும் ஆசை.

[3] பஹுஸ்யாம் (बहुस्याम्) = 'நான் ஸூக்ஷ்மமான சித்-அசித்-இவைகளுடன் இரண்டறக்கலந்து ஒன்றுபோல் தோன்றும் நிலையை விட்டு; ஸ்தூலமான அவைகளால் பல உருவங்கள் கொள்ளவேண்டும்.' இது ஸ்ருஷ்டிகாலத்தில் ஆதிகாரணமான கடவுளின் மனதில் தோன்றின எண்ணம் (ஸங்கல்பம்).

இடந்து = ப்ரளயத்தில் நோவு படாதே மஹாவராஹமாய் எடுத்துக் கொண்டேறி.

உண்டு = [4]திரிய ப்ரளயம் வர, வயிற்றிலே வைத்து நோக்கியும்.

உமிழ்ந்து = உள்ளே கிடந்து தளராதபடி வெளிநாடுகாண உமிழ்ந்து.

கடந்து = மஹாபலியாலே அபஹ்ருதமான தசையிலே எல்லை நடந்து மீட்டுக்கொண்டு.

இப்படி வந்த துர்தசைகளிலே, [5]அபேக்ஷா நிரபேக்ஷமாக உணர்ந்து நோக்கின நீயே இது கிட்டும் [6]விரகு பார்க்க வேண்டாவோ?

இப்படி ஸர்வவித ரக்ஷகனானவன் யவனவன் அவனென்ன; பெருயிரான அயர்வறு மமரர்க ளதிபதி—அயர்வில்லாத பூர்வே ஸாத்யர்களானவர்களுக்கு நிர்வாஹகனான 'பெருயிரேயோ' வென்று பெரியோனென்றபடி.

வேதைகஸமதிகம்யனான பெருமையை யுடைய நீ பெரிய நீர் படைத்து - ஸர்வவிஷயமாகப் பண்ணும் வியாபாரத்தோடு, பிராட்டிக்காகப் பண்ணும் வியாபாரத்தோடு, வாசியற்றிருக்கும் படி சொல்லுகிறது.

'பெரிய நீர் படைத் தங்குறைந்து = ஏகார்ணவத்தை ஸ்ருஷ்டித்து ஸ்ருஷ்ட்யர்த்தமாக அதிலே கண் வளர்ந்து.

அது கடைந்து = கடலென்கிற [7]ஸமாதியாலே யருளிச்செய் கிறார். அத்தைக் கடைந்து மற்றக்கடலை யடைத்து மதுடைக்தும்.

---

[4]திரிய = திரும்ப. [5]அபேக்ஷாநிரபேக்ஷம் (अपेक्षा निरपेक्षम्) = பிறருடைய விருப்பத்தை எதிர்பாராமல். [6]விரகு = உபாயம். [7]ஸமாதி (समाधि) = ஸ்ருஷ்டி காலத்தில் படைத்த கடல் வேறு. ராமாவதாரத்தில் ஸேதுவைக் கட்டிய கடல் வேறு. கூர்மாவ தாரத்தில் கடைந்த கடல் வேறு. இவ்விதமிருக்க 'அங்கு உறைந்து அது கடைந்து, என்று எல்லாவற்றையும் ஒன்றாகச் சொல்லுதல், (பெரியநீர்) என்னும் பெயர் ஒன்றாய் இருப்பதனால்.

பிராட்டியை லபிக்கைக்காக அவற்றைக் கடைந்து, அவளோட்டை ஸம்ச்லேஷத்துக்காக அத்தையடைத்து, அவ்வருகுண்டான ராக்ஷஸர் வந்து ஆச்ரிதரை நலியாதபடி அது உடைத்து.

இப்படியான செயலைச் செய்தவன் யாவனொருவனவன் சீருயிரானவன் = நித்யாச்ரிதையான பிராட்டியோடு, நித்யமுக்தரோடு, அல்லாதாரோடு, வாசியற விஷயீகரிக்குஞ் சீர்மையையுடையவனே!

'மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்குந் தேவாவோ!' வென்று ஐச்வர்யத்தாலும் [8]கௌரவ்யனுமையிறே. மனுஷ்யர்களிற் காட்டில் தேவர்களதிசயித்திருக்குமாப்போலேயாய்த்து—நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனுமிருக்கும்படி.

இப்படியிருக்குமவன் யாவனொருவன், அவன் 'ஒருயிரேயோ உலகங்கட்கெல்லாம் - கேவல சரீரமோ? ஆத்மாவோ? ஹித சிந்தை பண்ணுவாரார்?

இப்படியிருக்கிற 'உன்னை நானெங்குவந்துறுகோ?' உன் துயரறு சுடரடி தொழுகைக்கு ஸாதனாநுஷ்டானம் பண்ணுகிறேனோ? அப்போதுனக்குத் துய்ருண்டாமதொழிய, துயரறுது கிடாய்.

ஹேயப்ரதிபடமான திருவடிகளே உபாயமாகவும் அதுதானே உபேயமாகவும் காண் தத்வமிருப்பது. இப்படியிருப்பதொரு [9]தத்வாந்தரமுண்டாகில் சொல்லிக்காணாய்.

இப்படி உபயவிபூதிக்கு மோருயிராயிருக்கிற வுன்னை, சரீரபூதனான என்னாத்மாவும் ஆத்மீயமு முனக்குச் சரீரமானபின் என்ன ஸாதனாந்தரத்தைப் பண்ணிவந்து கிட்டுவேன்? ஆத்மா சரீரத்துக்கு ஹித சிந்தை பண்ணுவதொழிய, சரீரம் ஸ்வரக்ஷண சிந்தை பண்ண என்பது ஒன்றுண்டோ?

---

[8] கௌரவ்யன் (गौरव्यन्) — பூஜிக்கத்தகுந்தவன். [9] தத்வாந்தரம் (तत्वान्तरम्) = வேறு தத்வம்.

[10]ஆதார ஆதேய — நியந்த்ரு நியாம்ய — பாவங்களாலே சரீரலக்ஷண மிதுக்குண்டானபின்பு, அல்பசைதன்யமு முன்ஞலேயாய், சேஷபூதன் சேஷியிடத்தில் தொழுதெழுமத்தனை யொழிய ஸ்வயத்ந ஸாத்யம் உண்டோ? எனக்கும் நெஞ்சுக்கு மென்கிறுர்.

எட்டாம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து இரண்டாம் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

நங்கள் வரிவளை யாயங் காளோ!
 நம்முடை யேதலர் முன்பு நாணி
நுங்கட்கி யானுன் றுரைக்கும் மாற்றம்
 நோக்குகின் றேனெங்கும் காண மாட்டேன்
சங்கஞ் சரிந்தன சாயி ழந்தேன்
 தடமுலை பொன்னிற மாய்த் தளர்ந்தேன்
வெங்கண் பறவையின் பாக னெங்கோன்
 வேங்கட வாணனை வேண்டிச் சென்றே. (1)

"நங்கள் வரிவளையில்" பின்னையும் தம் அபேக்ஷிதம் கிடையாமையாலே இதுக்கடி நாமறியாததாய், எம்பெருமானறிந்ததாய், 'ஸம்ஸாரத்திலே ஏதேனும் நசையுண்டாகவேணுமென்று

---

[10] ஆதாரம் (आधारम्) = தாங்கி நிற்பது. ஆதேயம் (आधेयम्) = தாங்கப்படுவது. நியந்தா (नियन्ता) = ஏவுகிறவன். ஒரு காரியத்தைச் செய்வது அல்லது செய்யாதொழிவது இவைகளைத் தன் இஷ்டத்தால் மற்ற பொருள்களுக்கு உண்டுபண்ணுமவன். நியாம்யம் (नियाम्यम्) = மேற்சொன்னபடி எவ்விஷயத்திலும் பிறருக்கே அடங்கினதாய் சிறிதளவும் சுதந்திரமில்லாத தொன்று. (சரீரம்).

பார்த்தானத்தனை யென்று தமக்கு [1]ஆத்மாத்மீயங்களில் [2]நசையற்றபடியை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

தொல்லையஞ் சோதி நினைக்குங் காலென்
 சொல்லள வன்றிமை யோர் தமக்கும்
எல்லை யிலாதன கூழ்ப்புச் செய்யு
 மத்திறம் நிற்கவெம் மாமை கொண்டான்
அல்லி மலர்த்தண் டுழாயுந் தாரான்
 ஆர்க்கிடு கோ?இனிப் பூசல் சொல்லீர்
வல்லி வளவயல் சூழ்கு டந்தை
 மாமலர்க் கண்வளர் கின்ற மாலே. (6)

உயர்வற என்கிற பாட்டைத் 'தொல்லையஞ்சோதி' என்கிற பாட்டு விவரிக்கிறது, எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் ஆத்மாத்மீயங்களில் நசையுண்டானவர்களாகையாலே உயர்வற்றிருப்பார்கள்.

நாமு மவர்களிலே யொருவனை பின்பு, நமக்கு மவை யுண்டென்று இராமல், ஆத்மாத்மீயங்களில் நசையற்று; உயர்நலமுடையவன் யவனவன் 'தொல்லையஞ் சோதி நினைக்குங்கால் என் சொல்லளவன்று. அவன் அருளே எனக்கு ஆத்மாத்மீயங்களில் நசையறப்பண்ணி, 'அருளே' ஆத்மாத்மீய மென்றறியும்படி மயர்வற மதிநலமருளினபடி.

'உயர்நலமுடையவன்' என்று சொல்லுகிறவனெளியனல்லன். ச்ருதி ப்ரஸித்தனுகையாலே தொல்லையஞ்சோதியாலே துர்லபன். அவன் ஸுலபனுகிலும், துர்லபனுகிலும், தன்னை யொழியச் செல்லாதபடி நம்மைக் கடாக்ஷித்துத் தன் திருவடிகளிலே புகுரா நிறுத்தினவன்வாசலிலே கூப்பிடாதே, ஸம்பந்தமில்லாதார் வாசலிலேயோ? கூப்பிடுவது என்கிறார்.

---

[1] ஆத்மா (आत्मा) = தான். ஆத்மீயம் (आत्मीयम्) = தன்னைச் சேர்ந்தது. [2] நசை = ஆசை.

ஆக 'உயர்நலமுடையவன் யவனவன் 'தொல்லையஞ்சோதி நினைக்குங்கால்—ஆனந்தாதி கல்யாணகுண பூர்ணனாய், ஆதியஞ் சோதியானவனை 'நினைக்கில் = ஆராயப்புக்கால். இதர [3]விஸஜாதீயமான விக்ரஹம். அபர்யாப்தாம்ருதமான அவன் மயர்வான ஆத்மாத்மீயங்களில் நசையறப்பண்ணி, பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தைத் தன் நிர்ஹேதுக க்ருபையாலே வளர்த்துக் கொண்டு போருகிறவனைச் சொல்லப்புகில் என் சொல்லி நிற்பன்?

'என் சொல்லளவன்று' அபர்யாப்தாம்ருதத்தின் [4]வைலக்ஷண்யம் என்னுடைய பேச்சுக்களவாமோ? நானொரு அபலையிருந்து சொல்லுமளவோ? அவன் பெருமை.

"இமையோர் தமக்கும் எல்லையிலாதன கூழ்ப்புச் செய்யும்" அயர்வறு மமரர்களதிபதி யவனவன் இமையோர் தமக்கும் எல்லையிலாதன கூழ்ப்புச்செய்யும். வேதங்களும் 'அப்ராப்ய மனஸாஸஹ' என்று மீண்டவிஷயத்தை, அயராதே – இமையாதே, கண்ணாலே பார்த்தனுபவிக்கமாட்டாதார்க்கும், அபர்யாப்தாம்ருதாசியாக்கி யனுபவிக்க அனுபவிக்க எல்லையிலாதன கூழ்ப்புச்செய்யும். எத்தனையேனு [5]மதிசயித ஜ்ஞானரேயாகிலும் அளவிறந்த ஸம்சயத்தைப் பண்ணாநிற்கும்.

"யந்நாயம் பகவான் ப்ரம்மா ஜாநாதி புருஷோத்தமம், [6]"நக்ராஹ்ய: கேநசித் க்வசித்" என்று நித்யஸூரிகள் 'சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி நிற்க, தானிட்டிய வெண்ணை தொடுவுண்ணப் போரும்படியாகவும்.

"அத்திறம் நிற்க எம்மாமை கொண்டான் = இப்படி ஸமஸ்த கல்யாண குணங்களையுடையவன், என்னோடே [7]இட்டீடு கொண்டல்லது தரியாதானாய், நம்முடைய நிறத்தைக்கொண்

[3]விஸஜாதீயம் (विसजातीयम्) = வேறானது. [4]வைலக்ஷண்யம் (वैलक्षण्यम्) = முற்றிலும் வேறுபட்டதன்மை. [5]அதிசயித ஜ்ஞானர் (अतिशयितज्ञानर्) = மிக்க அறிவுள்ளவர். [6]நக்ராஹ்ய: கேநசித் க்வசித் (नग्राह्यः केनचित् कचित्) = யாராலும் எங்கும் அறியமுடியாதவன். [7]இட்டீடு கொள்ளுதல் = வார்த்தையிட்டு வார்த்தை கொள்ளுதல்

டான். தன்னுடைய வைலக்ஷண்யத்தையும் பாராதேயன்றே? இட்டீடு கொண்டது.

தன் 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' என்று நம் சங்கா நிவ்ருத்தமாக்கித் தான்தேஜோராசியாய் விளங்கா நிற்கிற திருவடிகளைத் தொழுதெழு என்று "பத்தாஞ்சலிபுடா: ஹ்ருஷ்டா:" என்றும் 'நானும் என்னெஞ்சமிசைந்தொழிந்தோம்' என்றும் ஆத்மாத்மீயங்களில் நசையற்ற பின்பும், 'அல்லிமலர்த் தண்டுழாயுந் தாரான்'. நம் நிறத்தைக் கொண்டால் தன்னோடு ஸ்பர்சமுள்ள தொன்றைத் தந்து நம்மை யுஜ்ஜீவிப்பிக்கலாமிறே. அதுவும் செய்கிறிலன்.

அது செய்தானாகில் 'பூவுக்கிட்டோம் போலே, என்றிருக் கலாம். "ஆர்க்கிடுகோ? இனிப் பூசல் சொல்லீர்" நாம் துயரறு சுடரடி தொழுதால், அத்திறம் நிற்க நம்மாமை கொண்டான். அல்லிமலர்த் தண்டுழாயுந் தாரான். தாதும் அல்லியும் மல ரும் குளிர்ந்தழகிய திருத்துழாயுந்தாரான்.

'வல்லி வளவயல் சூழ் குடந்தை மாமலர்க் கண்வளர்கின்ற மால் அல்லிமலர்த் தண்டுழாயுந் தாரா னார்க்கிடுகோ? இனிப் பூசல் சொல்லீர். நம்மை நலிந்தவன் வாசலிலே கூப்பிடாதே யார் வாசலிலே கூப்பிடுவோம் சொல்லிகோள்.

பரத்வாதிகளிலேயல்ல-பூங்கொடிபடர்ந்த சோலையும், விளை வதான வயல்களும் சூழ்ந்த திருக்குடந்தையிலே, கண் வளர்ந்த ருளுகிற ஸர்வேச்வரன் 'மாமலர்க்கண்' - 'ஜிதந்தே' யென்று உபயவிபூதியையும் தோற்பித்த கண். ப்ராப்தனானவன் மலர்ந்த தாமரைப்பூப்போலே யிருக்கிற கண் என்னளவில் அலரக் காண்கிறிலேன். விசேஷ கடாக்ஷங் காண்கிறிலேன் என்கை.

கூக்குரல் கேழ்க்கைக்கு ஸந்நிஹிதனாயிருக்க, ஆர்த்தநாதங் கேளாமையன்றே. கேட்டுங் கேளாதுபோலே யிருந்தானார்க்கிடு கோ? இனிப் பூசல் சொல்லீர்.

தொல்லையஞ்சோதி யுடையவன் துயரறு சுடரடி தொழுது, 'ஆர்க்கிடுகோ? இனிப்பூசல் சொல்லீர்' என்று தோழியையுங் கூட்டிப் பூசலிட்டு, ஆர் வாசலிலே கூப்பிடுவதென்கிறாள்.

எட்டாம்பத்து இரண்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

அங்கு மிங்கும் வானவர் தானவர் யாவரும்
எங்கு மினையையென் றன்னை யறியகி லாதலற்றி
அங்கஞ் சேரும் பூமகள் மண்மக ளாய்மகள்
சங்கு சக்கரக் கையவ னேன்பர் சரணமே. (1)

அங்குமிங்குமிலே எம்பெருமானுடைய தனிமையையநு ஸந்தித்து அங்குத்தைக்குப் பரிவர் இல்லை என்றஞ்ச, எம்பெருமான் நமக்குப் பரிவார் பலருண்டென்று காட்டிக்கொடுக்கக் கண்டு பயங் தீர்ந்தார்.

'உயர்வற' என்கிற பாட்டை விவரிக்கிறது "அங்குமிங்கும்" எங்ஙனே யென்னில்:-

உயர்வற, மனுஷ்யானந்தங் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் உன் [1]ஸௌகுமார்யம் பார்த்துப் பரிவாரில்லை. தாம் பரியிரு பரிவு போராது என்றும், ஸம்ஸாரிகளையும் மற்றும் எல்லாரையும் பார்த்தார். ஸம்ஸாரிகள், சப்தாதிகளிலே மண்டி அங்ய பரர். [2]பிரம்மேசானுதிகள், தங்களுக்காக நீ ண கர் நீளெரி வைத்தருளா யென்பர்கள். அ வ னை அம்புக்கிலக்காக்குவர்களாகையாலே பரிவற்றிருப்பர்கள்.

'அங்குமிங்கும் வானவர் தானவர்=[3]உபரிதன லோகங்களிலும் பூமியிலும், எங்கும் = அனுக்தமான பாதாளாதிகளிலும். வானவர் = அனுகூலர். தானவர் = ப்ரதிகூலர். யாவரும் = இரண்டு வகையுமான மனுஷ்யாதிகள்.

---

[1]ஸௌகுமார்யம் (सौकुमार्यम्) = மென்மை. [2] ப்ரம்மேசானுதிகள் (ब्रह्मेशानादिगळ्) = நான்முகன்—முக்கண்ணப்பன்—முதலியவர். [3]உபரிதனலோகங்கள் (उपरितनलोकङ्गळ्) = மேல் உலகங்கள்.

'இனையை யென்றுன்னை = உயர்நலமுடையவனான வுன்னை. ஆனந்தாதிகுணமென்ன, ஸௌகுமார்யாதிகுணமென்ன, இவை யறிந்து பரியமாட்டாமல் உயர்வற்றார்கள்.

உயர்நலமுடையவன் யாவனொருவன் அவன் 'ச்ருதி ப்ர ஸித்தன்— ஸர்வசேஷி' என்றறிந்து பரியும்படியான வுன்னை. உன் ஸௌகுமார்யாதிகளைப் பார்த்தால் கருமுகை மாலைபோலே யிருக்கிற வுன்னை. உன்படிகள் ஒன்று மறியாதே அவர்களிருக்க; எனக்கு மயர்வற மதிநல மருளி பக்திரூபாபன்னஜ்ஞானத் தாலே உன் ஸௌகுமார்ய மொழிய வேறொன்றில் போகிற மயர்வை யறுத்து. உன் ஸௌகுமார்யமே என் மனஸிலூன்றிப் பரிகைக்கு ஒருவனாய்விட்டேன்.

யவனவன் - இந்த ஸௌகுமார்யத்தை யுடையவன் யாவ னொருவன் 'அறிய கிலாது=பரிய அறியாமைக்கு, அநுகூல ரான தேவர்களோடு, ப்ரதிகூலரான அஸுரர்களோடு, இரண் டுங்கூடின மனுஷ்யர்களோடு வாசியில்லை. உன்னைக் கண்டவர் களெல்லாரும் பரியவேணுமென்றிருக்கிறாராய்த்திவர்.

'ஆழ்வீர்! வாரீர் நமக்குப் பரிகைக்கு த்ரிபாத்விபூதியாக உண்டென்ன;

'அயர்வறுமமரர்கள்' என்ன உன் ஸௌகுமார்யம் அள விடப்போமோ? [4]கண்ணுஞ்சுழலையிட்டு மங்களாசாஸனம்பண்ண வறியார்கள். [5]சந்தானுவ்ருத்தியேயா யிருப்பார்கள் நித்யரும் முக்தரும். முமுக்ஷுக்கள் மோக்ஷத்திலே இச்சையுடையரா யிருப்பார்கள். பத்தர் ஸம்ஸாரயாத்ரையே பேறாயிருப்பர்கள். ஆகையாலே எனக்குக் கூட்டாவாரார்? என்கிறார்.

---

[4]கண்ணுஞ்சுழலை = மருண்டு பார்ப்பது. [5]சந்தானுவ்ருத்தி (छन्दानुवृत्ति) = எஜமானனுடைய குறிப்பறிந்து கைங்கர்யம் புண்ணுவது.

அலற்றி = [6]'யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்' [7]'பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞான பல க்ரியாச' என்று வசனத்தைப்படியா நிற்பர்கள். தங்கள் ரக்ஷணத்துக் கடியான வசனங்கள் படியாகக் கதறுநிற்பர்கள். உன்னை ரக்ஷ்யனென்று இரார்கள்.

'அங்கஞ் சேரும் பூமகள் மண்மக ளாயர் மடமகள்' அயர்வறு மமரர்களதிபதி—மங்களாசாஸனமொழிய வேறொன்றி லயாத நித்ய ஸூரிகளுக்கு, ஸௌகுமார்ய மொழிய வேறொரு போக்யதை யறியாமல் அனுபவிக்கப்படுகிற உனக்கு போக்யபூதை களான பிராட்டிமார், தங்களுக்கும் புருஷகார பூதராகக் கொள்ளுமவர்கள்.

'வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல் லாண்'டென்று அச்சேர்த்திக்கு மங்களாசாஸனம் பண்ணுவா ரில்லை. 'சங்கு சக்கரக் கையவ னென்பர் சரணமே'. 'துயரறு சுட ரடி தொழுதெழென்மனனே.' என்றிரார்கள். 'சங்கு சக்கரக் கை' யென்று கையுந் திருவாழியுமான வழகை யனுபவிப்பாரில்லை. நம் விரோதியைத் துண்டிக்கைக்குக் கையிலே திவ்யாயுதங்களுடைத் தென்பர்கள்.

'வடிவார் சோதி வலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண் டென்னார்கள். சரணமென்பர். துயரறு சுடரடி தொழுதெழென் னார்கள், 'சரணமென்பர் = [8]அபிமதஸாதனமென்பர்கள். ஹேயப் ரதிபடமாய், தேஜோமயமான திருவடிகளே ப்ராப்யமென் றிரார்கள். ஸூகுமாரமான விக்ரஹமென்றறியார்கள். தம்தாமபி மதங்களைப்பெற்றுப் போவர்கள்.

---

[6]யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித் (**यस्सर्वज्ञस्सर्ववित्**) = எவன் எல்லாவற்றை யும், அவைகளின் தனிமையான குணம் முதலியவற்றுடன், நன்கு அறிந்தவனோ. [7]பராஸ்யசக்திர்விவிதைவச்ரூயதே (**परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रियाच**) = இந்த விஷ்ணுவின், உயர்ந்ததும் – பலவிதமுமான சக்தியானது, இயற்கையாகவே அமைந்தது. ஜ்ஞானம், பலம், இவைகளால் செய்யப்படும் காரியம் ஆகியவைகளும் இயற்கையாகவே அமைந்தவை என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. [8]அபிமதஸாதனம் (**अभिमत-साधनम्**) =விரும்பப்படும் பொருளுக்கு ஏற்ற உபாயம்.

அங்ஙனன்றிக்கே - என்மனனே! அச்சேர்த்திக்கும், அழகுக்கும், ஸௌகுமார்யத்துக்கும், மங்களா சாஸநம் பண்ணி வர்த்திக்கப் பாராய் என்கிறார்.

பணியா வமரர் பணிவும் பண்புந் தாமேயாம்
அணியா ராழியுஞ் சங்கமு மேந்து மவர்காண்மின்
தணியா வேங்நோ யுலகில் தவிர்ப்பான்—திருநீல
மணியார் மேனியோ டென்மனஞ் சூழ வருவாரே. (6)

'உயர்வற' என்கிற பாட்டைப் 'பணியா வமரர்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற மனுஷ்யானந்தம் தொடங்கி ப்ரம்மானந்தத்தளவும் ப்ரயோஜநாந்தரபரராய்க் கொண்டு போனார்களாகையாலே, ப்ரயோஜநம் க்ஷயித்தால் தாங்கள் க்ஷயிப்பார்களாகையாலுயர்வற்றார்கள். உயர்நலமுடையவன் யவனவன் ச்ருதிப்ரஸித்தனும், பராத்பரனைப் பரிய வறியார்கள்.

நீரிங்ஙனே கிடந்து படுகிறதென்? அவன் ஸர்வ ரக்ஷகனன்றோ? வென்ன; மயர்வற மதிநல மருளி, பக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தைத் தன் நிர்ஹேதுக க்ருபையாலே காட்டியருளுகையாலே, அவன் ஸௌகுமார்யாதி குணங்களுக்குப் பரிவனாய்த்து.

'பணியாவமரர் பணிவும் பண்புந் தாமேயாம் = அயர்வறுமமரர்கள் பணியா வமரர் - வேறே சிலரைப் பணியும் அயர்வு இல்லாத வமரர். முன்பு அஸேவ்யஸேவை பண்ணி யொரு நாள் வரையிலே யநுகூலித்த முக்தர் பரிய, இப்படிக் கொத்தவர்கள் பரியயிருக்கக்கடவவன், ஸம்ஸாரத்திலே, திவ்யமாயிருக்கும் வடிவோடே வந்து உலாவா நின்றால், நானிப்படிப் படாதே செய்வதென்?

உவர்வற உயர்நல முடையவன் யவன் - அவன் அயர்வறுமமரர்களதிபதியானவன் 'பணிவும் பண்புந் தாமேயாம். பணியா வமரர் பணிவுக்கும், அவர்கள் பண்புக்கும், சேஷத்வாதி குணங்களுக்கும், தாமே விஷயமாயிருக்கு மவர்.

'அணியாராழியும் சங்கமுமேந்துமவர் = ஸர்வாபரணமும் தானேயாகப் போரும்படியான திவ்யாயுதங்களைத் தரித்து, நித்ய முக்தருக்குக் காக்ஷி கொடுத்தால், அவர்களும் [9]அஸ்தானே பயசங்கிகளாய்க் கொண்டு 'இவ்வடிவுக் கென்ன தீங்கு நேருகிற தோ' என்று மங்களா சாஸநம் பண்ணும்படியாயிற்று இருப்பது. அவர்களுக்கு நான் பட்டது படவேணுமோ?

'அவர் காண்மின் = ஸௌகுமார்யாதிகளையுடையவன் கிடீர் பயஸ்தானத்திலே வர்த்திக்கிறார்.

தனக்கொரு ப்ரயோஜனத்துக்காகத் தான் வருகிறானே? உலகில் தணியா வெந்நோய் தவிர வருவார் = ஒரு நாளும் முடியாத தாபத்ரயாதிகள் தீரத் துயாறு சுடாடி தொழுதெ ழென்மனனே.

'திருநீலமணியார் மேனியோடென் மனஞ்சூழ வருவாரே = நீலமணிபோலே ச்ரமஹரமாய், ஸுகுமாரமான வடிவோடே ஸம்ஸாரத்திலே வந்துலாவுகிறார்.

இங்கு வரவேண்டினால் அவ்வடிவோடே வரவேணுமோ? 'என் மனஞ் சூழ' அந்த ஸௌகுமார்ய மறிந்த என் மனஞ்சூழ வருவான். சுழன்று வரும்படி வருகிறவர் துயாறு சுடாடி தொழுதெழு.

ஹேயப்ரதிபடமான திருவடிகளைத் தொழுதெழ மாட்டா மல் மனஸ்ஸு சுழலா நின்றது. ஹேயப்ரதிபட மென்னளவில் காணோம். எனக்குக் கரணமாகையாலே என்னையும் கூட்டிக் கொண்டு, சுழலாமல் தரித்து நின்று, தொழுது [10]வர்த்தியென் றருளிச் செய்கிறார்.

எட்டாம்பத்து மூன்றாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[9]அஸ்தானே பயசங்கிகள் (अस्थाने भयशङ्किकळ्) = அச்சம் உண்டா வதற்கான காரணம் சிறிதும் இல்லாவிடினும் – பகவானுடைய திருமேனியிலுள்ள அன்புமேலீட்டால் அச்சமுறுவர் என்கை.

[10]வர்த்தி (वर्धि) = வளருவாய்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

வார்கடா வருவி யானைமா மலையின்
மருப்பிணைக் குவடிறுத் துருட்டி
ஊர்கோள்திண் பாக னுயிர்செகுத் தரங்கின்
மல்லரைக் கொன்று சூழ்பரண்மேல்
போர்கடா வரசர் புறக்கிட மாட
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள்சிற் றாயன் திருச்செங்குன் றூரில்
திருச்சிற் றாறெங்கள்செல் சார்வே. (1)

வார்கடா வருவியிலே, பின்னையும் ஸர்வேச்வரன் ஸம்ஸாரிகளுடைய வபேக்ஷையே யாலம்பநமாக வந்தவதரித்து உலாவா நிற்கும். நித்யரும் முக்தருமிங்கில்லை. அல்லாதார் [1]புறம்பே யந்யபரராக, என் புகுருகிறதோ! வென்றஞ்சினார்.

அவனும்தான் பெருமிடுக்கனாயிருக்கிற படியையும், தனக்குப் பரிவார் சாபாநுக்ரஹ ஸமர்த்தராய், தன்னோடொத்த ப்ராமணர் மூவாயிரம்பேர் திருச்செங்குன்றூரிலே பரியநின்றருளினபடியைக் காட்டிக் கொடுக்கப் பயந்தீர்ந்து, அவனுடைய ஸௌகுமார்யாதிகளை அநுபவித்து ப்ரீதரானார்.

எட்டாம்பத்து நான்காம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[1]புறம்பு = வேறுபட்டது.

ஸ்ரீ:

எட்டாம்பத்து ஐந்தாம்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு— (அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

மாயக் கூத்தா! வாமனா! வினையேன் கண்ணா! கண்கைகால்
தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச்
சாயல் சாமத் திருமேனி தண்பா சடையாத் தாமரைநீள்
வாசத் தடம்போல் வருவானே! யொருநாள் காண வாராயே? (1)

"மாயக்கூத்தனில், திருச்செங்குன்றூரிலே நின்றருளின வனை இப்போதே போய்ப் புக்கனுபவிக்கப் பெறுதபிழவாலே, காணவேணுமென்று திருக்கடித்தானத்திலே [1]புறவீடு செய் திருந்த படியை யருளிச் செய்தார்.

(ஆறும்பாட்டு)

கொண்டல் வண்ணா! குடக்கூத்தா!
வினையேன் கண்ணா! கண்ணாவேன்
அண்ட வாணா! வென்றென்னை
யாளக் கூப்பிட் டழைத்தக்கால்
விண்டன் மேல்தான் மண்மேல்தான்
விரிநீர்க் கடல்தான் மற்றுத்தான்
தொண்ட னேனுன் கழல்காண
வொருநாள் வந்து தோன்றாயே. (1)

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கொண்டல் வண்ணா' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

'உயர்வற' மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தள வும் பகவத் வ்யதிரிக்தங்களில் அழகுகாண்பார்க்கு அல்பாஸ்திரத் வாதி தோஷங்களாய், விருபங்களாலே உயர்த்தி யற்றது.

இவர் கருவிலே திருவுடையா ராகையாலே, உயர்நலமுடைய வன் யவனவன் 'கொண்டல் வண்ணன்' ஸௌந்தர்யாதி குண கணவிபூஷிதனான ஸர்வேச்வரன் யாவனொருவன், அவன்

---

[1]புறவீடு = பரஸ்தானம் - வெளியூர்களுக்குப் போகிறவர்கள், அதற்குப் பூர்வாங்கமாக முதலில் தன் இருப்பிடத்திற்குச் சமீபத்தில் (பிரயாணக்கோலத்துடன் கிளம்பிப்) போய்ச் சிறிது நேரம் தங்கியிருத்தல் பரஸ்தானம் எனப்படும்.

கொண்டல் வண்ணன். காணவே விடாயாறும்படியான வடிவை யுடையவனே!

'குடக்கூத்தா! [2]மனோஹாரியான சேஷ்டிதத்தையுடைய வனே! வினையேன் = இப்படி யலற்றும்படிக்கு, மயர்வற மதி நல மருளும்படிக்கு, நிர்ஹேதுக க்ருபையுடையவனே! நீ அருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்திற்கு ப்ரயோஜனம் "என் கண்ணா! வென்றலற்றுகையோ?

தத்வயதிரிக்தங்களில், மனஸூ பொருந்தாமையைப் பண்ணிய உன்னையொழியச் செல்லாதபடி மதிநலமருளி, [3]"திவ்யந் ததாமி தே சக்ஷு:" என்கிறபடியே எனக்கு த்ருஷ்டி பூதனான க்ருஷ்ணனே! இப்படி, சக்ஷுஷ்மானாவ் திஷ்டன்னானவன் யாவனொருவன், அவன் என் கண்ணனானவன்.

"வினையேன் = கண்ணை இழந்திருக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். அயர்வறு மமரர்களதிபதி யாவனொருவனை, நித்யஸூரிகள் அநிமிஷராய்க்கொண்டு ஸதானுபவம் பண்ணும் [4]ஸர்வாதிகன், கோபாலனாய் வந்தவதரித்திருக்க, நான் "என்னண்டவாணா! வென்று, என்னை விஷயீகரிக்கைக்காக அண்டாதிபதியானவன். [5]கல்யாணகுணயோகம் [6]ஆச்ரிதார்த்தமாயிருக்குமாபோலே, விபூதியோகமும் தமக்காக வென்றிருக்கிறார்.

'என்னண்டவாணா! என்கையாலே - உபய விபூதி நிர்வாஹமும் தமக்காக வென்றிருக்கிறார். இங்கே மயர்வற மதிநல

---

[2] மனோஹாரிசேஷ்டிதம் (मनोहारि चेष्टितम्) = மனதைக் கவருகிற (திருவிளையாடல்கள்) செயல்கள். [3] திவ்யம் ததாமி தே சக்ஷு: (दिव्यं ददामि ते चक्षुः) = பகவத்கீதையில் கிருஷ்ணனுடைய வார்த்தை. 'அர்ஜுனா உனக்கு திவ்யமான (ஞானக்) கண்ணைக்கொடுக்கிறேன். (இந்தச்சாதாரணமான கண்ணால் என் விச்வரூபத்தைப் பார்க்கமுடியாது.) [4] ஸர்வாதிகன் (सर्वाधिकन्) = எல்லோரையுங் காட்டில் உயர்ந்தவன். [5] கல்யாணகுணயோகம் (कल्याणगुणयोगम्) = நல்லகுணங்களுடைத்தாயிருக்கை. [6] ஆச்ரிதார்த்தம் (आश्रितार्थम्) = அடியார்களுக்காக (சரணடைந்தவர்களுக்காக)

மருளி, அங்கே தம்மைக் கொண்டுபோய் வைத்துத் தன்னை யனுபவிக்கைக்காக உபய விபூதியுங் கண்டது என்றிருக்கிறார்.

'என்னையாள = ஒரு ப்ரயோஜநாந்தரத்துக்காக வழைக்கிறேனோ? என்னை நித்ய கைங்கர்யங் கொள்ளவேணுமென்றன்றோ? அழைக்கிறது.

'கூப்பிட்டழைத்தக்கால் = க்ரம ப்ராப்தி ஸஹிக்கவல்லேனாய்த்தான் தாழ்க்கிறாயோ? என்னார்த்த நாதம் கேட்டால், கிரமத்திலே வருகிறோமென்றாறி யிருக்கலா யிருந்ததோ?

அயர்வறு மமரர்களதிபதியான நீ "விண்டன்மேல்தான் = பரமபதத்திலிருக்கிற யிருப்போடே வந்து தோற்றவுமாம். மண்மேல்தான் = அவதரித்துக் காட்டவுமாம். "விரிநீர்க்கடல்தான் = க்ஷீராப்தியிலே கண்வளர்ந்தருளுகிறபடியே வந்து தோற்றவுமாம். "மற்றுத்தான் = தூணிலே வந்து தோற்றினாற்போலேயாதல் தோற்றவுமாம். ஆனைக்கு வந்துதவினாற்போலே யாதல் வந்து தோற்றி நிற்கவேணும்.

'உன் தொண்டனேனுன் கழல் காண = துயரறு சுடரடி தொழுதெழென் மனனே என்று ஆசைப்பட்டபடியே யுன் திருவடிகளில் கைங்கர்யத்திலே சபலனான நான் உன் கழல் காண. "துயரறு சுடரடி = என்னுடைய தீரப் பரஞ்சோதியான திருவடிகள். எனக்கு உஜ்ஜீவனமான வுன் கழல்காண ஒருநாள் வந்து தோன்றியருளவேணு மென்கிறார்.

எட்டாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து ஆறாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

எல்லியுங் காலையுந் தன்னை நினைந்தெழ
நல்ல வருள்கள் நமக்கேதந் தருள்செய்வான்
அல்லியந் தண்ணந் துழாய்முடி யப்பனூர்
செல்வர்கள் வாழுந் திருக்கடித் தானமே. (1)

எல்லியுங்காலையில் 'இவர் இப்படிக் கூப்பிடும்படி பிற்பாடரானோமே' என்று லஜ்ஜித்து வந்து, தானிவருக்குப் பேச்சுக்கு நிலமின்றிக்கே தான் சாலப்பெரு விடாயனாய், நேர் கொடு நேர் செல்லில் ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே முடிவரென்று, இவரை [1]அகஞ்சுரிப்படுத்திப் பின்னைக் கிட்டுவோமென்று பார்த்துத் தான் நிற்கிற நிலையைக் காட்டிக் கொடுக்கக் கண்டு, திருக்கடித்தானத் தோடே கூட என்னெஞ்சிலே புகுந்தானென்று ப்ரீதராகிறார்.

ஐந்தாம்பாட்டு

கோயில்கோண் டான்றன் திருக்கடித் தானத்தைக்
கோயில்கோண் டானத னோடுமேன் னேஞ்சகம்
கோயில்கோள் தேய்வமேல் லாந்தோழ வைகுந்தம்
கோயில்கோண் டகுடக் கூத்தவம் மானே. (5)

"உயர்வற என்கிற பாட்டைக் "கோயில் கொண்டான்" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்த மளவாக அவர்களைக் காம்யபலங்களிலே பரவசராக்கித் தன்னானந்தாதி குணங்க ளெல்லாம் கிடக்க; ஆச்ரிதனை வென்பக்கல் ப்ரேமாதிசயத்தாலே, உயர்வற உயர்நல முடையவன் யவனவன் திருக்கடித்தானத்தோடே கூட [2]அஸாதாரணமான கோயிலாகக் கொண்டான்.

உயர்நலமுடையவன் 'என் மனங் கோயில் கொண்டான். பரத்வாதிகள் முதலான திவ்ய தேசங்களில் கோயில்கள் எல்லாங் கிடக்க, ஹேயமான என் ஹ்ருதயத்தைத் திவ்யமான கோயிலாகக் கொண்டான் என்ன; 'அதுகளை விட்டோ? என்னில், விட்டிலன்.

'செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப்போலே' யாகவொண்ணாதென்று, அவைகளுக்கெல்லாம் ப்ரதானமான திருக்கடித்தானத்தோடே கூட வந்து, என்னெஞ்சிலே புகுந்தருளி

[1] அகஞ்சுரிப்படுத்தல் — மனதைத் தேற்றுதல். [2] அஸாதாரணம் (असाधारणम्) = தனக்கேயுரியது.

எனக்கு மயர்வற மதிநலமருளி, அஞ்ஞானாந்தகாரம் நீங்க மதி நலமான சந்திர ஸூர்யர்களுதித்தாற்போலே பரஜ்ஞான பர பக்திகளைப் பிறப்பித்து, அதிலே பரஞ்சோதியான நீ என் னெஞ்சை நாடும் நகராமுமாக்கி "விஷ்ணு சித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்" என்கிறபடியே கோயில் கொண் டான்.

'அதனோடுமென் னெஞ்சகம் கோயில் கொண்டான். அயர் வறு மமரர்களான அநந்த வைநதேயாதிகள் 'கோயில் கொள் தெய்வமெல்லாந் தொழ' வீற்றிருக்குமவன், 'என் நெஞ்சங் கோயில் கொண்டான்.

திருவடி, திருவனந்தாழ்வான் முதலானோர் தொழுது பரிசர்யை பண்ண எழுந்தருளியிருக்கக்கடவ [3]தத்வம், தனக் குத் தகுதியான ஸ்ரீ வைகுண்டத்தைக் கோயிலாகக் கொண்ட வன் 'வீற்றிருந்தேழுலகுந் தனிக்கோல் செலுத்துகிற ஸர்வேச் வரன், க்ருஷ்ணனாய் வந்தவதரித்து குடக்கூத்தாடினவன், வைகுந்தநாதன், திருக்கடித்தானத்தைக் கோயிலாகக் கொண் டான்.

"என் னெஞ்சங்கோயில் கோயில் கொண்டவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே. திவ்ய தேசமெல்லாம் வேறய மாய், என்னெஞ்சே போக்யமாம்படி கோயில் கொண்டான்.

என்னுடைய அவித்யாதிகளற்று, அவனுக்கு வாஸஸ்தான மான நெஞ்சே தொழுதெழு. அரவத்தமளிப்படியே, திருக் கடித்தானத்தின்னிலே என்னைப் பெறுகைக் காகையாலே, ஸாத் யங் கைப்பட்டால் ஸாதனத்தி விழிவாரில்லையாயிருக்க; 'என்னைப் பெற்றது அத்தேசத்திலே' என்று அத்தோடேவந்து புகுந்தா னதினிடத்தி லுபகாரஸ்ம்ருதியாலே என்கிறார்.

எட்டாம்பத்து ஆறும் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[3] தத்வம் = (இங்கு) பகவான்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

இருத்தும் வியந்தென்னைத் தன்பொன் னடிக்கீழென் று-
அருத்தித் தெனைத்தோர் பலநா ளழைத்தேற்குப்-
பொருத்த முடைவா மனன்றான் புகுந்தென்றன்-
கருத்தை யுறவீற் றிருந்தான்கண் டுகொண்டே. (1)

"இருத்தும் வியக்தில்" இவருடைய மனோரதத்தை எம்பெருமான் தான் கைக்கொண்டு, இவருடனே ஸம்ச்லேஷித்துப் பெரும்பேறு பெற்றானாயிருக்கிற படியைக்கண்டு ப்ரீதரானார்.

மூன்றாம்பாட்டு

அருள்தா னினியா னறியே னவனென்னுள்-
இருள்தா னறவீற் றிருந்தா னிதுவல்லால்-
பொருள்தா னெனின்மூ வுலகும் பொருளல்ல-
மருள்தா னீதோ மாயமயக் குமயக்கே. (3)

"உயர்வற" என்கிற பாட்டை "அருள்தானினி" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்த மளவாக ஈச்வரனுக்கு போக்யபூதராகாமல் ப்ரயோஜனந்தரபரராய்த்தது.

உயர்நல முடையனானவன் யாவனொருவன், ச்ருதி ப்ரஸித்தனானவன் அவாப்த ஸமஸ்த காமனான ஸர்வேச்வரன், தம் பக்ஷபிப்படி வ்யாமோஹம் பண்ணக்கூடுமோ? வென்றதிசங்கை பண்ணி; இவ்வனுபவ மிருந்தபடி யென்னென்று அதிசங்கை பண்ணுகிறார்.

"அருள்தானினி யானறியேன் = என்னுடைய [1]இந்த்ரிய வச்யதையைத் தவிர்த்த இது தன்னையும் இப்போ தொன்றாக நினைத்திரேன்.

---

[1] இந்திரியவச்யதை (इन्द्रियवश्यता) = ஐம்பொறிகளை அடக்கமுடியாமல் அவைகளால் 'தன்வழியே' இழுத்துச்செல்லப்படுகை.

எத்தைப் பற்ற? வென்னில்; உயர்நல முடையவன் ஆனந்தாதி கல்யாணகுண பூர்ணனவன் "அவனென்னுளிருள்தானற வீற்றிருந்தானிது வல்லால் – அவனென்னுடைய ஹ்ருதயத்திலே அஜ்ஞானந்தகார மெல்லாம் போம்படி பெறும் பேறு பெற்றனாயிருக்கிறபடி யிராநின்றான்.

மயர்வற மதிநல மருளினன் யவன் = மயர்வாகிற யிருள் தீர்த்து, மதிநலமாகிற சந்த்ர ஸூர்யர்களைப்போலே யிருக்கிற ஜ்ஞான பக்திகளைத் தன் நிர்ஹேதுக க்ருபையாலே செய்தான்.

'என்னுளிருள்தானற வீற்றிருந்தானிது வல்லால் இனி யெனக்கு வேறொன்று தோற்றுமோ?

'இது வல்லால் பொருள்தானினி மூவுலகும் பொருளல்ல—இதற்குத் திருமாலையாண்டான் பணிக்கும்படி:– நாட்டார் ஐச்வர்யங்களில் தலையாகச் சொல்லுவது த்ரைலோக்யைச்வர்யத்தை யிறே. அதுவு மெனக்கொரு சரக்கல்ல வென்கிறரென்ன;

"அழகியதே"ன்றெம்பெருமானாருளிச்செய்யும்படி:– என் ஹ்ருதயத்திலே புகுந்தெழுந்தருளியிருக்கிற யிருப்பொழிய, அயர்வறு மமரர்க ளதிபதியாய் சந்தாநுவ்ருத்தி பண்ண அவர்களுக்கு அபர்யாப்தாம்ருதமான போகத்தைக் கொடுத்து, 'வீற்றிருந் தேழுலகும் தனிக்கோல் செலுத்தியிருக்கு மிருப்பையும் தனக்கைச்வர்யமாக நினைத்திருக்குமோ வென்று பார்த்தால்; அதுவுமொரு சரக்காக நினைத்திருக்கிறில்'னென்று. இதுவே ப்ரகரணத்துக்குச் சேருமது.

"மருள்தானீதோ? = ஒரு ஸம்ஸாரி சேதனனைப் பெற்று ஈச்வரனிப்படி யிருந்தானென்று லதது கூடுமதொன்றன்று. இது என்னறிவுக் கேட்டாலே சொல்லுகிறேனோ?

"மாயமயக்கு மயக்கே = அன்றிக்கே அவன் தன்னுடைய ஆச்சர்யமான [2]ப்ரமஸாதனங்களையிட்டு ப்ரமிப்பித்தானோ?

[2]ப்ரமஸாதனம் (भ्रमसाधनम्) = மயக்கும் கருவி.

நெடுநாள் ப்ரக்ருதியைவிட் டறிவு கெடுத்தான். இப்போதுந்தன் வ்யாமோஹத்தாலே ப்ரமிப்பித்தான்.

எதாகிலென்? மனமே! நீ [3]ஸ்வரூபவ்ருத்திக்காகத் துபரறு சுடரடி தொழுதெழு. அஞ்சலியன்றோ? உனக்கு அடுப்பது. ப்ரமமாகிற ஹேயம் போம். தொழுதெழென் மனனே யென்று க்ருபையாகவுமாம்.

எட்டாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

கண்கள் சிவந்து பெரியவாய்
வாயுஞ் சிவந்து கனிந்துள்ளே
வெண்ப லிலகு சுடரிலகு
விலகு மகர குண்டலத்தன்
கொண்டல் வண்ணன் சுடர்முடியன்
நான்கு தோளன் குனிசார்ங்கன்
ஒண்சங் கதைவா ளாழியா
னொருவ னடியே னுள்ளானே. (1)

"கண்கள் சிவந்தில்" இஸ்ஸம்ச்லேஷம் நிலைநிற்கைக்காக ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை ஈச்வரன் காட்டிக் கொடுக்கக் கண்டு, அத்தை யனுஸந்தித்துத் தனக்குத் தகுதியான பிரகாரமிருந்தபடி என்னென் றினியராகிறார்.

---

[3]ஸ்வரூபவ்ருத்தி (स्वरूपवृत्ति) = கைங்கர்யம்.

பதினொன்றாம் பாட்டு

தெருளும் மருளும் மாய்த்துத்தன் றிருந்து செம்போற் கழலடிக்கீழ்
அருளி யிருத்து மம்மானா மயனாஞ் சிவனாந் திருமாலால்
அருளப் பட்ட சடகோப னோரா யிரத்து ளிப்பத்தால்
அருளி யடிக்கீ ழிருத்துநம் மண்ணல் கருமா ணிக்கமே. (11)

"உயர்வற" என்கிற பாட்டைத் 'தெருளும் மருளும்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் தேவ திர்யக் மனுஷ்ய ஸ்தாவர ஜங்கமாத்மகமான சரீரபூதரான அவர்கள், [1]சரீராத்மபாவ மறியாமல் [2]தேஹாத்மாபிமானிகளா யுயர்வற்றார்கள்.

'உயர்நலமுடையவன் யவன்' ஆனந்தாதி கல்யாண குணங்களை யுடையனானவன் "பரஞ்சுட ருடம்பா யழுக்குப் பதித்தவுடம்பாய்" என்கிறபடியே, சரீர சரீரியாயக் கொண்டு யாவனொருவனிருக்கிறான்; அவன் மயர்வற மதிநல மருளினன்.

மயர்வாகிற தெருளும் மருளும் மாற்றி - பிரம்மாவின் ராஜஸமடியாக வந்த க்ஷுத்ர த்ருஷ்டி ஜ்ஞானமானதும், ருத்ரனுடைய தாமஸ ஜ்ஞானமான [3]ஆகமாதி பாஹ்ய ஜ்ஞானமான அஜ்ஞானமும் மாய்த்து.

[4] ஸ்வாநுபவ விரோதியான ப்ராக்ருத விஷய ஜ்ஞானாஜ்ஞானங்களை வாஸனையோடே போக்கி மயர்வறமதிநலமருளி,

---

[1]சரீராத்மபாவம் (शरीरात्मभावम्) = சரீரம்—உடல். ஆத்மா—உயிர். உலகில் மற்ற வஸ்துக்கள் யாவும், எம்பெருமானுக்கு உடலாகவும், அவன் அவைகளுக்கு உயிராகவும் இருக்கும் தன்மை. (ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் 'அந்தர்யாமி ப்ராம்மணத்திலே கண்டுகொள்க.) [2]தேஹாத்மாபிமானம் (देहात्माभिमानम्) = உடம்பைக்காட்டிலும் வேறாக 'உயிர்-ஒன்று இல்லை. இவ்வுடம்பே உயிர் (ஆத்மா) என்கிற எண்ணம். [3]ஆகமாதிபாஹ்யம் (आगमादिबाह्यम्) = வேதம் - அதைத் தழுவிய மற்ற நூல்கள் இவைகளுக்குப் புறம்பான மதம்.

[4]ஸ்வாநுபவ விரோதி (स्वानुभवविरोधि) = 'ஸ்வம் - தான் (இங்கு-பகவான்) தன்னுடைய அநுபவத்துக்கு விரோதியான என்கை. ஆழ்வார் தன்னை யனுபவிக்கவேண்டும். அதற்குக் கேடுசெய்வது அவருடைய அஜ்ஞானம். அதைப்போக்கி - என்றபடி.

தன் நிர்ஹேதுக க்ருபையாலே பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தைத் தந்து, என்னாத்மாவைத் தனக்கு சேஷதயா சரீரமாயிருக்கிற படியைக் காட்டியருளினான். அவன் யாவனொருவன், அவன் அயர்வறு மமரர்க ளதிபதி. [5]ப்ருதக்ஸ்திதியாகிற அயர்வன்றிக்கே, ப்ரகார - ப்ராகாரியாய், நியந்தாவாய் — நியாம்யனாய், ஸ்வாமியானவன்.

சுடரடி – தன் திருந்து செம்பொற் கழலடி = ஆச்ரிதரை வேறொரு காலின் கீழ் குனிய விடாததாய், ஸ்ப்ருஹணீயமான வீரக்கழலை யுடைத்தான திருவடிகளின் கீழே யிட்டுக்கொள்ளும். வீரக்கழல்=பிராட்டி முன்னாக ஆச்ரிதரைத் தன் கையிலும் பிறர் கையிலுங் காட்டிக் கொடாத வீரக்கழல்.

'அருளியிருத்தும் = கேவல க்ருபையாலே யிருத்தும். அயர்வறு மமரர்களதிபதியான வம்மானானவன். 'அயனும் சிவனும் திருமாலால் = ராஜஸராச்ரயிக்கும் பிரம்மாவாய், தாமஸராச்ரயிக்கும் ருத்ரனாய், இப்படி ப்ரகாரப்ராகாரிதயா ஸர்வாத்மாக்களுக்கும் நிர்வாஹகனாய் இப்படி ஸர்வேச்வரனான ஸ்ரீய:பதியாலே மயர்வற மதிநல மருளப்பட்டு.

'திருமாலாலருளப்பட்ட சடகோபன் = அருளுக்கு விஷயமான ஆழ்வார். அருளுக்கு * வாய்த்தலை=காரணம் வாய்த்தலை பிராட்டி யென்கை. 'ஓராயிரத்திப்பத்தால் நம்மண்ணல் கருமாணிக்கமே யருளியடிக் கீழிருத்தும்=ஸர்வ நிர்வாஹகனானவன் துயரறு சுடரடியாய், ஸ்ப்ருஹணீயமாய், வடிவழகேயாய், குணங்களேயாய்ப் பூர்ணனான ஸர்வேச்வரன், தானே தன் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளும்.

இத்திருவாய்மொழி அப்யஸித்தார்க்குத் தாம் 'தொழுதெழென் மனனே யென்றது' தம் ப்ரபந்தம் அப்யஸித்தார்க்குத் தாம் தொழுததே அமையும். இது கற்றார்க்கு மதுவே பேறென்கிறார்.

எட்டாம்பத்து எட்டாம் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[5]ப்ருதக் ஸ்திதி (पृथक्स्थिति)=ஈச்வரனைவிட்டுத் தனித்திருத்தல்.
*வாய்த்தலை=காரணம்.

எட்டாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

கருமா ணிக்க மலைமேல் மணித்தடந்-
தாமரைக் காடுகள்போல்
திருமார்வு வாய்கண் கையுந்தி காலுடை
யாடைகள் செய்யபிரான்
திருமா லெம்மான் செழுநீர் வயற்-
குட்ட நாட்டுத் திருப்புலியூர்
அருமாயன் பேரன்றிப் பேச்சில ளன்னைமீ
ரிதற்கென் செய்கேனோ? (1)

"கருமாணிக்க மலையிலே யிவ்வாத்மாவினுடைய அநந்யார்ஹ சேஷத்வத்தை யனுஸந்திக்கிறார்.

திருவருள் மூழ்கி வைக லுஞ்செழு நீர்நிறக் கண்ணபிரான்
திருவ ருள்களுஞ் சேர்ந்த மைக்கடை யாளந் திருந்தவுள
திருவ ருளரு ளாலவன் சென்று சேர்தண் திருப்புலியூர்
திருவ ருள்கமு கொண்ப ழத்தது மெல்லியல் செவ்விதழே. (6)

"உயர்வற" என்கிற பாட்டைத் "திருவருள் மூழ்கிவைகலு' மென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

அநந்யார்ஹையான நாயகியுடைய பருவமறிந்து, மாதா பிதாக்கள் இவள் நினைவறியாமல் "ராஜலோகத்தார் ஸ்வயம் வரத்திற்கு வருவ"தென்று மணமுரசறைவிக்க; அத்தைக் கேட்ட தோழியானவள் இவள் "திருப்புலியூர் நாயனார்க்கே யநந்யார்ஹையானாள். இனி நீங்களிது செய்கிறது தர்மஹானி" யென்று மணம் விலக்குகிறதாய்த்து.

ஆனாலிவளுடைய ஆபிஜாத்யாதிகள் அவனுக்குண்டாக வேண்டாவோ? என்ன;

'நீங்கள் சொன்னவை யெல்லா முண்டு' என்று, அவயவ சோபை, ஆபரண சோபை, சௌர்யாதிகள், ப்ரணயித்வம், ஐச்வர்யாதிகளால் குறைவின்றிக்கே யிருக்கிறபடி.

ஐச்வர்யம் போருமோ? உதாரராகவேண்டாவோ? என்ன;

அவனுடைய ஔதார்ய குணத்திலே யகப்பட்டு, ஸம்ச்லேஷித்தமைக் கடையாளம் வ்யக்தமாக உண்டென்கிறாள்.

"உயர்வற" என்கிற பாட்டில், மனுஷ்யானந்தந்தொடங்கி பிரம்மானந்தத் தளவாக, அங்யசேஷத்வத்தாலே மிஞ்சின உயர் வற்றூர்கள்.

அவர்களிலே இவரு மொருவராயிருக்க, இவர் பகவதநந்யார்ஹ சேஷபூதராய், உயர்நலமுடையவன் யவனவனுக்கே அற்றுத் தீர்ந்து, 'திருவருள் மூழ்கிவைகலும் = வைகலும் திருவருள் மூழ்கி, அநேகங் காலம் அவன் பிரஸாதத்திலே அவகாஹித்து நான் கண்ட வித்தை யறியுமித்தனையிறே.

எதிர்சூழல்புக்கு யிவளுக்கு மயர்வற மதிநல மருளி யிப்படிப் பரிமாறித்திரிகிறது, எத்தனைகாலமுண்டென் றறிந்தோமோ?

'செழுநீர் நிறக்கண்ணபிரான்' ஜ்ஞானனந்தாதி முதலான ஸௌந்தர்ய ஸௌலப்யங்களைக் காட்டிக்காணு மிவளை யிப்படி யகப்படுத்திற்று.

இப்படி யகப்படுத்தினவன் யவனவன், ச்ருதிப்ரஸித்தனானவன் 'திருவருள்களுஞ் சேர்ந்தமைக் கடையாளந் திருந்தவுள' அவனுடைய மயர்வற மதிநல மருளினவற்றாலே, பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே பரம பக்தி முதலானவை, பூர்ண கடாக்ஷத்தாலே யிவ்வாச்ரய மொன்றிலும் வந்துசேர்ந்தமைக் கடையாளந் திருந்தவுள. அவன் விஷயீகாரம் பெற்றமைக் கடையாளந் திருந்த — வ்யக்தமாக வுள.

நீ யிதென்கொண் டறிந்தாய்? யென்ன; - அயர்வறு மமரர்களதிபதி தன்னைப்பிரியில் மூச்சடங்கும்படியானவர்களுக்கு,

அபர்யாப்தாம்ருதமாய்க் கொண்டு அநுபவிப்பிக்குமவன் திருவருளால்.

குணகுண நிரூபணம் பண்ணாதே விஷயீகரிக்கையாகிற ஸ்வபாவத்தை யுபகரிக்கைக்காகத் திருவருள் அருளுகைக்காக 'அவன் சென்று சேர் தண் திருப்புலியூர் = கலங்காப்பெருநகரம் கலவியிருக்கையா யிருக்கவன்றோ? அவன் இங்கு வந்து ஸந்நிஹிதனுய்த்து.

இவளுமங்கீர்மைக்குத் தோற்று அநந்யார்ஹையாய், அவன் துயரறு சுடரடி தொழுதெழன்மனனே என்று, தன்னுகிஞ்சன்யமும் அனந்யகதித்வமுந்தோற்ற, த்ரிவித காணங்களாலும் தனக்கு அந்யசேஷத்வமாகிற ஹேயத்தைப் போக்கின பின்பு, துயரற்றுத் தானு மநந்யார்ஹசேஷியாய், விளங்கினவன் சேர்ந்தமைக் கடையாள மிவள் வாய் சிவந்து கனிந்தபடி பாரிகோள்!

'திருவருள் கமுகொண்பழத்தது மெல்லியல் செவ்விதழே' திருவருள் கமுகென்று சிலவுண்டு. அது நீராலே வளருகையின்றி, பெரிய பிராட்டியாரும் ஸர்வேச்வரனுமாகக் கடாக்ஷிக்கவத்தாலே வளருவன சில.

அதினுடைய அழகிய பழம்போலே யிராநின்றது மிருதுபாவையான யிவளுடைய அதரம். 'இவ்வாயிலே யறியலாயன்றோ? யிருக்கிறது' என்றாராயிற்று.

எட்டாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எட்டாம்பத்து பத்தாம் திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

நெடுமாற் கடிமை செய்வேன்போ லவனைக் கருத வஞ்சித்துத்
தடுமாற் றற்ற தீக்கதிகள் முற்றுந் தவிர்ந்த சதிர்நினைந்தால்
கொடுமா வினையே னவனடியா ரடியே கூடு மிதுவல்லால்
விடுமா றென்ப தென்?னந்தோ! வியன் மூவுலகு பெறினுமே. (1)

நெடுமாற்கடிமையிலே, ஸர்வேச்வரனுடைய வடிவழகிலும், குணங்களிலும் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளிலே சேஷத்வமே நிரதிசய புருஷார்த்தமென்று அருளிச்செய்தார். [1]ப்ரணவத்தில மத்யமபதத்தாலும், நமஸ்ஸாலும்

---

[1]ப்ரணவம் - என்பது ஓம் என்னும் எழுத்து. அது - 'அ' 'உ' 'ம்' - என்று மூன்றெழுத்துக்கள் சேர்ந்து அமைந்துள்ளது- அதன் முதலெழுத்துக்குப் பகவான் (கடவுள்) எனப்பொருள். அதன்மேல் நான்காம் வேற்றுமை தொக்கி நிற்கும். அதன் பொருள் 'சேஷத்வம் என்பது. மத்யம (நடுப்) பதம் 'உ' என்பது. அதன் பொருள் தேற்றம். கடைசிப்பதம் 'ம்' என்பது. அதன் பொருள் ஜீவாத்மா. இதில் நடுப்பதமாகிய 'உ' என்பதின் பொருள் இருவகையாக உளது. [1]அயோக வ்யவச்சேதம்—[2]அந்யயோக வ்யவச்சேதம்—என்று. ஆக இதன் முழுப்பொருள் வருமாறு:- ஜீவாத்மாவானது, பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணனுக்குச் சேஷமாகவே எக்காலத்திலும் இருக்கும் இயல்புடைத்து. அவனன்றி வேறு யாருக்கும் சேஷமாகாதது, என்று. (சேஷம் = அவன் பிரயோஜனத்துக்காகவேயிருப்பது) 'பகவானைத்தவிர மற்ற யாவர்க்கும் ஜீவாத்மா சேஷமில்லை 'என்னுமிடத்தில் - அவனடியார்களுக்குச் சேஷமாக இருப்பது பாதிக்கப்படாது. பதிவ்ரதையான ஸ்திரீயானவள், தன் கணவனுக்கு மிகவும் பிரியமான மற்றவர் சிலரைத் தன் கணவனுடைய த்ருப்திக்காக வுபசரித்தல், அவளுடைய பாதிவ்ரத்யத்துக்குப் பாதகமாகாதொழிவதுடன், அவள் கணவனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருவதாதலின், பாதிவ்ரத்யத்துக்கு மிகவும் பொருத்தமாகவும், அவசியமாகவும் இருப்பதேபோல் இங்கும் கண்டுகொள்க. ஆக இவ்வாறு 'பகவானுக்கே (அவனடியார்களுக்கும்) சேஷமான இஜ் ஜீவாத்மா தனக்குத்தான் எஜமானனாக (சுதந்த்ரமாக) இல்லை, என்பது நம:- என்கிற பதத்தின் பொருள். இவ்வாறு திருமாலடியார்க்கடியனாயிருத்தலின் பெருமையை இத்திருவாய்மொழியில் அருளிச்செய்கிறார் என்கை.

சொன்னவர்த்தத்தைச் சொல்லித்துக்கிழ். அநந்யார்ஹசேஷத்வத்துக்கெல்லை ததீயசேஷத்வ பர்யந்தமாகையிறே. 'எந்தம்மை விற்கவும் பெறுவார்க'ளென்றிறே யிருப்பது.

தமர்கள் கூட்ட வல்வினையை நாசஞ் செய்யுஞ் சதிர்மூர்த்தி
அமர்கோ ளாழி சங்குவாள் விற்றண் டாதி பல்படையன்
குமரன் கோல வைங்கணைவேள் தாதை கோதி லடியார்தம்
தமர்கள் தமர்கள் தமர்களாஞ் சதிரே வாய்க்க தமியேற்கே. (9)

"உயர்வற" என்கிற பாட்டைத் "தமர்கள் கூட்ட" என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக, தேவதாந்தரபரர்க்குச் சேஷமாய் உயர்வற்றார்கள்.

அதில் இவரும் ஒருவராயிருக்கத் தமக்குப் பிறப்பித்தது. உயர்நலமுடையவன் யவனவன், ஜ்ஞானனந்தைகஸ்வ ஸ்வரூபனை ஸர்வேச்வரன் திருவடிகளிலே ஆச்ரயித்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடன் ஸஹவாஸந்தான் வேணுமோ? அவர்களுடைய சேஷத்வத்தில் முடிந்த நிலமாக அமையு மென்கிறாள்.

உயர்நலமுடையனுவது – 'தமர்கள் கூட்டவல்வினையை நாசஞ் செய்யுஞ் சதிரை'யிறே 'நலமுடையனென்றது.

சதிர்மூர்த்தி 'சௌர்ய வீர்ய பராக்ரமமான விக்ரஹத்தைச் 'சதிர்மூர்த்தி என்கிறது. விரோதி நிரஸனத்தால் வந்த ஸ்வாமித்வஞ் சொன்னபடி.

'தமர்கள் கூட்ட வல் வினையை = தமர்களுடைய கூட்டமான வலிய வினையை = திரண்ட வலிய பாபங்களை. நசிப்பிக்கும் = நாசஞ்செய்யும், என்னவுமாம். தமர்களுடைய கூட்டமான வினை நசிக்குமென்னவுமாம்.

அன்றிக்கே; தமர்கள் வினையைக் கூட்டக் கூட்ட அவற்றை நசிப்பிக்கு மென்னவுமாம். இவனுக்குக் கூட்டுகையே ஸ்வபாவமானுப்போலே, அவனுக்குங் கழிக்கையே யாத்ரையாயிருக்கிறபடி.

'சதிர்மூர்த்தி = விரோதி போக்குகைக்கு ஏகாந்தமான பல வடிவுகளையும் கொள்ளாநிற்கும். இவர்கள் கைங்கர்யத்துக்குப் பல வடிவு கொள்ளுமாப்போலே யாயிற்று, அவன் ரக்ஷணார்த்தமாகப் பல வடிவு கொள்ளும்படி.

இப்படி யுமக்கறிகைக்கு ஹேதுவென்னென்ன? மயர்வற மதிநலமருளினன். அவன் தந்த பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே, விசதமாக வந்து கண்டுகொண்டேனவன் ஆச்ரிதபக்ஷபாதத்தை.

அமர்கொளாழி யித்யாதி=விரோதி நிரஸனத்துக் குறுப்பாக யுத்தோன்முகமான திருவாழி தொடக்கமான திவ்யாயுதத்தை யுடையவன்.

இப்படி சங்க சக்ர கதாதரனானவன், அயர்வறு மமரர்களதிபதியாய், அஸ்தானே பய சங்கிகளாய், அத்ருப்தாம்ருத போகாானவர்களைச் சந்தானுவ்ருத்தி கொள்ளுகிற 'குமரனித்யாதி = யுவாவாயிருக்கும்.

'கோல வித்யாதி = பஞ்சபாணனான காமனுக்கு [2]உத்பாதகனானவன். அழகுக்கு அவனுக்கு மேலில்லாதவனென்றிருக்கும் காமனுக்கு, அழகுக்குத்பத்தி ஸ்தானமாயிருக்கை.

அப்பருவத்துக்கும், அழகுக்குந் தோற்றுத் 'துயரறு சுடரடிதொழுது' அதுக்கும் தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய வடிமையில் முடிந்த நிலமாக வேணுமென்கிறார்.

'சதிரேவாய்க்க' இந்த நிரதிசய புருஷார்த்த மென்று-மொக்க வாய்க்கவேணும்.

"தமியேற்கே=என் மனமே! பூதகாலத்திலும் [3]ஸ்ரீ சத்ருக்னாழ்வானைத் தேடிப்பிடிக்க வேண்டுகையாலே, வர்த்தமான காலத்

---

[2]உத்பாதகன் (उत्पादकन्) = தகப்பன். [3]இராமாயண கதையில் சத்ருக்னரைப்பற்றிச் சிலவிடங்களிலேயே சொல்லப்பட்டுள்ளது. அதுவும் பரதனுக்கு அடியாராய்த் தொண்டுசெய்வதாக. பகவானுடைய அவதாரமாகிய இராமனிடத்தில் பரதனுக்கு அபாரமான பக்தி. அப்படி மிகச்சிறந்த திருமாலடியாரான பரதனுக்கு அடியாராக இருப்பதையே சத்ருக்னன் முக்யமாக மேற்கொண்டபடியால் மற்றவர்களைப்போல் கதாம்சத்தில் அவரை அடிக்கடி காணமுடியாது. அதனால்தான் தேடிப்பிடிக்கவேண்டியிருக்கிறதென்றது.

திலும் தமக் குபமானமின்றிக்கே யிருக்கை. கீழே 'நங்கட்கு' என்றார்— கேசவன் தமருக்குப் பின்பு தனியரல்லாமையாலே. இங்கு "தமியேற்கு" என்கிறது, ஸம்ஸாரிகளில் தமக்குப மானமாவா ரில்லாமையாலேயும், ஸ்ரீ வைஷ்ணவர்கள் தமக்கு ஸ்வாமியாகையாலேயும் தமியேனென்கிறார்.

எட்டாம்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து முதல்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

கொண்ட பெண்டிர் மக்க ளுற்றார் சுற்றத் தவர்பிறரும்
கண்ட தோடு பட்ட தல்லாற் காதன்மற் றியாதுமில்லை
எண்டி சையுங் கீழும் மேலும் முற்றவு முண்டபிரான்
தொண்ட ரோமா யுய்ய லல்லா லில்லைகண் டீர்துணையே. (1)

'கொண்ட பெண்டிரில்' [1]ஸோபாதிக பந்துக்களை விட்டுத் தன்னைப் பற்றினாரையும் ததீய சேஷத்வத்திலே நிறுத்துமவன் [2]நிருபாதிக பந்துவான ஸர்வேச்வரனைப் பற்றுங்கோள் என்றருளிச் செய்தார்.

கண்ண னல்லா லில்லை கண்டீர் சரணது நிற்கவந்து
மண்ணின் பாரம் நீக்கு தற்கே வடமது ரைப்பிறந்தான்
திண்ண மாநம் முடைமை யுண்டே லவனடி சேர்த்துய்மினோ!
எண்ண வேண்டா நும்ம தாது மவனன்றி மற்றில்லையே. (10)

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கண்ணனல்லா லில்லை கண்டீ'ரென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தமளவாக, பார்யா புத்ராதிகளோடே வாழ்வும், ஸாதனானுஷ்டானங்கள் பண்ணி ஸ்வர்க்காதி போக்யங்கள் புஜிப்பார்க்கும், ஸர்வேச்வரனையே ஆச்ரயித்துப் பெறவேணும். பெற்றாலும் அல்பாஸ்திரமாகையாலே நிலையற்றிருக்கும்.

உயர்நலமுடையவன் யவனவன் ஜ்ஞானாநந்தைக ஸ்வரூபனாய், ஜ்ஞான சக்த்யாதி கல்யாண குணகணபூஷிதனான ஸர்வேச்

---

[1]ஸோபாதிக பந்து (सोपाधिकबंधु)=ஒரு சரீரத்தின் ஸம்பந்தம் காரணமாக ஏற்பட்ட உறவினர். [2]நிருபாதிக பந்து (निरुपाधिकबंधु)=ஒரு காரணமுமின்றியே பந்துவானவன்.

வரன் தான் கிருஷ்ணனாய் வந்தவதரித்து, "கண்ணனல்லாலில்லை கண்டீர் சரணது நிற்கவந்து = தானே உபாயமென்னு மர்த்தத்தை ப்ரதிஷ்டிப்பிக்கைக்காக அவதரித்த கிருஷ்ணன் திருவடிகளை ஆச்ரயியுங்கோளென்கிறார்.

'கண்ணனல்லாலில்லை கண்டீர்சரண் = கிருஷ்ணனையொழிய வேறு சரணமாவாரில்லை' யென்னு மிவ்வர்த்தம் நிலை நிற்கைக்காக, இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும், அதுக்குறுப்பாக; 'மண்ணின் பாரமித்யாதி = பூபாரத்தைப் போக்குகைக்காகவும், திருவவதாரம் பண்ணினான்.

ஆனபின்பு நீங்களும் திண்ண மித்யாதிப்படியே, நம் = உங்களுடைமை' என்று நினைத்திருந்தன வுண்டாகில், கடுக வவன் திருவடிகளிலே சேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். 'உண்டேல்' என்றது, ஸ்வபக்ஷத்திலில்லை; அவர்களுடைய [3]அந்யதாப்ரதிபத்தியாலே வந்தனவுண்டாகில் - என்கை.

'நீரில்லையென்று சொல்லுகிறவை என் கொண்டென்ன? ச்ருதிப்ரதிபாத்யனான கிருஷ்ணன் மயர்வற மதிநல மருளினான். அருளின பக்திரூபாபன்னஜ்ஞானத்தாலே ப்ரத்யக்ஷஸமாநாகாரமாய் நின்று, 'ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ' என்று அருளிச்செய்து, தன்னைத் தொட்டுக் காட்டக் கண்டு சொல்லுகிறேன்.

அயர்வறு மமரர்கள திபதியானவன் - அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிஸேவ்யனானவன்; நித்யஸம்ஸாரிகளும் உஜ்ஜீவிக்கைக்காக, ஸாத்யோபாயங்களை ஸவாஸநமாக விட்டு, ஸித்தோபாய பூதனான என்னை யொருவனுமே பற்றி நிர்ப்பரனாயிரு' என்றால், அதுவேயன்றோ? செய்வது.

---

[3]अन्यथाप्रतिपत्ति = உண்மைக்கு மாறான அறிவு. எல்லாப் பொருள்களும் பகவானுடையதே. ஆகையால் எல்லாவற்றிற்கும் அவனே உடையவன். உண்மை இவ்விதமிருக்க, ஒரு சில பொருள்களை 'நமது' என்று நினைப்பதும்; அவைகளோடு வாசியற பகவானுடையதேயான தன்னை, அவற்றுக்கு உடையவனாக நினைப்பதும் உண்மைக்குப் புறம்பானது என்கை.

'எண்ணவேண்டா = இதுதான் 'அவனுடையதோ' 'நம்முடையதோ' வென்று விசாரிக்கவேண்டா. உங்களோடு உங்கள் உடைமையோடு வாசியற அவனுக்குச் சேஷம்.

'மற்றில்லை = அவனன்றி மற்றில்லையே. உங்களுடைய பாரத்தில் கர்த்தவ்யாம்சமடைய உங்கள் தலையிலே கிடக்கிற தல்ல. எல்லாமவன் பக்கலிலே கிடக்கிறதென்னுதல்.

'மற்றில்லை = பலஸித்திக்குடலான ஸாதனம், அவனுடைய துயரறு சுடரடி தொழுதெழுகை யொழிய வேறில்லை. உங்களுடைய ஆத்மாத்மீயங்களில் [1]மமதா புத்தி தவிருகையே, அவனுக்குத் துயர் தீர்ந்தானுய் விளங்குவது. ஸமித்தை பாதி ஸாவித்ரி பாதியாக நீங்களும் ஒருதலைக் கூட்டுப்பட வேண்டுவ தில்லை. அசேதனக் கிரியைகளோ பாரப்பிரம்மத்துக்குக் கூட்டுப்படுவதென்றறிந்து, 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' யென்று, தம் நெஞ்சுக்கும் நெஞ்சுபோல்வார்க்கு முப தேசித்தாராய்த்து.

ஒன்பதாம்பத்து முதல்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

பண்டைநா ளாலே நின்திரு வருளும்
 பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டுநின் கோயில் சீய்த்துப்பல் படிகால்
 குடிகுடி வழிவந்தாட் செய்யும்
தொண்டரோர்க் கருளிச் சோதிவாய் திறந்துன்
 தாமரைக் கண்களால் நோக்காய்!
தெண்டிரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த
 திருப்புளிங் குடிக்கிடந் தானே! (1)

---

[1]மமதா புத்தி (ममता बुद्धि) — 'என்னுடையது' என்கிற எண்ணம்.

'பண்டை நாளில் திருப்புளிங்குடியிலே சென்றுபுக்கு, அவனைக்கண்டு, எல்லா பந்துக்ருத்யமும் பண்ணவேணுமென்று அவனை யிரந்தார்.

பத்தாம்பாட்டு

கோடுவினைப் படைகள் வல்லையா யமரர்க்
  கிடர்கேட வசுரர்கட்க் கிடர்செய்
கடுவினை நஞ்சே! யென்னுடை யமுதே!
  கலிவயற் றிருப்புளிங் குடியாய்!
வடிவினை யில்லா மலர்மகள் மற்றை
  நிலமகள் பிடிக்கும்மெல் லடியைக்
கோடுவினை யேனும் பிடிக்கநீ யொருநாள்
  கூவுதல் வருதல்செய் யாயே. (10)

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கொடுவினைப் படைகள் வல்லையா' யென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் உயர்வற தேவதைகள் காலிலே குனிந்து அங்யசேஷபூதராய் உயர்வற்றார்கள்.

அவர்களிலே நானுமொருவனுயிருக்க, எனக்கு உயர்நலமுடையவன் யவனவன், பரமானந்த ஸ்வரூபனாய், வேதாந்த வேத்யனாய், ஸ்ரிய:பதியானவன் நிரதிசய போக்யமான திருவடிகளிலே நானும் வந்தடைந்து அடிமை செய்யும்படி, "என்னை யங்கே யழைத்தல் நீ யிங்கே வருதல் செய்யவேணு"மென்று அர்த்திக்கும்படியானேனென்கிறார்.

உயர்நலமுடையவன் கொடுவினைப்படைக்களவனுன உனக்குச் சேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள் பக்கல், நீசிலே நெருப் பெழுந்தாப்போலே சிறி ஆயுத மெடுக்க வல்லையாய், அவன் மாட்டாதது சிலரை யழியச் செய்கை யாய்த்து. [1]'யதிவா ராவண: ஸ்வயம்' என்னுமவனிறே.

---

[1]யதிவா ராவண: ஸ்வயம் (यदिवा रावणस्स्वयम्) = எனக்கு மிகப் பெரிய அநீதியிழைந்த அந்த ராவணனேயாயினும்சரி — சரணுகதனாக வந்தானாகில், என் கைவிடவல்லேனல்லேன். (ஸ்ரீ ராமன் வார்த்தை.)

கடலை யணைசெய்து, ஊரைச்சூழப்போந்து, பின்னை யங்கதப் பெருமாளைப் போகவிட்டு, கையிலே வந்தகப்பட்டவனை [2]'கச்சானுஜாநாமி' என்று தப்பவிட்டது 'இன்னுமொருக்கா லநுகூலிக்குமோ'வென்று.

'நாம் முடிந்தே போமித்தனை' யென்றதிலே முதிர நின்ற பின்பும், கண்ணுங் கண்ணீருமாயிறே நின்று கொன்றது. இவர்கள் பண்ணும் ப்ராதிகூல்யத்தாலே யழியச் செய்யுமித்தனை போக்கித் தானாக அழியச் செய்யமாட்டானாய்த்து.

'அமரர் இத்யாதி—அஸுரர்களாலே தேவர்களுக்குண்டான துக்கந் தீரும்படி, அஸுரர்களுக்குத் துக்கத்தை விளைக்கும் கடுவினை நஞ்சே! என்னுடையமுதே!

கர்ம விஷங்கலந்த உமக்கு ரஸித்தபடி யென்னென்ன; ஹேதுசொல்லுகிறார். 'மயர்வற மதிநல மருளினன்—இதரவிஷயங்களில் எப்பேர்ப்பட்ட ருசியில் மயர்வற்று, அபர்யாப்தாம்ருதமான போக்யதையே ருசிக்கும்படி, பக்திரூபாபன்னஜ்ஞானத்தைப் பிறப்பித்து இப்படி நிர்ஹேதுகமாக வருளுகையாலே அறிந்தேன்.

'கடுவினை நஞ்சே= அப்போது சடக்கென்ன முடிக்கவற்றாய், ப்ரத்யௌஷத மில்லாத நஞ்சானவனே! அந்நஞ்சுதானே யிவருக்கு அம்ருதமாயிருக்கிறபடி. தேவர்களுடைய [3]உப்புச்சாறு அன்று. அயர்வறு மமரர்களுக்கும் அபர்யாப்தாம்ருதமானவனே யிவருக்கும் அதிசயாம்ருதமா யிருக்கிறபடி.

இப்படி அவர்களுக்கு ரஸிகனானவன் 'கலிவயல் திருப்புளிங்குடியிலே' ஸந்நிஹிதனாய்த்து. இவ்வம்ருதத்துக்குக் கடல்

[2]கச்சானுஜாநாமி (गच्छानुजानामि)= சண்டையில் மிகவும் களைத்துப்போன இராவணனை இராமன் சொல்வது - 'உன்னை திரும்பிப் போகுமாறு அனுமதிக்கிறேன்' என்று.

[3]உப்புச்சாறு = பாற்கடலைக் கடைந்து எடுத்த அமுதத்தைத் தேவர்கள் பருகி அமரரானார்கள். 'கடல்' உப்புமயமான ஜலத்தையுடையது ஆதலின் பொதுவில் 'கடல்' என்னும் பெயரால் பாற்கடலையும் உப்புமயமாக பாவித்து ஷெ. அமுதத்தை 'உப்புச்சாறு' என்கிறார்.

கடைதல், ஸ்வர்க்கத்திலே போதல் செய்யவேண்டா. திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாய்த்து இவ்வம்ருதம்.

கலிவயல் = ஸம்ருத்தமான வயல். அயர்வறுமமரர்களதிபதியானவன், அத்தை விஸ்மரிக்கும்படி பரமபதத்திலும் ஸம்ருத்தமானதேசம்.

எம்மிடர் கடிவானுடைய துயரறு சுடரடி — வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியை = ஒப்பின்றிக்கே யிருக்கும் பகவத்தத்வமும் ஒப்பன்று. [4]'அஸிதேக்ஷணு' வென்று ஏற்றமாயேயிருக்கும். மற்றை நிலமகள் [5]'ஏவம்பூதை' என்னுமித்தனை.

அவர்கள் பிடிக்கும் மெல்லடியை = அவர்களும் திருவடியைப் பிடிக்கப் புக்கால், பூத்தொடுவாரைப்போலே 'கன்றுகிறதோ'வென்று கூசித் தொடவேண்டும்படியாய்த்து, ஸௌகுமார்யமிருப்பது.

அப்படிப்பட்ட திருவடிகளைக் 'கொடுவினையேனும் பிடிக்க = 'கண்கள் சிவந்து'க்குப் பின்பு இவருக்கு நிகர்ஷாநுஸந்தானமில்லையிறே. அவர்களும் ஸந்நிஹிதராய், ப்ராப்தியுமுண்டாயிருக்க, நானிழந்திருப்பதேயென்று 'பாவியேன்' னென்பாரைப் போலே 'கொடுவினையேன்' னென்கிறார்.

'நீ யொருநாள் கூவுதல் வருதல் செய்யாயே = நிரதிசய போக்யனும் ஸந்நிஹிதனுமான உன் துயரறு சுடரடி தொழுது, திருவடி வருடியிருக்கும்படி கூவுதல் வருதல் செய்து என் ஸத்தையை நோக்குகை ஒருநாளங்கே யழைத்தல் இங்கே வருதல் செய்தருளவேணும்.

---

[4]அஸிதேக்ஷணு(असितेक्षणा) = கருங்கண்ணி. பகவானைக்காட்டிலும் பிராட்டிக்கு ஏற்றம் சொல்லுகிறபடி. राघवोऽर्हति वैदेहीं तंचेय मसितेक्षणा - என்பது இராமாயண ச்லோகம். இதில் राघवः என்று பெயரைமட்டும் சொல்லி, ஸீதையைச் சொல்லுமிடத்தில் 'असितेक्षणा' என்று அடைமொழி சேர்த்தது. [5]ஏவம் பூதை (एवं भूते) = திருமகளின் பெருமைகள் யாவற்றையும் உடையவளான.

முற்பட வருத லென்றில ராயிற்று, [6]ஸமுதாயத்தைக் கலைக் கவொண்ணுதென்று. என் மனஸும் நானுமாக அபேக்ஷையுண் டாயிருக்க, அவனுமபேக்ஷையுடையார்பக்கல் விட்டிருக்க மாட் டாதவ னுகையாலே, அவர்களையுங் கூடக் கொண்டுவருவாய் என்னு மத்தைப் பற்றச்சொல்லுகிருர்.

ஒன்பதாம்பத்து இரண்டாம்திருவாய்மொழிவிவரணம்முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

—

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

ஓரா யிரமா யுலகே ழளிக்கும்
பேரா யிரங்கோண் டதோர்பீ டுடையன்-
காரா யினகா ளநன்மே னியினன்
நாரா யணனங் கள்பிரா னவனே. (1)

'ஓராயிரத்தில்' உம்முடைய அபேக்ஷிதங்கள் எல்லாஞ் செய்கிறோம். நாம் நாராயணன், ஸர்வ சக்தி யுக்தன்; என்று தன்னோடுண்டான ஸம்பந்தத்தைக் காட்டக்கண்டு, அவனுடைய *சீலவத்தையிலே யாழங்கால் பட்டார்.

நான்காம்பாட்டு

மருந்தே நங்கள்போ கமகிழ்ச் சிக்கேன்று-
பெருந்தே வர்குழாங் கள்பிதற் றும்பிரான்-
கருந்தே வனெம்மான் கண்ணன்- விண் ணுலகம்
தருந்தே வனைச்சோ ரேற்கண்டாய் மனமே! (4)

---

[6]ஸமுதாய: (समुदाय:) = பகவான், திருமகள் பூமகள், முதலிய மகிஷிகளோடும், அனந்தகருடாதிகளான நித்யஸூரிகளோடும், கூடியிருத்தல். எம்பெருமானைமட்டில் கூப்பிட்டு அவனும் தான் மட்டில் வருவானுகில், இந்தச்சேர்த்தி குலையும் என்கை.
*சீலம் = நல்லொழுக்கம்.

உயர்வற என்கிற பாட்டை 'மருந்தே நங்கள்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

பிரம்மானந்தந் தொடங்கி மனுஷ்யானந்தத்தளவாக முன்னேயின் பின்னே ப்ராப்தமென்கிற ஆத்ம க்ஷயரோகத்துக்கு 'எருத்துக் கொடியுடையானும் பிரமனு மிந்திரனும் மற்றுமொருத்தரும் மருந்தறியா, திருக்குமவர்க ளாகையாலே உயர்வற்றிருப்பார்கள். உயர்வற என்றது.

உயர்நலமுடையவன் யவனவன் – மருத்துவனாய் நின்றமா மணிவண்ணன். ஜ்ஞானநந்தாதிகளாலேயும், ஜ்ஞான சக்திகளாலேயும், சிலாதி குணங்களாலேயும் "மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்"கென்றும். பெருந்தேவர் = நித்யஸூரிக ளனுபவிக்கிற அபர்யாப்தாம்ருதம்[1]ஸாத்மிக்கைக்காக, மருந்தும் பொருளும் அமுதமும் தானே யானவன், விஷபூர்ணமான ஸம்ஸார ஸாகரத்துக்கு மாற்று மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணன், [2]'பஜஸ்வமா' மென்றும், 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்றும் விதித்த பேஷஜங்கள் காட்டின ஸர்வேச்வரன். கிருஷ்ணனாய் வந்தவதரித்து நம்மையு மவர்கள் நடுவே வைக்குமவனான மருத்துவனானவனே, விடாதேகிடாய்! என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச் செய்கிறார்.

'மருந்தே = உன்னுடைய அநுபவத்தாலே கண்களுக்கு வருமானந்தத்துக்கு வர்த்தகனானவனே!

இப்படிச் சொல்லுகிறது தானெத்தாலே? என்ன; நீ மயர்வற மதிநல மருளுகையாலே, உன்னைப் பெறுகைக்கும் ஸம்ஸார மாகிற மஹாரோக மறுகைக்குமாக நீயருளின பக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தாலே யறிந்தேன்.

'பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான் = பரன் என்றது. அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள் திரள் திரளாகக் கூடிக் [3]கிண்ணகத்தி லிழிவாரைப்போலே யாய்த் தனுபவிக்க இழிவது.

---

[1]ஸாத்மிக்கைக்காக = ஜீர்ணமாகி நிலைத்தற்காக. [2]பஜஸ்வமாம் (भजस्वमाम्) = என்னை பக்தியுடன் தியானம்செய். [3]கிண்ணகம் = பிரவாகம். (வெள்ளம்)

'பிதற்றும் = ஜ்வராஸந்நிபதிதரைப்போலே அக்கிரமமாகக் கூப்பிடா நிற்பர்கள். அதாவது அவர்களுக்குத் தன்னை யனுபவிக்கக் கொடுத்த உபகாரகன்.

கருந்தேவன் = காளமேக [4]நிபச்யாமமாய், திவ்யமான வடிவையுடையவன். யவனவன் கருந்தேவ னெம்மான் — அவ் வடிவைக் காட்டி என்னை எழுதிக்கொண்டவன். நித்ய முக்தர்க்குப் படிவிடும் வடிவைக் கிடீர்! எனக்குபகரித்தது. அதற்குமேலே யொரு பதமருளினன், துயரறு சுடரடி தொழுதெழும்படி. மருந்து—அமுதமும் தானேயாம்படி என்னையும் என்னெஞ்சை யும் விஷயீகரித்தவன்.

'கண்ணன் விண்ணுலகந் தருந் தேவனைச் சோரேல் கண்டாய் மனமே = முன்பு பெற்றதற்கு மேலே பரமமான பதந் தந்தருளி னன். தொழுதெழும்படி பண்ணினன்.

'தருந்தேவனைச் சோரேல் கண்டாய் மனமே = அடியே னடைந்தேன் முதல் முதல் முன்னமே. "கண்ணன் = தன் னிலை குலையாமல் நின்றுபகரிக்கை யன்றிக்கே; அவதரித்து, 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்று உபகரித் தருளினவன்.

அவன் தன்னுடைச் சோதியான விண்ணுலகான பரம பதத்தையும், 'வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்ளென்று வீடுந்தரும் நின்று நின்று கக்கைக்கும் அனுபவிக்கைக்குமாய். பரவசமான வ்யாமோஹத்தாலே 'சோரேல் கண்டாய் மனமே!

துயரறு சுடரடி தொழுதெழென் மனனே = அவனை உடம்பு வெளுக்கப் பண்ணாதே, அவனுக்குப் பூசுஞ் சாந்தில் படியே அவனுகப்பே செய்திரு வென்கிறார்.

ஒன்பதாம்பத்து மூன்றாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[4]நிபம் (निभ) = ஸமானம்.

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

மையார் கருங்கண்ணி கமல மலர்மேல்
செய்யாள் திருமார்வி னிற்சேர் திருமாலே!
வெய்யார் சுடராழி சுரிசங்க மேந்தும்
கையா! வுனைக்காணக் கருதுமேன் கண்ணே. (1)

மையார் கருங்கண்ணியி லிப்படி சிலவானுனவன் தானே வந்து முகங்காட்டாமையாலே, பெரிய பிராட்டியாருந் தானுமா யிருக்கிற யிருப்பை யனுஸந்தித்துப் பெருமிடறு செய்து கூப் பிட, ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானுக் குதவினுப்போலே நடுவே வந்து தன்னைக் காட்டியருளக்கண்டு க்ருதார்த்தரானர்.

ஒன்பதாம்பாட்டு

கண்டுகோண் டேன்கண் ணிணையாரக் களித்துப்-
பண்டைவினை யாயின பற்றே டறுத்துத்
தொண்டர்க் கமுதுண்ணச் சோன்மாலை கள்சோன்னேன்-
அண்டத் தமரர் பெருமா னடியேனே. (9)

'உயர்வற' என்கிற பாட்டைக் 'கண்டுகொண்டேன் கண் ணிணையாரக்களித்' தென்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும்; ஸ்ரீயப் பதியாய், ஆனந்தாதிகுணகணபூஷிதனுனவனைப் 'பெண்ணுளான் சடையினுனும் பிரமனு முன்னைக் காண்பா னெண்ணரு ஊழியூழி தவஞ்செய்தார் வெள்கி நிற்ப. உயர்நலமுடையவன் யாவனொருவன் ச்ருதிப்ரஸித்தனுனவனை, நானழைத்துக் கூப் பிட்ட விடாயெல்லாங் கெடக் காணப் பெற்றேன்.

'என் கண்ணிணை யார = 'காணக்கருதும் என் கண்ணே' என்ற கண்களின் விடாய்கெடக் கண்ணிணை யாரக்கண்டு கொண்

டது. [1]கலியர், 'வயிறுரவுண்டே' னென்னுமாப்போலே கண்ணின் பசி தீர்ந்தபடி.

'நீர் கண்டபடி யென்னென்ன; அவன் 'மயர்வற மதிநல மருளினவன் — அந்த ஜ்ஞானப்ரேமாத்மகமான என் கண்களிரண்டுங் களித்து, இந்த ஸ்வரூபஜ்ஞானமடியாக 'மயர்வற= பண்டை வினையாயின பற்றோடறுத்து, மறுகின நெஞ்சு களித்து. பண்டைவினை=ப்ராக்தனமான கர்மங்களை ஸவாஸநமாகப் போக்கி, இவ்வுகப்பிற்கு *இடைச்சுவரான அஹங்காராதி ஸமஸ்த விரோதிகளையும் ஸவாஸநமாகப் போக்கினவன்.
(1)

பரமபதத்திலே அயர்வறு மமரர்க ளதிபதியான ப்ராப்யபூதனுக்கு, 'அண்டத்தமரர் பெருமானடி யனாகப் பெற்றேன்.

ப்ராப்யபூதனானவன் துயரறுசுடரடி தொழுது அடியனாய் 'தொண்டர்க் கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன். என்னளவன்றிக்கே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் உபகாரகனாகப் பெற்றேன்.

பெற்ற பேற்றின்கனம், 'நானுமென்' [2]பரிகாரமும் ஜீவித்திருந்து மிட்டேன்' என்பாரைப் போலே. 'சொல் மாலைகள் சொன்னேன். சப்த ஸந்தர்ப்பரூபமான வாசிககைங்கர்யம் பண்ணப்பெற்றேன். ததியசேஷத்வபர்யந்தமான பேற்றைப் பெற்றேன்.

பெற்ற பேற்றின் கனமிருந்தபடியாலே, தாமடியாக வந்ததொன்றல்ல. 'அண்டத்தமரர் பெருமானடியேனே = ஸர்வேச்வரனாலே விஷயீக்ருதனானேன். தொழுதெழேன் மனனே என்கிறார்.

ஒன்பதாம்பத்து மூன்றாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[1]கலியர்=பசித்தவர். [2]பரிகரம் (परिकरम्)=பரிஜனங்கள்.
*இடைச்சுவர் = ப்ரதிபந்தகம் (தடை)

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிநிலைத்துறை)

இன்னுயிர்ச் சேவலு நீருங்கூ விக்கொண் டிங்கெத்தனை
என்னுயிர் நோவ மிழற்றேன் மின்குயிற் பேடைகாள்!
என்னுயிர்க் கண்ண பிரானை நீர்வரக் கூவுகிலீர்-
என்னுயிர் கூவிக் கொடுப்பார்க்கு மித்தனை வேண்டுமோ? (1)

இன்னுயிர்ச் சேவலில் கீழ் பிறந்தது [1]ஜ்ஞான ஸாக்ஷாத்காரமாய், பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அது கிடையாமையாலே அவஸந்நராய், ஸ்மாரக பதார்த்தங்களாலே நலிவு படுகிற படியை அருளிச்செய்தார்.

ஐந்தாம்பாட்டு

அந்தரம் நின்றுழல் கின்ற யானுடைப் பூவைகாள்!
நுந்திறத் தேது மிடையில் லைகுழ றேன்மினோ-
இந்திர ஞாலங்கள் காட்டியிவ் வேழுல குங்கொண்ட-
நந்திரு மார்பன்நம் மாவி யுண்ணநன் கெண்ணினன். (5)

'உயர்வற' என்கிற பாட்டை 'அந்தரம் நின்றுழல்கின்ற என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தத்தளவும், இதர விஷய ப்ராவண்யங்களாலே உயர் வற்றார்கள். இப்படி அவர்கள் வ்யாமோஹித்துப் படுகிற அலமாப்பைக்கண்டு, தமக்கவற்றில் ப்ராவண்யமற்றாலும், பகவத்ப்ராப்தி பெறாமையாலே 'இன்ன மறுவலிடில் செய்வதென்'னென்று 'உங்கள் வ்யாமோஹத்தைக் காட்டி நலியாதே கிடீகோள்! என்று அவற்றை நிஷேதிக்கிறாள்.

உயர்நலமுடையவன் யவனவன், நித்யானந்த ஸ்வரூபனானவன், என்னாத்மாத்மீயங்களை யபகரித்தான். ஆனபின்பு நீங்கள் நலிகிறதென்?'

---

[1]ஜ்ஞானஸாக்ஷாத்காரம் (ज्ञानसाक्षात्कारम्) = அகக்கண்ணால்— அறிதல்.

இன்னுயிர்ச் சேவலின் தன்னினமாயிருந்து நலிகிறவற்றைக் குறித்து, அவன்தானென்னை முடிக்கைக்கு நல்விரகு பார்த்தான். அந்தர நின்றுழல்கின்ற பூவைகாளினியுங்களுக்கு இங்கு விஷயமில்லை கிடிகோள்! என்ன ;

என்ன தானென்ன; எனக்கு மயர்வற மதிநல மருளப்பெற்றிருக்க நலியப்போமோ? பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தை உங்களால் குலைக்கப்போமோ? 'அந்தரம் நின்றுழல்கின்ற உங்களுக்கிங்கு நலிய விஷயமில்லையாயிருக்க, நடுவே நின்றென்னை கிலேசப்படுத்துகிறிகோ ளித்தனை.

யானுடைப் பூவைகாள் = ஸர்வஸாதாரணரா யிருப்பார் செய்வதைச் சிலர்க்கு [2]ஸ்வம்மாயிருப்பார் செய்யக்கடவதோ? 'நானெனக்கெ'ன்ன வமையுமாகாதே பாதிக்கைக்கு. அவனுமென்னுடையவனாகையிறே நலிந்தது.

பக்திரூபாபன்ன ஜ்ஞான மருளினவனை யன்றி, 'நுந்திறத்தேதுமிடையில்லை குழறேன்மினோ = உங்களிடையாட்டத்தில் என்னை நலிகைக் கோரவகாசமுமில்லை என்னுமாம். உங்கள் பாரிப்புக்கு மென்பக்க லோரவகாசமு மில்லை.

'குழறேன்மினோ = [3]அநக்ஷரரஸமான பேச்சைக் காட்டி முடியாதே கொள்ளுங்கோள். அயர்வறு மமரர்க ளதிபதியானவன் யாவனொருவன், அவன் தானதிகரித்த காரியத்திலே நெகிழ நின்றானிலன்றோ? நீங்களிப்படி முதிர நிற்கவேண்டுவது. அதுக்கு உங்களுக்கு அவகாசம் வைக்கிறானோ?

'இந்திரஞாலங்கள் காட்டி = கண்டார்க்கு விடவொண்ணாத தன் வடிவைக் காட்டியும். சீலத்தையும் சேஷ்டிதத்தையும் காட்டி. இவை நிலமல்லாமையாலே பொய்யென்கிறாள். 'இந்திரஞால'மென்றும், 'பொய்'யென்றும் [4]பர்யாயம்.

---

[2]ஸ்வம் (स्वम्) = (இங்கு) உற்றார் – உறவினர் – ஏவலாளர். [3]அநக்ஷரரஸம் (अनक्षररसम्) = எழுத்துக்கள் தெளிவாகத்தெரியாமலே ரஸத்தைக்கொடுப்பன. [4]பர்யாயம் (पर्यायम्) = ஒரே பொருள்கொண்ட இரண்டு சொற்கள்.

'எழுலகுங் கொண்ட=பிறருடைய வஸ்துவை அபஹரிக்கப் புக்கால், அவர்களுக்கொன்று [5]சேஷியாதபடி அபஹரிக்குமவன்.

[6]சேஷ்டிதப்ரணயித்வத்தால் வந்த ப்ரஸித்தியை யெனக்குக் காட்டினவன் யவனவன், அயர்வறு மமரர்க ளதிபதி யானவன் யவனவன் — என் திருமார்பன்; பிராட்டியோடும், நித்ய ஸூரிகளோடும் பழகிற்று ப்ராணயியாயன்று. இந்திரஜாலத்தைக் காட்டிற்று. கண்டாரை யகப்படுத்த, சில பொய்களைக் காட்டி பூமியைக் கொண்டாற்போலே. 'என் திருமார்பன் துயரறு சுடரடி தொழுதவன்று தொடங்கி, 'கலந்து பரிமாறுகிறு'னென்று தோற்றும்படி சில பொய்களைச் செய்து விச்லேஷிக்கை, என்னை முடிக்கைக்குபாய மிதுவென்று 'என்மனமும் என்னுவியுமுண்ண நன்கெண்ணினன்=நம்மை முடிக்கைக்கு நல்விரகு பார்த்தான்.

உங்களுக் கிங்கவகாச மில்லை யானுடைப் பூவைகாள்! என் மனமே! ஸர்வசக்தி உத்யோகித்த கார்யத்தில் குறை கிடைப்பதாய், அதிலே நீங்கள் ஸஹகரிக்கிறிகோளோ? நம்மை முடிக்கப் பார்த்த பார்வை அழகிதாகப் பார்த்தா னென் னெஞ்சே தொழுதெழு என்று நொந்து தன்னிலே நொந்து சொல்லுகிறுளென்றுமாம்.

ஒன்பதாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து ஆருந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

உருகுமால் நெஞ்ச முயிரின் பரமன்றிப்
பெருகுமால் வேட்கையு மென்செய்கேன் தொண்டனேன்?
தெருவெல்லாங் காவி கமழ்திருக் காட்கரை
மருவிய மாயன்றன் மாயம் நினைதோறே. (1)

---

[5]சேஷியாதபடி (शेषियादपडि) = மீதி யில்லாதபடி. [6]சேஷ்டிதப்ரணயித்வம் = சேஷ்டிதங்கள்—திருவிளையாடல்கள். ப்ரணயித்வம் – ப்ரீதி.

'உருகுமாலில், [1]ஸ்மாரகபதார்த்தங்கள், [2]ஸ்மர்யமாண விஷயங்களிலே முட்டிக் கடக்க நிற்க; எம்பெருமானுடன் பண்டு ஸம்ச்லேஷித்தபடியை அநுஸந்தித்து [3]அப்ரீதி கர்ப்ப குணாநுஸந்தானம் பண்ணியருளினர்.

ஒன்பதாம்பாட்டு

ஆருயிர் பட்ட தெனதுயிர் பட்டது-
பேரிதழ்த் தாமரைக் கட்கனி வாயதோர்-
காரெழில் மேகத்தேன் காட்கரைக் கோயில்கொள்-
சீரெழி ஞற்றடந் தோள்தெய்வ வாரிக்கே. (9)

உயர்வற என்கிற பாட்டை 'ஆருயிர் பட்டது' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தமளவாக, இதர போகங்களை புஜித்து, ஸ்வரூபஹாநிகளாய்த்து. அதிலே நானுமொருவனாயிருக்கச் செய்தே, உயர்நல முடையவன் யவனவன் விஷயத்திலே, என்னுயிர் பட்டாற்போலே 'ஆருயிர் பட்ட தென்ன;

நீரேயோ யிப்படி பட்டீர்?' குணானுபவமே யாத்ரையான நித்யஸூரிகளும் படும்பாடிதன்றோ? என்ன; 'அவர்கள் தான் நான்பட்டது பட்டார்களோ? வென்கிறார்.

உயர்வற உயர்நல முடையவன் பக்கலிலே, நான் பட்டாற்போலே ஆருயிர்பட்டது? நித்யஸூரிகளிலேதான் பட்டாருண்டோ? பகவத் குணங்களுக்கு [4]அபூமியாயிருக்கிற ஸம்ஸாரத்திலே நான் பட்ட பாட்டை, நித்யவிபூதியிலே அயர்வறு மமரர்களதிபதியானவனை, அயர்வின்றி யனுபவியா நின்றுள்ளவர்கள் தானென் பட்டார்களென்ன;

---

[1]ஸ்மாரக பதார்த்தங்கள் (स्मारक पदार्थंगळ्) = நினைவூட்டும் பொருள்கள். [2]ஸ்மர்யமாண விஷயங்கள் (स्मर्यमाण विषयंगळ्) = நினைக்கப்படும் பொருள்கள். [3]அப்ரீதி = விசனம். [4]அபூமி (अभूमि) = இடமாகாதது, இவ்விடத்திலிருந்துகொண்டு பகவானுடைய குணங்களை உள்ளபடி அனுபவிக்க முடியாதென்கை.

நீரிப்படி விண்ணுள்ளாரிலும் சீரியராய்ப் படுகைக்கு ஹேதுவென்னென்ன ;

மயர்வற மதிநல மருளுகையாலே, அருளின பக்திரூபாபன்ன ஜ்ஞானம் படுத்தின பாடு 'அங்காருயிர்பட்ட திங்கெனதுயிர் பட்டது' என்கிறுரென்று, எம்பெருமானாருளிச்செய்யக் கேழ்க்கும்படி.

எல்லாரும் குணுனுபவம் பண்ணுகிறதாகில் இவருக்கிவ்வாசி கூடினபடி என்னென்று கேழ்க்க; [5]நவோடையான ஸ்த்ரீக்கு, பர்த்தாவினுடைய கரஸ்பர்சம் பட்டவாறே வேர்ப்பது விடுவதாமாப்போலே, இவர் பகவதனுபவத்தில் புதியராகையாலே வருகிறது காணும், என்றருளிச்செய்தார்.

உயிரையழித்த ஹேதுகளைச் சொல்லுகிறதுமேல். 'பேரிதழ்த் தாமரைக்கட் கனிவாயதோர்=பெரிய இதழையுடைய தாமரைபோலே இருந்துள்ள கண்ணையும், சிவந்த வாயையுமுடையவனாய், திருக்காட்கரையை யுடையவனாய்.

'காரெழில் மேகத்தென் காட்கரைக் கோயில்கொள்= கறுத்த எழிலையுடைய மேகம்போலே வடிவையுடையவனாய், திருக்காட்கரையைக் கோயிலாகவுடையவனாய். சீரெழில் நால் தடந்தோள்=வீரஸ்ரீயையும், எழிலையுமுடைத்தாய், [6]கல்பக தரு பணைத்தாற்போலே, நாலாய் சுற்றுடைத்தான தோள்களையுடைய. 'தெய்வ வாரிக்கு = தெய்வங்கள் படுங் கடலுக்கு. வாரி=கடல். தெய்வங்களுக் குத்பாதகனானவனுக்கு.

'என் மனனே! துயராறு சுடரடி தொழுதெழு=எனக்கு பவ்யமான நெஞ்சே! ஹேயப்ரதிபடமான திருவடிகளைத் தொழுது எழு-[7]வர்த்தி. 'தெய்வவாரி=தாபிமானமான தெய்வங்களுக்கு உத்பாதகனானவன், அபிமானசூந்யமான என்னையழித்தான். வடிவழகையு மவ்வூரிலிருப்பையுங் காட்டியாய்த் திவரையழித்தது.

ஒன்பதாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[5]நவோடா (नवोढा)=புதிதாய் மணமாகிய பெண் (மணமகள்)

[6]கல்பக தரு=(कल्पकतरु)=கற்பக விருக்ஷம். [7]வர்த்தி (वर्धि)

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(தரவுகொச்சகக்கலிப்பா)

எங்கான லகங்கழிவா யிரைதேர்ந்திங் கினிதமரும்
செங்கால மடநாராய்! திருமூழிக் களத்துறையும்
கொங்கார்பூந் துழாய்முடியெங் குடக்கூத்தர்க் கென்தூதாய்
நுங்கால்க ளென்தலைமேல் கெழுமீரோ நுமரோடே. (1)

'எங்கானலி'லிவ் வனுஸந்தானமுங் கலங்கி, அவனுடைய அழகை அநுஸந்தித்துப் பிரிவால் வந்த வாற்றாமையோடே அவ்வழகு பற்றாசாகத் தூதுவிட்டார்.

எட்டாம்பாட்டு

எனக்கொன்று பணியீர்க ளிரும்பொழில்வா யிரைதேர்ந்து
மனக்கின்பம் படமேவும் வண்டினங்காள்! தும்பிகாள்!
கனக்கொள்திண் மதிள்புடைசூழ் திருமூழிக் களத்துறையும்
புனக்கொள்கா யாமேனிப் பூந்துழாய் முடியார்க்கே. (8)

'உயர்வற' என்கிற பாட்டை 'எனக்கொன்று பணியீர்கள்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற - மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும், இதர விஷயத்தின் [1]ரூபலாவண்யங்களைப் பற்றி பகவத் ப்ராவண்யமற்றார்கள்.

தமக்கு மிதரப்ராவண்யம் மிஞ்சியிருக்க, உயர்நல முடையவன் யவன் ஸௌந்தர்ய சீலாதிகளாலே பரிபூர்ணனானவனுக்கு 'எனக்கொன்று பணியீர்கள்' என்று சில வண்டுகளையுந் தும்பிகளையுங் குறித்து அக்குத்தைக்குப் பயப்பட வேண்டாதபடி, 'ஸ்வரக்ஷிதமான தேசத்திலே யிருக்கப்பெற்றோமிறே. இனி யென்னார்த்தியை அறிவியுங்கோளென்கிறாள்.

---

[1]ரூபலாவண்யம் (रूपलावण्यम्) = வடிவும் - அழகும்.

உயர்நலமுடையவன் யாவனொருவனவன், ஸ்வரூப ரூபாதிகளால் ச்ருதிக்கடங்காதவன் ஸந்நிதியில் 'எனக்கொன்று பணியீர்கள் = நீங்களொரு வார்த்தை சொல்லாவிடில் முடியுந் தசையன்றோ? என் தசை யிருக்கிறபடி.

'இரும்பொழில்வா யிரை தேர்ந்து = பரந்த சோலையிடமெங்கும் புக்கு யிரைதேடி. 'மனக் கின்பம்பட மேவும் = மனஸிலே இனிமை பிறக்கும்படி யன்றோ? நீங்கள் கலக்கும்படி. உங்களைப்போலே மதுபானமத்தமாய் ரஸிக்கும்படியோ? நான் மயர்வற மதிநல மருளப்பெற்றது. பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே அபர்யாப்தாம்ருத பானம் பண்ணி, தேஹாத்மாபிமானமற்று, [2]ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞானத்தாலே அம்ருத ஸ்வரூபனானவனை அடைந்து, அநவரத பரிசர்யை பண்ணத் தேடுகிறது. விரஹத்தாலே வருங் கிலேசம் [3]பலியாதபடியாகக் கலவாநின்றிகோள். பிரிவிலும் வற்றாத ஆனந்தமுண்டாம்படி கலவாநின்ற தாய்த்து.

நான், அபர்வறு மமரர்களதிபதி யாவனொருவன் அவனை வேதசாகையிலே பூத்த பூவில் மதுபானம் பண்ணும் ஸ்ரிய: பதியாகிற தெய்வவண்டோடே சேர்ந்த நான் விச்லேஷித்துத் துவளலாமோ?

'கனக்கொள் திண் மதிள் புடைசூழ் திருமூழிக்களத் துறையுமவன் = அயர்வறு மமரர்களதிபதியாய், அபர்யாப்தாம்ருதமாய் அவர்களுக் கோலக்கங் கொடுக்கக் கடவவன், என்னைப் பிரிந்து தரிக்க மாட்டாமை, அவர்களைப் பிரிந்து, திண்ணிதான மதிள் சுற்றுஞ் சூழ்ந்திருந்து, திருமூழிக்களத்திலே நித்யவாஸம் பண்ணுகிற அவருக்கு. அத்தலையில் ஸௌந்தர்யத்தையனுஸந்தித்தால் ரக்ஷை தேட்டமாயிறே யிருப்பது. ஆகையாலே மங்களாசாஸனமாகிற மதிளிறே யிவளிடுகிறது.

"புனக்கொள் காயாமேனிப்பூந்துழாய் முடியார்க்கே = துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே! என்று அவனோடே கிட்டிக் கலக்கப் பெருமையாலே வருவதோ ராற்றாமையாலே

---

[2]ஸ்வரூபயாதாத்மயஜ்ஞானம் = தன்னுடைய உண்மை நிலைமையையறிதல். [3]பலியாதபடி = பயனுறாதபடி.

மோஹமுண்டு. அவனுக்கு 'எங்கே என்ன தீங்கு வருகிறதோ?' வென்னுமோ ராற்றாமை யுண்டு. அதில் ஒன்று தீரப்பெற்றது முந்துற முன்னம். 'புனக்கொள் காயாமேனிப் பூந்துழாய் முடியார்க்கே=தன்னிலத்தில் காயாவின் நிறம் போலேயாய்த்து நிற மிருப்பது.

அவ்வடிவழகுக்குமேலே, ஹேயப்ரதிபடமாய் அவ்வழகுக்கும் ஸ்வாமித்வ ஸூசகமான வொப்பனை யழகையு முடையவன். அதுக்குமேலே, ஹேயப்ரதிபடமாய், நிரவதிக தேஜோரூபமான துயரறு சுடரடிகளிலே தொழுது பரிசர்யை பண்ணும்படி நிர்ஹேதுகமாக அருளினவன் தனக்குரை.

வடிவழகது, ஒப்பனையழகது, துயரறு சுடரடிய்து. இவற்றை யெல்லாந் தாமே தம்மை யநுபவித்திருக்கையோ? கேவலரைப்போலே. 'பக்தாநு' மென்றது பொய்யோ? வென்றொரு வார்த்தையைச் சொல்லுங்கோ ளென்கிறாள்.

ஒன்பதாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

அறுக்கும் வினையா யினவா கத்தவனை
நிறுத்தும் மனத்தோன் றியசிந் தையினார்க்கு
வெறித்தண் மலர்ச்சோ லைகள்சூழ் திருநாவாய்
குறுக்கும் வகையுண் டுகொலோ? கொடியேற்கே. (1)

"அறுக்கும் வினையில்" விட்ட தூதர் அத்தலைப்பட்டு, அதறிவித்து வரப்பற்றாமையாலே யலமர்ந்து துடித்து, அவனிருந்த திருநாவாயிலே செல்லவேணுமென்று த்வரிக்கிறபடியை யருளிச் செய்தார்.

'உயர்வற' என்கிறபாட்டை 'அறுக்கும் வினை' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

உயர்வற அறுக்கும் வினை—மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தத்தளவும், புண்ணிய பாபரூப கர்மங்களாலே உயர்வும் தாழ்வுமா யிருப்பார்கள்.

அங்ஙனன்றிக்கே; உயர் நலமுடையவன் யவனவன் அவனநுக்ரஹத்தாலே வந்ததாகையாலே, பெற்றன்றித் தரியாதபடி, ப்ராப்யத்வரை விஞ்சினபடியாலே அலமர்க்கிறார்.

'அறுக்கும் வினையாயின=வினையென்று பேர் பெற்றவையெல்லாம் போக்கும். [1]ருசிவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்யத்தை ப்ராபிக்குமிடத்தில் வரும் விரோதிகள், வர்த்தமான தேஹத்தளவில் பர்யவஸிக்கை யன்றிக்கே ப்ராரப்த சேஷமாய் நின்ற அவ்வருகேயும் போம்படி விளம்பிக்கக்கடவ அவை, நின்ற நின்ற நிலைகள்தோறு முண்டாயிருக்குமிறே விரோதிகள்.

புதுப்புடவை யழுக்குக் கழற்றும்போது கிரமத்தாலே போக்கவேண்டுவது தான் போக்குமன்றிறே. பகவத் ப்ரஸாதத்தாலே போமன்று ஒருக்காலே போமிறே. "மேருமந்தர [2]மாத்ரோபி" [3]"ஸர்வே பாப்மாநஃ ப்ரதூயந்தே" "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிறபடியே யாகக்கடவதிறே.

ப்ரம்மஹத்யைக்கு [4]ப்ராயச்சித்தம் பண்ணினால், [5]கோஹத்யைக்குப் பிராயச்சித்தம் பண்ணவேண்டி வருவதிறே. அங்ஙன் வேண்டாவிறே பகவதநுக்ரஹந் தன்னில், மயர்வற மதிநல மருளின வருள்கொண்டு காரியங் கொள்ளுமிடத்தில்.

---

[1]ருசி (रुचि) = பற்றுதல். [2]மாத்ரம் (मात्रम्) = அளவுள்ளது. மேருமந்தரம் — இவை பெரிய மலைகள். அவ்வளவு பெரிதாயிருப்பினும். [3]ஸர்வே பாப்மாநஃ ப்ரதூயந்தே (सर्वे पाप्मानः प्रदूयन्ते) = செய்த வினைகளெல்லாந் தொலைகின்றன. [4]ப்ராயச்சித்தம் (प्रायश्चित्तम्) = பாவந் தொலைவதற்காக செய்யப்படும் சடங்கு. [5]ஹத்யை (हत्या) = கொல்லுதல்.

ஆருக்குத் தானிப்படிச் செய்வதென்னில்:—ஆகிஞ்சன்யமும் அநந்யகதித்வமு முடைய விவர்க்கு, மயர்வற மதிநல மருளினன் யவனவனை 'ஆகத்தவனை நிறுத்து மனத்தொன்றிய சிந்தையினர்க்கு=[6]பூர்வாகாதிகளைப்போக்கி, பக்திருபாபன்ன ஜ்ஞானத்தைத் தன் நிர்ஹேதுக க்ருபையாலே யருளினவனைத் 'தன் ஹ்ருதயத்திலே அவனை நிறுத்தவேணும், என்னும் அத்யவஸாயத்திலே யொருமைப்பட்ட மனோரதத்தை யுடையார்க்கு.

அயர்வறு மமரர்க ளதிபதி யாவனொருவன் அவனை—அயராமல் அநிமிஷராய்க் கொண்டு அடிமை செய்ய வீற்றிருக்குமவன் அத்தைவிட்டு, 'வெறித்தண் மலர்ச்சோலைகள் சூழ் திருநாவாயிலே நித்யவாஸம் பண்ணுகிறவனை.

'குறுக்கும் வகையுண்டு கொலோ? கொடியேற்கே=கொடிய வினையேற்கு. வினையைப் போக்காதே வர்த்திப்பிக்கிலும் விடவொண்ணாதபடி யாய்த்து தேசமிருப்பது. பரிமளத்தை யுடைத்தாய், ச்ரமஹரமாய், நித்யவஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாய். 'நாவாயுரைகின்ற நாரணன் நம்பி துயராறு சுடரடி தொழுதெழ. திருநாவாய் குறுக்கும் வகை யுண்டு கோலோ? குறுகப்பண்ணும் விரகேதோ? வென்னுதல்.

'குறுக்கு' மென்று அந்த தேசபாஷை. எம்பெருமானார் திருவடித்தொழ எழுந்தருளாநிற்க, எதிரே வருவாரை 'திருநாவாயெத்தனை தூரமுண்டெ'ன்று கேழ்க்கக் 'குறுக்கு' மென்றார்களாய், அத்தைக்கேட்டு 'ஆழ்வாரிப்பாஷையாலே அருளிச்செய்வதே' யென்று போர [7]வித்தராய் அருளினார்.

---

[6]பூர்வாகாதிகள் (पूर्वाघादिकळू) अघम्=பாபம். தீயசெயல். இது இருவகைப்படும். पूर्व=முந்தியது. उत्तरम्=பிந்தியது என்று. பகவானைச் சரணம்புகுமுன் செய்த பாபங்கள் पूर्वाघम् எனப்படும். இவை சரணாகதியினால் தொலைகின்றன. அதன் பிறகு செய்யப்படும் பாபம் उत्तराघम् எனப்படும். சரணாகதியால் நிர்மலமான மனதையுடைய ப்ரபன்னனுக்கு இந்த வகையான பாபம் நேரிடுவதற்கு இடமே இல்லாமல் போகிறது. என்கை.

[7]வித்தராய் (वित्तराय्)=உள்ளம் பூரித்தவராய்.

'கொடியேற்கே = திருநாவாயில் நாரணன் நம்பி துயராறு சுடரடி தொழுதெழ, என் மனமும் நானும் போந்தின போதே திருநாவாயிலே புகப் பெறுவோமோ? ஹேயப்ரத்யநீகமாய் பரஞ்சோதியான திருவடிகளைக் கொடியேற்குக் குறுக்கும் வகையுண்டாகுமோ? [8]ஆசாலேசமுடையார்க்கு ப்ராபிக்கலாந் தேசமாயிருக்க, ஆசையுங் கண்ணழிவற்றிருக்கப் புகப்பெறாதே நோவுபடுகைக் கடியான பாபத்தைப் பண்ணின வெனக்கு. 'ஆகத்தவனை நிறுத்தும் மனத்தொன்றிய சிந்தையனாய், ஹேயப்ரத்யநீகமாய் நிரவதிக தேஜோரூபமான திருவடிகளைத் தொழுதெழுகைக்கு என் மனனே! 'கொடியேற்குக் குறுக்கும் வகை யுண்டுகொலோ'? என்கிறாராயிற்று.

ஒன்பதாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

—

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

மல்லிகை கமழ்தென்ற லீரு மாலோ!
  வண்குறிஞ் சியிசை தவரு மாலோ!
செல்கதிர் மாலையும் மயக்கு மாலோ!
  செக்கர்நன் மேகங்கள் சிதைக்கு மாலோ!
அல்லியந் தாமரைக் கண்ண னெம்மா
  னாயர்க ளேறரி யேறெம் மாயோன்
புல்லிய முலைகளுந் தோளுங் கொண்டு
  புகலிட மறிகிலந் தமிய மாலோ! (1)

'மல்லிகை கமழ் தென்றலில்' 'நாளேலறியேன்' என்று நித்ய கைங்கர்யம் பண்ணுகைக்கு அடைத்த நாள் 'எப்போதோ'

---

[8]ஆசாலேசம் (आशालेशम्) = சிறிதளவு ஆசை.

வென்று கேழ்க்க, அவனருளிச்செய்யப் பற்றாமையாலே யலமர்ந்த படியை யருளிச்செய்தார்.

ஒன்பதாம் பாட்டு

ஊதுமத் தீங்குழற் கேயுய் யேன்நான்
அதுமொழிந் திடையிடைத் தன்செய் கோலத்
தூதுசெய் கண்கள்கொண் டொன்று பேசித்
தூமொழி யிசைகள்கொண் டொன்று நோக்கிப்
பேதுறு முகஞ்செய்து நொந்து நொந்து
பேதைநெஞ் சறவறப் பாடும் பாட்டை
யாதுமொன் றறிகில மம்ம! வம்ம!
மாலையும் வந்தது மாயன் வாரான். (9

"உயர்வற, என்கிற பாட்டை 'ஊதுமத்தீங்குழற்கே உய்யேன்' என்கிறபாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந்தொடங்கி ப்ரம்மானந்தத்தளவும் இதர விஷய ப்ரவணரா யிருக்கையாலே, தத்தத் போகங்கள் அல்பாஸ்திரங்களாய் [1]ரஸ்யதையுந் தனித்தனியே பலவாகையாலே ரஸ்யதை அஸ்திரமாய் அல்பமாய்த்தது.

அங்ஙனன்றியே, அவர்களிலே யொருவனன இவர், உயர்நலமுடையவன் யாவனொருவன் அவன் 'ஸர்வரஸ:' 'ஸர்வகந்த:' என்று அவன் ச்ருதிப்ரஸித்தனானவனைத் தான் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தையிலும், ஸர்வவித போக்யமு மவனே யென்று, அநந்யார்ஹசேஷையா யனுபவிக்கிற பிராட்டிமார் தசையாய், அவர்கள் பாசுரத்தாலே யருளிச் செய்தனுபவிக்கிறார்.

'மல்லிகை கமழ் தென்றல் ஈருமாலோ' வென்று கீழ்ப் பிறந்த பாதகம் லௌகிகமாகையாலே அல்பமாய்த்து. 'ஊதுமத் தீங்குழற்கே உய்யேன்நான் = இடப்பெண்கள் நடுவே யிவன் குழலூதுகிறபோது, நடுவே தன்னுற்றாமையாலே, சில தன் உக்திகள் சேஷ்டிதங்களாலே வ்யாமோஹங்களைச் சொல்லாநின்று கொண்டு ஊதுகிற பாடும்பாட்டை நினைத்து, ஒன்றும் தரிக்க மாட்டேனென்கிறார்.

---

[1] ரஸ்யதை (रस्यतै) = சுவை.

"ஊதுமத் தீங்குழற்கே உய்யேன் நான் = அவன் மயர்வற மதிநலமருளின பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே, அவன் 'ஸ்வரூப ரூப குண சேஷ்டிதங்களெல்லாம்' [2] கரதலாமலகமாகக் காட்டக் கண்டனுபவிக்கையாலே தரித்து நின்று அனுபவிக்கப் போகிற தில்லை.

"ஊதுமத் தீங்குழற்கே உய்யேன் நான் = கீழிலவை மிகை யென்னும்படி குழலோசையே பாதகமாகிறபடி.

தேவ திர்யக் மனுஷ்ய ஜங்கம ஸ்தாவரங்களுக்கு தத்தத் வசிக்ருதமான பாஷைகளாலே வசிக்ருதமாம்படி ஊதும் வகைகளல்லவிறே! கோபிகளுக் கூதுவது. 'இடையிடையது மொழிந்து ='பிரிந்தேன்' 'ஆற்றேம்' என்றாற்போலே சொல்லு கிற நீசபாஷணங்களை இடையிடையே சொல்லியாய்த்துப் பாடு வது. தாழ்ந்த செயலும் பேச்சும் தன்வாயால் சொல்ல மாட் டாமையாலே 'அது'வென்கிறாள்.

எம்பார் இவ்விடத்தே வந்தவாறே, 'மோருள்ள தனையும் சோறேயோ? தேசிகருங்கூடப் பாசுரமிட்டுச் சொல்லமாட்டாதே 'அது, என்று நிற்க; மத்யஸ்தரான நாமிதுக்கென்ன பாசுர மிட்டுச் சொல்லுவதென் றருளிச் செய்தார்.

அன்றிக்கே; 'அது மொழிந்து = அது தவிர்ந்து. நடுவே நடுவே பாடுகிற பாட்டை விட்டென்னவுமாம்.

'தன் செயித்யாதி = தனக்குத்தானே யாபரணமுமாய், தன் கருத்தை யவர்களுக்கு அறிவிக்க வல்ல திருக்கண்கள்.

அயர்வறு மமரர்க ளதிபதியானவனை 'ஜிதந்தே புண்டரீ காக்ஷ' என்று அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான நித்யஸூரிகள், திருக்கண்களுக்குத்தோற்றுத் துயரறுசுடரடிதொழுது தரித்து நின்றனுபவிக்க மாட்டாமல், ஹேயப்ரத்யநீகமாய், நிரவதிக தேஜோரூபமான திருவடிகளிலே விழுந்து கிடக்குமாப்போலே 'தன் செய்கோலத் தாதுசெய் கண்கள் கொண்டொன்று பேசி=

[2] கரதலாமலகம் (करतलामलकम्) = உள்ளங்கை நெல்லிக்கனி.

பெண்கள் நெஞ்சில் *மறத்தாலே கிட்டக்கடவோ மல்லைலாமென்றிருக்கிறவர்களுடைய கல்லான மனலைக் கலக்கிக் காலைச்சென்று பிடியாநிற்கும் கண்களென்கை. *நம்பி மூத்தபிரான் செய்யுமத்தையடையச் செய்யாநின்றதாய்த்து.

குழலூதுகையிலே மூண்டு, மீண்டு வார்த்தை சொல்லவொண்ணாமையாலே [3]வாக்வ்யாபாரத்தை ஏறிட்டுக்கொள்ளாநிற்குமாய்த்து. பேச்சால் பிறக்கும் ஸ்பஷ்டதை நோக்கால் பிறக்கை.

'மயர்வற மதிநல மருளினன் — அத்தாலே நான் தன்னையுள்ளபடியறிய வல்லனும்படி கடாக்ஷித்தாப்போலே, தன் கடாக்ஷத்தாலே என்னையு முள்ளபடியே தானறிந்தான்.

'தூமொழி யிசைகள் கொண்டொன்று நோக்கி=அழகிய பேச்சோடே கூடின யிசை கொண்டொன்று நோக்கி, அழகிய இசைகளாலே கண்ணாக நோக்கி யீடு படுத்துமாப்போலே யீடு படுத்துகிற இசையோடே கூடச் செய்தேயும், இயலுந் தெரிந்திருக்கைக்கடி, மயற்வற்ற ஜ்ஞான பக்தியை யருளி யிப்படிப் படுத்தினன்.

வாக்வ்யவஹாரமும் [4]நேத்ரவ்ருத்தியும் மாறூடினபடியே. பேதுறுமுகஞ் செய்து நொந்து நொந்து = கேழ்க்கிறவர்களிலும் தன் செவி யணித்தாகையாலே, நாம் ஈடுபடுகிறபடி கண்டால், அபலைகளானவர்கள் என் படுகிறார்களோ? வென்று மிகவும் நோவு பட்டான்.

அயர்வறு மமரர்கள் துயாறு சுடாடி தொழுது அவர்கள் (பா)படுகிறபாட்டைப் 'பேதை நெஞ்சற வறப் பாடும்பாட்டை= பெண்களுடைய நெஞ்சு ஊடலையற மறந்து வந்து பொருந்தும்படி பாடுகிற பாட்டை.

---

[3]வாக்வ்யாபாரம் (वाग्व्यापारम्)=வார்த்தையினால் தன் அபிப்ராயத்தைப் பிறருக்குத் தெரிவித்தல். குழலூதுகையில் இது ஸாத்யமில்லையாகையால் இத்தொழிலைக் கண்கள் ஏற்றுக்கொண்டன என்கை. [4]நேத்ர வ்ருத்தி=கண்ணின் வியாபாரம்.
*மறம்=சினம். *நம்பி மூத்தபிரான்= (கிருஷ்ணாவதாரத்தில்) பகவானுக்கு மூத்த ஸகோதரரான பலராமன்.

ஆதுமொன்றறிகிலம்=என்மனமே! அது பாதகமாகிறபடி எனக்கொன்றுந் தெரிகிறதில்லை.

'அம்ம வம்ம மாலையும் வந்தது=மிகவும் [5]பயாவஹமாம்படி ராத்ரியும் வந்தது. 'உயர்வற, 'மயர்வற, 'அயர்வற, என்கிற வையறுகையன்றிக்கே; எல்லாமொக்க வுண்டாகத் துயர்கள் துடர் வாய்த்து மோஹாந்தகாரம் வந்தபடி. என்மனனே! இனி யிருந்து க்லேசிக்க வேண்டாதபடி யிது முடித்தே விடும் போலே யிருந்தது.

"மாயன் வாரான் = தன்னைப் பிரிந்தார் லஜ்ஜிக்கும்படி தானிழவாளனாய் வந்து காலைப் பிடிக்கும்படிக்கும் ஆச்சர்யபூதன் வருகிறிலன் என்கிறார்.

ஒன்பதாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஒன்பதாம்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

மாலைநண் ணித்தொழு தெழுமினோ வினைகெடக்-
காலைமா லைகம லமல ரிட்டுநீர்
வேலைமோ தும்மதிள் சூழ்திருக் கண்ணபுரத் து
ஆலின்மே லாலமர்ந் தானடி யிணைகளே. (1)

மாலை நண்ணியில் 'சரீராவஸாநத்திலே உம்மையடிமை கொள்ளக்கடவோ' மென்று சௌரிப் பெருமா ளருளிச்செய்ய க்ருதார்த்தராய், 'எல்லாரும் திருக்கண்ணபுரத்திலே ஸர்வேச் வரனாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானை ஆச்ரயிக்கப் பாருங்கோ' ளென்று ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பரரைக் குறித்தருளிச்செய்கிறார்.

---

[5]பயாவஹம் (भयावहम्)=பயத்தைக் கொடுக்கக்கூடியது.

ஐந்தாம்பாட்டு

சரணமா குந்தன தாளடைந் தார்க்கெல்லாம்
மரணமா னல்வைகுந் தங்கொடுக் கும்பிரான்
அரணமைந் தமதிள் சூழ்திருக் கண்ணபுரத்
தரணியா ளன்தன தன்பர்க்கன் பாகுமே. (5)

"உயர்வற என்கிற பாட்டைச் 'சரணமாகும், என்கிறபாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

'உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவாக மோக்ஷத்திலே இச்சையுடையவர்களுக்கு, கர்மஜ்ஞானாதிகளாலே பாபநாசம் பிறந்த பின்பு, கர்மாவஸாநத்திலே மோக்ஷமாயிருக்கும். ஸாதனாந்தர பரராகையாலே விளம்பிக்கும்.

ஸாத்யோபாயநிஷ்டருக்கும், ஸித்தோபாயநிஷ்டருக்கும் நெடுவாசி யுண்டு. ஸித்தோபாயநிஷ்டருக்கு [1]சரீராவஸாநத்திலே மோக்ஷமாகையாலே தத்க்ஷணமாயிருக்கும். தாமுயர்நலமுடையவனைப் பற்றுகையாலே சரீராவஸாநத்தே பெற்றார். உயர்நலமுடையவன் நிர்ஹேதுக க்ருபையினாலே, அகிஞ்சனனாய் அநந்யகதியான தாம் பெற்ற பேற்றை யருளிச் செய்கிறார்.

பக்தி யோகம் கர்மஜ்ஞான ஸஹக்ருத மாகையாலே, இவர்க்கு, த்ரைவர்ணிகாதிகார மாகையாலேயும், தாமதுக்கு [2]க்ஷமரல்லாமையாலே, தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினார் திறத்து, அவன் செய்தருளும்படியை யருளிச் செய்கிறார்.

உயர்வற உயர்நல முடையவன் யவனவன் "சரணமாகுந் தனதாளடைந்தார்க் கெல்லாம் = ஜ்ஞானானந்தாதி கல்யாணகுண பூர்ணனானவன் [3]ஜன்ம வ்ருத்த ஜ்ஞானங்களால் குறைய நின்றார்களேயாகிலும், தன் திருவடிகளை யாச்ரயித்தவர்களுக்கு ரக்ஷகனும்.

---

[1]சரீராவஸாநத்திலே (शरीरावसानम्) = ப்ரபத்தியை (சரணாகதியை)ப்பண்ணுகிற காலத்திய சரீரம் முடிந்தவாறே. [2]க்ஷமர் (क्षमर्) = தகுந்தவர். [3]ஜன்ம - வ்ருத்த - ஜ்ஞான (जन्म - वृत्त - ज्ञान) = பிறப்பு - ஒழுக்கம் - அறிவு.

கீழ் மூன்று பாட்டாலுஞ் சொன்ன [4]பக்தியோகம் [5]அதிக்ருதாதிகாரம். இதில் சொன்ன [6]ப்ரபத்தி [7]ஸர்வாதிகாரமென்கிறது. [8]'ஸமோஹம் ஸர்வபூதேஷு' என்னக்கடவதிறே. பகவத் விஷயந்தான் ஸ்பர்சவேதியாயிக்குமிறே. கைசிகத்தில் பகவத்ஸம்பந்த முடையானொரு சண்டாளனோட்டை ஸம்பாஷணம், பிராம்மணனுடைய ஆசார வைகல்யத்துக்குப் பரிஹாரமாய்த்து. அவ்விடத்தி லெல்லாருஞ் சொல்லுகிற வர்த்தம் இதுவே யாய்த்து.

'மரணமானால் வைகுந்தங் கொடுக்கும் பிரான் = இவன் பக்கலிலே பராங்யாஸம் பண்ணினவன்று துடங்கி யிவனையொழிய தனக்குச் செல்லாமை யுண்டாயிருக்கச் செய்தேயும்; அயர்வறு மமரர்களதிபதியாய் த்ரிபாத்விபூதியும் லீலாவிபூதியு முண்டாயிருக்க செய்தேயும்; இவனுடைய ருசியை யனுவர்த்தித்து, சரீரவிச்லேஷத்தளவும் [9]அவஸர ப்ரதீக்ஷனாய் நின்று, பின்னை யிது வுண்டானால் பரமபதத்தைக் கொடுக்கு முபகாரகன்.

யவனவன், 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' யென்றவன், தன் திருவடிகளைப் பற்றினவன்றே தானிருக்கிற விடத்திலே யவனைக்கொண்டு போய்ச் சேரவைத்துக்கொள்ள வேண்டியிருக்கச் செய்தே, நடுவு யிவனிருக்கும் நாலு நாளு மிவனுக்'கொரு பகலாயிர மூழியா' யிருக்கையாலே 'மரணமானா' லென்கிறது. தனக்கு அசக்தியில்லை. இவனுக்குக் கர்த்தவ்யமில்லை. இவன் ருசியைக் கடாக்ஷித்து நிற்கிற வித்தனை.

---

[4]பக்தியோகம் (भक्तियोगम्) = மோக்ஷத்திற்கு உபாயமாகப் பண்ணப்படும் பக்தி. [5]அதிக்ருதாதிகாரம் (अधिकृताधिकारम्) = அதற்கென்று தனியாகவேண்டிய சிலவற்றைப் பெற்றுள்ளவர்களுக்கே உரியது. [6]ப்ரபத்தி (प्रपत्ति) = (சரணாகதி) அடைக்கலம் புகுதல். [7]ஸர்வாதிகாரம் (सर्वाधिकारम्) = ஒருவிதமான வரையறையுமின்றி எல்லோரும் பண்ணக்கூடியது. [8]ஸமோஹம் ஸர்வபூதேஷு (समोहं सर्वभूतेषु) = உலகத்திலுள்ள பொருள்கள் எதிலும், எவ்விதத்திலும், ஏற்றத்தாழ்வு பாராட்டுபவனில்லை நான். [9]அவஸர ப்ரதீக்ஷன் (अवसरप्रतीक्षन्) = உரிய காலத்திற்காகக் காத்திருப்பவன்.

இப்பாட்டில் 'மரணமானால்' என்றதைக் கொண்டிறே; கீழ்ச் சொன்ன நிரூபண மெல்லாம்.

'அரணமைந்த மதிள்சூழ்= அயர்வறு மமரர்களான நித்யர் முக்தர் பரிய யிருக்கிறவ னிங்கே வந்து நின்றான், அவனுக்கென் வருகிறதோ? வென்று அஞ்சவேண்டாதபடி யிருக்கை.

'தரணியாளன் = பூமிக்கு நிர்வாஹகன். ஹேயப்ரத்ய நீகராய் அபர்யாப்தாம்ருதாசிகளான நித்யஸூரி நிர்வாஹ கனானவன், நித்யஸம்ஸாரிகளுக்கு ரக்ஷகனென்கை.

இப்படி உபய விபூதி நிர்வாஹகன் யாவனொருவன் அவன் துயரறு சுடரடி. சரணாகதன் துயரற, சரண்யன் துயரற்றபடி. சுடரடியும், அடியானைப் பெற்றபின்பு 'பரமமான சுடரடி யாய்த்து.

'தொழுதெழென் மனனே' 'அவன் தனதன்பர்க் கன்பாகுமே = தனக்கு ஸ்நேஹிகளானார்பக்கல் அதிப்ரவண மாமவன். 'தனதன்பர்க்கு அன்புடையனென்று பிரிக்க வொண் ணாதபடி அன்பு தானொரு வடிவு கொண்டாப்போலே யிருக் கிறவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! தொழுது வர்த்தி என்கிறார்.

ஒன்பதாம்பத்து பத்தாந் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம் பத்து விவரணம் முற்றிற்று.

ஸ்ரீ:

பத்தாம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம்

(முதற்பாட்டு—கலிநிலைத்துறை)

தாள தாமரைத் தடமணி வயற்றிரு மோகூர்
நாளு மேவிநன் கமர்ந்துநின் றசுரரைத் தகர்க்கும்
தோளு நான்குடைச் சுரிகுழற் கமலக்கட் கனிவாய்க்
காள மேகத்தை யன்றிமற் றொன்றிலங் கதியே. (1)

'தாள தாமரையில் கிருபாதிகமாக பரமபதத் தேறக் கொண்டுபோய் விடக்கடவ பரமாப்தன் 'காளமேக' மென்று நிச்சயித்துக் காளமேகத்தை வழித்துணையாகப் பற்றுகிறார்.

'உயர்வற' என்கிற பாட்டைத் 'தாளதாமரை' என்கிறபாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் [1]அர்ச்சிராதிகதிக்கு உசாத்துணையாவாருண்டோ? வென்று பார்த்தவிடத்து; ஸ்வர்க்காதி லோகங்களுக்குப் போவாரொழிய இதுக்கான துணை யற்றிருந்தது.

உயர் நலமுடையனுயிருக்கிறவன் யாவனொருவன் மாண மான மஹாபயத்துக்கு, விரோதி நிரஸந சீலனான காளமேக மல்லது துணையில்லை' யென்று அவனை வழித்துணையாகப் பற்றுகிறார்.

'தாளதாமரை = மலையைச் சுமக்குமாப்போலே பூவின் பெருமை பொறுக்கவல்ல தாளை யுடைத்தான தாமரை. சேற்றின் நன்மையாலே உயர்ந்த தாளையுடைய தாமரை என்கை.

இப்படி ஸம்ஸாரமாகிற வன்சேற்றள்ளலிலே *ஹ்ருத் புண்டரீகம் மலருகை அவன் ப்ரஸாதத்தாலே.

---

[1] அர்ச்சிராதிகதி (अचिरादिगति) = சரணாகதி பண்ணினவன் மோக்ஷத்துக்குப் போகும் வழி.

*ஹ்ருத் புண்டரீகம் = ஹ்ருதய கமலம்.

தடமணி = தயரதன் பெற்ற மரதகமணித்தடத்திலே உபயவிபூதிக்கும் ஏகஸூர்யனானவன் கருணையாகிற கிரணம் பட்டலருவது ஹ்ருதயகமலமிறே. தடத்துக்கு அவயவங்களாகிற பூக்களாலே யலங்கரித்தாற்போலே யிருக்குமாய்த்துத் தடம்.

உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த செவ்வடி போலுயர்ந்து காட்டின ப்ரகாசத்தாலே மயர்வற. ஹ்ருதய கமலமானது வன்சேற்றள்ளலில் நின்றும் மயர்வற மதிநலமருளுகையாலே, 'மனனக மலமற மலர்மிசை எழுதரும். [2]யதாஸூர்யஸ் ததா ஜ்ஞானம்' என்றும், மதியாகிற ஜ்ஞானத்தாலே திருவுலகளந்த திருவடிகள் போலேயதுக்குப் போலியா யுயர்ந்துகாட்ட, 'வரம்புற்றகதிர்ச் செந்நெல் = தடமணிவயலிலே கதிர்ச்செந்நெலானது வரம்புற்றுத் தாள் தாள் சாய்த்துத் தலைவணங்கும்.

திருவுலகளக்கிறபோது, '[3]ஸங்கைஸ் ஸுராணா' மென்கிறபடியே தேவர்கள் திரண்டு காலை நீட்டித் தலையை வணங்கக் கைகூப்பித் தெண்டனிட்டாப்போலே யிராநின்ற தாய்த்துச் செந்நெல்களானவை விழுந்து தலைசாய்ந்து கிடக்கிறபோது.

இப்படிப்பட்ட தடங்களையும் வயலையுமுடைத்தான திருமோகூர். ஊரில்போக்யதை யடைய வயலிலே காணுமித்தனை.

நாளுமேவி = நாள்தோறு மத்யாதாரத்தைப் பண்ணி. அவ்வூரில் விடிந்த விடிவுகளெல்லா மிவனுக்கு '[4]ஸுப்ரபாதா ச மே நிசா' என்னும்படியாய்த்திருப்பது. அவ்வூரில் வாஸமொழிய வேறே ப்ரயோஜனத்தைக் கணிசியாதே இதுதானே ப்ரயோஜனமாய் நின்று.

---

[2]யதாஸூர்யஸ்ததா ஜ்ஞானம் (यथासूर्यस्तथा ज्ञानम्) = அறிவு சூரியனைப்போன்றது (அகவிருளையகற்றும் ஆதலின்).

[3]ஸங்கைஸ்ஸுராணாம் (सङ्घैस्सुराणाम्) = இதன் பொருள் தொடர்ந்து நூலிலேயே சொல்லப்பட்டது.

[4]ஸுப்ரபாதா ச மே நிசா (सुप्रभाता च मे निशा) = எனக்கு மங்களமாய்ப் பொழுது புலர்ந்தது.

'அஸுரரித்யாதி = [5]ஆஸுரஸங்கத்தைத் துணித்தடக்கி விரோதியைப் போக்கிக் கொடுபோகவல்லனென்று தோன்றும் படி.

'தோளித்யாதி = இவரிப்போ திதறிந்தபடி என்னென்னில்; "விடுநாதானும் தோடிட்டு வளர்ந்த காதே'ன்று தெரியுமிறே. அப்படியே உயர்வற உயர்நலமுடையவன் யவனவன், மயர்வற மதிநலமருளினன் யவனவன், அயர்வறுமமரர்களதிபதி யவனவன், [6]ஜ்ஞானனந்தைக ஸ்வரூபனாய், [7]ஜ்ஞானகுணகனாய், [8]ஜ்ஞானப்ரதனாய், [9]நித்யமுக்தானுபாவ்யனாய், சதுர்புஜனாய், சங்கசக்ர கதாதரனாய், '[10]கேசவ: க்லேசநாசந:' என்கிறபடியே மெய்வண்ண நறுங்குஞ்சியை யுடையனாய், புண்டரீகாக்ஷனாய், சிவந்து கனிந்த வாயையுடையனாய், திவ்ய ஸௌந்தர்யோபேதனாய், மேகச்யாமளமான நிறத்தையு முடையனா யிருக்கு மவன் துயரறு சுடரடி தொழுதெழும்படி நாளும் மேவிற்றேன்கிறார்.

'சுரிகுழல் கமலக்கண் கனிவாய் = நெடுநாள் ஸம்ஸாரத்தில் பட்ட ஸகல தாபங்களும் மாறும்படி யிருக்குமாய்த்து. பின்னே போகிறவனுக்கு முன்னே போகிறவன் ஒருக்கால் திருக்குழலைக் குலைந்துகொ(து)முந்த; 'கேசவ: க்லேசநாசனமாகவிறேயிருப்பது.

---

[5]ஆஸுரஸங்கம் (आसुरसङ्घम्) = அஸுரர் கூட்டம். [6]ஜ்ஞானனந்தைகஸ்வரூபன் (ज्ञानानन्दैकस्वरूपन्) = ज्ञानम् - அறிவு. आनन्दम्- இன்பம் - இவைகளே கடவுளின் உருவங்கள் என்கை. [7]ஜ்ஞான குணகன் (ज्ञानगुणकन्) = மேற்சொன்ன ஞானமும் ஆனந்தமும் இருவகைப்படும் தர்மம், தர்மி, என்று. அதாவது – தன்மையும், அதையுடைய பொருளும். விளக்கு ஒளிமயமாயிருக்க, அந்த ஒளி ஓரிடத்தில் (விளக்கில்) கனமாயும், மற்ற இடங்களில் இலேசாகவும் இருக்குமாப்போலே. 'விளக்கு' என்று, கனமான ஒளிக்குவியலையும்; 'விளக்கின் ஒளி' என்று, மற்ற இடங்களில் விழுகிற வெளிச்சத்தையும், சொல்வதைப்போல். முன்சொன்ன ஞானம் தர்மி – பிறகு சொன்னது தர்மம் (குணம்) என்கை. [8]ஜ்ஞானப்ரதன் (ज्ञानप्रदन्) = யாவருக்கு மறிவைக் கொடுக்குமவன். [9]நித்யமுக்தானுபாவ்யன் (नित्यमुक्तानुभाव्यन्) = நித்யர் முக்தர்களால் அனுபவிக்கப்படுமவன். [10]கேசவ: க்லேசநாசன: (केशवः क्लेशनाशनः) = 'கேசவன்' துயரங்களைத் தீர்ப்பவன்.

'கமலமித்யாதி = க்ஷுத்ர விஷயங்களினுடைய பொய்யான நோக்கிலும், பொய்யான முறுவலிலு மகப்பட்ட நெஞ்சாரல் திரும்படி; மெய்யான நோக்கும், மெய்யான முறுவலு மிருக்கும் படி சொல்லுகிறது.

'காளமேகத்தை யன்றி மற்றொன்றிலம் கதியே = ராஜாக்கள் போம்போது முன்னே மேகர் நீர் விடுமாப்போலே, முன்னே காளமேகம், ஸௌந்தர்ய ஸௌகந்த்ய கல்யாணாம்ருத வ்ருஷ்டி வர்ஷித்துக்கொண்டு போக, பின்னே குளிர்ந்த வாசுத்தை யனுபவித்துக்கொண்டு போகலாயிருக்கு மாய்த்து. அவனடி நிழல்தடமொழிய 'அன்றி மற்றொன்றிலங்கதியே; காளமேகத்தையொழிய வேறுவழித்துணை, மனமே! யுடையோமல்லோ மென்கிறார்.

பத்தாம்பத்து முதல் திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

கெடுமிட ராயவெல்லாங் கேசவா வென்ன—நாளும்
கொடுவினை செய்யுங்கூற்றின் தமர்களுங் குறுககில்லார்
விடமுடை யரவிற்பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும்
தடமுடை வயலனந்த புரநகர்ப் புகுதுமின்றே. (1)

'கெடுமிடரி'லே, ப்ராப்ய பூமியான பரமபதத்திலேபோனால் செய்யும் அடிமையைத் திருவனந்தபுர வ்யாஜத்தாலே மனோரதித்தார்.

ஐந்தாம்பாட்டு

புண்ணியஞ் செய்துநல்ல புனலோடு மலர்கள்தூவி
எண்ணுமி னெந்தைநாம மிப்பிறப் பறுக்குமப்பால்
திண்ணநா மறியச்சொன்னேஞ் செறிபொழி லனந்தபுரத் து
அண்ணலார் கமலபாத மணுகுவா ரமரராவார். (5)

'உயர்வற உயர்நல'மென்கிற பாட்டைப் 'புண்ணியஞ்செய்து நல்ல' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:— உயர்வற — மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும், ஒருவர்க் கொருவர் [1]சேஷவ்ருத்தி பண்ணி அப்ராப்த விஷயத்தை ஆச்ரயித்து [2]அத: பதித்துப்போக, அங்ஙனன்றிக்கே, ப்ராப்தவிஷயமான உயர்நலமுடையவன் யவனவன் திருவனந்தபுரத்திலே ஸந்நிஹிதனானன். அங்கே ஆச்ரயிக்குமவர்கள் நித்யஸூரிகளாவார்கள். அங்கே நீங்களுமாச்ரயியுங்கோ ளென்கிறார்.

உயர்நலமுடையவன் யாவனொருவனவன், பராத்பரன் இங்கே ஸந்நிஹிதனாகப் 'புண்ணியஞ்செய்து = ஸ்நேஹமாகிற புண்ணியத்தைப் பண்ணி. புண்ணியம் வர்ணாச்ரம தர்மங்களை [3]இதிகர்த்தவ்யதையாக உடைத்தாயிருக்குமிறே.

ஆக, ஸத்கர்ம [4]பலமான பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தை நினைக்கிறது; மயர்வற மதிநலமருளப் பெற்றபடி. '[5]மத்பக்தோ மன்மனா பவ' என்னக் கடவதிறே.

மயர்வற — அவித்யாதிகளைப் போக்கி, மதிநலமான பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தை யருளினவன் யவனவனுக்கு 'நல்ல புனலொடு மலர்கள்தூவி = நல்ல புனலோடு கூடின மலர்களை ப்ரேமபரவசராய்க்கொண்டு பரிமாறி. இத்தால் அர்ச்சனாதிகளைச் சொல்லுகிறது. "[6]மத்யாஜீ மாம் நமஸ்குரு" என்னக்கடவதிறே.

---

[1](शेषवृत्ति) = தொண்டுபுரிதல். [2]அத: பதநம் (अधः पतनम्) = கீழே விழுதல். [3]இதிகர்த்தவ்யதா (इतिकर्तव्यता) = உதவிபுரிவன.
[4]பலம் (फलम्) = பயன்.
[5]மத்பக்தோ மன்மனா பவ (मद्भक्तो मन्मना भव) = என்னை பக்தியுடன் தியானம்செய். [6]மத்யாஜீ மாம் நமஸ்குரு (मद्याजी मां नमस्कुरु) = என்னையே பக்தியுடன் பூஜித்து வணங்கக்கடவாய்.

'எண்ணுமி னெந்தை நாமம்'= த்யானித்து. 'ஸததம் கீர்த்தயந்த:, என்று நின்றதிறே. 'எந்தை நாமம்' இடறினவன் அம்மே' யென்னுமாப்போலே, திருநாமம் சொல்லும்போது [7]அதிகாரி ஸம்பத்தி தேடவேண்டா வென்ன ;

ஜீயர், பட்டரைத் திருநாமம் சொல்லும்போது [8]ப்ரயதனுய்க் கொண்டு சொல்லவேணுமோ? வென்ன; கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறொரு [9]உவழ்க்குழியிலே முழுகிப் போக வேணுமோ? மேலுண்டான நன்மையைத் தருமது, அதிகாரி ஸம்பத்தியைத் தரமாட்டாதோ? வென்றருளிச் செய்தார்.

திருநாமம் சொல்லுகைக்கு ருசியே யாய்த்து வேண்டுவது. [10]ருசித்தவர்களே அதிகாரிகள்.

இப்பிறப்பறுக்கும்= கண்டதிறேயிதினுடைய [11]இழையீடு. கழிழ்ந்து பார்க்கவமையுமே இதினுடைய அகவாயை. கண்டால் தன்னிடையே விரக்தி பிறக்குமிறே.

இப்படி ப்ரத்யக்ஷிக்கச் செய்தேயும் காரியகரமாகா திருக்கிறதிறே வாஸனையின் கனம். [12]மம மாயா துரத்யயா, என்றும், [13]மாயாந் தரந்தி தே, என்னுஞ் சொல்லுகிறபடியே, பாக்யவான்களுக்கு இதனுடைய தோஷதர்சனத்தைப் பண்ணிக் கழற்றிக்கொள்ளுகைக்கும், பாக்யஹீனர்க்கு இதிலே போக்யதா புத்தி மண்ணி யனர்த்தப்படுகைக்கு முடலாம்படி கர்மானுகுணமாக வித்தை யிடையெடுத்துக் காணுமீச்வரன் பண்ணிற்று.

---

[7]அதிகாரிஸம்பத்தி (अधिकारिसम्पत्ति)= அதற்கெனத் தனியாகச் சிலயோக்யதைகள். [8]ப்ரயதன் (प्रयतन्)= ஸ்நானம் முதலிய கடமைகளைச் செய்து முடித்து சுத்தமானவன். [9]உவழ்க்குழி= சிறு குட்டை. [10]ருசித்தவர்கள் (रुचित्तवर्कळ्)= ஆசையுள்ளவர்கள். [11]இழையீடு= இழையிட்டுத் தைத்தல். (நூலால் தைத்து ஒன்றுசேர்க்கப்பட்டது-போன்ற அவயவங்களின் சேர்த்தி.) [12]மம மாயா துரத்யயா (मम माया दुरत्यया)= என் மாயை (யாருக்கும்) கடக்கக்கூடியதன்று. [13]மாயாந் தரந்தி தே (मायां तरन्ति ते)= என்னையே சரணடையுமவர்கள் இம்மாயையைக் கடக்கின்றனர்.

அந்த ஈச்வரன் மயர்வற மதிநலமருளுகையாலே அதின் அல்பாஸ்திரத்வாதிக ளிதுக்கு நிலைநின்ற ஸ்வபாவம். 'இப்பிறப் பறுக்கும் = இப்படி [14]ஹேயதயா ஜ்ஞாதவ்யமான யித்தேஹ ஸம்பந்தத்தை யறுக்கும்.

என் செய்தாலென்னில்; 'திண்ண நாமறியச் சொன்னோம் செறிபொழி லனந்தபுரத் தண்ணலார் கமலபாத மணுகுவார் = அயர்வறு மமரர்களதிபதி யானவன், நித்யவிபூதியிலும் போந்து செறிபொழி லனந்தபுரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற அண்ணல். செறிந்த சோலையையுடைத்தான திருவனந்த புரத்திலே வந்து கண்வளர்ந்தருளுகிற ஸ்வாமியுடைய கமலபாத மணுகித் துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே.

'கமலபாதமென்றது, நிரதிசய போக்யமான திருவடிகளைக் கிட்டு மவர்களுக்குத் துயரறுக்கும்—பிறப்பறுக்கும் என்றபடி. சுடரடியானது அப்பா லமரர்க்கும் அமரரானவர்களுக்கும், இப் பிறப்பறுக்கு மென்ன வேண்டாதே; தேஹத்தைப் பரிக்ரஹித்து அடிமைசெய்கிறவர்களும், திருவனந்தபுரத்திலே நித்யர், முக்தர் முதலானோரும் அடிமை செய்யக் கண்வளர்ந்தருளுகிறவன் துயரறு சுடரடிகளை யணுகுவார் = ஆச்ரயித்தவர்கள்; 'அமரராவார் = அமரர்க்கு மமரராவார். 'திண்ணம் நாமறியச் சொன்னோம் = அவனாலே மயர்வற மதிநலமருளப்பெற்ற நாம், தேஹாத்மா பிமானிகளான நீங்களு மறியும்படி உங்களனர்த்தத்தைப் பார்த் துச் சொன்னோம். 'அண்ணலார் கமலபாத மணுகுவாரமர ராவார்.

பத்தாம்பத்து இரண்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[14]ஹேயதயா ஜ்ஞாதவ்யம் (हेयतया ज्ञातव्यम्) हेयम् = இகழக் கூடியது. 'விடவேண்டியது' ज्ञातव्यम् = (அதற்காகத்) தெரிந்து கொள்ளவேண்டியது.

ஸ்ரீ:

பத்தாம்பத்து மூன்றாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு :—(எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

வேய்மரு தோளிணை மெலியு மாலோ!
மெலிவுமென் தனிமையும் யாதும் நோக்காக்-
காமரு குயில்களுங் கூவு மாலோ!
கணமயி லவைகலந் தாலு மாலோ!
ஆமரு வினநிரை மேய்க்க நீபோக்
கொருபக லாயிர மூழி யாலோ!
தாமரைக் கண்கள்கொண் டீர்தி யாலோ!
தகவிலை தகவிலை யேநீ கண்ணா! (1)

வேய்மரு தோளிணையில் மனோரதித்தபோதே ப்ராப்ய தேசத்திலே புகப்பெறுமையாலே இன்னமு மிச்சரீரத்திலே வைக்கில் செய்வதென்னென்று அதிசங்கைபண்ண, ஸர்வேச்வரன் தெளிவிக்க வதிசங்கை தீர்ந்தார்.

ஐந்தாம்பாட்டு

பணிமொழி நினைதொறு மாவி வேமால்
பகல்நிரை மேய்க்கிய போய கண்ணா!
பிணியவிழ் மல்லிகை வாடை தூவப்
பெருமத மாலையும் வந்தின் றாலோ!
மணிமிகு மார்வினின் முல்லைப் போதென்
வனமுலை கமழ்வித்துன் வாயமு தந்தந் து
அணிமிகு தாமரைக் கையை யந்தோ!
அடிச்சியோந் தலைமிசை நீய ணியாய். (5)

உயர்வற, என்கிற பாட்டைப் 'பணிமொழி,' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத் தளவும் [1]அர்த்த காமோபேதராய், அத: பதித்தார்கள். அதிலே தமக்கு பகவத் கடாக்ஷத்தாலே பகவதநுபவ மிகுந்தது.

பணிமொழி=ப்ரமாணங்களோ ஆச்ரித பரதந்த்ரனென்னா நின்றது. இதுக்கு [2]விச்லேஷம் வரில் செய்வதென்னென்று தம் விச்லேஷ[3]பீருத்வத்தை அவன்தனக்கே யருளிச் செய்கிறார்.

உயர் நலமுடையவன் யவனவன் ஸௌலப்யாதி குணபூர்ணனவன் ஸந்நிஹிதனாயிருக்க யிப்படிப் படுகிற தென்னென்ன;

நீ பசுமேய்க்கப் போகக் கடவையான பின்பு, நீயும் போனாயே; நீ போனால் நலியக்கடவ [4]ஸந்த்யாதி பதார்த்தங்களாலே நலிவுபடுகிற வென்னை யாச்வஸிப்பித் தருளவேணுமென்கிறாள்.

உயர்வற உயர்நலமுடைய நீ 'பணிமொழி நினைதொறு மாவி வேமால்=நீ பிரிவை நினைத்துப் 'பிரியே'னென்று சொல்லுகிற உன் வார்த்தைபோலே, உன்னைப் பிரியாமைக்காகச் சொல்லுகிற வார்த்தையல்ல. உனது கள்வப்பணிமொழியாகையாலே பொய். இது அநுபவத்துக்குப் பாசுரமிட்டுச் சொல்லுகிறதாகையாலே மெய்யென்ன;

'நான் போனேனோ?' வென்ன; 'பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா = பகலெல்லாம் பசுமேய்க்கப் போனாய். கண்ணா!' வென்று ஸம்போதித்துரைத்து அவன்தனக்கே 'நீ போனா' யென்கிறாளிறே. மேய்க்கிய = மேய்க்கப்போனாய்.

நீ யிதறிந்தபடி யென்னென்ன; நீ மயர்வற மதிநல மருளினாயே அத்தாலே அவித்யாதிகள் நசித்தது. ஸஹேதுகமல்லாமை

[1]அர்த்தகாமோபேதர் (अर्थकामोपेतर्) = பொருள் – இன்பம் – இவைகளிலேயே ஊறித்திளைத்தவர். [2]விச்லேஷம் (विश्लेषम्) = பிரிவு. [3]பீருத்வம் (भीरुत्वम्) = பயம். [4]ஸந்த்யா (सन्ध्या) = (இங்கு) மாலைவேளை.

யால் அந்த அருள் [5]பக்திபுரஸ்ஸரமான ஸம்சயத்தைத் தீர்க்க வேண்டாவோ?

என்னைப் ‘பிணியவிழ் மல்லிகை வாடைதூவ = நீ போனால் பாதகமாகக்கடவ மல்லிகைகமழ் தென்றல் துடக்கமானவை மறுவலிடுகையாலே நீ போனது அருசிதம் என்கிறாள்.

கட்டவிழுகிற மல்லிகையினுடைய மணத்தை வாடையானது தூவாநின்றது. ராவணன் ஸந்யாஸி வேஷத்தைக் கொண்டு வந்து தோற்றினாற்போலே, வாடையானது குளிர்க்காற்றாய் வந்து நலியாநின்றது.

[6]பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்ட:’ மத்தகஜமானது முன்னே தலைப்பறை கொட்ட வருமாப்போலே, வாடையை முன் நடக்க விட்டுக் கொண்டாய்த்து மாலை வருகிறது. இவ்வளவு மதிப்பு படியாலே கூட்டுப்படையாய் வாராநின்றதாய்த்து.

வந்தின்றாலோ = வந்ததுகிடாய்! உடம்பிலே பட்டொழிந்தது கிடாய்! பகதத்தன் விட்ட அஸ்த்ரத்துக்கு அர்ஜுனனைப் பின்னேயிட்டு உன்மார்பிலே ஏற்றாப்போலே, நடுவே புகுந்து கட்டிக்கொள் கிடாய்.

பெரிய [7]கிளர்த்தியை யுடைய மாலையானது வருமென்றஞ்சுகிறதல்ல, வந்தது.

ஆனால் செய்யவடுப்பதென்னென்ன;

நீ அயர்வறு மமரர்களதிபதி — அயர்வற்று அனுபவிப்பார்க்கு அபர்யாப்தாம்ருதனான நீதான் யாவனொருவன் ச்ருதிப்ரஸித்தனானவன் ‘மணிமிகு மார்பினில் = ஸ்ரீ கௌஸ்துப மணி நிறம் பெறும்படியான மார்பென்னுதல் — திருமார்படங்க ஸ்ரீ கௌஸ்துபத்தில் புகரோயாம்படி யிருக்குமென்னுதல்.

---

[5]பக்திபுரஸ்ஸரம் (भक्तिपुरस्सरम्) = பக்தியினால் வருவது.

[6]பத்மகேஸரஸம்ஸ்ருஷ்ட: (पद्मकेसरसंसृष्ट:) = தாமரைப் பூவினுடைய தாதுக்களோடு கலந்தது. [7]கிளர்த்தி = கொந்தளித்தெழுகை.

கலவியிலுங் கழற்ற வேண்டாதபடியிறே ஸ்ரீ கௌஸ்துபமிருப்பது. '[8]நிரதிசய ஸுகஸ்பர்ச னென்னக்கடவதிறே.

இவளுடைய ஸ்த்ரீத்வத்துக்கு ஸ்தனம் போலேயாய்த்து, அவனுடைய மார்பில் கௌஸ்துபம். புருஷோத்தமத்வ லக்ஷணமிறே. அம்மார்பில் முல்லை மாலையாலே என்னுடைய அழகிய முலையை பரிமளிதமாக்கி. ஸ்ரீகௌஸ்துபத்தோடு தோளில் மாலையோடு வாசியன்றிக்கே போகோபகரணமாய்த்து.

தோளில் முல்லை மாலையின் பரிமளத்தை என் முலைக்காக்க வேணுமென்கையாலே [9]அக்ராம்யமாகக் கலவியைச்சொன்னபடி. குளித்துப் பூச்சூட விருப்பாரைப் போலே யாய்த்து இம்முலைகள். இவை [10]பிரம்மசாரி முலையாகாமே, அம்மாலையில் பரிமளத்தாலே யிவற்றை வாஸிதமாக்காய்.

அம்மாலையில் பரிமளமிங்குற் றுங்குமதாகப் பண்ண வேணும். அம்மாலையின் பரிமளம் முலையிலே யாம்போது கலவியை யொழிக்கக்கூடாதிறே. 'கிம்ஸுகம் வனமாலாஸம் மஹ்ய' என்றாற்போலே.

உன் வாயமுதந்தந்து=ஸம்ச்லேஷரஸம் [11]உன்மஸ்தகமாக மிக்கவாறே, தாரணார்த்தமாகச் சில பேச்சுண்டிறே பேசுவது. அப்பேச்சாதல், அன்றிக்கே—வாகம்ருதத்தைச் சொல்லவுமாம். பேச்சென்று நிர்வஹித்துப் போருவது.

'அணிமிகு – இத்யாதி. உன் போக்கை நினைத்து, நா நீர் வருகிறதில்லை. அதுக்குப் பரிஹாரமாகவும், நான் உன் துயராறு சுடரடி தொழுதெழும்படியும், என் நெஞ்சுக் கினிமை பிறக்கும்படியும், ஹேய ப்ரத்யநீகமாய், நிரவதிக தேஜோரூபமான திருவடிகளையே தொழுது வர்த்தி' என்று உன்னபயஹஸ்தமான

---

[8]நிரதிசயஸுகஸ்பர்சன் (निरतिशयसुखस्पर्शन्) = அளவிடற்கரிய மென்மையுடையவன். [9]அக்ராம்யம் (अग्राम्यम्) = தாழ்ந்ததல்லாதது. [10]ப்ரம்மசாரி (ब्रह्मचारी) = இல்லறத்தில் புகாதவன். [11]உன்மஸ்தகம் = தலைக்குமேல் பெருகாநின்றது. (மிகவும் அதிகமானது)

'அணிமிகு தாமரைக்கையராய், திவ்யபூஷணலங்க்ருதமாய், நிரதிசய போக்யமாயிருந்துள்ள திருக்கைகளை என் தலையிலே வைக்கவல்லையே. நா நீர் வருகைக்கு மிவர்களுடைய முந்திகைப பழ மிருக்கிறபடி.

அணிமிகு தாமரைக்கை = ஆபரணம் மிகை யாம்படி, 'சர்வபூஷண பூஷார்ஹா:' என்கிறபடியே தனக்குத்தானே ஆபரணம் என்கிற கை. பசுமேய்க்கப் போன நீ வருமளவும், எனக்குத் தாரகமாக வுன் கையிலாபரணத்தைத் தரவேணும், என்றவர்களுக்காய்த்து வாங்கி யிட்டுவைக்குமிறே. பசுமேய்க்கப் போகைக்குத் தானைப்பித்தபடியைச் சொன்னுளாகவுமாம். அத்தைச்செய்து அவன் போகப் புக்கவாறே சிதிலையாகிறுளிறே.

'தாமரைக் கையை யந்தோ! அடிச்சியோந்தலைமிசை நீ யணியாய் = சேந்து குளிர்ந்த தண்ணீர் விடாயர்க்கு வாராய்' என்று சொல்ல வேண்டுவதே யுனக்கு.

அடிச்சியோம்—உன் துயரறு சுடரடி தொழுகையே நிரூபக மான வடியோம் – உன்னழகுக்குத் தோற்ற தோல்வி சொல்லு கிருள்.

'தலைமிசை நீ யணியாய் = ஆபரணத்துக் காபரணம்போலே யாய்த்திவள் தலைக்கும். 'பாதபங்கயமே தலைக்கணியா' யென்பது. தாமரைக்கையை யந்தோ! அடிச்சியோந் தலைமிசை நீ யணியாய்' என்பதாய்க் காலைக் கையைப் பிடித்துக் காரியங்கொள்ளப்

---

[12] ஸர்வபூஷணபூஷார்ஹா: (सर्वभूषणभूषार्हाः) = அணிகள் யாவற் றுக்கும் அழகு கொடுக்கவல்லவை. இராமலக்ஷ்மணர்களுடைய அழகிய திருக்கைகளைப்பார்த்துச் சொல்லப்பெற்ற வார்த்தையிது. கைகளில் வழக்கமாய் அணிந்துகொள்ளப்படும் ஆபரணங்களெல்லாம் இந்தக் கைகளிலன்றோ அணியத் தகுந்தவை. அப்படிச் செய்வதனால் அவைகள் தாம் சிறப்புற்று விளங்கும் என்று சொல்லும்படி இருக்கிறது, இக்கைகளின் அழகு. அவ்வளவேயன்றி அவைகளில்லாமையால் கைகளின் அழகுக்கொரு குறைவுமில்லை என்கிறபடி.

பார்க்கிறார். '[13]மதீயமூர்த்தானமலங்கரிஷ்யதி' என்றிறே யிவர் களிருப்பது.

இந்நிர்ப்பந்தங்களெல்லாமாரறிவார்? வேணுமாகில் எடுத்து வைத்துக் கொள்ளாய்-என்ன;

காலன்கொண்டு மோதிர மிடுவாரைப் போலே, என் பேற்றுக்கு நான் யத்னம் பண்ணுமவளோ? நீயே மேல்விழுந்த தாகக் கொள்ளுமவளன்றோ? நான். என்றும் அத்தலையாலே பெறவிருக்குமவளிறே யிவள்தான்.

அணியாய் = ஆற்றாமை மிக்கதென்று அவ்வழக்குச் செய்யோங்காண். நீ செய்வற்றை நாங்கள் செய்யோங்காண். நீ யஞ்சேலென்ற கையாலே நிர்ப்பயனுக்கிச் சுடரடி தொழுதெழப் பண்ணி யருளவேணு மென்கிறார்.

பத்தாம்பத்து மூன்றுந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு :—(தரவுகோச்சகக்கலிப்பா)

சார்வே தவநெறிக்குத் தாமோ தரன்தாள்கள்
கார்மேக வண்ணன் கமல நயனத்தன்
நீர்வானம் மண்ணெரிகா லாய்நின்ற நேமியான்
பேர்வா னவர்கள் பிதற்றும் பெருமையனே. (1)

---

[13]மதீயமூர்த்தானமலங்கரிஷ்யதி (मदीयमूर्धानमलङ्करिष्यति) =(உன் திருவடிகள்) என் தலையை யென்றுகோலோ? அலங்காரம் பண்ணும் நாள்.

'சார்வே தவநெறிக்கு. பத்துடையடியவரில் சொன்ன பக்தி, [1]ஸ்வஸாத்யத்தோடே பொருந்தினபடியை யருளிச் செய்தார்.

'உயர்வற, என்கிற பாட்டைச் 'சார்வே தவநெறி, என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவாக ஸாதனாந்தரங்களாலே, பிரும்மாதிகள் ப்ரயோஜனாந்தரங்களாலே உயர்வுந் தாழ்வுமா யற்றார்கள்.

அவர்களிலுந் தாழ்வான யிவர், 'ப்ராப்யப்ராபகங்கள் உயர்வற உயர்நலமுடைய ஸர்வஸ்மாத் பரனே' யென்றிருக்கிறவிவர், உயர்நலமுடையவனைப் பற்றிப் பிரிய நினைவின்றிக்கே யிருக்கப் பிரிந்தானாக வதிசங்கை பண்ணி, 'உம்மை யொருநாளும் பிரியோங்காணும்' என்றவன் [2]ஆச்வஸிப்பிக்க; அத்தாலே தரித்து ப்ரீதரானார்.

உபயவிபூதியுக்தனாயிருந்து வைத்து ஆச்ரிதஸுலபனானவன் திருவடிகள் பக்தியோகலப்ய மென்கிறார். 'உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் 'சார்வே தவ நெறிக்குத் தாமோதரன் தாள்கள். உயர்நலம், ஜ்ஞானானந்த ஸ்வரூபனாய், ஜ்ஞான குணகனாய், ச்ருதிப்ரஸித்தனானவன். 'சார்வே தவநெறி' என்றும், 'பத்துடையடிவர்க்கெளியவன்' என்றும் 'எளிவருமியல்வினன், என்றும் சொன்னவன் திருவடிகள் சார்வென்கிறார். சார்வு = ப்ராப்யம். அங்கு அவன் சார்வென்கிறார். இங்கு 'சார்வே என்று [3]அவதாரிக்கிறார்.

தவநெறிக்கு = பக்தி மார்க்கத்துக்கு. தபோமார்க்கமென்றபடி. 'வணக்குடைத் தவநெறி' என்றாரே யங்கே; அத்தைச் சொல்லுகிறார். '[4]நமஸ்யந்தச்ச மாம், என்று நமஸ்ஸைக் [5]கரண சரீரமாக வுடைத்தா யிருக்குமிந்த பக்தி.

---

[1]ஸ்வஸாத்யம் (स्वसाध्यम्) = தன்னால் ஸாதிக்கப்படவேண்டியது. [2]ஆச்வஸிப்பித்தல் (आश्वासनम्) = தேற்றுதல். [3]அவதாரிக்கிறார் (अवधारिकिरार्) = அறுதியிடுகிறார். [4]நமஸ்யந்தச்ச மாம் (नमस्यन्तश्च माम्) = என்னை வணங்கிக்கொண்டும். [5]கரண சரீரம் (करणशरीरम्) = கரணம் = கருவி (உபாயம்) அதன் வடிவம்.

'தவநெறி' யென்னுங் காட்டில், பக்தியைச் சொல்லித் தாமோவென்னில்; யஸ்ய [6]ஜ்ஞானமயந்தப: என்றும் ஜ்ஞான விசேஷமான பக்தியைத் தபஸ்ஸென்றுஞ் சொல்லுகிறது.

அன்றிக்கே யிவனொரு ப்ரணமத்தைப் பண்ணினால் 'இவன் நம்மை நோக்குக்*குவாலாக வருந்தினான்' என்றிது தன்னைப் பெரிய காயக்லேசமாக நினைத்திருக்கு மவன் கருத்தாலே சொல்லித்தாகவுமாம்.

தாமோதரன் தாள்கள் = 'உரலினோடிணைந்திருந்தேங்கிய எளிவென்றத்தைச் சொல்லுகிறாரிங்கு. யசோதாதிகள் கையிலே கட்டுண்டு தழும்புசுமந்ததுவே திருநாமமா யிருக்குமவனிறே.

யசோதாதிகள் கட்டுண்பாடுனொருவ னனபின்பு, அவனை யுகப்பா ரவன் காலைக் கட்டிக்கொள்ளு மத்தனையிறே.

அப்படிப்பட்டவன் ஸுலபனுகிறான் யவனவன் என்னில்; மயர்வற மதிநலமருளினன் யவனவன் 'கார்மேகவண்ணன் கமல நயனத்தன் = தன்னுடைய மேகச்யாமமான குளிர்ந்த வடிவையும், கடாக்ஷாம்ருத வ்ருஷ்டியை வர்ஷிக்கிற விகஸிதமான திருக்கண் களையும், பக்தி ரூபாபன்ன ஜ்ஞானத்தாலே விசதமாகக் காட்டினபடி. [7]விலக்ஷண விக்ரஹ யுக்தனாய் உபய விபூதி நாதனானவன் என்கிறார்.

'கார்மேகவண்ணன் = இந்த பக்தி விளையும்படி க்ருஷி பண்ணியும், வர்ஷித்து ருசிக்கு உத்பாதகனாய் இன்பத்தை வளர்த்து, அது பக்குவமானால் பரஜ்ஞானத்துக்கு ப்ராப்யமும் ஆன வடிவை யுடையவன்.

"காதல் கடல் புரைய விளைவித்த காரமர்மேனியிறே. கார் காலத்து மேக மென்னுதல், கறுத்த மேக மென்னுதல், புயல் கறுத்த நிறத்தனன்' என்றத்தைச் சொல்லுகிறார்.

---

[6]யஸ்ய ஜ்ஞானமயம் தப: (यस्य ज्ञानमयन्तप:) = எவனுடைய தவம் ஞானமயமானதோ. *குவாலாக = அதிகமாக. [7]விலக்ஷணவிக்ரஹம் = அற்புதமான திருமேனி.

'கமல நயனத்தன் = அவ்வடிவுக்குப் [8]பரபாகமாய், அகவாயில் வாத்ஸல்ய ப்ரகாசகமான குணங்களுக்கு ப்ரகாசக மிறே திருக்கண்கள். அனுக்ரஹ மடையத்தோற்றுவது கண் வழியேயிறே. வாத்ஸல்ய ப்ரகாசகமான வடிவழகே யன்றிக்கே, மேன்மை கண்டு மேல்விழ வேண்டுமவனுய்த்து.

அயர்வறு மமரர்களதிபதி—தத்வ்யதிரிக்தங்களில் வாஸனையு மில்லாத நித்யர் முக்தர்களைச் சந்தானுவ்ருத்தி கொள்ளுகிறவன் யவனவன் = நீர்வானம் மண்ணெரி காலாய் நின்றநேமியான் = விக்ரஹ வைலக்ஷண்யமே யன்றிக்கே, [9]ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. யாவையும் யாவருந் தானுமமைவுடை நாரண னென்றதைச் சொல்லுகிறது என்று [10]நிகமிக்கிறுர்.

ப்ருதிவ்யாதி பஞ்ச பூதங்களையும் சொன்ன வித்தாலே அவற்றின் காரியமான தேவாதி விசேஷங்களையும் நினைக்கிறது. இத்தால் லீலா விபூதியைச் சொல்லுகிறது.

'நேமியான் = கையும் திருவாழியுமாய் நித்ய விபூதியிலே யிருக்குமிருப்பை, அயர்வறு மமரர்கள், கையுந் திருவாழியு மான வபர்யாப்தாம்ருதாசிகளுக்குப் போக்யமானவனுக்கு அடையாளமு மதுவே நிரூபகமும்.

இப்படி உபயவிபூதியுக்தனுடைய துயரறு சுடரடி தொழுது 'பேர் வானவர்கள் பிதற்றும் பெருமையனே = இவ்வருகில் ஆக்களுன தேவாதிகளன்றிக்கே, அவ்வருகில் பெருமக்கள் எத்தும்படியான பெருமையை யுடையவன் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே.

எனக்குக் காரணமான நெஞ்சே! வானவர்கள் பேர்பிதற்றும் பெருமையனைத் தொழுதெழு. இங்கும் ருசியுடையாரும் பிதற்று மித்தனை.

---

[8]பரபாகம் (परभागम्) = வேறுபாகம். [9]ஸ்வரூப வைலக்ஷண்யம் (स्वरूपवैलक्षण्यम्) = பகவானுடைய ஸ்வரூபம் மற்றவைகளைப் போலன்றிக்கே முற்றிலும் வேறுபட்டதாயிருக்கை.
[10]நிகமிக்கிறுர் = முடிக்கிறுர்.

கார்மேக வண்ணனாய், கமலநயனத்தனாய், நீர்வானம் மண்ணெரிகாலாய்நின்ற நேமியனாய், பேர்வானவர்கள் பிதற்றும் பெருமையை யுடையனா யிருந்துவைத்துத் தாமோதரனானவன் திருவடிகள் தவநெறிக்குச் சார்வே. இது நிச்சிதம்.

பத்தாம்பத்து நான்காந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(வஞ்சித்துறை)

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்—
திண்ணம் நாரணமே. (1)

'கண்ணன் கழலிணை'யில் 'வீடுமின்முற்றத்திலே' 'வண்புகழ் நாரணன் திண்கழல் சே'ரென்று துடங்கினபடியையருளிச் செய்து தலைக்கட்டி, பக்தியினுடைய ப்ரகாரமிருக்கும்படியை யருளிச் செய்து பரோபதேசத்தைத் தலைக்கட்டினார்.

ஏழாம்பாட்டு

மாதவ னேன்றேன் று—
ஓதவல் லீரேல்—
தீதொன்று மடையா—
ஏதம்சா ராவே. (7)

"உயர்வற, என்கிற பாட்டை 'மாதவனென்றென்று' என்கிற பாட்டு விவரிக்கிறது எங்ஙனேயென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் மோக்ஷ ஸாதனங்களாக கர்மஜ்ஞானாதிகளை அநுஷ்டிப்பாரும், பக்தி ப்ரபக்திகளை யநுஷ்டிப்பாருமாகையாலே காலவிளம்பமாயதில் எவ்வளவு குறையிலும் பலிப்பதில்லை.

தமக்கு பக்தி, ஆர்ஜித்துவந்த பக்தியுமன்றிக்கே—அர்த்தித்துப்பெற்ற பக்தியுமன்றிக்கே — அருளின பக்தியாகையாலே; உயர்நல முடையவன் யவனவன்—ஆனந்தாதி குணங்களாலே பரிபூர்ணனான ஸர்வேச்வரன் 'நாளேலறியே னெனக்குள்ளன நா' னென்ற யிவர்க்கு, 'மரணமானால்' என்றிறே நாளிட்டுக் கொடுத்தது.

அத்தனை க்ரமம் பொறுக்கமாட்டாதே ஈச்வரன் தம்மைக் கொண்டுபோகையிலே த்வரிக்கிறபடியைக்கண்டு, 'மரணமானா' லென்றவளவும் பொறுக்கிறிலன் — நெடுநாளாய்த் தோற்றி ஈச்வரன் செய்கிறபடி நமக்குத் தவிராதாயிருந்தது. இனி யிவர்களிந்த ப்ரபத்தி மார்க்கத்தை இழக்க வொண்ணாது. இத்தையுபதேசிப்போ'மென்று, தமக்கொன்றும் பிறர்க்கொன்று மாகாதே த்வயத்தை யுபதேசிக்கிறார்.

உயர்வற உயர்நலமுடையவன் யவனவன் 'மாதவன் என்றென்று ஓதவல்லீரேல் = உயர்நலமுடையவன் யவனவன் மாதவன், ஸ்ரீயபதியானவனை [1]ப்ரீதிப்ரேரிதரா யாச்ரயிக்கவும், இனிமையோடு திருநாமம் சொல்லவும் மாட்டாதார்; அந்தஃபுர பரிகாரமான வார்த்தையைச் சொல்லவே [2]பூர்ணோபாஸநத்தில் பலம் ஸித்திக்கு மென்கிறார்.

ஜ்ஞானானந்த ஸ்வரூபனாய், ஜ்ஞானகுணகனாயிருந்துள்ள ஸ்ரீயஃபதியானவனை 'மாதவ' னென்று த்வயமாக்கி 'நாராயண சப்தத்தோடே யித்தைச் சேர்த்துச் சொல்லப் பாருங்கோள்.

'நாரண' மென்றாரே கீழே. தமக்கு ஈச்வரன் 'மயர்வற மதிநல மருளினவன் யவனவன், 'மாதவன் — ஸ்ரீயஃபதியான

---

[1]ப்ரீதி ப்ரேரிதர் (प्रीति प्रेरितर्) = அன்பி(பக்தியி)னால் தூண்டப்பட்டவர். [2]பூர்ணோபாஸனம் (पूर्णोपासनम्) = குறைவின்றிச் சரிவர செய்யப்பட்ட தியானம்.

நாராயணன், தமக்கு பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தை யருளி சரணாகதி வழியிலே நிறுத்தினான்.

ஓதவல்லீரேல் = உங்களுக்கு ருசியில்லையாகிலும் பரப்ரேரிதராய்க்கொண்டு ஓதி நிரந்தரமாகச் சொல்ல வல்லீ கோளாகில். அயர்வறு மமரர்களதிபதியானவன் யாவனொருவன் அவன், அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தர் பரிசர்யை பண்ண, 'ஒண் டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்டசதிர் = மாதவனென்றென்று ஓதுகையே சதிர்.

'தீதொன்றுமடையா=உத்தராகத்துக்கு நெஞ்சு செல்லாது. துயரறு சுடரடி தொழுகையாலே பூர்வாகமற்றது.

'ஏதஞ்சாராவே — என்கையாலே உத்தராகத்துக்கு [3]அச்லேஷமேயாம். 'ஏதஞ்சாராவே-பூர்வாகத்தை விஸ்மரிக்கும் உத்தராகத்துக்கு நெஞ்சு செல்லாது. 'தொழுதெழென்மனனே.

கீழ்ச் சொன்ன திருமந்த்ரமும், இப்பாட்டில் சொன்ன ஸ்ரீமத் பதமும், தனித்தனியே, பக்தி ப்ரபத்திகளுக்கு வாசகமா கையாலே, பேற்றுக்கு (அ)பர்யாப்தமாய், நிரதிசய போக்யமான பின்பு, இரண்டையுஞ் சேர்த்துச் சொன்னவர்களுக்குப் பேறு சொல்லவேண்டாவிறே! என்று தன் திருவுள்ளம் போல்வார்க் குபதேசித் தனுபவிக்கிறார்.

பத்தாம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து ஆறுந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(தரவு கோச்சகக்கலிப்பா)

அருள்பெறுவா ரடியார்தம் அடியனேற் கு-ஆழியான்
அருள்தருவா னமைகின்றா னதுநமது விதிவகையே
இருள்தருமா ஞாலத்து ளினிப்பிறவி யான்வேண்டேன்
மருளொழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றா னடிவணங்கே. (1)

---

[3] அச்லேஷ: (अश्लेषः) = ஸம்பந்தமின்மை.

'அருள் பெறுவார்'ரில் தம்மை விக்ரஹத்துடனே திருநாட்டிலேகொண்டு போகைக்காக அவன் வந்து த்வரித்து [1]அவஸர ப்ரதீக்ஷனாயிருக்கிறபடியை யருளிச்செய்தார்.

"உயர்வற, என்கிற பாட்டை 'அருள்பெறுவார், என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற வென்று மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் [2]தேவதாந்தர ஸாதனாந்தர ப்ரயோஜநாந்தரங்களிலே போயிற்று. இவர்களுக்குத் தண்ணியரான விவர் பெற்ற பேறு சொல்லுகிறது.

உயர்வற உயர்நலமுடையவன் யாவனொருவன் இவர்க்குப் 'பொய்ந்நின்ற ஞானந்தொடங்கி யிவ்வளவும்வர, ஈச்வரனை ஆழ்வார் பின்துடர்ந்தபடி சொல்லிற்று. இது தொடங்கி, ஆழ்வாரை ஸர்வேச்வரன் பின் துடருகிறபடி சொல்லுகிறது.

உயர்நல முடையவனுடைய'வருள் பெருவாரடியார் = ஈச்வரன் நம்மை விஷயீகரிக்கையிலே ஒருப்படாநின்றான். அது தானும் நாம் விதித்தபடி செய்வதாக விராநின்றான்.

'உயர்நலமுடையவனருள் பெறுவார் அடியார் தம்மடியனேற்கு = ஹேதுதானிருக்கிறபடி. ஸர்வேச்வரன் பண்ணும் [3]ப்ரஸாதாதிசயத்துக்கு விஷயபூதராயிருப்பார் சிலருண்டு; அவர்கள் நமக்கு ஸ்வாமிகள். அவர்கள் பக்கல் அவன் பண்ணின வருள் நம்மளவும் வர வெள்ளங் கோத்தது காணென்கிறார்.

எல்லாரு மடியாரன்றோ வென்னில்; "[4]தானஹந்த்விஷத:' என்று பிரஜை தீம்பிலே கைவைத்தால், மாற்றைக்கொண்டு [5]வாய்வாயென் பாரைப்போலே அவன்தான் சீறவேண்டும்படியிருப்பார் சிலருண்டு.

---

[1]அவஸர ப்ரதீக்ஷன் (अवसर प्रतीक्षन्) = உரிய காலத்திற்காகக் காத்திருப்பவன். [2]அந்தர (अन्तर) = (இங்கு) வேறு.

[3]ப்ரஸாதாதிசயம் (प्रसादातिशयम्) = பேரருள். [4]தானஹந்த்விஷத: (तानहं द्विषत:) = அவ்விதம் என்னை த்வேஷிப்பவர்களை இழிவான பிறவிகளிலே தள்ளுகிறேன். [5]வாய் வாய் என்பது = இரு தாடைகளிலும் அடிப்பது.

அவர்களைப் போலன்றியே [6]'ததாமி' யென்று அவனுடைய அருளுக்கு விஷயபூதராக யிருப்பார் சிலருண்டு; அவர்கள் பண்ணுமருளை, அவர்கள் பக்கல் பண்ணுமருளை, நம்பக்கலிலே 'மயர்வற மதிநல மருளினன். அவித்யாதிகள் ஸவாஸனமாகப் போயிற்று தன் நிர்ஹேதுக க்ருபையாலே.

'அடியனேற் காழியான் அருள்தருவா னமைகின்றான் = ராஜாவுக்குப் புறம்பே நாடு முறையிலே செல்லாநிற்கத் தன்னையுந் தன்னைச்வர்யத்தையும் கொடுக்குமிறே மஹிஷி விஷயத்தில். அப்படியே அவன், தன்னை முற்றாட்டாகக் கொடுத்து அனுபவிப்பித்தான். பாரதந்த்ர்யைக பரராயிருப்பார் சிலருண்டு. அவர்கள் பக்கல் பண்ணும் அருளை என்பக்கலிலே பண்ணினான்.

அவர்களாரென்னில்; [7]மந்த்ர ரத்னத்தில் [8]மத்யமபத நிஷ்டர்கள். "அருள்பெறுவாரடியார் தம்மடியனேற் காழியான். இருவர்க்கும் நிரூபகமாயிருக்கிறபடி 'இவர் அருள் பெறுவாரடியார் தம்மடியார். அவன் [9]ஆழியான். இருவருக்கும் நிரூபகம் [10]ததீயரே காணும்.

---

[6]ததாமி (ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते) = என்னுடன் எப்போதும் கூடியிருக்க விரும்பி பக்தி பண்ணுகிறவர்களுக்கு அவர்கள் என்னை வந்தடைவதற்கு காரணமான நல்லபுத்தியை நான் அருளுகிறேன். [7]மந்த்ரரத்னம் (मन्त्ररत्नं) = த்வயம். [8]மத்யமபதம் (मध्यमपदम्) = 'शरणं प्रपद्ये' என்கிற நடுப்பதம். மந்த்ரரத்னம் என்பது பொதுவாக, த்வயத்துக்கு வழங்கப்படும் பெயர். ஆனால் மத்யமபதமென்பது "ஓம்நமோ நாராயணாய" என்ற திருமந்த்ரத்தின் நடுப்பதமாகிய 'நம:' என்பதையே குறிக்கும். 'ப்ரபத்தி' (சரணடைதல்) என்பது அதன் பொருள். ஆக 'மத்யமபதநிஷ்டர்' என்பதற்குச் 'சரணாகதன்' என்று பொருள். இங்கு, 'வழக்கத்திலுள்ளது' என்ற காரணத்தால் 'மந்த்ரரத்னம்' த்வயமாயும் அதிலேயே மத்யமபதம், 'சரணம் ப்ரபத்யே' என்பதாகவும்எழுதப்பெற்றன. [9]ஆழியான் = சக்கரமேந்தும் திருக்கையையுடையவன். ஆக சக்கரத்தாழ்வாரையே அடையாளமாகச் சொல்லி அவனைக் குறிப்பிடவேண்டியிருப்பதால் அடியார்களே அவனுக்கு எடுத்துக்காட்டாக் இருக்கின்றனர் என்கை. [10]ததீயர் (तदीयर्) = அவனடியார்.

'நீக்கமில்லா வடியார் தம்மடியா ரடியா ரடியார் எங்கோக்கள்' என்றும் 'தமர்கள் தமர்கள் தமர்களாஞ் சதிரே வாய்க்க' வென்றுஞ் சொன்ன வார்த்தையை நினைத்திருந்தான்.

ஸர்வேச்வரன் நம்பக்கலிலே முழுநோக்காக ப்ரஸாதத்தைப்பண்ணினன். திருவாழியை யொருகண்ணாலும், இவரை யொருகண்ணாலும் பார்ப்பது மாகாநின்றான். 'விடலில்' இத்யாதி; கையில் திருவாழியை விடிலன்றோ உம்மை விடுவதென்னுநின்றான்.

'ஆழியா'னென்று நிரூபகம். [11]அஸ்மாபிஸ் துல்யோ பவது, என்றவர்கள் பக்கல் பண்ணுமருளை என்னொருவன் பக்கலிலேயும் பண்ணுநின்றான். அவர்களருள் பெறுவாரடியாராய்த்து; இவனுமருள் தருவா னமைகின்று ணய்த்து.

'அமைகின்றான்=பாதி [12]ஸம்வாதங் குறைவற்றது. அருளின காரியமும் குறைவறத் தருவதாகப் பாரியா நின்றான்.

"அவன் ப்ரஸாதாதிசயத்தைப் பண்ணுவதாகப் பாரியா நின்றானாகில்; அவன்தான் ஸர்வேச்வரனாகில்; பின்னைக் கண்ணழிவென் னென்னில்:—

'அது நமது விதிவகையே = அயர்வறு மமரர்களதிபதி - அயர் = அசர்வு. அதில்லாமல், பூர்வே ஸாத்யர்களால் ஆராதிதனானவன் யாவனொருவன் அவன், 'நித்யஸம்ஸாரியாய்ப் போந்த என்னைத் தான் நித்யவிபூதியிலே கொண்டுபோய் அநுபவிக்கவேணு' மென்று பாரித்துக்கொடுவந்து புகுந்து; ஆச்ரித பாதந்த்ரானாகையாலே நாம் விதித்தபடி செய்வானாகப்பாரா நின்றான். அது செய்யுமிடத்து நான்சொன்னபடி செய்வானாக வேண்டி யிராநின்றான். 'அது நம்முடைய பாக்யாநுகுணமாக விற்ற' என்று பூர்வர்கள் நிர்வாஹம்.

---

[11] அஸ்மாபிஸ் துல்யோ பவது. (अस्माभिस्तुल्यो भवतु)—எங்களுக்குச் சமானமாகட்டும். விபீஷணனைப்பற்றி இராமனிடம் சுக்ரீவ மகாராஜர் சொல்லும் வார்த்தை இது.

[12] ஸம்வாதம் = ஸம்மதி.

‘எம்பெருமானார் கேட்டருளி; இத் திருவாய்மொழியில் மேலோடுகிற ரஸத்தோடு சேராது. ‘நாம் விதித்தபடியே செய்வானாயிருந்தான் என்கிறார்’ என்றருளிச்செய்தார்.

‘அஹம் ஸர்வம் கரிஷ்யாமி, என்று பாரித்துப் போந்தவர் தாமே ‘க்ரியதாமிதி மாம் வத’ எனப் பார்த்திருந்தாற் போலே, ‘இவர் சொன்னபடி செய்வானா யிராநின்றான்.

‘நமது சொல்வகை’ யென்னாதே ‘விதிவகை’ யென்பானேன் னென்னில்; [13]வித்யதிக்ரமத்திலே ப்ரத்யவாயத்துக்கு அஞ்சுவாரைப்போலே அஞ்சாநின்றான். தான் நினைத்தபடி செய்கைக்குத் தன்பக்கல் குறைவற்றாலும், இத்தலையி லிச்சையொழியக் கொடு போகாதே யவன். புருஷோத்தமன் அபும்ஸத்வம் வரும்படி செய்யானே. ‘நமது விதிவகையே = [14]‘ததாநுஜானந்த முதாரவீக்ஷணை: என்று கடாக்ஷிக்குமவன் கிடீர்.

இவன் விதிக்க வேண்டியிருக்கிறான், அருளுகிறான் ஸர்வேச்வரனாகில், அதுதான் நாம் விதித்தபடி செய்வானா யிருந்தானாகில், இனிக் கண்ணழி வென்னென்ன:—

‘இருள்தரு மாஞாலத்து ளினிப் பிறவி யான் வேண்டேன் = இனி நீயு மிசைபுமத்தனையே வேண்டுவது. இதுவே கண்ணழிவும். அயர்வறு மமரர்களதிபதி அவர்களுந் தானுமாய், இவனை அணையிலே வைத்து ஆதரிக்கைக்காக வந்து நம்மனுமதி பார்த்திருந்தான்.

‘மருளொழி நீ மடநெஞ்சே = நானவன் வழியே போவதாகப் பார்த்தேன், நீயுமவன் வழியே போவதாகப் பாராய்.

உமக்குத் தானவன் வழியே போகவேண்டுகிற தென்னென்ன; ‘இருள்தரு மாஞாலமாயிருந்தது. ஸம்ஸாரமாகிறது,

---

[13]வித்யதிக்ரமம் (विध्यतिक्रमम्) = சாஸ்திரத்தை மீறுதல்.

[14]ததாநுஜாநந்தமுதாரவீக்ஷணை: (तथानुजानन्तमुदारवीक्षणैः) = கம்பீரமான கடாக்ஷத்தாலே ‘அப்படியேயாகுக’ என்று அனுமதி பண்ணுமவன்.

இருக்க யிருக்க அக்ஞானத்தைத் தருவதொன்று யிருந்த தாய்த்து. ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானையிறே எதிரிடப் பண்ணிற்று.

‘மருளொழி=வானுயரின்பமெய்திலென்? மற்றை நரகமே யெய்திலென்? என்று நினைத்திருந்த தொரு ப்ரமம் உண்டே முன்பு; இப்போது அது தவிர்ந்தேன்.

‘அதுதான் தவிரவேண்டுவா னென்னென்னில்; வைஷ்ணவ ஸஹவாஸத்துக் குடலாயிருக்கையாலேயும், உகந்தருளின நிலங்களிலுண்டான ஆதராதிசயத்தாலுமாக, இங்கே யிருக்கிலென்? அங்கே போயிருக்கிலென்? அவன் எல்லைக்குள்ளே கிடக்குமித்தனை யன்றோ? வேண்டுவதென் றிருந்தோம். அதுவே யாகப்பெறாதே மற்றைப்படிக் குடலாயிருந்தது.

‘[15]ப்ரக்ருதிவச்யனுக்கி, சப்தாதி விஷயங்களிலே கொடு போய்மூட்டும் ஸம்ஸார ஸ்வபாவத்தை அநுஸந்தித்த பின்பு விடுவதாகவே துணிந்தேன். ‘யான் வேண்டேன் = என்புத்தி யாலே விட்டேன். அவனிருக்கில் [16]செய்யலாவதில்லையே.

‘ஆனால் செய்யவேண்டுவ தென்னென்ன; ‘மருளொழிநீ = உனக்கொரு நினைவுண்டு. அத்தைத் தவிரப்பார்.

‘தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும் பேற லுற்றால்........திருவாறன் விளையதனை மேவி வலஞ்செய்து கை தொழக் கூடுங்கொல் என்னுமென் சிந்தனையே’ என்று விரோதி கழிந்து, போம்வழியெல்லாம் போய், இது பரமபதத்துக்குப் போம்வழி—இது திருவாறன் விளைக்குப் போம்வழி—யென்றால், ‘ப்ராப்ய வஸ்துதான் இங்கே வந்து கிட்டிற்றாகில், இனி யிங்கே யடிமைசெய்ய வமையாதோ’ வென்று ப்ரமிப்பதொன்றுண்டு. அத்தைத் தவிரப்பார். மருளென்றினி ப்ரமத்துக்கும் பேர்.

‘மடநெஞ்சே வாட்டாற்றானடி வணங்கே=‘அயர்வறுமமரர் களதிபதி யாவனொருவன், அவன் வாட்டாற்றான். ஆச்ரிதரை

---

[15]ப்ரக்ருதிவச்யன் (प्रकृतिवश्यन्) = ஐம்புலன்களில் ஈடுபட்டு அவைகள் வழியே செல்லும் மனத்தையுடையவன். [16]செய்யலாவது=செய்யக்கூடியது.

[17]அருளப்பாடிட்டு நிற்கிறவ னடி வணங்கித் தொழுதெழு என் மனமே என்கிருர்.

'வணங்கெந்தன் மடநெஞ்சே = ஸாது நெஞ்சே! எனக்கு பவ்யமான நெஞ்சே! "உத்தேச்ய வஸ்து ஸன்னிஹிதமாய்த்து' என்றித்தைப் பார்க்கிற வித்தனைபோக்கி நம்மையும் பார்க்க வேண்டாவோ?

'வாட்டாற்ருனடி வணங்கே = நமக்கு ஹிதகாமனய் வந்திருக்கிறவன் வழியேபோய், அவனை யனுபவிக்கப் பார்க்க வேண்டாவோ?

உகந்தருளின நிலங்களில் வந்துநிற்கிறது, நம்மை அங்கே கொண்டுபோகைக்காக யிருக்கும். நீயுமவன் நினைவிலே போகப் பாராய். சுடரடி தொழுது வணங்கே. அடிவணங்குகையாவது ஈராசு தவிருகையிறே.

பத்தாம்பத்து ஆருந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு (அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

செஞ்சொற் கவிகாள்! உயிர்காத்தாட் செய்ம்மின் திருமா லிருஞ் [சோலை
வஞ்சக் கள்வன் மாமாயன் மாயக் கவியாய் வந்தென்
நெஞ்சு முயிரு முள்கலந்து நின்ரு ரறியா வண்ணமென்
நெஞ்சு முயிரு முவையுண்டு தானே யாகி நிறைந்தானே. (1)

[17]அருளப்பாடு=பகவான் தன் முன்னிலையில் ஒரு பக்தனைக் கூப்பிடுதல்.

"செஞ்சொற்கவி" யில் தம்மைத் திருமேனியுடனே கொண்டு போகவேணுமென்று த்வரிக்க, 'மங்கவொட்' டென்று அவனைச் சரணம் புக்கு ப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுத்துக் கொண்ட படியை யருளிச்செய்தார்.

ஐந்தாம்பாட்டு

நண்ணா வசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த
எண்ணா தனக ளெண்ணும்நன் முனிவ ரின்பந் தலைச்சிறப்பப்
பண்ணார் பாட லின்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடித்
தென்னா வென்னு மென்னம்மான் திருமா லிருஞ்சோ லையானே. (5)

"உயர்வற என்கிற பாட்டை 'நண்ணாவசுரர்' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் கர்மாநுகுணமான சரீரங்களாலே ஸ்வர்க்க நரகங்களுக்கு ஹேதுவாயிருக்க, அதிலே யொருவரான இவரை யித்திருமேனி யோடே கொடுபோகைக் காசைப்படுகிறான் ஈச்வரன்.

பிரம்மாதிகள் தொடங்கி, தத்தத் [1]காதைகளானவை யென்ன; [2]நாலு வேதமென்ன, [3]ஆறு சாஸ்த்ரமென்ன, [4]அஷ்டாதச புராணமென்ன, சதுஷ்ஷஷ்டி கலைகளென்ன, மற்று மாழ்வார்கள் ஆசார்யர்கள் திவ்யஸூக்திகளென்ன, இவைகளெல்லாம் பகவானை ஸ்துதிக்கக் கேட்டு உகந்திருந்தாப்போலன்றிறே நம்மாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வயவிவரண

---

[1]காதை (गाथै) = சுலோகம். (செய்யுள்). [2]நான்கு வேதங்கள் = ருக் – யஜுஸ் – ஸாம – அதர்வ – வேதங்கள். [3]ஆறு சாஸ்திரங்கள் —சிக்ஷா – வ்யாகரணம் – சந்தஸ் – நிருக்தம் – ஜோதிஷம்– கல்பம் - என்பவை. [4]அஷ்டாதசபுராணங்கள் (अष्टादशपुराणानि) = பதினெட்டு புராணங்கள் (1) பிராம்மம் (2) பாத்மம் (3) வைஷ்ணவம் (4) சைவம் (5) பாகவதம் (6) நாரதியம் (7) மார்க்கண்டேயம் (8) ஆக்னேயம் (9) பவிஷ்யம் (10) பிரம்மவைவர்த்தம் (11) லிங்கம் (12) வாராஹம் (13) ஸ்காந்தம் (14) வாமனம் (15) கௌர்மம் (16) மாத்ஸ்யம் (17) காருடம் (18) பிரம்மாண்டம்.

மான சரணாகதியை யருளிச்செய்த காதையைக்கேட்ட ஸர்வேச்வரன்.

உயர்வற உயர்நலமுடையவனாய், ஜ்ஞானனந்தைக ஸ்வரூபனானவன் இந்த திவ்ய கானத்தைக் கேட்டு, மட்டுக்கட்டியனுபவிக்கமாட்டாதே அத்தால் வந்த ஆனந்தத்துக்குப்போக்கு விட்டுத் 'தென்னா தெனாவென்று [5]ஆளத்திவையாநின்றான்.

இந்தத் திருவாய்மொழிதான் [6]'பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதனம் ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோபவாங்மயம்- ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமம் நமாம்யஹம் த்ராவிடவேத ஸாகரம்' என்கிறபடியே, நண்ணாவசுரர் நலிவெய்த, நல்லவமரர் பொலிவெய்த எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பந் தலைசிறப்ப விறேயிதினுடைய வைபவந்தானிருப்பது.

உயர்நலமுடையவன் தானிருப்பது, தம்மோடே கலந்து தம்வாயால் திருவாய்மொழி கேட்ட ப்ரீதியுள்ளடங்காமல் ஆனந்தித்து ஆளத்திவையாநின்றான்.—என்கிறார்.

'நன்கென்னுடலங் கைவிடா'னென்னுமளவன்றிக்கே, என்னுக்திமாத்ரத்திலே களியாநின்றான் என்கிறார்.

"நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின்பந்தலை சிறப்ப வாய்த்துத் திருவாய்மொழிதானவதரித்தது. [7]ஸ்துத்யனுடைய அவதாரம் போலே யாய்த்து, ஸ்துதியினுடைய அவதாரமும்.

---

[5]ஆளத்தி=பாட்டுக்குப் பூர்வாங்கமான ஆலாபனம். [6]பக்தாம்ருதம்=இதன் பொருள்—திருவாலடியார்க்கு அமுதம் போன்றதும், எல்லாவுலகத்தவருக்கும் ஸந்தோஷத்தைக் கொடுப்பதும், எல்லார்க்கும் விரும்பின பேறெல்லாவற்றையும் கொடுக்கவல்லதாயும், ஸ்ரீ சடகோபன் என்கிற நம்மாழ்வாரால் திருவாய்மலர்ந்தருளப்பெற்றதும், ஆயிரம் கிளைகளையுடைய ஸாம வேதத்தின் உபநிஷத்துக்களின் பொருளை விவரிப்பதுமான தமிழ் மறை என்னும் கடலை வணங்குகிறேன்—என்பது.

[7]ஸ்துத்யன் (स्तुत्यन्) = துதிக்கப்படவேண்டியவன். ஸ்துதி—தோத்திரம்.

"[8]பரித்ராணாய ஸாதூனம், இத்யாதிபோலே. "[9]அகிலஜகத்பத்ம போதாயாச்யுதபாநுநா, என்னுமாபோலே.

'கண்ணாவித்யாதி = [10]ப்ரதிகூல நிரஸநத்துக்கு வேறொரு கருவி யெடுக்கவும் வேண்டாதே, [11]அநுகூல ரக்ஷணத்துக்கும் வேறொன்றும் வேண்டாதே, அநந்யப்ரயோஜநரா யிருப்பார்க்கு ஸ்வயம்ப்ரயோஜநமுமா யிருக்குமாய்த்து.

"கண்ணாவசுரர் நலிவெய்த = [12]அவ்யபதேச்யனுக் கனந்தரத்திலவன், தன்னப்பன் செய்தவற்றைக்கெட்டு 'இவன் என்செய்தானென்? என்று கர்ஹித்தான், ஒருமதிளை வாங்குங் காட்டில் [13]அத்தர்சனங் குலைந்ததோ? திருவாய்மொழி என்றும் ஸ்ரீ ராமாயணமென்றும் வலியன மஹாப்ரபந்தங்களிரண்டுண்டா யிருக்க; என்றாய்த்து.

இப்படி உகவாதார் நெஞ்சுளுக்கும்படியான ப்ரபந்த மாய்த்து. [14]விபரீதஸ்ததாஸுர:' என்னக்கடவதிறே. பொருந் தாமையையுடைய அஸுரவர்க்கமானது மண்ணுண்ணும்படியாக. 'ஸம்பந்தமில்லை' என்னவொண்ணாதே 'பொருந்தோ' மென் கையிறே யுள்ளது.

---

[8]பரித்ராணாயஸாதூநாம் (**परित्राणाय साधूनाम्**) = நல்லோர்களைக் காப்பதற்கு. [9]அகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா (**अखिल-जगत्पद्मबोधायाच्युतभानुना**) = சூரியன் தோன்றினால் தாமரைப் பூக் கள் மலரும். இருள் அகலும். மக்கள் உறக்கத்தை விட்டு விழித் தெழுவர். ஆனால் இந்த சூரியன் சில புஷ்பங்களையே மலரச்செய் வதும், புறவிருளை மட்டும் நீக்குவதும் ஆகும். ஸ்ரீ கிருஷ்ணனாகிற சூரியன், எல்லாவுலகினுடையவும் அகவிருளையும் அகற்றித் தன் சிறந்த உபதேசங்களாலும் அற்புதமான திருவிளையாடல்களாலும் உலகைத் திருத்திப் பேரின்பமடையச்செய்பவர். என்கை.
[10]ப்ரதிகூல நிரஸநம் (**प्रतिकूल निरसनम्**) = விரோதிகளைத் தொலைத்தல். [11]அநுகூல ரக்ஷணம் (**अनुकूल रक्षणम्**) = அன்பர் களைக் காத்தல். [12]அவ்யபதேச்யன் —(இங்கு) க்ரிமிகண்ட சோழன். அனந்தரத்திலவன் = பிறகு தோன்றியவன் (பிள்ளை) [13]அத்தர்சனம் = அந்த (சமயம்) சித்தாந்தம். [14]விபரீதஸ் ததாஸுர: (**विपरीतस्तथाऽऽसुर:**) = பகவானிடத்தில் பக்தியற் றிருப்பவன் ஆஸுரமான ஸ்ருஷ்டியைச் சேர்ந்தவன்.

"நல்லவமரர் பொலிவெய்த=[15]'விஷ்ணுபக்திபரோ தைவ:' என்னக்கடவதிறே. அநுகூலமாயிருக்குமவர்கள் உண்ணுதே தடிக்க. இவர்களுக்கு நன்மையாவது பகவத் பக்தராயிருக்கை. 'தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்' என்னக் கடவதிறே.

[16]இதுவுமக்குப் பிறந்தபடி யென்னென்ன; ஸ்துத்ய னவன் தன்னை ஸ்துதிக்கும்படி மயர்வற மதிநல மருளினன்.

வேதங்களைப்போலே 'அப்ராப்ய மனஸா ஸஹ' என்று மீளுகையன்றிக்கே; 'நின்கண் வேட்கை எழுவிப்பனே' என்று நீயருளின பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தாலே ஒண்சுடர்க் கொழுந்தாய், பரமபக்திபாய்க் கொழுந்துவிட்டு வளராநின்றது. அது பொங்கிவழிந்தசொல் 'பண்ணார்பாட லின்கவி' யாயிற்று.

'எண்ணாதனகளெண்ணும் நன்முனிவ ரின்பந்தலை சிறப்ப=புறம்பொருவர் எண்ணாதன சிலவற்றை எண்ணுவாருண்டா யிற்று. 'ஸர்வேச்வரன் ரக்ஷகன். அவனையொழிந்த தடங்கலும் அரக்ஷக' மென்றிருக்கையன்றிக்கே; உபயவிபூதி யுக்தனுக்கு மின்னமும் சில விபூதி வேணுமென்றும், ஸர்வகுண [17]ஸம்பன்ன னுக்கு இன்னஞ் சிலகுணங்கள் வேணுமென்றும், இப்புடை களிலே எண்ணுவாருண்டாய்த்து.

'நன்முனிவர் = அவனுடைய ஸம்ருத்தியையே மனனம் பண்ணும் ஸ்வபாவராயிருக்கை. ஈச்வரனடியாகத் தங்கள் ஸம்ருத்தியை எண்ணுமவர்கள் — முனிவர். அத்தலைக்கே ஸம்ருத்தியை எண்ணுமவர்கள் — நன்முனிவர்.

அவர்களின்பந் தலைசிறப்ப=திருவாய்மொழி யவதரித்த பின்பு அவனுக்கு [18]குணவிபூதி போராதென்றிருந்த இழவு தீர்ந்து அத்தாலே நிரதிசயானந்த யுக்தரானார்கள்.

---

[15]விஷ்ணுபக்திபரோ தைவ: (विष्णुभक्तिपरो दैव:) = விஷ்ணுவிடம் இயற்கையாகவே பக்தி பண்ணுகிறவன் தைவத்தன்மை யுடன் ஸ்ருஷ்டிக்கப்பட்டவன் ஆவான். [16]இது = இந்த அறிவு. [17]ஸம்பன்னன் (संपन्न) = நிறைந்தவன். [18]குணவிபூதி (गुणविभूति) = குணங்களும், விபூதியும். வாத்ஸல்யம், தயை முதலியனவை நற்குணங்கள். எல்லா உலகுகளும் அவற்றிலிருக் கும் சேதநாசேதனங்களும் அவனுடைய விபூதி (ஸொத்து).

அன்றிக்கே; திருவாய்மொழியை யொழிய வேறொரு லம்பத்தும் வேண்டாவென்று இதுவே மனனம் பண்ணி ஹ்ருஷ்டராம்படியாகவுமாம்.

அன்றிக்கே; 'நல்லவமரர்' என்றும் 'நன்முனிவ'ரென்றும் அயர்வறுமமரர்களாகவுமாம். 'வைகுந்தத்தமரரும் முனிவரும்' என்னக்கடவதிறே.

அயர்வறுகையாவது = அபர்யாப்தாம்ருதத்தில் ரஸம் அல்பமாய், பக்தாம்ருதமான திருவாய்மொழியைப் பானம் பண்ணுமவர்கள் (அல்லர்.)

"இன்பம் தலைசிறப்பப் பண்ணார் பாட லின்கவி=பண்ணோடே சேர்ந்த பாடல். புஷ்பமானது பரிமளத்தோடே யலருமா போலே; திருவஷ்டாக்ஷரமானது தளிரும், முறியும், மணமும், மதுவு முண்டாமாபோலே இதுவும் பண்மிகுந்திருக்குமாய்த்து.

"இன்கவிகள் = இசையும் பண்ணுமொழியவே, தோல் கழிந்த சுளைபோலே கவி தானே யினிதாயிருக்குமாய்த்து. 'யானாய்த் தன்னைத் தான் பாடி=என்பேரையிட்டுத் தன்னைத் தான் பாடி. பிதாவானவன் புத்ரனுக்குப் பசுவை நீர் வார்த்துக் கொடுத்து, அவன் பக்கலிலே தான் நீரேற்றுப் பசுவைப் பெறுமா போலேயும், ஸுதனை வார்த்தையைக் கற்பித்து அவன்சொல்லக் கேட்டு இனியனுமாபோலேயும்.

தானே பாடினானாகில் ஸ்ரீகீதையோ டொத்துப்போமே. 'பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டே' னென்று இவரங்கீகாரத்தாலே அந்த கீதைதானும் வீறுபெற்றதிறே.

'தென்னாவென்னு மென்னம்மான் திருமாலிருஞ்சோலையானே' துயரறு சுடரடி தொழுதெழுமனனே. 'தென்னாவென்னும்=செருக்காலே 'தென்னா தென்னா' வென்று ஆளத்தி வைக்குமாய்த்து. திருவாய்மொழியாகிற தேனைக் குடித்துத் தெய்வவண்டு ஆளத்தி வைக்கிறபடி.

ஸம்ஸாரி சேதனனுக்கு பகவல்லாப முண்டானால் '[19]ஏதத் ஸாம காயந் நாஸ்தே' என்று ஸாமகானம் பண்ணுமா போலே; 'அவாக்யநாதர:' என்னும்படி வாய்திறவாமல் இருக்கும் பரப்பிரம்மம், [20]தைர்யபங்கம் பிறந்து பாடாநிற்குமாய்த்து.

என்னம்மான் = [21]ஸுதவசன மினிதாம்போது *ப்ராப்தி யுண்டாகவேணுமிறே. அதுக்கடியான ப்ராப்தியைச் சொல்லுகிற தாய்த்து.

'திருமாலிருஞ் சோலையானே = இவரைப் பாடுவித்த [22]முக்கோட்டை. 'பாட்டினுள் என்னை என்னெஞ்சத்திருந்தமை காட்டினாய் கண்ணபுரத்துறை யம்மானே' இவரைப்பாடுவித்த முக்கோட்டையிறே யிது.

தாம் பாடின கவிகள் இனிதானமையை யனுஸந்தித்தார். இவை தாமடியாகப் பிறந்ததென்று சொல்லலாயிருந்த தில்லை. இதுக்கடி யென்னென்று பார்த்தார். அவன் தன் னெஞ்சிலே புகுந்து பாடுவித்தானா யிருந்தது.

கண்ணபுறத்துறையம்மான் திருமாலிருஞ் சோலையான் துயராறு சுடரடி தொழுதெழென் மனனே. இதுக்கு ப்ரத்யுபகார மில்லையே, வணங்கிப் பிழை என்கிறார்.

பத்தாம்பத்து ஏழாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[19]ஏதத்ஸாமகாயந்நாஸ்தே (एतत्साम गायन्नास्ते) = 'अहमन्नम्-अहमन्नाद:' என்கிற இந்த ஸாமத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான்.

[20]தைர்யபங்கம் (धैर्यभङ्गम्) = உறுதிக்குலைவு.

[21]ஸுதவசனம் (सुतवचनम्) = குழந்தையின் மழலைச்சொல்.

[22]முக்கோட்டை = கவிபாடுகைக்குக் காரணமான சக்தியை அருளும் தெய்வம். *ப்ராப்தியுண்டாகவேணும் = கொடுத்து வைக்கவேணும்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

திருமா லிருஞ்சோலை மலையென்றே னென்னத்
திருமால்வந் தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமா மணியுந்து புனற்பொன்னித் தென்பால்
திருமால் சென்றுசேர் விடந்தென் திருப்பேரே. (1)

'திருமாலிருஞ்சோலையில்' இப்படியாதரிக்கிற [1]தேவர் அநாதிகாலம் என்னையுபேக்ஷிக்க வேண்டுவானென்? இன்றென்னை விஷயீகரிக்க வேண்டுவானென்? என்று கேட்க, அவன் [2]நிருத்தரனாய்ப் பேசாதேயிருக்க, நிர்ஹேதுகமாகாதே என்று நிருத்தரரானார்.

ஒன்பதாம்பாட்டு

இன்றென்னைப் பொருளாக்கித் தன்னையென் னுள்வைத்தான்
அன்றென்னைப் புறம்போகப் புணர்த்த தென்செய்வான்?
குன்றென்னத் திகழ்மாடங் கள்சூழ் திருப்பேரான்
ஒன்றெனக் கருள்செய்ய வுணர்த்தலுற் றேனே. (9)

'உயர்வற' என்கிறபாட்டை 'இன்றென்னைப் பொருளாக்கி' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தளவும் தேவ திர்யக் ஸ்தாவர ஜங்கமாத்மகமான சரீரங்களிலே, ஓரோன்றிலே யளவிறந்த ஜன்மங்களிலே பிறந்த வஸ்துவாய்ந்து போயிற்றே. நீயும் அநுமதி தானத்தைப் பண்ணி யுபேக்ஷித்து விஸ்மரித்திருந்த நீ; இன்றென்னை விஷயீகரிக்கைக்கும், முன்

[1]தேவர்='தாங்கள்' என்னும் பொருளில் வைணவர் உபயோகிக்கும் சொல். [2]நிருத்தரன் (निरुत्तरन्)=பதில் சொல்லமுடியாதவன்.

பென்னை யுபேக்ஷிக்கைக்கும் காரணமென்னென்று கேட்க வேண்டியிருந்தேனென்கிறார்.

உயர்வற உயர்நலமுடையவன் யவன் ஜ்ஞானனந்தைகஸ்வரூபனாய் ஸர்வேச்வரனான நீ, என்னைப் பரமபதத்திலே கொண்டு போவதாக விரைகிறபடி கண்டேனுக்கு, இன்று என்னளவல்லாதபடி த்வரிக்கிற தேவர், இதுக்கு முன்பு நெடுநாள் விட்டு ஆறியிருக்கக் கூடாது.

இதுக்கடியேதென்ன; [3]'நத்வாமிஹஸ்தாம் ஜாநீதே' என்று நடுவே சிலர் சொல்லவேண்டும்படி யாய்த்து. எழுந்தருளியிருந்த இடமறியாமையாலே யாறியிருந்தாரத்தனை போக்கி, அறிந்தாலொருக்ஷண மாறியிருப்பரோ?

இதுதானென்வார்த்தைகொண் டறியவேணுமோ? [4]'கமலலோசனே' உன்னுடைய கண்ணழகன்றோ? ப்ரமாணம். 'ராம:' அவரையறியாதொழியவேணுமோ? [5]'நஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்' என்றிறே. 'க்ஷணமபி' என்றிறே அவரிருப்பது.

'ராம: கமலலோசனே = அன்றிக்கே, ஆரெதிராகத்தானிக் கண்ணில் சிவப்பும் சீற்றமுமெல்லாம் என்னுதல்.

உயர்வறஉயர்நலமுடையநீ, இன்றென்னைப் பொருளாக்கி = [6]அஸத்கல்பனானவென்னை ஒருவஸ்துவாம்படி பண்ணி. 'பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி' என்றாரிறே.

---

[3]நத்வாமிஹஸ்தாம் ஜாநீதே (नत्वामिहस्थां जानीते) = ஸீதாதேவியைப் பார்த்து ஹநுமான் சொல்வது - நீ இங்கு இருக்கிற விஷயம் ஸ்ரீ ராமனுக்குத் தெரியாது. [4]கமலலோசநே (कमललोचने) = (தாமரைப்பூ போன்ற அழகிய) கண்களையுடையவளே; இவ்வழகிய கண்களை விட்டிருக்க வல்லவனோ அவன். இதை உர்முடைய கண்ணழகாலேயே அறியலாமே என்கை.

[5]நஜீவேயம் க்ஷணமபி (नजीवेयं क्षणमपि) = நெய்தல்போல் கறுத்த கண்களையுடைய அந்த ஸீதையைப் பிரிந்து ஒரு நிமிஷமும் உயிர் வாழ வல்லேனல்லேன் (இது இராமன் வார்த்தை). [6]அஸத்கல்பன் (असत्कल्पन्) = ஸர்வ சக்தனான பகவான் 'உளன்' என்கிற அறிவைப் பெருமையால், முயல் கொம்பு போலே நான் இல்லாத பொருளுக்கொப்பானேன் என்கை.

தன்னை = ஸத்துக்களுக்கு [7]ஸ்ப்ருஹணீயனான தன்னை, என்னுள்வைத்தான் = தன்னைப் பிறர்க்கு அவகாசமில்லாதபடி பண்ணி, பொருளில்லாதவென்னைப் பொருளாக்கினான் என்றுரிறே.

நித்யஸூரி ஸேவ்யனான தன்னை [8]முற்றூட்டாக என்னுள்ளே கொடுவந்து வைத்தான்.

இது நீரறிந்தபடி என்னென்ன; மயர்வற மதிநலமருள வத்தாலே யறிந்தேன். என்னுடைய அவித்யாதி கர்மங்கள், வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் வந்த புண்ய பாபரூப கர்மங்கள் ஸவாஸனமாகப்போய், உன்னிடத்தில் பக்திரூபாபன்ன ஜ்ஞானமானது அதிப்ரகாசமாக உன்னைக் காட்டக் கண்டேன்.

அத்யந்தம் ஸுலபனாய், ஜ்ஞான ஸாக்ஷாத்காரமானது ப்ரத்யக்ஷம்போலே தோற்றுகையாலே மடிபிடித்துக் கேட்கிறார்.

'அன்று' என்கிறது விசேஷகடாக்ஷம் பெறுவதற்கு முன்புள்ள நாள் எல்லாவற்றையும் சொல்லுகிறார். 'இன்று' என்கிறது, மயர்வற மதிநலமருளப் பெற்றவதற்குப் பின்புண்டான காலத்தை.

'என்னைப் புறம்போகப் புணர்த்ததென் செய்வான்? = பாரதந்த்ரனனவென்னைப் புறம்போகப் பண்ணிற்று என்செய்கைக்காக? [9]பாஹ்யனாகப் பண்ணுகையாகிறது உபேக்ஷிக்கை. இழந்த நாளிழந்தது மவனாலே என்றிருக்கிறார். [10]பாரதந்த்ரவஸ்து செல்லவற்றோ? வரவற்றோ?

---

[7]ஸ்ப்ருஹணீயன் (स्पृहणीयन्) = விரும்பக்கூடியவன். [8]முற்றூட்டாக = எல்லாம் ஏகபோகமாக. [9]பாஹ்யன் (बाह्यन्) = புறம்பான சப்தாதி விஷயங்களிலே பற்றுள்ளவன்.

[10]பாரதந்த்ரவஸ்து = பராதீனமான பொருள். எல்லாவுயிர்களும் பகவானுக்கு அடங்கி அவன் இட்ட வழக்காய் இருப்பவையாகையால், இவரும் (ஆழ்வாரும்) அவைகளிலொருவராகையால், இவ்வளவு நாள் பகவானைத் தான் இழந்திருந்தது தன்னாலல்ல; அவனாலேயே என்கை.

நீயோ அயர்வறு மமரர்களதிபதி = சற்றுமசராமலனுப விப்பார் த்ரிபாத் விபூதியாய்; அவ்வளவன்றிக்கே லீலாவிபூ திக்கு நிர்வாஹகரான தேவர் த்ருதீயவிபூதியான 'குன் றெனத்திகழ் மாடங்கள் சூழ் திருப்பேரானுக எழுந்தருளிற்று மெனக்காகவன்றோ?

மலைகளைச் சேரவைத்தாப்போலே விளங்காநின்றுள்ள மாடங்கள் சூழ்ந்த திருப்பேரானுன அயர்வறு மமரர்களதிபதி யானவன். அத்யந்தம் ஸுலபனுய்க் கொண்டு திருப்பேரிலே எழுந்தருளினது.

இப்படி மதிப்பனுன உனது துயரறு சுடரடி தொழுது, 'உணர்த்தலுற்றேன் = உன் திருவுள்ளக் கருத்தைக் கேட்க லுற்றேன். என் மனஸ்ஸு தெளியும்படி 'ஒன்றெனக்கருள்செய்ய = முன்பு கைவிட்டதற்கு ஹேது சொல்லவுமாம் — இன்றென்னை விஷயீகரித்ததற்கு ஹேது சொல்லவுமாம்.

'உணர்த்தலுற்றேனே = இதற்கொரு மறுமாற்ற மருளிச் செய்யவேணுமென்று திருவுள்ளத்திலே படும்படி விண்ணப்பஞ் செய்யவேண்டியிராநின்றேனென்ன;

இதுநாம் சொல்லவேணுமோ? நீரேயறியீரோ? வென்றான். அடியேனறியேன். ஸர்வக்ஞரான தேவரருளிச்செய்யவேணு மென்கிறார்.

'ஆனல், நாம் உம்முடைய நெஞ்சிலே புகுருகிறவிடத்தில் ஸம்மதித்திருந்தீர், அத்தாலே காணும்' என்றான்.

'அதுதானுண்டோ? 'யானொட்டி என்னுளிருத்துவமென் றில'னென்கிறார்.

'அதில்லையாகிலும், புகுந்தபின்பு நம்மையாதரித்தீரே' என்றான்.

'மருவித்தொழும் மனமே தந்தாய்' என்று அதுவும் தேவரே யயர்வற மதிநல மருளிச்செய்தது மத்தனை' என்றார்.

'ஓங்காணும், அதில்லையாகிலும் நம்மோடொக்க விஷயாந்தரங்களையும் விரும்பாதிருந்தீரே' என்றான்.

'என்னைத் தீமனங் கெடுத்தாய்' என்று அதுவும் தேவரேயன்றோ? வென்றார்.

'இவையொன்று மில்லையாகிலும், நாம் தந்த மதிநலத்தை வளர்த்துக்கொடுபோந்தீரே' என்றான்.

'காதல் கடல்புரைய விளைவித்த காரமர்மேனி' என்று அதுவுந் தேவரே யன்றோ? வென்றார்.

இப்படியிவர் முடியத் தொடர்ந்தவாறே பெருங்கடல் மண்டினாரைப்போலே போக்கற்றான்.

இதற்கு ஈச்வரன் சொன்ன உத்தரமென்னென்று ஜீயர் பட்டரைக்கேட்கக், காலாலே தரையைக் கீறிக் கவிழ்ந்து நிற்குமத்தனை போக்கி வேறுத்தரமுண்டோ? வென்றருளிச்செய்தார்.

அதாவது:— முன்பு [11]ருசியில்லாமையாலே' என்னமாட்டான். இப்போது [12]ஸாதநாநுஷ்டானம் பண்ணுகையாலே' என்னமாட்டான். ஆனால் பின்னை ஈச்வானுக்கு [13]வைஷம்யாதிகள்

---

[11]ருசி (रुचि) = ஆசை. [12]ஸாதநாநுஷ்டானம் (साधनानुष्ठानम्) = 'ஸாதனம்—மோக்ஷத்திற்கு உபாயமான சரணாகதி. அநுஷ்டானம்—அதைச்செய்தல்.

[13]வைஷம்யம் (वैषम्यम्) = விஷமனாக இருத்தல். அதாவது :- समोऽहं सर्वभूतेषु) — எல்லாப் பிராணிகளிடமும் நான் ஒரேமாதிரியாக நடந்துகொள்பவன். (नमे द्वेष्योऽस्ति न प्रियः)—எனக்கு 'வேண்டாதவன்' அல்லது 'இஷ்டமானவன்' என்று ஒருவனும் இல்லை. அவரவர்களுடைய நல்—தீ—வினைகளுக்கேற்ற பயனை எவ்வித பக்ஷபாதமுமின்றி கொடுத்து வருவதே என் தொழில்' என்றிருக்கிற நிலை ஸமத்வம் (समत्वम्) என்பது. அது கெடுதல் 'வைஷம்யம்' (वैषम्यम्) என்பது. आदि – என்பதனால்' नैर्घृण्यम्— இரக்கம் இல்லாமையைக் கொள்ளவேண்டும். ஒருகாரணமுமின்றிக்கே இவருக்கு (ஆழ்வாருக்கு) மோக்ஷத்தைக் கொடுத்தானாகில் மேற்சொன்ன வைஷம்யாதிகள் வருமென்கை.

வரிலோ, [14]ஸர்வமுக்தி ப்ரஸங்கம் வரிலோ, வென்ன; வாராது. அடியில் [15]அத்வேஷமு மிச்சையும் பிறக்கைக்குத் தான் க்ருஷி பண்ணி, அது பக்வமாமளவும் பார்த்திருக்கிறவ னுகையாலே.

அவன், கேட்டதுக்கு ஒரு மறுமாற்றம் சொல்லக் காணுமையாலே யறிந்தோ மிதற் கிங்ஙனேயாக வேணுமென்று பார்த்தார்:—

தன்னுடைய ஸ்பர்சம் ப்ரதிகூலமாகை தவிர்ந்து விலக்காத ஸமயம் பார்த்திருந்தானுதல்; 'தன்னையொழிந்த வற்றில் ஸாதன புத்தி தவிருமளவும் பார்த்திருந்தானுதலாக வடுக்குமென்று பார்த்தார். ஆனுலிதுதன்னை அவனுக்கு உத்தரமாக அருளிச் செய்யாதொழிவா னென்னென்னில் [16]சைதன்ய ப்ரயுக்தமாய் வருகிற அத்வேஷத்தை ஸாதனமென்ன மாட்டானே. சைதன்ய ப்ரயுக்தமான ருசிதானும் [17]ஸ்வரூபாதிரேகியன்றே?

[18]உபாயபாவம் தன்தலையிலே யாயிற்றே? நெடுநாளிவர் தலையிலே பழியிட்டு இழந்த நாம் எத்தைச் சொல்லுவதென்று பேசாதே யிருந்தான், '[19]ஹ்ரீரேஷா ஹி மமாதுலா' என்று

---

[14]ஸர்வமுக்தி ப்ரஸங்கம் (सर्वमुक्तिप्रसङ्गम्) = 'சரணுகதி பண்ணினவன்' 'மற்றவன்' என்னும் வாசியின்றி எல்லோர்க்கும் மோக்ஷம் கிடைக்கட்டும் என்கை. [15]அத்வேஷம் (अद्वेषम्) = பகையில்லாமை. [16]சைதன்யப்ரயுக்தம் (चैतन्यप्रयुक्तम्) = கல் மண் முதலியவைபோல் அன்றிக்கே அறிவுள்ளவனுயிருத்தல்—चैतन्यम्; அதன் பயனுகத் தோன்றியது. [17]ஸ்வரூபாதிரேகி (स्वरूपातिरेकि) = தன் ஸ்வரூபத்துக்கு மீறியது. முற்றிலும் பாதந்த்ரனுயிருத்தலே ஜீவாத்மாவின் ஸ்வரூபம். பகவானுல் தூண்டப்படாமல் இவனுகவே ஒரு விஷயத்தில் மனதைச் செலுத்தவல்லவனில்லை என்கை. [18]உபாய பாவம் (उपायभावम्) = (மோக்ஷத்துக்கு) உபாயமாயிருக்கை.
[19]ஹ்ரீரேஷா ஹி மமாதுலா (ह्रीरेषा हि ममातुला) = உங்களுடைய அருளை நாடி நான் உங்களை வந்தடையவேண்டியிருக்க, நீங்கள் என்னை வந்தடைந்த இத்தால் நான் மிகவும் வெட்கித் தலைகுனிந் தேன். இதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். (ஆரண்ய காண்டத்தில் ரிஷிகளைப் பார்த்து இராமன் சொல்வது)

பிற்பாட்டுக்கு லஜ்ஜித்து நிற்குமவனிறே. இவர்தாமே எடுத்து வைத்து வார்த்தைச் சொல்லும்படியாயிற் றவன் நிலை.

உம்முடைய ப்ராப்யம் பெற்றீராகில், உமக்கிது வந்தவழி யாராய வேணுமோ? அதுவே யமையாதோ வென்ன; 'அதுவே யமையும்' என்கிறார். தேங்காய்க்கிளநீர் புக்க வழி யாராய்ந் தன்றிறே விடாய்த்தவ னிளநீர் குடிப்பதென்ன; உகந்து துபாறு சுடரடி தொழுதெழென்மனனே என்கிறார்.

பத்தாம்பத்து எட்டாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம்

முதற்பாட்டு—(கலிவிருத்தம்)

சூழ்விசும் பணிமுகில் தூரியம் முழக்கின
ஆழ்கட லலைதிரை கையெடுத் தாடின
எழ்பொழி லும்வள மேந்திய வென்னப்பன்
வாழ்புகழ் நாரணன் தமரைக்கண் டுகந்தே. (1)

'சூழ்விசும் பணிமுகிலில் அர்ச்சிராதி மார்க்கத்தாலே போம்படியையும். அங்குண்டான ஸத்காரங்களையும், அவ்வழி யாலேபோய்ப்புக்கு அந்தமில் பேரின்பத்தடியரோடே அடியார்கள் குழாங்களுடனே யிருக்கு மிருப்பையு மருளிச் செய்தார்.

பதினொன்றாம்பாட்டு—

வந்தவ ரெதிர்கொள்ள மாமணி மண்டபத் து
அந்தமில் பேரின்பத் தடியரோ டிருந்தமை
கொந்தலர் பொழிற்குரு கூர்ச்சட கோபன்சொல்
சந்தங்க ளாயிரத் திவைவல்லார் முனிவரே. (11)

உயர்வற என்கிற பாட்டை 'வந்தவ ரெதிர்கொள்ள' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனே யென்னில்:—

மனுஷ்யானந்தந் தொடங்கி ப்ரம்மானந்தத் தளவாக ஸாதனாந்தரங்களை யனுஷ்டித்து ப்ரயோஜனாந்தரங்களிலே ஸ்வர்க்க நரகாதிகளுக்குப் போகிற [1]யாம்யகதிகளாலே புக்கு அனுபவித்தது..................புக்கு, மீண்டு மீண்டுமிப்படித் திரியாநிற்க, அவர்களிலும் கடைகெட்டலால், கூவிலுங் கைகழிந்த என்னைத்

....

தன் நிர்ஹேதுக க்ருபையாலே [2]அபுனராவ்ருத்திலக்ஷண மோக்ஷத்தைத் தந்து, அர்ச்சிராதி மார்க்கத்தாலே போய்ப் புகுகையையும், அங்குள்ளார் *ஸத்கரிக்கப் போய் அங்கடியரோடிருந்தமையும், உயர்நலமுடையவன் யவனவன் காட்டிக்கொடுக்கக்கண்டு அனுபவிக்கிறார்.

[3]நிகமத்தி லித்திருவாய்மொழியை யப்பலித்தவர்கள், நித்ய ஸூரிகள் திரளோடே சேர்ந்து அவர்களுக்கு ப்ரியகரராயிருப்பரென்கிறார்.

'உயர்வற உயர்நல முடையவன் யவனவன்—மயர்வற மதிநல மருளினன் யவனவன்—அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்—வந்தவர் எதிர்கொள்ள=ஜ்ஞானானந்த ஸ்வரூபனான ஸர்வேச்வரன் பிராட்டிமாரோடும், நித்யமுக்தரோடும் கூடவந்தெதிர் கொள்ள.

[4]ப்ராக்ருதனானவன் [5]அப்ராக்ருதனாய் வருகிறபடியே! என்று அத்யாச்சர்யத்துடனே வந்து எதிர்கொண்டழைத்துச் சென்று.

---

[1]யாம்யகதி=யமனுலகுக்குப் போகும்வழி. [2]அபுனராவ்ருத்தி லக்ஷணம் (अपुनरावृत्तिलक्षणम्) = மீண்டும் ஸம்ஸாரத்தில் இழிவது புனராவ்ருத்தி; அதில்லாதது. முடிவற்ற (அந்தமில்) பேரின்பம் மோக்ஷமெனப்படுவது. மோக்ஷம் = (ஸம்ஸாரத்தினின்றும்) விடுதலை.

[3]நிகமம் (निगमम्)=முடிவு. [4]ப்ராக்ருதன் (प्राकृतन्)=ப்ரக்ருதி மண்டலத்துக்குட்பட்டவன். [5]அப்ராக்ருதன் (अप्राकृतन्) = ஸம்ஸார பந்தத்தை அறுத்தெறிந்து, அதினின்றும் விடுதலை (மோக்ஷம்) பெற்றவன். *ஸத்கரிக்க = பூசிக்க.

மாமணி மண்டபத்து=ஆனந்தமயமான திருமாமணி மண்டபத்திலே. அந்தமில் பேரின்பத்தடியரோடே= யாவதாத்ம பாவியாய், நிரதிசயமான ஆனந்தத்தை யுடையாராய்க்கொண்டு இருப்பார்கள்.

[6]அநந்த க்லேச பாஜனமான ஸம்ஸாரத்திலே, ஸுகமென்று ப்ரமிக்கு மித்தனை. துக்கமே யுள்ளது. [7]'பாண்டு [8]ஒருவன் மேலே அம்பை விட; 'ஸம்ஸாரத்தி லாயிரங்கூற்றில் ஒரு க்ஷணமாயிற்று ஸுகமுள்ளது. அத்தைப் புசிக்கவொட்டிற்றில்லையே' என்றானிறே.

'அடியரோடிருந்தமை- கொந்தலரித்யாதி=நித்ய வஸந்தமான சோலையையுடைத்தான திருநகரியை யுடைய ஆழ்வார் அருளிச்செய்த. போக்கிலே ஒருப்பட்டவாறே திருநகரி தொடங்கி நித்ய விபூதியளவும் சோலை செய்தது. சந்தங்கள் ஆயிரத்தும்= துயராறு சுடரடி தொழு தெழென்று சரணாகதியானது, ஆயிர சாகையாய்க் கொண்டு ரக்ஷிக்க. சந்தங்களாயிரத்திவை வல்லார். சந்தங்களாயிரத்தும்=[9]சந்தஸ்ஸுக்களை யுடைத்தானவாயிரம் என்னுதல், [10]சந்தோரூபமான வாயிர மென்னுதல்.

'இவை வல்லார் முனிவரே=இத்தையப்யஸிக்கவல்லார் அத்தேசத்திலே பகவத்குணைகதாரகராய் அனுபவித்துக்கொண்டு, அதிலே [11]வித்தராய் அதுக்கவ்வருகு கால்வாங்கமாட்டாதே யிருக்கு மவர்களைப் போலே யாவர்கள்.

பத்தாம்பத்து ஒன்பதாந்திருவாய்மொழி விவரணம் முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

[6]அநந்தக்லேசபாஜனம் (अनन्तक्लेश-भाजनम्)=எல்லையற்ற துன்பங்களுக்கிருப்பிடமானது. [7]பாண்டு(पाण्डु)=தர்மபுத்ரர் அர்ஜுனன் முதலியோரின் தகப்பன். [8]'ஒருவன்'=மான்வேடம்பூண்டு, தன் ஸ்த்ரீயுடன் புணர்ச்சியிலீடுபட்ட ஒரு ரிஷி. [9]சந்தஸ்ஸுக்கள்= பலவிதமான விருத்தங்கள் கலிவிருத்தம்—வஞ்சித்துறை—முதலியன. [10]சந்தோரூபம் (छन्दोरूपम्) = வேதமயமானது. [11]வித்தராய் (विद्धराय्)=அழுங்கால்பட்டவராய்.

ஸ்ரீ:

பத்தாம்பத்து பத்தாந்திருவாய்மொழி விவரணம்

(கலிநிலைத்துறை)

முனியே! நான்முக னே!முக் கண்ணப் பா!வென்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கட்கரு மாணிக்க மே!யென்கள்வா!
தனியே னாருயி ரே!யென் தலைமிசை யாய்வந்திட் டு
இனிநான் போகலொட் டேனென்றும் மாயஞ்செய்
[யேலென்னையே.

'முனியே நான்முகனில் கீழிவற்குப் பிறந்தது ஜ்ஞானனு ஸந்தான மாத்ரமாய்ப் பின்பு மிவ்வுடம்புடனே கூடி யிருக்கை யாலே, பிரிவாற்றாமையோடே கூப்பிட்டுத் திருவாணையிட்டுத் தடுத்துப் பரபக்தி தலையெடுத்துச் சரணம்புக்கு; தம்முடைய ப்ரக்ருதி ஸம்பந்த மற்று எம்பெருமானைப் பெற்று க்ருதார்த்த ராயருளினார்.

பத்தாம்பாட்டு

சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந் தமுடி வில்பெரும் பாழேயோ!
சூழ்ந்தத னிற்பெரி யபர நன்மலர்ச் சோதீயோ!
சூழ்ந்தத னிற்பெரி யசுடர் ஞானவின் பமேயோ!
சூழ்ந்தத னிற்பெரி யவென்ன வாவறச் சூழ்ந்தாயே. (10)

"உயர்வற என்கிற பாட்டைச் 'சூழ்ந்தகன்று' என்கிற பாட்டு விவரிக்கிறது. எங்ஙனேயென்னில்:—

உயர்வற, மனுஷ்யானந்தந் தொடங்கி பிரம்மானந்தத்தள வும் காம்ய பலங்களைப் புஜித்து ஸம்ஸரிப்பர்கள்.

இவர் அங்ஙனன்றிக்கே, நிர்ஹேதுகமாக அருளப்பெற்ற வராகையாலே, ஜ்ஞானனந்தங்களாலே உயர்வுமுடைய எம் பெருமானுக்கு இவரபேக்ஷிதம் செய்தல்லது நிற்க வொண்ணாத படி, பெரியபிராட்டியா ராணையிட்டுத் தடுத்துப் பெரிய ஆர்த்தி

யோடே கூப்பிட, இவர் ப்ரார்த்தித்தபடியே பரிபூர்ணனாய்க் கொண்டு வந்து ஸம்ச்லேஷித் தருளக்கண்டு, [1]அபரிச்சேத்ய மான [2]ப்ராக்ருதி தத்வத்திலும், [3]ஆத்ம தத்வத்திலும், உன்னுடைய ஸங்கல்பரூப ஞானத்திலும் பெரிதான என்னுடைய விடாயெல்லாந் தீரவந் தென்னோடே கலந்தாய். என்னுடைய [4]மனோரதமும் ஒருபடி முடியப்பெற்றேன், என்கிறார்.

'இனி இல்லை' என்னும்படி என்னை விடாய்ப்பித்து, அதுக்கவ் வருகான விடாயை யுடையையாய்க் கொண்டு என்னோடே கலந்து உன்னுடைய விடாயும் ஒருபடி கெட்டதே என்கிறார்.

உயர்வற உயர்நலம் சூழ்ந்தகன்றாழ்ந்தித்யாதி = இப்போது ப்ராக்ருதி புருஷர்களைச் சொல்லுகிறது; தம்முடைய [5]அபிநிவேசம் பெரியவற்றிலும் பெரியதென்கைக்காக.

மயர்வற மதிநல மருளப் பெற்றவத்தாலே; மேல்மேலே பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளாய்ப் பெருகி வருகிறபடி. அவற்றுக்கு ஈச்வரனை யொழிய [6]ப்ருதக்ஸ்திதி யில்லாமை யாலே அவ்வளவும் சொல்லுகிறது.

[7]ஸ்வகார்யமான [8]மஹதாதிகளைப் பத்து திக்கிலும் புக்கு எங்குமொக்க வியாபித்து, நித்யமாய், அபரிச்சேத்யமாய், சேதனருக்குப் புருஷார்த்தத்தை விளைத்துக்கொள்ளலாம் நிலமான ப்ராக்ருதி தத்வத்துக் காத்மாவானவனே!

அருளினது பக்திரூபாபன்ன ஜ்ஞானமாகையாலே 'சூழ்ந்தித்யாதி = அத்தையும் வ்யாபித்து அதிற் காட்டில் பெரியதாய்,

---

[1]அபரிச்சேத்யம் (अपरिच्छेद्यम्) = அளவிடமுடியாதது. [2]ப்ராக்ருதி தத்வம் (प्रकृति तत्त्वम्) = ப்ராக்ருதி என்னும் மெய்ப் பொருள். [3]ஆத்மதத்வம் (आत्मतत्त्वम्) = ஜீவாத்மா வென்னும் பொருள். [4]மனோரதம் (मनोरथम्) = ஆசை. [5]அபிநிவேசம் (अभिनिवेशम्) = அவா. [6]ப்ருதக் ஸ்திதி (पृथक् स्थिति) = தனித்து இருத்தல். [7]ஸ்வகார்யம் (स्वकार्यम्) = தன் (இங்கே மூலப்ரக்ருதியி) னுடையகார்யம். [8]மஹதாதிகள் (महदादिकळ्) = மஹத்தத்வம் – ஸாத்விக – ராஜஸ – தாமஸ – அகங்காரங்கள், ஐந்து பூதங்கள்,இவைகளின் பல்வேறு உருவங்கள்.

அதுக்கு நியந்தாவாகையாலே மேலாய், [9]விகாராதிகளில்லாமை யாலே அபரிமாணமாய், நிரவதிக தேஜோரூபமான ஆத்மவஸ்து வுக்கு ஆத்மாவானவனே!

அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன் சூழ்ந்ததனில் பெரிய சுடர்ஞான(மி)வின்பமேயோ—அவையிரண்டையும் வ்யாபித்து, அவற்றுக்கு நிர்வாஹகமாய், ஸங்கல்பரூபமாய், விசதமாய்; விசதமாகையாவது=[10]யுகபதேவ [11]ஸாக்ஷாத்காரரூபமாயிருக்கை. இப்படி ஸ்வரூபமான ஜ்ஞானத்தை யுடையவனே! என்று ஸங்கல்பரூப ஜ்ஞானத்தைச் சொல்லுதல்.

'சுடர்ஞான(மி) வின்ப'மென்று-ப்ரகாசரூபனுமாய், ஸுகரூ பனுமானவனே என்று எம்பெருமானைச் சொல்லித்தாகவுமாம்.

இப்படி த்த்வ த்வயத்துக்கும் அவ்வருகான உன் துயரறு சுடரடி தொழுதெழ என் மனஸ்ஸினுடைய அவாவானது "சூழ்ந் ததனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாயே [12]தத்வ த்ரயத்தை யும் [13]விளாக்குலைக்கொண்டு, அவை குளப்படியாம்படி பெரிய தான என்னுடைய அபிநிவேசத்தையே, அதிலும் பெரிய உன் னபிநிவேசத்தைக் காட்டி, வந்து ஸம்ச்லேஷித்தாயே. என்னு டைய கூப்பீடும் ஒருபடி ஓயும்படி பண்ணிற்றே.

[14]"அங்கே பரதமாரோப்ய முதித: பரிஷஸ்வஜே" என்று நீ மீண்டு புகுந்து ஸ்ரீ பரதாழ்வானை மடியில் வைத்து, உச்சியை

---

[9]விகாராதிகள் (विकारादिकळ्) = இங்கு ஸ்வரூபாந்யதாபாவம் விகாரமெனப்படும். அதாவது ஒரு உருவங்குலைந்து மற்றொரு உருவங்கொள்ளுதல் (உதாரணம்=மண், 'குடமாக' மாறுவது.) ஜீவாத்மாவுக்கு அங்ஙனன்றிக்கே என்றும் மாறாத 'ஜ்ஞான, மாகிற ஸ்வரூபம் உள்ளதாகையாலே ப்ரக்ருதியைப்போல் விகாரம் இதற்கில்லை. [10]யுகபத் (युगपत्)=ஒரே ஸமயத்தில். [11]ஸாக்ஷாத்காரம் = பிரத்யக்ஷம். [12]தத்வத்ரயம் = ப்ரக்ருதி ஜீவாத்மா - பரமாத்மா. [13]விளாக்குலைக்கொள்ளுதல் = தன்னுள் அடக்குதல். தத்வத்ரயங்களையுங் காட்டில் பெரியதென்கை.

[14](अङ्के भरतमारोप्य मुदितः परिषस्वजे)=இதன் பொருள் தொடர்ந்து உரைக்கப்பட்டது நூலிலேயே.

மோந்து, உகந்தணைத்தாற்போலே யாயிற்று, இவருடைய விடாய் கெடும்படி கலந்தது.

பதினொன்றாம்பாட்டு

அவாவறச் சூழரி யையய னையர னையலற்றி
அவாவற்று வீடுபெற் றகுருகூர்ச்சட கோபன்சொன்ன
அவாவிலந் தாதிக ளாலிவை யாயிர மும்முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந் தார்பிறந் தாருயர்ந்தே. (11)

உயர்வற என்கிற பாட்டை 'அவாவறச்சூழ்' என்கிற பாட்டு விவரித்து நிகமிக்கிறது.

[1]அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதான ஜ்ஞாநானந்த ஸ்வரூபனாய், உயர்வற உயர்நல முடையனாய், அயர்வறு மமரர்க ளதிபதியாய், [2]ஸௌந்தர்யாதி விசிஷ்டமான நித்யமங்கள விக்ரஹ யுக்தனாய் - [3]அபரிமித திவ்ய பூஷண பூஷிதனாய், [4]ஸர்வாவயவோபேதனாய், [5]ஸர்வாயுத தரனாய், [6]லக்ஷ்மீ பூமி நீளா நாயகனாய்,

---

[1](अखिल हेयप्रत्यनीक कल्याणैकतान ज्ञानानन्दैकस्वरूपन्) — எல்லா வகையான தோஷங்களுக்கும் எதிர்த் தட்டாய், நல்ல வகைகளுக்கே உறைவிடமாய் ஜ்ஞானம், ஆனந்தம், இவைகளேயான வடிவையுடையவனாய். [2]ஸௌந்தர்யம் (सौन्दर्यम्) = அழகு, ஸௌகந்த்யம் (सौगन्ध्यं) = திவ்ய பரிமளமுடைமை. ஸௌகுமார்யம் = மென்மை, இதுபோன்ற அளவிறந்த நல்ல குணங்களையுடைத்தாயும், ஆதி—அந்தமில்லாத மங்களகரமான திருமேனியை யுடையவனாய். [3](अपरिमितदिव्यभूषणभूषितनाय्) = அளவிடவொண்ணாத திவ்யசோபையை யுடையவைகளும், எண்ணற்றவைகளுமான அப்ராக்ருதமான கிரீடம் முதலிய திருவாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவனாய். [4](सर्वावयवोपेतनाय्) = தோள் கண்டார் தோளே கண்டார், என்கிறபடியே தங்களுடைய அற்புதமான அழகு, அமைப்பு, இவைகளால் கண்டார் மனத்தைக்கொள்ளை கொள்ளுவதான திருமேனியின் அவயவங்களெல்லாம் நன்கு அமையப்பெற்றவனாய். [5](सर्वायुधधरनाय्) = பக்தர்கள் துயரறுக்கும் ஸ்வபாவமுள்ள சங்கு, சக்கரம், கதை, வில், கத்தி, முதலான பலவிதமான திவ்யாயுதங்களைத் தாங்கி நிற்பவனுமாய். [6](लक्ष्मी भूमि नीलानायकनाय्) = திருமகள், நிலமகள், நீளாதேவி, இவர்களுக்கு நாதனாய்.

[7]அஸ்தானே பயசங்கிகளான அனந்த கருட விஷ்வக்ஸேநாதிக ளாலே அநவரதபரிசர்யமாணசரணநளினனாய், [8]ஸ்ரீ வைகுண்ட ஸர்வேச்வரனாய், [9]நித்யமுக்தானுபாவ்யனா யிருக்கிறவன்; [10]ஸ்வவிபூதிபூதரான பிரம்மருத்ரர்களுக்கு அந்தராத்மா வாய், தன்னைக் கானவேணுமென்று விடாய்த்து ஆச்ரயிக்குமவர் களுடைய விடாய்தீர ஸம்ச்லேஷிக்கும் ஸ்வபாவனான எம்பெரு மானைக் காணவேணுமென்று விடாய்த்துக் கூப்பிட்டு, அவனைப் பெற்று [11]நிர்த்துக்கராய், [12]நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகரான ஆழ்வாருடைய [13]பக்தி பலாத்கார பூர்வகமாகப் பிறந்ததாயிரந் திருவாய்மொழியும்.

அவற்றில் வைத்துக்கொண்டு, கீழ்ச்சொன்னவை போலன் றிக்கே; பெற்றல்லது தரிக்கவொண்ணாதபடியான பரம பக்தி யாலே பிறந்த வந்தாதியான யித்திருவாய்மொழி வல்லார், ஸம் ஸாரத்திலே பிறந்து வைத்தே அயர்வறு மமரர்களோ டொப்ப ரென்கிறார்.

'உயர்வற, என்கிறது, அவாவற என்கிறது. உயர்நல முடை யவன் யவனவன் அவாவறச் சூழரி. ஜ்ஞானானந்தாதி குண

[7]ஸர்வசக்தனான உனக்கு எவ்விதமான தீங்கிற்கும் காரண மில்லாமலிருந்தும், உன்னிடம் அன்பு மேலிட்டால், "இந்த அற்புதமான வைபவத்துக்கு ஒரு தீங்கும் வராமல் இருக்க வேண்டுமே" என்று ஒரு வினாடியும் உன்னைவிட்டகலாமல் நித்ய கைங்கர்யம் பண்ணுமவர்களான, அனந்தன், கருடன், விஷ்வக் ஸேனர் முதலியவர்களால் உபசரிக்கப்பெற்ற, தாமரைப் பூபோன்ற திருவடிகளையுடையவனாய். [8](श्रीवैकुण्ठसर्वेश्वरनाय्)= ஸ்ரீ வைகுண்டம் முதலிய எல்லாவுலகங்களுக்கும் நாதனாய். [9](नित्यमुक्तानुभाव्यनाय्)=நித்யர்களாலும், முக்தர்களாலும் அனுப விக்கப்படுகிறவனாய்.
[10](स्वविभूति भूत ब्रह्मरुद्राद्यन्तरात्मा)=தன் (ஏவலாளர்களான) விபூதி யாக இருக்கும், நான்முகன், முக்கண்ணப்பன் முதலிய ஸமஸ்த மான சித், அசித், என்கிற வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாய்.
[11](निर्दुःखर्)=துயரற்றவர். [12](निरस्तसमस्तप्रतिबन्धकर्)=எல்லா விதமான இடையூறுகளும் தொலைந்தவர். [13](भक्ति बलात् कारम्)=பக்தி வெள்ளமிட்டோடுகையாலே, மனதில் அடங்கா மல் வாயினால் பாடியல்லது தரிக்க வொண்ணாமை.

விசிஷ்டனாய், [14]தத்வ்யதிரிக்தங்களுக்கு ஸ்வாமியாய், [15]ஸர்வாபேக்ஷிதப்ரதனான ஸர்வேச்வரனைத் தம்முடைய அபிநிவேசங்கெட வந்து கலந்தபடியாலே, வேறொரு [16]விசேஷணமிடாதே அதுதன்னையே சொல்லுகிறார்.

'உயர்வற உயர்நல முடையவன் யவனவன்—அவாவறச் சூழரி' யென்று திருநாம மாயிற்று.

உயர்வற—என்றது, 'அயனை—அரனை=ஸ்வவிபூதி பூதரான பிரம்ம ருத்ரர்களான அவர்களுக்கு அந்தராத்மாவாய் மறைநின்றவன் யாவனொருவனவன்.

இப்படிச் விபூதிமானான உயர்நல முடையவன் ச்ருதிப்ரஸித்தனானவனை 'அவாவறச் சூழரி' என்றது தானே ரூபகமாய்த்தது.

இப்படிச்செய்கைக்கு ஹேது என்னென்னில்:—

மயர்வற மதிநல மருளினன். [17]த்ரிமூர்த்திஸாம்யக் கூழ்ப்பை யறப்பண்ணித் தன் நிர்ஹேதுக க்ருபையாலே பக்திரூபாபன்ன ஜ்ஞானம் மிகுத்த அவாவாய் தத்வத்ரயத்துக்கு மவ்வருகாயிற்று.

அவாவறச் சூழ்கையாவது:—தன்னைக் காணவேணுமென்று விடாய்த்த ஆச்ரிதருடைய விடாய்தீர ஸம்ச்லேஷிக்கை.

---

[14]தத்வ்யதிரிக்த ஸ்வாமி (तद्व्यतिरिक्त स्वामी) = தன்னையொழிய மற்றெல்லாவற்றிற்கும் உடையவன். [15]ஸர்வாபேக்ஷிதப்ரதன் (सर्वापेक्षितप्रदन्) = எல்லோர்க்கும் விரும்பின பேறுகளெல்லாம் தருபவன்.

[16](विशेषणम्) = அடைமொழி. [17]த்ரிமூர்த்திஸாம்யம் (त्रिमूर्ति-साम्यम्) = மும்மூர்த்திகளும் வெவ்வேறு அல்ல ஒரே தத்வம் என்பது; அல்லது, மும்மூர்த்திகளுள் ஏற்றத்தாழ்வு இல்லை; என்பது. கூழ்ப்பு = பிரமம்.

'அயனை யரனை' என்கிற [18]இஸ்ஸாமாநாதிகரண்யத்தாலே ப்ரம்ம ருத்ரர்கள் பக்கல் ஈச்வரத்வ சங்கையை யறுக்கிறார். அவர்களுடைய ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ஈச்வராதீனமாகையாலே அவர்களுக்கு பாரதந்த்ர்யமே ஸ்வரூபம். நிர்வாஹகத்வங் கர்மாதீனமாய் வந்த வித்தனை.

இஸ்ஸாமாநாதிகரண்யத்தில் ஜ்ஞானமன்றியே எளியராயிருப்பார்க்கு நிர்வஹிப்பதுஞ் சில புடைகளுண்டு:—

'அயனை யரனை யவாவற்று அரியை யலற்றி யவாவற்று வீடு பெற்ற—என்னுதல்.

அயனை யரனை அவாவறச் சூழரியை யலற்றி யவாவற்று வீடுபெற்ற-வென்னுதல்.

அரியை யலற்றி யவாவற்று வீடு பெற்ற என்னுதல்.

---

[18]ஸாமாநாதிகரண்யம் (सामानाधिकरण्यम्) = பலசொற்கள் அதததற்குரிய ஒரு பொருளைக்காரணமாக வைத்து ஒரே வஸ்துவைச் சொல்லுதல். नील: घट: = குடம் கருப்பானது. இங்கு 'குடம்' 'கருப்பானது' என்கிற இரண்டு பதங்களும் 'குடத்தை'யே குறிக்கும். அதில் 'குடம்' என்னும் பதம் அதன் வடிவையும் 'கருப்பு' என்னும் பதம் அதன் நிறத்தையும் குறிக்கின்றன. இவ்விருபதங்கள் இதன் தன்மைகளைச் சொல்லி அவைகளை உடைத்தான ஒரு பொருளையே தெரிவிக்கின்றன. இவ்விதம், அரியை—அயனை—அரனை அலற்றி, என்கிற விடத்திலும் கொள்ள வேணும். இங்கு 'அரி' என்பது முக்யமான (விசேஷ்யம்) பொருளைக் குறிப்பது. அயனை—அரனை என்னுமிவை அதற்கு அடைமொழிகளாகி, அதன் தன்மையை குறிக்கும் சொற்கள். 'அயன் = பிரமன். அரன் = சிவன். இவர்களுக்கு அந்தர்யாமியாய் இருப்பவன் என்று பொருள். பதவுரை:—அயனை = நான்முகனுக்கு அந்தர்யாமியாய் இருந்து உலகசிருஷ்டியைப் பண்ணுமவனும்; அரனை = முக்கண்ணப்பனுக்கு அந்தர்யாமியாய் உலகை அழித்தல் செய்யுமவனுமான, 'அரியை = ஸ்ரீ மகாவிஷ்ணுவை; 'அலற்றி' என்று. இதனால், நான்முகனுக்கு 'ஆக்கும்' சக்தியும், முக்கண்ணப்பனுக்கு 'அழிக்கும்' சக்தியும், ஸ்ரீ விஷ்ணுவின் அனுப்ரவேசத்தாலேயே உண்டாகிறதன்றி, ஸ்வரூபத்தில், அவ்விருவரோடு – மற்ற சேதனர்களோடு – வாசியில்லை என்பதும்; ஸ்ரீமந்நாராயணனே 'பரம்பொருள்' என்பதும் பரக்கக்காண்பிக்கப்பட்டது.

'அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்—அலற்றுதலாகிற அபர்வற—அவாவற—அமரர்களான நித்யஸூரிகளாகிற அடியார்கள் குழாங்களாகிற நித்யஸூரிகள் திரளிலே வைத்துச் 'சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே'ன்கிறபடியே, வீடுபெற்ற=கூப்பிட்டு அவனைப் பெற்று நிரஸ்த ஸமஸ்த ப்ரதிபந்தகராகையாலே நிர்த்துக்கரான ஆழ்வார் அருளிச்செய்த. 'அவாவிலந்தாதிகளாலிவை யாயிரமு முடிந்த=பக்தி பலாத்காரத்தாலே பிறந்த வாயிரந் திருவாய்மொழியிலும், இவருடைய ஸ்ரீமைத்ரேய பகவான் அவா, உபாத்பாயராக நடத்த, நடந்த ஆயிரம்.

ஆழ்வாருக்குப் பின்பு நூறுயிரங்கவிகள் போரவுண்டாய்த்து. அவர்கள் கவிகளோடு—கடலோசையோடு—வாசியற்றது. அவற்றை விட்டு இவற்றைப் பற்றித் துவளுகைக்கடி, இவருடைய அபிநிவேசம் வழிந்து புறப்பட்ட சொல்லாகையிறே.

முடிந்த அவாவிலந்தாதிஇப்பத்து=உயர்வற உயர்நலமுடையவன், அயர்வறு மமரர்க ளதிபதி. அவன் துயரறு சுடரடி தொழுதெழும்படி, மயர்வற மதிநல மருளின பக்தி ப்ரேமாதிசயத்தாலே பிறந்த வாயிரந் திருவாய்மொழியி லிப்பத்து.

முடிந்த அவாவிலிப் பத்தறிந்தார்=இவரவாவால் தரிக்கவொண்ணாமையாலே பொங்கி வழிந்து, அநுபவமும் பொங்கி வழிந்த சொல்லாய்த்து இப்ரபந்தம்.

இவ்வவாவுக்கு உதவிற்றிலனாகில் ஈச்வரனும் சேதனனுமின்றிக்கே ஒழியும்.

சூழ்விசும்பணி முகிலுக்குக் கீழ் [19]பரபக்தியாலே சென்றது. சூழ்விசும்பணிமுகில் [20]பரஜ்ஞானத்தாலே. இத் திருவாய்மொழி [21]பரமபக்தியாலே. [22]பகவத் ப்ரஸாதம் பாதியும் தாங்கள்

---

[19]பரபக்தி (परभक्ति)=மோக்ஷத்திற்கு உபாயமாக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட பக்தி. [20]பரஜ்ஞானம் (परज्ञानम्)=அந்த பரபக்தியினுலுண்டான பகவானுடைய ப்ரத்யக்ஷம். [21]பரமபக்தி (परमभक्ति)=இப்படி பகவானை ப்ரத்யக்ஷமாகக் கண்டவாறே உண்டாகும் ப்ரீதிக்குப் பெயர். [22](भगवत्प्रसाद:)=பகவானுடைய அருள்.

பாதியுமாகச் சொல்லுமவர்களுக்கு [23]சரீராவஸாநத்திலே யிப் பரபக்த்யாதிகளுண்டாம்.

இவரடியிலே மயர்வற மதிநல மருளப்பெற்றவராகை யாலே, எழுந்தருளியிருக்கச்செய்தே உண்டாய்த்தன. [24]கர்ம ஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்தியினுடைய ஸ்தானத்திலே ஸர் வேச்வரன் அருளின அருளடியாகப் பிறந்த பரபக்த்யாதி களிறே இவரது.

'அறிந்தரர் பிறந்தாருயர்ந்தே=இத்தையறிந்தவர்கள் ஸம் ஸாரத்திலே பிறந்துவைத்தே நித்ய ஸூரிகளோடொப்பர். பிறந்தே உயர்ந்தார்=ஸர்வேச்வரனுடைய அவதாரத்தோபாதி யிவர்கள் பிறப்பும்.

அஸ்மத் குருப்யோ நம:

ஆழ்வார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம்

சந்திரகிரி அய்யன் திருவடிகளே சரணம்

ஸ்ரீமந் நாராயணனய்யர் திருவடிகளே சரணம்

திருக்கோட்டியூர் ஜீயர் திருவடிகளே சரணம்

வடக்குத்திருவீதிப் பிள்ளை திருவடிகளே சரணம்

---

[23]சரீராவஸாநம் (शरीरावसानम्)=சரீரத்தின் முடிவு (இறப்பு).
[24]கர்மஜ்ஞாநாநுக்ருஹீதபக்தி (कर्मज्ञानानुगृहीतभक्ति)=கர்மம்= அவரவர்களுக்கு அவச்யம் செய்யவேண்டியதாக சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட நித்ய நைமித்திகமான சடங்குகளும், தீர்த்த யாத்ரை முதலானவைகளும். இவை ஒரு பயனையும் கருதாமல் செய்யப்படவேண்டுமவையாகும். ஜ்ஞானம்= பகவானுடைய உண்மையான ஸ்வரூபத்தைத் தெளிவாய் அறிதல். இவை பக்திக் குக் காரணங்களாகும் என்கை.

ஆங்கிரஸ வருஷம், மார்கழி மாஸம், 26ந்தேதி 'உயர்வற உயர் நலமுடையவன்' என்கிற முதல் பாட்டின் 'விவரண சதக' மென்ற திருநாமமான வாசகமாலையை, அபர்யாப்தன் திருவடிகளிலே ஸங்கர்ப்பமான மாலையைச் செய்தடிமை செய்தாள் 'திருக்கோனேரி தாஸ்யை'

[25]கரக்ருதமபராதம் க்ஷந்து மர்ஹந்தி ஸந்த:. ஹரி: ஓம்.
சுபமஸ்து.

முற்றும்.

[25](करकृतमपराधं क्षन्तुमर्हन्ति सन्त:)=அடியேன் கையினுல் (இந்த நூலை எழுதுவதன் மூலம்) செய்யப்பட்ட தவறைப் (ஏதேனும் இருந்தால்) பெரியோர்கள் பொறுத்தருளவேண்டும்.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலையில் விவரிக்கப்பெற்றுள்ள திருவாய்மொழிச் செய்யுள்களின்

முதற்குறிப்பகராதி

அ	பக்கம்
அகலகில்	174
அங்கும்	233
அணைவத	39
அந்தாம	30
அருகலி	10
அருள் தா	244
அருள்பெ	303
அறிந்த	98
அறுக்கு	274
அவாவற	328
ஆ	
ஆடியாடி	27
ஆராவமு	126
ஆருயிர்	270
ஆருயிரே	225
ஆழியெழ	192
இ	
இடரின்	78
இருத்தும்	244
இவையு	10
இனியார்	25
இன்பம்	221
இன்றென்	316
இன்னுயி	267

இ	பக்கம்
இன்னமு	181
உ	
உகவையா	145
உண்ணிலா	181
உண்ணுஞ்	159
உருகுமா	269
உரைக்க	86
உலகமு	173
உன்னித்	96
ஊ	
ஊதுமத்	278
ஊரெல்லா	116
ஊனில்வா	24
எ	
எங்கான	272
எங்ஙனே	118
எம்மாவீ	43
எல்லியு	241
எனக்கோ	272
என்றைக்	214
ஏ	
ஏழையரா	208
ஏறுளும்	99
ஏனமாய்	124

ஒ

ஒருநாயக 81
ஒன்றுந்தே 105
ஒழிவில்கா 54

ஓ

ஓடும்பு 10
ஓராயிர 262

க

கங்குலும் 184
கடல்ஞா 121
கண்கள் 246
கண்டுகொ 265
கண்ணனல் 256
கண்ணன்க 301
கருமமுங் 61
கருமாணிக் 249
கழியமிக் 119
கற்பாரிரா 196
காதன்மென் 141
கிளரொளி 46
கிற்பன்கி 52
குரவையா 151
குறுக்மிக 81
கூந்தன்ம 122
கூட்டுதி 103
கெடுமிட 288
கேசவன் 37
கையார்ச 108
கொடுவினை 259
கொண்டல் 239
கொண்டபெ 256
கோவைவாயா 86
கோயில்கொ 242

ச

சதிரிள 47
சரணமா 282
சன்மம்ப 77
சன்மசன் 67
சார்வேத 297
சிக்கென 34
சிலமில்லா 98
சூழ்ந்தக 325
சூழ்விசும் 322
செஞ்சொற் 309
செய்யதாம 63
சொல்லீரென் 31
சொன்னல்வி 73

ஞ

ஞாலத்தூடே 166

த

தஞ்சமா 63
தமர்கள் 253
தாளதாம 285
திண்ணன் 31
திரியுங் 111
திருவருள் 249
திருமாலிரு 316
தீர்ப்பாரை 96
துவளின் 154
தெருளும் 247
தேவிமாரா 225
தொல்லருள் 135
தொல்லைய 230

ந

நங்கள் 229
நண்ணுதா 103
நண்ணுவ 310

ந

நம்பியை 14
நல்குரவு 148
நாடிநீர் 106
நாகணைமி 138
நீராய்நி 165
நெடுமாற்க 252
நோற்றநோ 124

ப

பணியாவ 236
பணிமொழி 292
பண்டைநா 258
பயிலுஞ் 67
பாஞ்சுட 148
பரிவதி 7
பாசங்கள் 212
பாசறவெ 163
பாமருமு 205
பாலனையே 83
பாவியல் 84
பிறந்த 137
பிறவித்து 8
பின்னைகொ 154
புகழுநல் 58
புண்ணிய 289
பொருமாநீ 13
பொலிகபொ 111
பொன்னுல 162

ம

மணிமாமை 100
மண்ணையி 89
மண்மிசை 151
மருந்தே 262
மல்லிகை 277
மாசறுசோ 113
மாகுணைச் 49
மாதவனே 301
மாயக்கூ 239
மாயாவாம 212
மாலுக்கு 157
மாலைநண் 281
மானேய்நோ 135
மின்னிடை 145
முடிச்சோ 49
முடியானே 70
முனியேநா 325
முன்னீர் 51
மையார்க 265
மொய்ம்மா 61

ய

யாவையும் 59

வ

வந்தவரெ 322
வாசகமே 71
வாட்டமில் 28
வாயுந்தி 17
வாய்கோண் 74
வார்கடா 238
வார்த்தை 200
வீற்றிருந் 92
வெஞ்சுட 116
வெள்ளைச் 189
வேய்மரு 292
வேவாரா 18
வைகுந்தா 33
வைகுந்தநா 216
வைகல்பூங் 141

ஸ்ரீ:

* திருப்பாவை ஸ்வாபதேசார்த்த விவரணம்.

திருப்பாவை அடியிட்டஞ்சு பாட்டாலே ப்ரபந்நாநுஷ்டா நக்ரமங்களையும், ப்ரபத்தி வாசகமான திருநாமவைபவத்தையும் பேசுகிறது. மேல் பத்து பாட்டாலே, ப்ரபத்தவ்யனுடைய திருநாமஸங்கீர்த்தனமே ப்ரபன்னனுக்குக் காலக்ஷேப மாகை யாலே, அந்த ஸங்கீர்த்தனத்துக்கு அதிகாரிகளானவர்களையுணர்த் திக் கூட்டிக்கொள்ளும்படி சொல்லுகிறது. எங்ஙனே என்னில்; 'புள்ளும் சிலம்பின' என்னும் முதல் பாட்டில், பரிசுத்தமான சப்தப்ரமாணத்தை முன்னிட்டு ஸத்த்வநிஷ்டரை ஸாத்த்விகஸமா சார நிதர்சநபூர்வகமாக பகவந்நாம ஸங்கீர்த்தனத்திலே ஸமா ஹிதராக்கும்படி சொல்லுகிறது. இரண்டாம்பாட்டு ஸாத்த்விகப்ர தானரை, விரோதி நிரஸநஸமர்த்தனுடைய ஸங்கீர்த்தனத்திலே ஸமாஹிதராக்கும்படி சொல்லுகிறது. மூன்றும்பாட்டில், ஸத்த் வோத்தரகாலத்தை முன்னிட்டு ஸத்த்வங்களாலே கொண்டாடும் படியான ஸ்ரீவைஷ்ணவர்களை, ஸகலவிரோதி நிவாரகனுடைய ஸங்கீர்த்தனத்திலே ஸங்கதராக்கும்படி சொல்லுகிறது.

[4]ம்பாட்டு ஜ்ஞானதீபப்ரகாசகராய், அத்தாலே உத்துங்க பதத்திலே இருக்கும்படியான ஸம்பந்த முடையவர்களை அவனு டைய ஸங்கீர்த்தனத்திலே ஸக்தராக்கும் க்ரமம் சொல்லுகிறது. [5]பகவத்குணவித்தர் பாசுரங்கேட்கையிலே அபேக்ஷை பிறப்பிக் கும்படி சொல்லுகிறது. [6]அபிஜாதரையும் ஆஹ்லாதகரமான ஸங்கீர்த்தனத்திலே அந்வயிப்பிக்கும்படி சொல்லுகிறது. [7]பக வத்ப்ரத்யாஸந்நரோடு ஆஸக்தியுள்ளாரை அபிராமமான திரு நாமஸங்கீர்த்தனத்திலே ஸக்தராக்கும்படி சொல்லுகிறது. [8]பக வத்ஜ்ஞாநநிஷ்டரை இதிஹாஸோக்த குண நாம ஸங்கீர்த்தனத்

* திருவாய்மொழி வாசகமாலை ஓலைச்சுவடியின் கடைசி இரண்டு ஏடுகளில் இவ்விஷயம் உளது. இதுவும் இவ்வாசிரியராலேயே இயற்றப் பட்டதாகையால் கடைசியில் தனியாகச் சேர்க்கப்பட்டது.

திலே ப்ரவண ராக்கும்படி சொல்லுகிறது. 9 ஸௌகந்ய ஸௌமநஸ்யயுக்தர் விகாஸத்தையும், ஸத்வோத்ரிக்தர் ஸமாராதந தத்பரராக்குகிறபடியையும் காட்டி, பரிபூர்ண ஜ்ஞாநரையும் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தனத்திலே தத்பரராக்கி... த்துக் கொள்ளும்படி சொல்லுகிறது. 10 வாக்பணிதியை யுடையாரை ஸமஸ்தப்ரதிபந்தக நிவர்த்தகனான ஸர்வேச்வர ஸங்கீர்த்தனத்திலே ஸஹகாரிகளாக்கும்படி சொல்லுகிறது.

16 நாயகனாய் என்று தடங்கி இப்படிப்பட்ட ஸங்கீர்த்தனத்தாலே, அவனுக்குரியாரையும் அவனையும் எழுப்பி, அபேக்ஷிதங்களை விண்ணப்பஞ்செய்து அடிமை செய்யும்படியையும், அவன் அடிமை கொள்ளும்படியையும் அவனுக்கறிவிக்கிறது மேலெல்லாம்.

திருப்பாவை அடியிட்டஞ்சுபாட்டாலே, ப்ரபன்ன நிஷ்டா ஜ்ஞாநமும், ப்ரபத்தவ்யன் நித்யன் அதிஸுலபன் ...ம்படியை போற்றி என்று மங்களாசாஸனம் பண்ணும்படியையும், தங்கள் ஆர்த்தத்வத்தையும், கைங்கர்யோபகரணங்களை அர்த்திக்கும்படியையும், எல்லோரும் அவனோடே கூடியிருந்து குளிரும்படியையும், பலஸத்ருச ஸாதநத்வ ராஹித்யத்தையும், கைங்கர்யவேஷத்தையும், அதில் களையறுப்பையும், கைங்கர்யப்ரதிஸம்பந்தியான ஸ்ரீய:பதி கடாக்ஷத்தாலே அந்தகைங்கர்யத்தைப் பெற்று வாழும்படியையும், சொல்லித் தலைக்கட்டுகையாலே, குருபரம்பரா பூர்வகமான விவரணமான இப்ரபந்தமே அநவரதானுஸந்தேயமென்றதாய்த்து.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலை

மேற்கோள்களின் குறிப்பகராதி

அட்டவணை

மேற்கோள்களின் குறிப்பகராதியில் அடியிற்கண்ட வரிசைக்கிரமத்தில் மேற்கோள்களின் இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொன்றிலும் அகராதியாக மேற்கோள்கள் எழுதப் பெற்றுள்ளன :—

1 ருக்வேதஸம்ஹிதை
2 யஜுர்வேதஸம்ஹிதை
3 தைத்திரீயோபநிஷத்
4 கடவல்லீ
5 ப்ருஹதாரண்யகம்
6 சதபதப்ராம்ஹணம்
7 ச்வேதாச்வதரோபநிஷத்
8 கௌஷீதக்யுபநிஷத்
9 சாந்தோக்யோபநிஷத்
10 அதர்வசிகோபநிஷத்
11 முண்டகோபநிஷத்
12 புருஷஸூக்தம்
13 ஸ்ரீஸூக்தம்
14 ராமாயணம்
15 வராஹபுராணம்
16 விஷ்ணுபுராணம்
17 மஹாபாரதம்
18 ஸ்ரீபகவத்கீதை
19 கருடபுராணம்
20 விஷ்ணுதத்வம்
21 லிங்கபுராணம்
22 பாகவதம்
23 பாஞ்சராத்ரம்
24 தர்மசாஸ்திரம்
25 பிரம்மஸூத்ரம்
26 ஸ்தோத்ரரத்னம்
27 கத்யத்ரயம்
28 ஸ்ரீரங்கராஜஸ்தவம்
29 ந்யாஸதிலகம்
30 தாதுபாடம்
31 தர்க்கஸங்கிரகம்
32 மீமாம்ஸா
33 நிகண்டு
34 இருப்பிடம் விளங்காதவை
35 முதலாயிரம்
36 பெரியதிருமொழி
37 திருவாய்மொழி
38 இயற்பா

|| श्री: ||

திருவாய்மொழிவாசகமாலையிலுள்ள மேற்கோள்களின் குறிப்பகராதி

(வடமொழி)

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்

१. ऋग्वेदसंहिता

50	युवाऽकुमार:	अष्टक - २ अध्याय - ४

२. यजुर्वेद:— तैत्तिरीयसंहिता

		का	प्र	अ	पं
71	मन: पूर्वो वागुत्तर:	७	५	१	३
186	सदा पश्यन्ति	१	३	६	२

३. तैत्तिरीयोपनिषत्

23	अप्राप्य मनसा सह	आनन्दवल्ली
215	असन्नेव	,,
131	अहमन्नम्	भृगुंवल्ली
160	अहमन्नाद:	,,
211	आनन्दं ब्रह्मणो विद्वान्	आनन्दवल्ली
29	एतत्साम गायन्नास्ते	भृगुवल्ली
107	तस्मिन्यदन्तस्तदुपासि	प्र-२. दहरविद्या
157	पतिं विश्वस्य	प्र-२ नारायणानुवाक:
226	बहु स्याम्	आनन्दवल्ली
75	यतो वाचो निवर्तन्ते	,,
161	सोऽश्नुते सर्वान्	,,

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்
315	सन्तमेनं	आनन्दवल्ली
41	स ब्रह्मा स शिवः	प्र - २ नारायणानुवाकः

४. कठवल्ली

		अ	वल्ली	म
95	इन्द्रियाणि हयान्	१	३	४
85	सर्वे वेदा यत्पदमामनन्ति	१	२	१५

५. बृहदारण्यकोपनिषत्

		अ	ब्रा	क
240	चक्षुषि तिष्ठन्	३	७	१८

६. शतपथब्राह्मणम्

149	यमात्मा न वेद	

७. श्वेताश्वतरोपनिषत्

235	परास्य शक्तिर्विविधैव	अ - ६ म - ८

८. कौषीतक्युपनिषत्

		अ	वा
40	अहं ब्रह्मास्मि	१	५३
40	कोऽसि	१	५१
41	पादेनाध्यारोहति	१	५१

९. सामवेदः— छान्दोग्योपनिषत्

		प्र	खं	वा
223	अवाक्यनादरः	३	१४	२
117	कप्यासं पुण्डरीकं	१	६	७
69	स्वेन रूपेणाभिनि	८	१२	२

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்		
158	सर्वगन्ध:	३	१४	२
34	सर्वरस:	,,	,,	,,
275	सर्वे पाप्मान: प्रदूयन्ते	५	२४	३

१०. अथर्ववेद: – अथर्वशिखोपनिषत्

		खण्ड:	मन्त्र:
65	कारणन्तु ध्येय:	२	७

११. मुण्डकोपनिषत्

299	यस्य ज्ञानमयं तप:	१	९
235	यस्सर्वज्ञस्सर्ववित्	,,	,,

१२. पुरुषसूक्तम्

		मन्त्र:
42	अमृतं दिवि	३
90	पद्भ्यां भूमि:	१५
152	यत्र पूर्वे साध्या:	१८
72	विपन्यव:	

१३. श्रीसूक्तम्

100	ईश्वरीँ सर्वभूतानाम्	मं - ९

१४. इतिहास:- श्रीमद्रामायणम्

		का.	स.	श्लो.
57	अहं सर्वं करिष्यामि	अयो	३१	२७
132	अकालफलिनो वृक्षा:	युद्ध	१२७	१९
167	अग्रत: प्रययौ राम:	आर	११	१
,,	अवष्टभ्य च तिष्ठन्तं	कि	१९	२६

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்		
		का.	स.	श्लो.
198	अपि वृक्षा: परिम्लाना:	अयो	५९	८
261	असितेक्षणा	सु	१६	५
306	अस्माभिस्तुल्यो भवतु	युद्ध	१८	३८
327	अङ्के भरतमारोप्य....	,,	१३०	३८
142	इदं मेध्यमिदं स्वादु	कि	१	८७
168	उपविष्टं स्वलङ्कृतम्	अयो	१६	११
,,	उटजे राममासीनं	,,	९९	२५
198	उपतप्तोदका नद्य:	,,	५९	९
142	ऊर्ध्वं मासान्न जीविष्ये	सु	३८	६७
317	कमललोचने	,,	३६	३३
168	किं कार्यं सीतया मम	युद्ध	४१	४
76	कृतं दशगुणं मया	,,	१३०	५३
157	कौसल्या लोकभर्तारं	सु	३८	५६
41	क्रियतामिति मां वद	आर	१५	७
260	गच्छानुजानामि	युद्ध	५९	१४१
129	गुणैर्दास्यमुपागत:	कि	४	११
19	गूढोऽग्निरिव पादपम्	अयो	८५	१७
187	जलान्मत्स्याविवोद्धृतौ	,,	५३	३१
114	तत्तस्य सदृशं भवेत्	सु	३७	६४
76	त्वयि किञ्चित् समापन्ने	युद्ध	४१	४
194	द्रुमचीरैरलङ्कृत:	सु	३३	२९
317	नत्वामिहस्थां जानीते	,,	३६	३३
169	न कश्चिन्नापराध्यति	युद्ध	११८	४५
142	नजीवेयं क्षणमपि	सु	६६	१०

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்		
		का.	स.	श्लो.
143	न द्रक्ष्याम: पुनर्जातु	अयो	५७	१३
129	परवानस्मि	आर	१५	७
294	पद्मकेसरसंसृष्ट:	कि	१	७२
210	पुंसां दृष्टिचित्तापहारिणम्	अयो	३	२८
208	पूर्णे चतुर्दशे वर्षे	,,	११२	२५
192	बाला अपि क्रीडमाना:	,,	६	६
167	बाहुं भुजङ्गभोगाभं	युद्ध	२१	२
20	बुद्ध्वा कालमतीतञ्च	कि	३०	३
76	भवद्विषयवासिन:	आर	१	१९
199	मया त्वं समनुज्ञात:	,,	५९	३०.
110	मित्रभावेन संप्राप्तं	युद्ध	१८	३
187	मुहूर्तमपि जीवाव:	अयो	५३	३१
259	यदि वा रावण: स्वयम्	युद्ध	१८	३४
317	राम:	सु	३६	३३
217	लोकनाथ: पुरा भूत्वा	कि	४.	१८
155	विष्णुना सदृशो वीर्ये	बा	१	१७
220	व्यसनेषु मनुष्याणां	अयो	२	४१
119	शोकश्च किल कालेन	युद्ध	५	४
134	स मया बोधित: श्रीमान्	सु	३८	२४
143	समाजेषु महत्सुच	अयो	५७	१३
296	सर्वभूषणभूषार्हा:	कि	३	१५
218	स रामो वानरेन्द्रस्य	,,	४	२३
74	सृष्टस्त्वं वनवासाय	अयो	४०	५

१५. पुराणानि -- वराहपुराणम्

68 अहं स्मरामि } चरम श्लोक:
69 स्मरामि }

१६. श्रीविष्णुपुराणम्

		अं.	अ.	श्लो.
207	अवलोकनदानेन	१	२०	१६
312	अखिलजगत्पद्म	५	३	२
155	उपमानमशेषाणां	१	१५	१५६
149	तेजसां राशिमूर्जितम्	१	९	६७
197	तद्ज्ञानमज्ञान	६	५	८७
56	देवत्वे देवदेहेयं	१	९	१४५
231	यन्नायं भगवान् ब्रह्मा	१	९	५९
207	सोऽप्येतं	५	१८	२
21	समस्तकल्याणगुणा	६	५	६
286	सुप्रभाता च मे निशा	५	१७	३

१७. श्रीमहाभारतम्

		पर्व.	अ.	श्लो.
80	अत्यर्कानलदीप्तं	आर	१६३	१९
180	ऋणं प्रवृद्धमिव मे	उद्यो	५९	२२
208	करेण मृदुना देव:	हरिवं	२७५	१५
38	कुलं तारयते तात			
153	कृत्वा भारावतरणं	मौस	८	२९
95	गृह्णाति शिरसा स्वयम्	शान्ति	३४८	१
37	तत: केशवनामवान्	हरिवं	८८	४८

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம் பर्व.	अ.	श्लो.
231	नग्राह्य: केनचित् क्वचित्	शान्ति	३५१	४
72	नम इत्येव वादिन:	,,	३३६	४०
24	बद्धाञ्जलिपुटा हृष्टा:	,,	३४४	....
64	भूतानां योऽव्यय: पिता	अनुशा	१४९	१०
219	मुकुंद: कुंदर: कुंद:	,,	,,	१००
79	यस्य मन्त्री च गोप्ता च			

१८. श्रीभगवद्गीता

		अ.	श्लो.
182	अग्रे यत् अमृतमिव	१८	३८
203	अहं त्वा	,,	६६
28	ईश्वरोऽहम्	१६	१४
203	एकं शरणं	१८	६६
9	जरामरणमोक्षाय	७	२९
304	तानहं द्विषत:	१६	१९
91	दिव्यं ददामि ते चक्षु:	११	८
305	ददामि	१०	१०
298	नमस्यन्तश्च माम्	९	१४
312	परित्राणाय साधूनाम्	४	८
25	बोधयन्त: परस्परम्	१०	९
263	भजस्व माम्	९	३३
36	मा शुच:	१८	६६
79	मामेकं	,,	,,
289	मद्भक्तो मन्मना भव	९	३४
,,	मद्याजी मां नमस्कुरु	,,	,,
290	मम माया दुरत्यया	७	१४

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம் அ.	श्लो.
290	मायां तरन्ति ते	७	१४
85	वेदैश्च सर्वैरहमेव	१५	१५
133	शरणं व्रज	१८	६६
168	संभवामि युगे युगे	४	८
203	सर्वपापेभ्यो मोक्षयिष्यामि	१८	६६
251	सर्वधर्मान्परित्यज्य	,,	,,
283	समोऽहं सर्वभूतेषु	९	२९
290	सततं कीर्तयन्तो मां	९	१४

१९. गरुडपुराणम्

199	देशोऽयं सर्वकामधुक्	

२०. श्रीविष्णुतत्त्वम्

74	विचित्रा देहसंपत्तिः	

श्रीविष्णुधर्मः

275	मेरुमन्दरमात्रोऽपि	
312	विष्णुभक्तिपरो दैवः	अ – १०९. श्लो – ७८.
313	विपरीतस्तथाऽऽसुरः	
286	संघैस्सुराणाम्	

२१. लैङ्गपुराणम्

65	ध्येयो नारायणस्सदा	उत्तरभागे - अ - ७. श्लो - १२.
200	वैकुण्ठेतु परे लोके	

२२. श्रीभागवतम्

37	केशवः क्लेशनाशनः	

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்

२३. श्रीपाञ्चरात्रम्

लक्ष्मी तन्त्रम्

178	कारुण्यरूपया	अ॰ - २८ श्लो - १४

जितन्ते स्तोत्रम्

		श्लो
158	जितन्ते पुण्डरीकाक्ष	१
75	भक्तानां	५
43	संसारसागरं घोरं	४

परमसंहिता

69	सायुज्यं प्रतिपन्ना ये

२४. धर्मशास्त्रम् (स्मृतय:)

आपस्तंब धर्मसूत्रम्

		प्र.	कं.	सू.
64	शरीरमेवमातापितरौ	१	१	१८
,,	श्रेष्ठं जन्म	१	१	१७
,,	स हि विद्यातस्तं जनयति	१	१	१६

२५. ब्रह्मसूत्राणि

		अ.	पा.	सू.
303	अश्लेषविनाशौ	४	१	१३
320	वैषम्यनैर्घृण्ये	२	१	३४
68	हार्दानुगृहीत:	४	२	१६

२६. स्तोत्ररत्नम्

		श्लो
46	अविवेकघनान्धदिङ्मुखे	४९
307	तथानुजानन्तमुदारवीक्षणै:	४२

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்	
		श्लो	
144	नित्यं यदीयचरणौ	२	
297	मदीयमूर्धानमलङ्करिष्यति	३१	
216	भक्तामृतं विश्वजना	திருவாய்மொழித் தனியன்	

२७. गद्यत्रयम्

शरणागति गद्यम्

328	अखिलहेय प्रत्यनीक		
261	एवंभूत		
295	निरतिशयसुखस्पर्श		
64	त्वमेव माता च		

२८. स्तोत्रजालम्

श्रीरङ्गराजस्तवः

		श्लो	
31	अतन्त्रितचमूपति	उ-श. ५७	
135	दयमानमनाः	„ ४१	

२९. न्यासविंशतिः

204	निर्भरो निर्भयोऽस्मि		

३०. व्याकरणम् – धातुपाठः

168	अव-रक्षणे		

३१. तर्कशास्त्रम्

90	गंधवती पृथिवी	तर्कसं	प्र	प
91	मञ्चाः क्रोशन्ति	दीपिका	श	प

३२. मीमांसा

124	शास्त्रफलं प्रयोक्तरि		

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்

३३. निघण्टुः

152	माया वयुनं ज्ञानम्	

34. இருப்பிடம் புலனாகாத சில மேற்கோள்கள் :—

172	अकारो विष्णुवाचकः
211	अवश्यमनुभोक्तव्यम्
185	दर्शनं परभक्तिः स्यात्
193	देवाः स्वस्थानमायान्ति
218	दशेन्द्रियाननं घोरं
39	नित्याञ्जलिपुटा हृष्टाः
72	नमः शब्दं प्रयुञ्जते
147	प्रसन्नादित्यवर्चसम्
116	यथा सूर्यस्तथा ज्ञानम्
24	सकलफलदो हि विष्णुः
295	किं सुखं वनमालासंक्रमस्य ...

திருவாய்மொழி வாசகமாலை மேற்கோள்களின் குறிப்பகராதி (தமிழ்)

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்	
	35 முதலாயிரம்		
136	அன்றிவ்வுலகமளந்தாய்	திருப்பாவை	24 பா
132	அனந்தன்பாலும்...	பெரியாழ்-தி	5- 4- 8
243	அரவத்தமளி...	,,	5- 2-10
218	அரசமர்ந்தானடி....	பெருமா-தி	10-7
,,	இளவரசுவைகுந்த....	பெரியாழ்-தி	3- 6- 3
286	உரம்பெற்ற மலர்....	,,	4- 9- 8
169	என்னடியாரதுசெய்....	,,	4- 9- 2
195	என்னிதுமாயம்....	,,	1- 9- 8
253	எந்தம்மைவிற்கவும்....	,,	4- 4-10
263	எருத்துக்கொடியுடையானும்	,,	5- 3- 6
210	கார்த்தண் கமலக்கண்....	நாச்-தி	14-4
153	சூழ்ந்திருந்தேத்துவர்...	பெரியாழ்-தி	1- 1-11
118	ஞானமாகி ஞாயிறுகி	திருச்ச-வி	114 பா
199	நல்லார்கள்வாழும்....	நா-தி	11-5
265	பெண்ணுலாம்சடை....	திருமாலை	44 பா
147	மூடநெய்பெய்து	நாச்-தி. (திரு.)	27 பா
193	முன்னையவண்ணமே	பெரியாழ்-தி.	1- 9- 8
263	மருத்துவனுய்நின்ற	,,	5- 3- 6
147	வண்டல்நுண்மணல்	நாச்-தி.	2- 3
235	வடிவாய்நின்	பெரியாழ்-தி.	1- 1- 1
,,	வடிவார்சோதி	,,	,,
286	வரம்புற்றகதிர்ச்செந்நெல்	,,	4- 9- 8
76	வானிளவரசுவைகுந்த	,,	3- 6- 3
	வாள்களாகி நாள்கள் செல்ல	திருச்-வி.	112 பா
243	விஷ்ணுசித்தன்மனத்தே	பெரியாழ்-தி.	5- 4-11
199	வேங்கடத்தைப்பதியாக	நாச்-தி.	8- 9

36 பெரிய திருமொழி

50	அரும்பினையலரை	7	10.	1
210	உயிர்க்கெல்லாம்	7	1	9
195	ஒன்றிதியிற்புனலுருவி		திருநெடு	5
7	கள்ளார்துழாயும்	11	7	6

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம் ப.	தி.	பா.
57	தெள்ளருவிகொழிக்கும்	9	9	7
48	நலந்திகழ்நாரணனை	9	9	9
22	பண்டிவரைக்கண்ட	8	1	9
315	பாட்டினுலுன்னை	8	10	9
69	மாதவன் தன் துணையா	3	7	4
287	மைவண்ணநறு...	திருநெடு	21	

(37) திருவாய் மொழி

	அ			
101	அகலகில்லேன்	6	10	10
30	அடியார்கள்குழாங்களை	2	3	10
174	அடியேன்	2	3	6
44	அணைவதரவணை	2	8	1
33	அந்தாமத்தன்பு	2	5	1
153	அந்தமில்பேரின்ப	10	9	11
174	அருவினையேன்	1	5	1
	அப்பொழுதைக்கப்பொழு	2	5	4
	ஆ			
33	ஆடியாடி	2	4	1
216	ஆமுதல்வனிவ	7	9	3
	இ			
192	இட்டகாலிட்டகை	7	2	4
	உ			
14	உச்சியுள்ளே	1	9	11
299	உரலினோடிணைந்திரு	1	3	1
219	உன்னடியார்க்குத்திமைகள்	2	6	1
	ஊ			
115	ஊரவர்கவ்வை	5	3	4
73	ஊனில்வாழுயிரே	2	3	1
	எ			
172	எதிர்சூழல்புக்கு	2	7	6
46	எம்மாவீடு	2	9	1
298	எளிவருமியல்வினன்	1	3	2

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம் ப.	தி.	பா.
95	எனக்கார் நிகர்	4	5	8
315	எனைத்தோர் பிறப்பும்	2	7	6
320	என்னைத்தீமனங்கெடுத்	2	7	8
	ஏ			
195	ஏத்தஏழுலகும்	2	2	11
113	ஏறாளுமிறையோனும்	4	8	1
	ஒ			
179	ஒண்டொடியாள்	4	9	10
111	ஒன்றுந்தேவு	4	10	1
283	ஒருபகலாயிர	10	3	1
	க			
125	கண்ணன்கோளிழை	7	7	8
261	கண்கள்சிவந்து	8	8	1
79	கலக்கவேழ்	6	4	9
135	கழல்வளைபூரிப்ப	5	9	9
149	காணவாராய்	8	5	2
299	காதல்கடல்புரைய	5	3	4
235	காணுமாறருளாய்	8	1	1
265	காணவிரும்புமென்	3	8	4
36	கேசவன்தமர்	2	7	1
223	கேட்டாரார்	10	6	11
160	கொள்ளமாளாயின்ப	4	7	2
	த			
91	தக்கஞானக்கண்கள்	4	7	10
112	தடங்கடற்பள்ளி	5	2	4
12	தண்டாமஞ்செய்து	1	8	7
306	தமர்கள் தமர்கள்	8	10	9
183	தவளவொண்சங்கு	6	5	1
88	தனக்கும்தன்தன்மை	8	4	6
57	தனதாமமே	6	4	10
187	தாமரைக்கண்களால்	9	2	1
158	தாமரைத்தடங்கண்	6	2	9
83	திருநாரணன்தாள்	4	1	1
308	தீவினையுள்ளத்தின்	7	10	9

பக்கம் (திருத் தமிழில்)	மேற்கோள்	இருக்கும் இடம் ப.	தி.	பா.
311	தென்னாவென்னா	10	7	5
70	தேர்கடவியபெருமான்	3	6	10
131	தேசமானவணிகலனும்	4	3	2
123	தொண்டர்க்கமுதுண்ண	9	4	9
	ந			
105	நண்ணாதார்முறுவலிப்ப	4	9	1
44	நலமந்தமில்லதோர்	2	8	4
255	நங்கட்கு	3	3	7
311	நன்கென்னுடலம்	10	7	4
276	நாவாயுறைகின்ற	9	8	7
302	நாரணம்	10	5	1
277	நாளேலறியேன்	9	8	4
306	நீக்கமில்லாவடியார்	8	10	10
20	நீயுந்திருமாலால்	2	1	1
112	நேமிப்பிரான்தமர்	5	2	6
	ப			
206	படிக்களவாக	9	2	2
314	பண்டே பரமன்	10	4	9
298	பத்துடையடியவர்	1	3	1
66	பரஞ்சோதி நீ	3	1	3
28	பருகிக்களித்தேனே	2	3	9
247	பரஞ்சுடருடம்பாய்	6	3	7
296	பாதபங்கயமே	9	2	2
	பாதங்கள்மேலணி	5	9	7
36	பிடித்தேன்கொள்	2	6	1
299	புயல்கரு	1	3	10
131	பூசுஞ்சாந்து	4	3	2
130	பெருகுமால்வேட்கை	9	6	1
49	பொருளென்றிவ்வுலகம்	2	10	11
317	பொருளல்லாத	5	7	3
	ம			
310	மங்கவோட்டுன்	10	7	10
17	மணியையவானவர்	1	10	11
95	மண்ணேயிருந்து	4	4	1

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம் ப.	தி.	பா.
302	மரணமானால்	9	10	5
319	மருவித்தொழும்மனமே	2	7	7
114	மலியுஞ்சுடரொளி	5	2	11
286	மனனகமலமற	1	1	2
170	மனிசர்க்குத்தேவர்	8	1	5
112	மாதவன்பூதங்கள்	5	2	2
	முதலில்சிதையாமே	1	5	2
22	மூவாமுதல்வா	2	1	10
	மூவாத்தனிமுதலாய்	2	8	5
	ய			
300	யாவையும்யாவரும்	1	3	3
319	யானொட்டியென்	1	7	7
	வ			
298	வணக்குடைத்தவ	1	3	5
98	வண்டுவராபதி	4	6	10
301	வண்புகழ்நாரணன்	1	2	10
51	வல்லதோர்வண்ணம்	7	8	10
35	வளவேழுலகு	1	5	1
31	வலங்கொள்புள்	2	4	4
25	வாயுந்திரை	2	1	1
57	வானோர்சோதி	1	5	5
218	வானவர் நாட்டையும்	3	9	9
308	வானுயரின்ப	8	1	9
306	விடவில்	2	9	11
56	விண்மீதிருப்பாய்	6	9	5
44	வீடு முதலாம்	2	8	2
92	வீற்றிருந்தேழுல	4	5	1
301	வீடுமின்முற்றவும்	1	2	1
95	வெம்மாவாய்	1	8	2
57	வேங்கடங்கள்மெய்	3	3	6
314	வைகுந்தத்தமரரும்	10	9	9
33	வைகுந்தாமணிவண்	2	6	1

(38) இயற்பா

பக்கம் (இந்நூலில்)	மேற்கோள்	இருக்கும் இடம்		
161	அழுநீர்துளும்ப	திருவி.	2	பா.
218	அடியார்நிலாகின்ற	,,	75	,,
215	ஆள்பார்த்துழிதரு	நான்-தி.	60	,,
27	இமையோர்தலைவா	திருவி.	1	,,
194	இடங்கைவலம்புரி	இர-தி	71	,,
68	உயிர்கொண்டுடல்	நான்-தி.	88	,,
219	உன்னடியார்க்கென்	பெரி-தி.	53	,,
9	ஒண்டாமரையாள்	முதல்-தி.	67	,,
160	கணைநாணிலோவா	பெரி-தி.	78	,,
251	கலங்காப்பெருநகரம்	மூன்-தி.	51	,,
20	சோம்பாதிப்பல்	பெரி-தி.	18	,,
231	சூட்டுநன்மாலைகள்	திருவி.	21	,,
57	ஞானச்சுடர்விளக்கு	இர-தி.	1	,,
57	நீலாழிச்சோதி	பெரி-தி	34	,,
120	நெஞ்சென்னுமுட்க	,,	28	,,
171	நீள்நகர்நீளெரி	திருவி.	92	,,
313	நின்கண்வேட்கை	,,	96	,,
	நிழலுமடிதாறு	பெரி-தி.	31	,,
117	பகல்கண்டேன்	இர-தி	81	,,
154	பொய்ந்நின்றஞானம்	திருவி.	1	,,
	மாமுதலடிப்போதொ	திருவா.	5	,,
104	யாதானும்பற்றி	திருவி.	95	,,
232	யானுமென்னெஞ்சும்	பெரி-தி.	26	,,
95	விண்ணுளாரிலும்	திருவி.	79	,,

திருவாய்மொழி வாசகமாலை ஆழ்வார் நாயிகாபாவம்
(தலைமகளின் நிலை) அடைந்து அருளிச்செய்த
திருவாய்மொழிகள்.

பக்கம்	திருவாய்மொழி	அகப்பொருள்
	அஞ்சிறைய	தலைவி (ஆழ்வார்) நாரை, அன்னம் முதலிய பக்ஷிகளைத் தூதுவேண்டல்.
17	வாயுந்திரை	நாரை, அன்றில், கடல், காற்று, மேகம், இருள், சந்திரன், போன்ற ஸகல பதார்த்தங்களும் தம்மைப் போலவே ஆற்றாமையால் வருந்துகிறதாக நினைந்து அவற்றுக்காகத்தான் இரங்கல்.
27	ஆடியாடி	பிரிந்த தலைமகள் ஆற்றாமைக்கு நற்றாய் இரங்கல்.
83	பாலனாயேழுலகு	தலைமகளின் ஆற்றாமையை வினவினார்க்கு நற்றாய் உரைத்தல்.
89	மண்ணையிருந்து	தலைவி போலிகண்டு பிச்சேறியதை நற்றாயுரைத்தல்.
96	தீர்ப்பாரையாமினி	வெறிவிலக்கு.
99	ஏறாளுமிறையோனும்	தலைமகன் தனது அழகு முதலானவைகளை உபேக்ஷிப்பதாக நினைத்த தலைவி, தனக்கும் அவை வேண்டா எனச் சொல்லுதல்.
113	மாசறுசோதி	தலைவி மடலூரத் துணிதல்.
116	ஊரெல்லாம்	தலைவி இரவு நெடுமைக்கிரங்கல்.
118	எங்ஙனேயோ	கழற்றெதிர்மறை.
121	கடல்ஞாலம்	பிரிவாற்றாமையால் தலைமகள் தலைமகனை அனுகரித்து தரித்ததைத் தாய் வினவவந்தார்க்குச் சொல்லுதல்.
135	மானேய்நோக்கு	தலைவி தலைமகனுள்ள இடத்துக்குப் போக விரும்பி அதைத் தன் தோழிகளுக்குரைத்தல்.
141	வைகல்பூங்கழி	தலைவி புள்ளினங்களைத் தூதுவிடுதல்.

பக்கம்	திருவாய்மொழி	அகப்பொருள்
145	மின்னிடைமடவார்	ப்ரணயகோபங்கொண்ட தலைவியின் ஊடலை தீர்த்துத் தலைமகன் அவளுடன் கூடுதல்.
154	துவளின்மாமணி	தலைமகனிடம் தலைவிக்கு இருக்கும் அளவுகடந்த காதலைத் தாய்மாருக்குத் தோழியுரைத்தல்.
157	மாலுக்கு	பிரிவாற்றாத தலைவியினுடைய வேறுபாடு கண்டு செவிலி இரங்கல்.
159	உண்ணுஞ்சோறு	தலைவன் இருக்குமிடம் சேர்ந்த தலைவியைக் காணாமல் நற்றாயிரங்கல்.
162	பொன்னுலகாளீரோ	தலைவி புள்ளினங்களைத் தூதுவிடுதல்.
184	கங்குலும் பகலும்	தலைவியினாற்றாமைகண்ட நற்றாய் தலைமகனிடம் இரங்கியுரைத்தல்.
189	வெள்ளைச்சுரிசங்கொடு	தலைவி தலைமகனுள்ள இடத்திற்குப் போகத்துணிதல்.
208	ஏழையராவி	தலைவனது உருவெளிப்பாடு கண்டு நலிந்த தலைவி, தன் நிலைமையைத் தாய்மாருக்கும் தோழிமாருக்கும் கூறல்.
229	நங்கள் வரிவளை	தலைவி தோழிமார்-தாய்மார் பக்கலிலும், மயில், குயில், பூவை இவை பக்கலிலும் நசையற்ற படியை உரைத்தல்.
249	கருமாணிக்கமலை	தோழி அறத்தோடுநின்றுரைத்தல்.
267	இன்னுயிர்ச்சேவல்	போலிகண்டு இரங்கின தலைவி தலைமகனுடைய குணங்களைநினைந்து தரித்தல்.
272	எங்கானலகங்கழிவாய்	தலைவி, பக்ஷிகளைத் தூதுவிடுதல்.
277	மல்லிகைகமழ்	தலைவன் வாராமையால் ஏங்கிய தலைவி வாடைக்கிரங்கல்.
292	வேய்மருதோளிணை	தலைமகன் அருகிலிருக்கும்பொழுதே (பிரியப்போவதாக எண்ணி) அவன் தன்னைப் பிரிந்து செல்லுங்கால் தான் படும் துன்பங்களை யனுபவித்த தலைவி அவனை அவ்வாறு செய்யாதிருக்குமாறு வேண்டுதல்.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலை

பழமொழிகள் முதலியவற்றின் விளக்கம்

" என்ன தார்மிகனே! (பக்கம் 9)

ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் என்று மானிடர் பெற விரும்பும் பேறுகள் மூவகைப்படும். இதில் மோக்ஷம் ஒன்று தான் நிலையான பேரின்பம். இம்மூன்று வகையான பேறுகளில் எதையும் எம்பெருமானுடைய அருளாலேயே பெற வேண்டியிருக்க, சிலர் தங்களுடைய பழைய வினையின் வாய்ப்பினுல், எம்பெருமானிடம் அற்பமான கைவல்யமென்னும் பேற்றைப் பெறுவதற்காகவே பக்தி பண்ணுகின்றனர். அவர்கள் செல்கிற வழி தவறுதலாயிருந்தும், இறைவன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இசைந்து நின்று அவர்களுடைய விருப்பத்தையும் ஈடேற்றி வைக்கிறுன். இது என்ன தார்மிக ஸ்வபாவம்! என்று வியந்து கூறுகிறுர்.

அந்திமஸ்மிருதியில்லையாகில் பழைய ஸம்ஸாரமே ஸித்திக்குமென்கிறுர். (10-ம் பக்கம்)

இறைவனைத் தியானித்து அவனருளைப் பெற்று அதனுல் ஒரு பயனைப் பெறவேண்டியிருக்கிறவர்கள், தங்கள் பேறு பெறுமளவும் இடையருமல் தொடர்ச்சியாக தியானம் செய்யவேண்டும். உடலைவிட்டு உயிர் போகும் பொழுதுங்கூட இந்த நினைவு தவறக்கூடாது. இதில் ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம்-முதலிய எவ்விதமான பேற்றை விரும்புகிறவர்களுக்கும் வாசியில்லை. அதிலும் உயிருடன் இருக்கையில் சற்று மறந்தாலும் அதை மீண்டும் சரிப்படுத்திக் கொள்ளலாம். உயிர் போகும் காலத்தில் இந்நினைவு தவறினுல், இதுவரை தவம் புரிந்ததெல்லாம் வீணுகிவிடும். மீண்டும் பழையபடியே ஸம்ஸாரத்தில் உழலவேண்டிவரும். ஆதலின் "மறவியையின்றி மனத்து வைப்பாரே" என்று அருளிச் செய்தார்.

"தன்னில்தான் போரா நின்றுள்ள சிறகுகளையுடையனாய்க் கொண்டு......... (பக்கம்-11)

எம்பெருமானைத் தாங்கிச் செல்லப் போவதாக நினைத்த உடனே கருடனுடைய இரு சிறகுகளும் அடித்துக்கொள் கின்றன. "இந்த பாக்கியத்தை நானே முதலில் பெறுவேன்" என்று ஒன்றுக்கொன்று போட்டியிட்டுச் சண்டையிடுகிறாப்போல் அவைகள் காட்சியளிக்கின்றன. அவைகளுடன் கருடன் வந்து தோன்றுகிறார்-என்றபடி.

"இவனொருவன் விபூதிமான். அன்யபரனென்று தோற்ற இருக் கிறிலன்" (பக்கம்-12)

இவன் ஒருவன்=ஆழ்வார், விபூதிமான்=வேறு சொத்துள் ளவன். அன்யபரன்=வேறு சுகங்களை நாடுகிறவன். என்று தோன்றும்படி (இறைவன்) இருக்கவில்லை. ஆழ்வாருக்கு எல்லா விதமான சொத்தும் — சுகங்களும், எம்பெருமானொருவனே. அவனையொழிய மற்றொன்றை இவரறியார். இதற்கேற்றவாறு இறைவன் இருந்தருளுகிறான்' என்றபடி.

"நித்ய விபூதியில் கேள்வியும் இங்கே யிருந்தே கேட்குமித்தனை" (பக்கம்-12)

"ஒழிவிலனென்னோடுடனே" என்றபடி ஆழ்வாரை விட்டுப் பிரியமாட்டாதவனாய் இருந்தான் எம்பெருமான். ஆழ்வார் இம் மண்ணுலகில் உள்ளவர். இவருடனே இருக்கும் எம்பெருமான் 'நித்ய விபூதி' யெனப்படும் பரமபதத்தின் நிர்வாஹத்தை எவ் வாறு கவனிக்க முடியும்? அதற்காக அவன் ஸ்ரீவைகுண்டம் செல்ல வேண்டாவோ ? எனில்; அதைச்செய்கிறானில்லை. ஆழ் வாருடனே இப்புவியிலிருந்தே நித்ய விபூதியின் நிர்வாகத்தை யும் நடத்துகிறான்-என்கிறார்.

"முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி........... (பக்கம்-14)

பட்டருக்கு முன்பு இருந்த வைணவாசாரியர்கள் இத்திரு வாய்மொழியின் கருத்தை உரைக்குமாறு.

இங்கு இந்நூலில் வாக்கியங்கள் சிறிது முறை தவறியிருப்ப

காகத் தோன்றுகிறது. ஆகவின் இங்கு இருக்கவேண்டிய வாக்யங்களின் கருத்தைப் பொதுவாகச் சுருக்கமாய் எழுதுகிறோம்:—

"கீழில் திருவாய்மொழியில் (1-9) எம்பெருமான் ஆழ்வாருடைய திருவுடம்பில் அவயவங்களனைத்திலும் புகுந்து கலந்து ஆழ்வாரை இன்புறச்செய்தமை அருளிச்செய்யப்பட்டது. இத்திருவாய்மொழியிலும் அவ்வின்பவெள்ளத்தையே நினைந்து அதிலேயே தோய்ந்திருக்கிறார் ஆழ்வார்" என்று இத்திருவாய்மொழிக்குப் பூர்வாசாரியர்கள் கருத்துரைப்பர்கள்.

இங்கு "பட்டர்" அருளிச்செய்வது:— "இதற்குமேல் ஏற்றமாகச் செய்து கொடுக்கவேண்டுவ தொன்றுமில்லை" என்னும்படி எம்பெருமான் தன்னுடன் கலந்து பரிமாறியதைக் கண்ட ஆழ்வார்; இவ்வாறு பெறற்கரிய பேறு பெறுதற்குத் தான் செய்துள்ள உபாயம் (முயற்சி) ஏதேனுமுண்டோ வென்று ஆராய்ந்து பார்த்தார். அப்படி ஒன்றையும் கண்டிலர். ஏதாவது ஒன்று தம்மிடம் இருப்பதாகச் சொல்லக்கூடுமாகில் அது "அவனிடம் த்வேஷங்கொள்ளாதிருத்தலும், அவன் செய்தருளும் சேமங்களை "வேண்டா" வென்று தள்ளாதிருத்தலுமே யாகும். இது, தான் பெற்ற பேற்றின் கனத்திற்கு எவ்வகையிலும் ஏற்ற காரணமாகவமையாது. இவ்வாறு எம்பெருமான் நிஷ்காரணமாக அருளுவதே! என்று உகக்கிறார் என்று.

"கடல்வேதும்பினுல் விளவநீரில்லை" (பக்கம் 21)

உலகிலுள்ள நீர்நிலைகள் யாவற்றிற்கும் தாய்போன்றதும், மிகப்பெரியதுமான கடல் தானே கொதித்தெழுமாகில், அதை வேறு எந்த நீரைக்கொண்டு விளவமுடியும்? அது தன்னடையே ஆவியாகமாறி வற்றிப்போய் 'இல்லையாகிவிடுவதொன்றே கதியாகும். அவ்வாறே எம்பெருமானைப்பிரிந்து ஆற்றாமை மீதூர்ந்து கிடக்கும் ஆழ்வாருக்கும் வேறு எவ்விதத்தாலும் இதற்கேற்ற பரிகாரம் காணமுடியாமையால், இவ்வாற்றாமையாலே முடிந்து விடும்படியான நிலைமை ஏற்பட்டதென்கை.

"வேங்நரகில் விழாதே கிடிகோள்" (பக்கம் 22)

வெங்நரகில் = சுடுகிற நரகத்தில், விழாதே கிடிகோள் =

விழாதீர்கள். "கிடிகோள்" என்பது "காண்மின்" என்னும் பொருளில் வரும் முன்னிலைப்பன்மை உரையசை.

"காரணம்து த்யேயஃ" என்கிற உபநிஷத்தில் சொல்லியபடி எல்லாவுலகுகளுக்கும் ஆதிகாரணமாயுள்ள பரம்பொருளையே த்யானம் பண்ணவேண்டும். அப்பரம்பொருள் ஸ்ரீமந் நாராயணனே. உண்மை இவ்வாறிருக்க, மற்ற தெய்வங்களை மூலகாரணமாக நினைந்து பக்திபண்ணுவதனால், பேரின்பம்பெற முடியாமல் போய்விடுவதுடன் நில்லாமல், தவறுதலாகச்செய்யப் படும் உபாஸநம் கொடிய நரகத்தில் விழுந்து துன்புறுதற்குக் காரணமுமாகும். அவ்வாற்றுக்கு ஆளாகாதீர்கள் என்று ஆழ்வார் உபதேசிக்கிறார் "நம் கண்ணன் கண்ணல்லதில்லையோர் கண்ணே" என்னு மிப்பாசுரத்தினால் என்றபடி.

"பித்ருதனம் புத்ரனுக்கு அநுபாவ்யமாமாபோலே அநுபாவ்யமாம்" (பக்கம் 30)

பித்ருதனம் = தந்தையின் சொத்து, புத்ரனுக்கு = மைந்தனுக்கு, அநுபாவ்யமாமாபோலே = வேறுகாரணம் ஒன்றுமில்லாமலே அனுபவிப்பதற்கு உரியதாகுமாப்போல், அநுபாவ்யமாம் = அனுபவிப்பதற்கு உரியதாகும். ஆழ்வார் திருவாய்மொழியைப்பாடி எம்பெருமானுடைய திருவடிகளிலே இப்பாமாலையைச் சூட்டிப் பேரின்பமெய்தி அடியார்கள்குழாங்களை யுடன் கூடினார். அவரையே வழிகாட்டியாகக்கொண்டு, அவர் பாடிய பாக்களைப் பக்தியுடன் பாடுகிறவர்களுக்கும், ஆழ்வார் பெற்றபேறு திண்ணமாகக்கிடைக்கும். இவ்வறிவைப் பின்புள்ளார் பெறும்படி செய்த ஆழ்வார் யாவர்க்கும் ஞானத்தந்தையாவார். அவர்பெற்றபேறு அவருடைய ஞானபுத்திரர்களாகிய மற்றவர்களுக்கு உரிமையுடன் அனுபவிக்கக்கூடியதாகும்.

"ததஃ கேசவ நாமவான்" என்கிறபடியே ஸர்வநிர்வாஹகனை நிலையிலே" (பக்கம் 37)

கேசவன்தமர் என்று பாட்டு தொடங்குகிறது. 'கேசவனுக்கு

அடியார்கள்' என்பது இதன்பொருள். 'கேசவன்' என்கிற திருநாமத்தின் பெருமை மஹாபாரதத்தில் ஹரிவம்சபர்வத்தில் பவிஷ்யபர்வத்தில் 88ம் அத்யாயத்தில், 48வது சுலோகத்தில், ஸ்ரீபரமசிவன் வார்த்தையால் விளக்கப்படுகிறது. "க" இதி ப்ரம்மணோ நாம, ஈசோ ஹம் ஸர்வதேஹிநாம். ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் "கேசவ" நாமவான்" என்பது அச்சுலோகம். படைக்கும் தெய்வமாகிய பிரமனுக்கும், எல்லா உயிர்களுக்கும் நாதனை (பசுபதி) எனக்கும் (பரமசிவனுக்கும்) காரணமான தாங்கள் (ஸ்ரீமஹாவிஷ்ணு) எல்லாவுலகுகளுக்கும் நிர்வாஹகன் என்றபடி. இவ்விதமான பெருமையை அறிந்து அதில் ஆழங்காற் பட்டவர்கள் 'கேசவன் தமர்' என்றாராயிற்று.

"வளவேழுலகு தலையெடுத்து. (பக்கம் 35)

'வளவேழுலகின் முதலாய' என்னும் பதிகத்தில்; ஆழ்வார், தான் எம்பெருமானோடு கூடினால் அவன் பெருமை குறைந்து விடும் என்று அஞ்சித் தன் தாழ்மையை நினைந்து அகலவெண்ணினார். அந்நிலைமை தோன்றி, என்று கருத்து.

"மாதாபிதாக்கள் இருந்த படுக்கையிலே ப்ரஜை சென்றேறுமாப் போலே. (பக்கம் 40)

மோக்ஷத்திற்குச் செல்லும் ஒருவனுக்குத் "தாய் ஸ்ரீமகாலக்ஷ்மி, தந்தை ஸ்ரீமந்நாராயணன்" என்கிற உண்மை நன்கு புலனாகுமாதலால், பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியில் இவன் எவ்விதமான கூச்சமுமின்றித் தாய் தந்தையரிடம் குழந்தைக்குள்ள உரிமையுடன் செல்கிறான், என்றபடி.

பக்ஷி,பிசாசம், முதலானோருக்கு. (பக்கம் 43)

பக்ஷி = ஜடாயு. இராமாயணத்தில் ஆரண்ய காண்டத்தில் இவருக்குமோக்ஷங்கொடுத்த கதை உளது. பிசாசம் — கண்டா கர்ணன். இவருக்கு மோக்ஷங்கொடுத்தகதை ஸ்ரீமகாபாரதம் ஹரிவம்சத்தில் கைலாஸ யாத்திரையில் கண்டுகொள்வது.

அக்கரையும் இக்கரையும்.... (பக்கம் 43)

சாதாரணமான ஓடங்கள் நீர்நிலைகளின் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் பிரயாணிகளைக் கடத்தும். ஸம்ஸாரமென்னும் பெருங் கடல் கடக்கவேண்டியிருப்பார்க்கு, அவ்விதம் கடத்தும் ஓடம் எம்பெருமானேயாவான். அவன் சர்வவியாபகனாகலின்; இக்கரை யாகிய ஸம்ஸாரத்தினின்றும், 'அக்கரை' யாகிய பரமபதம்வரை இடையறாது பரந்து நின்று கடத்துமோடம் என்றபடி.

'கோக்குவாயும் பிடிகண்ணியும் இட்டாப்போலே* (பக்கம் 46)

முத்துமாலை, பவளமாலை முதலியவற்றில் இருமுனைகளில் ஒருபுறம் கொக்குவாய்போலும், மற்றொருபுறம் அதை மாட்டு வதற்கான துவாரமுள்ளதாயும் இருக்கும். இவ்விரண்டையும் பொருத்திவிடில் அது கழலாது. அதுபோல் என்னைக் கை விடாமல் ஆதரிக்கவேணும் என்றபடி. கொக்குவாய் = மாலையின் ஒருமுனையிலுள்ளது. பிடிகண்ணி = மறுமுனையிலுள்ள துவாரம்.

'ஏககாலத்திலே இரண்டவஸ்தையும்' (பக்கம் 50)

'அரும்பு' என்னும் நிலைமை ஒன்று. 'அலர்' என்னும் நிலைமை மற்றொன்று. முன்நிலையைப் பெரும்பாலும் கடந்து அடுத்த நிலையை எய்தி அதிலும் பரிபூர்ணமாகாத ஒன்றை 'அரும்பு' என்றும் 'அலர்' என்றும் சொல்லக்கூடும். அது போல் இளம்பிராயத்தைக்கடந்தும், யௌவனப்பருவம் பூர்ண மாக வாய்க்கப்பெறாததுமான எம்பெருமானுடைய திருமேனி யில் ஒரேஸமயத்தில் இரண்டு நிலைமையும் தோன்றுமாறு காண்க

பிரவேசானு குணத்தாலே...... .. (பக்கம் 60)

அசேதனமான பிரகிருதியில் ஜீவாத்மா தன் வினையால் பிரவேசிக்கிறது. அதனால் வினைப்பயனாகிய ஸுக துக்கங்களை அனுபவிக்கிறது. எம்பெருமான் அவைகளுள் பிரவேசித்திருப் பது; கருமத்தினாலல்ல. மற்ற சேதனர் தங்கள் வினைப்ப யனைப் பெறுவதற்கு ஏற்றதாக அவைகளைச் செய்தற்காகவே. ஆதலின் அதிலுள்ள தோஷங்கள் இறைவனுக்கு வாராது.

---

*சென்னை சர்வகலாசாலைத் தமிழ் அகராதியிலும் மற்ற உரைச்சுவடிகளிலும் 'படுகண்ணி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'அதிலே தம்மோடு இருப்பாமத்தனை. அத்தேசம் நித்ய ஸூரிகளாதா யிருக்கும். (பக்கம்-76)

ஸ்ரீவைகுண்டம் எனப்படும் பரமபதம் அங்கு திரள்திர ளாகக் கூடியுள்ள திருமாலடியார்களான நித்ய ஸூரிகளுக்கே சொந்தமானது. அடியார்க்குக் கட்டுப்பட்டவனான எம்பெரு மான் அங்கு அவர்களுடன் கூட்டுக்குடியாகவே இருக்கிறான் ' देवानां पूरयोध्या என்கிறபடி.

யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்திலையோ?
(பக்கம்-104)

எம்பெருமானைத் தவிர ஏதேனுமொரு விஷயத்தைப் பற்றி அதிலேயே மூழ்கி, பகவத் விஷயத்தினின்றும் விலகி நிற்பது என்னும் விரதத்தை நன்றாக விடுவித்தவன் என்கை.

சப்தாதிகளைப் புறமேன்று பூர்வவ்ருத்தத்தைப் பார்த்துச்சோன்ன படி (பக்கம்-109)

பூர்வ வ்ருத்தம் = முன்பு நடந்தது. மயர்வற மதிநலமருளப் பெற்ற நம்மாழ்வார், 'தான் புறமே புறமேயாடித் திரிந்ததாகச் சொல்லுகிற இது இப்போதுள்ள நிலைமையைப் பார்த்துச் சொன்னதன்று. இவ்விதமான அருளைப் பெறுமுன்பு தான் இருந்த இருப்பைச் சொல்லுகிறார் என்று கருத்து.

'பக்தானும்' என்கிற உடம்பைத் தனக்கேன்றிருக்கை மாசிறே.
(பக்கம்115)

பக்தர்களுக்காகவே எம்பெருமான் பல்வேறு வடிவங்களை ஏற்றுக்கொள்கிறான். தனக்காகவன்று. அங்ஙனமிருக்கத் தன் னிடம் அளவிலா அன்பு கொண்டவளான ஆழ்வார்நாயகிக்குத் தன் திருவுடம்பை கொடுக்காமல் இருப்பது அவனுக்கு இழு காம். என்றபடி.

'எதிர்த்தலையில் அழிவு கண்டபின்பிறே இத்தலையில் அழிவு'.
(பக்கம்-131)

எதிர்த்தலை = பகவான். அழிவு = தன் ஸர்வஜ்ஞத்வாதிகள் குலைந்து மோஹித்துக் கிடக்கை. இத்தலை = ஆழ்வார். அழிவு =

ஆற்றாமை. எம்பெருமான் ஆழ்வாரிடத்தில் கொண்டுள்ள காதல் சொல்லுக்கடங்காததாயிருந்தது. ஆழ்வார் அவனிடம் காதல் கொண்டு, தன் நிலைமையை "நீராயலைந்து கரையவுருக்குகின்ற" என்று பேசினர். இவ்வாறே அவனுடைய நிலைமையைப் பேசப் புகுந்தவர், அதற்கேற்ற சொற்களைக் காணமல் 'நெடுமாலே!' என்று மட்டும் சொல்லி முடித்துக்கொண்டார்.

ஆச்ரிதன் எழுந்திருந்து பேசு' என்ன...... (பக்கம்-133)

ஆச்ரிதன் = அடியவன். (திருமழிசையாழ்வார்) ஆராவமுதன் பட விளக்கத்தில் "கிடந்தவாறெழுந்திருந்து பேசுவாழி கேசனே" என்பதைப் பார்க்க.

உன் வடிவோடொக்க ப்ராப்தியையிட்டு என்னை நலிய வேணுமோ? (பக்கம்-134)

ஸ்ரீ ஆராவமுதனின் வடிவழகில் ஆழ்வார் ஈடுபட்டு உருகுகிறார். இவ்வெம்பெருமானையே பற்றி அவனருளாலேயே உய்ய வேண்டிய பிராப்தியும் (உரிமையும்) இவர்க்கு உளது. மயர்வற மதிநலமருளப்பெற்ற இவர் இதை நன்குணர்ந்தவர். அழகு குன்றியிருந்தாலும் பிராப்தியை நினைந்தால் விடவொண்ணாது பிராப்தியில்லாதார்க்கு அழகே வடிவெடுத்தாற்போல் திகழ்கிற இத்திருமேனியை விட்டகலவொண்ணாது. ஆக - வடிவழகும் உரிமையும் இரண்டும் ஒன்று சேர்ந்து ஆழ்வாரை நலிகின்றன. இதையே எம்பெருமானை நோக்கி வினவுகிறார்.

இஸ்ஸ்வபாவங்களாலே நிரூபித வஸ்துவுக்கு உண்டான குணங்களுக்கு வாசகம் அல்லாத திருநாமங்களாகை. (பக்கம்-137)

'நல்லருள் நம்பெருமான் நாராயணன் நாமங்களே' என்று ஆழ்வார் பாடியுள்ளார். இதில் 'நல்லருள் - நம்பெருமான்' என்னும் பகுதி 'நாராயணன்' என்னும் திருநாமத்தின் பொருளை விளக்குவதாகும். இறைவனுக்குப் பல்லாயிரந் திருநாமங்கள் உள்ளன. அவைகளுள் 'நாராயணன்' என்பது தனிச்சிறப்புடைத்து. 'நல்ல அருளுடையவன்' நமக்கு ஸ்வாமி' (உடையவன்) என்பது அத்திருநாமத்தின் பொருளாகும். இவ்விரு தன்மைகள் மற்றெல்லாவற்றையும் விட முக்கியமாதலால்,

அதைச் சொல்லுகிற திருநாமமும் மற்ற திருநாமங்களிற் காட்டில் முக்கியமாகிறது. அதனால் 'நாராயணன்' என்பதும் மற்றவை களைப்போல் ஒரு திருநாமமாயிருந்தாலும், இறைவனை மூன்று முன்னம் 'நாராயணன்' என்னும் பெயரால் குறித்து 'நாராயணன் 'நாமங்களே' என்று மற்றவைகளைச் சொல்லுகிறார். நாராயணன் என்னும் திருநாமத்தால் எம்பெருமானைச் சொல்லி ஏனைய திருநாமங்களை நாமங்களே என்று ஆழ்வார் பாடியதன் கருத்து இதுவேயாகும்.

உண்ணுநீர்க, மிடற்றைப்பிடிப்பாரைப்போலே யாகாமே :—
(பக்கம் 144)

உணவு உட்கொண்டிருக்கும்பொழுது கழுத்தைப் பிடித்து அழுத்திவிட்டால் அதனால் பெரும்கேடு விளையுமல்லவா?. அதே போல் எம்பெருமானைக்கண்டு கைகளைக் கூப்பினவர், அவன் திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பிக்காமல் (நமஸ்காரம் பண்ணாமல்) இருப்பதும் ஆகும். அதனால் 'கீழே விழுந்து வணங்கியபிறகு 'பணியீரடியேன்திறமே' என்றருளிச்செய்தார்.

உகவாதாரை விடமாட்டாதவன் வ்யாமோஹம் :— (பக்கம் 158)

உகவாதார் = எம்பெருமானிடம் பக்தியற்றவர். மகாபலி போன்றவர். அவர்களையும் கூட எம்பெருமான் கைவிடுவதில்லை. அவர்கள்பால் எம்பெருமான் மிகவும் அன்புகூர்ந்து நல்வழிப் படுத்தாது விடுவதில்லை. பொல்லாத குழந்தையை நல்வழிப் படுத்தும் தாயைப்போல் இறைவன் நடந்துகொள்கிறான்.

'கணைநாணிலோவாத்தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே
(பக்கம் 160)
ஓவாதவூணாகவுண் :—

கணை—அம்பு, நாணில், ஓவாத்தொழில்—மாறுதசெயலையுடைய, சார்ங்கன்—சார்ங்கமென்னும் வில்லையுடைய எம்பெருமானுடைய தொல்சீரை ஸ்வபாவ ஸித்தமான நற்குணங்களை. நன்னெஞ்சே! ஓவாத ஊணாக—நித்யமான உணவாக, உண் (பெரிய திருவ–78.)

ஏகரஸம் பற்ருசாகத் தூது விட்டார் :— (பக்கம் 162)

எம்பெருமானுடைய வடிவழகு அடியவர்களுக்கும் அவனுக்கும் பொதுச்சொத்தாகும். அதை அடியவர்களோடு கூடியே அவன் அனுபவிப்பான் அதன்றி அடியவர்களை விலக்கித் தான்மட்டும் இவ்வின்பத்தை அனுபவிக்க மாட்டான். ஆதலின் இந்த ஏகரஸத்வமே பற்ருசாக ஆழ்வார் தூது விடுகிருர்; புறச் சோலையிலே விழுந்து கிடக்கும் தன்னையும் தூதர் அறிவித்தவுடனே எம்பெருமான் சேர்த்துக்கொள்வன்" என்று.

'காதாசித்கமாய் வந்தாலும் பாராதார் முன்னே கிடீர்! நடந்தது:— (பக்கம் 167)

காதாசித்கமாய்—எப்பொழுதாவதொருதரம். வந்தாலும் பாராதார்—பலிச்சக்ரவர்த்தி போன்றவர்.

"பத்தும் பத்தாகக் காட்டிக்கொடுக்கக்கண்டு":— (பக்கம் 193)

பத்தும் பத்தாக—பத்துப்பாட்டிலும் (முழுவதும்)

"நாயகனுக்கடியாரிறே வென்று கொடுப்பார் :— (பக்கம் 193)

நாயகன்—எம்பெருமான் அடியார்-ஆழி (சக்கரத்தாழ்வான்).

" தோற்றத்திலே அரசுபோராயிற்று :— (பக்கம் 194)

தோற்றத்திலே—தொடக்கத்திலே. அரசுபோர் அரசனே நேராகச்செய்யும் போர். ஆயுதங்களுக்கு அரசு திருவாழி யாழ்வான் (சக்கரம்). ஏனையோர்களை முன்பு யுத்தத்திற்கனுப்பி முடிவில் அரசன் தானே நேரில் போர்புரிவது இயல்பு. இங்கு அவ்வாறின்றி முதலிலேயே ஆயுதங்களின் அரசாகிய ஆழி போரில் ஈடுபட்டார் என்றபடி.

" இவனுளனுகத் தானுளனனபடி :— (பக்கம் 230)

இவன்—அடியன், உளனுக—பரம்பொருளை உள்ளபடி அறிந்தபின்பே, தான்-எம்பெருமான், உளனனபடி-உளனுனன். ஆத்மாவுக்கு உற்பத்தியும் அழிவும்கிடையாது, ஆயினும் பரப் பிரம்மத்தை உள்ளபடி அறியாத ஆத்மாவை 'அஸங்'(பொருளல்-

லாதது—இல்லாதது) என்றும்; பிரம்மத்தை அறிந்தவன் 'ஸங்' (உளன்) என்றும் வேதம் சொல்லுகிறது. அதேபோல் ஸ்ரீவைகுண்டம் நித்யமானது. அதற்கு ஸ்ரீமந்நாராயணன் தானே என்றும் நாதனுயிருப்பவன். ஆயினும் ஆழ்வார் அமுதவாக்கால் தன்னை "வைகுந்தநாதன்" என்று புகழ்ந்ததனுலேயே தான் அவ்வாருனதாக எண்ணினன்.

"அது செய்தானாகில் 'பூவுக்கிட்டோம் போலே' என்றிருக்கலாம் :-

(பக்கம்-232)

காதலன் தன் காதலிக்குக் கொடுத்தவற்றைப் "பூவுக்கிட்டோம்" என்று வழங்குவன். அதேபோல் ஆழ்வாராகிய தலைவி, எம்பெருமான் தன்னுடைய அல்லிமலர்த் தண்டுழாய் தந்தானாகில்; 'பூவுக்கிட்டோம் போலே' என்றிருக்கலாமென்கிருர்.

"இப்படி 'சக்ஷுஷி திஷ்டன்னனவன் :-- (பக்கம் 240)

உலகில் உள்ள சேதனங்கள்—அசேதனங்கள்—பாவற்றினுள்ளும் புகுந்து அவைகளை இயக்குபவன் எம்பெருமான். இவ்விஷயம் அந்தர்யாமிப்ராம்மணத்தில் பரக்கக் கூறப்பட்டுளது. 'கண்' என்பது பார்க்கும் கருவி. அதனுள் புகுந்து அது தன் தொழிலைச் செவ்வனே செய்யுமாறு எம்பெருமான் அருளுகிருன். அதனுல் "என் கண்ணு" என்று எம்பெருமானை அழைத்தல் தகும்.

"செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப்போலே யாகவொண்ணுதென்று :— (பக்கம் 242)

எம்பெருமானை வணங்குவதற்குக் கோயிலுக்குச் செல்பவன் கோபுரவாசலில் செருப்பை விட்டுவிட்டு உள்ளே சென்ருனுகில்; இவனுடைய ஞாபகமெல்லாம் பெருமாளிடம் செல்லாமல் வாயிலில் விடப்பட்ட செருப்பு மேலேயே செல்லும். அதுபோல் இங்கு "திருக்கடித்தானம்" என்னும் தலம் எம்பெருமானுக்கு மிகப் பிரியமானது. ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் வந்து

கலந்திருக்கவெண்ணிய எம்பெருமான், திருக்கடித்தானத்தை விட்டுத் தனியாக வந்தால், தன் ஞாபகமெல்லாம் அத்தலத்தில் செல்லுமென்றஞ்சி அத்தலத்தோடு கூடத் தானும் ஆழ்வார் திருவுள்ளத்தில் பிரவேசித்தான்.

“கலங்காப் பெருநகரம் கலவிருக்கையா யிருக்கவன்றோ ?.........

(பக்கம் 251)

கலங்காப் பெருநகரம் - ‘அயோத்யா’ என்று வேதங்களில் சிறப்பித்துக் கூறப்படும் ஸ்ரீவைகுண்டம். கலவிருக்கையா யிருக்க - தனக்குப் பிரியமான வாஸஸ்தானமாயிருக்க. அதை விட்டுத் திருப்புலியூரில் பகவான் எழுந்தருளினது, பரமபதத்திலும் இது சிறந்ததாயிருத்தலால் என்றபடி.

“ஸமிதை பாதி ஸாவித்ரி பாதியாக.........” (பக்கம் 258)

‘ஆவணியவிட்டம்’ என்பது ஒரு நன்னாளாகும். அன்று வேதங்களை ஓதுவதற்குத் தொடங்குவார்கள். அதற்கு மறு தினம் பலாச ஸமித்துக்கள் (குச்சிகள்) 1008 வைத்துக்கொண்டு காயத்ரீ மந்த்ரத்தால் ஒவ்வொன்றாக ஹோமம் செய்யவேண்டும். ஏற்கெனவே, முறைதவறி வேதாத்யயனம் செய்ததற்குப்பிராயச் சித்தமாக இது செய்யப்படுவதாகும். இதில் முதல் 500, ஸமித் துக்களும், மற்ற 500-வெறும் காயத்ரீயுமாகக் கலந்து ஹோமம் செய்வது ஸாத்யமில்லை. அதுபோல உங்களுடைய க்ஷேமத்திற் கான பொறுப்பு முழுதும் எம்பெருமானிடமே யுள்ளது. உங் களுக்கு அதில் கொஞ்சமும் பங்கு இல்லை. அவ்விதமிருப்பதாக எண்ணி அதில் குறுக்கிடவேண்டா என்கிறார்.

“பக்தானு”மென்றது பொய்யோ? :— (பக்கம் 274)

எம்பெருமானுடைய வடிவங்கள் யாவும் அடியார்கள் கண்டு களிப்பதற்காகவே உள்ளன, என்கிற இவ்விஷயம் ‘ஜிதந்தே’ ஸ்தோத்ரத்தில் சொல்லப்பட்டது. இது பொய்யோ? என்றபடி. எம்பெருமானுடைய வடிவழகைத் தான் அநுபவிக்கப் பெறுமையால் இவ்வாறு கூறினர்.

"மோருள்ளதனையும் சோறேயோ? :— (பக்கம் 279)

ஒருவன் ஒரு அம்மையாரிடம் ஒரு நாழி அரிசியைக் கொடுத்து அதைச் சமைத்துப் போடுமாறு வேண்டிக்கொண்டான். தானே மோர் கொண்டுவந்தான். இலையில் அன்னம் பரிமாறினதும் இவன் மோரைச் சேர்த்துக்கொண்டு உண்ண வாரம்பித்தான். "மோர் அதிகமாய் விட்டது இன்னும் கொஞ்சம் அன்னம் வேண்டும்" என்று அடிக்கடி அவன் கேட்டு அவ்வம்மையாரைத் தொந்திரவு செய்தான். அதனால் அலுத்துப்போன அவ்வம்மையார், 'நீ கொண்டுவந்த மோர் தொலையாததாயிருந்தது. மோருள்ளதனையும் சோறிடுவேனே?' என்றாளாம். இதேபோல் திருவாய்மொழியில் ஆழ்வாருடைய விசித்திரமான அனுபவங்கள் யாவற்றுக்கும் பொருத்தமாக ஸங்கதி (முன்பின் தொடர்பு) சொல்லி வந்த * எம்பார், இத் திருவாய்மொழியில் "அது மொழிந்து" என்னும் பகுதிக்கு விளக்கம் கூறும்போது மேற்கண்ட பழமொழியைக்கூறினாராம், அடிக்கடி ஆழ்வார் எம்பெருமானோடு கூடுவதற்கும்-பிரிவதற்கும் ஒருவாறு காரணங்கள் கூறி வந்தோம். இங்கு ஆழ்வாரே "அது" என்று பொதுவாக அருளிச் செய்திருக்க, இதை நாம் எவ்வாறு விளக்குவது? என்பது கருத்து.

"விடுகாதானாலும் தோடிட்டு வளர்ந்த காதென்று தெரியுமிறே:— (பக்கம் 287)

"அசுரரைத்தகர்க்கும் தோளுநான்குடை" என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். திருமோகூரில் விக்ரகரூபமாய் நான்கு திருக்கைகளுடன் எழுந்தருளியிருக்கும் காளமேகப்பெருமாள், இக்கைகளால் அசுரரைத்தகர்த்ததாக ஆழ்வார் பாடியுள்ளார். அசுரரைத்தகர்த்தது முன்பு எப்பொழுதோ ஒரு காலம். இப்பழைய காரியத்தைப் பிற்காலத்தில் தோன்றிய ஆழ்வார் எவ்வாறு கண்டறிந்தார்? என்றகேள்விக்கு இப்பழமொழியின் மூலம் பதில் கூறப்படுகிறது. விடுகாது தோடு (காதணி) அணியப்பெறாத காது. தற்காலம் ஏதோ ஒரு காரணத்தினால் தோடு அணிந்திராவிடினும் முன்பு ஒருஸமயத்தில் தோடுஅணிந்து அதனால் துவாரம் உண்டாகப்பெற்ற காதென்பது பார்த்த

* வைணவ சமயாசாரியர்களுள் ஒருவர்.

வளவிலே தெரியும். அதேபோல் ஆழ்வார் எம்பெருமானுடைய நான்கு திருக்கைகளையும் கண்டவாறே அத்திருக்கைகளால் ஒரு காலத்தில் எம்பெருமான் அசுரசங்காரஞ் செய்தருளின வரலாற்றைப் பாடினார்.

"கேசவః க்லேசநாசநః என்கிறபடியே :— (பக்கம் 287)

மகாபாரதத்தில் :—

नरके पच्यमानस्तु यमेन परिभाषितः ।
किं त्वया नार्चितो देवः केशवः क्लेशनाशनः ॥

என்றொரு சுலோகம் உளது. இதன்கருத்து :—

யமலோகத்தில் வெந்நரகில் தள்ளப்பட்டு வெந்து கொண்டிருக்கும் ஒருவனைப்பார்த்து "எல்லோருடைய க்லேசங்களையும் நாசம் செய்யும் அழகிய குழலையுடைய கேசவன் உன்னால் பூசிக்கப்படவில்லையோ? என்று கேட்டான் யமன். "கேசவః" என்றால் அழகிய கூந்தலை உடையவன் என்று பொருள். இச்செய்யுளில் "சுரிகுழல்" என்னும் சொல் ஷை கருத்தைப் ப்ரதிபலிப்பதாகும்.

"காலன் கொண்டு மோதிரமிடுவாரைப்போலே":- (பக்கம் 297)

காலன்கொண்டு — காலபுருஷதாநம்வாங்கி, மோதிரம் இடுவார்—கணையாழி செய்து அணிவார். ஒருவனால், தனக்கு வரவிருக்கும் மரணத்தைத் தவிர்ப்பதற்காக அளிக்கப்பெறும் பொன்னாலான காலபுருஷப்ரதிமையைதாநம் வாங்கி, அதைக் கொண்டு மோதிரம் செய்வித்து அணிய விரும்புவது, அவ்வாறு தாநம் வாங்குபவனையே மாய்த்து விடுமாதலால் அபாயகரமானது. அதேபோல் உன் பிரிவாற்றாமையால் வருந்தும், நான் அதற்குப்பரிகாரமாக என்னிஷ்டம்போல் எதையும் செய்யேன். பிரிவாற்றாமையால் வரும் துன்பத்தைவிட பன்மடங்கு கொடியதன்றோ? அடியனாகியநான் சுதந்திரமாய் ஒருகாரியம் செய்வது, என்று கருத்து.

"ப்ரஜை தீம்பிலே கைவைத்தால்.........வாய்வாய் என்பாரைப் போலே. :— (பக்கம் 304)

யாவரும் தங்கள் குழந்தைகளுக்கு நன்மையையே விரும்புவர். அறியாமையினால் குழந்தைகள் தவறுதலான காரியம் செய்தால், தாடையில் அடித்துத் துன்புறுத்தி அதனின்றும் திரும்பும்படி செய்வது இயல்பு. அதுபோலவே எல்லா உயிர்களும் இறைவனுக்குக் குழந்தைகளாகவே இருக்க; அவன் சிலரை ஸம்ஸாரத்திலே நீசமான பிறவிகளிலேயே தள்ளுவதும், வேறுசிலரை மோக்ஷம் பெறுவதற்கு உபாயமான ஜ்ஞான பக்திகள் உள்ளவர்களாக்கி வைப்பதும் அமைந்துள்ளது, என்றபடி.

"ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானையிறே எதிரிடப்பண்ணிற்று :— (பக்கம் 308)

ப்ரஹ்லாதாழ்வான் = பரமபக்தரான பிரஹ்லாதன். அவரையும் ஒருஸமயத்தில் பகவானை எதிர்த்துப் போர்புரியுமாறு பண்ணிற்று இந்த இருள்தருமாஞாலம். அதனால், இதில் இனிப் பிறவியான் வேண்டேன் என்கிறார். 'பாணாஸுரயுத்தத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுடன் ப்ரஹ்லாதாழ்வானும் கூட யுத்தம்செய்தார்' என்கிற புராணக்கதையைக்காண்க.

"இவருடைய ஸ்ரீ மைத்ரேயபகவான் அவா, உபாத்யாயராக நடத்த, நடந்தஆயிரம். (பக்கம் 332)

தத்துவங்களைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல் "ஸ்ரீ விஷ்ணுபுராண" மாகும். இது பராசர மகரிஷியால், மைத்ரேயர் என்னும் தன் சிஷ்யருக்குபதேசிக்கப்பட்டதாகும். புராணத்தின் தொடக்கத்திலும், மத்தியில் பற்பல இடங்களிலும், மைத்ரேயர் தன் ஆசார்யரைப் பார்த்துக்கேட்கும் கேள்விகளே இவ்வற்புதமான புராணநூல் உருவாவதற்கு முக்கியகாரணமென்னலாம். அதுபோல் இங்கும் ஸ்ரீ பராசரமகரிஷியின் ஸ்தானத்தில் ஸ்ரீ நம்மாழ்வாரைவைத்தால், இவருக்கேற்ற மைத்ரேயபகவான் (மேலும் மேலும் பாசுரங்களை அருளிச்

செய்யும்படி தூண்டுபவர்) வேறு ஒருவரும் இல்லை, இவருடைய "அவா" (பக்தி) தான். பக்திபெருகி வாயினுற்பாடியல்லது தரிக்கமாட்டாமல் ஓரளவு எம்பெருமான் குணங்களைப்பாடினுல், அதனுல் அவா தணிவதற்கு மாருக மேலும் பெருகி மீண்டும் பாடும்படி செய்கிறது. இவ்வாருக இப்பிரபந்தம் முழுதும் இவருடைய அவாவே முக்கியமான காரணமாக இருந்து நடத்தி வந்துள்ளதனுல் இப்பிரபந்தத்தை "அவாவிலந்தாதி" என்றழைக்கும்படியாயிற்று.

இவ்வாறு இன்னும்பல வாக்கியங்கள் விரித்துரைக்கவேண்டி யிருக்கின்றன நூலின் விரிவைத் தவிர்க்கவேண்டி அவைகளை விடுத்து, அவசியமாகத் தோன்றிய சிலவற்றைமட்டும் விளக்கி யுள்ளோம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலை அருந்தொடற்பொருளகராதி.

(தமிழ்)

அ

அகவாய்—அகம், உள்ளிடம்.

அக்ரமமாக—முறை தவறி.

அங்குத்தை—அவ்விடம்.

அசையிட்டிருத்தல்—அசைபோடுதல்.

அஞ்சலி—கைகூப்புதல்.

அடங்கலும்—முழுதும்.

அடி—காரணம்.

அடிதாறு— பாதரேகை.

அடியிட்டவித்தனை—தொடங்கியவித்தனை.

அடுகிற சோறு—சமைக்கிற சோறு.

அடுப்பது—ஏற்றது.

அடைய—முழுவதும்.

அடைவு—முறை, தகுதி.

அணங்காடுகை—தெய்வம் ஆவேசித்து ஆடுதல்.

அத்தனை—அவ்வளவு.

அத்தலை—அவ்விடம்.

அத்தரிசனம்—அந்த (மதம்) சமயம்.

அத்யாதரம்—அதிகமான அன்பு.

அபலைகள்—பெண்மக்கள்.

அருளப்பாடு—ஆக்ஞை.

அர்த்தித்தல்—இரத்தல்.

அலமாப்பு—துன்பம்.

அல்வழக்கு—தகாத ஒழுக்கம்.

அல்லாத திருநாமங்கள்—வேறு திருநாமங்கள்.

அவ்வருகு—அப்பால், உயர்வு.

அவசமாய்—தன்வசப்படாமல், பராதீனமாய்.

அவனையொழிந்தது—அவனைத் தவிர.

அவசரம்—சந்தர்ப்பம், விரைவு.

அளவிலே—ஸமயத்திலே.

அனந்தரத்திலவன்—அடுத்த தோன்றல்.

அனந்தசாயித்வம்—ஆதிசேஷன்மேல் பள்ளிகொள்ளுதல்.

ஆ

ஆக்கன்—செயற்கையானது.

ஆகாதே—அல்லவா.

ஆகாதே கொள்ளுங்கோள்—ஆகாதீர்கள்.

ஆகிறான்—'ஆவது' எனப்பொருள்படும் இடைச்சொல்.

ஆச்ரயித்தல்—பற்றுதல், சார்தல்.

ஆய்த்து
ஆய்த்தது } ஆயிற்று.

ஆதல்—'ஆவது' எனப்பொருள்படும் இடைச்சொல்.

ஆர்ஜித்தல்— ஸம்பாதித்தல்.

ஆராவமுதம்—தெவிட்டாத அமுதம்.

ஆழிப்படையந்தணன்—சக்கரத்தண்ணல்.

ஆளத்தி—பாடுவதற்குப் பூர்வாங்கமான ஆலாபனம்.

ஆற்றாமை—விசனம்.

இ

இங்குத்தை—இவ்விடம்.

இடையாட்டம்—விஷயம்.

இத்தனை—இவ்வளவு (ஒருவகை உரையசை).

இத்தலை—இவ்விடம்.

இதுக்கடி
இது தனக்கடி }—இதன் காரணம்.

இராநின்றான்—இருக்கிறான். [தல்.

இருவருமான சேர்த்தி—பெருமாளும் பிராட்டியும் சேர்ந்திருத்

இவ்வருகு—இப்பால்.

இழவு—கேடு, நஷ்டம்

இறை—'பிரஸித்தம் தெரியவேண்டியவிஷயம், தெளிவு' இவற்றைக்குறிக்கும் உரையசைச்சொல். திவ்யப்ரபந்தங்களின் உரைகளிலும், ஏனைய வைணவநூல்களிலும் அடிக்கடி காணப்படுவது.

இனியர்—இனிமையுடையவர், இனிமை தருபவர்.

இனையை—இப்படிப்பட்டாய்.

உ

உகந்தருளின நிலங்கள்—திவ்யதேசங்கள்.

உகவாதார்—விருப்பமில்லாதவர்கள், வெறுப்பவர்கள்.

உசாத்துணை—உற்றதுணைவன் (உயிர்த் துணைவன்).

உசாவி—விசாரித்து.

உடல்—சாதனம், சரீரம்.

உடன்கேடு—கூடவே துக்கம் அனுபவித்தல்.

உத்யோகிப்பான்—முயற்சிப்பான்.

உறுவுதல்—சோர்தல்.

உறுப்பு—அங்கம்.

ஊ

ஊரவர்கவ்வை—ஊரார் சொல்லும் பழிச்சொல்.

எ

எண்—மனம்.

எதிர்சூழல்புக்கு—ஒருவனைப்பிடிக்க நினைத்தவன், அவன் போகும் வரம்புக்கு எதிர்வரம்பே வருமாபோலே, இவர் (ஆழ்வார்) பிறந்த ஜன்மங்கள்தோறும்(பகவான்) தானும் எதிரே பிறந்து.

எல்லைநிலம்—முடிந்த நிலம்.

எழுதிக்கொண்டவன்—அடிமையாக்கிக் கொண்டவன்.

எழுதிக்கொடுத்தாள் = அடிமையாக்கிக் கொடுத்தாள்.

என்னு—என்றால்.

என்னோட்டை—என்னோடு.

ஐ

ஐதுநொய்தாக வைத்து—மிக்க இலேசாகவைத்து.

ஒ

ஒப்பனை—அலங்காரம்.
ஒருதலை—நிச்சயம்.
ஒருப்படுதல்—முயலுதல், துணிதல்.

ஓ

ஓங்காணும்—ஒருவகை விளிச்சொல்.
ஓபாதி—அம்சம், உவமவுருபு.
ஓலக்கம்—சபாமண்டபம், அத்தாணிக்காட்சி.
ஓட்டை—'ஓடு'ப்பொருளையுணர்த்தும் மூன்றும்வேற்றுமையுருபு.

க

கட்டுவிச்சி—குறிசொல்பவள்.
கண்ணழிவு—தாமதம், குறைவு.
கண்ணழுவுதல்—பார்க்கப்படாமல் தவறிவிடப்படுதல்.
கண்ணுஞ்சுழலையிடப்பண்ணும்—மருண்டு பார்க்குமாறு பண்ணு[ம்.
கண்வைக்க மாட்டிற்றிலன்—கண்ணால் பார்க்கமுடியாதவனாய் இருந்தான்.
கரந்து—மறைந்து.
கருமமடியாக—வினைப்பயனாக.
கருவிலே திருவுடையார்—கர்ப்பத்திலேயே பகவத்ஸ்வரூபக்ஞானம் வாய்க்கப் பெற்றவர்.
கரைமாஞ்சேர்த்தல்—உய்வித்தல்.
கலவிருக்கை—பிரியமான இடம்.
கஜேந்திராழ்வான்—முதலையினால் பீடிக்கப்பட்டு 'ஆதிமூலமே' என்று கதறிய யானை.
காண்—முன்னிலையில் வரும் ஓர் உரையசை.
காணீர் } காணும் } முன்னிலைப் பன்மையில் வரும் ஓர் உரையசை.
காப்பார்—தடுப்பார்.
காரியப்பாடு—பயன்.

காலதாழ்தல்—தாமதித்தல், ஈடுபடுதல்.
கால்கடைக்கொள்ளுதல்—அனுதரித்தல், பாராட்டாதிருத்தல்.
கால்வாங்குதல்—பின்வாங்குதல்.
கால்பாவிநின்ற—நிலைத்துநின்ற.
காலதத்வமுள்ள தனையும்—எக்காலமும்.
காவல்சோர்வு—சரியாகக் காவல்புரியாமை.
கானம்—பாட்டு.
கானாம்ருதஸாகரம்—பாட்டுக்களாகிற அமுதக்கடல். [உரையசை.
கிடாய்—'காண்' என்னும் பொருளில் வரும் முன்னிலையொருமை.
கிடை—கிடக்கை.
...கிறிலன்—கிறானில்லை,
...கிறிகோள்—...கிறீர்கள்.
குடிவாங்கவேண்டும்படி—இருப்பிடம்விட்டுப் பெயரும்படி.
குணவிபூதிகள்—குணங்களும் சொத்துக்களும்.
குமிழிநீருண்ணுமவன்—கருத்துமூழ்கி நிற்பவன்.
கூழ்க்காள்படாதே—சந்தேகம் கொள்ளாமல்.
கேசி—குதிரைவேடம் பூண்டிருந்த ஒரு அசுரன்.
கேட்கிறவர்களிலும்—கேட்பவர்களைக் காட்டிலும்.
கைகழிதல்—எல்லைகடத்தல்.
கைகொடுக்க—உதவிசெய்ய.
கைம்முதல்—சாதனம்.
கையடைப்பு—கைவசமான பொருள்.
கைவாங்குதல்—நீங்குதல்.
கைவாங்கலாம் விஷயம்—நீங்கக்கூடிய விஷயம்.
கொடுமுடி—மலையுச்சி.
கொடுவந்து—கொண்டுவந்து.
கோடி—வரிசை.
கோயில்—ஸ்ரீரங்கம், ஆலயம்.
க்ருஷிபண்ணுதல்—முயற்சித்தல்.

ச

சக்ரவர்த்தித்திருமகன்—இராமன்.
சங்காயம்—வயலில் களையோடு முளைக்கும் ஆனைப்புல்.

சபலன்—மனத்தைஅடக்க இயலாதவன்,
சாக்கு—பொருள், பண்டம்.
சரணுகதி—அடைக்கலம் புகுகை.
செவ்வி—செம்மை. அழகு.
செய்வுற்றை—செய்வதை.
சேஷபூதன்—அடியவன்.
சேஷத்வமுறை—சேஷத்வமாகிற ஸம்பந்தம்.
சொல்லலாயிருந்தார்—சொல்வதாக இருந்தார்.

த

தடம்—குளம்.
தண்ணியர்—தாழ்ந்தவர்.
தமர்—தமக்கு வேண்டியோர், சுற்றத்தார்.
தரவு—கட்டளை.
தலை—சிறந்தது.
தலைக்கட்டுதல்—நிறைவேற்றுதல்.
தளிர்—முளைக்கும் பருவத்துள்ள இலை.
தன்னுடைச்சோதி—பரமபதம், ஸ்ரீவைகுண்டம்.
தாமடியாக—தன் முயற்சியின் பயனுக.
திரிய—திரும்ப.
திருநாடு—வைகுண்டம்.
திருநாமப்ரஸங்கம்—திருநாமத்தின் உச்சாரணம்.
திருமந்திரம்—அஷ்டாக்ஷரம், மூலமந்திரம்.
திருமலை—திருப்பதி.
திருமாமணிமண்டபம்—பரமபதத்திலுள்ள திருவோலக்கமண்டபம்.
திருவடி—அனுமான், கருடன்.
திருவனந்தாழ்வான்—ஆதிசேஷன்.
தீர்த்தன்—பரிசுத்தன்.
துவக்கவற்றது—வசீகரிக்கக்கூடியது.
துவர்ந்து—உலர்ந்து.
தேட்டம்—தேடவேண்டியது.
தேவர் / தேவரீர் }—பெரியோரை முன்னிலைப்படுத்தும் சொல்.

தேஜிக்குதிரை—வேகமான குதிரை.

தோற்றிருக்குமவர்கள்—தோல்வியுற்றிருப்பவர்கள்.

தோள் தீண்டி—நெருங்கியது.

ந

நசை—ஆசை.

நடையாடாத—பரவாத.

நந்தாவிளக்கு—அவியாதவிளக்கு.

நம்பி—பூரணன்.

நாச்சிமார்—திருமாலின் தேவிமார்.

நாவறுதலற—நாவறட்சி அற்றுப்போகுமாறு.

நிர்மால்யத்தோபாதி—பூசித்துக்கழித்த பொருளைப்போல.

நிரஸித்தது—விலக்கியது.

நிலவன்—ஒளியுடையோன்.

நினைத்திருக்கிறிலன்—நினைத்திருக்கிறானில்லை.

நின்மலமானவன்—மாசற்றவன்.

நிஷேதியாதே—விலக்காமல்.

நெய்த்து—பளபளத்து.

நேர்கொடு நேர்—வெளிப்படையாக.

பக்கல்—பக்கம்.

பச்சை—காணிக்கை, கைம்மாறு.

படி—தன்மை.

பதம்—பதவி.

பயிலாநிற்கச்செய்தே—அனுபவித்துக்கொண்டிருக்கும்பொழுதே.

பரத்வாதிகள் ஐந்து—பரம், வ்யூஹம், விபவம், அர்ச்சை, ஹார்தம் என்னும் பகவானுடைய ஐந்து ரூபங்கள்.

பரமபதத்திலும்—பரமபதத்தைக்காட்டிலும்.

பரிமாற்றம்—அநுஷ்டானம், கலந்திருக்கை.

பற்ற—முன்னிட்டு, காட்டிலும்.

பற்றுசு—பற்றுக்கோடு, தஞ்சம், காரணம்.

பற்றாமை—பற்றாமல்.

பாசுரம்—திருப்பாடல், மொழி.

பார்க்க—உறழ்ச்சிப் பொருளில் வரும் சொல்.

பாரீர்கோள்—பாருங்கள்.

பிச்சு } —பைத்தியம்,
பித்து }

பிச்சேறினபடி—பைத்தியம் பிடித்தவாறு.

பிரான்—உபகாரகன், கடவுள்.

பிராட்டி—தேவி.

பிராபிக்கவொண்ணாத—பெறமுடியாத.

பிள்ளான்—ஆறுயிரப்படி உரை எழுதியவர்.

பிற்பாடு—பின்னிகழ்ச்சி.

பிற்பாடர்—பிற்பட்டவர்.

பின்னைவினை—பிறகு செய்யப்படும் கருமங்கள்.

பீடு—பெருமை, வலிமை.

புக்கவிடம்—புகுந்த இடம்.

புகர்—ஒளி, அழகு.

புடை—முறை.

புண்ணியம்—நல்வினை, பக்தி.

புதுக்கணித்தல்—அழகுபெறுதல்.

புரை—பொய், குறைவு.

புஜிக்கிற—அநுபவிக்கிற.

புறவாய்—புறம்.

பூசல்—கூப்பீடு.

பெரியபெருமாள்—ஸ்ரீரங்கநாதர் (திருவரங்கத்துத்திருமால்)

பெரியதிருவடி—கருடன்.

பெருக்காறு—பெருகி ஓடும் ஆறு.

பெருமக்கள்—பெரியோர்.

பெருமிடறு செய்தல்—உரத்தழுதல்.

பெருவிடாய்—பெரியதாகம்.

பேசலாமம்சம்—பேசமுடிந்தவரை.

பேரநிற்க—பிரிந்து நிற்க.

பேற்றுக்குடல்—பேறு-புருஷார்த்தம். உடல்-அதற்கு உபாயம்.

பொலிக—செழிக்க, விளங்குக, நீடுவாழ்க.

பொறை—பொறுமை.

போக்யதையைப்பற்ற—போக்யதையைமுன்னிட்டு.

போக்கு விடுதல்—வழிவிடுதல்.

போந்தவர்—தகுந்தவர்.

போருதல்—செல்லுதல், பொருள்பெறப்படுதல்.

ப்ரஜை—குழந்தை.

ப்ரஸங்கிக்கவேண்டா—சொல்லவேண்டா.

ம

மடலூர்தல் } காதலர் இருவர்களுள் ஒருவர் மற்றவரை
மடலெடுக்கை } அடைதல் வேண்டிப் பனைமடலால் ஆன குதிரையின்மேல் ஏறி ஊர்தல்.

மயர்வு—பிரமம், (உண்மைக்கு மாறான அறிவு)

மறுமாற்றம்—பதில்,

மனனகமலமறும்படி—மனத்தினுள்ளிருக்கும் அஜ்ஞானமறும்படி.

மாட்டிற்றிலன்—சக்தியற்றவனாயிருந்தான்.

மானம்—மேன்மை, உயர்நிலை.

மிடறு—கழுத்து.

முக்கவர்—முத்துக்குளிப்பவர்.

முக்கோட்டை—கவித்வத்தையருளும் தெய்வம்.

முடியாதே கொள்ளுங்கோள்—முடிக்காதீர்கள்.

முதிர்நிற்றல்—உறுதியுடன் நிற்றல்.

முந்திரிகைப்பழம்—திராட்சைப்பழம்.

முள்ளிப்பூரஸம்—நீர்முள்ளிப்பூவில் இருக்கும் அற்பமான மது.

முற்பாடன்—முற்பட்டவன்.

முற்றூடு—பூர்ணானுபவம் உடைய நிலம். (இறையிலி)

முறி—தளிர்.

முன்னைவினை—பழவினை.

மூன்றும் விபூதி—மூன்றுவது வகையைச்சேர்ந்த சொத்து.

மேகர்—செல்லும் வழிகளில் நீர் தெளிப்போர்.

மேலாத்தேவர்—நித்யஸூரிகள்.

ர

(உ)ருசி—இனிமை, விருப்பம்.

ல

லஜ்ஜித்து—வெட்கி.

வ

வரையாதே— அளவுபடுத்தாமல்.
வல்லிகோள்—வல்லீர்கள்.
வளவயல்— வளம்பொருந்திய வயல்.
வஸியாநிற்கிற—வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற.
வாய்கட்டுதல்—வாயைக்கட்டுதல்.
வானவர்கள்—தேவர்கள்.
விஸ்மரித்தல்—மறத்தல்.
விஷயீகரித்தல்— இலக்காக்குதல்.
வீரக்கழல்—ஆண்மைக்குறியாக வீரர்கள் அணியும் காலணி.
வெளிச்சிறப்பு—ஞானத்தெளிவு.
வெறிவீச்சு—சூன்யம்.
வைகுந்தத்தமரர்—நித்யஸூரிகள்
வைத்தமாநிதி—சேமித்துவைக்கப்பட்ட பொருட்குவை.
வைவர்ண்யம்—நிறம் மாறுதல்.
வ்யாமோஹம்—மயர்வு. அஜ்ஞானம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி வாசகமாலை அருந்தொடர்ப்பொருளகராதி.

(ஸம்ஸ்கிருதம்)

अ

अकिञ्चनः = ஒருவிதமான சொத்தும் இல்லாதவன், திக்கற்றவன்.

अखिलहेयप्रत्यनीककल्याणैकतानम् = தோஷங்களுக்கெல்லாம் எதிர்த்தட்டானதும், மங்கலகரமானவைகளுக்கே உறைவிடமானதும்.

अङ्गीकारः = ஏற்றுக்கொள்ளுதல், இசைதல்.

अज्ञानांधकारः = அகவிருள், அறியாமையாகிற இருள்.

अतिशंका = அச்சம், ஐயம்.

अतिप्रवणम् = அளவு கடந்த அன்புள்ளது.

अधःपतित्तल् = கீழே விழுதல்.

अध्यवसायः = நிச்சயம், திடசங்கல்பம்.

अनन्यगतित्वम् = வேறு பேறுகளை விரும்பாமை.

अनन्यप्रयोजनर् = வேறு பயனை நாடாதவர்.

अनर्हकरणन् = தகுதியற்ற கருவிகளை (இந்திரியங்களை) உடையவன்.

अनन्यार्हशेषत्वम् = இறைவனுக்கேயன்றி மற்றெவருக்கும் அடியவனுயிராமை.

अनन्यार्हैं = பிறருக்குத்தகாதவள்.

अनन्यार्हशेषि = பிறர் எவருக்கும் தகாதசேஷித்வம் (அடிமை கொள்ளுதல்) உடையவன் (ஸர்வசேஷி)

अनवरतपरिचर्या = இடையறுமல் பணி செய்தல்.

अनवरतपरिचर्यमाणचरणनलिनन् = எக்காலமும் தொழப்பட்ட திருவடித் தாமரைகளை யுடையவன்.

अनवाप्ति = குறை.

अनाश्रितर् = ஆச்ரயிக்காதவர்கள்.

अनिमिषर् = இமைகொட்டுதல் இல்லாதவர்.

अनुकूलवृत्तिकळ् = உற்ற பணிவிடைகள்.

अ

अनुग्रहशीलर् = அருள் புரியும் தன்மையினர்.
अनुभवगर्भोपदेशः = தான் அனுபவித்துக்கொண்டே பிறர்க்கு உபதேசித்தல்.
अनुभवपरिपाकरूप = அனுபவத்தின் முதிர்ந்த நிலைமை.
अनुभवप्रकारंगळ् = அனுபவத்தின் பலபடிகள்.
अन्तःपुरपरिकरः = அந்தப்புரத்திலுள்ள ஏவலாளர்கள்.
अन्यथाज्ञानम्, अन्यथाप्रतिपत्ति = உண்மைக்கு மாறான அறிவு.
अन्यपरर् = வேறு பயன்களை விரும்புகிறவர்.
अन्यशेषत्वम् = (எம்பெருமானைத் தவிர) மற்றவருக்கடியவனாயிருத்தல்.
अन्यापदेशः = உள்ளுறைபல்லாத வெளிப்படைப்பொருள்.
अपचारत्रयम् = மூன்று விதமான குற்றங்கள் :—
(1) பகவதபசாரம். (2) பாகவதாபசாரம்.
(3) அஸஹ்யாபசாரம், எனப்படுவன.
अपराधसहन् = குற்றங்களைப் பொருத்தருளுகிறவன்.
अपरिच्छिन्नम्, अपरिच्छेद्यम् = அளவிடமுடியாதது.
अपर्याप्तामृतम् = தெவிட்டாதவமுதம்.
अपर्याप्तामृताशिकळ् = தெவிட்டாதவமுதத்தைப் பருகுபவர்.
अपिशब्दः = 'அபி'என்னும் சொல்.
अपौरुषेयम् = புருஷனால் செய்யப்படாதது.
अप्रयोजकम् = சக்தியற்றது.
अप्राप्तविषयः = உரியதல்லாதவிஷயம்.
अभिमतसाधनम् = விரும்பியதைப்பெறுவதற்கான உபாயம்.
अभीष्टम् = பிரியமானது,
अमरर् = இறத்தல் இல்லாதவர்கள்.
अमृतशब्दवाच्यर् = 'அமிருதம்'என்னும் சொல்லால் வழங்கப்படுபவர்கள்.
अर्चावतारः = திருமால் நிலை ஐந்தினுள் ஒன்று.
अर्चिरादिमार्गः = 'அர்ச்சிஸ்'முதலான தேவதைகளால் வரவேற்கப்பட்டு ஜீவாத்மா பரமபதத்திற்குச்செல்லும் வழி.
अर्चिरादिगणाः = மோக்ஷமடையப்போகிறவர்களை உபசரித்து வழிநடத்துகிற'அர்ச்சிஸ்' முதலான தேவர்கள்.

अ

अर्थार्जनम् = பொருள் ஈட்டுதல்.

अर्हकरणन् = தகுந்த காரணங்களை (இந்திரியங்களை)யுடையவன்.

अल्पास्थिरम् = அற்பமானதும், நிலையற்றதும்.

अल्पास्थिरत्वादिदोषदुष्टम् = அற்பமாயும் நிலையற்றிருக்கையுமான இது போன்ற பல தோஷங்களுள்ளது.

अवगाहित्तु = மூழ்கி.

अवधि = கெடு, எல்லை.

अवरदेवताप्रतिपत्ति = கீழ்ப்பட்ட தெய்வங்களைத் தொழுதல்.

अवसन्नर् = துக்கமடைந்தவர்.

अवसादः = துயரம்.

1 अविद्या 2 कर्म 3 वासना 4 रुचि 5 प्रकृतिसंसर्गाः = 1 அறுதியான அஜ்ஞானம். 2 வினை. 3 மீண்டும் மீண்டும் வினைகளிலேயே ஈடுபடும்படி செய்யும் ஒரு விதமான பழக்கம். (குடிப்பழக்கம் முதலியன போன்றது). 4 பற்றுதல். 5 ப்ராக்ருதியுடன் கூடுதல்.

अविहितम् = விதிக்கப்படாதது.

अव्यपदेश्यन् = பெயரைச்சொல்லிக் குறிப்பிடக் கூடாதவன்.

अश्लेषः = ஸம்பந்தமில்லாமை.

असत्कल्पन् = இல்லாததற்கொப்பானவன்.

असाधारण = தனக்கேயுரியது.

असेव्यसेवा = வணங்கத் தகாதவரை வணங்குதல்.

अस्थाने भयशङ्की = காரணமில்லாமலே அச்சங்கொள்பவர்.

अस्पृष्टसंसारगंधर् = எக்காலத்தும் ஸம்ஸார ஸம்பந்தம் அற்றவர்.

अहं सर्वं करिष्यासि = எல்லாவிதமான பணிவிடைகளையும் நானே செய்வேன்.

आ

आकर्षकम् = வசீகரிப்பது.

आकिञ्चन्यम् = ஒருவிதமான சொத்தும் (உபாயமும்) இல்லாமை, திக்கற்றவனாயிருத்தல்.

आचारवैकल्यम् = ஒழுக்கக்குறைவு.

आतिवाहिकाः = மோக்ஷம் பெறப்போகிறவனைப்பரமபதத்திற்கு அழைத்துச் செல்பவர்.

आत्मक्षयरोगः = உயிரை (ஆத்மாவை) நற்கதிக்குப் போகவொட்டாமல் தடைசெய்யும் கொடிய வியாதி.

आ

आत्मज्ञानी = தன்னையறிந்தவன்.

आत्मलाभः } = கைவல்யம்.
आत्मप्राप्तिः }

आत्मवस्तु = (உயிர்) ஜீவாத்மா.

आत्मस्वरूपम् = தன் (உண்மை நிலை) மை.

आत्मस्वरूपवैलक्षण्यम् = ஆத்மஸ்வரூபத்தின் தனிச்சிறப்பு.

आत्मात्मीयंगळ् = தான்-தன்னுடையவை.

आत्मानुभवः = தன்னைத்தான் அனுபவிக்கை. (கைவல்யம்)

आत्मानुभवविरोधि = ஆத்மானுபவத்திற்கு இடையூறு செய்வது.

आदित्यन् = சூரியன்.

आधिदैविक = தெய்வத்தால் வரும் துன்பம்.

आधिभौतिक = பஞ்ச பூதங்களாலும், தன்னையொழிந்த பிராணிகளாலும் உண்டாகும் துன்பம்.

आध्यात्मिक = தன் உடம்பில் தோன்றும் வியாதிகள் முதலியன.

आनन्दाश्रु = ஆனந்தக்கண்ணீர்.

आनन्दादिगुणगणविभूषितन् = ஆனந்தம் முதலிய எண்ணற்கரிய நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்டவன்.

आनन्दावहर् = களிக்கச்செய்பவர்.

आनन्दामृतपानम् = பிரம்மானந்தமாகிற அமுதத்தைப் பருகுதல்.

आभिजात्यादिकळ् = நற்குலத்தில் தோன்றுதல் முதலியன.

आर्तप्रपन्नः = ப்ரபத்தி பண்ணுகிற ஸமயத்திலேயே உடனே மோக்ஷத்தை விரும்புகிறவன்.

आर्तरक्षणम् = நொந்தவரைக்காப்பது.

आर्तरक्षणदीक्षितन् = துன்புற்றாரைக் காப்பதையே விரதமாகக் கொண்டவன்.

आर्ति = துன்பம்.

आलंबनम् = பற்றுக்கோடு.

आश्रयणीयन् = ரக்ஷகனுகப் பற்றத் தகுந்தவன்.

आश्रयः = புகலிடம்.

आश्रितर् = சரணடைந்தவர், அடியவர்.

आश्रितपरतन्त्रः = அடியார்களுக்குக் கட்டுப்பட்டவன்.

आश्रितसुलभः = அடியவர்க்கெளியவன்.

आश्वसिप्पित्तल् = தேற்றுதல்.

इ

इतरविषयरक्तः = வேறுவிஷயங்களில் ஆசையுள்ளவர்.
इतरविषयप्रावण्यम् = வேறுவிஷயங்களில் ஆசை.
इन्द्रियवश्यः = இந்திரியங்களுக்குக் கட்டுப்பட்டவன்.

ई

ईश्वराधीनम् = எம்பெருமானுக்குக் கட்டுப்பட்டது.

उ

उक्तिमात्रत्वात् = சொல்லுவதால் மட்டும்.
उत्कृष्टम् = உயர்ந்தது.
उत्तराघम् = (சரணாகதி பண்ணிய) பிறகு செய்யப்படும் தீவினைகள்.
उत्पादकः = உண்டு பண்ணுகிறவன்.
उदकपूर्वकम् = தாரை வார்த்துக்கொடுத்தல்.
उदारः = கொடையாளி.
उद्युक्ताः = முயற்சியுடையார்.
उपक्रमः = தொடக்கம்.
उपकारस्मृति = நன்றியறிதல்.
उपदेशगर्भानुभवः = தன் அனுபவத்தில் பிறர்க்கு உபதேசமும் அடங்கியிருத்தல்.
उपायशून्यता = உபாயமொன்றுமில்லாமை.
उपायभावः = உபாயமாக இருக்கை.
उपायानुष्ठानम् = உபாயத்தைச் செய்தல்.
उभयविभूतियुक्तः = நித்ய விபூதி-லீலாவிபூதி என்னும் இரண்டு விபூதிகளை உடையவன்.
उभयभावनानिष्ठः = பிரும்ம பாவனை, கர்ம பாவனை இரண்டிலும் ஊன்றியவர்.

ऋ

ऋणत्रयम् = மூன்று கடன்கள்: ரிஷிகளிடமும், தேவர்களிடமும், பித்ருக்களிடமும், ஒவ்வொருவருக்கும் இயற்கையிலேயே உள்ளவை. வேதங்களை ஓதுதல், வேள்விவேட்டல், மக்களைப் பெறுதல் இவைகளினால் போக்கக்கூடியது.

ए

एकाकारमनोरथः = இடையறாத ஆசை.

ऐ

ऐकरस्यम् = ஒரே விதமான ரஸமனுபவித்தல்.

ऐश्वर्यार्थिकल् = ஐச்வரியத்தை விரும்புகிறவர்கள்.

ऐश्वर्यकैवल्यङ्गल् = ஐச்வரியமும், கைவல்யமும்.

ऐहिकम् = இம்மையிலுள்ளது.

ऐहिकामुष्मिकम् = இம்மையிலுள்ளதும், மறுமையிலுள்ளதும்.

औदार्यम् = வள்ளன்மை.

करणकलेवरम् = கை, கால் முதலிய கரணங்களும் உடம்பும்.

करणप्रदानम् = கரணங்களைக் கொடுத்தல்.

करणसंकोचः = கரணங்கள் (இந்திரியங்கள்) மழுங்கியிருத்தல்.

करस्पर्शः = கையினால் தொடுவது.

कर्मज्ञानादिकल् = கருமம், ஜ்ஞானம் முதலியன.

कर्मज्ञानसहकृतम् = கருமம், ஜ்ஞானம் இவைகளின் உதவியுடன் கூடியது.

कर्मपाशः = வினையாகிற கயிறு.

कर्मपारतन्त्र्यम् = கருமங்களுக்குக் கட்டுப்பட்டவனாகவிருக்கை.

कर्मभावनानिष्ठर् = கருமபாவனையில் ஊன்றியிருப்பவர்.

कर्मानुगुणम् = கருமங்களுக்கு தக்கவாறு.

कर्मावसानम् = வினைகள் அறவே அழிதல்.

कामक्रोधम् = ஆசையும் கோபமும்.

काम्य फलङ्गल् = பசு—புத்திரன், தனதான்யம், முதலிய நிலையற்ற பேறுகள்.

कायक्लेशः = மெய்வருத்தம்.

कीर्तिसागरः = புகழ்க்கடல்.

कुब्जाम्रम् = ஸ்ரீமகாவிஷ்ணுவின் அவதாரங்களுள் ஒன்று என்பர் ஒரு புண்யக்ஷேத்திரத்திற்கும் பெயர். "பல கோணல்கள் உள்ள ஒரு மாமரம்" என்பது இந்தச்சொல்லின் பொருள். இந்த மாமரம் உடையதாகலின் இந்தக் க்ஷேத்திரத்திற்கே இப்பெயர் வழங்கலாயிற்று. இம்மாமரத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு நிரந்தரமாக ஸாந்நித்யம் பண்ணி 'ரைப்யர்' என்னும் மகரிஷியை அனுக்ரகித்தார். இந்த க்ஷேத்திரத்தில் பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. ஸ்ரீவராஹபுராணத்தில் 126வது அத்தியாயத்தில் இதன் பெருமை காண்க.

कृपापात्रम् = அருளுக்கிலக்கானவன்.

कृष्णगुणचेष्टितंगल् = கிருஷ்ணனுடைய குணங்களும், திருவிளையாடல்களும்.

केवलर् = பிரகிருதியிலிருந்து விடுபட்ட ஜீவாத்ம ஸ்வரூபத்தை மட்டும் அனுபவிப்பவர்.

कैवल्यम्
कैवल्यमोक्षः } = பிரகிருதியினின்றும் விடுபட்ட சுத்தமானஜீவாத்ம ஸ்வரூபத்தின் அனுபவம்.

क्रमः = முறை.

क्रमप्राप्ति = அடைவே பெறுதல்.

क्रियतामिति मां वद् = பணிவிடைகளைச் செய்யுமாறு என்னைக் கட்டளையிட்டருள்க.

क्षमा = பொறுமை.

क्षयिप्पार्गल् = அழிவார்கள்.

क्षुद्रर् = அற்பர்.

ग

गुणकीर्तनम् = குணங்களைச் சொல்லுதல்.

गुणाधिक्यम् = அதிகமான குணம் (மற்றொரு குணம்).

चरमचतुर्थी = திருமந்திரத்திலுள்ள நான்காம் வேற்றுமைகள் இரண்டுக்குள் கடைசியிலுள்ளது.

छन्दानुवृत्ति = இஷ்டப்படி நடந்துகொள்ளுதல்.

जगदाकारता = உலகெல்லாம் தன் சரீரமாக உடைத்தாகவிருக்கை.

जन्मजरामरणादि = பிறப்பு, கிழத்தனம், இறப்பு முதலியன.

जरामरणादिकम् = கிழத்தனம்-இறப்பு-முதலியன.

ज्ञानगुणकः = ஜ்ஞானத்தை குணமாக உடையவன்.

ज्ञानप्रेमात्मकम् = மதிநல மானது.

ज्ञानशक्त्यादि कल्याणगुणगणविभूषितन् = ஞானம், சக்தி, முதலிய நற்குணங்களின் கூட்டங்களால் அலங்கரிக்கப்பட்டவன்.

ज्ञानविशेषः = ஒருவகையான ஞானம்.

ज्ञानानन्दस्वरूपः = ஜ்ஞானம் - ஆனந்தம் - இவைகளே தன் ஸ்வரூபமாக உடையவன்.

ज्वरसन्निपतितः = ஜ்வரத்தினால் பீடிக்கப் பட்டவர் (ஜன்னி பிறந்தவர்)

त

तत्त्वद्वयम् = இரண்டு தத்துவங்கள் (ப்ராக்ருதி-ஜீவாத்மா).

तदीयसंश्लेषः = அவனடியார்களுடன் கூடுவது.

तदीयशेषत्वम् = அவனடியார்க்கடியனுயிருத்தல்.
तदीयशेषत्वप्रतिपत्ति = அடியார்க்கடியனுக எண்ணியிருக்கை.
तद्व्यतिरिक्तम् = 'அவனை'த்தவிர மற்றவை.
तद्व्यतिरिक्तप्रेम = 'அவனை' ஒழிந்தவைகளில் ஆசைகொள்ளுதல்.
तमस् = பிரகிருதி-அஜ்ஞானம்-இருள்.
तापत्रयम् = ஆத்யாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதிதைவிகம், எனப்படும் மூன்று தாபங்கள்.
तृतीयविभूति = மூன்றுவது விபூதி (சொத்து) நித்யவிபூதி ஒன்று. லீலா விபூதி மற்றொன்று. இவ்விரண்டிலும் சேராததால் இதை' மூன்றுவது விபூதி என்பது.
तृष्णा = ஆசை.
त्याज्यंगल् = விட வேண்டியவைகள்.
त्रिविक्रमापदानम् = வாமனவதாரத்தில் புரிந்த அற்புதத் திருவிளையாடல்கள்.
त्रिपाद्विभूति = பரமபதம் (ஸ்ரீ வைகுண்டம்).
त्रैलोक्यैश्वर्यम् = மூவுலகுக்கும் நாதனுயிருக்கை.
त्रैवर्णिकाधिकारम् = மூன்று வருணத்தாரே செய்யக் கூடியது.

द

दर्शनीयम् = காணக்கூடியது.
दशाविशेष: = ஒரு விதமான நிலைமை.
दिवारात्रविभाग: = இரவு-பகல்-என்னும் வேறுபாடு.
दिव्यात्मस्वरूपप्रकाशकम् = பரமாத்மாவின் ஸ்வரூபத்தை எடுத்துக் காட்ட வல்லவை.
दु:खगंधरहितम् = துயரம் சிறிதும் இல்லாதது.
देवयोनि = தெய்வப்பிறவி.
देवतान्तरम् = வேறு தெய்வங்கள்.
देवतान्तरपरर् = வேறு தெய்வங்களைத் தொழுபவர்கள்.
देवतान्तर्यामिपरम् = மற்றத் தெய்வங்களைக் குறிக்கும் சொற்களும், அவைகளுள் அந்தர்யாமியாய் இருக்கும் ஸ்ரீமந் நாராயணனையே குறிப்பிடும் என்கிறபடி.
देवतिर्यक् स्थावरजंगमात्मकम् = தேவர்கள், விலங்குகள், தாவரங்கள் அசைவுள்ளவை, முதலியவைகளான.
देशविशेष: = ஒரு இடம்.

देशिकर् = ஆசிரியர்.

देहात्माभिमानम् = இவ்வுடம்பே ஆத்மா. வேறு இல்லை. என்னும் பிடிவாதம்.

द्वयविवरणम् = 'த்வயம்' என்னும் மந்திரத்தின் விரிவுரை.

ध

धर्महानि— அநீதி.

धर्मिलोपः—(119-ம் பக்கம் பார்க்க).

धारणार्थम्—தரிப்பதற்காக.

न

नमस्—திருமந்திரத்தில் உள்ள 'நம:' என்னும் சொல்.

निकर्षानुसंधानम्—தாழ்மையை எண்ணுதல்.

निगमित्तल्—தலைக்கட்டுதல்.

नित्यसूरिकल् / नित्यर् } —நித்ய ஸூரிகள்.

नित्यविभूति—ஸ்ரீவைகுண்டம், பரமபதம்.

नित्यकैङ्कर्यम्—எக்காலமும் இறைவனுக்கடிமை செய்தல்.

नित्यमुक्तानुभाव्यन्—நித்யஸூரிகள் - மோக்ஷமடைந்தவர்கள்-இவர்களால் அனுபவிக்கப் படுகிறவன்.

नित्याश्रिता — எக்காலமும் எம்பெருமானை விட்டுப் பிரியாமல் இருப்பவள் (லக்ஷ்மி).

नियन्ता—ஏவுகிறவன் (இயக்குபவன்)

नियमनार्थम्—ஏவுவதற்காக (இயக்குவதற்காக).

नियाम्यम्—ஏவப்படுவது (ஆளப்படுவது).

निरतिशयभोग्यन्—சுகத்தைக்கொடுக்கும்பொருள்களுள் சிறந்தவன்

निरतिशयानन्दयुक्तर्—உயர்வற உயர்ந்தஅந்தமில்பேரின்பத்தடியர்

निरवधिकतेजोमयम्—எல்லையில்லாத தேஜஸ்ஸே வடிவாகக் கொண்டது.

निरवधिकसुखरूपपुरुषार्थम्—எல்லையற்ற பேரின்பமென்னும் பேறு.

निरुपाधिकम्—இன்றியமையாதது.

निरुत्तरन्—மறுமொழி சொல்ல இயலாதவன்.

निर्वाहकन्—காரியத்தை நடத்தி வைக்கிறவன் - அதிகாரி.

निर्हेतुकम्—ஒரு காரணமுமில்லாதது.

निर्हेतुककटाक्षम्—ஒரு காரணமுமின்றிக்கே எம்பெருமான் ஒருவனைத் தன் அருளுக்கிலக்காக்குதல்.

प

पञ्चबाणः — மன்மதன்.
पदार्थवाचकम् —'பொருள்' என்பதைக்குறிக்கும் சொல்.
परज्ञानम् — பர பக்தியினால் எம்பெருமானைப் ப்ரத்யக்ஷமாகக் காணுதல்.
परत्वशङ्का —'பரம்பொருள்' என்னும் எண்ணம்.
परप्रेरितन् —பிறரால் தூண்டப்பட்டவன்.
परभक्तिः —சாஸ்திரங்களில் மோக்ஷத்திற்கு உபாயமாக விதிக்கப் பட்ட பக்தி.
परमभक्तिः —பரஜ்ஞானத்தினால் இறைவனைப்ரத்யக்ஷமாகக் கண்ட வுடன் தோன்றும் பேரன்பு. பெருவிடாய்ப் பட்டவன் குளத்தைக் கண்டவுடன் சந்தோஷப்படுவதைப் போன்றது.
परम पुरुषार्थः —சிறந்த பேறு (பேரின்பம்).
परमपदम् —ஸ்ரீ வைகுண்டம்.
परस्परव्यावृत्ति —ஒன்றுக்கொன்று உள்ள வேற்றுமை.
परात्परम् —சிறந்தவைகள் எல்லாவற்றிலும் உயர்ந்தது.
परिकरः —பரிஜனம் (ஏவலாளர்).
परिमलप्रचुरम् —மிகுமணம் வீசுவது.
परिचर्या —பணிவிடை.
परिमलितम् —மிகுமணம் உண்டு பண்ணப் பெற்றது.
परोपदेशः —பிறர்க்கு உபதேசித்தல்.
परोपदेशप्रवृत्तर् —பிறர்க்கு உபதேசம் செய்ய முற்பட்டவர்.
पर्याप्ति —திருப்தி.
पारतन्त्र्यैकपरर् — (எம்பெருமானுக்கு) வசமாகையையே முக்கிய மாகக்கருதுபவர்.
पुण्यक्षयः —புண்ணியம் அழிந்துபோதல்.
पुनरुक्ति —மீண்டும் சொல்வது.
पुरुषकारसापेक्षाधिकारी — இடைநின்று பரிந்துபேசுகிற ஒருவரை எதிர்பார்ப்பவன்.
पुरुषकारभूतर् — இடை நின்று பரிந்து பேசுபவர்.
पुरुषार्थम् — பேறு.
पुरुषोत्तमत्वम् —புருஷர்களுள் சிறந்தவனாயிருக்கை.
पुलकितगात्रम् —மயிர்க்கூச்செறியும் உடம்பு.
पूर्ववृत्तम् —முன்பு நடந்தது.
पूर्वाघम् —பழவினை.

पूर्वेसाध्याः — நித்யஸூரிகள்.
प्रकारप्रकारि—தன்மையும், அதையுடைய பொருளும்.
प्रकृतिपरवशाः —பிரகிருதிக்குக் கட்டுப்பட்டவர்.
प्रकृतिविनिर्मुक्तम् =பிரகிருதியினின்றும் விடுபட்டது.
प्रकृतिसंबंधः = பிருகிருதியினுடைய சேர்க்கை.
प्रजारक्षणम् =பிரஜைகளைக் காப்பது.
प्रणयित्वम् = அன்புடைமை.
प्रणयी = அன்புள்ளவன்.
प्रणामः = வணக்கம்.
प्रत्यवायः = தோஷம்.
प्रपत्तिमार्गः = 'அடைக்கலம் புகுதல்' என்னும் வழி.
प्रमाणपुरस्सरम् = தகுந்த ஆதாரத்துடன்.
प्रयोजनवत् = பயனுள்ளது.
प्रयोजनान्तरम् = வேறு பயன்.
प्रयोजनान्तरपराः = வேறு பயனைக் கருதுபவர்.
प्रवणम् = அதிகமான ஆசையுள்ளது.
प्रसादः = அருள்.
प्राकृतविषयज्ञानं = புறம்பான ஸூகங்களின் அறிவு.
प्राणवस्तु = உயிர் (பிராணன்).
प्राधान्यम् = முக்கியத்துவம்.
प्रापिक्लांदेशं = பெறக்கூடிய இடம்.
प्राप्तविषयः = உரிய விஷயம்.
प्राप्तम् = கடமை.
प्राप्तन् = கடப்பாடுடையவன்.
प्राप्ति = உரிமை. பெறுதல்.
प्राप्यभूतम् = பெறவேண்டியது.
प्राप्यप्रापकम् = பெறவேண்டியதும், பெறுவதற்கான உபாயமும்.
प्रारब्धम् = இம்மையில் பயனளித்து வரும் பழவினை.
प्रावण्यम् = ஆசை.
प्रावण्यातिशयः = அளவு கடந்த ஆசை.
प्रियकरवृत्ति = இன்பகரமான பணிவிடை.
प्रीतिप्रकर्षः = அதிகமான அன்பு.
प्रीतिप्रेरितः = அன்பினால் தூண்டப்பட்டவன்.

प्रेमपरवशः = அன்பிற்குக்கட்டுப்பட்டவன். (பிரேமத்தால் மெய்ம் மறந்தவன்).

फ

फलभोक्ता = பலத்தை (பயனை) அனுபவிக்கிறவன்.

फलप्रदन् }
फलप्रदाता } = பலத்தைக் கொடுப்பவன்.

फलवर्धिका = பலத்தை வளர்ப்பவள்.

ब

बद्धर् = (ஸம்ஸார பாசத்தால்) கட்டுண்டவர்.

बंधुकृत्यम् = உறவினர் செய்யவேண்டிய செயல்கள்.

बाधिकि = பாதிப்பது.

बाह्यविषयप्रावण्यम् = புறம்பான விஷயங்களிலேயே ஆசை கொள்வது

बाह्यविरोधिकळ् = புறம்பான விரோதிகள்.

बाह्यसंश्लेषयोग्यम् = கைகளால் தழுவிக்கொள்ளத்தகுந்தவனுயிருக்கை.

बाह्यसंश्लेषापेक्षा = கைகளால் தழுவிக்கொள்வது, கண்களாரக்கண்டு களிப்பது, இதுபோன்ற பரிமாற்றங்களில் ஆசை.

ब्रह्मभावनानिष्ठर् = பிரம்ம பாவனையிலேயே ஊன்றியிருப்பவர்.

भ

भक्तियोगः = மோக்ஷத்திற்கு உபாயமாகச் செய்யப்படும் பக்தி.

भक्तिरूपापन्नज्ञानम् = முதன்முதலாகத் தோன்றும் பொழுதே 'பக்தி' ரூபமாகவே உண்டாகிய ஞானம்.

भक्तियोगलभ्यम् = பக்தியினுல் பெறக்கூடியது.

भगवत्परत्वज्ञानम् = எம்பெருமானுடைய மேன்மையை அறிதல்.

भगवत्प्रावण्यम् — எம்பெருமானிடமே அன்பு கொள்ளுதல்.

भगवच्छेषत्वम् = எம்பெருமானுக்கே அடியனுயிருத்தல்.

भगवल्लाभः = எம்பெருமானை(ப்பெறுதல்) க்கூடுதல்.

भगवत्कृपामृतवृष्टि = இறைவனது இன்னருள்மாரி பொழிதல்.

भगवदनन्यार्हशेषत्वम् = இறைவனுக்கே அடியவனுயிருத்தல். அவனையன்றி மற்றெவருக்கும் அடியவனுகஇருக்கப்பொருந்தாமை.

भगवद्व्यतिरिक्तकामः = எம்பெருமானைத் தவிர மற்ற வஸ்துக்களில் ஆசை.

भगवत्समाश्रयणम् = இறைவனைப் பற்றுதல்.

भगवत्कामः = இறைவனிடம் காதல் கொள்ளுதல்.

भगदत्तन् = ப்ராக்ஜோதிஷ தேசத்தரசன். மகாபாரதயுத்தத்தில் அர்ஜுனனோடு கடும்போர் புரிந்து கடைசியில் மாண்டவன்.

भयस्थानम् = அச்சத்திற்கிடம்.

भरन्यासः = சரணடைதல். அடைக்கலம் புகுதல்.

भर्ता = கணவன்.

भविष्यत्कालः = வருங்காலம்.

भागवतशेषत्वम् = அடியார்க் கடியனாயிருத்தல்.

भागवतसमृद्धः = அடியார்கள் குழாங்கள்.

भूतकालः = இறந்தகாலம்.

भेषजम् = மருந்து.

भोग्यम् = சுகத்தைக் கொடுப்பது.

भोग्यतातिशयः = மிகுந்தசுகம்.

भोग्य भोगोपकरण भोगस्थानानि = சுகத்தைக்கொடுக்கும் பொருள்களும், அதற்கேற்ற சாதனங்களும், இடமும்.

म

मंगलाशासनम् = பல்லாண்டு பாடுதல்.

मत्तगजः = மதம் பிடித்த யானை.

मधुपानमत्तम् = மதுவை யருந்தினதால் மதங்கொண்டது.

मनोरथः = ஆசை.

मनोदुःखांधकारः = மனதிலுள்ள துக்கமாகிற இருள்.

ममताबुद्धि = 'எனது' என்னும் எண்ணம்.

मानसत्वरा = மனதின் அவசரம்.

मानसानुसंधानम् = மனதினால் சிந்தித்தல்.

मिश्रसत्त्वम् = ரஜஸ் - தமஸ் - இவைகளுடன் கலந்த ஸத்த்வம்.

मुक्तर् = மோக்ஷமடைந்தவர்.

मुक्तप्राप्यभोगः = முக்தர் அனுபவிக்கும் இன்பம்.

मुमुक्षु = மோக்ஷம் பெற விரும்புகிறவன்.

मोक्षः = (ஸம்ஸாரத்தினின்றும்) விடுதலை. (பேரின்பம்)

मोक्षप्रदानम् = மோக்ஷம் கொடுத்தல்.

मोक्षप्रदन् = மோக்ஷங்கொடுப்பவன்.

मोक्षसाधनम् = மோக்ஷத்திற்குச்சாதனம்.

मोक्षानन्दप्रदम् = பேரின்பத்தை கொடுப்பது.

मोहांधकारः = மோகமாகிற இருள்.

य

यात्रा = பொழுது போக்குதல். ஜீவனோபாயம்.
यावदायुषम् = ஆயுள் உள்ளவரை.
यावदात्मभावि = உயிருள்ள தனையும்.
युद्धोन्मुखम् = போர் புரியத்தயாராகவுள்ளது.

र

रसवत्पदार्थः = ரஸமுள்ள பொருள்கள்.
राजकुलमाहात्म्यम् = அரச குலத்தின் மகிமை.
रामविषयीकारः = இராமன் தனது இன்னருளுக்கிலக்காக்குகை.

ल

लीलाविभूति = ஈரேழு உலகங்கள். இறைவனால் விளையாட்டாகப் படைத்து - அழிக்கப்படுவதனால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று.
लौकिकर् = நாட்டார்.

व

वक्ता — சொல்பவன்.
वर्तमानकालः — நிகழ்காலம்.
वर्तमानजन्म = இப்பிறப்பு.
वाचामगोचरम् = சொல்லளவல்லாதது.
वात्सल्यम् = பிரேமை.
वासितम् மணமுள்ளதாகச் செய்யப்பட்டது.
विकसितम् — மலர்ந்தது.
विकासादि — மலர்ச்சி முதலியன.
विग्रहः — திருமேனி.
विग्रहवैलक्षण्यम् — திருமேனியின் தனிச்சிறப்பு.
विचित्रजगदाकारता — விசித்திரமான உலகங்களைத் தன் உடம்பாக உடைத்தாயிருக்கை.
विपरीतज्ञानम् — உண்மைக்கு மாறான அறிவு.
विभूति — சொத்து.
विरहाग्नि — பிரிவாற்றாமையாகிற தீ.
विरोधिनिरसनम् — இடையூறுகளை விலக்குதல்.
विवर्णम् — நிறம் மாறிப் போனது.
विश्लेषिके — பிரிதல்.

विश्लेषगंधरहितर् = பிரிவை யறியாதவர்.

विश्वंभरा = பூமி.

विषयदौर्लभ्यम् = எளிதில் அறியக்கூடாத விஷயம்.

विस्तृतर् = விரிந்த (மழுங்காத) அறிவையுடையவர்.

विहितम् = விதிக்கப்பட்டது. (கட்டளையிடப்பட்டது.)

वृत्ति = வியாபாரம் (செயல்).

वेदान्तवेद्यन् = வேதாந்தங்களால் அறியக்கூடியவன்.

वेदशाखा = வேதமாகிற மரத்தின் ஒரு கிளை (வேதத்தின் ஒரு பகுதி).

वेदप्रतिपाद्यन् = வேதங்களில் சொல்லப்படுகிறவன்.

वेदैकसमधिगम्यन् = வேதம் ஒன்றினாலேயே அறியப்படக்கூடியவன்.

व्यक्तम् = தெளிவானது.

व्यामोहः = அஜ்ஞானம்.

व्यूहः = வாஸுதேவ - ஸங்கர்ஷண - ப்ரத்யும்ந - அநிருத்தர்கள் - எனப்படும் நால்வகையான பகவத்ஸ்வரூபம்.

व्यावृत्ति = வேற்றுமை.

श

शठकोपः = நம்மாழ்வார்.

शतशाखम् = பல கிளைகளுள்ளது.

शब्दादिगल्
शब्दादिविषयंगल् } = சப்தம் (ஒலி) முதலிய ஐம்புலன்கள்.

शरीरविश्लेषः = உடலினின்றும் உயிர் பிரிதல்.

शरीरात्मभावः = எம்பெருமானுக்கும் மற்ற பொருள்களுக்குமுள்ள ஸம்பந்தம். மற்றவைகளெல்லாம் எம்பெருமானால், தரிக்கப்பட்டும், இயக்கப்பட்டும் வருவதனாலும், அவனிட்ட வழக்காயிருப்பதனாலும், அவனுக்குச்சரீரம். எம்பெருமான் அவைகளைத்தரித்து, இயக்குபவனாதலின் அவைகளுக்கு உயிர். இவ்வாறாக எம்பெருமானுக்கும் மற்ற சேதநா சேதநங்களுக்குமுள்ள ஸம்பந்தம். 'சரீராத்ம பாவம்' என்றும், 'ஆத்ம சரீர பாவம்' என்றும், சரீர சரீரி பாவம்' அப்ருதக்ஸித்தி, என்றும் வழங்கப்படும்.

शास्त्रजन्यज्ञानम् = சாஸ்திரங்களினால் வந்த அறிவு.

शिथिला = தளர்ந்தவள்.

शिशिरोपचारः = குளிர்ச்சியைத்தரும் உபசாரம்.

शुद्धसत्त्वमयम् = ரஜஸ் - தமஸ் - இவை கலவாத ஸத்த்வத்தாலனது.

शुद्धिगुणत्रिशिष्टन्='சுத்தி' என்னும் குணமுள்ளவன். (ப்ரக்ருதியினின்றும் விடுபட்டிருத்தல் இங்கு 'சுத்தி' எனப்படும்).

शुद्धियोगः='சுத்தி' யைப் பெறுதல்.

शेषभूतन्=அடியவன்.

शेषत्वम्=அடியனுயிருக்கை.

शेषित्वम्=சேஷியாக இருத்தல். தனக்காகவன்றி, பிறருடைய உபயோகத்திற்காகவே இருக்கும் ஒரு பொருளை 'சேஷ' மென்பர். உலகிலுள்ள சகலமான சேதனசேதனங்களும் எம்பெருமான் விஷயத்தில் இவ்வாறே இருக்கின்றனவாதலின், அவையெல்லாம் இறைவனுக்கு 'சேஷ' மென்று வழங்கப்படும். இதற்கு நேர்மாறானவன் 'சேஷி' எனப்படுவான். தன்னைத்தவிர மற்றவைகளெல்லாம் தன் உபயோகத்திற்காகவே உள்ளனவாகவும், தான் அவ்வாறு வேறு எவருக்காகவும் அமைந்தவனாக இல்லாமையும் 'சேஷித்வம்' எனப்படும். இது எம்பெருமான் ஒருவனுக்கே இயற்கையில் உளது. ஆதலால் '**निरुपाधिकशेषी**' என்றும் '**स्वतश्शेषी**' என்றும் எம்பெருமானை வழங்குவர்.

शेषी=ஆண்டவன். எம்பெருமான்.

शैथिल्यम्=தளர்ச்சி.

शोकनिवृत्ति=துயர் தீர்தல்.

श्रमहरम्=சிரமத்தைப்போக்குவது.

श्रियःपति=திருமகள் கேள்வன்.

श्रीवैष्णवश्रीः=திருமாலடியாராக இருக்கும் சீர்.

श्रुतिप्रतिपाद्यन्=வேதங்களில் சொல்லப்படுகிறவன்.

श्रोता=கேட்கிறவன்.

श्रोत्रादिगल्=காது முதலியன.

स

सकलशास्त्रवित्तमन्=சாஸ்திரங்கள் யாவற்றிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றவன்.

सत्ता=ஸ்வரூபம்.

सत्ता स्थिति प्रवृत्ति निवृत्तिगल्=ஸ்வரூபம் (தான்), இருத்தல், முயற்சி (இயங்குதல்), ஓய்ந்துவிடுதல் (ஒரு காரியத்தைச் செய்வதினின்றும் திரும்புதல்).

सततं कीर्तयन्तः=எக்காலமும்(என்னையே) சொல்லிக்கொண்டிருப்பவர்கள்.

स्वरूपवैलक्षण्यम्=அற்புதமான வடிவம்.

स्वरूपहानि=ஸ்வரூபம் அழிதல்(தன்மை கெடுதல்).

सत्कारः = மரியாதை.

सत्यप्रतिज्ञनाकै = உறுதிமொழி தவறாதவனுகை.

सदासेव्यम् = எப்பொழுதும் அனுபவிக்கக்கூடியது.

सदादर्शनम् = எக்காலமும் கண்டு கொண்டிருத்தல்.

सदृशम् = ஸமானம். ஏற்றது.

सन्निहितम् = அணித்தானது.

समुद्रतरंगः = சமுத்திரத்து அலை.

सर्वशेषी = எல்லாவற்றுக்கும் சேஷியானவன். ஆண்டவன்.

सर्वभरन्यासः = எல்லா விதமான பொறுப்புக்களையும் ஒப்புவித்தல். அடைக்கலம் புகுதல்.

सर्वशक्ति = எல்லாம் வல்லவன்.

सर्वगंधः = எல்லாவிதமான மணமும் உள்ளவன்.

सर्वरसः = ஸகலவிதமான ரஸங்களும் உள்ளவன்.

सर्वनियन्ता = எல்லாவற்றையும் இயக்குபவன். (அடக்கியாள்பவன்)

सर्वनिर्वाहकन् = எல்லாவற்றையும் நிர்வஹிப்பவன்.

सर्वस्वामी = எல்லாவற்றுக்கும் உடையவன்.

सर्वसमाश्रयणीयन् = எல்லோருக்கும் புகலிடமா யிருப்பவன்.

सर्वविघरक्षकत्वम् = ஸகலவிதமாகவும் ரக்ஷிப்பது.

सर्वाधिकवस्तु = பரம் பொருள். உயர்வறஉயர்நலமுடையவன்.

सर्वाधिकारम् = ஒருவிதமான வரையறையுமின்றி யாவரும் செய்யக் கூடியது.

सवासनम् = வாஸனையு(பழக்கத்து)டன் கூடியது.

सहेतुकम् = ஒரு காரணத்தால் வந்தது.

सहृदयम् = மனதாரச்சொன்னது. (மனமார்ந்தது).

संकल्परूपज्ञानम् = 'ஸங்கல்பம்' (உறுதியான எண்ணம்) எனப்படும் ஜ்ஞானம்.

साधनानुष्ठानम् = ஒரு பொருளைப் பெறுவதற்காக அதற்கேற்ற உபாயத்தைச் செய்தல்.

साधनान्तरम् = வேறு சாதனம்.

साध्योपायंगल् = மனிதன் செய்யக் கூடிய உபாயங்கள்.

साध्योपायनिष्ठर् = தன்னால் சாதிக்கப்படக்கூடிய உபாயத்தில் ஊன்றியிருப்பவர். (பக்தி நிஷ்டர். ப்ரபத்தி நிஷ்டர்).

सावधि = எல்லையுள்ளது.

सिद्धोपायन् = ஸித்தமான (சாதிக்கவேண்டியதல்லாத) உபாயமானவன். (எம்பெருமான்).

सिद्धोपायनिष्ठर् = சித்தமான உபாயத்தையே (எம்பெருமானையே) நம்பியிருப்பவர்.
सुकरम् = எளிதில் செய்யக்கூடியது.
सुकृतम् = புண்ணியம். (நல்வினை).
सौकुमार्यम् = மென்மை.
सौलभ्यम् = எளிவு.
सौलभ्यादिगुणपूर्णः = சௌலப்யம் முதலிய குணங்கள் நிறைந்தவன்.
सौलभ्यादिगुणविशिष्टन् = ஸௌலப்யம் முதலிய குணங்கள் உள்ளவன்.
संहरितु = அழித்து.
संभवामि युगे युगे = யுகந்தோறும் பிறக்கிறேன்.
संभावना = "இருக்ககூடும்" என்னும் ஊகம்.
संसारप्रलयः = சம்சாரமாகிற பிரளயம்.
संश्लेषवर्धकम् = சேர்க்கையை வளர்ப்பது.
संसारिकळ् = உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள்.
संश्लेषः = சேர்க்கை.
संश्लेषैकभोगर् = (எம்பெருமானுடன்) சேர்ந்து இன்புறுவதையே தன் பேறாக உடையவர்.
संश्लेषरसः = சேர்க்கையில் உள்ள இன்பம்.
संबंधज्ञानम् = ஸம்பந்தத்தை அறிதல். (37-ம் பக்கம் பார்க்க)
संसारिचेतनन् = உலகவாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒருவன்.
स्तुति = துதி
स्त्रीत्वम् = பெண்மை.
स्थिति = இருத்தல்.
स्पर्शवेद्यि = தொட்டுக்காட்டக்கூடியது.
स्पृहणीयम् = விரும்பக்கூடியது.
स्मर्यमाणविषयः = நினைவுக்கு வருகிற விஷயம்.
स्मारकपदार्थाः = நினைவூட்டும் பொருள்கள்.
स्मृति = நினைவு.
स्वर्गादिकळ् = சுவர்க்கம் முதலியன-
स्वरूपज्ञानम् = தன் நிலைமையை உணருதல்.
स्वरूप = ஸ்வரூபம், रूप = திருமேனி, गुण = குணங்கள், विभूति = விபூதிகள் (ஆளப்படுபவை-சொத்து), चेष्टितंगळ् = திருவிளையாடல்கள்.

स्वपरनिर्वाहकन् = தன்னையும், மற்றவைகளையும் நிர்வஹிப்பவன்.

स्वप्राप्यम् = தான் பெறவேண்டிய பேறு.

स्वयत्नः = தன் முயற்சி.

स्वयत्नसाध्यम् = தன் முயற்சியினால் சாதிக்கக்கூடியது.

स्वयंप्रयोजनम् = தானே பிரயோஜனமானது.

स्वस्वरूपप्राप्तिः = தனது உண்மை நிலைமையைப் பெறுதல்.

स्वस्वरूपविषयः = தன் (ஜீவாத்மாவின்) ஸ்வரூபத்தையே பற்றியது.

स्वस्वामिसंबंधः = சொத்துக்கும், அதை உடையவனுக்கும் உள்ள பரஸ்பர ஸம்பந்தம்.

स्वम् = சொத்து.

स्वस्वातन्त्र्यम् = தனக்குத்தானே எஜமானனாயிருக்கை.

स्वामिनी = எஜமானி (உடையவள்).

स्वामी = உடையவன் (எம்பெருமான்).

ह

हर्षशोकौ = ஸந்தோஷமும் துயரமும்.

हितकामः = நன்மையைக்கோருகிறவன்.

हेयप्रतिभटम्
हेयप्रत्यनीकम् } = தோஷங்களுக்கெல்லாம் எதிர்த்தட்டானது.

हर्षः = சந்தோஷம்.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
9	22	16	6
,,	33	3	2
10	1	மறவியையின்	மறவியையின்றி
,,	29	தறுவாயில்	தருவாயில்
12	20	அங்யப	அங்யபர
,,	23	......ஹுள்ளர	......ஹுள்ளா
14	9	லேற்றமாக...ப்பண்ணி	லேற்றமாக அவிச்சேதத்தைப் பண்ணி
15	21	பாத்வம்	8 பாத்வம்
17	27	4	3
19	26	कानि	काग्नि
20	13	எங்தாய்	வித்தா
23	5	வருமழி	வருமிழ
25	34	5	4
27	10	இன்னின்ற	இங்கின்ற
28	5	...யற்றிரனி	...யற்றிரளி
,,	31	லொத்துக்கு உடையவனுயிருக்கை	பிறருடைய கைங்கர்யத்துக்கு உத்தேச்யனுகஇருக்கை
29	1	என்னுர்த்தியிலி ஒதுத்தில...	என்னுர்த்தியில் உதவிற்றில...
31	8	...ளொப்பவை	...ளொப்பனே
,,	32	இவை	இவை
32	9	பன்னஞ்ஞா	பன்னஜ்ஞா
33	25	மெண்ணும்	மென்னும்
,,	26	6	5
36	2	நெறுக்கி	நெருக்கி
41	33	संसारबध	संसारबंध
47	16	நெடுநாளவற்று	?
,,	17	உயர்த்திகொளே	?
51	18	முன்னீர்	முங்நீர்
,,	22	முன்னீர்	முங்நீர்
53	15	களாய	களாய்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	17	பற்பல	பற்பல்
57	19	நீராழி	நீலாழி
,,	,,	தந்தாமமே	தன தாமமேபுக
,,	22	நீராழி	நீலாழி
58	1	தந்தாமமே	தன தாமமே
,,	8	14	16
63	18	முவர்	மூவர்
69	4	நடந்தானை	நடந்தாளை
,,	,,	தந்துணை	தன் துணை
73	15	ஸ்ரீ :	ஸ்ரீ: மூன்றும் பத்து ஒன்பதாம் திருவாய்மொழி விவரணம்
,,	21	விரோத்தில்	விரோதத்தில்
80	1	தத்தானம்	தத்ஸ்தானம்
,,	16	துயரிலேனே	துயரிலனே
81	11	ஸ்ரீய: பதி	ஸ்ரிய: பதி
82	18	ஸ்ரீய:	ஸ்ரிய :
,,	22	ஸ்ரீய:	ஸ்ரிய :
83	28	மேலணி	மேலணி
89	4	மண்ணை	மண்ணை
,,	7	மையல்	மயல்
92	26	நுவாதி	நுவ்ருத்தி
93	8	ஸ்ரீய:	ஸ்ரிய :
95	2	ஹயானி	ஹயாங்
,,	8	அனங்யோங்யம்	அங்யோங்யம்
98	26	பொருத்தரு	பொறுத்தரு
101	10	ஸ்ரீய:	ஸ்ரிய:
,,	29	மவன்	மவள்
107	22	உபாஸ்ம்	உபாஸ்யம்
115	11	அதானே	அதுதானே
131	5	உருக்குகிறது	உருகுகிறது
132	2	மனந்தன்னிலே	மனந்தனுள்ளே

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
141	14	...மேன்படை	.. மேன்பேடை
150	22	பக்த	பத்த
154	7	றுமே்	றுமே
,	8	பொய்ஙின்ற	பொய்ங்கின்ற
160	21	நாணிஞே	நாணிலோ
161	4	அலமர்கி	அலமருகி
,,	27	உருப்பா	உறுப்பா
163	8	பசலுங்குட்டி	பசங்களுங்குட்டி
171	9	நீளேரி	நீளேரி
,,	12	நூராண்டு	நூறுண்டு
172	3	எதிர்ச்சூழல்	எதிர்சூழல்
183	2	முன்னமாய	முன்னைமாய
,,	13	கண்ணனென்று	கண்ணனென்று
193	14	முன்னிய	முன்னைய
194	15	நின்றூர்ப்பரிக்கா நின்றடங் காரை......	நின்றூர்ப்ப எரிகான் நடங்காரோ......
,,	16	யளப்ப	யளப்பான்
195	8	என்னயிது......	என்னிது
,,	9	முன்னிய	முன்னைய
,,	16	ஒண்மிதியும்	ஒண்மிதியிற்
197	17	இன்னேர்	இங்கேர்மை
200	7	பவஸ்தீனமாய்	ஸ்வாதீனமாய்
203	30	சக்தி	2 சக்தி
,,	,,	6-வீர்யம்	5 வீர்யம்
,,	,,	தேஜஸ்	6 தேஜஸ்
207	14	தொழுதெழன்	தொழுதெழென்
210	7	கார்த்தனகமலக்கண்ணனெ ன்றும் நெடுங்கயிறு பிடித் தென்னை	கார்த்தண்கமலக் கண் ணனென்னும் நெடுங் கயிறு படுத்தி என்னை
211	8	யகாம்	யாகம்
212	9	காலாய்	காஅலாய்
215	5	பார்த்துழுதருவான்	பார்த்துழி தருவாய்
,,	15	எதிர்ச்சூழல் புக்குளனத்	எதிர்சூழல்புக்குளனைத்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	16	யருள் செய்ய	யருள்கள் செய்ய
,,	17	லெம்மான்	லம்மான்
216	1	தேற்றி	தற்றேற்றி
219	17	நின்னடியார்	உன்னடியார்
227	7	கடந்து	அளந்த
232	6	நானும்	யானும்
233	15	பரியிழு	பரியில்
239	20	(1)	(6)
243	23	தானத்தின்னிலை	தானத்தின் நிலை
248	19	அருளுக்கு வாய்த்தலைகாரணம்	அருளுக்கு
256	5	......மறறியாது	...மற்றியாது
265	22	பெண்ணுளான்	பெண்ணுலாம்
,,	23	னெண்ணரு	னெண்ணிலா
273	30	யாதாத்மய	யாதாத்ம்ய
274	25	யலமர்ந்து	யலமந்து
275	13	நின்ற	நின்று
278	1	யலமர்ந்த	யலமந்த
286	5	செவ்வடி	சேவடி
,,	11	சென்னல்	செங்நெல்
,,	,,	சென்னெலானது	செங்நெல்லானது
287	11	மெய்வண்ண	மைவண்ண
288	5	மற்றொன்	மற்றெருன்
291	16	நிதயர்	நித்யர்
295	16	மஹ்ய	க்ரமஸ்ய
296	3	முந்திகை	முந்திரிகை
299	26	கறுத்த	கருத்த
304	14	பெருவாரடியார்	பெறுவாரடியார்
305	14	நிருபகமாயி	நிருபகமி
,,	29	தகாவும்	தாகவும்
311	11-19	தலைசிறப்ப	தலைச்சிறப்ப
313	13	தலைசிறப்ப	தலைச்சிறப்ப
315	1	மொழிவி	மொழிவிவரணம் 315
330	10	இப்படிச்	இப்படி

ராஜாஜீ பிரஸ் லிமிடெட், தேவகோட்டை
70 – 1950.